இளைஞர்
விவிலியம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இளைஞர் விவிலியம்

THE BIBLE SOCIETY OF INDIA

The Children's Bible (Tamil)
Copyright © The Bible Society of India

Published by :
The Bible Society of India
206 Mahatma Gandhi Road
Bangalore – 560 001

Bible Text Copyright © The Bible Society of India
Illustrations Copyright © Jose Perez Montero
And Scandinavia Publishing House

ISBN : 81-221-2799-0

All rights reserved. No part of this Publication may be reproduced, stored in a Retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, Photocopying, recording or otherwise, without the permission of The Bible Society of India

A Product of 0-21 Programme

அறிமுகம்

விவிலியம் என்றால் என்ன ?

விவிலியம் ஒரு சாதாரண புத்தகத்தைவிட உயர்வானது – மிகச் சிறப்பானது. அது உண்மையில் பல புத்தகங்களின் ஒரு தொகுதி. அப்புத்தகங்கள் பல்வேறுபட்ட மக்களால் எழுதப்பட்டவை. அவர்கள் அனைவரும் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் வசித்தவர்கள்.

அப்புத்தகங்கள் எவ்வகையில் சிறப்பு பெற்றவை ?

விவிலியத்தில் பலவகையான புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. சில புத்தகங்கள் முக்கியமான சில நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதற்காக எழுதப்பட்டவை. சில புத்தகங்கள் கடிதங்களாக (திருமுகங்களாக) எழுதப்பட்டவை. சில புத்தகங்கள் செய்யுள்கள், பாடல்கள் இவற்றின் தொகுதியாகும். இத்தகைய பல்வகைப் புத்தகங்களும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, "விவிலியம்" என்று அழைக்கப்பட்டது. விவிலியத்தின் மூல நூல்கள் யாவும், முதன்முதலில், எபிரேய, அரமேய, கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டன. இந்தப் பழைய மொழிகளைப் புரிந்து கொள்ளத் தெரிந்தவர்கள் இந்நாட்களில் மிகக் குறைவே. ஆனால்; இன்று ஏறத்தாழ எல்லா தற்கால மொழிகளிலும் விவிலியம் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. இந்திய மொழிகளுள் முதன் முதலில் விவிலியம் தமிழ் மொழியில்தான் வெளியிடப்பட்டது. ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் விவிலியம் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

விவிலியம் நிறைவடைய நீண்ட காலம் ஆயிற்று. இயேசு, இஸ்ரயேல் நாட்டில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார். அக்காலத்தில் சில புத்தகத் தொகுதிகள், "மிகவும் புனிதமானவை" என ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்தன. மக்கள் கடவுளையும், மக்கள் மீதுள்ள அவரது அன்பையும், அறியவும், உணரவும் இப்புனித நூல்கள் உதவின என்று அறிந்திருந்தனர். இவற்றில் முதல் தொகுதி புத்தகங்களே இப்போது விவிலியத்தின், "பழைய ஏற்பாட்டு நூல்கள்" என அழைக்கப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்படுவதற்கு வெகுகாலத்துக்கு முன்னரே பழைய ஏற்பாட்டு நூல்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டன. இயேசு, தமது போதனைகளில் பல பழைய ஏற்பாட்டு நூல்களின் பகுதிகளை எடுத்துரைப்பதைக் காணலாம். இயேசுவின் இவ்வுலக வாழ்க்கைக்குப் பின்னர் அவரது சீடர்கள் அவரைப் பற்றி எழுதினார்கள். அவர்கள், "இயேசு ஏன் இவ்வுலகில் வந்து வாழ்ந்தார் ? என்ன போதித்தார் ? எப்படி வாழ்ந்தார் ? எப்படி இறந்தார் ? இறந்த அவர் எப்படி உயிர்த்தெழுந்தார் ?" போன்றவற்றைப் பற்றியெல்லாம் எழுதினார்கள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு திருச்சபைத் தலைவர்கள் இத்தகைய நூல்கள் அனைத்தையும் தொகுத்து, "புதிய ஏற்பாட்டுப் பகுதி" என அமைத்தார்கள். அவர்கள் இந்நூல்கள் பழைய ஏற்பாட்டு நூல்களைப் போலவே புனிதத்தன்மை வாய்ந்தவை என்று நம்பினார்கள்.

இளைஞர் விவிலியம்.....

இதோ நீங்கள் இப்போது வாசித்துக் கொண்டிருக்கும் இப்புத்தகம் சிறப்பாக உங்களுக்கென்றே தொகுக்கப்பட்டுள்ளது. விவிலியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முக்கியமானதும், மகிழ்வூட்டுவதுமான பகுதிகள் இப்புத்தகத்தில் ஏராளமாக அடங்கியுள்ளன. புதுத் தலைப்புகளும், அறிமுக விளக்கங்களும் உங்களுக்குப் புரிந்து கொள்ள உதவுவதற்காகச் சேர்க்கப்பட்டுஉள்ளன. ஒவ்வொரு தலைப்பிற்குப் பின்னரும், விவிலியத்தில் எந்தப் புத்தகத்தில் இருந்து எந்த அதிகாரத்தில், எந்தெந்த வசனங்களில் வரும் நிகழ்ச்சி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது என்பதைக் காட்ட புத்தகத்தின் பெயரும், அதிகாரமும், வசனமும் குறிப்பிடப் பட்டிருப்பதைக் காணலாம். (எ.கா: தொடக்க நூல் 13)

இந்தப் புத்தகத்தை நீங்கள் வாசித்து முடித்தபின், விவிலியம் முழுவதையும் நீங்கள் படிக்க விரும்பலாம். விவிலியம் இவ்வுலகிலேயே அதிகமாக வாசிக்கப்படும் புத்தகம் ஆகும். ஆண்டுகள் செல்லச் செல்ல, அச்சிட்டு வெளியிடப்படும் வேறெந்தப் புத்தகத்தையும்விட, விவிலிய புத்தகத்தின் பிரதிகள் அதிக அளவில் விற்பனை செய்யப்படுகின்றன.

நீங்கள் இப்புத்தகத்தைப் படித்துப் பயன்பெறவும், மகிழ்வுறவும் நல்வாழ்த்துக்கள்.

பொருளடக்கம்

அறிமுகம்

விவிலியம் என்றால் என்ன?
விவிலியம்...... ஒரு சாதாரண புத்தகத்தைவிட உயர்வானது! இப்புத்தகம் எவ்வகையில் சிறப்புப் பெற்றது?

குழந்தைகள் விவிலியம்
இதோ! நீங்கள் இப்போது வாசித்துக் கொண்டிருக்கும் புத்தகம்

பழைய ஏற்பாடு

கடவுள் படைத்த உலகம் **1**
- படைப்பின் தொடக்கம்
  - *கடவுள் எவ்வாறு படைத்தார்?*
  - *ஏதேன் தோட்டம்*
- கடவுளின் திட்டங்கள் எவ்வாறு திசைமாறின? 4
  - *ஆதி மக்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமை*
  - *முதல் கருத்து வேறுபாடு*
  - *முதல் கொலை*
- தண்டனையும், இரக்கமும் 8
  - *நான் ஏன் மக்களைப் படைத்தேன்?*
  - *ஒரு மரக்கலத்தைக் கட்டு*
  - *மரக்கலத்தின் உள்ளே செல்லுங்கள்*
  - *மரக்கலத்தைவிட்டு வெளியே வாருங்கள்*
  - *கடவுள் காட்டிய உடன்படிக்கையின் அடையாளம்!*

இஸ்ரயேல் இனத் தோற்றம் **14**
- மக்கள் இனங்களின் தந்தை
  - *கடவுள் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தல்*
  - *கடவுள் ஆபிரகாமை ஆயத்தப்படுத்துதல்*
  - *ஈசாக்குக்கு ஒரு மனைவியை அமைத்துக் கொடுத்தல்*
- யாக்கோபின் வரலாறு 20
  - *ஏசாவும், யாக்கோபும்*
  - *யாக்கோபு தம் தந்தையை ஏமாற்றுதல்*
  - *பரலோகத்துக்கு ஒரு ஏணி*
  - *யாக்கோபு கடவுளோடு போராடுதல்*
- யோசேப்பின் வரலாறு 28
  - *யோசேப்பும் அவனது சகோதரர்களும்*
  - *எகிப்தில் யோசேப்பு*
  - *சகோதரர்களைத் திகைக்க வைத்தல்*
  - *காணாமற் போன கிண்ணம்*
  - *தம் சகோதரரிடம் தம்மை வெளிப்படுத்துதல்*

ஒரு பெரிய விடுதலை **40**
- இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகள்
  - *கொடுமையாக நடத்தப்படுதல்*
  - *ஆண் குழந்தைகள் கொல்லப்படுதல்*
- ஒரு பெரிய தலைவன் 41
  - *கூடையில் ஒரு குழந்தை*
  - *மோசே தப்பி ஓடுதல்*
  - *கடவுள் மோசேயை அழைத்தல்*
  - *எகிப்தின் அரசனை மோசே சந்தித்தல்*
- எகிப்தின்மீது கடவுளின் வெற்றி 48
  - *முதல் பாஸ்கா விருந்து*
  - *இஸ்ரயேலர் எகிப்தை விட்டுப் புறப்படுதல்*
  - *செங்கடலைக் கடத்தல்*
  - *வெற்றியின் கீதம்*
- ஒரு நீண்ட பயணம் 58
  - *பாலைவனத்தில் உணவு*
  - *பாலைவனத்தில் தண்ணீர்*
  - *மலையின்மீது புகை மண்டலம்*
  - *பத்துக் கட்டளைகள்*
  - *பொன் கன்றுக்குட்டி*
  - *ஆரோனின் மரணம்*
  - *மோசே இறத்தல்*

துணிவுள்ள தலைவர்கள் **72**
- ஒரு புதிய தலைவர் – யோசுவா
  - *கடவுள் யோசுவாவை ஊக்குவித்தல்*
  - *எரிகோவின் வீழ்ச்சி*
  - *பெருந்தலைவர் யோசுவா*
- துணிவுள்ள கிதியோன் 77
  - *இஸ்ரயேலை விடுவிக்க கிதியோன்*
  - *மரணத்திற்குப் பயப்படாதவன்*
  - *300 பேர் துணையுடன் வெற்றி*
- ஒரு புதிய இறைவாக்கினர் – சாமுவேல் 82
  - *பிறப்பதற்கு முன்னரே கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்*
  - *அன்னா தாம் நேர்ந்து கொண்டதை நிறைவேற்றுதல்*
  - *சாமுவேல் கடவுள் பேசுவதைக் கேட்டல்*
  - *ஒரு அரசன் வேண்டும் என்று இஸ்ரயேலர் கோருதல்*
  - *இஸ்ரயேலர் – முதல் அரசனைப் பெறுதல்*
- ரூத்து ஒரு முப்பாட்டி 90
  - *ரூத்து – வீட்டை விட்டுச் செல்லுதல்*
  - *வயல்களில் வேலை செய்தல்*
  - *போவாசைத் திருமணம் செய்தல்*
- பயமற்ற இளைஞன் தாவீது 94
  - *ஆடு மேய்க்கும் சிறுவனுக்கு அரசனாக அபிஷேகம்*
  - *இஸ்ரயேலருக்கு கோலியாத்தின் சவால்*
  - *தாவீதின் துணிவு*
  - *கோலியாத்துடன் சண்டை*
  - *சவுல் அரசன் முன் தாவீது*
  - *தாவீதின் மேல் சவுலின் பொறாமை*
  - *யோனத்தான் தாவீதுக்கு உதவி செய்தல்*

தப்பிச் செல்ல மறைமுக அடையாளம்
தாவீது, சவுல் அரசனின் உயிரைத் தப்ப விடுதல்
சவுலின் பரிதாபமான முடிவு
பேரரசர்களும் துணிவுள்ள இறைவாக்கினர்களும் 108
தாவீது அரசர்
நன்றி உடையவர்
இரக்கம் உடையவர்
அப்சலோமினால் ஏமாற்றப்படுதல்
தம் மகனுக்குப் பயந்து ஓடுதல்
ஒரு பெரிய போர்
தாவீதின் அதிர்ச்சி
சாலமோன் அரசனாதல் 114
தன் தந்தையின் போதனையைக் கேட்டல்
ஞானத்துக்காக வேண்டுதல்
வேண்டுதல் வழங்கப்படுதல்
மேன் மேலும் புகழ் பெறுதல்
பெரிய சாதனை
சந்திக்க வந்த அரசி
இறைவாக்கினர்களின் செயல்பாடு 126
கடவுளின் மனிதர் எலியா
வானத்திலிருந்து நெருப்பை வரவழைத்தல்
மழைக்காகக் காத்திருத்தல்
மெல்லிய குரல் ஒலி கேட்டல்
எலிசாவைக் கண்டு பிடித்தல்
ஆகாபு அரசனை எச்சரித்தல்
விண்ணுலகுக்கு எடுத்துக்கொள்ளப்படுதல்
எலிசாவும் ஏழைக் கைம்பெண்ணும்
எலிசாவும் ஒரு பணக்காரப் பெண்ணும்
ஒரு அடிமைப்பெண் கடவுளுக்காகப் பேசுதல்
உண்மையான இறைவாக்கினர் எசாயா 144
எசாயா கடவுளுக்காகப் பேச ஆயத்தமாதல்
நிறைவாழ்வு பற்றிய எசாயாவின் இறைவாக்கு
அரசன் எசேக்கியாவுக்கு எசாயாவின் செய்தி
எசாயாவின் நம்பிக்கையூட்டும் வார்த்தைகள்
ஒரு மீட்பர் வாக்களிக்கப்படுதல்
ஒரு இளமையான அரசன் கடவுளுக்காகச் செயல்படுதல் 148
திருச்சட்டப் புத்தகம் கண்டுபிடிக்கப்படுதல்
அந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம்
திருச்சட்ட நூலின் மீதுள்ள நம்பிக்கையை யோசியா புதுப்பித்தல்
தீமையை எதிர்த்து இறைவாக்கினர்கள் பேசுதல் 149
கடவுள் தீமையை வெறுத்தல்
நன்மையை விரும்புதல்
தம்முடைய மக்களை நேசித்தல்
கீழ்ப்படிதலை விரும்புதல்
ஒரு இளமையான இறைவாக்கினர் 151
கடவுள் எரேமியாவை அழைத்தல்
கடவுளின் எச்சரிக்கை
கடவுளின் மன்னிக்கும் அன்பு
கடவுள் அளித்த தண்டனை
ஒரு கீழ்ப்படியாத இறைவாக்கினர் 152
யோனா ஓடிப்போதல்
கடலில் எறியப்படுதல்
இரண்டாம் வாய்ப்புப் பெறுதல்
யோனாவின் கோபமும், கடவுளின் இரக்கமும்
வேற்று நாட்டில் சிறை வாழ்வு 158
உறுதியான இறைநம்பிக்கை கொண்டவர்
அரசவையில் தானியேல்
கொழுந்து விட்டெரியும் தீச்சூளை
சுவரில் தோன்றிய சொற்றொடர்
தானியேல் சொற்றொடரின் பொருள் கூறுதல்
சிங்கங்களின் நடுவே தானியேல்
இன்னும் நம்பிக்கை உள்ளது 170
கடவுள் எசேக்கியேலுக்கு அளித்த காட்சி
எசேக்கியேலை அழைத்தல்
மேய்ப்பனில்லாத ஆட்டு மந்தை
உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கு
ஏங்கிக் கொண்டிருந்த விடுதலையைப் பெறுதல் 174
எதிர்பாராத செய்தி
புதுப்பிக்கப்பட்ட பலிபீடம்
எதிரிகளின் தொல்லைகள்
ஆலயத்தை திரும்பக் கட்டு
நெகேமியா எருசலேம் செல்லல்
பாழடைந்த இடங்களை இரவில் சுற்றிப் பார்த்தல்
எதிரிகளின் போர்த்திட்டம்
நெகேமியாவுக்கெதிரான சதித்திட்டம்
கோட்டைச் சுவரைக் கட்டி முடித்தல்
மக்கள் தங்கள் வாக்குறுதியைப் புதுப்பித்தல்

புதிய ஏற்பாடு

அரசராயிருக்கப் பிறந்தவர் 185
அரசின் முன்தூதன்
யோவான் என்ற பெயர் சூட்டுதல்
யோவானின் தந்தை கடவுளைப் போற்றுதல்
இயேசுவின் பிறப்பை ஒட்டிய நிகழ்ச்சிகள் 188
மரியாவின் வியப்பு
மரியா எலிசபெத்தைப் பார்க்கச் செல்லுதல்
மரியா கடவுளைப் புகழ்ந்து பாடுதல்
இயேசுவின் பிறப்பு
மேய்ப்பர்களுக்கு நற்செய்தி
குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்
இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தல்
இயேசுவின் இளமைப்பருவம் 195
கிழக்கிலிருந்து இயேசுவைக் காண வந்தவர்கள்
எகிப்துக்குத் தப்பி ஓடுதல்
ஏரோதின் கொடுஞ்செயல்
எகிப்திலிருந்து திரும்பி வருதல்
ஆலயத்தில் சிறுவன் இயேசு
இயேசு எப்படி வாழ்ந்தார்? 200
யோவான் வழியை ஆயத்தம் செய்தல்
யோவானின் நற்செய்தி

இயேசுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்தல்
இயேசு பணியைத் தொடங்குதல் 205
இயேசு சோதிக்கப்படுதல்
நான்கு மீனவர்களை அழைத்தல்
வரி வசூலிப்பவர் ஒருவரை அழைத்தல்
திருத்தூதர்கள் 209
இயேசு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தல்
மக்களுக்காகக் கவலைப்படுதல்
கடவுளின் வல்லமையை
வெளிப்படுத்துதல் 210
கானா ஊரில் நிகழ்ந்த திருமணம்
அசுத்த ஆவி பிடித்த மனிதர்
பல நோயாளிகள் நலம் பெறுதல்
இயேசு கடவுளிடம் வேண்டுதலும், கற்பித்தலும்
ஒரு தொழுநோயாளியைக் குணமாக்குதல்
முடக்குவாதமுற்ற ஒருவரை நலமடையச் செய்தல்
புயலை அடக்குதல்
உண்மையான சீடர்கள் 222
இயேசுவின் உண்மையான குடும்பம்
இயேசுவைப் பின்பற்ற மறுத்த சிலர்
இயேசுவைப் பின்பற்றிய பெண்கள்
திரும்பிப் பாராதே!
நற்செய்தி பரவுதல் 225
இறந்த ஒரு சிறுமி உயிர் பெறுதல்
போ! சொல்
இயேசு 5000 பேருக்கதிகமானவர்களுக்கு உணவளித்தல்
தண்ணீரின் மேல் நடத்தல்
கடலைக் கடத்தல்
கடலோரத்தில் ஒரு பெண்
பேசவும், கேட்கவும் இயலாத மனிதர்
ஒரு ரோம அதிகாரியின் வேலைக்காரர்
ஒரு கைம்பெண்ணின் மகன்
சிறைச்சாலையிலிருந்து ஒரு செய்தி
ஒரு பரிசேயனுடைய வீட்டில் இயேசு
திருமண விருந்து மண்டபத்தில் இயேசு
இயேசுவும், சக்கேயுவும்
பிறவியிலேயே பார்வையற்ற ஒருவர்
இயேசு சொன்ன உவமைகள் 246
காணாமற் போனவையும் கண்டுபிடிக்கப்பட்டவையும்
காணாமற் போன ஆடு
காணாமற்போன வெள்ளிக்காசு
காணாமற்போன மகன்
கடவுளின் திட்டங்களைப் புரிந்துகொள்ளுதல் 252
கோதுமையும், களைகளும்
மறைவான புதையல்
ஒரு பெரிய விருந்து
விதைக்கிறவர் ஒருவர்
எப்போதும் ஆயத்தமாயிருங்கள் 256
மணப்பெண்ணின் பத்து தோழிகள்
மூன்று வேலைக்காரர்கள்
இடைவிடாத இறைவேண்டல் 257
நடு இரவில் வந்த நண்பர்
கைம்பெண்ணும், நீதிபதியும்
பரிசேயனும், வரி வசூலிப்பவரும்
கருத்தில் கொள்ள வேண்டியவை 260
மன்னியாத வேலைக்காரன்
செல்வந்தனான மூடன்
செல்வந்தனும், லாசருவும்
நல்ல சமாரியர்
போதகராகிய இயேசு 266
மலைமேலிருந்து அளித்த போதனைகள்
உப்பைப் போலிருங்கள்
ஒளியைப் போலிருங்கள்
கோபப்படாதிருங்கள்
தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்
எதிரிகளிடம் அன்பு செலுத்துங்கள்
மற்றவர்களுக்குக் கொடுங்கள்
இறைவேண்டல் முறை
கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்
தலைவரைத் தேர்ந்தெடு
கவலைப்படாதிருங்கள்
பிறரிடம் குற்றம் கண்டுபிடிக்காதீர்கள்
கேள், தேடு, தட்டு
வாழ்வின் வழியைத் தேர்ந்தெடுத்தல்
எச்சரிக்கையாயிருங்கள்
போதனைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்
தங்களை நீதிமான்களென்று எண்ணியவர்கள் 272
சதுசேயர்கள்
பரிசேயர்
குருடரான வழிகாட்டிகள்
நிக்கோதேம்
கடவுளால் நெறிப்படுத்தப்பட்ட மக்கள் 274
இயேசுவும், சமாரியப் பெண்ணும்
இயேசுவும், பாவியாகிய பெண்ணும்
கடவுள் பார்வையில் முறையானது எது 278
மனிதரைத் தீட்டுப்படுத்துபவை
வரி செலுத்த வேண்டுமா?
ஓய்வு நாளில் செய்ய வேண்டியவை
சிலுவையை நோக்கி வழிநடத்துதல் 280
விந்தையான வெளிப்பாடுகள்
இயேசு யாரென்று பேதுரு உணருதல்
இயேசு துன்புற்று இறப்பார்
வியக்க வைக்கும் காட்சி
பெருமையும் தாழ்மையும் 283
பெரியவன் யார்?
இயேசுவைச் சார்ந்தவர் யார் யார்?
கடவுளின் ஆசியை யார் பெற முடியும்?
துன்புற நீ ஆயத்தமா?
மரணம் – வாழ்க்கையின் முடிவல்ல 286
இயேசுவின் உயிருக்கு ஆபத்து
லாசர் இறத்தல்

இயேசு நித்தியவாழ்வைப் பற்றிய வாக்குறுதி அளித்தல்
இயேசு அழுதல்
லாசருவே! வெளியே வா
இயேசுவைக் கொலை செய்யத் திட்டம்
இறுதிப் பயணம் 290
இயேசு தமது இறப்பு பற்றி மீண்டும் பேசுதல்
எருசலேமில் இயேசு பெற்ற வரவேற்பு
ஆலயத்தை தவறாகப் பயன்படுத்துதலைக் கண்டு இயேசு கலங்குதல்
இயேசுவின் அதிகாரத்துக்குச் சவால்
ஒரு கைம்பெண்ணின் காணிக்கை
இந்த ஆலயம் இடிக்கப்படும்
இயேசு எவ்வாறு இறந்தார்? **296**
இயேசுவின் எதிரிகள்
இயேசுவைக் கைது செய்யத் திட்டம்
யூதாசு, இயேசுவுக்கு எதிரியாதல்
இறுதி இரவு உணவு 296
மேல் அறை
இயேசு தம் சீடர்களின் கால்களைக் கழுவுதல்
இயேசு யூதாசை எச்சரித்தல்
தந்தையாம் கடவுளை அடையும்வழி இயேசுவே
தூய ஆவி பற்றிய வாக்குறுதி
ஆண்டவரின் திருவிருந்து
இயேசு எல்லோராலும் கைவிடப்படுதல் 300
இயேசு தம் சீடர்களை எச்சரித்தல்
கெத்சமனி தோட்டத்தில் இறைவேண்டல்
இயேசு கைது செய்யப்படுதல்
யூதர்களின் சங்கத்தின் முன் இயேசு
இயேசுவை பேதுரு மறுதலித்தல்
இயேசுவை பிலாத்து விசாரித்தல்
இயேசுவுக்கு மரண தண்டனை
யூதாசின் முடிவு
இயேசு ஏளனம் செய்யப்படுதல்
சிலுவையில் அறைதல்
சிலுவையிலிருந்து....!
இயேசு இறத்தல்
இயேசுவின் உடலை அடக்கம் செய்தல்
கல்லறையைக் காவல் செய்தல்
இயேசுவின் வெற்றி **324**
விந்தையிலும் விந்தை 324
வெறுமையான கல்லறை
பேதுருவும், யோவானும் கல்லறைக்கு ஓடுதல்
மரியாவின் வியப்பு
காவலர்கள் கூறிய விளக்கம்
'எம்மாவு' என்னும் ஊருக்குச் செல்லுதல்
இயேசு தம் சீடர்களைச் சந்தித்தல்
இயேசுவும், தோமாவும்
கலிலேயா கரையில் இயேசு
இறுதி அறிவுரைகள்
இயேசு விண்ணுலகுக்கு எடுத்துக் கொள்ளப்படுதல்
மாற்றம் பெற்ற சீடர்கள் 336
தூய ஆவியின் வருகை
பேதுரு துணிவுடன் நற்செய்தி அறிவித்தல்
தொடக்கக் கால கிறிஸ்தவர்கள் வாழ்ந்த முறை
இறைப்பணியாளர்களின் பணிகள் 338
பேதுரு கால் ஊனமுற்ற ஒருவருக்கு நலமளித்தல்
பேதுரு ஆலயத்தில் பேசுதல்
பேதுருவும், யோவானும் யூத சங்கத்தின் முன் நிறுத்தப்படுதல்
கடவுள் பலருக்குச் சுகமளித்தல்
இறைப்பணியாளர்கள் கைது செய்யப்படுதல்
நற்செய்தி பரவுதல் **342**
ஒரு புதிய திருப்பணியாளர் அழைக்கப்படுதல்
நற்செய்தியை வெறுத்த சவுல்
தமஸ்கு செல்லும் சாலையில்
சவுல் இயேசுவைப் பின்பற்றுதல்
யூதர் அல்லாதவர்கள்நற்செய்தி கேட்டல் 346
'பிலிப்பி'யில் பவுல் சிறையிலடைக்கப்படுதல்
ஏதன்சு நகரத்தில் பவுல்
எபேசில் குழப்பம்
பவுலின் விருப்பம் நிறைவேறுதல் 354
பவுலைக் கொலை செய்யத் திட்டம்
பவுல் சீசருக்கு முன்பாகச் செல்ல விரும்புதல்
ரோம் நகருக்குப் பயணம் செய்தல்
ஒரு பெரும்புயல்
கப்பலை விட்டுத் தப்பிச் செல்லுங்கள்
மால்தா தீவில்
இறுதியாக ரோம் வந்து சேருதல்
பவுலின் போதனை 362
கடவுள் அருளும் நற்செய்தி
கடவுளின் கோபம்
கடவுளின் திட்டம்
கடவுளின் பார்வையில் குற்றமற்றவர்கள்
புதுவாழ்வு பெறுங்கள்
அன்பு செலுத்துங்கள்
கீழ்ப்படியுங்கள்
மன்னியுங்கள்
மகிழுங்கள்; நன்றி செலுத்துங்கள்
சான்று பகரும் பவுல் 363
பவுலின் துன்பங்கள்
பவுலின் இறுதி அறிவுரைகள்
யோவானின் காட்சிகள் 364
யோவான், இயேசுவை விண்ணகத்தில் காணுதல்
இயேசு விண்ணகத்தில் போற்றப்படுதல்
புதிய விண்ணுலகமும், மண்ணுலகமும்
புதிய எருசலேம்
இதோ! இயேசு வருகிறார்
ஆசி

கடவுள் படைத்த உலகம்

படைப்பின் தொடக்கம்

உலகம் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்னர், கடவுள் மட்டுமே இருந்தார். மக்கள் இல்லை. உலகம் இல்லை. இரவு, பகல், காலம் இல்லை. வேறு எந்தப் பொருளுமே இல்லை. இதை நம்புவது கடினமாகத் தெரிகிறது அல்லவா ? ஆம். இத்தகைய சூழ்நிலையில்தான், விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் படைப்பின் செயல் தொடங்குகிறது.

விவிலியத்தின் முதல் நூல், "தொடக்க நூல்" என்று அழைக்கப்படுகிறது. இது அனைத்துப் படைப்புக்களின் தொடக்கத்தையும் குறிப்பிடும் புத்தகம் ஆகும். அனைத்தும் கடவுளிடமிருந்து தொடங்கின என்று இது கூறுகிறது.

எந்தப் பொருளுமே தற்செயலாகத் தோன்றியது இல்லை. கடவுளே அனைத்தையும் படைத்தார். இந்த உலகம், மக்கள், தாவரங்கள், விண்கோள்கள், அண்டம் என்று, கடவுள் படைத்த அனைத்தும் செம்மையும், ஒழுங்கும், முழுமையும் உடையனவாய் இருந்தன. அவர் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும், மிருகங்களும் சமாதானமாகவும், ஒற்றுமையாகவும், அமைதியாகவும் வாழ வேண்டும் என்று விரும்பினார். ஆனால் பின்னர் ஒரு கொடிய நிகழ்ச்சி நடந்தது. அதன் காரணமாக கடவுளின் திட்டம் சிதைவடைந்து, படைக்கப்பட்ட அனைத்தையும் இழக்கும் நிலை நேரிடும்போல் தோன்றியது. இருப்பினும் இப்பிரச்னைக்கு கடவுள் ஒரு நல்ல தீர்வு வைத்திருந்தார்.

இப்புத்தகத்தைத் தொடர்ந்து நீங்கள் வாசிக்கும்போது, கடவுள் இந்தப் பிரச்சனையை எப்படி விடுவித்தார் என்பதை அறிய முடியும். உலக வாழ்வை அற்புதமான முறையில் நீங்கள் அனுபவித்து மகிழ வேண்டும் என்று கடவுள் விரும்புவதைக் கண்டுகொள்ள முடியும்.

கடவுள் எவ்வாறு படைத்தார்?

தொடக்க நூல் 1:1 – 2:3

முதன் முதலில் கடவுள் உலகத்தைப் படைத்தார். பூமி ஒழுங்கில்லாமல் இருந்தது. அதன்மீது உயிரினங்கள் எவையும் இல்லை. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அலைகள் புரண்டோடும் தண்ணீர் எங்கும் மூடியிருந்தது. கடவுளின் ஆற்றல் தண்ணீரின் மேல் அசைவாடியது. பின்னர் கடவுள், ''வெளிச்சம் உண்டாகட்டும்'' என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. கடவுள் அதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தார். பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரித்தார்.

அதன்பின்னர்; கடவுள், ''வானம் உண்டாகக்கடவது'' என்றார். அப்படியே ஆயிற்று. இவ்வாறு கடவுள் வானத்தை உண்டாக்கினார். பகலும், இரவும் முடிந்து இரண்டாம் நாள் ஆயிற்று.

பின்னர் கடவுள், ''வானத்தின் கீழ் உள்ள தண்ணீர் முழுவதும் ஓரிடத்தில் சேர்ந்து, நிலம் தெரியக்கடவது'' என்றார். அது அப்படியே ஆயிற்று. நிலத்திற்கு ''பூமி'' என்றும்; தண்ணீர் பகுதிக்கு, ''கடல்'' என்றும் பெயரிட்டார். இதனால் கடவுள் மகிழ்ச்சி அடைந்தார். பின்னர் கடவுள், ''பூமியின் மீதெங்கும் தானியங்களையும், பழங்களையும் கொடுக்கும் தாவரங்கள் தோன்றட்டும்.'' என்றார். அப்படியே ஆயிற்று. இது கடவுளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. பகலும், இரவும் முடிந்து மூன்றாம் நாள் ஆயிற்று.

பின்னர் கடவுள், ''இரவிலிருந்து பகலைப் பிரிக்க, வானத்தில் சுடர்கள் தோன்றக்கடவது; அவை பூமிக்கு ஒளி தரும்படி வானத்தில் சுடர் விடட்டும்; அவை நாட்களையும், வருடங்களையும், பருவகாலங்களையும் குறிக்கட்டும்'' என்றார். அது அப்படியே ஆயிற்று. இவ்வாறு பகலும், இரவும் முடிந்து நான்காம் நாள் ஆயிற்று.

அதன் பின்னர்; கடவுள், ''தண்ணீரில் வாழும் பலவகையான உயிரினங்கள் தோன்றக்கடவது; ஆகாயத்தில் பறந்து திரியும் எல்லா வகையான பறவைகளும் தோன்றக் கடவது'' என்றார். அது அப்படியே ஆயிற்று. கடலில் தோன்றிய உயிரினங்களுக்கும், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளுக்கும் அவற்றைப் போன்றே குஞ்சுகள் தோன்றின. கடவுள், அவை சிறப்பாய் அமையவேண்டும் என்று விரும்பினார். பகலும், இரவும் கடந்து ஐந்தாம் நாள் ஆயிற்று.

இவ்வாறு; தாம் படைத்த அனைத்திற்காகவும் கடவுள் மகிழ்ச்சி அடைந்தார்.

பின்னர் கடவுள், ''இனி நாம் மனிதர்களை, நம் சாயலாகப் படைப்போம்; அவர்கள் நம்மைப் போலவே இருப்பர்; அவர்களுக்கு மீன்கள், பறவைகள், சிறிய, பெரிய, சாதுவான, மற்றும் காட்டு மிருகங்கள் அனைத்தையும் ஆண்டு கொள்ளும் அதிகாரம் அளிக்கப்படும்'' என்றார். எனவே; கடவுள் தன்னைப் போல் இருக்கும்படி மனிதனையும், மனுஷியையும் படைத்தார். பின் அவர்களை ஆசீர்வதித்தார். மேலும் அவர், ''நீங்கள் பல பிள்ளைகளைப்

பெற்றெடுங்கள்; அவர்கள் பூமி எங்கும் வாழ்ந்து, ஆண்டு, அனுபவிக்கட்டும். நான் உங்களை; மீன்கள், பறவைகள் மற்றும் எல்லா மிருகங்களையும் ஆளும்படி நியமிக்கிறேன்; உங்களுக்கு எல்லாவகையான தானியங்களையும், பழங்களையும் புசிக்கக் கொடுத்து இருக்கிறேன். பறவைகளுக்கும், மிருகங்களுக்கும், புல்லும், தாவரங்களும் உணவாகும்'' என்றார். அவர் கூறியவாறே ஆயிற்று. கடவுள், தாம் படைத்த அனைத்துப் படைப்புகளையும் பார்த்தார்; அவை அவருக்கு மனநிறைவை அளித்தன. இவ்வாறு பகலும், இரவும் முடிந்து ஆறாம்நாள் ஆயிற்று.

இவ்வாறு, முழு உலகத்தையும் கடவுள் படைத்து முடித்தார். ஏழாம் நாளில் ஓய்வு எடுத்தார். அந்த ஏழாம் நாளை; சிறப்பான நாளாகவும், ஓய்வு நாளாகவும் ஆக்கினார்.

ஏதேன் தோட்டம்

தொடக்க நூல் 2:8, 9:15 – 17

பின்னர், ஆண்டவராகிய கடவுள் ஒரு இடத்தில் ''ஏதேன்'' என்றழைக்கப்படும் தோட்டம் ஒன்றை உண்டாக்கினார். அங்கே அவர் படைத்த மனிதனைக் குடியிருக்கச் செய்தார். அத்தோட்டத்தில் எல்லா வகையான அழகிய பழமரங்களையும் வளரச் செய்தார். தோட்டத்தின் நடுவில் இரண்டு மரங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றுதரும் கனியைப் புசித்தால், ''நித்திய வாழ்வையும்'', மற்றொரு மரத்தின் கனியைப் புசித்தால், மனிதர்; நல்லது, கெட்டது இன்னதென்று பகுத்தறியும் ஆற்றலையும் பெறுவார்கள். கடவுள், ''நீங்கள் எல்லா மரங்களின் கனிகளையும் புசிக்கலாம். ஆனால் நல்லது, கெட்டது இன்னதென்று பகுத்தறியக்கூடிய மரத்தின் கனியை மட்டும் புசிக்கக்கூடாது. அப்படிப் புசித்தால், நீங்கள் சாவது நிச்சயம்'' என்று எச்சரித்தார்.

கடவுளின் திட்டங்கள் எவ்வாறு திசை மாறின?

ஆதி மக்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமை

தொடக்க நூல் 3 : 1 – 15, 20 – 23

''கடவுள்; எல்லாவற்றையும் நல்லவைகளாகவே படைத்தாரென்றால், உலகில் தீயவை காணப்படுவது ஏன்?'' இந்தக் கேள்விக்குரிய விடையை ஆதாம், ஏவாளின் வரலாறு நமக்குத் தருகிறது. அவர்களோடு, தாமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்பினார். அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிபவர்களுக்கே அந்த உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும்.

கடவுள் படைத்த உயிரினங்களில்; பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது. அது ஏதேன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த பெண்ணிடம், ''கடவுள் தோட்டத்திலுள்ள எந்த மரத்தினுடைய பழத்தையாகிலும் உண்ணக் கூடாது என்று உங்களிடம் உண்மையாகவே சொல்லியிருக்கிறாரோ?'' என்று கேட்டது.

அந்தப் பெண்; பாம்பிடம், ''தோட்டத்தில் உள்ள எல்லா மரங்களின் பழங்களையும் நாங்கள் சாப்பிடலாம்; ஆனால், நடுவில் இருக்கும் மரத்தின் பழத்தை மட்டும் சாப்பிடக்கூடாது, தொடவும் கூடாது; அப்படிச் செய்தால், நாங்கள் இறந்துவிடுவோம் என்று கடவுள் கூறியிருக்கிறார்'' என்றாள்.

இதைக் கேட்ட பாம்பு, "கடவுள் கூறியது உண்மையில்லை. நீங்கள் சாகவே மாட்டீர்கள். அந்த மரத்தின் பழத்தைச் சாப்பிட்டால், உடனே நீங்கள் கடவுளைப்போல் ஆகிவிடுவீர்கள். உங்களுக்கு நல்லதையும், கெட்டதையும் பகுத்தறியும் ஆற்றலும் கிடைத்துவிடும் என்பது அவருக்குத் தெரியும். அதனால்தான் தடுத்திருக்கிறார்" என்றது.

அவள், "ஆகா! எவ்வளவு அழகான மரம்! இம்மரத்தின் பழத்தைச் சுவைத்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும்! அதனால் ஞானம் பெறுவது எவ்வளவு மேலானது! என்று நினைத்தாள். பழத்தை பறித்துச் சாப்பிட்டாள். பின்னர், ஆதாமுக்கும் கொடுத்தாள். அவனும் அப்பழத்தைச் சாப்பிட்டான். உடனே அவர்கள் இருவரும் நல்லது, கெட்டதை பகுத்தறியும் ஆற்றலை பெற்றுவிட்டார்கள். அதனால், இருவரும் வெற்றுடம்பாய் இருப்பதை உணர்ந்தார்கள். எனவே; அத்திமரத்தின் இலைகளைப் பறித்து, தங்கள் உடலை மூடி மறைத்துக்கொண்டார்கள்.

அன்று மாலையில், கடவுள் ஏதேன் தோட்டத்தில் உலாவுவதை அறிந்தார்கள். அவருக்குப் பயந்து இருவரும் மரங்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டார்கள். ஆனால் கடவுள், "ஆதாமே! நீ எங்கே இருக்கிறாய்?" என்று கேட்டார்.

ஆதாம், "கடவுளே! நீர் தோட்டத்தில் உலாவும் சத்தத்தைக் கேட்டேன்; நான் வெற்றுடம்பாயிருப்பதை அறிந்து, பயந்து ஒளிந்துகொண்டேன்." என்றான்.

கடவுள் அவனிடம், "நீ வெற்றுடம்பாய் இருக்கிறாய் என்று உனக்கு அறிவித்தது யார்? நான் உன்னிடம் சாப்பிடக் கூடாது என்று கூறின மரத்தின் பழத்தைச் சாப்பிட்டாயோ?" என்று கேட்டார்.

அதற்கு ஆதாம், "எனக்குத் துணையாக நீர் தந்த பெண் அப்பழத்தை எனக்குச் சாப்பிடக் கொடுத்தாள். நானும் அதை வாங்கிச் சாப்பிட்டேன்" என்றான்.

கடவுள்; அந்தப் பெண்ணிடம், "நீ ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கேட்டார்.

அவள், "அந்தப் பாம்பு என்னை நம்பும்படி செய்துவிட்டது. எனவே; நான் அந்த மரத்தின் பழத்தைச் சாப்பிட்டேன்." என்றாள்.

இதைக் கேட்டதும் கடவுள்; பாம்பைப் பார்த்து, "இப்படி நீ செய்தபடியால் அதற்குரிய தண்டனையை அடைவாய். எல்லா மிருகங்களிலும் நீ மட்டுமே சபிக்கப் பட்டிருப்பாய். இது முதல் எப்போதும் நீ உன் வயிற்றினால் ஊர்ந்து திரிவாய். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய். உனக்கும், பெண்ணுக்கும் என்றென்றும்



பகை இருக்கும். அவளுடைய பிள்ளைகளுக்கும் உன் இனத்துக்கும் எப்பொழுதும் பகை இருக்கும். அவளுடைய மகன் உன் தலையை நசுக்குவான். நீ அவனுடைய குதிகாலைக் கடிப்பாய்" என்றார்.

பின்னர் கடவுள்; ஆதாமையும், ஏவாளையும் துன்பப்படுவீர்கள் என்று சபித்தார்.

ஆதாம்; தன் மனைவிக்கு "ஏவாள்" என்று பேரிட்டான். ஏனெனில், அவளே மனித இனம் அனைத்திற்கும் தாயானவள். கடவுள் மிருகங்களின் தோலினால் ஆடைகளைத் தயாரித்து ஆதாமுக்கும், ஏவாளுக்கும் உடுத்தினார்.

பின்னர் கடவுள், "இதோ மனிதர் நம்மில் ஒருவரைப்போல் நல்லதையும், கெட்டதையும் பகுத்தறியத்தக்கவர்களாக ஆகிவிட்டார்கள். அவர்கள் இனிமேல், தோட்டத்தின் நடுவில் இருக்கும் அடுத்த மரமாகிய வாழ்வு தரும் மரத்தின் பழத்தையும் சாப்பிட்டு விட்டால் என்றென்றும் இறவாமல் உயிர் வாழ்வார்கள்" என்று நினைத்து, அவர்களை உடனே ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதன், கடினமாக நிலத்தில் வேலை செய்து, பயிரிட்டு உணவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை அப்போதிருந்தே உண்டாயிற்று.

முதல் கருத்து வேறுபாடு

தொடக்க நூல் 4 : 2 - 7

இப்பகுதியில் மக்கள் கடவுளின் வழிகளைப் பின்பற்றாவிட்டால் என்ன நேரிடும் என்பதை அறிகிறோம். காயீனும், ஆபேலும் – ஆதாம், ஏவாளின் பிள்ளைகள்.

ஆபேல் ஆடு மேய்ப்பவன். காயீன் ஒரு விவசாயி. ஒருநாள் காயீன் தன் நிலத்தில் விளைந்த தானியம், மற்றும் காய்கனிகள் ஆகியவற்றை கொண்டுவந்து கடவுளுக்குக் காணிக்கையாகப் படைத்தான். ஆபேல் தன்னுடைய ஆடுகளில் முதலில் ஈன்ற கொழுமையான குட்டிகளை கடவுளுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். கடவுள்; ஆபேலையும், அவன் செலுத்திய காணிக்கையையும் விரும்பி ஏற்றுக் கொண்டார். ஆனால்; கடவுள் காயீனையும் அவனது காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் காயீன் மிகவும் கோபமடைந்தான். அப்பொழுது கடவுள்

காயீனிடம், "ஏன் கோபப்படுகிறாய்? எனக்கு நீ காணிக்கையை முறையாகப் படைக்க வில்லை; ஆகவே, நீ மகிழ்ச்சியாக இல்லை. பாவம் உன்னை ஆட்கொண்டு கட்டுப்படுத்தப் பார்க்கிறது. எனவே, நீ பாவத்தை அடக்க வேண்டும்" என்றார்.

முதல் கொலை

தொடக்க நூல் 4 : 8 – 16

பின் ஒருநாள் காயீன் தன் தம்பியான ஆபேலிடம், "நாம் தோட்டத்திற்குப் போவோம், வா" என்றான். அதன்படி அவர்கள் இருவரும் சென்றபோது, காயீன் ஆபேலை இரக்கமின்றி கொன்றுவிட்டான்.

கடவுள் காயீனிடம், "காயீனே! உன் தம்பியாகிய ஆபேல் எங்கே?" என்று கேட்டார். அதற்கு காயீன், "கடவுளே, ஆபேல் எங்கே என்று எனக்குத் தெரியாது. என் தம்பிக்கு நான் காவலாளியோ?" என்றான்.

கடவுள் காயீனிடம், "நீ ஏன் இந்தக் கொடுஞ் செயலைச் செய்தாய்? உன் சகோதரனைக் கொன்றபடியால் நீ அதற்குரிய தண்டனையைப் பெற வேண்டும். இப்போதே நீ சபிக்கப்பட்டாய். அவனுடைய இரத்தம் நிலத்தில் சிந்தியதால், நிலம் உனக்கு இனிமேல் தானியங்களை விளைவிக்காது. நீ தங்கியிருக்க வீடில்லாமல், இந்தப் பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்" என்றார்.

இதைக்கேட்ட காயீன், "ஐயோ! கடவுளே, எனக்கு இந்தத் தண்டனை மகாகொடியது. உம்மிடமிருந்தும், இந்தப் பூமியிலிருந்தும் என்னைத் துரத்தி விடுகிறீரே. வீடு இல்லாமல் நான் அலைந்து திரிந்தால் என்னைக் கண்டு பிடிக்கிறவன் கொன்று போடுவானே" என்றான்.

அதற்கு கடவுள், "உன்னை கொலை செய்பவனை நான் தண்டிப்பேன்" என்றார். காயீனைக் காணும் எவனும் அவனைக் கொன்று போடாதபடிக்கு, அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். கடவுளிடமிருந்து காயீன் விலகிச் சென்றான்.

தண்டனையும், இரக்கமும்

நான் ஏன் மக்களைப் படைத்தேன்?

தொடக்க நூல் 6 : 5 – 10

கடவுள், தாம் விரும்பியபடி மக்கள் வாழவில்லை என்று கண்டார். அவர்கள் ஒருவரையொருவர் துன்புறுத்திக்கொண்டும், தன்னால் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புக்களையும் கெடுத்துக்கொண்டும் இருப்பதை அறிந்தார்.

சில காலத்துக்குப் பின்னர், இவ்வுலகம் கொடிய மனிதர்களால் நிறைந்தது. அவர்களது எண்ணங்கள் கேடு நிறைந்ததாகவே எப்போதும் இருந்தன. கடவுள் இத்தகைய மக்களைப் படைத்ததற்காக மனம் வருந்தினார். "தீய எண்ணம் கொண்ட மக்களையும், மிருகங்களையும்,

"பறவைகளையும் நான் அழிக்கப்போகிறேன்" என்றார். ஆனால், கடவுளுக்கு உகந்த நிலையில் 'நோவா' என்னும் மனிதர் வாழ்ந்து வந்தார்.

இது நோவாவின் வரலாறு. அவருக்கு சேம், காம், யாப்பேத் என்னும் மூன்று குமாரர்கள் இருந்தனர். அந்நாட்களில் நோவா மட்டுமே நல்ல மனிதராய் இருந்தார். அவர் கடவுளின் நண்பராய் இருந்தார். நோவா செய்பவை எல்லாம், கடவுளை மகிழ்வடையச் செய்தன.



ஒரு மரக்கலத்தைக் கட்டு

தொடக்கநூல் 6 : 11 - 22

கடவுள் நோவாவிடம், "நான் இந்தக் கொடிய மக்களை அழித்துவிடப் போகிறேன். அவர்கள் இந்த உலகத்தை, வாழ்த்தகுதியற்ற ஒரு இடமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நீ ஒரு பெரிய மரக்கலத்தைக் கட்டு. நல்ல மரத்தைப் பயன்படுத்து. அதனைக் கட்டுவதற்குரிய அளவுகளைச் சொல்லித் தருகிறேன். அதில் பல அறைகள் இருக்க வேண்டும். அம்மரக்கலத்தின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் தண்ணீர் புகாதபடி தார் பூச வேண்டும். நான் பூமியின்மேல் ஒரு பெரிய வெள்ளப் பெருக்கத்தை வரவிடுவேன். அது பூமியின் மேலுள்ள அனைத்து உயிரினங்களையும் அழித்துவிடும். ஆனால் நான்; உனக்கு ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். நீ உன் மனைவியுடன் அந்த மரக்கலத்திலுள் செல். உனது மகன்களையும், அவர்களுடைய மனைவிகளையும் உடன் அழைத்துச்செல். ஒவ்வொரு வகையான மிருகங்கள், பறவைகள் முதலான எல்லா உயிரினங்களில், ஆணும், பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடிகளை உள்ளே கொண்டு செல். உங்களுக்கும், பிற உயிரினங்கள் அனைத்துக்கும் அதிக நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உள்ளே சேமித்து வை" என்றார். நோவா கடவுள் சொன்னபடியெல்லாம் செய்தார்.

மரக்கலத்தின் உள்ளே செல்லுங்கள்

தொடக்கநூல் 7 : 1 - 12, 19, 24

தங்கள் நாடுகளில் பெரிய வெள்ளச்சேதம் ஒன்று ஏற்பட்டதாக பல நாடுகளில் உள்ள கதைகள் கூறுகின்றன. இந்தக் கதையில் ஒரு வெள்ளச் சேதத்தை உண்டாக்கி அதன்மூலம்

கடவுள் தீயோரை அழித்ததைக் காண்கிறோம். ஆனால்; அவர் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களை மட்டும் காப்பாற்றினார்.

மரக்கலம் ஆயத்தமானபோது, கடவுள் நோவாவிடம், "உன்னுடைய முழுக் குடும்பத்தாருடனும் மரக்கலத்தினுள் நுழைவாயாக. இந்த உலகம் முழுவதிலும் நேர்மையானவைகளைச் செய்யும் ஒரே மனிதன் நீதான் என்று கண்டேன். சாப்பிடக்கூடிய எல்லா மிருகங்களிலும், பறவைகளிலும் ஒவ்வொரு வகையிலும் ஏழு ஜோடிகள் வீதம் மரக்கலத்தினுள் கொண்டு செல். பிற எல்லா வகை உயிரினங்களிலும் ஒரு ஜோடி வீதம் உள்ளே வரட்டும். இப்படிச் செய்வதினால், எல்லா வகை உயிரினங்களும் உயிருடன் காக்கப்படும். பின்னால் அவை, மீண்டும் பலுகிப் பெருகி உலகை நிரப்பட்டும். இன்னும் ஏழு நாட்களுக்குப் பின்பு 40 நாட்கள் இரவும், பகலும் பூமியின்மீது தொடர்ந்து மழையை பொழியப் பண்ணுவேன். அது, என்னால் படைக்கப்பட்ட உலகத்திலுள்ள அனைத்து உயிரினங்களையும் அழித்துவிடும்" என்றார். நோவா, கடவுள் தன்னிடம் சொன்னபடியெல்லாம் செய்தார். அவரும், அவருடைய மனைவியும், அவருடைய மகன்களும், மருமகள்களும் மரக்கலத்தினுள் சென்றார்கள். அவர்கள் கடவுள் சொன்னபடி, உயிரினங்களையும் மரக்கலத்தினுள் கொண்டு சென்றார்கள். பின்னர் மரக்கலத்தின் கதவை, கடவுள் வெளியிலிருந்து அடைத்தார். ஏழு நாட்களுக்குப் பின்பு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

அப்போது நோவாவுக்கு வயது 600. நாற்பது நாட்கள் இரவும், பகலும் தொடர்ந்து மழை பெய்தது. நிலத்தின் அடியில் உள்ள தண்ணீரும், வானத்திலிருந்து பெய்த மழை நீரும் திரண்டு பெரிய வெள்ளப் பெருக்காயிற்று. நோவாவின் மரக்கலம் அந்த நீரில் மிதந்தது. மழை நீர் பெருகி உயர்ந்து, பூமியின் மீதுள்ள அனைத்து மலைகளையும் மூடியது. உயரமான மலை உச்சியிலிருந்து ஏழு மீட்டர் உயரத்திற்கு மேல் தண்ணீர் பெருகியது. இந்தத் தண்ணீர் பூமியின் மேல் 150 நாட்கள் தேங்கியிருந்தது.

மரக்கலத்தைவிட்டு வெளியே வாருங்கள்

தொடக்க நூல் 8 : 1 – 22

கடவுள்; மரக்கலத்தின் உள்ளே இருந்த நோவாவையும், பிற உயிரினங்களையும் மறந்துவிடவில்லை. நிலத்தின் அடியிலிருந்து தண்ணீர் எழும்பி வருவது நின்று விட்டது. வானத்திலிருந்து பெய்த மழையும் நின்றது. 150 நாட்களாகப் பூமியின் மிது பெருகியிருந்த தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வடியத் தொடங்கியது. கடைசியில் மரக்கலம் 'அராரத்' என்னும் ஒரு மலையின் மேல் வந்து தங்கியது. தண்ணீர் மேலும் வடிந்தபோது, பூமியின் மீதுள்ள மலைகளின் உச்சிகள் தெரியத் தொடங்கின.

நாற்பது நாட்களுக்குப்பின், நோவா ஒரு ஜன்னலைத் திறந்து, ஒரு காகத்தை வெளியே விட்டார். அது திரும்ப வரவில்லை. தண்ணீர் முற்றிலும் வடியும்வரை அது சுற்றிச் சுற்றிப் பறந்தது. பின்னர் நோவா பூமி உலர்ந்து இருக்கிறதா என்று அறிய, ஒரு புறாவை வெளியே விட்டார். ஆனால், இன்னும் பூமியெங்கும் தண்ணீர் நிறைந்திருந்தது. புறா உட்காருவதற்கு எங்குமே இடம் இல்லாததால், திரும்பி மரக்கலத்திற்கே வந்துவிட்டது. நோவா அதைப் பிடித்து உள்ளே விட்டார்.

ஒரு வாரத்துக்குப் பிறகு நோவா மறுபடியும் புறாவை வெளியே விட்டார். அது அன்று மாலையில் தன் அலகில் ஒரு பச்சை இலையைக் கவ்விக்கொண்டு நோவாவிடம் திரும்பி வந்தது. இதைக் கண்டதும் நோவா; தண்ணீர் பூமியின்மேல் இப்போது ஓரளவு குறைந்திருக்கிறது என்று அறிந்து கொண்டார்.

மேலும் ஒரு வாரம் கடந்தபின் நோவா அந்தப் புறாவை மீண்டும் வெளியே விட்டார். இம்முறை அந்தப்புறா திரும்பி வரவேயில்லை.

மரக்கலத்தின் மேல்பாகத்தை நோவா திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். நிலம் உலர்ந்து வருவதை உணர்ந்தார். பூமி நன்றாக உலர்ந்தபோது நோவாவுக்கு 601 வயது ஆகியது.

கடவுள் நோவாவிடம், "நீ உன் குடும்பத்தாருடன் மரக்கலத்தை விட்டு வெளியே வா. உள்ளே அடைத்து வைத்திருக்கும் எல்லா மிருகங்களையும், பறவைகளையும் பிற உயிரினங்களையும் வெளியே அனுப்பு. அவையாவும் தம் இனங்களைப் பெருக்கி பூமியெங்கும் வாழட்டும்" என்றார். எனவே நோவா; தன் குடும்பத்தாருடன் மரக்கலத்தை விட்டு வெளியே வந்தார். எல்லா மிருகங்களும், பறவைகளும், பிற உயிரினங்களும் தம்முடைய இனங்களுடன் ஜோடி, ஜோடியாக மரக்கலத்தைவிட்டு வெளியே வந்தன.

தம்மையும், எல்லா உயிரினங்களையும் உயிருடன் காத்த கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்காக நோவா ஒரு பெரிய பலிபீடத்தை உண்டாக்கினார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மிருகங்கள், பறவைகளிலிருந்து ஒவ்வொன்றை நோவா பிரித்தெடுத்து, அந்தப் பலிபீடத்தின்மேல் அவற்றை பலியிட்டார். நோவா செலுத்தின பலியின் தன்மையை கடவுள் உணர்ந்து முகர்ந்தார். அதை விரும்பி எற்றுக் கொண்டார். பின்னர் கடவுள்; தனக்குள்தானே, "உலகில் ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்தது முதல் பாவம் செய்து வருகிறான். இனிமேல் ஒருபோதும் இப்போது செய்தது போல் பூமியின் மேலுள்ள எல்லா உயிரினங்களையும் அழிக்க மாட்டேன். பூமியின் மீதெங்கும் எப்போதும் விதைப்பும் அறுப்பும் நடைபெறும். பூமி உள்ளளவும் குளிரும், வெப்பமும், கோடைகாலமும், மாரிகாலமும், பகலும், இரவும் ஒழிவதில்லை" என்றார்.

கடவுள் காட்டிய உடன்படிக்கையின் அடையாளம்

தொடக்க நூல் 9 : 8 – 15

'உடன்படிக்கை' என்னும் சொல் கடவுளுக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்ட ஒரு முக்கியமான ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. சில வேளைகளில் ஒரு உடன்படிக்கை உருவாகும்போது, ஒவ்வொருவருக்கும் அந்த உடன்படிக்கையை நினைவு கூருவதற்காக ஏதாவது ஒரு நினைவுச் சின்னம் கொடுக்கப்படும். இங்கே கொடுக்கப்பட்ட நினைவுச் சின்னம் மிகச் சிறப்பான ஒன்று. அதை இன்றும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கடவுள்; நோவாவிடமும், அவனுடைய பிள்ளைகளிடமும், "இப்போது நான் உன்னோடும், உன் பிள்ளைகளோடும் என்னுடைய உடன்படிக்கையைச் செய்கிறேன். அது உனக்கும், உனக்குப்பின் வரும் எல்லா தலைமுறையினருக்கும் பொருந்தும். உன்னுடன் மரக்கலத்திலிருந்து வெளியே வந்த மிருகங்கள், பறவைகள் முதலான அனைத்து உயிரினங்களுக்கும் இந்த உடன்படிக்கை பொருந்தும்.

இனிமேல் எப்போதுமே ஒரு வெள்ளப் பெருக்கம் நேரிடுவதால் பூமி அழிக்கப் படுவதில்லை என வாக்குறுதி செய்கிறேன். நான் ஒரு வானவில்லை மேகங்களின் மேல் அமைக்கிறேன். அது உங்களுக்கும் எல்லா உயிரினங்களுக்கும் அடையாளமாகும். வானவில் ஆகாயத்தில் தோன்றும் போதெல்லாம் இந்த உடன்படிக்கையை நான் நினைவுகூருவேன். இதுவே எனது உடன்படிக்கை" என்றார்.



இஸ்ரேல் இனத் தோற்றம்

இதுவரை நாம் வாசித்தவையெல்லாம் மெசப்பொத்தாமியா என்னும் இடத்தில் நிகழ்ந்தவை. இன்று அந்த இடம் ஈராக் நாட்டின் ஒரு பகுதி

இந்த அத்தியாயத்தில் கூறப்படும் வரலாறு ஆபிராம் என்ற மனிதரையும், அவரது குடும்பத்தின் அங்கத்தினர்களையும் பற்றியது. இவற்றின் மூலமாக மக்கள் அறியத் தொடங்கிய பின்வரும் உண்மைகளைப் புரிந்து கொள்ளுகிறோம்.

கடவுள் எப்படிப்பட்டவர் ? கடவுள் எதிர்பார்க்கும் மக்கள் வாழ்க்கை முறை..

மக்கள் இனங்களின் தந்தை

கடவுள் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தல்

தொடக்க நூல் 12 : 1 – 7

மெசப்பொத்தாமியாவிலும், பிற நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் பல தெய்வங்களிடம் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்கள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றை வழிபட்டனர். ஆனால் ஆபிராம் இவர்களிடமிருந்து வேறுபட்டவர். அவர் ஒரே கடவுளை நம்பினார். ஏனெனில் அந்தக் கடவுளே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றைப் படைத்தவர். அந்தக்கடவுள் ஆபிராமைத் தம் வீட்டையும், இனத்தாரையும் விட்டு வெகு தூரத்தில் உள்ள ஒரு நாட்டுக்குப் போகச் சொன்னார். கடவுள் அந்தப் புதிய நாட்டை அவருக்கும், அவர் பின் தலைமுறையினருக்கும் கொடுப்பதாக வாக்களித்தார்.



கடவுள் ஆபிராமிடம், ''நான் உன்னை வேறொரு நாட்டுக்குக் கொண்டுபோக விரும்புகிறேன். நீ உன்னுடைய வீட்டையும், நாட்டையும் விட்டுப் புறப்பட வேண்டும். நான் உனக்குப் பல குழந்தைகளையும், பேரக் குழந்தைகளையும் தருவேன். உன்னுடைய குடும்பம் ஒரு காலத்தில் ஒரு பெரிய இனமாக மாறும். நான் உன்னை மகிழ்ச்சியடையச் செய்வேன். உன்னுடைய பெயர், புகழ் பெற்றதாயிருக்கும். நீ பலரை மகிழ்ச்சிக் குள்ளாக்குவாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்குவேன். ஆனால் உன்னைத் துன்புறுத்துவோர்மீது துன்பத்தை வரப்பண்ணுவேன். உன் மூலம் மக்களினங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும்'' என்றார்.

ஆபிராம் 'ஆரானை' விட்டுப் புறப்படும் போது, அவரது வயது 75. அவர் மனைவியாகிய சாராயும், சகோதரன் மகனான லோத்தும் அவருடன் சென்றார்கள். ஆபிராம் ஒரு பெரிய செல்வந்தர். அவருக்குப் பல அடிமைகளும், ஏராளமான கால்நடைகளும் இருந்தன. அவர் தமது சொத்து முழுவதையும் எடுத்துக் கொண்டு, தன்னுடைய மக்களுடன் கானான் தேசத்திற்கு வந்தார்.



ஆபிராம் பல மைல்கள் பயணம் செய்து, 'செக்கேம்' என்னும் ஒரு இடத்தை வந்தடைந்தார். அங்கே நின்ற ஒரு புனிதமான மரத்தின் கீழே அவ்விடத்து மக்கள் தங்களுடைய தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள். கடவுள் அங்கே ஆபிராமுக்குக் காட்சியாகி "ஒருநாள் இந்த நாட்டை உன் மக்களுக்குக் கொடுப்பேன்" என்றார். ஆபிராம் அங்கே, கடவுளுக்கு ஒரு பலிபீடம் கட்டி, அதன் மேல் பலிகளைச் செலுத்தினார்.

கானான் தேசம் பின்னர் "இஸ்ரயேல்" என்று அழைக்கப்பட்டது. கடவுள் ஆபிராமின் பெயரை 'ஆபிரகாம்' என்று மாற்றினார். அதன் பொருள், "பல மக்கள் இனங்களின் தந்தை" என்பதாகும். சாராயின் பெயர் "சாராள்" என்று மாற்றப்பட்டது. அதற்கு "இளவரசி" என்று பொருளாகும்.

பல ஆண்டுகள் கடந்தன. ஆபிரகாமும், சாராளும் மிகவும் வயது சென்றவர்களாக இருக்கும்போது, கடவுள் அவர்களுக்கு "ஈசாக்கு" என்னும் பெயர் கொண்ட ஒரு மகனைக் கொடுத்தார்.

கடவுள் ஆபிரகாமை ஆயத்தப்படுத்துதல்

தொடக்க நூல் 22 : 1 – 18

மெசப்பொத்தாமியா என்னும் ஆபிரகாமின் நாட்டில் ஒரு நூதனமான வழக்கம் இருந்தது. மக்கள் சில வேளைகளில் தங்கள் பிள்ளைகளை கடவுளுக்குப் பலி செலுத்துவார்கள். அது கடவுள் தங்களுக்கு குழந்தைகளைக் கொடுத்ததற்கான நன்றிப்பலி என்று அந்த மக்கள் கருதினார்கள். அப்படிச் செய்தால் கடவுள் மென்மேலும் அவர்களுக்குக் கொடுப்பார் என்று நம்பினார்கள்.

கடவுள் ஆபிரகாமைச் சோதிக்க விரும்பினார். அவர் அவனை அழைத்து, "ஆபிரகாமே, நீ உன் மகன் ஈசாக்கை மிக அதிகமாக நேசிக்கிறாய் என்று அறிவேன். இப்போது அவனை மோரியா நாட்டுப் பகுதிக்கு அழைத்துக்கொண்டுபோ. அங்கே, நான் உனக்கு ஒரு மலையைக் காட்டுவேன். அதன்மேல் நீ உன் மகனை எனக்குப் பலியிட வேண்டும்" என்றார்.

மறுநாள், ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குடன் மோரியா நாட்டுக்குப் புறப்பட்டார். தன் வேலைக்காரர்களில் இரண்டு பேரையும், பலியிடுவதற்குத் தேவையான விறகு போன்ற பொருட்களையும் ஒரு கழுதையின் மேல் ஏற்றிக் கொண்டு சென்றார். மூன்றாம் நாள் ஆபிரகாம் தூரத்தில் ஒரு மலைதெரிவதைக் கண்டார். அவர், தன் வேலைக்காரரிடத்தில் "நீங்கள் கழுதையுடன் இங்கே காத்திருங்கள்; நானும், என் மகனும், அந்த மலைக்குச் சென்று கடவுளை வழிபட்டுவிட்டு திரும்பி வருகிறோம்" என்றார்.

ஆபிரகாம், பலியிடுவதற்கான விறகை ஈசாக்கின் தலையின்மேல் வைத்தார். அவர் ஒரு கத்தியையும், நெருப்புத் தழலையும் எடுத்துக்கொண்டார்.

போகும் வழியில் ஈசாக்கு தன் தந்தையிடம் "அப்பா, பலியிடுவதற்குத் தேவையான விறகும், நெருப்பும் நம்மிடம் உள்ளன. ஆனால் பலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?" என்று கேட்டான்.

அதற்கு ஆபிரகாம் ஈசாக்கிடம், "என் மகனே! கடவுள் நாம் பலியிடுவதற்குரிய ஆட்டுக்குட்டியை நமக்குத் தருவார்" என்றார்.

கடைசியில், அவர்கள் மலையை வந்து சேர்ந்தார்கள். மலையின் உச்சியில் ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். விறகை எடுத்து அதன்மேல் அடுக்கினார். பின்னர் தன் மகன் ஈசாக்கை கட்டி, பலிபீடத்து விறகின் மேல் கிடத்தினார். பின்னர் அவனைப் பலியிடுவதற்காகத் தன் கத்தியை எடுத்தார். அந்த நேரத்தில் வானத்தில் ஒரு தேவ தூதன் தோன்றி, "ஆபிரகாமே! உன் மகனைக் கொல்லாதே. இப்பொழுது நீ உன் ஒரே



மகனை பலியிடவும் துணிந்து விட்டாய். நீ கடவுளுக்குப் பயப்படுகிறவன் என்றும், கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவன் என்றும் அறிந்தேன்'' என்றார்.

இதனைக் கேட்ட ஆபிரகாம், சுற்றுமுற்றும் பார்த்தார்; அப்பொழுது புதரிலே கொம்புகள் சிக்கிய நிலையிலிருக்கும் ஒரு ஆட்டுக் கிடாயைக் கண்டார். அதைப்பிடித்து வந்து, தன் மகனுக்குப் பதிலாக அதே பலிபீடத்தில் தகனப்பலியிட்டார்.

ஆபிரகாம் அந்த இடத்துக்கு, "யெகோவாயீரே'' என்று பெயரிட்டார். அதற்கு ''ஆண்டவர் பார்த்துக்கொள்வார்'' என்று பொருள்.

மீண்டும் ஆண்டவருடைய தூதர் வானத்திலிருந்து ஆபிரகாமை அழைத்தார். ''நீ உன்னுடைய ஒரே மகனாகிய ஈசாக்கை எனக்குப் பலியிட முன்வந்தபடியால் நான் உன்னை அதிகமதிகமாக ஆசீர்வதிப்பேன். நீ உன் பிள்ளைகளையும், பேரப்பிள்ளை களையும் காண்பாய். உன் இனத்தார் தங்கள் எதிரிகளைத் தோற்கடிப்பார்கள். உன் இனத்தார் மூலம் எல்லா இனத்தவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். நீ எனக்குக் கீழ்ப்படிந்தபடியால் உன் இனம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்'' என்றார்.

ஈசாக்குக்கு ஒரு மனைவியை அமைத்துக்கொடுத்தல்

தொடக்க நூல் 24 ; 1 – 28

ஆபிரகாம் வயது மிகுந்தவரானார். கடவுள் அவரை அதிகமதிகமாய் ஆசீர்வதித்திருந்தார். ஒருநாள், ஆபிரகாம் தன் ஊழியக்காரரில் மிகவும் வயது சென்ற ஒருவனை அழைத்து, என் மகன் ஈசாக்குக்கு நீ ஒரு பெண் பார்க்க வேண்டும். வானத்துக்கும், பூமிக்கும் கடவுளாகிய ஆண்டவரின் பெயரில் என் மகனுக்கு, கானான் நாட்டு மக்களில் பெண் கொள்வதில்லை என்று நீ எனக்கு ஆணையிட்டுக் கொடுக்க வேண்டும். என்னுடைய நாட்டுக்குப் போய், என் சொந்த இனத்திலிருந்து என் மகனுக்கு ஒரு மனைவியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வா'' என்றார்.

இதைக்கேட்ட வேலைக்காரான், ''ஒரு வேளை நான் அழைக்கும் பெண் என்னுடன் இங்கு வர மறுக்கலாம். அப்பொழுது ஈசாக்கை அவர்களுடைய நாட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டுமா ?'' என்று கேட்டான். ஆபிரகாம் உறுதியாக, "நீ ஒருநாளும் ஈசாக்கை அந்த நாட்டுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. அந்த நாட்டிலிருந்தும், என்வீட்டிலிருந்தும், என் இனத்தாரை விட்டும் கடவுள் என்னை இந்த நாட்டுக்கு அழைத்து வந்தார். அவர் இந்த நாட்டை என் பிள்ளைகளுக்கும்,எனது பின் தலைமுறையினருக்கும் என்றென்றும் உரிமையாகத் தருவதாக எனக்கு உறுதியான வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அவர்; தம் தூதரை உனக்கு முன்பாக அந்த நாட்டுக்கு அனுப்பி, என் மகனுக்கு ஒரு மனைவியை கண்டுபிடிக்க உனக்கு உதவி செய்வார். ஒருவேளை, அப்பெண் உன்னுடன் இங்கே வர மறுத்தாலும், நீ எனக்குச் செய்துகொடுக்கும்

ஆணையிலிருந்து விடுதலை பெறுவாய். ஆனால், என் மகன் ஈசாக்கை மட்டும் அந்த நாட்டுக்கு அனுப்ப நீ ஒத்துக்கொள்ளக்கூடாது'' என்றார். எனவே, ஆபிரகாம் விரும்பியவாறே அந்த வேலைக்காரன் அவர் சொன்னபடிச் செய்வதாக ஆணையிட்டுக்கொடுத்தான்.

அந்த வேலைக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்தைத் தேர்வு செய்து, அவற்றின்மேல் ஆபிரகாமுக்குள்ள விலை உயர்ந்த பொருட்களை ஏற்றிக்கொண்டு ஆபிரகாமின் ஊருக்கு வந்து சேர்ந்தான். அப்போது மாலை நேரம், ஊருக்கு வெளியே ஒரு கிணறு இருந்தது: பெண்கள் குடத்துடன் தண்ணீர் எடுக்க வரும் நேரமது: அவன் தன் ஒட்டகங்களைக் கிணற்றின் அருகில் நிறுத்தினான். பின்னர் கடவுளிடம் இவ்வாறு

வேண்டினான். "என் எஜமானராகிய ஆபிரகாமின் ஆண்டவராகிய கடவுளே! நீர் என் எஜமானருக்கு அளித்த வாக்குறுதியை நினைத்தருளும்: எனக்கு உதவி செய்யும்: இதோ, இந்தக் கிணற்றன் அருகில் நிற்கிறேன். இங்கு தண்ணீர் எடுக்க வரும் பெண்களில் ஒருத்தியிடம், "தயவுசெய்து நீ எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தா" என்பேன். அப்போது அவள், "ஐயா, நீர் தண்ணீர் குடியும். நான் உமது ஒட்டகங்களுக்கும் தண்ணீர் எடுத்து வார்ப்பேன்" என்று சொல்வாளானால், அவளே நீர் ஈசாக்குக்கு நியமித்த பெண் என்று அறிந்துகொள்வேன். அதன்படி நடந்தால் நீர் எஜமானருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டதாக அறிவேன்" என்றான்.

அவன் இப்படி இறைவேண்டல் செய்து முடிப்பதற்குள், 'ரெபேக்காள்' குடத்துடன் அங்கே வந்தாள். அவள் ஆபிரகாமின் உறவினராகிய பெத்துவேலின் மகள். அவள் ஒரு அழகான பெண். அவள் கிணற்றில் இறங்கி, குடத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு, மேலே ஏறி வந்தாள். ஆபிரகாமின் ஊழியக்காரன் அவளிடம் சென்று, "எனக்குக் குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் தா" என்று கேட்டான். உடனே அவள், "குடியுங்கள் ஐயா" என்று சொல்லி அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் வார்த்தாள். அவன் குடித்து முடித்த போது அவள், "உமது ஒட்டகங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் எடுத்து வார்ப்பேன்" என்று சொல்லி,ஒட்டகங்களும் குடிக்கும் வரை தண்ணீர் எடுத்து ஊற்றினாள். ஊழியக்காரன் கடவுள் தனக்குக் காட்டும் பெண் இவள்தானா? என்றறிய மௌனமாக அவள் செய்வதைக் கவனித்துக்கொண்டு இருந்தான்.

ஒட்டகங்கள் தண்ணீர் குடித்து முடிந்தபோது, ஊழியக்காரன் ஒரு பொன் மூக்குத்தியையும், இரண்டு பெரிய பொன் வளையல்களையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தான். பின்னர் அந்த ஊழியக்காரன், அவளிடம் "நீ யாருடைய மகள்? நானும், என் ஆட்களும், ஒட்டகங்களும் இன்றிரவு தங்க உன் வீட்டில் இடம் உண்டா?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "என் தந்தையின் பெயர் பெத்துவேல். என்னுடைய வீட்டில் உங்கள் ஒட்டகங்களுக்குப் போதிய தீவனமும், நீங்கள் யாவரும் தங்குவதற்குப் போதுமான இடமும் உண்டு" என்றாள்.

இதைக் கேட்டதும் ஆபிரகாமின் பணியாள் முழங்காற்படியிட்டு, "நான் ஆண்டவரைப் போற்றுகிறேன். அவர் என் எஜமானருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார். அவர் என்னை நேராக என் எஜமானரின் உறவினர்களிடத்துக்கே அழைத்து வந்துள்ளார்" என்று கூறி நன்றி செலுத்தினான்.

இதைக் கேட்டதும் ரெபேக்காள், நேராகத் தன் வீட்டுக்கு ஓடி, நடந்த எல்லாவற்றையும் தன் குடும்பத்தாரிடத்தில் கூறினாள்.

ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கு அங்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அவன் ரெபேக்காளின் குடும்பத்தாரிடம் ஆபிரகாமைப் பற்றியும் ஈசாக்கைப் பற்றியும் எடுத்துக் கூறினான். இப்போது அவன் இங்கு வந்துள்ள நோக்கத்தையும், தான் செய்த இறை வேண்டலையும் தெரியப்படுத்தினான். எனவே, உண்மையிலேயே ரெபேக்காள் ஈசாக்கின் மனைவியாக வேண்டும் என்று கடவுள் நியமித்துள்ளதாக உணர்ந்தார்கள். எனவே, ரெபேக்காளை ஈசாக்குக்கு மனைவியாகும்படி ஊழியக்காரனுடன் அனுப்பி வைத்தனர்.

யாக்கோபின் வரலாறு

ஏசாவும், யாக்கோபும்

தொடக்க நூல் 25 : 24 – 34

முன் காலத்தில்; ஒருவர் வயதாகி இறக்கும் முன்னர், தன்னுடைய மூத்த மகனை முழுமையாக ஆசீர்வதிப்பது வழக்கம். தன் தகப்பனாருடைய இறப்புக்குப் பின்னர் அவருடைய சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு அந்த மூத்த மகனுக்குக் கிடைக்கும். அவனே தந்தைக்குப் பின் குடும்பத்தில் முக்கியமான தீர்மானங்களைச் செய்வான். இவை ஒரு குடும்பத்தில் இருக்கும் மூத்த மகனின் உரிமைகளாகும்.

ஈசாக்குக்கு 60 வயதானபோது; அவர் மனைவியாகிய ரெபேக்காளுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். முதலில் பிறந்த குழந்தை சிவப்பு நிறமாகவும், உடல் முழுவதும் முடி நிறைந்தவனாகவும் இருந்தான். அவனுக்கு 'ஏசா' என்று பேரிட்டார்கள். இரண்டாவது குழந்தை, முதல் குழந்தையின் காலைப் பிடித்துக்கொண்டே பிறந்தது. இளையவனுக்கு 'யாக்கோபு' என்று பெயரிட்டனர். 'யாக்கோபு' என்றால் 'எத்தன்' என்று பொருள்.

பிள்ளைகள் இருவரும் வளர்ந்து வந்தார்கள். ஏசா, வயல்வெளியிடங்களில் பணி செய்வதை விரும்பினான். அவன் ஒரு நல்ல வேட்டைக்காரன் ஆனான். ஆனால், யாக்கோபு பண்புடையவனாய் வீட்டிலும், கூடாரங்களிலுமே எப்போதும் தங்கியிருந்தான். ஈசாக்கு, ஏசாவை நேசித்தார். ஏனெனில்; ஏசா கொண்டு வரும் வேட்டைக்கறியை ஈசாக்கு விரும்பிச் சாப்பிடுவார். ரெபேக்காள் யாக்கோபை அதிகமாக நேசித்தாள்.

ஒரு நாள், யாக்கோபு சுவையான கூழ் காய்ச்சிக்கொண்டு இருந்தான். அந்நேரத்தில் வேட்டைக்குச் சென்றிருந்த ஏசா திரும்பி வந்தான். அவன் யாக்கோபிடம், "நான் மிகவும் பசியுடன் இருக்கிறேன். நீ காய்ச்சும் கூழில் எனக்குக் கொஞ்சம் தா" என்றான்.

யாக்கோபு ஏசாவிடம், "நான் உனக்குக் கூழ் தருகிறேன். ஆனால்; அதற்குப் பதிலாக நீ உனக்கிருக்கும் மூத்த மகனுக்குரிய பிறப்பு உரிமையை எனக்குத் தரவேண்டும்" என்றான்.

அதற்கு ஏசா, "நான் பசியால், இறக்கும் நிலையில் இருக்கிறேன். பிறப்புரிமைகளுக்காக நான் கவலைப்படவில்லை. இப்போது எனக்குக் கூழ் கொடு" என்றான்.

அதற்கு யாக்கோபு, "முதலில் உன்னுடைய பிறப்புரிமைகளை எனக்குத் தருவதாக வாக்குறுதி கொடு" என்றான். உடனே ஏசா, தன் உரிமைகளைக் கொடுத்து விடுவதாக வாக்குறுதி அளித்தான். அதன் பின்னர், யாக்கோபு ஏசாவுக்குக் கொஞ்சம் ரொட்டியும், கூழும் கொடுத்தான். ஏசா அவற்றை உண்டு விட்டுச் சென்றான். அவன், தான் இழந்த உரிமைகளுக்காகக் கவலைப்படவில்லை.

யாக்கோபு தம் தந்தையை ஏமாற்றுதல்

தொடக்க நூல் 27 : 1 – 41

ஈசாக்கு இறப்பதற்குமுன் தன்னுடைய மூத்த மகனை ஆசீர்வதிக்கக் கடமைப் பட்டிருந்தார். கடவுள் ஈசாக்கின் பின்வரும் தலைமுறையினரை ஆசீர்வதிப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார். "அந்த ஆசீர்வாதங்கள் அவர் தம் மூத்த மகனை ஆசீர்வதிக்கும்போது அவர்களுக்குக் கிடைத்துவிடும்.

ஈசாக்குக்கு வயதாகிவிட்டது. அவரது கண் பார்வை மங்கிவிட்டது. அவர், தன் மூத்த மகனாகிய ஏசாவை அழைத்து "அருமை மகனே! எனக்கு வயதாகிவிட்டது. நான் இனி நீண்ட நாள் உயிரோடிருக்க மாட்டேன். நீ போய் எனக்காக ஒரு மிருகத்தை வேட்டையாடி, நான் விரும்பும் வகையில் சமைத்து எனக்குக் கொண்டுவா. அதைச் சாப்பிட்டு மகிழ்ந்து, நான் சாகும்முன் என் கடைசி ஆசீர்வாதங்களை உனக்குத் தந்துவிட விரும்புகிறேன்" என்றார்.

ஈசாக்கு இவ்வாறு ஏசாவிடம் பேசிய எல்லாவற்றையும் ரெபேக்காள் கேட்டுக் கொண்டிருந்தாள். ஏசா வேட்டையாடுவதற்காக வெளியே சென்றதும், அவள் யாக்கோபை அழைத்தாள். அவனிடம், "இப்போது உன் தந்தை ஏசாவிடம் பேசியதை கேட்டேன். ஒரு மிருகத்தை எனக்காக வேட்டையாடி, சமைத்துக் கொண்டுவா. நான் அதைச் சாப்பிட்டு, உன்னை ஆசீர்வதிக்க விரும்புகிறேன் என்றார்." என்றாள்.

பின்பு அவள் யாக்கோபிடம், "நான் சொல்வதைக்கேள் மகனே! வெளியே நமது ஆட்டுமந்தைக்குச் சென்று இரண்டு இளமையான ஆட்டுக் குட்டிகளைக் கொண்டுவா. நான் அவற்றை, உன் தந்தைக்கு விருப்பமானபடி சமைத்துத் தருகிறேன். நீ அதைக் கொண்டுபோய் அவரிடம் கொடு. அவர் அதைச் சாப்பிட்டுவிட்டு, தாம் இறக்குமுன் உன்னை ஆசீர்வதித்து விடுவார்" என்றாள்.

அதைக்கேட்ட யாக்கோபு, "அம்மா,

ஏசாவின் உடல் முழுவதும் முடி நிறைந்தது. என்னுடைய கைகளோ மிருதுவானவை. என் தந்தை என்னைத் தொட்டுப் பார்த்து, நான் ஏசா அல்ல என்று அறிந்து, நான் அவரை ஏமாற்றுவதைக் கண்டுபிடித்தால்; நான் ஆசீர்வாதத்தையல்ல, சாபத்தையல்லவா அனுபவிக்க வேண்டியது வரும்'' என்றான்.

அதற்கு ரெபேக்காள், “என் மகனே, அந்தச் சாபம் என்மேல் வரட்டும். நீ போய் நான் சொன்னபடி ஆட்டுக்குட்டிகளைக் உடனே கொண்டுவா. நீ என்ன செய்ய வேண்டுமென்று நான் உனக்குச் சொல்லித் தருவேன்'' என்றாள்.

எனவே, யாக்கோபு சென்று மந்தையிலிருந்து இரண்டு ஆட்டுக் குட்டிகளைப் பிடித்துவந்து தன் தாயிடம் கொடுத்தான். அவள் அவற்றை, ஈசாக்கு விரும்பும் வகையில் சுவையாகச் சமைத்தாள். பின்னர் ஏசாவின் நல்ல துணிகளை எடுத்து, யாக்கோபுக்கு அணிவித்தாள். ஆட்டுத் தோலை யாக்கோபின் கைகளிலும், கழுத்திலும் கட்டிவிட்டாள். அவள் தயாரித்த சுவைமிகுந்த இறைச்சியையும், ரொட்டியையும் அவனிடம் கொடுத்து அனுப்பினாள்.

அவற்றை எடுத்துக்கொண்டு, யாக்கோபு தன் தந்தையிடம் சென்று, ''அப்பா'' என்று அழைத்தான். ஈசாக்கு, ''மகனே நீ யார் ?'' என்று கேட்டார்.

அதற்கு யாக்கோபு, “நான் உம்முடைய மூத்த மகன் ஏசா: நீர் சொன்னபடி செய்துவிட்டேன். தயவுசெய்து நீர் எழும்பி உட்கார்ந்து, நான் உமக்காகக் கொண்டுவந்துள்ள இறைச்சியில் கொஞ்சம் சாப்பிடும்: பின்னர் என்னை ஆசீர்வதியும்'' என்றான்.

ஈசாக்கு அவனிடம், ''மகனே இவ்வளவு சீக்கிரம் உனக்கு வேட்டை எப்படி வாய்த்தது ?'' என்று கேட்டார். அதற்கு யாக்கோபு, “கடவுள் எனக்குச் சீக்கிரம் கிடைக்கும்படி உதவி செய்தார்'' என்றான்.

ஈசாக்கு யாக்கோபிடம், “தயவுசெய்து நீ என் அருகில் வா, நான் உன்னைத் தொட்டுப் பார்க்கட்டும். நீ உண்மையிலேயே ஏசாதானா ?

என்று கேட்டார். யாக்கோபு தன் தந்தையின் அருகில் சென்றான். ஈசாக்கு அவனைத் தொட்டுத் தடவிப் பார்த்துவிட்டு, "சத்தமோ யாக்கோபின் சத்தம், ஆனால் கைகளோ ஏசாவின் கைகளைப் போல் உள்ளன" என்றார். அவர், வந்திருப்பது யாக்கோபுதான் என்று அறியவில்லை. ஏனெனில், அவனுடைய கைகள், ஏசாவின் கைகளைப்போல் முடி நிறைந்தவைகளாகக் காணப்பட்டன. மறுபடியும் ஈசாக்கு அவனை ஆசீர்வதிக்கும் முன், "உண்மையிலேயே நீ ஏசாதானா ?" என்று கேட்டார். அதற்கு யாக்கோபு, "ஆம் நான் ஏசாதான் " என்றான்.

ஈசாக்கு அவனிடம், "நீ கொண்டு வந்துள்ளதில் கொஞ்சம் இறைச்சியை எனக்குத்தா. நான் அதைச் சாபிட்டபின் உன்னை ஆசீர்வதிக்கிறேன்" என்றார். யாக்கோபு கொஞ்சம் இறைச்சியையும், திராட்சை ரசத்தையும் கொண்டுபோய்க் கொடுத்தான். அப்பொழுது ஈசாக்கு, "மகனே, என் அருகில் வந்து என்னை முத்தம் செய்" என்றார். யாக்கோபு முத்தம் செய்ய அருகில் சென்றபோது, ஈசாக்கு அவனுடைய ஆடைகளை முகர்ந்து பார்த்தார். பின்னர் அவனை ஆசீர்வதித்தார்.

"என் குமாரனுடைய வாசனை, கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப் போல் இருக்கிறது. தேவன் உனக்கு, வானத்துப் பனியையும், பூமியின் வளமை யையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும், திராட்சை ரசத்தையும் தந்தருள்வாராக. அநேக ஜனங்கள் உனக்குச் சேவை செய்வார்கள், உன்னை வணங்குவார்கள். நீ உன் சொந்த இனத்தை ஆளுகை செய்வாய். அவர்கள் உன்னை மதிப்பார்கள். உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவும், ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர் களுமாய் இருப்பார்கள்" என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

இவ்விதமாய் ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடித்தவுடன், யாக்கோபு வெளியே போய்விட்டான்.

வேட்டைக்குச் சென்றிருந்த ஏசா திரும்பி வந்து சேர்ந்தான். அவன் வழக்கம்போல் தான்

கொண்டு வந்திருந்த வேட்டைக்கறியைத் தன் தந்தையின் விருப்பத்திற்கேற்ப சமைத்தான். அதை அவரிடம் எடுத்துச் சென்றான். தன் தந்தையைப் பார்த்து, "அப்பா, தயவுசெய்து எழும்பி உட்காரும். உமக்காக நான் கொண்டு வந்துள்ள வேட்டைக் கறியைச் சாப்பிடும். பின்னர் என்னை ஆசீர்வதியும்" என்றான்.

"நீ யார்?" என்று ஈசாக்கு கேட்டார். "உமது மூத்த மகன் ஏசா" என்றார்.

இதைக் கேட்டதும் ஈசாக்கு அதிர்ச்சி அடைந்து, "அப்படியானால் சற்று முன்னால் இறைச்சியைக் கொண்டுவந்து எனக்குத் தந்தது யார்? நீ வருவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்புதான் நான் அதைச் சாப்பிட்டேன். அவனை ஆசீர்வதித்தும் விட்டேன். அந்த ஆசீர்வாதத்தை இனித் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது" என்றார்.

ஏசா இதைக் கேட்டதும் மிகவும் ஏமாற்றம் அடைந்தான். உரத்த சத்தத்துடன் அலறி, "என்னையும் ஆசீர்வதியுங்கள் அப்பா" என்று கதறினான்.

ஈசாக்கு, "உன் தம்பி என்னை ஏமாற்றிவிட்டான். அவன் உன்னுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுச்சென்று விட்டான்" என்றார்.

ஏசா, "அவன் இப்போது இரண்டாம் முறையாக என்னை ஏமாற்றி இருக்கிறான். அவன் பெயர் "எத்தன்" என்று இருப்பதில் வியப்பொன்றும் இல்லை. முன்பொருநாள் என்னுடைய மூத்த மகனுக்குரிய பிறப்புரிமைகளை ஏமாற்றிப் பெற்றுக் கொண்டான். இப்பொழுது உம்மிடமிருந்து கிடைக்க வேண்டிய ஆசீர்வாதங்களையும் பெற்றுச் சென்றுவிட்டான். அப்பா, உங்களிடம் எனக்காக ஒரு ஆசீர்வாதம்கூட மீதம் இல்லையா?" என்று கேட்டான்.

ஈசாக்கு, "மகனே நான் ஏற்கனவே யாக்கோபை ஆசிர்வதித்துவிட்டேன். இனிமேல் அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான். உறவினர் அனைவரும் அவனைச் சேவிப்பார்கள். அவனுக்குத் தானியமும் திராட்சைரசமும் இருக்கும். மகனே இனி என்னிடம் எந்த ஆசீர்வாதமும் இல்லை" என்றார்.

ஆனால் ஏசா, தொடர்ந்து தன் தந்தையிடம் கெஞ்சிக்கொண்டிருந்தான். "உங்களிடம் ஒரு மகனுக்கு மட்டும்தான் ஆசீர்வாதம் இருந்ததா? என்னையும் ஆசீர்வதியுங்கள் அப்பா" என்று கதறினான்.

அப்பொழுது ஈசாக்கு, "உனக்காக வானத்திலிருந்து பனி பெய்வதில்லை. உன் வயல்கள் நல்ல பலனைத் தராது. நீ உன் சகோதரனைச் சேவிக்கிறவனாயிருப்பாய். ஆனால் நீ, பட்டயத்தால் சண்டை போடுகிறவன். ஒரு நாள் நீ வெற்றி பெறுவாய். அப்பொழுது சுதந்திர மனிதனாவாய்" என்றார்.

யாக்கோபு ஏசாவுக்குரிய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் தம் தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்டபடியால் ஏசா, யாக்கோபை வெறுத்தான். "என்னுடைய அப்பா இறக்கும்வரை காத்திருப்பேன். அதன்பின் யாக்கோபைக் கொன்றுவிடுவேன்" என்று ஏசா தன் மனதிற்குள் திட்டமிட்டான்.

பரலோகத்துக்கு ஒரு ஏணி

தொடக்க நூல் 28 : 11 - 22

யாக்கோபைக் கொன்றுவிட வேண்டும் என்று ஏசா திட்டமிட்டுள்ளதை ரெபேக்காள் கேள்விப்பட்டாள். எனவே, அவள் யாக்கோபை மெசப்பொத்தாமியாவிலிருக்கும் தன் சகோதரன் லாபானின் வீட்டுக்கு ஓடிப்போகும்படி கூறினாள். தொலைவிலுள்ள அவ்விடத்தில் யாக்கோபு பாதுகாப்பாக இருப்பான் என்று அவள் நினைத்தாள்.

அப்படியே யாக்கோபு புறப்பட்டுச் சென்றான். இரவு வேளையானபோது, வழியில் ஓரிடத்தில் தங்கினான். ஒரு கல்லின்மேல் தன் தலையைச் சாய்த்து தரையில் படுத்துத் தூங்கினான். அப்பொழுது அவன் ஒரு கனவு கண்டான். வானத்துக்கும், பூமிக்கும் இடையில் ஒரு ஏணி இருந்தது. அதில் தேவதூதர்கள் ஏறிக்கொண்டும், இறங்கிக்கொண்டும் இருந்தார்கள். அதற்கு மேலாக ஆண்டவர் நின்றார். அவர் யாக்கோபிடம், "நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் கடவுளாகிய 'ஆண்டவர்'. நீ படுத்திருக்கிற இந்த நாட்டை உனக்கும், உன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன். அவர்கள் எண்ணிக்கையில் பெருகுவார்கள். அவர்கள் உலகெங்கும் பரவுவார்கள். உன் மூலமாகவும், உனக்குப் பின்வரும் தலைமுறையினர் மூலமாகவும், இந்த உலகெங்குமுள்ள அனைத்து மக்கள் இனங்களையும் ஆசீர்வதிப்பேன். நீ போகும் இடமெல்லாம் உன்னைப் பாதுகாப்பேன். இந்த நாட்டுக்கு உன்னைத் திரும்ப வரப் பண்ணுவேன். உனக்கு வாக்களித்த யாவையும் செய்து முடிக்கும்வரை நான் உன்னைவிட்டு விலகமாட்டேன். நினைவில் வைத்துக்கொள்" என்றார்.

யாக்கோபு விழித்தெழுந்து, ''ஆண்டவர் இந்த இடத்தில் இருக்கிறார். இதை நான் முன்னரே அறியவில்லை. இந்த இடம் எனக்கு நடுக்கத்தையும், பயத்தையும் தருகிறது. இது கடவுளின் உறைவிடம். இது விண்ணின் வாசல்'' என்றார்.

மறுநாள் அதிகாலையில் யாக்கோபு விழித்தெழுந்து, தன் தலையின் அடியில் வைத்திருந்த கல்லை எடுத்து அவ்விடத்தில் ஒரு நினைவுச் சின்னமாக நட்டார். அதன்மீது எண்ணெய் வார்த்து, அவ்விடத்தைக் கடவுளுக்கென்று அர்ப்பணித்தார். அந்த இடத்துக்குப் 'பெத்தேல்' என்று பெயரிட்டார். அதன் பொருள் ''தேவனுடைய வீடு'' என்பதாகும். பின்பு அங்கேயே யாக்கோபு கடவுளோடு இவ்வாறு நேர்ந்து கொண்டார். ''கடவுளே, நீர் என்னோடிரும், என் வழியில் என்னைக் காத்து, உணவும், உடையும் தந்து, உமக்குச் சித்தமான காலத்தில் என்னை நலமுடன் வீட்டுக்குத் திரும்பி வரச் செய்யும். அப்பொழுது கடவுளாகிய உம்மை அறிக்கையிடுவேன். உம்மை வழிபடுவதற்கு உரிய இடமாக இதைக் குறித்துள்ளேன். நீர் எனக்குத் தருபவற்றிலெல்லாம் பத்தில் ஒரு பங்கை உமக்குக் காணிக்கையாகச் செலுத்துவேன்'' என்றார்.

யாக்கோபு கடவுளோடு போராடுதல்

தொடக்க நூல் 32 : 23 - 31

தன் மாமா லாபானின் வீட்டுக்கு யாக்கோபு நலமுடன் வந்து சேர்ந்தார். பல ஆண்டுகளாக அவர் லாபானின் ஆட்டு மந்தைகளை மேய்த்து வந்தார். லாபானின் மகள்களாகிய லேயாள், ராகேல் இருவரையும் திருமணம் செய்து கொண்டார். யாக்கோபுவுக்குப் பல பிள்ளைகள் பிறந்தார்கள். அவர் மிகுதியான சொத்து உடையவர் ஆனார். பின்னர் யாக்கோபு தன் வீட்டுக்குத் திரும்பிச் செல்லத் தீர்மானித்தார். அவரும், அவர் குடும்பத்தார் அனைவரும்

புறப்பட்டனர். ஆனால் யாக்கோபு, முன்பு தன்னால் ஏமாற்றப்பட்ட தன் அண்ணன் ஏசாவைச் சந்திக்கப் பயந்தார். தன்னுடைய மந்தைகளுடன், தன் வேலைக்காரர்களை முன்னால் போகச் செய்தார். தன் சகோதரனுக்கு 500 கால்நடைகளைக் கொடுக்கத் திட்டமிட்டார். இந்தப் பெரிய அன்பளிப்பின் மூலம், ஏசா தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்வான் என்று நம்பினார்.

யாக்கோபு தன்னுடைய குடும்பத்தார், கால்நடைகள் அனைத்தையும் ஆற்றைக் கடந்து அக்கரைக்கு அனுப்பியபின் அவர் மட்டும் தனியாகத் தங்கினார். அந்த இரவில் ஒரு மனிதர் வந்து யாக்கோபுடன் இரவு முழுவதும் போராடினார். விடியும்வரை அந்த மனிதர் யாக்கோபை வெல்ல முடியாததால், அவரது இடுப்பில் அடித்து, மூட்டு விலகிப் போகச் செய்தார். பின்பு அவர், "நேரம் விடிந்துவிட்டது, என்னைப் போகவிடு" என்றார்.

யாக்கோபு அவரிடம், "நீர் என்னை ஆசீர்வதிக்க வேண்டும். இல்லாவிட்டால் உம்மைப் போகவிட மாட்டேன்" என்றார்.

அந்த மனிதர், "உன் பெயர் என்ன ?" என்று கேட்டார்.

"யாக்கோபு" என்று பதில் கூறினார்.

அந்த மனிதர், "நீ கடவுளோடும் மனிதர்களோடும் போராடி வென்றிருக்கிறாய். எனவே, இனிமேல் உன் பெயர் 'யாக்கோபு' இல்லை, "இஸ்ரயேல்" ஆகும் என்றார்.

அப்பொழுது யாக்கோபு அந்த மனிதரைப் பார்த்து, "இப்பொழுது உம்முடைய பெயரைச் சொல்லும்" என்றார்.

அதற்கு அவர் "என்னுடைய பெயரை நீ ஏன் கேட்கிறாய் ?" என்று சொல்லிவிட்டு யாக்கோபை ஆசீர்வதித்தார்.

யாக்கோபு "நான் கடவுளை நேருக்கு நேராகக் கண்டேன். ஆயினும் நான் இன்னும் பிழைத்திருக்கிறேன்." என்றார். பின்பு அந்த இடத்துக்குப் "பெனியேல்" என்று பெயரிட்டார். 'பெனியேல்' என்பதற்கு "கடவுளுடைய முகம்" என்று பொருள். யாக்கோபு பெனியேலை விட்டுப் புறப்படும்போது விடிந்தது. இடுப்பு வலியின் காரணமாக அவர் நொண்டி, நொண்டி நடந்தார்.

அதே நாளில் இரண்டு சகோதரர்களும் சந்தித்தார்கள். ஏசா தன்னிடம் எதிர்கொண்டு ஓடி வருவதைக் கண்ட யாக்கோபுக்கு, அவன் மீதிருந்த பயம் நீங்கிவிட்டது. இருவரும் அன்புடன் ஒருவரையொருவர் கட்டித் தழுவி முத்தமிட்டுக்கொண்டார்கள். அவர்கள் இருவரது கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. சிறிதுநேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் ஏசா ஏதோமுக்குத் திரும்பிச் சென்றார். யாக்கோபும், அவரோடு வந்த அனைவரும் மெதுவாகப் பயணம் செய்தார்கள். அவர்கள் கானான் நாட்டிலுள்ள 'செக்கேம்' என்னுமிடத்திற்கு சுகமாக வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு யாக்கோபு தான் பிறந்த, சொந்த நாட்டுக்குத் திரும்ப வந்து சேர்ந்தார்.

யோசேப்பின் வரலாறு

யோசேப்பும் அவனது சகோதரர்களும்

தொடக்க நூல் 37 : 1 – 35

இது யாக்கோபின் செல்லப் பிள்ளையாகிய யோசேப்பின் வரலாறு. யோசேப்பு இரண்டு கனவுகளைக் கண்டான். இக்கனவுகளைப் பற்றித் தன் சகோதரர்களிடம் கூறினான். கனவுகள் கடவுளிடமிருந்து வெளிப்படுத்தப் படும் செய்திகள் என்று அக்கால மக்கள் நம்பினர்.

தன் தந்தை வாழ்ந்த கானான் நாட்டிலே யாக்கோபு வாழ்ந்து வந்தார். அப்போது யோசேப்புக்கு பதினேழு வயது. அவன் தன் சகோதரர்களுடன் ஆடுகளை மேய்த்து வந்தான். அங்கே, சகோதரர்கள் செய்யும் தகாத செயல்களைப் பற்றித் தன் தந்தையிடம் வந்து சொல்வான்.

யாக்கோபு, தன்னுடைய பிள்ளைகளில் யோசேப்பை அதிகமாக நேசித்தார். ஏனெனில்; அவர் வயது முதிர்ந்தவராக இருக்கும்போது யோசேப்பு பிறந்தான். யோசேப்புக்குச் சிறப்பு ஆடையாக ஒரு பலவர்ண அங்கியை அவர் தைத்துக் கொடுத்தார். எனவே; அவனது சகோதரர்கள், தங்கள் தந்தை யோசேப்பை அதிகமாக நேசிக்கிறார் என்று அறிந்து, அவனை வெறுத்து கொடுமையாக நடத்தினார்கள்.

ஒருமுறை யோசேப்பு, ஒரு கனவு கண்டான். அதை, அவன் தன் சகோதரர்களிடம், "நான் கண்ட கனவைக் கேளுங்கள். நாம் அனைவரும் வயலில் கோதுமை அறுவடை செய்து, கதிர்களை கட்டுகளாக கட்டியபோது என்னுடைய கட்டு மட்டும் நிமிர்ந்து நின்றது. உங்கள் கட்டுகள் எல்லாம் என் கட்டைச் சுற்றிலும் வணங்கி நின்றன" என்றான்.

இதைக் கேட்ட அவனது சகோதரர்கள், "நீ ஒரு அரசனாகி, எங்கள் மேல் அதிகாரம் செலுத்தி ஆட்சி நடத்தப் போகிறாயா?" என்று கேட்டு அவன் மேல் வெறுப்புற்றார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு யோசேப்பு இரண்டாவது கனவு கண்டான். அதில், "சூரியனும், சந்திரனும் பதினோரு நட்சத்திரங்களும் என்னைச் சுற்றிலும் நின்று வணங்கின". என்றான். இந்தக் கனவைத் தன் தந்தையிடமும் கூறினான். அவர் அவனிடம், "என்ன கனவு இது?" நானும், உனது அம்மாவும், உன் சகோதரர்களும் வந்து உன்னைச் சுற்றிலும் நின்று வணங்குவோமோ? என்று கோபத்தோடு கேட்டார். ஆனாலும் இவற்றையெல்லாம் தன் உள்ளத்தில் வைத்து சிந்தித்துக் கொண்டிருந்தார். சகோதரர்களோ மேலும் பொறாமை கொண்டனர்.

யோசேப்பின் சகோதரர்கள் 'செக்கேம்' என்னும் இடத்தில்

தந்தையின் ஆடுகளை மேய்த்துவந்தார்கள்.

யாக்கோபு யோசேப்பிடம், " செக்கேமுக்குப் போய் உன் சகோதரர்கள் நலமாகவும், நம் ஆட்டு மந்தை பாதுகாப்பாகவும் இருக்கிறதா ? என்று பார்த்து வா" என்றார்.

எனவே, எப்ரோன் பள்ளத்தாக்கிலிருந்து யோசேப்பு செக்கேம் வந்து சேர்ந்தான். அவன் தனது சகோதரர்களை அங்கும் இங்கும் தேடி அலைந்தான். அதனைக் கண்ட ஒரு மனிதர், "நீ யாரைத் தேடுகிறாய் ?" என்று கேட்டார்.

யோசேப்பு, "ஆட்டு மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த என் சகோதரர்களைத் தேடுகிறேன். அவர்கள் எங்கே என்று தெரியுமா ?" என்று கேட்டான்.

அந்த மனிதர், "அவர்கள் 'தோத்தான்' சமவெளிக்குப் போவதாகச் சொல்லிக் கொண்டார்கள்" என்றார். உடனே யோசேப்பு தோத்தானுக்குச் சென்று அங்கே தன் சகோதரர்களை கண்டான்.

தூரத்தில் யோசேப்பு வருவதைக் கண்டதும் அவனது சகோதரர்கள் அவனைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர், "இதோ கனவு மன்னன் வருகிறான். வாருங்கள். நாம் அவனைக் கொன்று, அவனது உடலை ஒரு தண்ணீரற்ற பாழுங் கிணற்றில் எறிந்து விடுவோம். எல்லோரிடமும், அவனை ஒரு காட்டு மிருகம் கொன்று விட்டதாகக் கூறிவிடலாம்.

பின்னர் அவனது கனவுகள் என்ன ஆகிறதென்று பார்க்கலாம்'' என்று சொல்லிக் கொண்டார்கள்.

இதைக்கேட்ட சகோரர்களில் மூத்தவனான ரூபன், ''நாம் அவனைக் கொல்ல வேண்டாம். இதோ, இங்கே இருக்கிற கிணற்றில் தூக்கிப் போட்டுவிடுவோம்.'' என்றான். யோசேப்பை காப்பாற்றித் தம் தந்தையிடம் அவனை அனுப்பி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ரூபன் இவ்வாறு கூறினான். யோசேப்பு தங்கள் அருகில் வந்ததும், அவனுடைய பலவர்ண அங்கியைக் கிழித்தார்கள். பின்னர் அவனைத் தூக்கிப் பாழுங் கிணற்றில் போட்டார்கள்.

பின்னர், யோசேப்பின் சகோதரர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, எகிப்துக்குச் செல்லும் இஸ்மவேலராகிய வியாபாரிகள் தொலைவில் வருவதைக் கண்டார்கள். அவர்கள் தங்கள் ஒட்டகங்களில் பிசின் தைலம், வெள்ளைப்போளம் போன்ற வாசனைப் பொருட்களை வியாபாரத்துக்காக எடுத்து, சென்று கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் யூதா, ''யோசேப்பைக் கொன்று விட்டு ஒரு பொய்யைச் சொல்லுவதனால் நமக்கு லாபம் என்ன? என்ன இருந்தாலும் அவன் நம் சகோதரன் அல்லவா? நாம் அவனை இந்த வியாபாரிகளிடம் விற்று விடுவோம்'' என்றான். இந்த யோசனைக்கு அனைவரும் சம்மதித்தார்கள். அவர்கள் யோசேப்பை பாழுங்கிணற்றிலிருந்து வெளியே தூக்கியெடுத்தார்கள். அந்த வியாபாரிகளிடம் அவனை 20 வெள்ளிக் காசுக்கு விற்றார்கள். வியாபாரிகள் யோசேப்பைத் தங்களுடன் எகிப்துக்குக் கொண்டு சென்றார்கள்.

இந்த நிகழ்ச்சி நடைபெறும்போது ரூபன் அங்கே இல்லை. அவன் திரும்பி வந்து, கிணற்றை எட்டிப்பார்த்தான். அங்கே யோசேப்பைக் காணவில்லை. அதனால் மிகவும் வருத்தமுற்றான். சகோதரரிடத்தில், ''யோசேப்பைக் கிணற்றில் காணவில்லையே. நான் என்ன செய்வேன்'' என்று புலம்பினான்.

பின்னர் அவர்கள், ஒரு ஆட்டைக் கொன்று அதன் ரத்தத்தில் யோசேப்பின் அங்கியைத் தோய்த்தார்கள். அந்த ஆடையைத் தம் தகப்பனாரிடம் காட்டி, ''காட்டில் இதைக் கண்டெடுத்தோம். இது உம்முடைய மகனுடையதுதானா? பாரும்'' என்றார்கள்.

இதைக்கண்ட யாக்கோபு அதிர்ச்சி அடைந்து, ''இது என் மகன் யோசேப்பின் அங்கியே, ஏதோ காட்டுமிருகம் அவனைக் கொன்றுபோட்டது. என் மகன் மிருகத்தால் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டிருக்கிறான்'' என்று கூறினார். பின்னர் அதிக காலம் யோசேப்பை நினைத்து யாக்கோபு துக்கம் கொண்டாடினார். அவருடைய மகன்களும், மகள்களும் அவரைத் தேற்ற முயன்றார்கள். அவர் ஆறுதலடையவில்லை. அவர், ''நான் இறக்கும் நாள் வரையும் என் மகனுக்காகத் துக்கம் கொண்டாடுவேன்'' என்றார்.



எகிப்தில் யோசேப்பு

தொடக்க நூல் 41 : 14 – 6

எகிப்தில் யோசேப்பின் வாழ்வில் பல திருப்பங்கள் ஏற்பட்டன. கடவுள் அவனோடு இருந்ததால், எல்லாவற்றிலும் வெற்றி கண்டான். ஆனால் ஒரு முறை, அவன் செய்யாத குற்றத்துக்காக சிறிது காலம் சிறையில் அடைக்கப்பட்டான். கடவுளுடைய ஆவி அவனுக்குள் இருந்ததால், கனவுகளின் அர்த்தங்களைக் கூறும் ஆற்றலைப் பெற்றிருந்தான். எகிப்தின் அரசன் ஒரு கனவு கண்டான். அதன் பொருளை அறிந்து கொள்ள சிறையிலிருந்து யோசேப்பை வரவழைத்தான்.

யோசேப்பு சிறையிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டான். முடிதிருத்தம் செய்து, நல்ல உடையணிந்து, அரசனின் முன்னால் நிறுத்தப்பட்டான். அரசன் அவனிடம், "நான் ஒரு கனவு கண்டேன். ஒருவராலும் அதன் பொருளை எனக்குக் கூற முடியவில்லை. நீ கனவுகளின் பொருளைக் கூறும் ஆற்றல் படைத்தவன் என்று கேள்விப்பட்டேன்" என்றார்.

அதற்கு யோசேப்பு, "மேன்மை தங்கிய அரசரே! கடவுள்தான் கனவுகளின் பொருளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை எனக்குத் தந்து உதவுகிறார்" என்றான்.

அரசன், "நான் நைல் ஆற்றங்கரையில் நின்றேன். அப்போது ஆற்றிலிருந்து ஏழு கொழுத்த பசுக்கள் கரை ஏறி வந்து புல் மேய்ந்தன. அதன் பின்னர், ஏழு மெலிந்த பசுக்கள் கரையேறி வந்தன. இவை போன்ற எலும்பும் தோலுமான பசுக்களை நான் பார்த்ததே இல்லை. ஆனால் இந்த ஏழு மெலிந்த பசுக்களும், ஏழு கொழுத்த பசுக்களைச் சாப்பிட்டு விட்டன. எனினும் மெலிந்த பசுக்கள் முன்போலவே மெலிந்தே காட்சியளித்தன. இக்கனவைக் கண்டதும் விழித்துக்கொண்டேன். மீண்டும் நான் தூங்கிய போது, ஒரு தண்டில் ஏழு செழுமையான கதிர்கள் விளைந்திருக்கக் கண்டேன். அவை நன்றாக முற்றியிருந்தன. பின்னர், ஏழு பதராகித் தீய்ந்த கதிர்கள் தோன்றின. இவை, முற்றின செழுமையான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கி விட்டன. இந்த இரு கனவுகளையும், ஞானிகளிடம் கூறினேன். ஒருவரும் இதன் பொருளை எனக்குத் தெரிவிக்க முடியவில்லை" என்றான்.

யோசேப்பு அரசனிடம், "இந்த இரு கனவுகளும் ஒரே கருத்தையே கூறுகின்றன. கடவுள் உம்முடைய நாட்டில் தாம் செய்யப்போவதை இந்தக் கனவுகளின் மூலம் உமக்கு உணர்த்துகிறார். ஏழு கொழுத்த பசுக்களும், ஏழு செழுமையான கதிர்களும் வரப்போகும் ஏழு செழிப்பான ஆண்டுகளாகும். ஏழு மெலிந்த பசுக்களும், ஏழு பதரான கதிர்களும் தொடர்ந்து வரவிருக்கும் ஏழு ஆண்டு பஞ்சம் ஆகும். எகிப்து முழுவதும் ஏழு ஆண்டுகள் நல்ல விளைச்சல் இருக்கும். அதன்பின்னர் ஏழு ஆண்டுகள் பஞ்சம் வரும். மக்கள் நல்ல வளத்தை அனுபவித்த ஆண்டுகளை மறந்து விடுவார்கள். ஏனெனில், பஞ்சம் அவ்வளவு கொடியதாயிருக்கும். இது இறைவனின் திட்டம். இது சீக்கிரம் நடந்தேறும்.

எனவே; ஞானமும், திறமையும் உள்ள ஒரு மனிதனைக் கண்டுபிடித்து அவனை நாட்டுக்கு அதிகாரியாக அமர்த்துங்கள். அவனுக்குக் கீழே வேறு பல அதிகாரிகளையும் அமர்த்த வேண்டும். வரப்போகும் ஏழு செழிப்பான ஆண்டுகளில் நாடு முழுவதிலும் உள்ள விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கைக் கொள்முதல் செய்ய வேண்டும். அவற்றைக் கவனமாகப் பண்டசாலைகளில் சேமித்து வைக்க வேண்டும். இவ்வாறு ஏழு வருடமும் சேமிக்கும் தானியம் அடுத்த ஏழு வருடப் பஞ்சகாலத்துக்குப் போதுமானதாயிருக்கும். இப்படிச் செய்தால் நாட்டில் மக்கள் பஞ்சத்திலிருந்து காக்கப்படுவார்கள்" என்றான்.

அரசனும், அவரது அதிகாரிகளும் இந்தத் திட்டத்துக்குச் சம்மதித்தனர். அரசன் அதிகாரிகளிடம், "இந்த யோசேப்பை விடத் திறமையும், ஞானமும் உள்ள ஒரு மனிதனைக் கண்டுபிடிக்க நம்மால் முடியாது. அவனிடத்தில் கடவுளுடைய ஆவி இருக்கிறது" என்றான். பின்னர் அரசன் யோசேப்பிடம், "கடவுள் இந்த மறைபொருள்களையெல்லாம் உனக்குக் காட்டியிருக்கிறார். நீயே ஞானி என்பதை உணருகிறேன். எனவே, நான் உன்னை என் நாட்டின் தலைமை அதிகாரியாக அமர்த்துகிறேன். என் மக்கள் அனைவரும் உன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவார்கள். நீ எனக்கு மட்டும் கீழ்ப்பட்டிருப்பாய். நான் உன்னை இப்பொழுதே

எகிப்து நாட்டின் தலைமை அதிகாரியாக நியமிக்கிறேன்.'' என்றான்.

மேலும், அரச முத்திரையுடன் கூடிய அரசனின் மோதிரத்தை யோசேப்பின் விரலில் அணிவித்தான். ஒரு விலையுயர்ந்த ஆடையை யோசேப்பின் மேல் போர்த்தினான். பொன் சங்கிலியை அவன் கழுத்திலே அணிவித்து, தன்னுடைய இரண்டாம் தேரில் அவனை ஏற்றி, நகரில் வலம் வரச் செய்தான். வழியில் ''வழிவிடுங்கள். அரசர் யோசேப்பை எகிப்தின்மேல் தலைமை அதிகாரியாக்கினார்'' அனைவரும் மரியாதையுடன் பணியுங்கள். என்று கூறச் செய்தான். அரசன் யோசேப்பிடம், ''அரசனாகிய நான் ஆணையிடுகிறேன், எகிப்தில் ஒருவனும் உன் அனுமதியின்றி எதையும் செய்யக்கூடாது'' என்றான். பின்பு யோசேப்புக்கு ஒரு எகிப்தியப் பெயர் சூட்டி, ஒரு ஆசாரியனின் மகளை மனைவியாகக் கொடுத்தான்.

யோசேப்பு; எகிப்திய அரசின் தலைமை அதிகாரியாகப் பணியாற்ற ஆரம்பித்தார். எகிப்து நாடு முழுவதும் சுற்றிப் பார்த்தார். அப்போது அவருக்கு வயது முப்பது.



சகோாரர்களைத் திகைக்க வைத்தல்

தொடக்க நூல் 43 : 29 – 34

யோசேப்பின் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டன. ஏழு வருடம் பஞ்சம் வந்தபோதிலும், எகிப்தின் களஞ்சியங்கள் தானியங்களால் நிரம்பி வழிந்தன.

பஞ்சகாலத்தில் உணவு தானியங்களை வாங்கிவரும்படி யாக்கோபு தன் மகன்களை எகிப்துக்கு அனுப்பி வைத்தார். ஆனால் எகிப்தின் தலைமை அதிகாரி யோசேப்பு என்பதை அவர்கள் அறியவில்லை. யோசேப்பு தன் சகோதரர்களைத் தன் நாட்டை உளவுபார்க்க வந்த ஒற்றர்கள் என்று குற்றம் சாட்டினார். ஆனால், உண்மையில் தன் சகோதரர்களை யோசேப்பு நேசித்தார். அவர்கள் யோசேப்பிடம் தங்கள் தந்தை யாக்கோபு பற்றியும், தங்கள் கடைசி சகோதரனைத் தந்தையிடம் விட்டு வந்திருப்பதையும் கூறினார்கள்.

யோசேப்பு தன் தம்பியைக் காணப் பெரிதும் விரும்பினார். அடுத்தமுறை வரும்போது பென்யமினை அழைத்து வரவேண்டும். அழைத்து வராவிட்டால் தானியம் கொடுக்கப்பட மாட்டாது என்றும் கூறினார்.

வீடு திரும்பிய சகோதரர்கள் தங்கள் தந்தையிடம் இச்செய்தியைக் கூறினார்கள். ''பென்யமினை அழைத்துச் செல்லாமல் எகிப்துக்குப் போகமாட்டோம்'' என்று உறுதியாகக் கூறினார்கள். இதைக்கேட்ட யாக்கோபு மிகுந்த மன வேதனையுடன் பென்யமினை அவர்களுடன் அனுப்பி வைத்தார்.

தன் தம்பியாகிய பென்யமினைப் பார்த்ததும் யோசேப்பு தன் சகோதரர்களிடம், "உங்கள் தந்தையுடன் இருப்பதாகக் கூறிய உங்கள் கடைசித்தம்பி இவன்தானா?" என்று கேட்டார். பென்யமினைப் பார்த்து, "அன்பனே, கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக" என்றார். தனக்கு அழுகை வந்ததால் அந்த இடத்திலிருந்து யோசேப்பு விரைந்து தனி இடத்திற்குச் சென்றார். அங்கே சிறிது நேரம் அழுதபின், முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பி வந்தார். தன் உணர்ச்சியை வெளியிடாமல் அனைவருக்கும் உணவு பரிமாறும்படி கூறினார்.

யோசேப்பு, தன் சகோதரர்களை மூத்தவன் முதல் இளையவன் வரை அவரவர் வயதின் அடிப்படையில் வரிசையாக அமரச் செய்தார். இது, அவரது சகோதரர்களுக்குப் பெரும் வியப்பைத் தந்தது. யோசேப்பு உண்ட உணவே அனைவருக்கும் வழங்கப்பட்டது. மற்றவர் களைவிட பென்யமினுக்கு ஐந்து மடங்கு அதிகமான உணவு வழங்கப்பட்டது. அனைவரும் வயிறார உண்டு மகிழ்ந்தனர்.

காணாமற்போன கிண்ணம்

தொடக்க நூல் 44 : 1 – 34

யோசேப்பு, தன் ஊழியக்காரனைப் பார்த்து "இந்தப் பதினொருபேருக்கும் தானியத்தையும், அவரவர் தந்த பணத்தையும் அதன்மேல் வைத்துக் கட்டு. இளையவனின் மூட்டையில் பணத்தோடு, என்னுடைய வெள்ளிக் கிண்ணத்தையும் போட்டுக் கட்டிவை" என்றார்.

அந்த ஊழியக்காரன், இரவிலேயே யோசேப்பு சொன்னபடி கட்டி வைத்துவிட்டான். அதிகாலையில் சகோதரர்கள் தங்கள் மூட்டைகளை கழுதைகளின்மேல் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

அவர்கள் நகரத்தைவிட்டு வெளியேறிய உடனே ,யோசேப்பு ஊழியக்காரனை அழைத்து, விரைந்துசென்று அவர்களை நிறுத்துங்கள். "எங்கள் எஜமான் உங்களிடம் இவ்வளவு அன்பாக நடந்தும், நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்? எங்கள் எஜமானின் வெள்ளிக் கிண்ணத்தை ஏன் திருடிக்கொண்டு வந்தீர்கள்? அவர், அந்தக் கிண்ணத்தைக் குடிப்பதற்கும், எதிர்காலத்தில் நடக்க இருப்பவைகளை அறிவிப்பதற்கும் பயன் படுத்துவாரே? என்று கேள்" என்றார்.

அந்த ஊழியக்காரன் சென்று, அவர்களைத் தடுத்து நிறுத்தி, தன் எஜமான் கூறியபடியே கேட்டான். அவர்கள் பயத்துடன், "எங்களை நம்புங்கள். நாங்கள் அப்படி எதையும் செய்யவில்லை. முதல் தடவை நாங்கள் தானியம் வாங்கிச் சென்றபோது மூட்டைகளில் இருந்த பணத்தை கொண்டுவந்து நேர்மையுடன் செலுத்திவிட்டோமே. அப்படியிருக்க உங்கள் எஜமானருடைய வெள்ளிப் பாத்திரத்தை நாங்கள் ஏன் திருட வேண்டும்? ஐயா, அந்தக் கிண்ணம் எங்களில் யாரிடமாவது இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவன் கொலை செய்யப்படட்டும். மற்ற அனைவரும் உங்கள் அடிமைகளாக இருப்போம்" என்றார்கள்.

அதற்கு ஊழியக்காரன், "அப்படியல்ல. அந்தக் கிண்ணத்தைத் திருடியவன் மட்டும் எங்கள் அடிமையாக இருந்தால்போதும்." என்றான். அனைவரும் தங்கள் மூட்டைகளைக் கீழே இறக்கிவைத்தார்கள். யோசேப்பின் ஊழியக்காரன் ஒவ்வொரு மூட்டையாக சோதனை செய்தான். கடைசியில் பென்யமினின் மூட்டையில் அந்த வெள்ளிக் கிண்ணம் இருந்தது. இதைக் கண்டதும் அவனுடைய சகோதரர்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். மீண்டும் யோசேப்பிடம் வந்து சேர்ந்தார்கள்.

யோசேப்பின் முன் அனைவரும் குனிந்து வணங்கினார்கள். யோசேப்பு, "நீங்கள் என்ன நினைத்தீர்கள்? என்னால், திருடியது யார் என்று கண்டுபிடிக்க முடியாதா?" என்று கேட்டார்.

அதற்கு யூதா, "ஐயா, நாங்கள் இதற்கு எப்படி விளக்கம் கூறுவோம்? இதன் மூலமாகக் கடவுள் எங்கள் பாவத்தை எங்களுக்கு உணர்த்தியிருக்கிறார். வெள்ளிக் கிண்ணம் வைத்திருந்தவனை மட்டுமல்ல, எங்கள் அனைவரையுமே உமது அடிமைகளாக ஆக்கிக்கொள்ளும்" என்றான்.

அதற்கு யோசேப்பு, "அப்படியல்ல; வெள்ளிக் கிண்ணம் வைத்திருப்பவன் மட்டுமே எனக்கு அடிமை. மற்றவர்கள் உங்கள் தந்தையிடம் போகலாம்" என்றார்.

யூதா, யோசேப்பின் அருகில் சென்று, "ஐயா, தயவு செய்து என்னை உங்களிடம் கொஞ்சம் பேச அனுமதியுங்கள். நீங்கள் கேட்டபோது, நாங்கள், எங்களுக்கு ஒரு வயது சென்ற தந்தையும், அவருக்கு முதிர் வயதில் பிறந்த இளைய சகோதரன் ஒருவனும் இருப்பதாகக் கூறினோம். இந்தச் சிறுவனுக்கு ஒரு

சகோதரன் இருந்தான். அவன் இறந்து விட்டான். எங்கள் தந்தை இன்றும் அவன் நினைவாகவே இருக்கிறார். ஐயா, நீங்கள் எங்கள் தந்தையுடனிருந்த எங்கள் தம்பியைப் பார்ப்பதற்காக இங்கே அழைத்து வரச் சொன்னீர்கள்.

நாங்கள் எங்கள் தந்தையிடம் சென்று இந்த செய்தியைக் கூறினோம், அவர் மீண்டும் எங்களை எகிப்துக்கு வந்து தானியம் வாங்கி வர சொன்னார், அதற்கு நாங்கள் , " தந்தையே, நாங்கள் போக முடியாது, எங்கள் இளைய சகோதரன் எங்களுடன் இல்லாவிட்டால் எகிப்தின் தலைமை அதிகாரியை நாங்கள்

பார்க்க அனுமதிக்கப்படமாட்டோம்," என்றோம். அதற்கு அவர், "என்னுடைய அருமை மனைவி ராகேலுக்குப் பிறந்த மகன்கள் இரண்டுபேர். ஏற்கனவே, அவர்களில் ஒருவனை நான் இழந்துவிட்டேன், அவன் காட்டுமிருகங்களால் கிழித்தெறியப் பட்டான். இப்போது இருக்கிற இவனையும் என்னிடமிருந்து பிரியச் சொல்லுகிறீர்கள்; இவனுக்கும் ஏதாவது நேர்ந்தால், நான் வயோதிக காலத்தில் துக்கத்துடனே இறக்க வேண்டியது வரும்" என்றார்.

இப்போது நாங்கள் இந்தச் சகோதரன் இல்லாமல் எங்கள் தந்தையிடம் சென்றால் நிச்சயமாக அவர் இறந்துவிடுவார், இவனிடத்தில் அவர் தன் உயிரையே வைத்து இருக்கிறார், மேலும் நான் இவனை அவரிடம் கொண்டு வந்து சேர்ப்பதாக உறுதி அளித்து இருக்கிறேன்; ஆகவே, பென்யமின்னுக்குப் பதிலாக நான் உங்களிடம் அடிமையாக இருக்கிறேன். அவனை தயவுசெய்து மற்ற சகோதரர்களுடன் போக அனுமதியுங்கள். என் தந்தை துக்கத்தால் இறப்பதை என்னால் பார்க்க முடியாது " என்றான்.

தம் சகோதரிடத்தில் தம்மை வெளிப்படுத்தல்

தொடக்க நூல் 45 : 1 – 20, 25 – 28 : 46 : 5, 6

யோசேப்பினால் தன்னுள் எழுந்த அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை, அவர் அழுவதை அவருடைய ஊழியக்காரர்கள் கண்டார்கள். எனவே; அவர் அவர்களை அந்த அறையை விட்டு வெளியே போகச் சொன்னார். பின்னர் யோசேப்பு, தன் சகோதர்களிடம் தான் யார் என்பதைக் கூறினார். அவர் சத்தமாய் அழுவதை வெளியே நின்ற எகிப்தியர் கேட்டனர். யோசேப்பு தன் சகோதர்களிடம், "நீங்கள் எகிப்தியருக்கு விற்ற உங்கள் சகோதரன் நான்தான். இப்பொழுது நீங்கள் என்னை விற்றதற்காக வருத்தமோ, கவலையோ பட வேண்டாம். கடவுள்தான் எகிப்தின் மக்களைப் பஞ்சத்திலிருந்து காக்க என்னை முன்னதாகவே இங்கு அனுப்பினார். இது பஞ்ச காலத்தின் இரண்டாவது வருடம். இன்னும் ஐந்து வருடம் பஞ்சம் உள்ளது. அக்காலத்தில் நாடு முழுவதிலும் அறுவடை இருக்காது. உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் அற்புதமாகக் காப்பதற்கு கடவுள் என்னை முன்னதாகவே இங்கே அனுப்பியிருக்கிறார். எனவே, நீங்கள் என்னை எகிப்துக்கு அனுப்பவில்லை. என்னை அனுப்பியவர் கடவுளே! அவர் என்னை எகிப்தின் அரசனுடைய தலைமை அதிகாரியாக ஆக்கியிருக்கிறார்.

இப்பொழுது நம் தந்தையிடம் விரைவாகத் திரும்பிச் செல்லுங்கள். அவரிடம், அவருடைய மகனாகிய நான் சொன்னதைச் சொல்லுங்கள். "கடவுள் என்னை எகிப்து முழுவதுக்கும் தலைமை அதிகாரியாக வைத்துள்ளார். என்னிடத்தில் சீக்கிரமாக வந்து சேருங்கள். எனக்கு வெகு அருகிலுள்ள கோசேன் நாட்டில் நீங்கள் குடியிருக்கலாம். உங்கள் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும், கால்நடைகளையும் அழைத்துக்கொண்டு வாருங்கள். நான் உங்களைக் கவனித்துக் கொள்வேன். என்னுடைய மக்களும், மிருக ஜீவன்களும் பஞ்சத்தில் வாடிப் பட்டினியாக இருப்பதை நான் விரும்பவில்லை."

மேலும் யோசேப்பு தன் சகோதரர்களிடம், "இப்பொழுது நீங்கள் என் தந்தையிடம் போய் நடந்த எல்லாவற்றையும் சொல்லி, அவரை விரைவாக இங்கே அழைத்து வாருங்கள்" என்றார்.

யோசேப்பு தன் தம்பி பென்யமினைக் கட்டித் தழுவி அழுதார். பென்யமினும் அழுதான். பின்னர், அழுதுகொண்டே ஒவ்வொரு சகோதரனையும் கட்டித் தழுவி முத்தமிட்டார். அதன் பின்னர் அவரது சகோதரர்கள் அவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் வந்துள்ளனர் என்ற செய்தியை அரசனும், அதிகாரிகளும் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். அரசன் யோசேப்பிடம், "உன்னுடைய சகோதரர்கள் தங்கள் கழுதைகளின்மேல் தானியச் சுமையை ஏற்றிக்கொண்டு கானான் நாட்டுக்குத் திரும்பிப் போகச் சொல். அங்கிருந்து அவர்களுடைய தந்தையையும், அவர்களது குடும்பங்களையும் இங்கே அழைத்துக் கொண்டு வரச்சொல். அவர்களுக்கு எகிப்தில் குடியேற செழிப்பான இடத்தை நான் கொடுப்பேன்" என்றான்.

எனவே, யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் தந்தையிடம் சென்று, "யோசேப்பு இன்னும் உயிருடன் இருக்கிறான். அவனே எகிப்து நாடு முழுமைக்கும் "தலைமை அதிகாரி" என்றார்கள். யாக்கோபு இதைக் கேட்டதும் வியப்பு அடைந்தார். அவரால் அந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை. எனவே, அவர்கள் யோசேப்பு கூறிய எல்லாக் காரியங்களையும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். யாக்கோபையும், அவரது குடும்பத்தார் அனைவரையும் எகிப்துக்கு அழைத்துக்கொண்டு போக, எகிப்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த வண்டிகளைக் கண்டதும் யாக்கோபு தான் கேள்விப்பட்ட செய்தி உண்மையாயிருக்கும் என்று நம்பினார். "என்னுடைய மகன் யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறான்! நான் வேண்டுவதும் இதுவே! நான் இறக்கும் முன் விரைந்து சென்று என் மகன் யோசேப்பை என் கண்களால் ஒரு முறை பார்க்க வேண்டும்" என்றார்.

எனவே யாக்கோபு; தன் குடும்பத்தார் அனைவருடனும், தங்களுடைய எல்லா உடமைகளுடனும், கால்நடைகளையும் மந்தை, மந்தையாக நடத்திக்கொண்டு எகிப்துக்கு புறப்பட்டார்.



ஒரு பெரிய விடுதலை

எல்லா உரிமைகளையும் இழந்து, அடிமைகளாக வாழ்வது பற்றிய அனுபவம் இப்போது நமக்கு இல்லை. முன்னால் எகிப்து ஒரு வலிமை மிக்க நாடாக இருந்தது. இஸ்ரயேல் என்னும் மறு பெயருள்ள யாக்கோபு இறந்துவிட்டார். பின்னர் இந்த இஸ்ரயேலின் தலைமுறையினர் அனைவரையும் எகிப்தியர் தங்கள் அடிமைகள் ஆக்கிக்கொண்டார்கள். அவர்கள் இஸ்ரயேலின் பன்னிரண்டு குலத்தார் ஆவார்கள். இஸ்ரயேலர், 'எபிரேயர்' என்றும் அழைக்கப்பட்டார்கள்.

இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகள்

கொடுமையாக நடத்தப்படுதல்

விடுதலைப் பயணம் 1 : 6 – 14

வருடங்கள் செல்லச் செல்ல யோசேப்பும் அவருடைய சகோதரர்களும், அவர்களது குடும்பத்தாரும் இறந்தனர். ஆனால்; அவர்களின் தலைமுறையினராகிய இஸ்ரயேலர் எகிப்து நாட்டில் பலுகிப் பெருகி பெரிய இனம் ஆனார்கள்.

பின்னர்; எகிப்தில் ஒரு புதிய அரசன் பதவியேற்றான். அவனுக்கு, முன்பு தேசத்தின் அதிபதியாயிருந்த யோசேப்பைப் பற்றி எதுவும் தெரியாது. இந்த எபிரேயர்கள் யோசேப்பின் தலைமுறையினர் என்பதும் தெரியாது. அவன் தன் மக்களிடம், "இந்த எபிரேயர் ஒரு பெரிய இனத்தாராக இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை மிக அதிகம். ஒரு நாள் அவர்கள் நமது எதிரிகளுடன் சேர்ந்து, நம்முடன் போரிட்டு, நம்மைத் தோற்கடித்து விட முடியும். எனவே, நாம் அவர்களது எண்ணிக்கை பெருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றான். எனவே எகிப்தியர்; இஸ்ரயேலரிடம் கடுமையாக வேலை வாங்க, கொடுமையான அதிகாரிகளை நியமித்தார்கள். இஸ்ரயேலர் 'பிம்தோம்', 'ராமசேஸ்' என்னும் இரு நகரங்களிலும், அரசனுக்காக கோதுமையையும், பிற தானியங்களையும் சேமித்து வைக்கும்



பெரிய தானியக் கிடங்குகளைக் கட்டினார்கள். இஸ்ரயேலர் கொடுமைப் படுத்தப்பட்ட போதிலும், எண்ணிக்கையில் அவர்கள் பெருகினார்கள். எகிப்தியர்கள் இதைக் கண்டு பயப்பட்டார்கள். எனவே; அவர்களை மேலும் மேலும் துன்பப்படுத்தினார்கள். அவர்கள் பணிபுரியும் இடங்களிலும் வயல் வெளிகளிலும், இஸ்ரயேலரைக் கடுமையாக வேலை வாங்கி, அடிமைகளாக நடத்தினார்கள்.



ஆண் குழந்தைகள் கொல்லப்படுதல்

விடுதலைப் பயணம் 1 : 15 – 22

சிப்பிராள், பூவாள் இவர்கள் இருவரும் எபிரேய மருத்துவச்சிகள். எகிப்திய அரசன் அவர்களிடம், "நீங்கள் இருவரும் நான் சொல்வதைச் செய்ய வேண்டும். நீங்கள் எபிரேயப் பெண்களுக்குப் பேறுகாலத்தில் உதவி செய்யப் போகும்போது, பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தால், அதை உடனே கொன்று விடுங்கள்; பெண்ணாக இருந்தால், உயிரோடு விட்டுவிடுங்கள்" என்று கட்டளையிட்டான். ஆனால், அந்த மருத்துவச்சிகள் கடவுளுக்குப் பயப்பட்டார்கள். அரசன் சொன்னபடி செய்யவில்லை. அவர்கள் ஆண் குழந்தைகளும் உயிருடன் வாழ வகை செய்தார்கள்.

எனவே கடவுள், அந்த மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார். அவர்களது குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. இஸ்ரயேலர் மேலும் மேலும் பெருகி, பலத்த இனமானார்கள். எனவே; "பிறக்கும் எல்லா எபிரேய ஆண் குழந்தைகளையும் கொண்டுபோய் நைல் நதியில் எறிந்து விடுங்கள். பெண் குழந்தைகள் பிழைத்து இருக்கட்டும்" என்று எகிப்தின் அரசன் ஒரு கட்டளையிட்டான்.

ஒரு பெரிய தலைவன்

கூடையில் ஒரு குழந்தை

விடுதலைப் பயணம் 2 : 1 – 10

இஸ்ரயேலரின் வரலாற்றில் மிக முக்கியமான மனிதர்களுள் மோசே ஒருவர். ஆனால், அவர் குழந்தையாயிருந்த போது உயிரிழக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

அக்காலத்தில் லேவி குலத்தைச் சார்ந்த ஒருவர் தனது இனத்திலேயே ஒரு பெண்ணைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தத் தாய் தன் குழந்தை மிகவும் அழகுள்ளது என்று கண்டாள். அவனை மூன்று மாதம் வரை ஒளித்து வைத்து வளர்த்தாள். பிள்ளை வளர்ந்த போது மறைத்து வைக்க முடியாத

நிலையை உணர்ந்தாள். ஒரு நாணற் பெட்டியில் அந்தக் குழந்தையை வைத்து மூடி, அப்பெட்டியை ஆற்றோரத்தில் நாணற் புதருக்குள் வைத்தாள். அந்தக் குழந்தையின் தமக்கை சற்றுத் தொலைவில் மறைந்திருந்து என்ன நடக்கப் போகிறது என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

எகிப்திய அரசனின் மகளான இளவரசி ஆற்றுக்குக் குளிக்க வந்தாள். அங்கே நாணலுக்குள் இருந்த பெட்டியைக் கண்டாள். தன் தோழியை அனுப்பி அந்தப் பெட்டியை எடுத்து வரச் செய்தாள். பெட்டியைத் திறந்து பார்த்தபோது உள்ளே ஒரு ஆண் குழந்தை இருப்பதைக் கண்டாள். குழந்தை அழுதது. அந்தக் குழந்தைக்காக அவள் இரக்கப்பட்டாள். "இது ஒரு எபிரேயக் குழந்தை" என்றாள்.

இதைக்கண்ட அக்குழந்தையின் தமக்கை இளவரசியிடம் வந்தாள். அவள், "இந்தக் குழந்தைக்குப் பால் கொடுத்து வளர்ப்பதற்கு ஒரு எபிரேயத் தாயை அழைத்து வரட்டுமா?" என்று கேட்டாள். இளவரசி 'சரி' என்றாள். அவள் ஓடிச் சென்று அந்தக் குழந்தையின் தாயையே அழைத்து வந்தாள். இளவரசி அவளைப் பார்த்து, "இந்தக் குழந்தையைக் கொண்டு போய் எனக்காக வளர்த்துவா. அதற்காக உனக்குச் சம்பளம் தருகிறேன்" என்றாள். அதன்படி அந்தத் தாய் குழந்தையை எடுத்துச் சென்று வளர்த்து வந்தாள். குழந்தை வளர்ந்தபின் அவனை இளவரசியிடம் கொண்டுவந்து ஒப்படைத்தாள். இளவரசி அவனைத் தன் சொந்த மகனைப் போல் வளர்த்தாள். அவள், நான் இவனைத் தண்ணீரிலிருந்து எடுத்தேன். அதனால் இவன் பெயர் "மோசே" என்றாள்.

மோசே தப்பி ஓடுதல்

விடுதலைப் பயணம் 2 : 11 - 24

எபிரேயனாகிய மோசே ஒரு எகிப்தியனாக அரண்மனையில் வளர்க்கப்பட்டான். அவன் பெரியவனான போது, தன் இனத்தாராகிய எபிரேயரைக் காப்பாற்றி உதவி செய்ய முயன்ற போது சிக்கல் உண்டாயிற்று.

மோசே பெரியவனானபோது, தன் இனத்தாராகிய எபிரேயரைப் பார்க்கச் செல்வது வழக்கம். அவர்கள் கடின வேலை செய்யும்படி கொடுமைப்படுத்தபடுவதைக் கண்டான். ஒரு நாள்; ஒரு எகிப்தியன் ஒரு எபிரேயனை அடிக்கிறதைக் கண்டான். மோசே சுற்றிலும் பார்த்து, தன்னை யாரும் கவனிக்கவில்லை என்று நினைத்து, அந்த எகிப்தியனைக் கொன்று அவன் உடலை மணலில் புதைத்து விட்டான். மறுநாள் மோசே அவ்விடத்திற்கு வந்தபோது, அங்கே இரண்டு எபிரேயர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். அதில் ஒருவனிடம் சென்று, "உன் சொந்த இனத்தவனையே ஏன் அடிக்ககிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அந்த மனிதன், "எங்கள் மேல் உன்னை அதிகாரியாகவும், நீதிபதியாகவும் நியமித்தது யார்? நேற்று அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல, இன்று என்னையும் கொல்லப் போகிறாயோ?" என்றான். இதைக் கேட்டதும் மோசே மிகவும் பயந்தான். தாம் செய்ததை மக்கள் கண்டுபிடித்து விட்டார்கள் என்று உணர்ந்தான். அரசன் இதனைக் கேள்விப்பட்ட போது மோசேயைக் கொலை செய்ய முயற்சித்தான்.

அரசனிடமிருந்து மோசே தப்பி ஓடினான்; மீதியான் நாட்டுக்குச் சென்று, அங்கு ஒரு கிணற்றருகில் உட்கார்ந்தான். அங்கு குருவாயிருந்த 'ரெகுவேல்' என்னும் மறுபேர் கொண்ட 'எத்திரோ'வின் ஏழு புதல்விகள் தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்ட வந்தார்கள். அவர்கள் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பியபோது, அங்குவந்த மேய்ப்பர்கள் அவர்களைத் துரத்தினார்கள். இதைக் கண்ட மோசே எழுந்துவந்து அந்த மேய்ப்பர்களைத் தடுத்தார். பின்னர் அப்பெண்கள் தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி முடியும் வரை உதவி செய்தார். அந்தப் பெண்கள் அன்று சீக்கிரமாக வீட்டிற்கு வந்ததைக் கண்ட தந்தை, "இன்று எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள், "ஒரு எகிப்தியன் வந்து, மேய்ப்பர்களின் தொல்லைகளிலிருந்து எங்களைக் காப்பாற்றினார். எங்களுக்கும், எங்கள் ஆடுகளுக்கும் தண்ணீர் எடுத்துத் தந்து உதவினார்" என்றார்கள்.

இதைக் கேட்ட எத்திரோ, "அவரை ஏன் அங்கு விட்டு வந்தீர்கள்? போய் அவரை அழைத்து வாருங்கள். நாம் அவருடன் சேர்ந்து சாப்பிடலாம்" என்றார்.

மோசே வந்து, அந்தக் குடும்பத்தாருடன் தங்கியிருக்கச் சம்மதித்தான். எத்திரோவின் மகளான சிப்போராளைத் திருமணம் செய்து கொண்டான். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு, "கெர்சோம்" என்று பெயரிட்டார்கள்.

பல வருடங்களுக்குப்பின் எகிப்தின் அரசன் மரணமடைந்தான். இஸ்ரயேலர் இன்னும் அடிமைகளாகக் கொடுமைப்படுத்தப் பட்டார்கள். அவர்கள் தங்கள் நிலையைக் குறித்துக் கடவுளிடம் கதறியழுது உதவுமாறு வேண்டினார்கள். கடவுள் அவர்களின் வேண்டுதலைக் கேட்டார்; அவர்களுக்காக மனம் இரங்கினார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர்களுடன் தாம் செய்த வாக்குறுதியை நினைவு கூர்ந்தார்.

கடவுள் மோசேயை அழைத்தல்

விடுதலைப் பயணம் 3 : 1 – 17; 4 : 10 – 15

மற்றவர்களின் உதவியில்லாமல் எல்லாவற்றையும் செய்ய கடவுளால் முடியும். ஆனால், உலகில் கடவுள் மனிதர்களைப் பயன் படுத்தகிறார். கடவுள் மோசேயை ஒரு மிகச் சிறப்பான முறையில் பயன்படுத்தினார். கடவுள் மோசேயைப் பயன்படுத்திய விதம் பற்றிய வரலாற்றை இங்கு காணலாம்.

வெவ்வேறு பெயர்களை உடைய பல தெய்வங்களை எகிப்தியர்கள் நம்பினார்கள்: எனவே மோசே, கடவுளின் பெயரை அறிய விரும்பினார்.

ஒரு நாள் மோசே தம் மாமனாரின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். அவர், ஆடுகளை பாலைவனத்தைக் கடந்து புனித மலையாகிய 'சீனாய்' மலையருகில் கொண்டு வந்தார். அங்கே ஒரு வியத்தகு காட்சியைக் கண்டார். தூரத்தில் ஒரு முட்செடியிலிருந்து தீச்சுவாலைகள் எழும்பிக் கொண்டிருந்தன. ஆனால், அந்தச் செடி எரிந்து கருகவில்லை. மோசே இந்தக் காட்சியைக் கண்டபோது, "இது என்ன அதிசயம்! நான் அருகில் சென்று பார்ப்பேன்" என்றுச் சொல்லி, அந்த முட்செடியின் அருகில் சென்றார்.

மோசே அருகில் வருவதைக் கடவுள் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து, "மோசே! மோசே!!" என்று அழைத்தார்.

மோசே, "இதோ அடியேன்" என்றார்.

கடவுள் அவரிடம், "அருகில் வராதே. உன் காலணிகளைக் கழற்றிப் போடு. நீ நிற்கும் இடம் புனித நிலம். நான் உன் மூதாதையர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் ஆண்டவராகிய கடவுள்" என்றார். இதைக் கேட்டதும் மோசே கடவுளை உற்றுப் பார்க்க அஞ்சியதால் முகத்தை மூடிக் கொண்டார்.

பின்னர் கடவுள், "என்னுடைய மக்களாகிய இஸ்ரயேலரை எகிப்தியர் எத்துணை கொடுமையாக நடத்துகிறார்கள் என்று கண்டேன். அவர்கள் எழுப்பும் வேதனைக் குரலையும் நான் கேட்டேன். அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தையும் அறிவேன். எனவே அவர்களை விடுவிக்கவும், எகிப்திலிருந்து அவர்களை அழைத்து வரவும் இதோ வந்திருக்கிறேன். நான் அவர்களை ஒரு பெரிய நாட்டுக்கு அழைத்தச் செல்வேன். அது ஒரு செழிப்பான நாடு. கானானியர்களும், வேறு பல இன மக்களும் அங்கு வாழ்கிறார்கள். நான் இப்போது உன்னை எகிப்தின் அரசனிடம் அனுப்புகிறேன். துன்புறும் என் மக்களை நீ எகிப்திலிருந்து வெளியேற்றி, அழைத்துச் செல்ல வேண்டும்" என்றார்.

அதற்கு மோசே, "நான் எப்படி அரசனிடம் போக முடியும்? இஸ்ரயேலரை எகிப்திலிருந்து அழைத்துச் செல்ல நான் யார்?" என்று கடவுளிடம் கேட்டார்.

அதற்குக் கடவுள் மோசேயிடம், "நான் உன்னுடனே இருப்பேன். நீ எகிப்திலிருந்து, என்னுடைய மக்களை வெளியே அழைத்து வருவாய்; பின்னர், இதே மலையில் நின்று நீ என்னை வழிபடுவாய்; அப்பொழுது உன்னை அனுப்பியவர் நானே என்று அறிந்து கொள்ளுவாய்" என்றார்.

உடனே மோசே, "நான் இஸ்ரயேலரிடம் சென்று, "நமது முற்பிதாக்களின் ஆண்டவராகிய கடவுள் என்னை உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறார் என்று சொல்லுவேன். அப்பொழுது அவர்கள் என்னிடம், "அந்தக் கடவுளின் பெயர் என்ன?" என்று கேட்பார்களே! நான் அவர்களிடம் என்ன சொல்ல வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு கடவுள், "'இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்பவர் என்னை உங்களிடத்தில் அனுப்பினார் என்று சொல்; உங்கள் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் ஆண்டவராகிய கடவுள் என்னை அனுப்பி இருக்கிறார் என்று சொல்வாயாக; என்றென்றும் இதுவே என் பெயர்; இந்தப் பெயரினால் என் மக்கள் என்னை அறிவார்கள். நீ போய் இஸ்ரயேலரின் தலைவர்கள் அனைவரையும் கூடிவரச் செய். கடவுள் எனக்குத் தரிசனமானார்; அவர் உங்களை மீட்கவே வந்திருக்கிறார்; உங்களுக்கு எகிப்தியர் செய்யும் கொடுமைகளை அவர் கண்டிருக்கிறார். எகிப்திலிருக்கும் கொடிய மக்களிடமிருந்து உங்களை விடுவித்து, கானான் நாட்டுக்கு அழைத்துப் போவார் என்று சொல்" என்றார்.

அதற்கு மோசே, "இல்லை ஆண்டவரே. என்னை அனுப்ப வேண்டாம். நான் நன்றாகப் பேச இயலாதவன்; திக்குவாய் உடையவன்" என்றார்.

கடவுள் அவனிடம், "இப்பொழுது போ. நீ பேசுவதற்கு நான் உதவி செய்வேன். நீ என்ன பேச வேண்டுமென்பதை, அந்த நேரத்தில் நான் உனக்குச் சொல்லுவேன்" என்றார்.

மீண்டும் மோசே, "இல்லை ஆண்டவரே, வேறு யாரையாவது அனுப்பும்" என்றார்.

இதைக் கேட்டதும் கடவுள், "உன்னுடைய சகோதரன் ஆரோன் இருக்கிறான் அல்லவா? அவன் நன்றாகப் பேசுவான். இப்போது அவன் உன்னைச் சந்திக்க

வந்து கொண்டிருக்கிறான். உன்னைக் கண்டதும் அவன் மகிழ்ச்சி அடைவான். நீ அவனிடம் எல்லாவற்றையும் சொல். நான் உங்களோடிருந்து, நீங்கள் பேச வேண்டிய வார்த்தைகளுக்கும், செய்ய வேண்டிய காரியங்களுக்கும் உதவி செய்வேன்" என்றார்.

எகிப்தின் அரசனை மோசே சந்தித்தல்

விடுதலைப் பயணம் 5 : 1 – 9, 19, 22, 6 : 1

மோசே தன் சகோதரனாகிய ஆரோனிடம் சென்றார். அவர்கள் இருவரும் சென்று இஸ்ரயேலரைச் சந்தித்தார்கள். கடவுள் சொன்ன எல்லாவற்றையும் அவர்களிடத்தில் எடுத்துக் கூறினார்கள்.

ஒரு நாள் மோசேயும், ஆரோனும் எகிப்திய அரசனிடம் சென்றார்கள். அவனிடம் இஸ்ரயேலரின் ஆண்டவராகிய கடவுள் கூறிய செய்தியைத் தெரிவித்தார்கள். பாலை வனத்தில் சென்று அவரை வழிபட இஸ்ரயேல் மக்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்பதே அச்செய்தி.

அரசன், "அந்தக் கடவுள் யார்? நான் ஏன் அவர் சொல்வதைக் கேட்க வேண்டும்? ஏன் அந்த மக்களைப் போக விடவேண்டும்? எனக்கு அந்தக் கடவுளைத் தெரியாது. நான் அவர்களைப் போக விடமாட்டேன்" என்றான்.

அதற்கு; மோசேயும் ,ஆரோனும் அரசனிடம், "இஸ்ரயேல் மக்களின் தேவனாகிய கடவுள் எங்களிடம் பேசியிருக்கிறார். பாலைவனத்தில் மூன்று நாள் பயணம் போக வேண்டும். அங்கு, எங்கள் கடவுளுக்குப் பலிகளைச் செலுத்தி தொழுதுகொள்ள வேண்டும். இதற்காக நாங்கள் அனைவரும் செல்வதற்கு எங்களுக்கு அனுமதி தாரும். நாங்கள் செல்லவில்லையானால் அவர் யுத்தத்தின் மூலமாவது, கொள்ளை நோயின் மூலமாவது எங்களைக் கொன்று போடுவார்" என்றார்கள்.

அதற்கு அரசன், "இப்படிக் கேட்பதனால் மக்கள் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் வேலைகளை நிறுத்தச் சொல்லுகிறீர்களா? அந்த அடிமைகளை வேலை செய்ய அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் பல லட்சம்பேராகப் பெருகிவிட்டீர்கள். இப்பொழுது வேலை செய்வதை நிறுத்த வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். அது முடியாது" என்றான்.

அந்த நாளிலேயே அரசன் இரக்கமற்ற கொடிய எகிப்திய அதிகாரிகளையும், மேற்பார்வையாளர்களையும் அழைத்தான். அவர்களிடம் "செங்கல் செய்யும் இஸ்ரயேல் அடிமைகளுக்கு இனிமேல் வைக்கோல் கொடுக்க வேண்டாம். அவர்களே அதைத் தேடிக் கொள்ளட்டும். ஆனால் தினமும் செய்து முடிக்க வேண்டிய செங்கற்களின் எண்ணிக்கையைக் குறைக்கவே கூடாது.

அவர்களுக்குப் போதிய வேலை இல்லை. எனவேதான் கடவுளுக்குப் பலிசெலுத்தப் போகிறோம் என்கிறார்கள். வேலையைக் கடுமையாக்கினால் அவர்களது சிந்தனை சிதறாது. அவர்களுக்கு இன்னும் மிகுதியாக வேலை கொடுங்கள்; கடினமாக உழைக்கட்டும். அப்பொதுதான் இது போன்ற வெற்றுப்பேச்சுகளைக் கேட்க அவர்களுக்கு நேரம் இராது" என்றான்.

இஸ்ரயேலின் மேற்பார்வையாளர்கள் தாங்கள் சிக்கலில் அகப்படப் போவதை உணர்ந்தார்கள். "வைக்கோல் அறவே கொடுக்கப்படாமல் தொழிலாளர்கள் ஒரு நாள் செய்யும் செங்கற்களில் ஒன்றுகூட குறையாமல் எப்படிச் செய்ய முடியும்?" என்று நினைத்தார்கள்.

மோசே கடவுளிடம், "ஆண்டவரே, உம்முடைய மக்களை ஏன் இப்படித் துன்பப்பட வைக்கிறீர்?" என்று கேட்டார்.

அதற்குக் கடவுள் மோசேயிடம், "அரசனுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்று சீக்கிரமாகவே நீ பார்க்கப் போகிறாய். என்னுடைய மக்களை எகிப்து நாட்டிலிருந்து அவனாகவே கட்டாயப்படுத்தி வெளியேற்றி துரத்திவிடும் சூழ்நிலையை நான் உருவாக்குவேன்" என்றார்.

எகிப்தின் மீது கடவுளின் வெற்றி

எகிப்தின் அரசன் மிகவும் பிடிவாதமாய் இருந்தான். இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமானால், எகிப்தின் அரசனின் மனநிலையை மாற்ற வேண்டும் என்று கடவுள் உணர்ந்தார்.

எகிப்தியர் மேலும், அவர்களுடைய அரசன் மேலும் கடவுள் பல துன்பங்களை அனுப்பினார்.

இந்தப் பயங்கர நிகழ்ச்சிகள் "வாதைகள்" என்று அழைக்கப்பட்டன. அப்படி பத்து வாதைகள் ஒன்றன்பின் ஒன்றாய் அனுப்பப்பட்டன.

இந்த வாதைகளை அனுபவித்தபோது அரசன் நான்கு முறை இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை அளிப்பதாக வாக்குறுதி செய்தான். மோசேயின் வேண்டுதலினால் வாதை நீங்கியதும், அவர்களை விடுவிக்க மறுப்பான்.

ஒரு முறை நைல் நதியின் தண்ணீர் முழுவதும் இரத்தமாக மாற்றப்பட்டது. எனவே ஆற்றிலிருந்த மீன்கள் யாவும் இறந்தன. பின்னர் எகிப்து நாடு தவளைகளால் மூடப்பட்டது. அவை செத்தபோது நாடு முழுவதும் நாற்றமெடுத்தது. அதன்பின் பயங்கரமான கொசுக்கள் வந்தன. அவை அனைவரையும் துன்பப்படுத்தின. பின்னர் பல லட்சக்கணக்கான ஈக்கள் நாடு முழுவதும் வந்தன. இந்த வாதைகள் எதுவும் இஸ்ரயேல்

மக்களைத் தாக்காதபடி அவர்களைக் கடவுள் அதிசயமாகப் பாதுகாத்தார்.

அடுத்து; கடவுள் ஒரு நோயை அனுப்பினார். அதனால் எகிப்தியரின் விலங்குகள் அனைத்தும் இறந்தன. அதன்பின் எகிப்தியர் அனைவரது உடலிலும் கொப்புளங்கள் உண்டாயின. இத்தனை வாதைகளை அனுபவித்த போதிலும் அரசன் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து வெளியே அனுப்ப மறுத்தான்.

அதன்பின், இடியுடன் கூடிய கல்மழை எகிப்து தேசமெங்கும் பெய்தது. அது பொருட்களுக்கும்., பயிர்களுக்கும், பெருத்த சேதத்தை விளைவித்தது. பின்னர் வீசிய கொடுங்காற்று பெரிய வெட்டுக்கிளிகளைக் கூட்டமாக அடித்துக் கொண்டு வந்தது. அவை எஞ்சியிருந்த எகிப்தியரின் பயிர்கள், மரங்கள், செடிகொடிகள் அனைத்தையும் தின்று தீர்த்தன.

ஒன்பதாவதாக எகிப்து முழுவதும் மூன்று நாள் காரிருள் சூழ்ந்தது. ஆனால், இஸ்ரயேல் மக்கள் இருந்தப் பகுதியில் மட்டும் வெளிச்சம் இருந்தது. இத்தனைத் துன்பங்களை அனுபவித்தபின்பும் அரசனின் மனம் மாறாதபடியால் கடவுள் இன்னும் கடினமான ஒரு வாதையை அனுப்ப வேண்டியதாயிற்று. ஒவ்வொரு எகிப்தியனின் குடும்பத்திலும் உள்ள தலைப்பிள்ளைகள் நள்ளிரவில் திடீரென்று இறந்தனர். அரசனின் மூத்தமகனும் இறந்துவிட்டான். எகிப்தியரின் வீடுகளில் பயங்கரமான அழுகுரல் கேட்டது. முதலில் பிறந்த விலங்குகளும் செத்தன. இதைக்கண்ட அரசன் பார்வோன், கடைசியாக இஸ்ரயேலருக்கு விடுதலைக் கொடுத்தான். “அவர்கள் கேட்டபடியே கடவுளுக்குப் பலி செலுத்துவதற்குப் புறப்பட்டுச் செல்லலாம்” என்று ஆணையிட்டான்.

இவ்வாறு எகிப்தின் மீது கடவுள் வெற்றிடைந்தார்.

முதல் பாஸ்கா விருந்து

விடுதலைப் பயணம் 12 : 1 – 14

எகிப்தியரின்மேல் கடைசி வாதை தாக்கியபோது ஒவ்வொரு எகிப்திய குடும்பத்திலும் உள்ள தலைப்பிள்ளைகள் திடீரென்று இறந்தனர். கால் நடைகளில் தலையீற்றுகளும் இறந்தன. இந்த வாதை இஸ்ரயேலரை மட்டும் தாக்காமல் "கடந்து சென்றது". "கடந்து செல்லுதல்" என்பதே பாஸ்கா எனப்பட்டது. இப்போதும் இஸ்ரயேலரின் தலைமுறையினர் ஒவ்வொரு ஆண்டும் "பாஸ்கா" என்னும் பண்டிகையைக் கடைபிடிப்பதின் மூலம் கடவுள் தமது மூதாதையர்களுக்குச் செய்ததை நினைவு கூறுகிறார்கள்.

பல்லாயிரம் வருடங்களுக்குப் பின் இயேசு தமது சீடர்களுடன் "கடைசி இரவு உணவு" மூலம் பாஸ்காவை ஆசரித்தார்.

கடவுள் எகிப்திலிருந்து மோசே, ஆரோன் ஆகியோர்களிடம், இது உங்களுக்கு ஆண்டின் முதலாம் மாதம். இம்மாதம் பத்தாம் நாள் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள். அது ஆண் ஆட்டுக்குட்டியாகவும், பழுதற்றதாகவும், ஒரு வயதுள்ளதாகவும் இருக்க வேண்டும். அது ஒரு குடும்பத்திற்கு சாப்பிடப் போதுமானதாக இருக்க வேண்டும். ஒரு குடும்பம் மிகச் சிறியதாயிருந்தால், பக்கத்து வீட்டுக்காரர் களையும் சேர்த்துக் கொள்ளட்டும். பதினான்காம்நாள் மாலையில் அந்த ஆட்டுக்குட்டியை அடிக்க வேண்டும். அதன் இரத்தத்தில் சிறிதளவு எடுத்து, ஒவ்வொரு வரும் தமது வீட்டு வாசலின் இரு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் தெளிக்க வேண்டும். அந்த இரவில், அந்த ஆட்டின் இறைச்சியை நெருப்பில் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்துடனும், கசப்பான கீரையுடனும் சாப்பிடவேண்டும். அந்த இறைச்சியை பச்சையாகச் சாப்பிடக் கூடாது. தண்ணீரில் வேகவைத்தும் சாப்பிடக் கூடாது. நெருப்பில் சுட்டுத்தான் சாப்பிட வேண்டும். அதில் எதையும் மறுநாள் காலை வரை மீதியாக வைத்திருக்கக் கூடாது. அப்படி இருந்தால், அதனை நெருப்பிலிட்டு எரித்து விடவேண்டும். அதைச் சாப்பிடும்போது நீங்கள் உங்கள் இடுப்பில் கச்சை கட்டிக் கொள்ள வேண்டும். பயணத்துக்கு ஆயத்தமான ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். கைகளில் கைத்தடிகளைப் பிடித்துக் கொள்ள வேண்டும். நின்று கொண்டே அவசரம் அவசரமாகச் சாப்பிட வேண்டும். இது; நீங்கள், உங்கள் ஆண்டவராகிய கடவுளாம் என்னைப் பெருமை படுத்த்துவதற்காகச் செய்யும் பாஸ்கா பண்டிகை ஆகும்.

அந்த இரவில் நான் எகிப்து நாடு எங்கும் கடந்து செல்வேன். மனிதர்களிலும், கால் நடைகளிலும் முதற் பேறானவைகள் அனைத்தையும் கொன்று போடுவேன். எகிப்தின் எல்லா கடவுள்களையும் தண்டிப்பேன். நானே கடவுள். ஆட்டு இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிற வாசல் நிலைகள் உள்ள வீடுகளில் என்னுடைய மக்களாகிய இஸ்ரயேலர் வாழ்கிறார்கள் என்று அறிந்து கொள்ளுவேன். அந்த வீடுகளில் எந்தச் சேதமும் வராதபடி அவற்றை நான் கடந்து செல்வேன். எகிப்தியர்களைத் தண்டிக்கும் போது இஸ்ரயேலருக்கு ஒரு தீங்கும் வராமல் காப்பேன். நீங்கள் இந்தப் பண்டிகையை என்றென்றும் கொண்டாட வேண்டும். உங்கள் ஆண்டவராகிய நான் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து உங்களை மீட்டு விடுதலை செய்கிறேனே; இதை நினைவு கூரும் விழாவாக இது இருக்கட்டும்" என்றார்.

இஸ்ரயேலர் எகிப்தை விட்டுப் புறப்படுதல்

விடுதலைப் பயணம் 12 : 37 - 42

இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட ஆயத்தமானார்கள். சீக்கிரமாகப் புறப்பட வேண்டியதிருந்ததால், அவர்களுக்கு உணவு தயாரிக்க நேரமில்லை. எனவே பிசைந்த மாவை பாத்திரங்களில் எடுத்துக் கொண்டார்கள். அது புளிப்பில்லாதது. எனவே "புளிப்பில்லா அப்பம்" என அழைக்கப்பட்டது. இன்றும் இஸ்ரயேலர் பாஸ்கா பண்டிகையின் போது புளிப்பில்லாத அப்பங்களையே பயன்படுத்துகின்றார்கள். ஏனெனில்; தங்கள் மூதாதையர்கள் எகிப்து நாட்டிலிருந்து விடுதலைப் பெற்றபோது அவசரம், அவசரமாகப் புறப்பட்டார்கள் என்பதை அது அவர்களுக்கு நினைவுபடுத்துகிறது.

எகிப்திலிருந்து ஆறு லட்சத்திற்கதிகமான இஸ்ரயேலர் புறப்பட்டு கால்நடையாக வெளியேறினார்கள். வேறு சில இனமக்களும் தங்கள் ஆடு, மாடுகளுடன் இஸ்ரயேலரோடு வெளியேறினார்கள். அவர்கள் எகிப்து நாட்டை விட்டுத் திடீரென்று புறப்படவேண்டியதாயிற்று. அவர்களுக்குத் தங்கள் உணவைத் தயாரிக்கப் போதுமான நேரம் இல்லை. எனவே; அவர்கள் தாங்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்திருந்த பிசைந்த மாவில் புளிப்பில்லாத அப்பங்களைச் சுட்டார்கள்.

இஸ்ரயேலர் எகிப்து நாட்டில் 430 வருடங்கள் வாழ்ந்திருந்தனர். 430 வருடங்கள் முடிந்த அன்றய தினமே, கடவுளின் மக்கள் அனைவரும் எகிப்தை விட்டுப் புறப்பட்டனர். அவர்கள் புறப்பட்ட அன்று இரவில் கடவுள் அவர்களைப் பாதுகாத்து நலமாக எகிப்தை விட்டு வெளியே அழைத்துக் கொண்டு வந்தார். ஒவ்வொரு ஆண்டும் இஸ்ரயேல் மக்கள் மகிழ்ச்சியுடன் பாஸ்கா விழாவைக் கொண்டாடுவார்கள். அது; கடவுளுக்கு நன்றி கூறும் அடையாளம், விடுதலை நிகழ்ச்சியை நினைவு கூரும் வாய்ப்பு.

செங்கடலைக் கடத்தல்

விடுதலைப் பயணம் 14 : 5 – 31

இவ்வாறு இஸ்ரயேலர் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலைப் பெற்றார்கள். அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட புதிய நாட்டிற்குத் தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். இன்றுவரை இந்த வியக்கத்தக்க நிகழ்ச்சி எவ்வாறு நடந்தேறியது என்பது ஒருவருக்கும் தெரியாது. "கடவுள் தங்களோடு இருந்தார் என்பதற்கு இது அடையாளம்" என்று இஸ்ரயேலர் நம்பினர்.

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து தப்பிச் சென்று விட்டனர் என்று அரசன் அறிந்தான். அவனும், அவனுடைய அதிகாரிகளும் தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொண்டனர். அரசன், "நாம் என்ன முட்டாள்தனம் செய்து விட்டோம்! அந்த இஸ்ரயேலரைத் தப்பிச் செல்ல விட்டு விட்டோம். நாம் நம்முடைய அடிமைகளை இழந்து விட்டோம். இதுவரை அவர்கள் செய்து வந்த வேலைகளை இனிமேல் செய்வது யார் ?" என்றான். பின் யுத்தத்துக்குச் செல்லும் தேர்களைத் தயார்செய்யச் சொன்னான். இஸ்ரயேலரை மடக்கிப் பிடிக்க மிகச்சிறந்த அறுநூறு வீரர்களை, அந்த தேர்களுக்கு முன்னே அனுப்பினான். கடவுள் அரசனின் மனதைக் கடினப்படுத்தினார். எனவே, அவன் அதிகக் கோபங்கொண்டு, எகிப்தை விட்டு மனமகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்ற இஸ்ரயேலரைத் துரத்திச் செல்லத் தீர்மானித்தான். தன்படை வீரர்களுடன் அவர்களைப் பின் தொடர்ந்தான். இஸ்ரயேலர் செங்கடலின் கடற்கரையில் தங்கியிருந்தனர். எகிப்தியப் படைகள் அவர்களுக்கு அருகில் வந்து விட்டன.

எகிப்திய அரசனும், படைகளும் தங்களைப் பின்தொடர்ந்து வருவதைக் கண்ட இஸ்ரயேலர் மிகவும் பயப்பட்டனர். அவர்கள் கடவுளிடம் உதவிக்காக மன்றாடினார்கள். அவர்கள் மோசேயிடம், "எகிப்திலே கல்லறைகள்



இல்லையா ? நாங்கள் இறந்து போவதற்காகவா எங்களை இந்தப் பாலைவனத்திற்கு அழைத்து வந்தீர் ? நாங்கள் அடிமைகளாக வாழ்ந்து கொள்கிறோம்; இந்தப் பாலைவனத்தில் இறப்பதைவிட எகிப்திலே அடிமைகளாக இருப்பதேமேல் என்று, அப்போதே உம்மிடம் கூறவில்லையா ?'' என்றனர்.

இதைக் கேட்ட மோசே மக்களிடம்., ''அஞ்சாதீர்கள்; அமைதியாயிருங்கள். இன்று இந்தப் படையிடமிருந்து உங்களைக் காப்பாற்ற கடவுள் செய்யப்போவதை நீங்கள் காண்பீர்கள். இன்றைக்கு நீங்கள் பார்க்கிற எகிப்தியர்களை இனி ஒரு நாளும் பார்க்க மாட்டீர்கள். கடவுள் உங்களுக்காகப் போர் செய்வார். நீங்கள் அமைதியாயிருந்தால் போதும்'' என்றார்.

கடவுள் மோசேயிடம், ''மக்களைக் காக்க வேண்டும் என்று ஏன் கதறுகிறாய் ? மக்களை வேகமாக முன்னேறி நடந்து செல்லும்படி சொல். நீ கரையில் நின்று, கடலுக்கு மேலாக உன் கோலை உயர்த்து; அப்போது செங்கடலின் நீர் இரண்டாகப் பிரியும்; இடையில் உலர்ந்தத் தரை தெரியும்; அதன் வழியாக இஸ்ரயேலர் தடையின்றி நடந்து செல்வார்கள். அவர்களைத் தொடர்ந்து எகிப்தியர்களும் வருவார்கள். அவர்களை நான் தோற்கடிக்கும்போது நானே கடவுள் என்று



அறிந்து கொள்வார்கள். அதன்பின்னர் அவர்களும் என்னைப் போற்றுவார்கள்" என்றார்.

கடவுளுடைய தூதன்; இதுவரை இஸ்ரயேல் மக்களின் முன்னால் சென்று கொண்டிருந்தார். இப்போது எகிப்தியப்படை நெருங்கி வருகையில் இஸ்ரயேல் மக்களின் பின்னால் தேவதூதன் சென்றார். இஸ்ரயேலருக்கும், எகிப்தியருக்கும் இடையே ஒரு மேகக் கூட்டம் எழும்பியது. அது எகிப்தியருக்கு இருளாகவும், இஸ்ரயேலருக்கு ஒளியாகவும் இருந்தது. எனவே, இரவு முழுவதும் எகிப்தியப்படை இஸ்ரயேலரை நெருங்கி வர முடியவில்லை.

மோசே கடலின் மேல் தன்னுடைய கையை உயர்த்தினார். கடவுள் கிழக்கிலிருந்து ஒரு பெருங்காற்றை அனுப்பினார். அது கடல் நீரை ஒதுங்கும் படி செய்தது. தண்ணீர் இரண்டாகப் பிளந்து சென்றது. அங்கே உலர்ந்தத் தரை காணப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் கடலின் நடுவே வெட்டாந்தரையில் நடந்து போனார்கள்.

பாதையின் இருபுறமும் தண்ணீர் சுவர் போல் நின்றது. எகிப்தியர் தங்கள் குதிரைகளோடும், தேர்களோடும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தார்கள். விடியற்காலை நேரத்தில் கடவுள் ஒளிமயமான மேகக் கூட்டத்திலிருந்து எகிப்தியரின் படையைப் பார்த்தார். அவர் எகிப்தியரின் படையை கலக்கமடையச் செய்தார். அவர்களுடைய தேர்களிலிருந்து உருளைகள் சுழன்று ஓடின. அவர்களுடைய தேர்கள் தடுமாறின. குதிரைகள் கலைந்தன. எகிப்தியரின் படை தாறுமாறாகச் சிதறி ஓடியது. அவர்களுக்குள்ளே பயமும், நடுக்கமும், குழப்பமும் உண்டாயிற்று. "கடவுள் நமக்கு எதிராகவும் இஸ்ரயேலருக்கு ஆதரவாகவும் போர் செய்கிறார். நாம் இங்கிருந்து ஓடிப்போய் விடுவோம். அவரை எதிர்க்க நம்மால் முடியாது" என்றார்கள்.

அப்போது கடவுள் மோசேயிடம், "உன்னுடைய கையைக் கடலின்மேல் நீட்டு ஒதுங்கி நிற்கும் தண்ணீர் திரும்பிவந்து எகிப்தியர்களை மூடும்" என்றார், உடனே மோசே கடலின் மேல் தன் கையை நீட்டினார்.

அப்பொழுது தண்ணீர் முன் இருந்த நிலைக்கு வேகமாகத் திரும்பி வந்தது. எகிப்தியர் தண்ணீரிலிருந்து தப்பிவிட முயற்சித்தார்கள். ஆனால் கடவுள் எகிப்தியர் யாவரையும் கடலில் மூழ்கச் செய்தார். அவர்களில் ஒருவர் கூடத் தப்பவில்லை.

இவ்விதமாகக் கடவுள் இஸ்ரயேல் மக்களை எகிப்தியர்களிடமிருந்து காப்பாற்றினார். மறுநாளிலே எகிப்தியரின் சடலங்கள் கடற்கரையில் ஒதுங்கியிருப்பதைக் கண்டனர்.

எகிப்தியரை அழித்து, தமது வல்லமையைக் கடவுள் காட்டியபோது, மக்கள் அவரைப் போற்றி நன்றி கூறினார்கள். அவர்களுக்குக் கடவுள் மீதும், அவருடைய ஊழியாராகிய மோசே மீதும் நம்பிக்கைப் பிறந்தது.

வெற்றியின் கீதம்

விடுதலைப் பயணம் 15 : 1 – 3

இஸ்ரயேலர்கள் எகிப்தியர்களிடமிருந்து தப்பி வந்ததைக் கொண்டாடும் வகையில் கடவுளைத் துதித்து மோசே ஒரு பாட்டுப் பாடினார். அதில் ஒரு பகுதி:

"கடவுளைப் பாடுவேன்; போற்றுவேன்;
அவர் பெரும் வெற்றியடைந்தார்.
அவர் குதிரைகளையும், குதிரை வீரர்களையும்
கடலிலே தள்ளினார்.
என்னைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும்
கடவுள் என்னோடிருக்கிறார்.
அவர் என் கடவுள்;
அவரை நான் போற்றுவேன்.
அவரே என் தந்தையின் கடவுள்;
அவரின் பெருமையைக் குறித்துப் பாடுவேன்.
அவர் போரில் வல்லவர்;
'அதிசயமானவர்' என்பது அவருடைய பெயர்."

ஒரு நீண்ட பயணம்

நீண்ட காலமாகவே இஸ்ரயேலர் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் விடுதலை பெற வேண்டும் என விரும்பினர். ஆனால் விடுதலை பெற்றுச் செல்லும் போது வழியில் சந்திக்க விருக்கும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள அவர்களுக்கு மனமில்லை. அவர்கள் கடந்து செல்ல வேண்டிய பகுதி பெரும்பாலும் பாலைவனமாக இருந்தது. கடவுள் அவர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்த நாட்டை அடைய அவர்களுக்கு நீண்ட காலம் ஆயிற்று.

பாலைவனத்தில் உணவு

விடுதலைப் பயணம் 16 : 2, 3, 9 - 16

பாலைவனத்தில் பறந்து திரியும் பறவைகள் 'காடைகள்' எனப்படும். வெண்மையான சிறிய உருண்டைப் பொருள் என்ன என்று நமக்குத் தெரியவில்லை. இஸ்ரயேலர் அதை, 'மன்னா' என்று அழைத்தார்கள். 'இது என்ன'? என்று கேட்பதற்குரிய எபிரேய வார்த்தையைப் போல் இருக்கிறது "மன்னா" என்னும் சொல். அது ஒரு சிறிய வெண்மையான விதைபோலவும், சுவை மிக்கதாகவும் இருந்தது. மன்னா அவர்களது பசியைப் போக்கும் உணவாக இருந்ததினால் இஸ்ரயேலர் அதைத் தந்த கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள்.

இஸ்ரயேலர் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர். அவர்கள், "எங்களை எகிப்து நாட்டிலேயே இறக்க விட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும் இப்பொழுது எங்களுக்கு உணவு இல்லை. பட்டினியாகவும், பசியாகவும் இருந்து இந்தப் பாலைவனத்தில் தவிக்கிறோம்! இங்கே நாங்கள் இறக்கும்படி நீங்கள் எங்களை அழைத்து வந்திருக்கிறீர்களே?" என்றார்கள்.

மோசே ஆரோனிடம், "மக்களை இங்கே வந்து கடவுள் முன்னிலையில் கூடி நிற்கச் சொல். அவர் அவர்களுடைய முறுமுறுப்புக் களைக் கேட்டார்" என்றார். ஆரோன் மக்களிடம் இதைச் சொன்னபோது அவர்கள் அனைவரும் பாலைவனத்துக்கு நேராகத் திரும்பினார்கள். கடவுளின் மகிமையான ஒளி திடீரென்று வானத்திலே தோன்றியதைக் கண்டார்கள். கடவுள் மோசேயிடம், "இஸ்ரயேல் மக்களின் முறுமுறுப்புக்களை நான் கேட்டேன். நீ அவர்களிடம் "மாலையில் இறைச்சியைத் திருப்தியாகச் சாப்பிடுவார்கள். காலையில் உங்களுக்குத் தேவையான அப்பம் கொடுக்கப்படும். அப்போது அதைச் செய்தவர் உங்கள் மெய்யான கடவுள் என்பதை அறிந்து கொள்ளுவீர்கள் என்று சொல்" என்றார்.

அன்று மாலையில் இஸ்ரயேல் மக்கள் தங்கியிருந்த பகுதியில் கூட்டமாக காடைகள் வந்து நிறைந்தன. அவர்கள் அனைவரும் அவற்றைப் பிடித்து, சமைத்து, திருப்தியாகச் சாப்பிட்டார்கள். மறுநாள் காலையில் எங்கும் பனி நிறைந்திருப்பதைக் கண்டார்கள். சூரியன் உதயமாகி பனி மறைந்தபோது., மெல்லிய, சிறிய வெண்மையான உருண்டைகள் பூமியெங்கும் நிறைந்திருப்பதைக் கண்டார்கள். இஸ்ரயேலர் அதைக் கண்டபோது, "இது என்ன ?" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

அப்பொழுது மோசே அந்த மக்களைப் பார்த்து, "இதுதான் கடவுள் உங்களுக்குத் தரும் அப்பம். ஒவ்வொருவரும் அவரவர் குடும்பத்தின் தேவைக்குத்தக்கதாக இதைச் சேகரியுங்கள். அந்தந்த நாள் அதைப் பயன்படுத்த வேண்டும். அடுத்த நாளுக்கு மீதி வைத்திருந்தால் கெட்டுப்போகும்" என்றார். இதுதான் "மன்னா". இஸ்ரயேலர் இந்த மன்னாவை நாற்பது ஆண்டுகள் சாப்பிட்டனர்.



பாலைவனத்தில் தண்ணீர்

விடுதலைப் பயணம் 17 : 1 – 6

இஸ்ரயேலர் அனைவரும் 'சீன்' பாலைவனத்தைவிட்டுப் புறப்பட்டனர். கடவுள் கட்டளையிட்டபடியே அவர்கள் ஒவ்வொரு இடமாக கடந்து சென்றார்கள். அவர்கள் வந்து 'இரபிதிம்' தீவில் தங்கிய போது அங்கே அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. இஸ்ரயேலர் மோசேயிடம், "எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் தாரும்" என்று கேட்டனர். மோசே அவர்களைப் பார்த்து, "ஏன் என்னோடு வாதாடுகிறீர்கள் ? கடவுளின் வல்லமையை ஏன் சோதிக்கிறீர்கள் ? என்று கேட்டார்.

மக்கள் மிகவும் தாகமாயிருந்தபடியால் தொடர்ந்து முறுமுறுத்துக்கொண்டே இருந்தார்கள். "எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் ஏன் எகிப்து நாட்டிலிருந்தது அழைத்து வந்தீர் ? இங்கே பாலைவனத்தில் நாங்களும், எங்கள் குழந்தைகளும், கால்நடைகளும் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் சாகிறோமே." என்று மோசேயிடம் சொன்னார்கள்.

அப்பொழுது மோசே கடவுளிடம், "இந்த மக்களுக்கு இப்போது நான் என்ன பதில் சொல்லட்டும் ? இவர்கள் என்னைக் கல்லெறியப் பார்க்கிறார்களே!" என்றார்.

அதற்கு கடவுள் மோசேயிடம், "இஸ்ரயேல் மூப்பராகிய சிலரை அழைத்துக் கொண்டு வா. நைல் நதியை அடித்த உன் கோலையும் கையில் எடுத்துக்கொள். மக்களுக்கு முன்பாக நடந்து போ. 'ஒரேபு' என்னும் 'சீனாய்' மலையிலுள்ள ஒரு பாறையின் மேல் நான் நிற்பேன். நீ உன் கோலினால் அந்தப் பாறையை அடி. அப்பொழுது அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" என்றார். மூப்பர்களின் முன்னிலையில் மோசே அந்தப் பாறையை அடித்தார். உடனே பாறையிலிருந்து தண்ணீர் பீறிட்டு வந்தது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு பருகினார்கள். அவர்களது கால்நடைகளும் குடித்துத் திருப்தியடைந்தன.

மலையின் மீது புகை மண்டலம்

விடுதலைப் பயணம் 19, 16 - 20

இஸ்ரயேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட மூன்று மாதங்களுக்குப் பின்னர், 'சீனாய்' மலையருகே தங்கினார்கள். கடவுள் தன் மக்களிடம் தமது மகா பெரிய வல்லமையையும், மகிமையான அதிசயங்களையும் தொடர்ந்து செய்து காட்ட விரும்பினார். அதன்மூலம் அவர்கள் தன்னை நேசிக்கவும், மெய்யான கடவுளாக ஏற்றுக் கொள்ளவும் வேண்டும் என்று எதிர்பார்த்தார். மேலும், அவர்மேல் நம்பிக்கை கொள்ளவும் இது காரணமாகும் என்று நம்பினார். அவர் கொடுக்கும் கட்டளைகள் அல்லது உடன்படிக்கைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிவதன் மூலம் அவர் மேல் அவர்கள் வைத்துள்ள அன்பைக் காட்டலாம் என்றும் நினைத்தார். எனவே அவர்கள் தங்களை மூன்று நாட்கள் சுத்திகரித்துக் கொண்டு மலையடிவாரத்திற்கு வந்தால் தான் நேரடியாக காட்சித் தருவதாக மோசே மூலம் தெரிவித்தார். அங்கே அவர் மக்களுடன் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டார்.

மூன்றாம் நாள் காலையில்; இடிமுழக்கமும், மின்னலும் உண்டாயிற்று. மலையின் மேல் ஒரு அடர்த்தியான மேகம் தோன்றியது. பெரிய எக்காள சத்தம் கேட்டது. கூடாரங்களில் இருந்த மக்கள் அனைவரும் இவற்றைக் கண்டும், கேட்டும் நடுங்கினார்கள். மோசே கடவுளைச் சந்திக்கும்படி மக்கள் அனைவரையும் அழைத்துச் சென்றார். அவர்கள் மலை அடிவாரத்தில் நின்றார்கள். கடவுள் தீச்சுவாலைகளால் சூழப்பட்டு அந்த மலையின் மீது இறங்கினார். சீனாய் மலை மீது எங்கும் ஒரு பெரிய புகை மண்டலம் தங்கியிருப்பதை மக்கள் கண்டார்கள். ஒரு சூளையின் புகையைப் போல மலையின் மேல் அந்தப் புகை எழும்பியது. மக்கள் மறுபடியும் பயத்தினால் கலக்கமடைந்தார்கள். எக்காள சத்தம் மேலும் மேலும் அதிகரித்தது. மலை முழுவதும் நடுங்கியது. மோசே கடவுளோடு பேசினார். கடவுள் சீனாய் மலையின் உச்சியில் இறங்கினபோது மோசேயைத் தன்னிடம் ஏறிவரச் சொன்னார். மோசே ஏறிப்போனார்.



பத்துக் கட்டளைகள்

விடுதலைப் பயணம் 20 : 1 – 17

இஸ்ரயேலர் கீழ்ப்படியுமாறு கடவுள் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். அப்படி அவர்கள் கீழ்ப்படிந்தால் அவர்கள் தம் சொந்த மக்களாக இருப்பார்கள் என கடவுள் வாக்குக் கொடுத்தார். அவர்கள் வாழ்வதற்கு, அவர் ஒரு நாட்டைக் கொடுப்பார். அவர்களது எதிரிகளிடமிருந்து அவர், அவர்களைக் காத்துக் கொள்ளுவார்.

கடவுள் பேசிய வார்த்தைகளாவன:

“உங்கள் ஆண்டவராகிய கடவுள் நானே. நீங்கள் அடிமைகளாயிருந்த எகிப்து நாட்டிலிருந்து உங்களை விடுவித்து, அழைத்து வந்தேன். என்னைத் தவிர நீங்கள் வேறு எந்த தெய்வத்தையும் வழிபட வேண்டாம்.

வானத்திலோ, பூமியிலோ, தண்ணீரிலோ, இருக்கும் எந்தப் பொருளைப்போலவும் யாதொரு தெய்வச் சிலைகளைச் செய்யவோ வழிபடவோ கூடாது. ஏனென்றால்; நானே உங்கள் ஆண்டவராகிய கடவுள். நீங்கள் வேறு எந்த தெய்வத்தையும் வழிபடுவதை நான் விரும்பவில்லை. என்னை வெறுப்பவர்களின் தலைமுறையினரைத் தண்டிப்பேன். என்மீது அன்புகூர்ந்து என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற வர்களை நான் நேசிப்பேன்; ஆசீர்வதிப்பேன்.

என்னுடைய பெயரை வீணாக வழங்கக் கூடாது. உங்கள் ஆண்டவராம் கடவுளாகிய என் பெயரை வீணாகப் பயன்படுத்துகிற வர்களை, நான் தண்டிப்பேன்.

ஓய்வுநாளைப் புனிதநாளெனக் கடைப்பிடிக்க வேண்டும். உங்களுடைய சொந்த வேலையைச் செய்வதற்கு ஆறுநாட்கள் உண்டு. ஏழாம் நாள் ஓய்வுநாள். அந்த நாளில் உங்கள் ஆண்டவராகிய கடவுளை வழிபட்டு, அவரைப் போற்ற வேண்டும். அந்த நாளில், நீங்களோ, உங்கள் பிள்ளைகளோ, உங்கள் வேலைக்காரர்களோ, உங்கள் நடுவில் வசிக்கின்ற அந்நியர்களோ, மிருகங்களோ யாதொரு வேலையும் செய்யக் கூடாது. முதல் ஆறு நாட்களில் நான் இந்தப் பூமி, வானம், கடல், அவற்றில் வாழும் உயிரினங்கள் அனைத்தையும் படைத்தேன். ஏழாம் நாள் ஓய்வாக இருந்தேன். எனவே; அந்த நாளை ஆசிர்வதித்துப் புனிதநாளாக ஆக்கினேன்.

உங்கள் தந்தையையும், தாயையும் கீழ்ப்படிதலுடன் கனம்பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நான் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டில் நீண்ட ஆயளோடு வாழ்வீர்கள்.

யாரையும் கொலை செய்ய வேண்டாம்.

ஒழுக்கக் கேடாக நடக்க வேண்டாம்.

எவர் பொருளையும் திருட வேண்டாம்.

யாருக்கு விரோதமாகவும் பொய்ச் சான்று சொல்ல வேண்டாம்.

மற்றவர்களுடைய எந்தப் பொருளுக் காகவும் ஆசைப்பட வேண்டாம். மற்றவனுடைய வீடு, அவனுடைய வேலைக் காரர்கள் போன்றவற்றுக்காக ஆசைப்படக் கூடாது. அவனுடைய கால்நடைகள், அல்லது அவனுக்குச் சொந்தமான வேறு எந்தப் பொருட்கள் மீதும் ஆசைப்படகூடாது.

இவையே கடவுள் கொடுத்த, “பத்து கட்டளைகள்” ஆகும்.

பொன் கன்றுக்குட்டி

விடுதலைப் பயணம் 32 : 1 – 20

பத்து கட்டளைகளைப் பெற்றபின் மிகக் குறுகிய காலத்திலேயே இஸ்ரயேலர் முதலாம் கட்டளையை மீறினர். கண்ணால் பார்க்க முடியாத கடவுளை வழிபடுவது கடினம் என்று நினைத்தனர். இஸ்ரயேலர் காணாத கடவுளை வழிபடத் தெரிந்துகொள்ள வேண்டியதிருந்தது.

கடவுளின் கட்டளைப்படி, மோசே சீனாய் மலையின் உச்சிக்குச் சென்றார். அவர் திரும்பிவர நாற்பது நாட்கள் ஆகிவிட்டன. எனவே; இஸ்ரயேலர் அனைவரும் ஆரோனிடம் சென்று, “மோசேக்கு என்ன நேர்ந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அவர்தான் எங்களை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து இதுவரை அழைத்து வந்தவர். இவ்வளவு நாட்களாக அவரைக் காணாததால், எங்களை வழிநடத்த எங்களுக்கு ஒரு தெய்வத்தைத் தாரும்.” என்றார்கள்.

அதற்கு ஆரோன் அவர்களிடம், "நீங்கள் அணிந்திருக்கும் பொன் காதணிகளைச் சேகரித்து கொண்டு வாருங்கள்" என்றான். அவற்றை வாங்கி, உருக்கி, அச்சில் வார்த்து, ஒரு பொன் கன்றுக்குட்டியைச் செய்தான்.

மக்கள், "எங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்த தெய்வம் இதுவே!" என்றனர்.

பின்னர் பொன் கன்றுக்குட்டியின் முன்னர் ஆரோன் ஒரு பலிபீடத்தைக் கட்டினான். மக்களிடம், "நாளை கடவுளை மகிமைப் படுத்தும்படி இவ்விடத்தில் ஒரு விழா கொண்டாடப்பட வேண்டும்" என்றான். மறுநாள் அதிகாலையில் மக்கள் சில விலங்குகளைக் கொண்டுவந்தார்கள். அவற்றில் சிலவற்றை பலியிட்டனர்; சிலவற்றைச் சமைத்து சாப்பிட்டனர். தொடர்ந்து மதுபானம் அருந்தி, மகிழ்ந்து எழுந்து ஆடினர்.

கடவுள் மோசேயிடம், "நீ வேகமாக இறங்கிச் செல். எகிப்திலிருந்து நீ அழைத்து வந்த உன்னுடைய மக்கள் பாவம் செய்து, என்னை மறந்து, என்னிடமிருந்து விலகி விட்டார்கள். அவர்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் இட்ட கட்டளைகளை

மறந்தனர். அவர்கள் ஒரு பொன் கன்றுக் குட்டியைச் செய்து, அதற்குப் பலிகளைச் செலுத்தி வழிபடுகிறார்கள். அதுதான் தங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்த கடவுள் என்கிறார்கள். அந்த மக்கள் எத்துணை கடின உள்ளம் உடையவர்கள். நான் அவர்கள் மீது கோபம் கொண்டுள்ளேன். நான் அவர்களை அழிக்கப் போகிறேன். நீ என்னைத் தடுக்க முயற்சிக்காதே.

நான் உன்னையும், உன் தலைமுறை யினரையும் ஒரு பெரிய இனமாக்குவேன்'' என்றார்.

"ஆனால் ஆண்டவரே! உமது மக்களின் மீது ஏன் கோபம் கொள்ளுகிறீர்? உம்முடைய மகா வல்லமையால் அவர்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கி இதுவரை அழைத்து வந்தீர். இப்பொழுது நீர் அவர்களை அழித்தால், "பாலைவனத்தில் இஸ்ரயேல் மக்களை அழிப்பதற்காகவே எகிப்திலிருந்து அழைத்துச் சென்றிருக்கிறார்'' என்று எகிப்தியர் உம்மைப் பற்றிக்கூற ஏன் இடம் கொடுக்க வேண்டும்? உம்முடைய கோபம் தணியக்கடவது. உம்முடைய மனம் மாறட்டும். உம்முடைய மக்களை அழிக்க வேண்டாம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் உமது ஊழியர்களை நினையும். "உங்கள் இனம் பல மடங்காகப் பலுகிப்பெருகும். உங்கள் தலைமுறையினர் என்றென்றும் வாழ்வதற்காக ஒரு நாட்டைக் கொடுப்பேன்'' என்று நீர் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நினைவு கூரும்'' என்றார். இவற்றைக் கேட்ட கடவுளின் மனம் மாறிவிட்டது. தம் மக்களாகிய இஸ்ரயேலரை அழிக்கவில்லை.

மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்தார். அவர் இருபக்கங்களும் கட்டளைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளைக் கொண்டுவந்தார். கடவுள் தாமே அவற்றைச் செய்து அவற்றில் பத்து கட்டளைகளையும் எழுதியிருந்தார்.

மோசேயின் உதவியாளராகிய யோசுவா கீழே மக்கள் எழுப்பும் கூச்சலைக் கேட்டு மோசேயிடம், "மலையடிவாரத்தில் மக்கள் சண்டையிடுகிறார்கள். அந்தச் சத்தம் இங்கே கேட்கிறது'' என்றார். மோசே, "அது சண்டையின் சத்தமல்ல. அங்கே மகிழ்ச்சி ஆரவாரமும் இல்லை. அழுகையின் கூக்குரலும் இல்லை. அவர்கள் அனைவரும் உற்சாகமாய்ப் பாடுகிறார்கள்'' என்றார்.

மோசே; மக்களின் கூடாரங்களின் அருகில் வந்தார். பொன் கன்றுக் குட்டியின் முன்பாக அனைவரும் நடனமாடுவதைக் கண்டு, கோபம் கொண்டார். தாம் கைகளில் வைத்திருந்த, கற்பலகைகள் இரண்டையும், அந்த மலையின் அடிவாரத்தில் தூக்கி எறிந்து உடைத்துப் போட்டார். அவர்கள் செய்திருந்த பொன் கன்றுக் குட்டியை அவர் எடுத்து உருக்கி, அரைத்துத் தூளாக்கித் தண்ணீரில் கலக்கிவிட்டார். பின்னர் அந்த நீரை இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச் செய்தார்.

ஆரோனின் மரணம்

எண்ணிக்கை 20 : 22 – 29

இஸ்ரயேலர் எல்லோரும் 'காதேசி'ல் இருந்து பயணம் செய்து 'ஓர்' என்னும் மலைக்கு வந்தனர். ஆண்டவர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி,

"ஆரோன் இந்த மலையில் மரிப்பான். நீங்கள் 'மேரிபா'வின் தண்ணீர் அருகில் என் கட்டளையை மீறினீர்கள். எனவே நான் இஸ்ரயேல் மக்களுக்கு கொடுக்கவிருக்கும் நாட்டிற்குள் நீங்கள் நுழையமாட்டீர்கள். நீ, ஆரோனையும் அவன் மகன் எலியாசரையும் மலை உச்சிக்கு அழைத்துக் கொண்டு வா. அங்கே ஆரோன் உடுத்தியிருக்கிற ஆடைகளை உரிந்து எலியாசருக்கு உடுத்து. அங்கே ஆரோன் மரித்துப் போவான்" என்றார்.

கடவுள் கட்டளையிட்டபடியே மோசே செய்தார். ஆரோன் மலையுச்சியில் மரித்தான். மோசேயும் எலியாசரும் மலையை விட்டு இறங்கிவந்தனர். ஆரோன் மரித்ததை அறிந்து மக்கள் முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடினார்கள்.

மோசே இறத்தல்

இணைச்சட்டம் 34 : 1 – 12

கடவுள் வாக்களித்திருந்த நாட்டின் எல்லைவரைக்கும் இஸ்ரயேல் மக்களை மோசே வழிநடத்தி வந்தார். கடவுள் 'கானான்' நாட்டைக் காணும் வாய்ப்பை மட்டும் மோசேக்குக் கொடுத்தார். ஆனால் அந்த நாட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில், அவர் கடவுள் அவரிடம் செய்யச் சொன்ன எல்லாவற்றையும் முறையாகச் செய்யவில்லை.

'எரிகோ'வின் கிழக்கே உள்ள 'நெபோ' மலைக்கு மோசே ஏறிச் சென்றார். அங்குள்ள 'பிஸ்கா'வின் உச்சியை அடைந்தார். அங்கிருந்து கடவுள் மோசேயிடம், கானான் நாடு முழுவதையும் ஒரு பக்கத்திலிருந்து மறு கடைசிவரையும் காட்டினார். அவர், "என் மக்களுக்கு நான் கொடுப்பதாக வாக்களித்த நாடு இதுவே; இதோ, அதைத் தூரத்திலிருந்து

பார்க்கும் வாய்ப்பை உனக்குத் தந்தேன். ஆனால், உன்னை அதில் நுழைய நான் அனுமதிக்கமாட்டேன்'' என்றார்.

கடவுள் சொல்லியிருந்தபடியே மோசே, 'மோவாபு' நாட்டில் இறந்தார். அங்குள்ள ஒரு பள்ளத்தாக்கில் கடவுள் மோசேயின் உடலை அடக்கம் செய்தார். அந்த இடம் இன்றுவரை யாராலும் அறியப்படவில்லை. இறக்கும்போது மோசேயின் வயது நூற்று இருபது. இஸ்ரயேலர் மோசேவிற்காக முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடினார்கள்.

தாம் இறப்பதற்கு முன்னரே மோசே, நூனின் குமாரனாகிய யோசுவாவைத் தேர்ந்தெடுத்தார். இஸ்ரயேல் மக்களைத் தொடர்ந்து வழி நடத்தும் அடுத்த தலைவனாக நியமித்திருந்தார். அவர் ஞானம் நிறைந்தவர். இஸ்ரயேல் மக்கள் யோசுவாவுக்குக் கீழ்ப்படிந்தார்கள். மோசேயின் மூலமாக கடவுள் அவர்களுக்குக் கொடுத்த கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தார்கள்.

இஸ்ரயேலில் மோசேயைப் போன்ற கடவுளின் உண்மையான ஊழியர் எவருமே இருந்ததில்லை. கடவுள் மோசேயுடன் நேரில் பேசினார். எகிப்திய அரசனுக்கும் மக்களுக்கும் முன்பாக பல வியத்தகு செயல்களைச் செய்ய மோசேயைக் கடவுள் அனுப்பினார். இஸ்ரயேலருக்கு, மோசேயைப் போன்று வியத்தகு செயல்களை, வேறு எவரும் எப்போதுமே செய்து காட்டியதில்லை.

துணிவுள்ள தலைவர்கள்

மோசே இறந்தபோது, இஸ்ரயேல் மக்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டின் எல்லையருகில் இருந்தார்கள். முதலில் அவர்கள் அந்த நாட்டின் சில பகுதிகளில் மட்டும் வாழ முடிந்தது. படிப்படியாக அவர்கள் அதிகப்பகுதிகளைச் சொந்தமாக்கிக் கொண்டனர். அவர்கள் அங்கே குடியேறுவதை விரும்பாத சில இன மக்கள் திரும்பத் திரும்ப அவர்களுடன் சண்டையிட்டார்கள். இந்தப் பகுதியில் கடவுள் மேல் முழு நம்பிக்கை வைத்தவர்களும்,துணிவுடையவர்களுமான தலைவர்களைப் பற்றிய வரலாறுகளைப் படிப்பீர்கள். அவர்கள் துன்ப நேரங்களிலும், ஆபத்து நேரிட்ட காலங்களிலும், இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியவர்கள். சில வேளைகளில் அவர்களுடைய எதிரிகள் மிகவும் வலிமை வாய்ந்தவர்களாயிருந்தார்கள். அவ்வேளைகளிலும் அந்தத் தலைவர்களின் நம்பிக்கையைக் கண்டு கடவுள் அவர்களுக்குப் போரில் வெற்றியைக் கொடுத்தார்.

ஒரு புதிய தலைவர் – யோசுவா

கடவுள் யோசுவாவை ஊக்குவித்தல்

யோசுவா 1:1 – 9

இஸ்ரயேல் மக்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டினுள் அழைத்துச் சென்றவர் யோசுவா. மறுபடியும் கடவுள் யோசுவாவிடம் தம்முடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது எத்துணை முக்கியமானது என்று எடுத்துக் கூறினார்.

தம்முடைய ஊழியனாகிய மோசே இறந்தபின் கடவுள் மோசேயின் உதவியாளனான யோசுவாவிடத்தில் பேசினார். அவர், "யோசுவாவே, என்னுடைய ஊழியனான மோசே இறந்துவிட்டான். இப்பொழுது நீயும் உன்னுடன் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தொடர்ந்து பயணம் செய்ய ஆயத்தப்படுங்கள். யோர்தான் ஆற்றைக் கடந்து நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்துக்குள் செல்லுங்கள். மோசேக்கு நான் வாக்குக் கொடுத்தது போல உனக்கும், என்னுடைய மக்கள் அனைவருக்கும் உங்களுடைய காலடிபடும் நாடு முழுவதையும் சொந்தமாகக் கொடுப்பேன். உன்னை ஒருவரும் ஒரு போதும் வெற்றி கொள்ள முடியாது. நான்

மோசேயோடு இருந்தது போல, எப்போதும் உன்னுடன் இருப்பேன். ஒரு போதும் நான் உன்னைவிட்டு விலகமாட்டேன். மனோபலங் கொண்டு, திடமனதாய் இரு. நீயே, என்னுடைய மக்களின் தலைவன். இவர்களுடைய மூதாதையர்களுக்கு நான் வாக்களித்த நாட்டை, இவர்கள் தங்களுக்குள் பங்கிட்டுச் சுதந்தரித்துக் கொள்வார்கள். என் ஊழியனான மோசே உனக்கு விதித்த எல்லாக் கட்டளைகளுக்கும் நீ கீழ்ப்படிய வேண்டும் அதில் ஒரு பகுதியையும் மீறக்கூடாது. அப்படிச் செய்தால்; நீ செல்லுமிடமெல்லாம் வெற்றியடைவாய். நீ கடவுளை வழிபடும் வேளையில் திருச்சட்ட நூலைப் படிக்க வேண்டும். இரவும், பகலும் அதையே தியானம் செய்ய வேண்டும். அதில் எழுதியிருக்கிறவை களுக்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டும். அப்பொழுது நீ செய்வதெல்லாம் வாய்க்கும். நீ பயப்படாமலும் கலக்கமடையாமலும் இரு. உன் ஆண்டவராம் கடவுளாகிய நான் நீ போகுமிடமெல்லாம் உன்னோடிருப்பேன். முன்னதாக உன்னிடம் சொன்னதையே மறுபடியும் சொல்லுகிறேன். துணிவும் தன்னம்பிக்கையும் உடையவனாய் இரு" என்றார்.

எரிகோவின் வீழ்ச்சி

யோசுவா 6 : 1 – 7, 12 – 13, 15 – 16, 20

யோசுவா, இஸ்ரயேல் மக்களை யோர்தான் ஆற்றைக் கடந்து கானான் நாட்டுக்குள் வழிநடத்திச் சென்றார். அங்கே அவர்கள் 'எரிகோ' என்னும் நகரத்தைக் கடந்து செல்ல வேண்டியதிருந்தது. எரிகோவின் மக்கள் தங்களை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் இருக்கிறார்கள் என்று அறிந்திருந்தனர். எனவே, எரிகோவின் மீது போர் செய்ய ஆயத்தமாயினர். தங்கள் வெற்றிக்குக் கடவுளை நம்பியிருப்பதைக் காட்டும்படியாக படையின் முன்பாக உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து சென்றார்கள். அது இரண்டு தண்டுகளால் தாங்கப் பட்டிருந்தது. அதன் உள்ளே இரண்டு கற்பலகைகளில் கடவுளால் எழுதப்பட்ட பத்து கட்டளைகள் இருந்தன. ஒரு பாத்திரத்தில் மன்னாவும் வைக்கப்பட்டிருந்தது. அது, கடவுள் அவர்களோடு இருப்பதைக் காட்டிற்று.

எரிகோ நகரத்தின் வாசல்கள் இஸ்ரயேலர் உள்ளே நுழையாதபடி அடைக்கப்பட்டு, காவல் காக்கப்பட்டன. ஒருவரும் நகரத்தின் உள்ளே போகவோ, வெளியே வரவோ முடியாது. கடவுள் யோசுவாவிடம், "இந்த எரிகோ நகரத்தை; அதன் அரசன், அவனுடைய வீரமிக்க படைவீரர்கள் அனைவரோடும் உங்களுக்குத் தரப்போகிறேன். நீயும், உன்னுடைய போர் வீரர்களும் தினம் ஒருமுறையாக ஆறுநாட்கள் இந்த நகரத்தைச் சுற்றிவர வேண்டும். நீங்கள் செல்லும்போது, உடன்படிக்கைப் பெட்டியின் முன்னால் ஏழு குருக்கள் பெரிய எக்காளங்களைக் கொண்டு செல்ல வேண்டும். ஏழாவது நாள் குருக்கள் எக்காளங்களை முழக்கிக் கொண்டு முன்னே செல்ல, அந்த நகரத்தை ஏழுமுறை சுற்றி வர வேண்டும். இறுதியில் ஒரு நீண்ட எக்காள ஒலியைக் குருக்கள் முழக்க வேண்டும். அதை நீங்கள் கேட்டதும், இஸ்ரயேல் மக்கள் அனைவரும் போரொலி எழுப்பி, ஆரவாரம் செய்ய வேண்டும். அப்போது, எரிகோவின்

மதிற்சுவர்கள் தகர்ந்து விழும். உடனே, உன்படை வீரர்கள் அனைவரும் அவரவர் தனக்கு நேராக இடிந்த மதிற்சுவர் வழியாக ஏறி நகரத்துக்குள் நுழைய வேண்டும்" என்றார்.

எனவே யோசுவா, தனது குருக்களை அழைத்து, "நீங்கள் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொள்ளுங்கள். ஏழுபேர் தங்கள் கைகளில் பெரிய எக்காளங்களை எடுத்துக் கொண்டு உடன்படிக்கைப் பெட்டியின் முன்பாகச் செல்லுங்கள்" என்றார். பின்னர், அவர் தன் போர்வீரர்கள் அனைவரையும் எக்காளம் முழக்கும் குருக்களுக்கு முன்பாக நடக்கச் செய்தார். உடன்படிக்கைப் பெட்டியைத் தொடர்ந்து பின் செல்லுமாறு இஸ்ரயேல் மக்களுக்குக் கட்டளையிட்டார்.

மறுநாளிலும், முதல் நாளில் செய்தது போலவே நகரத்தைச் சுற்றிவந்தார்கள். இப்படியே ஆறு நாளும் சுற்றிவந்தார்கள். ஏழாம் நாள் ஏழு முறை எரிகோ நகரத்தைச் சுற்றி வந்தார்கள். ஏழாவதுமுறை சுற்றி வரும்போது, "கடவுள் எரிகோ நகரத்தை உங்களுக்குக் கொடுத்து விட்டார். உரத்த குரலில் ஆர்ப்பரியுங்கள்" என்று யோசுவா மக்களிடம் அறிவித்தார். பின்னர் குருக்கள் எக்காளம் முழக்கினார்கள். மக்கள் அதைக் கேட்டதும்

பேரொலி எழுப்பினார்கள். எரிகோவின் மதிற்சுவர்கள் இடிந்துவிழுந்தன. உடனே போர் வீரர்கள் அனைவரும் எரிகோ நகாத்தினுள் நுழைந்து, அங்கிருந்தவர்களைக் கொன்று நகரத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

பெருந்தலைவர் – யோசுவா

யோசுவா 24 : 1, 14 – 24

"ஒரு சிறிய இஸ்ரயேலரின் படை, பெரிய எரிகோ நகரத்தை வீழ்த்திற்று" என்ற செய்தி *எங்கும் பரவியது. சுற்றிலும் இருந்த மற்ற இனத்தினர் மிகவும் பயந்தார்கள். யோசுவா தன்னுடைய வாழ்க்கையின் கடைசி நாட்களில் 'இஸ்ரயேல் மக்கள் தங்கள் கடவுளோடு செய்துள்ள ஒப்பந்தத்தை எப்பொழுதுமே மீறக்கூடாது'* என்று வலியுறுத்திக் கூறினார்.

யோசுவா, இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் 'செக்கேமில்' கூடிவரச் செய்தார். அங்கே அவர்களிடம், "கடவுள் ஒருவரையே வழிபடுங்கள். எல்லாவற்றிலும் அவருக்குக் கீழ்ப்படியுங்கள். உங்கள் மூதாதையர்கள் மெசப்பத்தோமியாவிலும், எகிப்திலும் செய்தது போல பிற தெய்வங்களை வழிபடவேண்டாம். நம்முடைய ஆண்டவராகிய கடவுள் ஒருவரையே வழிபடுங்கள்" என்றார். மேலும் அவர், "நீங்கள் ஆண்டவராகிய கடவுளை வழிபட விரும்பாவிட்டால், இன்றே, உங்கள் மூதாதையர்களின் தெய்வங்களுள் ஒன்றைத் தெரிந்து கொள்ளுகிறீர்களா? அல்லது, இங்கே வாழும் எமோரியரின் தெய்வங்களுள் ஒன்றைத் தெரிந்து கொள்ளுகிறீர்களா? ஆனால், நானும் என் குடும்பத்தாரும் ஆண்டவரை மட்டுமே வழிபட்டு, அவருக்குக் கீழ்ப்படிவோம்" என்றார்.

இஸ்ரயேல்மக்கள், யோசுவாவுக்கு மறுமொழியாக "நாங்கள் நம்முடைய கடவுளைவிட்டு விலகிச் செல்லமாட்டோம். ஆண்டவராகிய நமது கடவுள், எகிப்தில் அடிமைகளாயிருந்த எங்களையும், எங்கள் பெற்றோரையும் விடுதலையாக்கினார். அவர் எங்களுக்குச் செய்த எல்லா வியத்தகு செயல்களையும் கண்டோம். பல நாடுகளை நாங்கள் கடந்து வரும்போது, அவர் எங்களை நலமாகக் காத்தார். இங்கே வாழ்ந்து வந்த எமோரியர்கள் அனைவரையும், எங்களுக்காக துரத்தியடித்தார். அவரே எங்கள் கடவுள்" என்றனர்.

அப்போது யோசுவா இஸ்ரயேல் மக்களிடம், "வேறே தெய்வங்களை நீங்கள் வழிபட்டால் கடவுள் உங்கள் பாவங்களை, உங்களுக்கு மன்னிக்கமாட்டார். நீங்கள் அவரை விட்டு விலகிச் சென்றால், அவர் உங்களுக்கு எதிராக நின்று, உங்களுக்குத் தண்டனை தருவார். முன்னே உங்களுக்கு நன்மை செய்த அவரே உங்களை அழித்து விடுவார்" என்றார்.

அதற்கு அவர்கள், "இல்லை. நாங்கள் கடவுளையே வழிபட்டு, அவருக்கே சேவை





செய்வோம்" என்றார்கள்.

உடனே யோசுவா மக்களைப் பார்த்து, "அப்படியென்றால் உங்களிடத்திலிருக்கிற பிற தெய்வங்களின் உருவச்சிலைகள் அனைத்தையும் எறிந்துவிடுங்கள்" என்று கட்டளையிட்டார். மேலும், இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரை விட்டு விலகமாட்டோம், என்று வாக்குறுதி செய்யுங்கள்" என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு இஸ்ரயேல் மக்கள், "நம்முடைய கடவுளாகிய ஆண்டவரையே வழிபடுவோம். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம்" என்று வாக்குறுதியளித்தார்கள்.

துணிவுள்ள கிதியோன்

இஸ்ரயேலரை விடுவிக்க கிதியோன்

நீதித் தலைவர்கள் 6 : 1 - 16

இஸ்ரயேலர், வெகு சீக்கிரத்தில் தங்கள் வாக்குறுதிகளை மறந்து போனார்கள். யோசுவா இறந்தபின் அவர்கள், வேறு தெய்வங்களை வழிபடத் தொடங்கினார்கள்.

மறுபடியும் ஒருமுறை இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்தார்கள். எனவே அவர், மீதியானியர்கள் இஸ்ரயேலரை ஏழுவருடங்கள் ஆண்டுகொள்ள ஒப்புவித்தார். மீதியானியர்கள் வலிமைமிக்க இனமாக இருந்தார்கள். எனவே, அவர்களுக்குப் பயந்து, இஸ்ரயேலர் குகைகளிலும், மலைகளிலுள்ள கெபிகளிலும் வசித்து வந்தார்கள். இஸ்ரயேலர் விவசாயம் செய்யும் போது, மீதியானியர் பிற இனத்தாருடன் சேர்ந்துவந்து அவர்களைத் தாக்குவார்கள். தங்களுடைய கால்நடைகளை மேயவிட்டு இஸ்ரயேலரின் பயிர்களை அழித்து, அவர்களுடைய கால்நடைகளைக் கவர்ந்து சென்றனர். இதனால் இஸ்ரயேலர், மிகவும் ஏழைகள் ஆனார்கள்.

இஸ்ரயேலர், மீதியானியர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்ற உதவி செய்யும்படி கடவுளிடம் வேண்டினார்கள். கடவுளின் மனிதர் ஒருவர் வந்து, இஸ்ரயேலின் கடவுளாம் ஆண்டவரிடத்திலிருந்து ஒரு செய்தியை மக்களுக்கு அறிவித்தார். அவர், "நீங்கள் எகிப்தில் கொடுமைகளை

அனுபவித்துக் கொண்டிருந்தபோது, உங்கள் மீது இரக்கம்கொண்டு உங்களை விடுவித்து, அழைத்து வந்தேன். எகிப்தியரிடம் இருந்து உங்களைத் தப்புவித்தேன். இந்த நாட்டில் உங்களை எதிர்த்த மக்கள் அனைவரையும் தோற்கடித்து அவர்களது, நாட்டை உங்களுக்குத் தந்தேன். 'நானே உங்கள் ஆண்டவராகிய கடவுள்' எமோரியரின் தெய்வங்களை நீங்கள் வழிபடக் கூடாது என்று கூறியிருக்கிறேன். நீங்கள் என்னுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வில்லை" என்று கடவுள் கூறுகிறார்" என்றார்.

ஒரு நாள் கடவுளுடைய தூதர், 'ஒப்ரா' என்னும் சிற்றூரில், யோசுவாவுக்குச் சொந்தமான ஒரு கர்வாலி மரத்தின் கீழ் உட்கார்ந்தார். அதனருகில் யோவாசின் மகனான கிதியோன் கோதுமையைப் போரடித்துக்கொண்டு இருந்தான். மீதியானியர் காணக் கூடாத இடமாக அது இருந்தது. கர்த்தருடைய தூதன் கிதியோனிடம், "நீ ஒரு துணிவும், வலிமையும் மிக்க மனிதன். கடவுள் உன்னுடனே இருக்கிறார்" என்றார்.

கிதியோன் அதைக்கேட்டு, "கடவுள் எங்களுடன் இருக்கிறாரென்றால் எங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட துன்பங்களெல்லாம் ஏற்படுகின்றன? கடவுள் அடிக்கடி செய்து வந்த வியத்தகு செயல்கள் எல்லாம் எங்கே? கடவுள் எங்கள் மூதாதையர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வந்த முறையைப் பற்றி அவர்கள் எங்களிடம் சொல்லி இருக்கிறார்கள். இப்பொழுது ஏன் இந்த மீதியானியர்களிடம் நாங்கள் மிகுந்த துன்பம் அனுபவிக்கச் செய்கிறார்?" என்று கேட்டான்.

அப்பொழுது கடவுள் அவனிடம், "நீ வலிமை படைத்தவன். நான் உன்னை மீதியானியர்களிடமிருந்து இஸ்ரலேயரை விடுவிக்க அனுப்புகிறேன்" என்றார்.

அதற்குக் கிதியோன், "ஆண்டவரே! நான் எப்படி அவர்களை விடுவிக்க முடியும்? என்னுடைய குலமாகிய 'மனாசே குலம்' இஸ்ரயேலரின் பன்னிரண்டு குலங்களிலும் மிகவும் எளியதும், வலுவற்றதும் அல்லவோ? என்னுடைய குடும்பத்தாரிலும் நான் அவ்வளவு முக்கியமானவன் அல்லவே" என்றான்.

அப்போது கடவுள் "என்னுடைய ஆற்றலும் உதவியும் உன்னோடிருப்பதால் நீ இதைச் செய்ய முடியும். நீ எளிதாக மீதியானியரைத் தோற்கடித்து விடுவாய்" என்றார்.

மரணத்திற்குப் பயப்படாதவன்

நீதித் தலைவர்கள் 6 : 25 – 32

தூதன் வந்த அன்றிரவில் கடவுள் கிதியோனிடம், "நீ உன் தந்தையுடைய ஏழுவயதான இரண்டாம் காளையைக் கொண்டு வா. முன்னே இருக்கும் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்துப்போடு. உன் தந்தை செய்திருக்கிற "அசேரா" என்னும் தேவதையின் சிலையையும் நொறுக்கிப்போடு; அங்கே கடவுளுக்கு ஒரு புதிய பலிபீடத்தைக் கட்டு; அதன்மீது அந்த இரண்டாம் காளையை எரிபலியாகச் செலுத்து; விறகிற்கு நொறுக்கப்பட்ட அசேராவின் சிலையின் துண்டுகளைப் பயன்படுத்து" என்றார்.

கிதியோன், கடவுள் தன்னிடம் சொன்னபடியே செய்து முடித்தான். அவன் தங்கள் வேலைக்காரர்களில் பத்துப்பேரை அழைத்துச் சென்றிருந்தான். தன்னுடைய ஊரில் உள்ள மக்களுக்கும், தனது குடும்பத்தாருக்கும் பயப்பட்டான். எனவே; இந்த வேலையை இரவில் பிறருக்குத் தெரியாமல் செய்து முடித்துவிட்டான்.

மறுநாள் அதிகாலையில், மக்கள் பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டிருப்பதையும், அதன் அருகிலிருந்த சிலை நொறுக்கப்பட்டிருப் பதையும் கண்டார்கள். அவர்கள் ஒருவருக் கொருவர் 'இதைச் செய்தது யார்?" என்று விசாரித்தார்கள். பின்னர், யோவாசின் மகனாகிய கிதியோன்தான் அதைச் செய்தவன் என்று கண்டு பிடித்தார்கள். அவர்கள் கோபத்துடன் யோவாசிடம் சென்று, "உன்னுடைய மகன் கிதியோனை இங்கே வெளியே கொண்டுவா. நாங்கள் அவனைக் கொலை செய்யப் போகிறோம். அவன் துணிகரமாகப் பாகாலுடைய பலிபீடத்தைத் தகர்த்திருக்கிறான். அசேராவின் சிலையையும் உடைத்திருக்கிறான்" என்றார்கள்.



யோவாசு அவர்களிடம், "நீங்கள் பாகாலுக்காக வாதாடுகிறீர்களா? நீங்களா பாகாலைக் காப்பாற்றப் போகிறீர்கள்? அதற்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலேயே கொல்லப்படுவான். பாகால் ஒரு கடவுளானால், தன் பலிபீடத்தை ஒருவன் தகர்த்ததற்காக அது தனக்குத்தானே வழக்காடட்டும். தன் பலிபீடத்தை ஒருவன் தகர்ப்பதைக் கண்டும், ஒன்றும் செய்யாமல் பார்த்துக் கொண்டுதானே இருந்தது?" என்றார்.

300 பேர் துணையுடன் வெற்றி

நீதித் தலைவர்கள் 7 : 1 – 22

ஒரு நாள் கிதியோனும், அவரோடிருந்த மக்களும் அதிகாலையில் புறப்பட்டு 'ஆரோத்' என்னும் நீரூற்றின் அருகில் சென்று தங்கினார்கள். மீதியானியர்கள் வடக்கே மோரே மேட்டின் கீழே உள்ள பள்ளத்தாக்கில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார்கள். அப்பொழுது கடவுள் கிதியோனிடம், "மீதியானியரைத் தோற்கடிக்க உன்னோடு இருக்கும் இவ்வளவு இஸ்ரயேல் மக்கள் தேவையில்லை. இந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஒன்று செய். அவர்கள் கேட்கத்தக்கதாக இப்படிக் கூறு; 'பயமும் திகிலும் உள்ளவன், கீலேயாத் மலையில் இருந்து ஓடிப்போகக்கடவன்.' என்றார். கிதியோன் அப்படிச் சொன்னபோது மக்களில் இருபத்திரண்டாயிரம்பேர் அங்கிருந்து ஓடிப்போய் விட்டார்கள். பத்தாயிரம் பேர் மீதியாக இருந்தார்கள்.

கடவுள், "இப்போதும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். இவர்களையும் குறைக்க வேண்டும். எனவே; மீதியிருக்கும் மக்களை ஆற்றின் கரையில் தண்ணீர் குடிக்க அழைத்துச் செல். அங்கே, நாய் போல் நக்கிக் குடிக்கிறவர்களைப் பிரித்துத் தனியே நிறுத்து. முழங்காலூன்றித் தண்ணீர் குடிக்கிறவர் களைத் தனியே நிறுத்து" என்றார். அப்படி நக்கிக் குடித்தவர்கள் முந்நூறு பேர். பிறகு

கடவுள், "கிதியோனே, தண்ணீரை நக்கிக் குடித்த முந்நூறுபேர் மட்டும் போதும். இவர்களைக் கொண்டு மீதியானியர்களைத் தோற்கடிக்க நான் உதவி செய்வேன். மற்ற மக்கள் அனைவரையும் திரும்பித் தங்களது வீடுகளுக்குப் போய்விடச் சொல்" என்றார். கிதியோன் அவ்வாறே செய்தார். முந்நூறுபேர் மட்டும் தங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களையும், எக்காளங்களையும் எடுத்துக் கொண்டார்கள்.

அந்த இரவில்; கடவுள் கிதியோனிடம், "அனைவரும் எழும்பி எதிரிகளின் படையை நோக்கிப் போங்கள். நான் உங்களுக்காக அவர்களைத் தோற்கடிப்பேன். எனினும் உனக்குப் பயமாயிருந்தால், முதலில் நீ உன்னுடைய வேலைக்காரனாகிய பூராவை அழைத்துக் கொண்டு எதிரிகளின் கூடாரம் வரைக்கும்போ. அங்கே அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றுக்கேள். அப்பொழுது அவர்களை முறியடிப்பதற்கு உனக்கு மனத்துணிவு உண்டாகும்" என்றார். அதன்படியே கிதியோன், பூரா இருவரும் எதிரிகளின் படையின் முன்னணியில் காவலாளிகளின் இருப்பிடம் வரை சென்றனர். அங்கே மீதியானியர்களும், அவர்களுடன் சேர்ந்திருந்த பிற இன வீரர்களும் திரளாகப் பள்ளத்தாக்கிலே பரவி இருந்தார்கள். அவர்களுடைய ஒட்டகங்கள் மட்டும் ஆயிரக்கணக்கில் இருந்தன. கிதியோனும், பூராவும் அருகில் சென்றபோது, அங்கே இரண்டுபேர் பேசிக்கொண்டு இருப்பதைக் கேட்டார்கள். ஒருவன், "தான் கண்ட கனவில் பார்லி அப்பம் ஒன்று மீதியானியரின் கூடாரத்துக்கு நேராக உருண்டு வந்து, அது ஒரு கூடாரத்தின் மேல் மோதி, அதை தரைமட்டமாக்கிவிட்டது" என்று கூறினான். இதைக் கேட்ட மற்றவன், "உருண்டு வந்த அப்பம் யோவாசின் மகனான கிதியோனைக் குறிக்கிறது. உன்னுடைய கனவு, அவனுடைய கடவுள் நம்மைத் தோற்கடிக்க, அவனுக்கு உதவி செய்வார் என்றும் காட்டுகிறது" என்றான்.

இதைக் கேட்டதும் கிதியோன், தாழக் குனிந்து கடவுளைப் பணிந்து கொண்டார். பின்னர் அவர் தமது முகாமுக்குத் திரும்பி வந்து, "எழுந்திருங்கள், கடவுள் மீதியானியர் மேல் உங்களுக்கு வெற்றியைக் கட்டளை இடுகிறார்" என்றார். அவர் தன்னோடிருந்த முந்நூறுபேரை, மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். ஒவ்வொருவரிடமும் ஒரு எக்காளத்தையும், ஒரு பானையையும், அதனுள் வைக்கும் தீப்பந்தத்தையும் கொடுத்தார். அவர்களிடம், "நாம் எதிரிகளைத் தாக்கப் போகிறோம். அவர்களின் கூடாரத்தின் அருகில் சென்றதும், நான் என்ன செய்கிறேனோ அதைப்பார்த்து நீங்களும் அப்படியே செய்யுங்கள்." என்றார். நடு இரவில் மீதியானியர்களின் காவலாளிகள் வேலைமுடித்து, புதிய காவலாளிகள் பொறுப்பேற்றார்கள்.

அப்பொழுது கிதியோனும் அவரோடிருந்த நூறுபேரும் எதிரிகளின் கூடாரங்களின் அருகில் வந்து, தங்களுடைய எக்காளங்களை முழக்கினார்கள். முழக்கம் செய்து கொண்டே தங்கள் கைகளிலிருந்த பானைகளை உடைத்தார்கள். தீப்பந்தங்களைத் தங்களது இடது கைகளிலும், எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, "கடவுளுக்கும், கிதியோனுக்கும் வெற்றி" என்று முழக்கமிட்டார்கள். அதே நேரத்தில் மற்ற இரு குழுக்களும் அப்படியே செய்தனர். இவ்வாறு உரக்க முழங்கிக் கொண்டே ஒவ்வொருவரும் மீதியானியர்களின் கூடாரங்களைச் சுற்றிலும் நின்றார்கள். இதைக் கேட்டவுடன் மீதியானியரின் படைகள் கதறிக் கொண்டு, சிதறி ஓடினார்கள். கிதியோனின் ஆட்கள் தொடர்ந்து எக்காளம் முழக்கிக் கொண்டிருந்தார்கள். மீதியானியர்கள், தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் வாளினால் சண்டையிட்டுக்கொள்ளும்படி, கடவுள் குழப்பத்தை உண்டாக்கினார். இவ்வாறு மீதியானியர் தோல்வி அடைந்து ஓடிப்போனார்கள்.

ஒரு புதிய இறைவாக்கினர் – சாமுவேல்

யோசுவா, கிதியோன் போன்ற மனிதர்கள் நல்ல போர் வீரர்களாயிருந்தார்கள். நல்ல யுத்த வீரர்கள் முக்கியமானவர்கள்தான். ஆனால் "இறைவாக்கினர்" என்றழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தாரும் முக்கியத்துவம் பெற்று வந்தார்கள். இறைவாக்கினரின் வேலை கடவுளின் செய்தியை மக்களுக்கு அறிவித்தல் ஆகும். இறைவாக்கினருள் சாமுவேல் முதன்மையானவர். இஸ்ரயேலர் தங்களது முதல் அரசனை தேர்ந்தெடுக்கும் வரை அவர்களை இவர் வழி நடத்தினார்.

பிறப்பதற்கு முன்னரே கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்

1 சாமுவேல் 1 : 9 - 20

சாமுவேல் பிறப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. ஒரு குடும்பத்தில் குழந்தைகள் இருப்பது கடவுள்தரும் ஆசியின் அடையாளமாகும். குழந்தையில்லாத பெண்கள் சமுதாயத்தில் மதிக்கப்படுவதில்லை. அன்னாவுக்கு குழந்தை இல்லை. எனவே அவள்; அதிக துக்கத்தோடு இருந்தாள். ஒவ்வொரு வருடமும் அவளுடைய கணவனாகிய எல்க்கானா, தன் முழு குடும்பத்தோடும் 'சீலோ'வுக்குச் சென்று கடவுளுக்குப் பலிகளைச் செலுத்துவான். அந்நாட்களில் அன்னா மிகவும் வேதனைப்படுவாள்.

ஒருமுறை, இவ்வாறு அக்குடும்பத்தினர் சீலோவுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் சாப்பிட்டு முடித்தபின்பு, அங்கிருந்து அன்னா, தனியாக எழுந்து சென்றாள். அவள் மிகவும் துக்கத்துடன் காணப்பட்டாள். அவள் கடவுளின் முன்னிலையில் சென்று, அழுது வேண்டுதல் செய்தாள். அவ்வேளையில் ஏலி என்னும் குரு, கதவின் அருகிலுள்ள தன்னுடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அன்னா கடவுளிடம் ஒரு பொருத்தனைப் பண்ணினாள். "எல்லாம் வல்ல கடவுளே, உமது அடியாளாகிய என்னைக் கவனியும்; என்னுடைய, மன வேதனையைப் பார்த்து என்னை நினைத்தருளும்; என்னை மறந்து விடாதேயும்; நீர் எனக்கு ஒரு ஆண்மகனைத் தந்தருளினால், நான் அவனை ஆயுள் உள்ளவரை உமக்கே ஊழியம் செய்ய ஒப்படைப்பேன்" என்றாள்.

அன்னா தொடர்ந்து நீண்ட நேரம் வேண்டுதல் செய்து கொண்டிருப்பதை, ஏலி கவனித்தார். அன்னா இறைவேண்டல் செய்யும் போது, அவளுடைய உதடுகள் மட்டும் அசைந்தன. குரல் வெளிவரவில்லை. எனவே அவள் மதுபானம் அருந்தியிருப்பதாக ஏலி நினைத்தார். அவர் அன்னாவிடம், "குடிகாரப் பெண்ணே, பேசாமல் இரு. எவ்வளவு நேரம் இப்படிக் குடிவெறியில் இருப்பாய்?" என்று கோபத்துடன் கண்டித்தார்.



அதற்கு அன்னா, "இல்லை ஐயா, நான் குடிவெறியில் இல்லை. எனக்குக் கடவுளின் உதவி வேண்டும். என்னுடைய துன்பங்களைச் சொல்லி, கடவுளிடம் மன்றாடுகிறேன். நான் ஒரு கெட்ட பெண் என்று நினைக்கவேண்டாம். நான் மிகுந்த மன வேதனையுடனிருப்பதால் கடவுளிடம் அதிக நேரம் வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட ஏலி, "மன அமைதியுடன் சென்றுவா. இஸ்ரயேலின் ஆண்டவராகிய கடவுள், நீ வேண்டிக் கொண்ட நன்மைகளை எல்லாம் உனக்கு அருள்வாராக" என்றார். அன்னா ஏலியிடம், "ஐயா, என் மீது உங்கள் அன்பும், இரக்கமும் எப்போதும் இருப்பதாக" என்றாள். பின்னர்; அன்னா சென்று சிறிது உணவு சாப்பிட்டாள். அதன் பிறகு அவள் எப்போதுமே துக்கத்தோடு இருந்ததில்லை.

மறுநாள் அதிகாலையில் எல்க்கானாவும், அவரது குடும்பத்தாரும் விழித்தெழுந்தார்கள். ஆண்டவரை வழிபட்டபின், ராமாவிலுள்ள தங்கள் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்கள். கடவுள் அன்னாவின் மன்றாட்டைக் கேட்டார். அவள் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். "கடவுளிடத்தில் இவனைக் கேட்டேன். அவர் தந்தார்" என்று கூறி, அவனுக்கு, "சாமுவேல்" என்று பெயர் சூட்டினாள்.

அன்னா தாம் நேர்ந்து கொண்டதை நிறைவேற்றுதல்

1 சாமுவேல் 1 : 24 - 28

சாமுவேலின் ஆயுள் காலம் முழுவதும் அவனுடைய தலைமுடி வெட்டப்படுவதில்லை என்று, அன்னா நேர்ந்து கொண்டிருந்தாள். இந்தப் பொருத்தனை ஒருவேளை நமக்குப் புதுமையாயிருக்கலாம். ஆனால் அக்காலத்தில் ஒருவர் அப்படி முடிவளர்த்து இருந்தால், அவர் "நசரேய விரதம் காப்பவர்" என்று மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள். "நசரேயர்கள்" எனப்படுபவர்கள், தங்களைக் கடவுள் பணிக்கு என்று அர்ப்பணித்தவர்கள்.

சாமுவேல் சிறுவனாக இருந்தபோது அன்னா அவனை சீலோவிலிருக்கும் கடவுளின் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றாள். அவள் தன்னுடன், ஒரு மூன்று வயதான காளையையும், கொஞ்சம் மா, ஒரு தோல்பை நிறைய திராட்சைரசம் ஆகியவற்றை கடவுளுக்குக் காணிக்கையாகக் கொண்டு சென்றாள். எல்க்கானாவும் அன்னாவும் தங்கள் மகன் சாமுவேலை ஏலியினிடத்தில்

கொண்டு சென்றார்கள். அன்னா, ஏலியிடம், "ஐயா என்னை நினைவு இருக்கிறதா? சில காலத்துக்கு முன் இங்கே கடவுளின் முன்னிலையில் நான் வேண்டுதல் செய்தபோது பார்த்தீர்கள் அல்லவா? நான் கடவுளிடம் ஒரு குழந்தையைக் கேட்டேன். அவர் கொடுத்தார். அப்போது நேர்ந்து கொண்டபடி, அவனை நான் கடவுளுக்கு ஒப்படைக்கிறேன்" என்றாள். பின்னர் அவர்கள் அனைவரும், அங்கே கடவுளை வழிபட்டார்கள்.

சாமுவேல் கடவுள் பேசுவதைக் கேட்டல்

1 சாமுவேல் 3 : 1 - 21

கடவுளுக்குப் பணிவிடை செய்வது பற்றி, அங்கே சாமுவேலுக்கு ஏலி பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். அந்நாட்களில் மக்களுக்குச் செய்தியோ, காட்சியோ எப்போதாவதுதான் கடவுளிடமிருந்து கிடைக்கும். ஒரு நாள் இரவு ஏலி தம் அறையில் தூங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு அப்போது கண்பார்வை மிகவும் குறைவு. சாமுவேல் உடன்படிக்கை பெட்டி வைக்கப்பட்டிருந்த கருவறையில் தூங்கிக் கொண்டிருந்தான். பொழுது விடிவதற்கு முன் அதிகாலையில், கடவுள் சாமுவேலை அழைத்தார். "சாமுவேலே" என்று அழைக்கும் சத்தம் கேட்டவுடன் அவன் எழுந்து, ஏலியிடம் ஓடிச்சென்று, "ஐயா, என்னை அழைத்தீரே இதோ, அடியேன்" என்றான். ஏலி, "நான் உன்னை அழைக்கவில்லை. நீ போய் படுத்துக்கொள்" என்றார். எனவே சாமுவேல் திரும்பிச் சென்று படுத்துக்கொண்டான்.



கடவுள் மறுபடியும், "சாமுவேலே" என்றார். சாமுவேல் தன்னை அழைப்பது கடவுள் என்று அறியவில்லை. கடவுள் இதற்கு முன்னால் எப்போதும் சாமுவேலிடம் பேசினதில்லை. எனவே, அவன் எழுந்து ஏலியிடம் சென்று, "ஐயா, நீங்கள் என்னை அழைத்தீர்கள். இதோ அடியேன் வந்திருக்கிறேன்" என்றான். அப்போதும் ஏலி, "என் மகனே, நான் உன்னை அழைக்கவில்லை. நீ போய் படுத்துக்கொள்" என்றார்.

மூன்றாம் முறையாக கடவுள் சாமுவேலை அழைத்தார். எனவே; முன் போலவே, சாமுவேல் எழுந்து ஏலியிடம் ஓடி, "நீங்கள் என்னை அழைத்தீர்கள். இதோ உமது அடியேன் வந்திருக்கிறேன்" என்றான். அப்பொழுது ஏலி, கடவுள்தான் சாமுவேலை அழைக்கிறார் என்று அறிந்தார். அவர் சாமுவேலிடம், "நீ போய்ப் படுத்துக்கொள். இனிமேல் இப்படி உன்னை அழைக்கும் சத்தம் கேட்டால் நீ எழுந்து, பணிவுடன், "ஆண்டவரே பேசும். அடியேன் கேட்கிறேன் என்று சொல்" என்றார். உடனே சாமுவேல் சென்றுபடுத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் கடவுள் அங்கே வந்து நின்றார். மறுபடியும், "சாமுவேலே! சாமுவேலே!" என்று அழைத்தார். உடனே சாமுவேல் எழுந்து, பணிவுடன், "ஆண்டவரே பேசும். அடியேன் கேட்கிறேன்" என்றான்.

கடவுள் அவனிடம், "நான் இஸ்ரயேல் மக்களுக்கு வேதனை தரும் செயல் ஒன்றை விரைவில் செய்யப்போகிறேன். ஏற்கனவே ஏலியிடம், அவருடைய குடும்பத்தைப் பற்றி எச்சரிக்கை செய்திருக்கிறேன். அவருடைய புதல்வர்கள் என்னைப் பழிக்கும் வகையில் செயல்களைச் செய்கிறார்கள், என்று ஏலிக்குத் தெரியும். எனினும் அவர், அதைத் தடுக்க வில்லை. எனவே; அவர்களுடைய பாவங்களுக்காக, கொடுக்கப்படப்போகிற தண்டனையை, எந்தவித பலிகளோ, காணிக்கைகளோ மாற்றமுடியாது, என்று உங்கள் ஆண்டவராம் கடவுளாகிய நான் கூறுகிறேன்" என்றார்.

கடவுளின் வார்த்தைகளைக் கேட்ட சாமுவேல், இரவு தான்கண்ட காட்சியைப் பற்றி ஏலியிடம் கூறப் பயப்பட்டான். ஏலி, "சாமுவேலே, என் மகனே" என்று அழைத்து, "நேற்று இரவு கடவுள் உன்னிடம் என்ன சொன்னார்? அவர் சொன்ன எல்லா செய்திகளையும் நீ எனக்கு சொல்லாவிட்டால் கடவுள் உன்னைத் தண்டிப்பார்" என்றார். உடனே சாமுவேல், கடவுள் தன்னிடம் கூறிய அனைத்தையும் கூறிவிட்டான். அதைக்கேட்ட ஏலி, "அவரே ஆண்டவர். சரியானதையே அவர் செய்வார்" என்றார்.

சாமுவேல் வளர்ந்து பெரியவரானார். கடவுள் அவரோடிருந்தார். கடவுளுடைய பெயரால் சாமுவேல் கூறிய வார்த்தைகள் யாவும் உண்மையில் நிறைவேறின. எனவே நாடு முழுவதும் இருந்த இஸ்ரயேல் மக்கள், 'சாமுவேல் உண்மையிலேயே கடவுளுடைய ஒரு இறைவாக்கினர்தான்' என்று அறிந்தார்கள். சீலோவிலே கடவுள் திரும்பப் திரும்ப சாமுவேலுக்குக் காட்சியளித்து, அவரிடம் பேசினார். இஸ்ரயேல் மக்கள் சாமுவேலின் வார்த்தைகளுக்குச் செவி சாய்த்தார்கள்.

'ஒரு அரசன் வேண்டும்' என்று இஸ்ரயேலர் கோருதல்

1 சாமுவேல் 8 : 1 – 22

அக்காலக் கட்டத்தில் தங்களைச் சுற்றிலும் வாழ்ந்த இனமக்களுக்கு இருந்ததைப் போல், இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு அரசன் இல்லை. யோசுவா, கிதியோன் போன்ற தலைவர்கள் இஸ்ரயேலரைச் சிறிது காலம் வழி நடத்தினர். அவர்கள் இறந்த பின்னர் மக்கள் கடவுளிடம் தங்களுக்கு இன்னொரு தலைவன் வேண்டுமென்று கேட்டனர். அவர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாத போது தோல்வியைக் கண்டார்கள். தங்களுக்கு ஒரு அரசன் இருந்தால், இஸ்ரயேல் ஒரு வலிமை மிக்க இனமாவார்கள் என்று பலர் நம்பினர். ஆனால் அவர்கள் தங்களுடைய தேவைகள் அனைத்தையும் ஒரு அரசனால் நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியதிருந்தது.



சாமுவேல் வளர்ந்து முதிர்வயதானபோது, அவர் தனது புதல்வர்களை இஸ்ரயேலரின் தலைவர்களாக்கினார். ஆனால் அவர்கள் பொருள் ஈட்டுவதிலேயே பெரிதும் விருப்பம் கொண்டிருந்தனர்.

அப்பொழுது இஸ்ரயேலரின் தலைவர்கள் அனைவரும் ராமாவில் சாமுவேலைச் சந்தித்து, "இதோ உமக்கும் வயதாகிவிட்டது. உமது பிள்ளைகள் உம்முடைய வழிகளைப் பின்பற்றவில்லை. எனவே, மற்ற நாடுகளை ஆட்சி செய்ய அரசர்கள் இருப்பது போல் எங்களுக்கும் ஒரு அரசனை நியமித்துத் தாரும்" என்றார்கள். இதைக் கேட்ட சாமுவேல் வருத்தமுற்று, கடவுளிடம் வேண்டுதல் செய்தார். கடவுள் சாமுவேலிடம், "மக்கள் சொல்வதைக்கேள். அவர்கள் உன்னை வேண்டாம் என்று தள்ளிவிடவில்லை; கடவுளாகிய என்னையே வேண்டாம் என்று ஒதுக்குகிறார்கள். நான் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தேன். ஆனால் அவர்கள், என்னை மறந்து பிற தெய்வங்களை வழிபடுகிறார்கள். எனவே அவர்களுக்கு எச்சரிக்கை செய். ஒரு அரசன் மக்களை எப்படி நடத்துவான்? ஒரு அரசனால் மக்கள் அனுபவிக்கப்போகும் துன்பங்கள் என்னென்ன? என்பனவற்றை அவர்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்" என்றார்.

சாமுவேல் மக்களிடம், "அரசன் உங்கள் புதல்வர்களைத் தன்போர்வீரர்களாக ஆக்குவான். அவன் அவர்களைத் தன் தேர்களை ஒட்டவும், தன்னுடைய குதிரை வீரர்களாக இருக்கவும், அவனுடைய வயல்களை உழுது, பயிர்களை அறுவடை செய்யவும் கட்டளையிடுவான். அவனுடைய படைக்கலன்களையும், தேர்களுக்குத் தேவையான பாகங்களையும் தயாரிக்கச் சொல்லுவான். உங்களுடைய புதல்விகள் அரசன் மகிழும்படி நறுமண தைலங்களைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் அரசனுக்கு உணவு சமைக்கிறவர்களாகவும், அப்பம் சுடுகிறவர்களாகவும் வேலை செய்ய வேண்டும். அரசன் உங்களுடைய நல்ல வயல்களையும், திராட்சை, மற்றும் ஒலிவமரத் தோட்டங்களையும் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கும், வேலைக்காரர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பான். உங்களுடைய மந்தைகளில் பத்தில் ஒரு பங்கை அரசன் எடுத்துக் கொள்வான். நீங்கள் அனைவருமே அரசனின் அடிமைகள் ஆகிவிடுவீர்கள். பின்னர், நீங்கள் முறுமுறுத்துப் புகார் சொல்லும் காலம் வரும். அப்பொழுது கடவுள் உங்கள் முறையீட்டுக்குச் செவி சாய்க்கமாட்டார்."

இப்படி சாமுவேல் எடுத்துரைத்த வார்த்தைகளை மக்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள், "அப்படி இல்லை. எங்களுக்கு ஒரு அரசன் வேண்டும். நாங்களும், அரசன் ஆட்சி செய்யும் மற்ற நாடுகளைப் போல் இருக்க விரும்புகிறோம். அவர் எங்களைப் போரில் முன்னின்று வழி நடத்தட்டும்" என்று பிடிவாதமாகக் கூறினார்கள். மக்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்ட சாமுவேல், அவற்றை கடவுளிடம் தெரிவித்தார். கடவுள் அவரிடம், "மக்கள் விரும்புகிறபடியே செய். அவர்களுக்கு ஒரு அரசனைக்கொடு" என்றார். பின்னர் சாமுவேல் அங்குக் கூடியிருந்த எல்லா மக்களையும் அவரவர் இடங்களுக்குத் திரும்பிப் போகும்படிக் கூறினார்.

இஸ்ரயேலர் – முதல் அரசனைப் பெறுதல்

1 சாமுவேல் 10 : 17 – 26

சாமுவேல் இஸ்ரயேலரின் பன்னிரண்டு குலமக்கள் அனைவரையும், மிஸ்பாவில், கடவுள் முன்னிலையில் கூடிவரச் செய்தார். அங்கே அவர்களிடம், "நான் உங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அழைத்து வந்தேன். வழியில் உங்களை எதிர்த்த எல்லா இன மக்களிடமிருந்தும் காப்பாற்றினேன். நானே உங்கள் தேவனாகிய கடவுள். உங்களை எல்லா துன்பங்களில் இருந்தும் விடுவிப்பவர் நானே. ஆனால் இன்று நீங்கள் என்னை, "வேண்டாம்" என்கிறீர்கள். நல்லது. இப்பொழுது நீங்கள், உங்கள் குலங்களின்படியும், குலப்பிரிவுகளின்படியும் தனித்தனியாகப் பிரிந்து நில்லுங்கள் என்று இஸ்ரயேலரின் கடவுளாகிய ஆண்டவர் கூறுகிறார்" என்றார்.

அதன்படியே சாமுவேல் ஒவ்வொரு குலத்தாரையும் தனித்தனியாகப் பிரிந்து, முன்வரச் செய்தார். கடவுள் அவர்களில் பென்யமின் குலத்தைத் தேர்ந்தெடுத்தார். அப்பொழுது பென்யமின் குலத்தின் குடும்பத்தார் யாவரும் முன்னால் வரும்படி அழைக்கப்பட்டார்கள். அவர்களில் 'மாத்திரி' குடும்பம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாத்திரி குடும்பத்தில் கீசின் மகனாகிய 'சவுல்' தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மக்கள் சவுலைத் தேடினார்கள். அவனை எங்கும் காணவில்லை. அப்பொழுது மக்கள் கடவுளிடம், "சவுலைக் காணவில்லையே; அரசனாவதற்கு வேறு யாரையாவது குறித்திருக்கிறீரா? என்று கேட்டார்கள். அதற்குக் கடவுள், "அதோ! பொருள்

குவியலுக்குப் பின்னால் சவுல் ஒளிந்துக் கொண்டிருக்கிறான்'' என்றார்.

இதைக் கேட்டதும் மக்கள் ஓடிச் சென்று, தளவாட அறையில் சவுலைக் கண்டுபிடித்து அவனை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவன் மக்களுக்கு முன்பாக வந்தான். அங்கு நின்ற எல்லா மனிதர்களையும் விட அவன் ஒரு அடி கூடுதல் உயரம் உள்ளவனாயிருப்பதை கண்டு அனைவரும் வியந்தார்கள். சாமுவேல் மக்களைப் பார்த்து, "உங்களுக்கு அரசனாகும்படி கடவுள் தேர்ந்தெடுத்த மனிதன் இவனே! நம்மில் ஒருவனும் இவனைப்போல இல்லையே'' என்றார். உடனே எல்லா மக்களும், "எங்கள் அரசன் நீண்ட காலம் வாழ்வராக'' என்று வாழ்த்தினார்கள். சாமுவேல் ஒரு அரசனுடைய உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக் கூறினார். அவற்றை ஒரு சுருளேட்டில் எழுதி, ஒரு புனிதமான இடத்தில் அதை வைத்தார். பின்னர் மக்களை அவரவர் இடங்களுக்குப் போகும்படி அனுப்பிவிட்டார்.

ரூத்து – ஒரு முப்பாட்டி

இஸ்ரயேலருக்கு முதல் அரசனாக சவுலை நியமித்தது ஒரு பெருத்த ஏமாற்றமாயிருந்தது. இரண்டாவது அரசனான தாவீது, இஸ்ரயேலர் பெற்ற அரசர்களிலேயே மிகவும் புகழ் பெற்றவர் ஆனார். அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் இஸ்ரயேல்நாடு வளர்ந்து பரப்பளவில் பெருகியது. தாவீதின் வரலாறு அவருடைய முப்பாட்டியான ரூத்தின் வரலாற்றிலிருந்து தொடங்குகிறது.

ரூத்து வீட்டை விட்டுச் செல்லுதல்

ரூத்து 1 : 1 – 19

இஸ்ரயேலரில் எவருமே பெரும்பாலும் தங்களுடைய நாட்டை விட்டு வெளியேறுவது இல்லை. வேறு நாட்டைச் சேர்ந்த எவரையும் திருமணம் செய்வதும் அவர்களுக்கு வழக்கமில்லை.

ஒரு முறை நாட்டில் ஒரு கொடிய பஞ்சம் வந்தது. எனவே; இஸ்ரயேலுள்ள பெத்லகேமிலிருந்து, எலிமலேக்கு என்பவர் தம்முடைய குடும்பத்தாருடன் வெளியேறி, மோவாபு நாட்டுக்குச் சென்று, அங்கே தங்கினார். அவருடைய மனைவியின் பெயர் நகோமி. மகன்களின் பெயர்கள்; மக்லோன், கிலியோன். மோவாபு நாட்டில் அவர்கள் குடியிருக்கும்போது, எலிமலேக்கு இறந்து விட்டார். நகோமி, தன் மகன்களுடன் வாழ்ந்தார். அவர்கள் இருவரும் ஓர்பா, ரூத்து என்னும் இரண்டு மோவாபு நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். பத்து வருடங்களுக்குப் பிறகு, நகோமியின் மகன்கள் இருவரும் ஒருவர்பின் ஒருவராக இறந்துபோனார்கள். நகோமி ஆதரவற்றவளானாள்.

சிறிது காலம் சென்றபின், கடவுள் இஸ்ரயேல் நாட்டை ஆசீர்வதித்தார் என்று நகோமி கேள்விப்பட்டாள். மீண்டும் அங்கு பயிர்கள் விளைந்து, நாடு செழிப்புற்றது. அப்பொழுது நகோமி தன் இரண்டு மருமகள்களையும் அழைத்துக்கொண்டு, இஸ்ரயேல் நாட்டுக்குப் புறப்பட்டாள். போகும் வழியில் நகோமி தன் மருமகள்களைப் பார்த்து, "நீங்கள் உங்கள் தாய் வீடுகளுக்குச் சென்று,

அவர்களோடு இருங்கள். நீங்கள் உங்கள் கணவர்களிடத்தில் அன்பாயிருந்தது போலவே, கடவுள் உங்களிடத்திலும் அன்பாயிருப்பாராக. உங்கள் இருவருக்கும் கடவுள் புதிய கணவர்களைத் தந்து ஆசீர்வதிப்பாராக'' என்றாள். ஆனால் அவர்கள் இருவரும் அழுது கொண்டு, ''முடியாது நாங்கள் உம்முடன்தான் வருவோம்.'' என்றார்கள்.

நகோமி மறுபடியும், ''நீங்கள் என்னுடன் வந்து, காலம் முழுவதும் கைம்பெண்களாக ஏன் வாழவேண்டும்? கடவுள் எனக்கு எதிராக இருக்கிறார்'' என்றாள்.

மறுபடியும் அவர்கள் அழுதார்கள். பின்னர் மூத்தவளான ஓர்பா தன் மாமியாரை முத்தம் செய்துவிட்டு அவள் சொற்படித் தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றாள். ஆனால் ரூத்து மறுத்துவிட்டாள். எனவே நகோமி அவளிடம், ''உன் சகோதரி, திரும்பி தன் இனத்தாரிடமும், தன் தெய்வத்திடமும் போய் விட்டாளே; அதுபோல நீயும் அவளோடு சேர்ந்து உன்னுடைய வீட்டிற்குப் போய்விடு'' என்றாள். ஆனால் ரூத்து; தன் மாமியாரிடம், ''தயவு செய்து உம்மை விட்டுப் பிரிந்து போக இன்னொருமுறை சொல்ல வேண்டாம். நீர் போகுமிடமெல்லாம் நானும் உம்மோடு வருவேன். நீர் வசிக்கும் இடத்தில் நானும் வசிப்பேன். உம் மக்கள், என் மக்கள். உம் கடவுள், என் கடவுள். நான் இறப்பதற்கு முன் உம்மைவிட்டுப் பிரிந்து சென்றால் கடவுள் என்னைத் தண்டிப்பாராக'' என்றாள்.

நகோமி; ரூத்து சொன்னவற்றைக் கேட்டு, அவள் தன்னுடன் வரத் தீர்மானித்து விட்டாள் என்று அறிந்தாள். பின்னர் அதுபற்றி அவளிடம் எதுவும் பேசவில்லை.

அவர்கள் இருவரும் ஒன்றாக பெத்லகேம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்டபோது, பெத்லகேம் மக்கள் அனைவரும் வியப்பு அடைந்தார்கள். அவர்கள் திரும்பத் தம் நாட்டுக்கே வந்து, இனத்தாருடன் சேர்ந்து கொண்டது பற்றி மகிழ்ச்சியடைந்தார்கள்.

வயல்களில் வேலைசெய்தல்

ரூத்து 2 : 1 – 3, 14 – 16

நகோமியும் ரூத்தும் பெத்லகேமில் அகதிகளைப்போல், ஏதுமற்றவர்களாய் வந்து சேர்ந்தார்கள். அறுவடை காலங்களில் வயல்களில் சிந்தும் கதிர்களைப் பொறுக்கிக் கொள்ள, ஏழை மக்களை அனுமதிப்பது அக்கால வழக்கமாக இருந்தது.

அங்கே "போவாசு" என்னும் பேர் கொண்ட ஒரு புகழ் பெற்ற செல்வந்தர் இருந்தார். அவர் இறந்துபோன நகோமியின் கணவர் எலிமலேக்கின் உறவினர். ஒரு நாள் ரூத்து நகோமியிடம், "இது அறுவடை காலம். நான் வயல்களுக்குச் சென்று அங்கே சிந்தும் கதிர்களைப் பொறுக்கி சேர்த்துக் கொண்டு வருகிறேன். என்னிடம் இரக்கம் காட்டக் கூடிய நல்ல மனிதர்கள் யாராவது இருப்பார்கள் என்று நம்புகிறேன்" என்றாள். நகோமி ரூத்தை "போய்வா மகளே" என்றாள்.

எனவே ரூத்து வயலுக்குச் சென்றாள். அவள் சென்ற வயல் போவாசுடையது. அங்கே கதிர் அறுக்கிறவர்களின் பின்னால் சென்று, சிதறும் கதிர்களைப் பொறுக்கினாள். உணவு வேளையில் போவாசு ரூத்தை அழைத்து, "எங்களோடு சாப்பிடவா" என்றார். ரூத்து வந்து உட்கார்ந்தாள். போவாசு கொஞ்சம் உணவை அவளுக்குத் தந்தார். அவள் வயிறாரச் சாப்பிட்டு, மீதியை வைத்துக்கொண்டாள். மறுபடியும் அறுவடை ஆரம்பமானபோது ரூத்து சென்று கதிர்களைச் சேகரித்தாள். போவாசு தன் வேலைக்காரர்களிடம், "நீங்கள் கதிர்களைக் கொஞ்சம் சிதற விடுங்கள். அவள் பொறுக்கிக் கொள்ளட்டும்" என்றார்.

ரூத்து தான் சேகரித்ததையும், மீதம் வைத்திருந்த உணவையும் தன் மாமியாரிடம் கொண்டுவந்து கொடுத்தாள். நகோமி ரூத்திடம், "உன்னைக் கவனித்த அந்த மனிதனுக்கு ஆண்டவர் ஆசி வழங்குவாராக. இன்று யாருடைய வயலில் கதிர் பொறுக்கினாய்?" என்று கேட்டார். அதற்கு ரூத்து அந்த வயலின் சொந்தக்காரர் பெயர் போவாசு என்றாள்.

போவாசைத் திருமணம் செய்தல்

ரூத்து 4:13 - 22

இஸ்ரயேலை ஆண்ட அரசர்களுள் பெரும் புகழும் பெற்ற சிறந்த அரசர் கலப்பினப் பெற்றோர் வழியில் பிறந்தவர். இவ்வுண்மை ரூத்தின் வரலாற்றிலிருந்து தெரியவருகிறது. இஸ்ரயேலர் சிறப்புப் பெற்ற மக்களாயிருந்த போதிலும், கடவுள் பிற இன மக்களையும் தன் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்துவார் என்று இந்நிகழ்ச்சி காட்டுகிறது.

போவாசு ரூத்தை திருமணம் செய்து, வீட்டுக்கு அழைத்துச் சென்றார். கடவுள் அவளை ஆசீர்வதித்தார். அவள் ஒரு ஆண்மகவைப் பெற்றாள். நகரத்துப் பெண்கள் நகோமியிடம், "கடவுளுக்கு நன்றி செலுத்துவாயாக. உன்னை உன் முதிர்வயதில் கவனித்துக்கொள்ள அவர் உனக்கு ஒரு பேரப்பிள்ளையைத் தந்துள்ளார். உன் பேரன் இஸ்ரயேலிலே புகழ் பெற்றவனாயிருப்பானாக! உன்னுடைய மருமகள் உன்னை நேசிக்கிறாள். உனக்கு ஏழு புதல்வர்கள் இருந்தாலும் அவர்கள் இவளுக்கு இணையாகமாட்டார்கள். இப்பொழுது அவள் உனக்கு ஒரு பேரனைத் தந்திருக்கிறாள். உன்னுடைய முதிர் வயதில் அவன் உன்னைப் பாதுகாப்பான்" என்றார்கள். நகோமி தன் பேரனைக் கையில் எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். அவனைக் கண்மணிபோல காத்துவந்தாள்.

நகரத்துப் பெண்கள் அவனுக்கு "ஓபேது" என்று பேரிட்டார்கள். எல்லோரிடமும், "நகோமிக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான்" என்றார்கள். இந்த ஓபேது ஈசாயின் தந்தை. அந்த ஈசாயே இஸ்ரயேலின் அரசரான தாவீதின் தந்தை.

பயமற்ற இளைஞன் – தாவீது

ஆடு மேய்க்கும் சிறுவனுக்கு அரசனாக அபிசேகம்

1 சாமுவேல் 16 : 1 – 13

சவுல் அரசர் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை. எனவே சாமுவேலிடம் கடவுள் சவுலுக்குப் பதிலாக வேறு ஒருவரை அரசராக அபிசேகம் செய்யும்படிக் கட்டளையிட்டார்.

கடவுள் சாமுவேலிடம், "நீ எவ்வளவு காலம் சவுலைக் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாய்? அவன் இன்னும் தொடர்ந்து இஸ்ரயேலின் அரசனாக இருப்பதை நான் விரும்பவில்லை. ஆகவே, சவுலின் இடத்தில் பெத்லகேம் ஊரானான ஈசாயின் குமாரர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். கொஞ்சம் ஒலிவ எண்ணெயைக் கையில் எடுத்துச் சென்று, அவனை அரசனாக திருப்பொழிவு செய்" என்றார்.

சாமுவேல் கடவுளிடம், "ஆண்டவரே, அதை நான் எப்படிச் செய்ய முடியும்? சவுல் கேள்விப்பட்டால் என்னைக் கொன்று போடுவானே!" என்றார். அதற்குக் கடவுள், "நீ ஒரு கன்றுக் குட்டியைத் தெரிந்துகொள். கடவுளுக்குப் பலி செலுத்தப் போவதாக எல்லோரிடமும் தெரிவித்துவிடு. அந்தப் பலி நிகழ்ச்சிக்கு ஈசாயை அழைத்துவா. அங்கே நீ செய்ய வேண்டியதையும், அரசனாக திருப்பொழிவு செய்யப்பட வேண்டியவனையும் உனக்குக் காட்டுவேன்" என்றார்.

எனவே சாமுவேல், பெத்லகேமுக்குச் சென்றார். கடவுளின் ஊழியராகிய சாமுவேல் அந்த நகரத்திற்கு வந்ததும், அங்குள்ள மூப்பர்கள் அனைவரும் பயப்பட்டார்கள். அவர்கள் அவரிடம், "உம்முடைய வருகையின் நோக்கம் சண்டையா? சமாதானமா?" என்று விசாரித்தார்கள். சாமுவேல் அவர்களிடம், "சமாதானம்தான்; இங்கே நான் கடவுளுக்கு ஒரு பலி செலுத்த வந்திருக்கிறேன்; நீங்கள் உங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு



பலியிடும் இடத்துக்கு வந்து சேருங்கள்'' என்றார். அவர் குறிப்பாக ஈசாயையும், அவர் புதல்வர்களையும் தவறாமல் வரும்படி அழைத்தார்.

ஈசாயும், அவர் புதல்வர்களும் வந்தபோது அவர்களில் முதலாவதாக 'எலியாபு' வந்தான். அவனைக் கண்ட சாமுவேல், "அரசனாக இருப்பதற்குக் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவன் இவனாயிருப்பானோ?'' என்று நினைத்தார். ஆனால் கடவுள்; சாமுவேலிடம், "இவன் உயரமாகவும், அழகுள்ளவனாகவும் இருப்பதனால் நீ அப்படி நினைக்கிறாய். எனக்கு இவன் தேவையில்லை. ஏனென்றால் மனிதர் நினைப்பதைப்போன்று நான் மதிப்பிடுவதில்லை. மனிதன் வெளித் தோற்றத்தைப் பார்க்கிறான். ஆனால் நானோ உள்ளத்தை பார்க்கிறேன்'' என்றார்.

பின்னர் ஈசாய், தன்னுடைய அடுத்த மகன் 'அபினதா'வை அழைத்து வந்தார். அவனைப் பார்த்த சாமுவேல், "கடவுள் இவனையும் தேர்ந்தெடுக்கவில்லை'' என்றார். அடுத்து ஈசாய், 'சம்மா' என்ற மகனை அழைத்தார். சாமுவேல் "அவனும் தேர்ந்தெடுக்கப் படவில்லை'' என்று கூறினார். இவ்விதமாக ஈசாய், தன்னுடைய புதல்வர்களில் ஏழுபேரை சாமுவேலுக்கு முன்பாக அழைத்து வந்தார். கடவுள் அவர்களில் எவரையுமே தெரிந்து கொள்ளவில்லை'' என்று சாமுவேல் கூறினார். பின்பு அவர் ஈசாயிடம், "உனக்கு வேறு புதல்வர்கள் உண்டா?'' என்று கேட்டார்.

ஈசாய், "எல்லோருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான். அவன் இப்போது வெளியிடத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்'' என்றார்.

அதைக் கேட்டதும் சாமுவேல் "உடனே அவனை இங்கே அழைத்து வரச்சொல். அவன் வந்து சேரும்வரை இங்கே பலி செலுத்தப் படுவதில்லை'' என்றார். ஈசாய், தாவீதை அழைத்துவர ஆள் அனுப்பினார். தாவீது விரைந்து வந்து சேர்ந்தான். அவன் உடல்நலமும், அழகும் உள்ள இளைஞன். கடவுள் சாமுவேலிடம், "நான் தெரிந்து கொண்டவன் இவனே! இவனை அரசனாக திருப்பொழிவு செய்'' என்றார். சாமுவேல் ஒலிவ எண்ணெயை எடுத்து, தாவீதின் தலையில் ஊற்றி, அவனது சகோதரர் முன்னிலையில் அரசனாக திருப்பொழிவு செய்தார். அந்நேரமே கடவுளின் ஆவி தாவீதின் மேல் இறங்கியது. அன்று முதல் கடவுளின் ஆவி தாவீதோடு இருந்தது. சாமுவேல் ராமாவுக்குத் திரும்பிச் சென்றார்.

இஸ்ரயேலருக்கு கோலியாத்தின் சவால்

1 சாமுவேல் 17 : 2 - 11

பெலிஸ்தியரை எதிர்த்துப் போரிட சவுலும், இஸ்ரயேலரின் படைகளும் ஒன்று கூடினார்கள். பெலிஸ்தியரின் படை ஒரு மலையின் மேல் நின்றது. இஸ்ரயேலரின் படை அதன் எதிர்புறம் உள்ள மலையின் மேல் நின்றது. இரண்டு மலைகளுக்கும் இடையில் ஒரு பள்ளத்தாக்கு இருந்தது.

பெலிஸ்தியப்படையில் "கோலியாத்து'' என்னும் ஒரு அரக்கன் போர்வீரனாக இருந்தான். அவன் படை முகாமிலிருந்து புறப்பட்டு, இஸ்ரயேலருக்குச் சவால் விடுவதற்கு முன்னேறி வந்தான். அவன் சுமார் மூன்று மீட்டர் அளவு உயரமுடையவன். அவன் வெண்கலத்தால் ஆன தலைக்கவசத்தையும், மார்புக் கவசத்தையும், கால்களுக்குக் கவசத்தையும் அணிந்திருந்தான். அவனுடைய ஈட்டி கனமானதும், கூர்மையானதும் ஆகும். அவனுடைய கேடயத்தை இன்னொரு வீரன் அவனுக்கு முன்பாகச் சுமந்து வந்தான்.

கோலியாத்து முன்னே வந்து நின்று கொண்டு உரத்தக்குரலில், "சவுலின் அடிமைகளே! அங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்? என்னுடன் சண்டையிட உங்களில் ஒருவனைத் தெரிந்தெடுங்கள். அவன் வெற்றி பெற்று என்னைக் கொன்று விட்டால், நாங்கள் உங்கள் அடிமைகளாவோம். நான் வெற்றி பெற்று அவனைக் கொன்று விட்டால், நீங்கள் எங்களுக்கு அடிமைகளாக வேண்டும். என்னோடு சண்டையிட யாரும் துணிவுடன் வரலாம்'' என்றான். அவனது வார்த்தைகளைக் கேட்ட சவுலும் அவனுடைய படைவீரர்களும் பயந்து நடுங்கினார்கள்.

தாவீதின் துணிவு

1 சாமுவேல் 17 : 12 – 40

தாவீதின் உடன் பிறந்த மூத்தவர்கள் மூவர் சவுலின் படையில் இஸ்ரயேலருக்காக யுத்ததம் செய்யச் சென்றிருந்தார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலுமாக நாற்பது நாட்கள் கோலியாத்து இஸ்ரயேலருக்கு அறை கூவல் விட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் விடியற் காலையில் எழுந்து தாவீது, தன்னுடைய ஆட்டு மந்தைகளை இன்னொருவரிடம் ஒப்படைத்தான். உணவுப் பண்டங்களை எடுத்துக்கொண்டு தன் சகோதரர்களைச் சந்திக்கப் போர்க் களத்திற்குச் சென்றான். போர் முகாமுக்கு அருகில் தாவீது வந்தநேரத்தில், போர்க்குரல் ஒலித்தது. பெலிஸ்தியரின் படையும், இஸ்ரயேலரின் படையும் ஒருவரையொருவர் எதிர்த்து, அணிவகுத்து நின்றன. தாவீது உணவுப் பொருட்களை ஒரு வீரனிடம் ஒப்படைத்துவிட்டுத் தன் அண்ணன்களைக் கண்டு நலம் விசாரிக்க உள்ளே ஓடினான். தாவீது அவர்களை நலம் விசாரித்துக் கொண்டிருக்கும் வேளையில், வழக்கம் போல, கோலியாத்து முன்னேறி வந்தான். இஸ்ரயேலருக்குச் சவால் விட்டான். அவர்கள் கோலியாத்தைக் கண்டதும் பயந்து ஓடினர். "கோலியாத்தைப் பாருங்கள்! அவன் விடும் சவாலைக் கேளுங்கள். அவனைக் கொல்பவர்களுக்கு ஒரு நல்ல பரிசு தருவதாக சவுல் அரசர் வாக்குறுதி தந்திருக்கிறார். அரசர் அந்த வெற்றி வீரனுக்குத் தன் மகளையும் திருமணம் செய்து கொடுப்பாராம். அவனுடைய குடும்பத்தார் அரசுக்கு வரிகள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை" என்று வீரர்கள் பேசிக் கொண்டார்கள்.

தாவீது, தன் அருகில் இருந்தவர்களை நோக்கி, "கடவுளை அறியாத பெலிஸ்தியனான இந்தக் கோலியாத்தைக் கொல்பவனுக்கு என்ன கிடைக்கும்? என்றும், வாழும் கடவுளின் படையைக் கேவலமாகப் பேசி ஏளனம் செய்வதற்கு இவன் யார்?" என்றும் கேட்டான். தாவீதின் அண்ணன் எலியாபு; தன் தம்பி, வீரர்களுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். தாவீது மீது கோபங்கொண்டு, "நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உன் ஆட்டு மந்தைகளை அங்கு கவனிப்பது யார்? இங்கே சண்டையை வேடிக்கை பார்க்கவா வந்தாய்?" என்று கேட்டார்.

அதற்குத் தாவீது, "இப்போது நான் என்ன செய்து விட்டேன்? ஒரு கேள்வி கூடக் கேட்கக் கூடாதா?" என்று சொன்னான்.

வீரர்களில் சிலர், அரசரிடம் சென்று தாவீது கூறிய வார்த்தைகளைச் சொன்னார்கள். சவுல் தாவீதைத் தன்னிடம் வரவழைத்தார். தாவீது சவுலிடம் துணிவுடன், "மேன்மை தங்கிய அரசரே! இந்தப் பெலிஸ்தியனுடன் சண்டையிட ஒருவரும் பயப்பட வேண்டாம். நான் அவனுடன் போரிடுகிறேன்" என்றான்.

சவுல், "இல்லை. நீ எப்படிப் போரிட முடியும்? நீ ஒரு சிறுவன். அவன் தன் காலம் முழுவதும் போர் வீரனாக இருந்திருக்கிறான்" என்றார்.

அதற்குத் தாவீது, அரசரே! நான் என்னுடைய தந்தையின் ஆடுகளை மேய்த்து வருகிறேன். எந்த நேரத்திலும் சிங்கமோ, கரடியோ வந்து என் ஆடுகளைப் பிடித்துச் செல்லும். அதைக் கண்டு, நான் அவற்றைத் துரத்திச் சென்று, என் ஆடுகளைக் காப்பாற்றிக் கொண்டு வந்துவிடுவேன். அவ்வேளைகளில் அவை என் மீது பாய்ந்தால், அதன் கழுத்தைப் பிடித்துத் தரையில் அடித்துக் கொன்றுவிடுவேன். அப்படி அந்தக் கொடிய மிருகங்களுக்குச் செய்ததை, இந்த கோலியாத்துக்கும் செய்வேன். என்றும் வாழும் கடவுளின் படையை எள்ளி நகையாடுகிறானே! சிங்கங்களிடமிருந்தும், கரடிகளிடமிருந்தும் என்னைக் காப்பாற்றிய கடவுள், இந்த பெலிஸ்தியனிடம் இருந்தும் என்னைக் காப்பாற்றுவார்" என்றான்.

இதைக் கேட்டதும் சவுல், "அப்படியானால்

நல்லது. நீ போ! ஆண்டவர் உன்னோடு இருப்பாராக!'' என்றார். சவுல், தன்னுடைய படைக்கலன்களைத் தாவீதுக்குக் கொடுத்தார். அவரது தலையில் ஒரு வெண்கலத் தலைக்கவசத்தை வைத்தார். தாவீது, சவுலின் வாளை இடுப்பில் கட்டிக் கொண்டு நடந்து பார்த்தான். நடக்கமுடியவில்லை. எனவே "இவைகளையெல்லாம் எனக்கு அணிந்து பழக்கமில்லை'' என்று கூறிக்கொண்டு, அனைத்தையும் கழற்றிப் போட்டான். பின்னர் அவன் தன்னுடைய மேய்ப்பனின் கோலைக் கையில் எடுத்தான். ஐந்து கூழாங்கற்களை எடுத்துத் தன்னுடைய பையில் போட்டுக் கொண்டான். தன்னுடைய கவணைக் கையில் எடுத்துக்கொண்டு கோலியாத்தைச் சந்திக்கச் சென்றான்.

கோலியாத்துடன் சண்டை

1 சாமுவேல் 17 : 41 – 54

கோலியாத்து தாவீதுக்கு நேராக நடந்து வந்தான். அவனுடைய கேடயத்தைத் தாங்கும் வீரன் அவன் முன்னால் வந்து கொண்டிருந்தான். அருகில் வந்த போது அவன், தாவீது ஒரு இளைஞன் என்று கண்டான். அவன் தாவீதிடம், "உன் கையில் வைத்திருக்கும் கோல் எதற்கு? கோலினால் அடிப்பதற்கு நான் என்ன நாயா?'' என்று கேட்டான். அவன் தாவீதை இன்னும் இகழ்ந்துப் பேசிக் கொண்டு, "நீ இங்கே வா. நான் உன்னைக் கொன்று, உன்னுடைய உடலை வானத்துப் பறவைகளுக்கும், காட்டு விலங்குகளுக்கும் இரையாகக் கொடுப்பேன்'' என்றான்.

அதற்குத் தாவீது, "நீ உன்னுடைய வாள், ஈட்டி, கேடயம் இவற்றோடு என்னுடன் போரிட வருகிறாய். ஆனால் நான், எல்லாம் வல்ல கடவுளின் துணையுடன் உன்னோடு போரிட வருகிறேன். நீ

அவரைப் பழித்தாயே! அதே ஆண்டவர் இன்று உன்னை என் கையில் ஒப்புவிப்பார். நான் உன்னைத் தோற்கடித்து, உன் தலையை வெட்டுவேன். உன்னுடைய வீரர்களின் உடல்களைத் துண்டாக்கி, பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் இரையாகக் கொடுப்பேன். அப்பொழுது இந்த உலகம், 'இஸ்ரயேலருக்கு ஒரு வல்லமையுள்ள கடவுள் உண்டு' என்பதை அறிந்து கொள்ளும். அவருக்குத் தன்னுடைய மக்களை மீட்க, வாளும், ஈட்டியும் தேவை இல்லை என்று அனைவரும் அறிந்து கொள்வார்கள். அவரே எப்பொழுதும் போரில் வெற்றி கொள்ளுவார். அவர் உன்னுடைய படையை எங்களுக்காகத் தோற்கடிப்பார்" என்றான்.

கோலியாத்து மறுபடியும் தாவீதுக்கு நேராக நடந்து வந்தான். தாவீது அவனுக்கு எதிர் கொண்டு ஓடினான். தன்னுடைய பையிலிருந்து ஒரு கல்லை எடுத்துக் கவணில் வைத்துச் சுழற்றி, வேகமாக கோலியாத்தின் நெற்றியை நோக்கி வீசினான். அந்தக்கல் நேராகச் சென்று கோலியாத்தின் நெற்றியைத் தாக்கி ஆழமாகப் பதிந்தது. அவன் அடியற்ற மரம்போல் முகம் குப்புற விழுந்தான். தாவீது ஓடிச் சென்று கோலியாத்தின் உடல் மீது ஏறி நின்றான். கோலியாத்தின் வாளையே உருவி அவன் தலையை வெட்டினான்.

பெலிஸ்தியர்கள் தங்கள் வீரன் கொல்லப் பட்டதைக் கண்டதும் பயந்து ஓடினார்கள். இஸ்ரயேலர் அவர்களைத் துரத்தியடித்தபின், திரும்பி வந்து பெலிஸ்தியரின் முகாம்களைக் கொள்ளையடித்தார்கள்.

தாவீது, கோலியாத்தின் தலையைக் கையில் பிடித்துக்கொண்டு எருசலேமுக்குச் சென்றான். தன்னுடைய கூடாரத்தில் கோலியாத்தின் ஆயுதங்களைப் பத்திரப்படுத்தினான்.

சவுல் அரசன் முன் தாவீது

1 சாமுவேல் 17 : 57 – 18 : 5

கோலியாத்தைக் கொன்றபின் படைத் தலைவனான அப்னேர் தாவீதை சவுல் அரசரிடம் அழைத்துச் சென்றான். தாவீது இன்னமும் தன் கையில் கோலியாத்தின் தலையைப் பிடித்திருந்தான். சவுல் அவனிடம், "இளைஞனே, நீ யாருடைய மகன்?" என்று கேட்டார். தாவீது, "பெத்லகேமில் வாழும் உம்முடைய ஊழியரான ஈசாயின் மகன் என்றான்.

சவுலின் மகன் யோனத்தான், தாவீதை மிகவும் அதிகமாய் நேசித்தான். தன் அன்புக்கு அடையாளமாகத் தான் அணிந்திருந்த மேலாடையை எடுத்து தாவீதுக்குப் போர்த்தினான். தன் வாளையும், வில்லையும், கச்சையையும்கூட தாவீதுக்குக் கழற்றிக் கொடுத்தான். அவர்கள் என்றென்றும் இணை பிரியாத நண்பர்களாய் இருக்க முடிவு செய்தனர்.

சவுல், தாவீதைத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார். பெத்லகேமுக்குத் திரும்பிப்போக விடவில்லை. சவுல் அனுப்பின எல்லாப் போர்களிலும் தாவீது வெற்றி பெற்று வந்தான். எனவே சவுல், தாவீதைத் தன் படையில் ஒரு அதிகாரியாக நியமித்தார். இது சவுலின் மற்ற அதிகாரிகளுக்கும் பிரியமாயிருந்தது.

தாவீதின் மேல் சவுலின் பொறாமை

1 சாமுவேல் 18 : 6 – 16

தாவீது; கோலியாத்தைக் கொன்று பெலிஸ்தியரை வென்றபின், படை வீரர்களோடு திரும்பிக் கொண்டிருந்தான். இஸ்ரயேலரின் எல்லா நகரங்களில் இருந்தும் பெண்கள் சவுல் அரசரைப் பார்க்க, மகிழ்ச்சியுடன் ஆடல் பாடல்களோடும், இசைக் கருவிகளோடும் திரளாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள்

வெற்றி பெற்றவர்களை ஒரு பாடல் பாடி வாழ்த்தினார்கள்.

"சவுல் கொன்றது ஆயிரம்!
தாவீது கொன்றது பதினாயிரம்!"
என்று பாடினார்கள்.



இதைக் கேட்டதும் சவுல் மிகவும் கோபங் கொண்டார்.

இப்படிப்பாடியது சவுலுக்குப் பிடிக்க வில்லை. உடனே சவுல், "இப்பொழுது மக்கள் தாவீதை, என்னைவிட பெருமையாகப் பேசுகிறார்கள். அடுத்து அவனை அரசனாக ஆக்கவும் செய்வார்கள்" என்றார். எனவே தாவீதின்மேல் பொறாமை கொண்டு, அந்த நாள் முதல் அவனைக் கண்காணித்து வந்தார்.

மறுநாள்; ஒரு தீய ஆவி திடீரென்று சவுலின் மேல் இறங்கியது. அவர் தன் வீட்டில் ஒரு பைத்தியக்காரரைப் போல் நடந்து கொண்டார். வழக்கம் போல் ஒரு நாள் தாவீது, சவுலின் முன்னால் சற்று தூரத்தில் அமர்ந்து யாழ் மீட்டிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று சவுல் தன் கையிலிருந்த ஈட்டியால் தாவீதை சுவரோடு குத்திவிட எண்ணி சவுல் இருமுறை ஈட்டியை எறிந்தார். ஒவ்வொரு முறையும் தாவீது விலகி தப்பித்துக் கொண்டான்.

சவுல் தன்னிடமிருந்து கடவுள் விலகிப்போனார் என்று உணர்ந்தார். தாவீதோடு கடவுள் இருக்கிறார் என்று அறிந்து, அவனுக்குப் பயப்பட்டார். எனவே தாவீதை தன்னை விட்டு விலகிப் போகச் செய்து, அவனை ஆயிரம் பேருக்குத் தலைவனாக நியமித்தார்.

தாவீது தன் வீரர்களைப் போருக்கு அழைத்துச் சென்று எப்பொழுதும் வெற்றியுடன் திரும்புவார். கடவுள் தாவீதோடே இருந்தார். தாவீதின் வெற்றிகளைக் கண்டு, சவுல் இன்னும் அதிகமாகத் தாவீதுக்குப் பயப்பட்டார். ஆனால் எல்லா மக்களும் தாவீதை நேசித்தார்கள். ஏனெனில் அவர் தகுதியும், திறமையும் உள்ள ஒரு தலைவராயிருந்தார்.

யோனத்தான் தாவீதுக்கு உதவி செய்தல்

1 சாமுவேல் 20 : 1 - 23

சவுலின் மகனாகிய யோனத்தான் தன் தந்தைக்குப் பின்னர் அரசன் ஆகலாம் என்று எதிர்பார்த்திருக்கலாம். சவுல் தாவீதிடம் அதிகமாகப் பொறாமை கொண்டிருந்தார். ஆனால், அதே நேரத்தில் தாவீதும் யோனத்தானும் மிகவும் நெருங்கிய நண்பர்களாயிருந்தது வியப்புக்குரியதே!

தாவீது சவுலிடமிருந்து தப்பியோடி யோனத்தானிடம் வந்தார். அவனிடம், "உன்னுடைய தந்தை என்னைக் கொல்ல முயற்சித்துக் கொண்டிருக்கிறார். நான் என்ன தவறு செய்தேன்?!" என்று கேட்டார்.

யோனத்தான், "இப்போது கடவுள் உன்னைச் சாகவிடமாட்டார். என் தந்தை, தான் செய்யும் எல்லாச் செயல்களையும் என்னிடம் அறிவிப்பார். உன்னைக் கொலை செய்யும் திட்டம் எதுவும் அவரிடம் இல்லை. அப்படி இருந்தால் என்னிடம் மறைக்க மாட்டார்" என்றான்.

தாவீது, "நீ என்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறாய் என்பதை, உன் தந்தை நன்கு

அறிவார். நீ மனம் வருந்துவாய் என்று நினைத்து உன்னிடம் தன் திட்டங்களை அறிவிக்காமல் மறைத்து விடுகிறார். ஆனால் சாவுக்கும் எனக்கும் ஒரு அடி தூரம் மட்டுமே இடைவெளி உள்ளது" என்றார்.

அதற்கு யோனத்தான், "உனக்குத் தேவையான அனைத்தையும் நான் செய்யத் தயார்" என்றான்.

அப்பொழுது தாவீது, "நாளை அமாவாசைத் திருவிழா. நான் அரசருடன் விருந்தில் பந்தியிருக்க வேண்டும். நீ சம்மதித்தால் நான் இங்கிருந்துபோய் வயல்வெளியில் ஒளிந்து கொள்ளுகிறேன். நான் ஏன் விருந்துக்கு வரவில்லை என்று உன் தந்தை விசாரிப்பார். அப்பொழுது நான் உன்னிடம் அனுமதி பெற்று பெத்லகேமுக்குச் சென்றிருப்பதாகக் கூறு. அவர் அதை ஏற்றுக் கொண்டால் நான் பிழைத்தேன். அவர் கோபமடைந்தால், என்னைக் கொல்ல விரும்புகிறார் என்று நீ அறிந்து கொள்வாய். நீ எனக்குச் செய்து கொடுத்திருக்கும் வாக்குறுதியை மறந்து விடாதே. நான் குற்றம் செய்திருந்தால் நீயே என்னைக் கொன்றுபோடு. உன் தந்தை ஏன் என்னைக் கொல்ல வேண்டும்?" என்றார்.

இதைக் கேட்ட யோனத்தான், "நீ ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறாய்? உன்னைக் கொல்ல என் தந்தை வழி தேடுகிறார் என்று நான் அறிந்திருந்தால் உன்னிடம் சொல்ல மாட்டேனா?" என்றான்.

பின்னர் தாவீது, "உன் தந்தை என் மீது கோபமாயிருக்கிறாரா, இல்லையா என்பதை நான் அறிந்து கொள்வது எப்படி?" என்று கேட்டார்.

அதற்கு யோனத்தான், "நாம் இருவரும் வயல்வெளி பக்கம் தனியாகச் சென்று அங்கே பேசிக் கொள்வோம் வா" என்றான். அதன் படியே இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். யோனத்தான் தாவீதினிடத்தில், "நாம் இன்று பேசுகிற அனைத்துக்கும் இஸ்ரயேலரின் ஆண்டவராகியக் கடவுள் இங்கே சாட்சியாக இருக்கட்டும். நாளையும், மறுநாளும், இதே நேரத்தில் என் தந்தையிடம் பேசிப்பார்ப்பேன். அவர் உன்னைப் பற்றி நல்ல எண்ணத்துடன் இருந்தால் உனக்குச் செய்தி அனுப்புவேன். அவர் உன்னைக் கொல்லத் திட்டமிட்டால், அச்செய்தியையும் தகுந்தபடி உனக்கு அறிவிப்பேன். நீ பாதுகாப்பாகத் தப்பிச் செல்லும்படி உதவி செய்வேன். என்னுடைய தந்தையோடு இருந்தது போலவே கடவுள் என்றேன்றும் உன்னோடும் இருப்பாராக. நான் உயிரரோடு இருந்தால், நம் இருவரின் நட்பும் நிலைத்திருக்கும். நான் ஒரு வேளை இறந்து விட்டால் நீ என்னுடைய குடும்பத்தாரிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். கடவுள் உனக்கு உதவி செய்து, உன் எதிரிகள் எல்லோரையும் அழிக்கும்போது, நீ என்னை மறந்து விடாதே. நம்முடைய உறவையும், வாக்குறுதியையும் நினைவு கூர்ந்து என்னுடைய குடும்பத்தின் மேல் இரக்கம் காட்ட வேண்டும்." என்றான்.

யோனத்தான்; தாவீதை தன் உயிருக்கு உயிராய் நேசித்தான். மறுபடியும் ஒரு முறை, தம் உயிருள்ள மட்டும் யோனத்தான் மீது அன்பு செலுத்துவதாக தாவீதிடம் வாக்குறுதி செய்யச் சொன்னான். யோனத்தான் தாவீதிடம், "நாளை நடைபெற இருக்கும் அமாவாசை விருந்தில் நீ கலந்து கொள்ளவில்லையானால், அதை எல்லோரும் கவனிப்பார்கள். நாளை மறுநாளும் நீ வரவில்லை என்றால் இன்னும் அதிகமாகக் கவனிக்கப்படுவாய். எனவே நீ கவனமாக ஒடிச்சென்று கற்குவியல்களின் பின்னால் ஒளிந்துகொள். நான் வந்து நின்று மூன்று அம்புகளை அந்தப்பக்கமாக எய்வேன். பின் என்னுடைய வேலைக்காரனைப் பார்த்து, "அந்த அம்புகளைத் தேடி எடுத்து வா" என்று சொல்லியனுப்புவேன். நான் அவனிடம் "அம்புகள் உனக்கு இந்தப்பக்கத்தில் கிடக்கின்றன, எடுத்து வா" என்று சொன்னால் உனக்கு ஆபத்தில்லை என்று பொருள். நீ பயமின்றி வெளியே வரலாம். ஆனால் நான் அவனிடம், "அம்புகள் உனக்கு அந்தப் பக்கத்தில் கிடக்கின்றன" என்று சொன்னால், கடவுள் உன்னைத் தொலைவான இடத்துக்கு அனுப்புகிறார் என்று அறிந்து, நீ உடனே ஒடி விடு. "நாம் இருவரும் சேர்ந்து செய்துள்ள வாக்குறுதியை இறுதிவரை காத்துக் கொள்ள கடவுள் உதவி செய்வாராக" என்றான்.

தப்பிச் செல்ல மறைமுக அடையாளம்

1 சாமுவேல் 20 : 24 - 41

முன் தீர்மானித்தபடியே, தாவீது இரண்டு நாள் அமாவாசை விருந்தில் கலந்து கொள்ளவில்லை. தாவீது அமரும் இடம் காலியாக இருந்தது.

இதைக்கண்ட சவுல் யோனத்தானிடம், "நேற்றும், இன்றும் தாவீது ஏன் இந்த விருந்துக்கு வரவில்லை?" என்று கேட்டார்.

யோனத்தான், "தாவீது, தன் அண்ணன் அழைத்ததன்பேரில் பெத்லகேமுக்குச் சென்றிருக்கிறான். அவனுடைய குடும்பத்தார் ஆண்டுதோறும் நடத்தும் பலிவிழாவில் கலந்து கொள்ளச் சென்றிருக்கிறான்" என்றான் இதைக் கேட்டும் சவுலுக்கு மிகுந்த கோபம் வந்தது. யோனத்தானிடம், "ஒன்றுக்கும் உதவாதவனே! நீ தாவீதுக்கு ஆதரவளிப்பதை நான் அறிவேன். அவன் உயிரோடிருக்கும் நாள் வரையில் நீ இந்த நாட்டுக்கு அரசனாக முடியாது. இப்பொழுதே அவனை இங்கே அழைத்துக் கொண்டுவா. அவன் சாக வேண்டியவன்" என்றார்.

அதற்கு யோனத்தான், "அவன் ஏன் சாக வேண்டும்? அவன் செய்த குற்றம் என்ன?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் கோபமடைந்த சவுல் தன் ஈட்டியைத் தன் மகனாகிய யோனத்தான் மீது வீசினார். இதனால், "சவுல் தாவீதின் மேல் உண்மையிலேயே கோபமாயிருக்கிறார்." என்பதை யோனத்தான் சந்தேகமின்றி அறிந்து கொண்டான்.

சாப்பிடாமல் கோபத்துடன் யோனத்தான் வெளியேறி விட்டான். சவுல் கூறியவற்றை நினைத்து மிகவும் துக்கப்பட்டான்.

மறுநாள் காலையில், யோனத்தான் தாவீதை காணச் சென்றான். ஏற்கனவே அவர்கள் பேசிக்கொண்டபடி சிறுவனுக்கு அப்பால் அம்பு எய்தான். இதன் மூலம் சவுல் தாவீதை கொல்ல முயற்சி செய்கிறார் என்பதைத் தெரியப்படுத்தினான். பிறகு சிறுவனிடம் வில், அம்பு ஆகியவற்றைக்கொடுத்து அவனை வீட்டிற்கு அனுப்பி விட்டான்.

கற்குவியல்களின் பின்னாலிருந்து தாவீது எழும்பி வெளியே வந்தார். அவர் குனிந்து தரையில் முகம் குப்புற விழுந்து மூன்றுமுறை வணங்கினார். யோனத்தானைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். இருவரும் அழுதார்கள். பின்னர் பிரிந்து சென்றார்கள்.



தாவீது சவுல் அரசரின் உயிரைத் தப்பவிடுதல்

1 சாமுவேல் 26 : 1 – 25

சவுல் அரசர் தொடர்ந்து தாவீதைக் கொல்ல முயற்சி செய்துகொண்டிருந்தார். ஆனால் சாமுவேல் என்னும் இறைவாக்கினரால் தாவீது அரசராக அபிசேகம் செய்யப்பட்டிருந்தார். சில வேளைகளில், சில குறுக்கு வழிகளைப் பின்பற்றி அரசனாவதற்குரிய வாய்ப்புகள் இருந்தன. ஆனால்; அத்தகைய செயல்களைச் செய்யாமலிருக்க தாவீதிற்கு, தக்க மன உறுதியைக் கடவுள் கொடுத்திருந்தார்.

"பாலை வனத்தில் ஒரு மலையருகில் தாவீது ஒளிந்து கொண்டிருக்கிறான்" என்று கிபியாவிலிருந்த சவுலிடத்தில் சில ஆட்கள்

வந்து சொன்னார்கள். உடனே சவுல் தன்னுடைய சிறந்த வீரர்களில் மூவாயிரம் பேரை அழைத்துக் கொண்டு, தாவீதை தேடிச் சென்றார். அவர் ஒரு சாலையருகே கூடாரம் அடித்துத் தங்கினார். தாவீது இதை அறிந்தார். உடனே புறப்பட்டு வந்து பார்த்தபோது, சவுல் கூடாரத்தின் உட்பக்கம் தூங்கிக் கொண்டிருந்தார். படைத் தலைவனான அப்னேரும், மற்ற வீரர்களும் அவரைச் சுற்றிலும் படுத்திருந்தார்கள்.

தாவீதும், அவரோடு வந்த அபிசாயும் சவுலின் கூடாரத்தினுள் நுழைந்தார்கள். சவுல் தன்னுடைய ஈட்டியைத் தன் தலைப்பக்கத்தில் குத்தி நிறுத்தியிருந்தார்.

அபிசாய் தாவீதிடம், "இப்பொழுது சவுலுடைய ஈட்டியைக் கொண்டே அவரைத் தரையுடன் ஒரே குத்தாகக் குத்திவிடவா?" என்று கேட்டான். அதற்குத் தாவீது, "கடவுளால் அரசனாக அபிசேகம் செய்யப்பட்ட ஒருவரை கொல்லக் கூடாது. நாம் இப்போது அரசனுடைய இந்த ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் மட்டும் எடுத்துக் கொண்டு போய்விடவோம்" என்றார். அவ்வாறே செய்தார்கள். சவுலின் கூடாரங்களில் இருந்த ஒருவரும் அங்கே நடந்த எதையும் அறிய வில்லை. அவர்கள் அனைவருக்கும் கடவுள் ஒரு அழ்ந்த தூக்கத்தைக் கொடுத்திருந்தார்.

பின்னர் தாவீது பள்ளத்தாக்கைக் கடந்து, மறு பக்கம் போய், ஒரு மலையின் உச்சியில் ஏறினார். அங்கிருந்து சத்தமிட்டு, "அப்னேரே, நான் சொல்லுவது உமக்குக் கேட்கிறதா?" என்றார். அப்னேர், "இந்த நேரத்தில் உரக்கக் கத்தி, அரசரை எழுப்புவது யார்?" என்று கேட்டான். அதற்கு தாவீது, "அப்னேரே, நீர் இஸ்ரயேலரிலேயே மிக உயர்ந்த அதிகாரி அல்லவா? நீர் உமது அரசரைச் சரியாகப் பாதுகாக்காமல் போனதென்ன?! கொஞ்ச நேரத்திற்குமுன் உம் அரசரைக் கொல்ல ஒருவன் அவருடைய கூடாரத்துக்குள் நுழைந்தான். நீர் உம்முடைய கடமையில் தவறிவிட்டீர். அரசருடைய ஈட்டி எங்கே? அவருடைய தலைமாட்டில் இருந்த தண்ணீர்ச் செம்பு எங்கே பாரும்?" என்று கேட்டார்.

இந்தச் சத்தத்தைக் கேட்டு விழித்தெழுந்த சவுல், தாவீது சொன்ன எல்லாவற்றையும் கேட்டார். அவர் இது தாவீதின் குரல் என்று அறிந்தார். "என் மகனே! தாவீதே! இது உன் குரல் அல்லவா?" என்று கேட்டார். தாவீது, "அரசராகிய ஆண்டவரே, இது என் குரல் தான். இப்போதும் உம்முடைய அடியானாகிய என்னை நீர் துரத்திக் கொண்டிருக்கிறது என்ன? நான் என்ன தவறு செய்தேன்? இஸ்ரயேலின் அரசர் ஒரு தெள்ளுப் பூச்சியைப் கொல்ல இப்படித் தேடி வந்ததென்ன? என்னை ஏன் ஒரு காட்டுப்பறவையைப் போல வேட்டையாடித் திரிய வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்குச் சவுல், "நான் ஒரு மிகப் பெரிய தவறு செய்துவிட்டேன்; என் மகனாகிய தாவீதே! நீ திரும்பிவா. நான் இனிமேல் ஒரு போதும் உனக்கு எந்தத் துன்பமும் செய்யமாட்டேன்" என்றார்.

தாவீது, "மேன்மை தங்கிய அரசரே! கடவுள் உண்மையுள்ளவர்களுக்கும், நீதியுள்ளவர்களுக்கும் தக்க பலனளிப்பார். நான் உம்மைக் கொல்ல விரும்பவில்லை. இன்று உம்மை உயிருடன் விட்டு விட்டேன். அது போலவே, கடவுள் என் உயிரையும் தப்புவித்து, எல்லாத் துன்பங்களுக்கும் என்னை விலக்கிக் காப்பாராக" என்றார்.

சவுல் தாவீதைப் பார்த்து, "தாவீதே, என் மகனே! நீ பேறு பெற்றவன். நீ மகத்தான செயல்களை எல்லாம் செய்வாய். உன் முயற்சிகளிலெல்லாம் வெற்றியடைவாய். நீ மேன் மேலும் பலப்படுவாய்" என்றார். அதன் பின் தாவீது தன் வழியே போனார். சவுல் தன் நாட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

சவுலின் பரிதாபமான முடிவு

1 சாமுவேல் 31 : 1 – 6

இஸ்ரயேலருக்கும், பெலிஸ்தியருக்கும் ஒரு கடும்போர் நடந்தது. இஸ்ரயேலர் படையில் பெரும்பாலோர் கொல்லப்பட்டனர். அவர்கள் 'கில்போவா' மலையில் இருக்கும்போது பெலிஸ்தியரால் சவுலின் புதல்வர்களான யோனத்தான், அபினதாபு, மல்கிசூவா ஆகிய மூன்று பேரும் வெட்டிக் கொல்லப்பட்டனர். எதிரிகளின் அம்பினால் காயமடைந்த சவுல் தன்னுடைய படைக்கலம் தாங்குபவனை நோக்கி, "நீ உன்னுடைய வாளை உருவி என்னைக் கொன்று போடு. இந்தக் கடவுளற்ற வேற்றினத்து பெலிஸ்தியர்கள் கைகளில் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை" என்றார். அரசரைக் கொல்ல அந்த வீரன் மிகவும் பயந்தான். எனவே சவுல்; தன்னுடைய வாளைத் தரையில் நட்டு, அதன் மேல் விழுந்து இறந்தார்.

சவுலும், தன்னுடைய உயிர் நண்பனான யோனத்தானும் இறந்ததால் தாவீது மிகவும் துக்கமடைந்தார்.

பேரரசர்களும், துணிவுள்ள இறைவாக்கினர்களும்

காலங்கள் மாறின. இஸ்ரயேலர் கானான் நாட்டின் பெரும்பகுதியையும் தமது சொந்த நாடாக ஆக்கிக் கொண்டார்கள். மதிற் சுவர்கள் உள்ள நகரங்களில் வாழ்ந்தார்கள். அவர்களுடைய தலைநகரம் எருசலேம். ஆனால் சுற்றிலுமுள்ள இனமக்களும், நாட்டினரும் இஸ்ரயேலருக்கு அடிக்கடி துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த மக்களைப் பின்பற்றி இஸ்ரயேலரில் பலரும் விக்கிரகங்களை வழிபடத் தொடங்கினார்கள். எனவே, மக்களுக்கும், அரசனுக்கும் அவர்கள் கடவுளுடன் செய்திருந்த உடன்படிக்கையை இறைவாக்கினர்கள் அடிக்கடி நினைவுபடுத்த வேண்டியதாயிருந்தது.

தாவீது அரசர்

சவுல் அரசரை அவருடைய நாட்டில் பெரும்பாலான மக்கள் வெறுத்தனர். அவர்களில் பலர் சவுலின் ஆட்சிக்குள் அடங்கியிருக்க விரும்பவில்லை. பிரிந்து செல்ல நினைத்தனர். தாவீது அரசரானபோது, பிரிந்து செல்ல நினைத்த மக்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்த்தார். தாவீதின் படை நன்கு பயிற்சி பெற்றதாய் இருந்தது. அது இஸ்ரயேலர் தம்முடைய அரசாட்சியை அமைத்துக்கொள்ள பெரிதும் உதவியது. அவர்களுடைய நாடு விரிவானதும், வலிமைமிக்கதுமாய் ஆனபோது, தாவீது எருசலேமில் உள்ள ஒரு அரண்மனையில் வாழ்ந்து வந்தார்.

நன்றி உடையவர்

2 சாமுவேர் 7 : 18, 20, 22, 23, 28, 29.

அரசர் தாவீது கடவுளுடன் பேச விரும்பினார். அவர் பணிவுடன் அமர்ந்து, கடவுளை நோக்கி வேண்டுதல் செய்தார். "ஆண்டவரே! இதுவரை நீர் எனக்குச் செய்து வந்த நன்மைகளுக்கெல்லாம் நான் தகுதியுடையவனல்ல. ஆண்டவராகிய கடவுளே, நீர் பெரியவர். உம்மைப்போல் வேறு எவருமே இல்லை. இந்த உலகில் இஸ்ரயேல் நாட்டைப்போல் வலிமை வாய்ந்த நாடு எதுவுமே இல்லை. எங்களை உம்முடைய சொந்த மக்கள் ஆக்குவதற்காக, எகிப்தின் அடிமைத் தளையிலிருந்து மீட்டு அழைத்து வந்தீர். நீரே கடவுள். நீர் உமது வாக்குறுதிகளைத் தவறாமல் நிறைவேற்றுகிறவர். என்றென்றும் என்னுடைய தலைமுறையினர் உம்முடைய நன்மைகளைப் பெற்று அனுபவிக்க, அவர்களுக்கு நீர் ஆசி வழங்க வேண்டுமென்று மன்றாடுகிறேன்" என்று விண்ணப்பம் செய்தார்.

இரக்கம் உடையவர்

2 சாமுவேல் 9 : 1 – 13

ஒரு நாள் தாவீது, "சவுலின் குடும்பத்தாரில் யாராவது உயிருடன் இருக்கிறார்களா ? அப்படி யாராவது உயிரோடு இருந்தால், என்னுடைய நண்பனாயிருந்த யோனத்தானின் பேரால் அவர்கள்மீது இரக்கம் காட்டி உதவி செய்ய விரும்புகிறேன்" என்றார். சவுலின் வேலைக் காரர்களில் ஒருவனாகிய சீபா, தாவீதிடம், "ஆண்டவனே சவுலின் குடும்பத்தாரில், யோனத்தானின் மகன் ஒருவன் இருக்கிறான். அவன் இரண்டு கால்களும் முடமானவன்"

என்றான். உடனே தாவீது அவனை அழைத்து வரச் செய்தார். மெபிபொசேத்து என்னும் பெயர் கொண்ட அவன் வந்தபோது தாவீதின் முன் பணிவுடன் குனிந்து வணங்கினான். தாவீது அவனைப் பார்த்து, "பயப்படாதே. உன்னுடைய தந்தையாகிய யோனத்தான் பொருட்டு, நான் உன்னிடம் இரக்கம் காட்டுவேன். உன்னுடைய தாத்தாவான சவுலுக்குச் சொந்தமாயிருக்கிற நிலங்கள் முழுவதையும் உனக்குத் திரும்பக் கொடுப்பேன். நீ எப்பொழுதும் என்னுடன் அமர்ந்து சாப்பிடுவாய்" என்றார்.

மெபிபொசேத்து மறுபடியும் அரசரைப் பணிந்து வணங்கினான். "ஆண்டவராகிய அரசரே, ஒரு செத்த நாயைப் போலிருக்கிற என்மீது நீர் ஏன் இவ்வளவு இரக்கம் காட்ட வேண்டும்?" என்று கேட்டான்.

அன்று முதல், தன் இரு கால்களும் முடமான மெபிபொசேத்து, தாவீது அரசரோடு பந்தியில் அமர்ந்து, நாள்தோறும் அரச விருந்தைச் சாப்பிட்டு வந்தான்.

அப்சலோமினால் ஏமாற்றப்படுதல்

2 சாமுவேல் 15 : 1 - 6

அப்சலோம் தாவீதின் மூத்த புதல்வர்களில் ஒருவன்.

அப்சலோம்; தனக்கு ஒரு தேரையும், ஐம்பது குதிரைகளையும், ஐம்பது வீரர்களையும் பெற்றுக்கொண்டான். அவன் அதிகாலையில் எழுந்து, பட்டணத்து நுழைவாயிலருகில் சாலையின் ஓரத்தில் நிற்பான். அரசரிடத்தில் நீதி வேண்டிச்சென்று கொண்டிருக்கும் மக்களைத் தடுத்து நிறுத்தி, அப்சலோம் பேசுவான். அவர்களுடைய பிரச்சனையை அறிந்தபின், "உங்கள் பக்கம் நீதி இருக்கிறது. உங்களுக்கு உதவி தேவை. உங்களுக்கு ஒரு நல்ல தீர்ப்பு கூறுவதற்கு அரச சபையில் இப்போது நீதிபதிகள் ஒருவரும் இல்லை. நான் ஒரு நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தால், உங்களைப் போன்றவர்கள் என்னிடம் வரலாம் நல்ல தீர்ப்பை நீங்கள் பெறலாம்" என்பான். அதைக்கேட்ட மனிதன் அவனை வணங்க குனியும்போது, அப்சலோம் அவனைத் தடுத்து கட்டித்தழுவி முத்தமிடுவான். தாவீது அரசரிடம் உதவி வேண்டி வந்துகொண்டிருந்த அனைத்து இஸ்ரயேல் மக்களையும், அப்சலோம் வழியில் மறித்து இப்படித் தொடர்ந்து செய்து வந்தான். அதனால் அவர்கள் அனைவரும் அப்சலோமின் நண்பர்கள் ஆனார்கள்.

தன் மகனுக்குப் பயந்து ஓடுதல்

2 சாமுவேல் 15 : 13 – 16

"இதோ, இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அப்சலோமை அரசனாக்கப் போகிறார்கள்" என்று ஒரு மனிதன் வந்து தாவீதிடம் அறிவித்தான்.

எனவே தாவீது, எருசலேமில் அவருக்குத் துணையாயிருந்த தன்னுடைய படைவீரர்கள் அனைவரையும் அழைத்து அவர்களிடம், "நாம் அனைவரும், அப்சலோமின் கைகளுக்குத் தப்ப வேண்டுமானால், இப்பொழுதே, இங்கிருந்துப் புறப்பட்டுச் சென்றுவிட வேண்டும். தாமதம் வேண்டாம். இல்லையென்றால் அப்சலோம் விரைவில் இங்கே வந்து விடுவான். அவன் நம்மைத் தோற்கடித்து விடுவான். நகரத்தில் இருக்கும் அனைவரும் கொல்லப்படுவார்கள்" என்றார்.

இதைக்கேட்ட அவர்கள், "மேன்மை தங்கிய அரசே! தாங்கள் சொல்வது சரியே. நீர் சொல்லுகிறபடியே செய்ய இப்போதே நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்" என்றார்கள். எனவே அப்சலோமுக்குப் பயந்து அரசரும், அவருடைய குடும்பத்தாரும், படை வீரர்களும் எருசலேம் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஒரு பெரிய போர்

2 சாமுவேல் 17 : 24, 27 – 29; 18 : 1 – 18

தன் தந்தை தாவீதைத் துரத்திக்கொண்டு அப்சலோமும் அவனுடைய மனிதர்களும் யோர்தான் ஆற்றைக் கடந்து சென்றார்கள். அதற்குள் தாவீது, மக்னாயீம் என்னும் நகரத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கே அவருடைய பல நண்பர்கள் வந்து அவரைச் சந்தித்தார்கள்.

தாவீது தன்னுடைய மக்களையெல்லாம் ஓரிடத்தில் கூடிவரச் செய்தார். அவர்களை ஆயிரம் பேராகவும், நூறு பேராகவும் பிரித்து, அவர்களுக்குத் தலைவர்களை நியமித்தார். தன்னுடைய அதிகாரிகளும், மற்ற எல்லா மக்களும் கேட்குமாறு தாவீது, "தயவுசெய்து எனக்காக, இளவரசன் அப்சலோமை யாரும் துன்புறுத்த வேண்டாம்" என்று உரத்த குரலில் கேட்டுக்கொண்டார்.

தாவீதின் படைக்கும், அப்சலோமின் படைக்கும் காட்டுப் பகுதியில் பெரும் போர் நடந்தது. தாவீதினுடைய வீரர்கள் போரிட்டு வென்றார்கள். அன்றைய தினம் மட்டும் இருபதாயிரம் பேர் மாண்டார்கள். நாடு முழுவதும் போர் பரவிற்று. போரில், நாட்டில் இறந்தவர்களைக் காட்டிலும் காடுகளில் மாண்டவர்கள் அதிகம்.

திடீரென்று அப்சலோம், தாவீதின் வீரர்கள் சிலரை எதிர்கொண்டான். அப்சலோம் ஒரு கோவேறு கழுதையின்மீது ஏறியிருந்தான். அது ஒரு பெரிய கர்வாலி மரத்தின் கீழாக ஓடியது. அப்பொழுது சன்னல் பின்னலான மரக்கிளைகளில் அப்சலோமின் தலை சிக்கிக் கொண்டது. அப்சலோம் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தான்.

தாவீதின் வீரர்களில் ஒருவன் இதைக்கண்டு, ஓடிச்சென்று தன்னுடைய படைத்தலைவனான யோவாபிடம் கூறினான்.

யோவாபு மூன்று ஈட்டிகளைக் கையில் எடுத்துக்கொண்டு விரைந்து சென்றான். அங்கே மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த அப்சலோமின் மார்பில் அந்த ஈட்டிகளால் குத்தினான். பின்னர் யோவாபின் பத்து வீரர்கள் ஓடிவந்து அப்சலோமைக் கொன்றனர்.

யோவாபு போரை நிறுத்துமாறு எங்கும் எக்காளம் முழங்கச் செய்தான். படைகள் திரும்பி வந்தன. அப்சலோமின் உடலை எடுத்து, காட்டில் ஒரு ஆழமான குழியில் எறிந்தார்கள். அக்குழியைப் பெரிய கற்களால் நிரப்பி மூடினார்கள். அப்சலோமின் மனிதர்கள் அனைவரும் சிதறியோடி தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

தாவீதின் அதிர்ச்சி

2 சாமுவேல் 18 : 19 – 33

ஒரு குருவின் மகனாகிய அகிமாசு, யோவாபிடம் வந்தான். "அரசரை அவருடைய எதிரிகளிடமிருந்து கடவுள் காப்பாற்றி விட்டார்." என்னும் நற்செய்தியை நான் ஓடிச்சென்று அரசருக்கு அறிவிக்கட்டுமா?" என்று கேட்டான்.

யோவாபு போக அனுமதி கொடுத்ததும், அகிமாசு யோர்தான் பள்ளத்தாக்கின் வழியான சாலையில் ஓடிச் சென்றான்.

அகிமாசு தாவீதைச் சந்தித்து, கீழே விழுந்து வணங்கி, "ஆண்டவராகிய கடவுள் போற்றப் பெறுவாராக! அவர் உமக்கெதிராக எழும்பின மக்களை அழித்து அவர்கள்மேல், உமக்கு வெற்றியை அருளிச் செய்திருக்கிறார்" என்றான்.

தாவீது, "இளவரசன் அப்சலோம் நலமாயிருக்கிறானா?" என்று கேட்டார். அந்நேரம், இன்னொரு அடிமை ஓடிவந்து அரசரிடம், "மேன்மை தங்கிய அரசே! உமக்கு ஒரு நல்ல செய்தியை நான் கொண்டு வந்திருக்கிறேன். இன்று ஆண்டவராகிய கடவுள் அரசராகிய உமக்கு யுத்தத்தில் வெற்றியைக் கட்டளையிட்டார்" என்றான். தாவீது அவனிடமும், "என் மகன் அப்சலோம் நலமாயிருக்கிறானா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த அடிமை, "ஆண்டவரே, அப்சலோமுக்கு இன்று நடந்தவை, உம்முடைய எதிரிகள் அனைவருக்கும் நடக்கக் கடவது" என்றான். இதைக் கேட்டதும் தாவீது, தன் மகன் அப்சலோம் கொல்லப்பட்டுவிட்டான் என்று அறிந்தார். அவர் அதிகமாகத் துக்கங் கொண்டார். அவர் மாடி அறைக்குச் சென்று, மிகவும் அழுதார்.

"அப்சலோமே! அப்சலோமே!!
என் மகனே!
உனக்குப் பதிலாக நான் இறந்திருந்தால்
நன்றாயிருக்குமே!
அப்சலோமே! என் மகனே!" என்று சொல்லி அழுதார்.

சாலமோன் அரசனாதல்

தாவீது போரிடுவதில் வல்லவர் என்று அறியப்பட்டிருந்தார். அவர் இறக்கும்போது ஒரு வலிமையான ஒருங்கிணைந்த நாட்டைத் தன் மகன் சாலமோனிடத்தில் ஒப்படைத்தார். சாலமோன்; ஞானம், மிகுந்த செல்வம் ஆகியவற்றை அடைந்து புகழ் பெற்றவர் ஆனார். அவருடைய ஆட்சிக் காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது.

தன் தந்தையின் போதனையைக் கேட்டல்

1 இராஜாக்கள் 2 : 1 – 3

தாவீது, தான் இறக்கும் நேரம் வந்தபோது, தனது மகனாகிய சாலமோனை அழைத்து தன் இறுதி அறிவுரைகளைக் கூறினார். "என் மகனே! நான் இறக்கும் நேரம் வந்துவிட்டது. நீ துணிவோடும், மன உறுதியோடும் இரு. நீ செய்ய வேண்டுமென்று கடவுள் கட்டளையிடுபவற்றையே செய். மோசேயின் திருச்சட்ட நூலில் எழுதப்பட்ட கடவுளின் கட்டளைகள் அனைத்திற்கும் கீழ்ப்படி. அப்படிச் செய்வாயானால் உனக்கு அனைத்தும் நன்றே நடைபெறும்" என்றார்.

ஞானத்திற்காக வேண்டுதல்

1 இராஜாக்கள் 3 : 5 – 15

ஒருநாள் கடவுள்; சாலமோனுக்கு கனவில் காட்சியளித்தார். அவரிடம், "சாலமோனே, நான் உனக்கு என்ன தரவேண்டும் என்று விரும்புகிறாய் ?" என்று கேட்டார்.

அதற்குச் சாலமோன், "ஆண்டவராகிய கடவுளே! நீர் உம்முடைய ஊழியராகிய என்னுடைய தந்தை தாவீதுக்கு அன்பு காட்டி வந்தீர். அவர் எப்போதும் உமக்குக் கீழ்ப்படிந்து வந்தார். உமக்கு முன்பாக நல்லவராகவும், நேர்மையுடையவராகவும் இருந்தார். என் ஆண்டவராகிய கடவுளே, நான் இளைஞன். நாட்டை ஆளும் முறையை அறியாதவன். எனினும், என் தந்தைக்குப் பிறகு நாட்டை ஆளும் பொறுப்பை எனக்குத் தந்திருக்கிறீர். எனவே நன்மைக்கும், தீமைக்கும் வேறுபாடு அறியவும், உமது மக்களை மிக நன்றாக ஆட்சி



செய்யவும் தேவையான ஞானத்தை எனக்குத் தாரும். உம்முடைய மக்கள் ஒரு பெரிய இனம் அல்லவா? ஞானம் இல்லாமல் அவர்களை நான் எப்படி ஆள முடியும்?" என்று கேட்டார்.

சாலமோன்; ஞானம் வேண்டும் என்று கேட்டது கடவுளுக்கு உகந்ததாயிருந்தது. எனவே கடவுள், "நீ நீண்ட ஆயுளையும், திரளான சொத்தையும் கேட்கவில்லை. உன்னுடைய எதிரிகளைச் சாகடிக்க வேண்டும் என்றும் கேட்கவில்லை. ஆகவே; நீ கேட்டதை நான் உனக்குத் தருவேன். எப்போதும் எவருமே பெற்றிராத அளவு ஞானத்தையும், அறிவையும், விவேகத்தையும் நான் உனக்குத் தருவேன். எந்த் அரசனும் எப்போதும் அனுபவித்திராத அளவு சொத்துக்களும், புகழும் உனக்கு உன் வாழ்நாள் முழுவதும் இருக்கும். நீ எனக்கும், என்னுடைய கட்டளைகளுக்கும், உன் தந்தை தாவீது செய்ததுபோல கீழ்ப்படிய வேண்டும். அப்பொழுது நான் உனக்கு நீடிய வாழ்வைத் தருவேன்" என்றார்.

சாலமோன் விழித்தெழுந்த போது தான் கண்ட கனவின் மூலமாகக் கடவுள் தன்னுடன் பேசியிருக்கிறார் என்று நம்பினார்.





வேண்டுதல் வழங்கப்படுதல்

1 அரசர்கள் 3 : 16 – 28

ஒருநாள் இரண்டு பெண்கள் சாலேமோன் அரசரிடம் வந்தார்கள். அவர்களில் ஒருத்தி, "மேன்மை தங்கிய அரசே! இந்தப் பெண்ணும், நானும் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகிறோம். ஒருநாள் நான் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தேன். என்னுடைய குழந்தை பிறந்து இரண்டு நாள் சென்றபின் இவளும் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். அந்த வீட்டில் எங்கள் இருவரையும் தவிர வேறு எவருமே இல்லை. ஒரு இரவில் இவள், தூக்கத்தில் தன் குழந்தையின்மேல் புரண்டு படுத்ததால் அவளுடைய குழந்தை இறந்துவிட்டது. அதைக்கண்ட இவள் அந்த இரவிலேயே, நான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும்போது, என்னருகில் வந்து, என்னுடைய மகனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டாள். இறந்து போன இவளுடைய மகனை என்னருகில் கிடத்திவிட்டாள். மறுநாள் காலையில் நான் எழுந்து என் குழந்தைக்குப் பாலூட்ட முயன்றபோது, அவன் இறந்திருப்பதைக் கண்டேன். பின்னர் அந்தக் குழந்தையைக் கூர்ந்து கவனித்தபோது, அது என்னுடைய பிள்ளை இல்லை என்று கண்டேன். எனவே உயிருடன் இருக்கும் என்னுடைய குழந்தையை எனக்கு இவளிடமிருந்து பெற்றுத் தரும்படி வேண்டுகிறேன்" என்றாள்.

ஆனால்; அடுத்த பெண், "இல்லை, உயிருடன் இருக்கும் குழந்தை என்னுடையது. இறந்த குழந்தை உன்னுடையது" என்று முதல் பெண்ணிடம் கூறினாள். முதல் பெண், "இல்லை, இல்லை. இறந்த குழந்தைதான் உன்னுடையது. உயிருடன் இருக்கும் குழந்தை என்னுடையதுதான்" என்றாள். இவ்வாறு அரசன் முன்னிலையிலேயே இரு பெண்களும் மாறி மாறிக் கூச்சலிட்டார்கள்.

இதைக்கேட்ட சாலமோன் அரசர், "உயிருடன் இருக்கும் குழந்தை என்னுடையது. இறந்தக் குழந்தை உன்னுடையது என்று நீங்கள்

இருவரும் வாதாடுகிறீர்கள்; பொறுங்கள்'' என்றார்.

பின்னர்; தன்னுடைய சேவகனிடம் ஒரு வாளைக் கொண்டுவரச் சொன்னார். கொண்டு வந்ததும் சேவகனிடம், ''அந்த உயிருள்ள குழந்தையை வாங்கி, இந்த வாளினால், இரண்டு துண்டாக வெட்டிவிடு. ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டைக்கொடு'' என்றார்.

முதல் பெண் குழந்தையை அதிகமாய் நேசித்தாள். எனவே அவள் அரசரிடம், "அரசர் பெருமானே! தயவுசெய்து உயிருள்ள இந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டாம். இதை அவளிடமே கொடுத்து விடுங்கள்'' என்றாள். ஆனால் மற்ற பெண், "குழந்தையை எங்களில் எவருக்கும் கொடுக்க வேண்டாம். அதை வெட்டி இரண்டு துண்டாக்குங்கள்'' என்றாள்.

இதைக் கேட்டதும் சாலமோன் அரசர், "குழந்தையைக் கொல்ல வேண்டாம். அதை அந்த முதல் பெண்ணிடம் கொடுத்து விடுங்கள். ஏனென்றால், அவள்தான் அந்தக் குழந்தைகயின் உண்மையான தாய்'' என்றார்.

சாலமோன் வழங்கிய தீர்ப்புப் பற்றிய செய்தி, நாடு முழுவதும் பரவியது. மக்கள் அனைவரும் கடவுள் சாலமோனுக்குச் சிறந்த ஞானத்தை வழங்கியிருக்கிறார் என்று அறிந்தார்கள்.

மேன்மேலும் புகழ் பெறுதல்

1 அரசர்கள் 4 : 20 – 21, 29, 32 – 34; 10 : 14 – 15

சாலமோன் அரசரின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரயேல் நாடு மிகவும் வலிமை வாய்ந்த ஒரு பேரரசாக இருந்தது. மற்ற நாடுகளின் அரசர்கள் சாலமோனின் நண்பர்களாய் இருக்க விரும்பினார்கள். எனவே அவர்கள் அடிக்கடி விலை உயர்ந்த பரிசுப் பொருள்களை சாலமோனுக்கு அனுப்பினார்கள்.

யூதா, இஸ்ரயேல் ஆகிய நாடுகளின் மக்கள் எண்ணிக்கை மிக அதிகம். அவர்களுக்கு ஏராளமான உணவுப்பொருட்கள் இருந்தன. எனவே, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். சாலமோன் ஆண்ட தேசத்தின் பரப்பளவு அதிகம். மேற்கே 'யூப்பிரத்தீசு' ஆறு முதல் கிழக்கே 'பெலிஸ்தியா' நாடுவரையும், தெற்கே எகிப்து நாடு வரையும் பரவியிருந்தது. சுற்றிலும் இருந்த நாடுகளின் அரசர்கள் சாலமோனுக்குக் கப்பம் செலுத்தி வந்தார்கள்.

சாலமோனுக்கு அதிக ஞானத்தையும், அறிவையும் கடவுள் கொடுத்திருந்தார்.



அவர் மூவாயிரம் நீதிமொழிகளையும், ஓராயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையும் எழுதியிருக்கிறார். அவர் பூமியிலுள்ள எல்லா வகையான தாவரங்களைப் பற்றியும், மரங்களைப் பற்றியும் பேசியிருக்கிறார். எல்லா வகையான மிருகங்களைப் பற்றியும், பறவைகளைப் பற்றியும் கூறியிருக்கிறார். தூர தேசங்களிலுள்ள அரசர்கள் அவருடைய ஞானத்தைப் பற்றி கேள்விப்பட்டு, அதைக் கேட்க, தங்கள் நாட்டு மக்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும், சாலமோன் அரசருக்கு இருபதாயிரம் டன்னுக்கு அதிகமான அளவு பொன் கிடைத்தது. வியாபாரிகளிடமிருந்து வரிப்பணமும் வந்தது. அரேபிய அரசர்களுடன் அவர் வியாபாரம் செய்ததாலும் அதிகமான வருவாய் கிடைத்தது.

பெரிய சாதனை

1 அரசர்கள் 6 : 1, 7, 15, 19, 21, 22, 38

தாவீது அரசருக்கு மிகப்பெரிய ஆசை ஒன்றிருந்தது. அதை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. அது எருசலேமில் கடவுளுக்கு ஒரு பெரிய ஆலயம் கட்ட வேண்டும் என்பதாகும். கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியானது, "கடவுளின் திருவுறைவிடம்" என்று பெயர் கொண்ட பெரிய வழிபாட்டுக் கூடாரத்தில் இதுவரை வைக்கப்பட்டிருந்தது. எகிப்திலிருந்து இஸ்ரயேலர் கானான் நாட்டிற்குப் பயணம் செய்து வந்தபோது இத்தகைய கூடாரத்தில்தான் கடவுளை வழிபட்டு வந்தார்கள். அந்தக் கூடாரம் இப்பொழுது சீலோ நாட்டில் இருக்கிறது. தாவீது உடன்படிக்கைப் பெட்டியை அந்தக் கூடாரத்திலிருந்து எடுத்து எருசலேமுக்குக் கொண்டு சென்றார்.

அத்தகைய கூடாரம், வாழும் கடவுளை வழிபடுவதற்குச் சிறந்த இடமில்லை என்று தாவீது அறிந்தார். எனவே அவர்; ஒரு ஆலயம் கட்ட எருசலேம் நகரத்தில் ஒரு சிறப்பான இடத்தை வாங்கியிருந்தார். அங்கே கட்டடம் கட்டுவதற்குத் தேவையான தளவாடப் பொருட்களைச் சேகரிக்க ஆரம்பித்தார். அப்பொழுது கடவுள் தாவீதிடம் ஆலயம் கட்டும் வேலையை அவரது மகன் சாலமோனுக்கு விட்டு விடுமாறு கூறினார்.

சாலமோன் அரசர் 'தீரு' நாட்டு ஈராம் அரசருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அதன்படி ஈராம் அரசர் எருசலேமில் ஆலயம் கட்டத் தேவைப்படும் கேதுரு மரங்களையும், தேவதாரு மரங்களையும் தனது நாட்டிலிருந்து கொடுத்தார். அம்மரங்களை வெட்டவும், பணிமூட்டுகளைச் செய்யவும் தச்சர்களையும் ஈராம் மன்னர் தன் நாட்டிலிருந்து அனுப்பினார். சாலமோன் அரசர் அதற்கு ஈடாக, இருபதினாயிரம் கலம் கோதுமையும், இருநூறு குடம் ஒலிவ எண்ணெயும் ஈராம் அரசருக்கு ஆண்டு தோறும் கொடுத்து வந்தார்.

ஆலயத்திற்குத் தேவையான பெரிய கற்களையும், மரங்களையும் செதுக்கிப் பணி முடித்துக்கொண்டு வந்து சேர்க்கும்படி ஆயிரக்கணக்கான வேலையாட்களை சாலமோன் அரசர் அமர்த்தியிருந்தார்.

சாலமோன் அரசர் தனது ஆட்சியின் நான்காம் வருடம் ஆலயம் கட்டும் வேலையைத் தொடங்கினார். அதற்குத் தேவையான கற்கள், அவை வெட்டி எடுக்கப்படும் பாறைகளுக்கருகிலேயே தேவையான அளவுகளிலும், உருவங்களிலும் செதுக்கி முடிக்கப்பட்டன.

ஆலயத்தின் உட்புறச் சுவர்கள் முழுவதும், தரையிலிருந்து கூரைப்பகுதி வரையிலும் கேதுரு மரப்பலகைகளாலும், தளம் தேவதாரு மரப்பலகைகளாலும் மூடப்பட்டன. ஆலயத்தின் பின்பக்கத்தில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட ஒரு உள்அறை கட்டப்பட்டது. அந்த அறையின் பெரிய கதவு பொன் தகட்டால் மூடப்பட்டது. கதவின் குறுக்கே பொன் சங்கிலிகள் மாட்டப்பட்டன.

ஆலயத்தின் உட்புறச் சுவர்கள் முழுவதும் பொன்தகட்டால் மூடப்பட்டன. உள்பீடமும் பொன் தகட்டால் மூடப்பட்டது.

திட்டமிட்டிருந்தபடியே சாலமோன் ஆலயத்தின் வேலையை முடித்தார். அதைக் கட்டி முடிக்க எழு வருடங்கள் ஆயின.

சந்திக்க வந்த அரசி

1 அரசர்கள் 10 : 1 - 9

சாலமோனின் ஞானத்தைப் பற்றி, சேபாவின் அரசி கேள்விப்பட்டார். கடினமான சில கேள்விகளுக்கு விடை பெறும்படியாக, நீண்டதூரம் பயணம் செய்து, சாலமோனைச் சந்திக்க எருசலேமுக்கு வந்தார். ஏராளமான உதவியாளர்களோடு, பல ஒட்டகங்களின்மேல் நறுமணப் பொருட்கள், விலையுயர்ந்த கற்கள், நகைகள் ஆகியவற்றைப் பரிசுப் பொருட்களாக ஏற்றிக்கொண்டு வந்திருந்தார்.

அரசி, சாலமோன் அரசரிடம் பல சிக்கலான கேள்விகளைக் கேட்டார். அரசர் அவை ஒவ்வொன்றிற்கும் விடை கூறினார். அவர் கேட்ட விடுகதைகளையும் விடுவித்தார். அவருக்கு எதுவுமே தெரியாததாக இல்லை. சாலமோனின் ஞானம் எவ்வளவு அதிகமானது என்று சேபாவின் அரசி கண்டுணர்ந்தார். அவர் கட்டியிருந்த அரண்மனையைக் கண்டு வியப்படைந்தார். அவருடைய சாப்பாட்டு மேசையின் மீது வைக்கப்பட்ட உணவு வகைகளையும், பாத்திரங்களையும் பார்த்தார். அவருடைய பணியாளர்கள் பலர் சீருடை அணிந்து நேர்த்தியாகப் பணிபுரிவதைக் கவனித்தார். ஆலயத்தின் அழகினையும், அங்கு நடைபெறும் கடவுள் வழிபாட்டையும் கண்டு வியப்படைந்தார். அவர் அரசரிடம், "உம்மைப் பற்றியும், உம்முடைய ஞானத்தைப் பற்றியும் என்னுடைய நாட்டில் நான் கேள்விப்பட்ட அனைத்தும் உண்மையே என்று கண்கூடாகக் காண்கிறேன். ஆனால் நான் இங்குவந்து இவற்றையெல்லாம் என்னுடைய கண்களால் நேரடியாகக் காண்பதுவரை என்னால் நம்ப முடியவில்லை. உம்முடைய ஞானமும், செல்வமும், நான் கேள்விப் பட்டதைவிட மிக மிக அதிகமாயிருக்கின்றன. உம்முடைய மனைவிகள் எத்துணை பேறுபெற்றவர்கள்! உம்முடைய அருகிலிருந்து எப்போதும் பணிவிடை செய்துகொண்டே நீர் பேசும் ஞான வார்த்தைகளைக் கேட்கும் வாய்ப்பும் பெற்ற வேலைக்காரர்கள் எவ்வளவு பேறுபெற்றவர்கள்! உம்முடைய கடவுள் போற்றப்படுவாராக. உம்மை இஸ்ரயேலின் அரசாராக்கியதின் மூலம் கடவுள் உம்மீது எவ்வளவு அன்பு கொண்டுள்ளார் என்று அறிய முடிகிறது. அவர் இஸ்ரயேல் மக்களின்மீது கொண்டுள்ள மாறாத அன்பின் காரணமாக உம்மை அதன் அரசராக ஆக்கியுள்ளார்" என்றார்.



இறைவாக்கினர்களின் செயல்பாடு

சாலமோன் முதிர் வயதானபோது, இஸ்ரயேல் மக்கள் வேறு தெய்வங்களை வழிபடத் தொடங்கினார்கள். அவர் அதனைத் தடை செய்யவில்லை. அவரது இறப்பிற்குப் பின்பு அது இன்னும் அதிகமாயிற்று. இஸ்ரயேல் மக்களிடையே ஏற்பட்ட ஒரு போர், நாட்டை இரண்டாகப் பிளவுபடச் செய்தது. வடக்கில் உள்ள பெரும்பாலான பகுதிகள் சேர்ந்து 'இஸ்ரயேல்நாடு' என அழைக்கப் பட்டது. தெற்கே உள்ள சிறிய பகுதி 'யூதா நாடு' என அழைக்கப்பட்டது. 'யூதா' என்பது ஒரு இஸ்ரயேல் குலத்தின் பெயர். யூதா, இஸ்ரயேல் ஆகிய நாடுகளை ஆண்ட அரசர்களில் பெரும்பாலானோர் கடவுளின் கட்டளைகளைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்கள் விக்கிரகங்களை வணங்கும்படி இஸ்ரயேலரை ஊக்குவித்தார்கள். கடவுளின் இறைவாக்கினர்கள் இதுகுறித்து அதிக வருத்தப்பட்டார்கள். அவர்கள் 'பெரிய அழிவு ஏற்படும்' என்று எச்சரிக்கைச் செய்தார்கள். சில வேளைகளில் அரசனும், மக்களும் இதைக் கவனித்தார்கள். ஆனால் மிக விரைவில் அந்த எச்சரிக்கைகளை மறந்து விட்டார்கள்.

கடவுளின் மனிதர் எலியா

1 அரசர்கள் 17 : 1 – 16

கடவுள் எலியாவைப் பார்த்து, "இப்பொழுது நீ சாரிபாத்துக்குச் சென்று அங்கே தங்கியிரு. அந்த நகரத்தில் வாழும் ஒரு கைம்பெண்ணிடம் உனக்கு உணவளித்துப் பராமரிக்கும்படி கட்டளையிட்டு இருக்கிறேன்" என்றார். அதன்படியே எலியா புறப்பட்டு சாரிபாத்துக்குச் சென்றார். வழியில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு கைம்பெண்ணைக் கண்டார். எலியா அவளைப் பார்த்து, "அம்மா, நீ போய் எனக்குக் குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார். அவள் தண்ணீர் கொண்டுவரப் புறப்பட்டுப் போகும் போது, "அப்படியே நான் சாப்பிடுவதற்குக் கொஞ்சம் அப்பமும் கொண்டு வா" என்றார்.

அதற்கு அவள், "ஐயா, என்னுடைய வீட்டில் மாவும், எண்ணெய்யும் இல்லை என்று உண்மையாகவே கூறுகிறேன். என்னிடத்தில் உள்ளதெல்லாம் ஒரு பிடி மாவும், கொஞ்சம் எண்ணெய்யுமே. அதைக் கொண்டு, அப்பம் சுட்டு நானும், என் மகனும் கடைசியாகச் சாப்பிடுவதற்காகவே இப்பொழுது கொஞ்சம் விறகு பொறுக்கிக் கொண்டிருக்கிறேன். அதைச் சாப்பிட்டபின் நாங்கள் இருவரும் பட்டினியாக இருக்க வேண்டியதுதான்" என்றாள்.

அதற்கு எலியா, "கவலைப்பட வேண்டாம். நீ போய் உன்னிடம் இருக்கும் மாவில் முதலாவது எனக்கு ஒரு சிறிய அப்பம் சுடு. அதன் பின்னர் உனக்கும், உன் மகனுக்கும் சுடலாம். நாட்டில் மழை பெய்யும்வரை உன்னுடைய பாத்திரத்தில் மாவும், எண்ணெயும் குறைவதில்லை என்று இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்றார்.

அந்தக் கைம்பெண் உடனே தன் வீட்டிற்குச் சென்று, எலியா தம்மிடம் கூறியபடியே செய்தாள். அவர்கள் மூவருக்கும் அந்த எண்ணெய்யும், மாவும் குறைவுபடாமல் நெடுநாட்களுக்குப் போதுமானதாயிருந்தது.

வடபகுதி இஸ்ரயேல் நாட்டின் அரசர்களில் ஒருவன் ஆகாபு. அவனுடைய ஆட்சிக் காலத்தில், நாட்டில் மிகுதியான கேடுகள் நிகழ்ந்தன. அவன் வேறொரு நாட்டிலிருந்து ஈசபேல் என்னும் பெண்ணைத் திருமணம் செய்திருந்தான். ஈசபேல் ஒரு போலித் தெய்வமான பாகாலை வழிபட்டு வந்தாள். அவள், இஸ்ரயேல் மக்கள் அனைவருமே தன்னைப்போல பாகாலை வழிபடவேண்டும் என்று விரும்பினாள். அவள் பாகாலுக்கு ஒரு கோவில் கட்டும்படி, ஆகாபு அரசரைக் கட்டாயப்படுத்தினாள் அவள் ஏராளமான பாகாலின் பூசாரிகளையும், கடவுளின் இறைவாக்கினர்களையும் வரவழைத்திருந்தாள். இறைவாக்கினர்களை துன்பப்படுத்தி, அவர்களில் பலரைக் கொன்றாள். கடவுளை வழிபடும் மக்கள், என்ன செய்வதென்றறியாமல் திகைத்தனர்.

இஸ்ரயேல் நாட்டில் இருந்த மிகச்சில கடவுளின் இறைவாக்கினர்களில் எலியா ஒருவர். கடவுள் அவரிடம், "நீ சென்று ஆகாபு அரசனுக்கு எச்சரிக்கைச் செய் என்றார். அப்படியே எலியா ஆகாபு அரசனிடத்தில் சென்று, அவன் தன் வழிகளை விட்டுவிட்டு கடவுளிடம் திரும்பி வரவேண்டும். இல்லை என்றால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நாட்டில் மழை பெய்வதில்லை" என்று எச்சரித்தார். அதுபோலவே; நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. உணவும், தண்ணீரும் கிடைக்காததால் மக்களின் வாழ்வு மிகவும் துன்பமயமாயிற்று.

வானத்திலிருந்து நெருப்பை வரவழைத்தல்

1 அரசர்கள் 18 : 20 – 40

இந்தப் பஞ்ச காலத்தில் எலியாவை ஒரு நீரூற்றருகில் கடவுள் அதிசயமாகப் பாதுகாத்தார். காலையிலும், மாலையிலும் காகங்கள் அப்பமும், இறைச்சியும் எலியாவுக்கு கொண்டு வந்தன. அவர் அவற்றைப் புசித்து, தண்ணீரைக் குடித்து உயிர் வாழ்ந்தார். ஆனால் மழை இல்லாததால் சில நாட்களில் அந்த நீரூற்றும் வற்றி வறண்டு போயிற்று.

ஆகாபு அரசன்; இஸ்ரயேல் மக்கள், பாகாலின் பூசாரிகள் அனைவரையும், கர்மேல் குன்றின் அருகில் வரவழைத்தான். எலியா மக்களிடம், "நீங்கள் உங்கள் உள்ளங்களில் ஒரு தீர்மானம் செய்ய எவ்வளவு காலம் ஆகும்?" "யாவே" கடவுளானால் அவரை வணங்குங்கள். 'பாகால்' தெய்வம் என்றால் அவரை வணங்குங்கள்" என்றார். மக்கள் பதில் பேசவில்லை. மீண்டும் எலியா, "கடவுளின் இறைவாக்கினர்களில் நான் ஒருவன் மட்டும் இருக்கிறேன். ஆனால் பாகாலின் பூசாரிகள் இங்கே 450 பேர் உள்ளனர். இப்பொழுது பலியிடுவதற்குரிய இரண்டு காளைகளைக் கொண்டு வாருங்கள். பாகாலின் பூசாரிகள் அவற்றில் ஒன்றை கொன்று, அதைத் துண்டு துண்டாக வெட்டச் சொல்லுங்கள் அவற்றைப் பாகாலின் பலிபீடத்தில் அடுக்கிய விறகின்மேல் வைக்கட்டும். ஆனால் விறகிற்கு நெருப்பு வைக்கக்கூடாது."

"நானும் அப்படியே செய்கிறேன். பின்னர் அவரவர் கடவுளை அழைக்க வேண்டும். எந்தக் கடவுள் வானத்திலிருந்து நெருப்பை அனுப்பி பலிபீடத்தின்மேல் இருக்கும் காளையைச் சுட்டெரிக்கச் செய்கிறாரோ, அவரே உண்மையான கடவுள் என்று அறிந்து கொள்வோம்" என்றார். இதனைக் கேட்ட மக்கள் அனைவருக்கும் இது ஒரு நல்ல ஆலோசனையாகத் தோன்றியது.

அதன்படியே பாகாலின் பூசாரிகள், அவர்கள் கட்டின பலிபீடத்தின்மேல் ஒரு காளையைப் பலியிட ஆயத்தம் செய்தார்கள். பலிபீடத்தைச் சுற்றி ஆடிப்பாடி நடனம் செய்தார்கள். பாகாலே! எங்கள் கடவுளே! எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டு நெருப்பை அனுப்பும். எங்கள் பலியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டினார்கள். பாகாலிடமிருந்தோ எந்தப் பதிலும் வரவில்லை.

அப்பொழுது எலியா அவர்களிடம், "இன்னும் உரத்தக் குரலில் பாகாலைக்

கூப்பிடுங்கள். அவன் ஒரு கடவுள் அல்லவா? அவன் ஒருவேளை சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருப்பான். அல்லது தியானம் செய்து கொண்டிருப்பான். அல்லது பயணம் சென்றிருப்பான் அல்லது தூங்கினாலும் தூங்குவான்" என்றார். பாகாலின் பூசாரிகள் மேலும் உரத்தக்குரலில் பாகாலை அழைத்தார்கள். தங்கள் வழக்கப்படி உடல்களைக்கீறி இரத்தம் வடியச் செய்தார்கள். இவ்வாறு பிற்பகல் நெடுநேரம் வரை ஆர்ப்பரித்தும், பாகாலிடமிருந்து ஒரு சிறு குரல் கூட கேட்கவில்லை.

பின்னர் எலியா மக்கள் அனைவரையும் தன் பக்கம் வரவழைத்தார். அவர் கடவுளின் பலிபீடத்தைச் சீர்ப்படுத்தினார். ஏனெனில் அது ஈசபேலின் ஆட்களினால் சேதப்படுத்தப் பட்டிருந்தது. யாக்கோபின் புதல்வர்களாகிய இஸ்ரயேல் குலத்தார் 12 பேரின் நினைவாக பன்னிரண்டு கற்களை எடுத்தார். அவற்றைக் கொண்டு கடவுளை வழிபட புதிய பலிபீடத்தைக் கட்டினார். அதைச் சுற்றிலும்



ஒரு வாய்க்காலை உண்டாக்கினார். பின்னர் பலிபீடத்தின்மேல் விறகுகளை அடுக்கினார். காளையைத் துண்டுகளாக வெட்டி விறகின்மேல் வைத்தார். பின்னர் அவர், ''நான்கு குடங்கள் நிறையத் தண்ணீர் கொண்டு வந்து, பலியின்மேலும் விறகின் மேலும் ஊற்றுங்கள்'' என்றார். அப்படியே அவர்கள் மூன்று முறை, நான்கு குடம் வீதம் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினார்கள். தண்ணீர் பலிபீடம் வழியாக வழிந்தோடி சுற்றிலும் இருந்த வாய்க்காலை நிரப்பிற்று. அப்போது மாலைப்பலி செலுத்தும் நேரம் ஆயிற்று. எலியா பலிபீடத்தின் அருகில் சென்று, ''ஆண்டவரே! ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்போரின் கடவுளே! எனது விண்ணப்பத்திற்குச் செவிகொடும் இப்பொழுது அனைவரும் அறிந்து கொள்ளும்படியாக, நீரே உண்மையான கடவுள் என்று காட்டியருளும்; வானத்திலிருந்து நெருப்பை அனுப்பும்; இந்தப் பலியை ஏற்றுக்கொள்ளும்; என்னுடைய வேண்டுதலுக்குச் செவி சாய்த்தருளும்; இந்த மக்கள் 'நீரே உண்மையுள்ள கடவுள்' என்று அறிந்துகொள்ள உதவி செய்யும். இவர்களை நீர் மீண்டும் ஏற்றக்கொள்வதை அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்'' என்று வேண்டினார்.

அதன் பின்னர் கடவுள் வானத்திலிருந்து நெருப்பை அனுப்பினார். அது பலியைச் சுட்டெரித்தது. அதோடு விறகு, கற்கள் ஆகியவற்றையும்கூட எரித்து விட்டது. வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் வற்றச் செய்து விட்டது. மக்கள் இந்த வியத்தகு செயலைக் கண்டார்கள். முகம் குப்புற விழுந்து, உரத்தக் குரலில் ''யாவே தான் கடவுள்! யாவே மட்டுமே கடவுள்!'' என்றார்கள். உடனே எலியா, ''பாகாலின் பூசாரிகள் அனைவரையும் தப்பிப்போகாதபடி பிடியுங்கள்'' என்றார். மக்கள் விரைந்து சென்று அனைவரையும் மடக்கிப் பிடித்தார்கள். எலியா அவர்களைக் கீசோன் ஆற்றின் கரைக்கு இழுத்துச்சென்று, வெட்டிக் கொன்று போட்டார்.

மழைக்காகக் காத்திருத்தல்

1 அரசர்கள் 18 : 41 – 46

எலியா ஆகாபு அரசனிடம், "இப்பொழுது நீர் சென்று சாப்பிடும்; பெரும் மழை வருவதற்கான இரைச்சலைக் கேட்கிறேன்" என்று கூறினார். அப்படியே ஆகாபு சாப்பிடச் சென்றான். எலியா கர்மேல் குன்றின் உச்சியில் ஏறினார். தன் வேலைக்காரனைப் பார்த்து, "நீ வெளியே சென்று கடலின் திசையில் வானத்தை நோக்கிப்பார்" என்றார்.

வேலைக்காரன் போய் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து, "ஐயா, நான் எதையும் பார்க்கவில்லை" என்றான். இவ்வாறு ஏழுமுறை அவனைப் போய் பார்த்து வரச் சொன்னார். ஏழாவது முறை அந்த வேலைக்காரன் திரும்பி வந்து, "ஐயா, கடலிலிருந்து ஒரு உள்ளங்கையளவு மேகம் எழும்பி வரக் கண்டேன்" என்றான்.

உடனே எலியா வேலைக்காரனிடம், "நீ ஓடிச்சென்று ஆகாபு அரசனிடம், மழைவந்து அவனைத் தடுக்குமுன் தேரில் ஏறி, விரைவாக அரண்மனைக்குப் போகச் சொல்" என்றார்.

சிறிது நேரத்தில் வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்தன. காற்று வேகமாக வீசி, கனமழை பெய்யத் தொடங்கியது. ஆகாபு தன்னுடைய தேரில் ஏறி இஸ்ரியேலுக்கு விரைந்தான். கடவுளின் வல்லமை எலியாவின்மேல் இறங்கியது. அவர் உடனே தன் கச்சையைக் கட்டிக்கொண்டு, ஆகாபின் தேரின் முன்னால், இஸ்ரியேல் வரை ஓடினார்.

மெல்லிய குரல் ஒலி கேட்டல்

1 அரசர்கள் 19 : 1 – 18

ஆகாபு அரசன் தன் மனைவியாகிய ஈசபேலிடம் எலியா செய்த அனைத்தையும் எடுத்துக் கூறினான். பாகாலின் பூசாரிகள் 450 பேரும் வெட்டிக் கொல்லப்பட்டதை அறிந்த ஈசபேல் எலியாவுக்கு பின்வரும் செய்தியைச் சொல்லியனுப்பினாள்: "நாளை இந்நேரம் நீ கொலை செய்யப்படுவாய். உனக்கு அப்படிச் செய்யப்படாவிட்டால், என்னுடைய கடவுள் அதற்கு அதிகமாய் என்னிடத்தில் சரிக்கட்டுவாராக."

எலியா இதைக் கேட்டதும் பயந்து விட்டார். அவர் ஒரு வேலைக்காரனையும் அழைத்துக் கொண்டு, உயிர் பிழைக்கத் தப்பி ஓடினார். யூதாவில் உள்ள பெயர்செபா என்னுமிடத்தில் வேலைக்காரனை இருக்கச் சொன்னார். எலியா பாலைவனத்தில் ஒருநாள் பயணம் நடந்து சென்றார். பின்னர் அவர் ஒரு செடியைக் கண்டு அதன் நிழலில் போய் அமர்ந்தார். அவர், 'தாம் செத்துப்போவது நல்லது' என்று நினைத்தார். கடவுளிடம், "நான் பட்டது போதும் ஆண்டவரே! என்னுடைய உயிரை எடுத்துக்கொள்ளும். நான் இறப்பது நல்லது" என்று வேண்டினார்.

பின்னர் அந்தச் செடியின் அடியில் படுத்துத் தூங்கினார். திடீரென்று, கடவுளுடைய தூதர் ஒருவர் தோன்றி, எலியாவைத் தட்டியெழுப்பி, "நீ எழுந்து சாப்பிடு" என்றார். எலியா எழுந்து பார்த்தபோது ஒரு ரொட்டியும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் தன் தலைக்கருகில் இருப்பதைக் கண்டார். அவர் அதைச் சாப்பிட்டபின் மீண்டும் படுத்துத் தூங்கினார். மறுபடியும் கடவுளின் தூதன் வந்து எலியாவைத் தட்டியெழுப்பி, "எழுந்து சாப்பிடு. நீ இன்னும் வெகு தொலைவு செல்ல வேண்டும்" என்றார். எலியா எழுந்து அப்பத்தைச் சாப்பிட்டு தண்ணீரைக் குடித்தார். இந்த உணவு அவருக்கு அதிக வலிமைத் தந்தது. அதைக்கொண்டு எலியா நாற்பது நாட்கள் நடந்து 'ஓரேபு' என்னும் கடவுளின் புனித மலை வரை வந்து சேர்ந்தார். அங்கே இரவில் தங்குவதற்காக ஒரு குகைக்குள் சென்றார்.

திடீரென்று கடவுள் எலியாவிடம் பேசினார். அவர், "எலியாவே, இங்கே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார்.

எலியா, "ஆண்டவரே, எல்லாம் வல்ல கடவுளே, நான் எப்போதுமே உமக்கு மட்டுமே உண்மையுடன் ஊழியம் செய்து வருகிறேன். ஆனால் இந்த இஸ்ரயேல் மக்கள் உம்முடன் செய்திருந்த உடன்படிக்கையை மீறி விட்டார்கள். அவர்கள் உம்முடைய பலி பீடங்களைத் தகர்த்து விட்டார்கள். உம்முடைய இறைவாக்கினர்கள் அனைவரையும் கொன்று விட்டார்கள். நான் ஒருவனே உயிர் பிழைத்திருக்கிறேன். இப்பொழுது என்னையும் கொல்லப் பார்க்கிறார்கள்" என்றார்.

ஆண்டவர் அவரிடம், "நீ வெளியே சென்று மலையின் உச்சியில் எனக்கு முன்பாக நில்" என்றார். எலியா ஏறி மலையின்மேல் நின்றபோது கடவுள் அவரைக் கடந்து சென்றார். அப்பொழுது ஒரு பெருங்காற்று உண்டாயிற்று. அது மலைகளைத் தகர்த்தது. பாறைகளைத் துண்டுகளாக உடைத்துப் போட்டது. ஆனால் ஆண்டவர் அந்தக் காற்றில் இல்லை. காற்று நின்றது. பின்னர் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நில நடுக்கத்திலும் 'ஆண்டவர்' இல்லை. அதன்பின் நெருப்பு உண்டாயிற்று. அந்த நெருப்பிலும் கடவுள் இருக்கவில்லை. அந்த நெருப்பு மறைந்த பின்னர் ஒரு மெல்லிய குரல் கேட்டது.

அதைக் கேட்டதும் எலியா தன்னுடைய மேலுடையினால் தன் முகத்தை

மூடிக்கொண்டார். அவர் வெளியே சென்று குகையின் வாசலில் நின்றார். அந்த மெல்லிய குரல் மறுபடியும், "எலியாவே நீ ஏன் இங்கே இருக்கிறாய்?" என்று கேட்டது.

எலியா, முன்பு கூறியபடியே ஆண்டவரிடம், "உம்முடைய எல்லா இறைவாக்கினர்களையும் கொன்று விட்டார்கள். இப்பொழுது நான் மட்டுமே உயிருடன் இருக்கின்றேன். இப்பொழுது என்னையும் கொல்லப் பார்க்கிறார்களே" என்றார்.

கடவுள் எலியாவிடம், "நீ இந்தப் பாலைவனம் வழியாகத் தமஸ்குவுக்குப் போ. அசாவேலை சீரியாவுக்கு மன்னராக திருப்பொழிவு செய். நிம்சியின் மகன் ஏகூவை இஸ்ரயேலுக்கு அரசராக திருப்பொழிவு செய். பாகலுக்கு மண்டியிடாமலும், அவனை முத்தி செய்யாதவர்களுமான ஏழாயிரம் பேரை நான் இஸ்ரயேலில் விட்டு வைத்திருக்கிறேன்" என்றார்.

எலிசாவைக் கண்டுபிடித்தல்

1 அரசர்கள் 19 : 19 – 21

எலியா அக்குகையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். வழியில் ஒரு வயலில், எலிசா என்னும் இளைஞன் ஏர்பூட்டி உழுது கொண்டிருந்ததைக் கண்டார். அவனுக்கு முன்பாக பதினொரு ஏர்கள் உழுது கொண்டிருந்தன. எலியா அவனருகில் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டார். அப்பொழுது அவன் மாடுகளைவிட்டு, எலியாவின் பின்னால் ஓடி வந்தான். அவன் எலியாவிடம், "நான் என் வீட்டிற்குச் சென்று, என் பெற்றோரிடம் விடைபெற்றுக்கொண்டு உம்மிடம் வர அனுமதித்தாரும்" என்று கேட்டான்.

அதற்கு எலியா, "அப்படியே போய் வா. நான் உன்னைத் தடை செய்யவில்லை" என்றார்.

எலியா தனது ஏர்மாடுகள் இரண்டையும் அடித்தான். தன் ஏர், நுகம் இவற்றை முறித்து, விறகாக எரித்து, இறைச்சியைச் சமைத்தான். பின்னர் அதை மக்களுக்குப் பகிர்ந்தளித்தான். அனைவரும் சாப்பிட்டார்கள். பின்னர் எலிசா வந்து, எலியாவுக்குப் பின்சென்று, அவருக்குப் பணிவிடை செய்து வந்தான்.

ஆகாபு அரசனை எச்சரித்தல்

1 அரசர்கள் 21 : 1 – 24, 27, 29

திருச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியது. இஸ்ரயேல் அரசர்களின் கடமை. இவ்வுண்மையை தாவீதைப் போல, ஆகாபும் கற்க வேண்டியதிருந்தது. பொல்லாதவனான ஆகாபு தான் செய்த தீமையான செயல்களுக்காக உண்மையாகவே மனம் வருந்தினான். அப்போது கடவுள் அவன்மீதும் இரக்கம் கொண்டார்.

இஸ்ரியேலில் ஆகாபு அரசனின் அரண்மனைக்கு அருகில் நாபோத்து என்னும் ஏழை மனிதனுக்குச் சொந்தமான ஒரு

திராட்சைத் தோட்டம் இருந்தது. ஒருநாள் ஆகாபு, நாபோத்திடம், "உன்னுடைய திராட்சைத் தோட்டத்தை எனக்குக் கொடு. அது என் அரண்மனைக்கு வெகு அருகில் இருக்கிறது. நான் அதை ஒரு கீரைத் தோட்டம் ஆக்க விரும்புகிறேன். அதற்குப் பதிலாக வேறு இடத்தில் உனக்கு ஒரு நல்ல திராட்சைத் தோட்டத்தைத் தருகிறேன். அல்லது நீ விரும்பினால் உன் தோட்டத்திற்குச் சரியான விலையைப் பணமாகத் தருகிறேன்" என்றான்.

அதற்கு நாபோத்து "நான் இந்தத் திராட்சைத் தோட்டத்தை என்னுடைய தந்தையிடமிருந்து பெற்றேன். இதை நான் உமக்குத் தருவதைக் கடவுளும் விரும்ப மாட்டார்" என்றான்.

ஆகாபு தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றான். அவன் நாபோத்து சொன்ன பதிலைக் கேட்டு கோபமும், துக்கமும் அடைந்திருந்தான். அவன் தன்னுடைய கட்டிலில் உணவு சாப்பிடாமல், தன் முகத்தைச் சுவர் பக்கமாகத் திருப்பிக்கொண்டு படுத்திருந்தான் இதைக்கண்ட அவன் மனைவி அவனிடம் சென்று, "நீர் ஏன் துக்கமாயிருக்கிறீர்? ஏன் சாப்பிடவில்லை?" என்று கேட்டாள்.

அதற்கு ஆகாபு, "என் துக்கத்திற்கு நாபோத்துதான் காரணம். நான் அவனுடைய திராட்சைத் தோட்டத்தை விலைதந்து பெற்றுக்கொள்ளுகிறேன், அல்லது அதற்குப் பதிலாக வேறு ஒரு திராட்சைத் தோட்டம் தருகிறேன் என்றேன். அவன், "அதை எனக்குத் தர முடியாது என்று சொல்லி விட்டான்" என்றான்.

அதற்கு ஈசபேல், "நல்லது. நீர் ஒரு அரசனா? இல்லையா? கட்டிலிலிருந்து எழுந்திரும்; மகிழ்ச்சியாயிரும்; உணவு சாப்பிடும். நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை நான் உமக்குப் பெற்றுத் தருவேன்" என்றாள்.

அதன் பின்னர்அவள் ஆகாபின் பேரால் சில கடிதங்களை எழுதினாள். அரசனுடைய முத்திரையை அவற்றில் பதித்தாள். அக்கடிதங்களை இஸ்ரியேலில் முக்கியமான மக்கள் அனைவருக்கும் அனுப்பினாள். அக்கடிதங்களில், "ஒரு நோன்பு நாளை நியமியுங்கள். எல்லா மக்களையும் ஒரு இடத்தில் கூடிவரச் செய்யுங்கள். நாபோத்துக்கு முக்கிய மனிதருக்குரிய முன்வரிசையில் இடங்கொடுங்கள். அப்பொழுது பொல்லாத சிலர் நாபோத்தின் மேல் சில குற்றங்களைக் கூறட்டும். அவன் கடவுளையும், அரசனையும் பழித்துப் பேசியதாக அவர்கள் கூறட்டும். அதற்காக அவனை நகரத்துக்கு வெளியே இழுத்துச் சென்று கல்லெறிந்து கொல்லுங்கள்" என்று எழுதியிருந்தது.

ஈசபேலின் கட்டளைக்கு அனைவரும் கீழ்ப்படிந்தார்கள். நாபோத்து கல்லெறிந்து கொல்லப்பட்டான். பின்னர் ஒரு செய்தி ஈசபேலுக்கு அனுப்பப்பட்டது. அதில், "நாபோத்து கொலை செய்யப்பட்டு விட்டான்" என்றிருந்தது.

இந்தச் செய்தி கிடைத்தவுடன் அவள் ஆகாபிடம் சென்று, "நாபோத்து இறந்து விட்டான். இப்பொழுது நீர் போய், அவன் உமக்கு விற்க மறுத்த அந்தத் திராட்சைத் தோட்டத்தை எடுத்துக்கொள்ளும்" என்றாள். உடனே ஆகாபு நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள சென்றான்.

அப்பொழுது கடவுள் இறைவாக்கினர் எலியாவிடம், "நீ சமாரியாவிலிருக்கும் ஆகாபு அரசனிடம் போ. அவன் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தில் நிற்பதைக் காண்பாய். அவன் அதைச் சொந்தமாக்கிக் கொள்ள அங்கு போயிருக்கிறான். அவனிடம், "நாபோத்தைக் கொலை செய்துவிட்டு அவனுடைய திராட்சைத் தோட்டத்தை எடுத்துக்கொள்ளப் போகிறாயா ? நாபோத்தின் இரத்தத்தை நாய்கள் நக்கின இடத்தில் உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும். இவ்வாறு ஆண்டவராகிய கடவுள் சொல்லுகிறார் என்று சொல்" என்றார்.

ஆகாபு எலியாவைக் கண்டதும் கலக்கமடைந்தான். "என்னுடைய பகைவனே! உன்னை நான் இந்த இடத்தில் சந்திக்க நேர்ந்தது எப்படி ?" என்று கேட்டான்.

அதற்கு எலியா, "நீ செய்கிற அனைத்தும் கடவுளுடைய பார்வையில் பொல்லாதவையாய்



இருக்கின்றன. எனவே கடவுள், “ ‘நான் ஆகாபையும் அவன் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும், பெரியவரையும், சிறியவரையும் அழித்து விடுவேன். அவனுடைய குடும்பத்துக்குப் பெரிய துன்பத்தை வரப் பண்ணுவேன்' என கூறுகிறார்” என்றார்.

எலியாவின் வார்த்தைகளைக் கேட்ட ஆகாபு உண்மையிலேயே தனது பொல்லாத செயலுக்காக வருந்தினான். அவன் தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, தன் உடலின்மேல் சாக்கு உடை போர்த்திக் கொண்டு நோன்பு இருந்தான்.

அப்பொழுது ஆண்டவர்; இறைவாக்கினர் எலியாவிடத்தில், “ஆகாபு எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்திக்கொண்ட முறையைப் பார்த்தாயா? எனவே நான் அவனுடைய வாழ்நாட்களில் துன்பத்தை வரச் செய்ய மாட்டேன். அவனுடைய மகனுடைய நாட்களில் ஆகாபின் குடும்பத்தார் அனைவர் மேலும் துன்பம் வரும்” என்றார்.

விண்ணுலகுக்கு எடுத்துக்கொள்ளப்படுதல்

2 அரசர்கள் 2 : 1 – 13

எலிசா, எலியாவைப் போல தானும் ஒரு பெரிய இறைவாக்கினராய் இருக்க வேண்டும் என்று விரும்பினான்.

எலியாவை சுழல் காற்றில் விண்ணுலகுக்கு கடவுள் எடுத்துக்கொள்ளும் நேரம் வந்தது. எலியா, எலிசாவுடன் கில்காவிலிருந்து புறப்பட்டார். வழியில் எலியா, எலிசாவைப் பார்த்து, “நீ இங்கே தங்கியிரு. கடவுள் என்னைப் பெத்தேலுக்கப் போகச் சொல்லுகிறார்” என்றார். ஆனால் எலிசா, “நான் உம்மைவிட்டுப் பிரியமாட்டேன்' என்று என்றும் வாழும் கடவுளின் பேரால் கூறுகிறேன்” என்றான். எனவே இருவரும் சேர்ந்தே எரிகோவுக்குச் சென்றார்கள். அங்கே இருந்த ஒரு கூட்டம் இறைவாக்கினர்கள் எலிசாவிடம் வந்தார்கள். அவனிடம், “இன்று கடவுள் உன்னுடைய தலைவரை உன்னை விட்டு எடுத்துக்கொள்ளப் போகிறார்' என்று உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்கள். எலிசா, “எனக்குத் தெரியும். நாம் இதைப் பற்றி எதுவும் பேச வேண்டாம்” என்றான்.

அப்பொழுது எலியா எலிசாவிடம், “இப்போது இங்கே தங்கியிரு. கடவுள் என்னை யோர்தான் ஆற்றுக்குப் போகும்படி கட்டளையிடுகிறார்” என்றார். முன்போலவே எலிசா, “நான் உம்மைவிட்டுப் பிரிய மாட்டேன் என்று, என்றும் வாழும் கடவுளின் பேரால் கூறுகிறேன்” என்றான். எனவே இருவரும் சேர்ந்தே நடந்து சென்றார்கள்.

இவர்கள் இருவரையும் பின்தொடர்ந்து, வேறு ஐம்பது இறைவாக்கினர்கள் யோர்தானுக்குச் சென்றார்கள். எலியாவும், எலிசாவும் ஆற்றோரத்தில் நின்றார்கள். மற்ற இறைவாக்கினர்கள் சற்று தூரத்தில் நின்று இவர்களைக் கவனித்துக்கொண்டு இருந்தார்கள்.

அப்பொழுது எலியா, தன்னுடைய சால்வையை எடுத்து முறுக்கி, அதைக்கொண்டு யோர்தான் ஆற்றின் தண்ணீரை அடித்தார். உடனே தண்ணீர்

பிரிந்து விலகிச் சென்றது. அவரும், எலிசாவும், உலர்ந்த தரையின் வழியாக நடந்து ஆற்றின் அக்கரையை அடைந்தார்கள். அங்கே எலியா, எலிசாவிடம், "கடவுள் என்னை எடுத்துக் கொள்ளுவதற்குமுன் நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்?" என்று கேட்டார். எலிசா, "உம்மிடத்திலுள்ள வல்லமை இரட்டிப்பாக எனக்குக் கிடைக்கச் செய்தருளும்" என்றான். அதற்கு எலியா "நீ ஒரு அரிதான காரியத்தைக் கேட்கிறாய். எனினும் உன்னிடமிருந்து கடவுள் என்னைப் பிரித்து விண்ணுலகுக்கு எடுத்துக்கொள்ளும் போது நீ என்னைக் கண்டால் நீ விரும்பிய ஆற்றல் உனக்குக் கிடைக்கும். நீ என்னைக் காணாவிட்டால் அது உனக்குக் கிடைக்காது" என்றார்.

அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே நடந்து சென்றார்கள். அப்போது திடீரென்று நெருப்பு மயமான குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் நெருப்பு வண்ணத் தேர் ஒன்று அவர்களிருவருக்கும் இடையில் வந்தது. எலியா அந்தத் தேரில் ஏறின உடன், ஒரு சுழல் காற்றில் விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இந்தக் காட்சியைக் கண்ட எலிசா, "என் தந்தையே, என் தந்தையே, இஸ்ரயேலரின் வல்லமையான தலைவனே, நீர்

போய் விட்டீரா?'' என்று உரக்கக் கத்தினான். அதன் பின்பு அவன் எலியாவை ஒருபோதும் பார்க்கவில்லை. எலியாவைப் பிரிந்த துக்கத்தில் எலிசா தன்னுடைய மேலுடையை இரண்டாக்கிக் கிழித்தான். எலியா ஏறிச் செல்லும்போது அவரிடமிருந்து கீழே விழுந்த சால்வையை எலிசா எடுத்துக் கொண்டான். எலிசா புறப்பட்டு யோர்தான் ஆற்றின் கரையில் வந்தான். எலியா செய்ததுபோல் அவனுடைய சால்வையால் ஆற்றுத் தண்ணீரை அடித்தான்.

எலியா அடித்தபோது நடந்ததுபோல் இப்போதும் ஆற்றுநீர் பிரிந்து இருபுறமும் விலகிச் சென்றது. இந்த நிகழ்ச்சியைத் தூரத்தில் நின்ற ஐம்பது இறைவாக்கினர்களும் கண்டார்கள். அவர்கள் உடனே, "எலியாவின் மேல் இருந்த வல்லமை எலிசாவின் மேல் வந்து விட்டது'' என்று வியப்புடன் கூறினார்கள்.

எலிசாவும், ஏழைக் கைம்பெண்ணும்

2 அரசர்கள் 4 : 1 – 7

ஒரு முறை ஒரு கைம்பெண் எலிசாவிடம் வந்து, "என் கணவர் ஒரு இறைவாக்கினராக இருந்தார். அவர் ஒருவரிடம் கடன்பட்டிருந்தார். என் கணவர் இறந்ததைக் கேள்விப்பட்ட அந்த மனிதன், கடனுக்கு ஈடாக என்னுடைய இரண்டு புதல்வர்களையும் அடிமையாக்க வந்திருக்கிறான். இந்தத் துன்பத்திலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்றாள்.

எலிசா அவளிடம், "உன்னுடைய வீட்டில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு அவள், "ஒரு சிறிய ஜாடியில் கொஞ்சம் எண்ணெய் தவிர வேறு ஒன்றும் இல்லை" என்றாள். எலிசா அவளிடம், "நீ உடனே சென்று உன் பக்கத்து வீட்டுக்காரர் களிடமிருந்து, எத்தனைக் காலியான பாத்திரங்கள் வாங்க முடியுமோ, அத்தனையையும் வாங்கி, நீயும் உன் புதல்வர்களும் மட்டும் வீட்டினுள் சென்று, அந்த எண்ணெய்யைக் காலியான பாத்திரங்களில் ஊற்றுங்கள்." என்றார்.

எலிசா கூறியபடியே அவர்கள் செய்தார்கள். பாத்திரங்கள் நிரம்பியதும், எண்ணெயும் நின்று விட்டது. எலிசா அவளிடம், "அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்துக் கொள். பின்னரும் உங்களது வாழ்க்கைக்குத் தேவையான பணம் மீதியிருக்கும்" என்றார்.

எலிசாவும் ஒரு பணக்காரப் பெண்ணும்

2 அரசர்கள் 4 : 8 – 37

ஒருநாள் எலிசா, சூனேம் என்னும் இடத்துக்கு வந்தார். அங்கே ஒரு பணக்காரப் பெண் எலிசாவைத் தன் வீட்டிற்குச் சாப்பிட வரும்படி அழைத்தாள். எலிசாவும் சென்றார். அன்றுமுதல் சூனேமுக்கு வரும்போதெல்லாம் அவளுடைய வீட்டிலேயே சாப்பிடுவார்.

அவள் தனது கணவனிடம், "இவர் ஒரு தூய மனிதர். இவருக்காக நமது மேல் வீட்டில் ஒரு சிறு அறையைக் கட்டுவோம். அதில் எல்லா வசதியையும் செய்து வைப்போம். அவர்

வரும்போதெல்லாம் அங்கே தங்கட்டும்" என்றாள். அதன்படியே செய்யப்பட்டது.

பின் ஒரு முறை எலிசா, அந்த அறையில் ஓய்வு எடுப்பதற்காகச் சென்றார். அப்பொழுது அவர் தனது வேலைக்காரனாகிய கேகசியை அழைத்தார். நீ போய் அந்தப் பெண்ணிடம், "நீ எங்களுக்கு நல்ல உதவிகளைச் செய்கிறாய். இவற்றுக்குப் பதிலாக, என் ஆண்டவன் உனக்கு என்ன நன்மை செய்ய வேண்டும்? என்று கேள்" என்றார். அவன் போய்க்கேட்டபோது அவள், "எனக்கு எல்லாம் போதுமானதாக இருக்கிறது. எதுவும் தேவையில்லை" என்று சொல்லிவிட்டாள். பின்னர் கேகசி, "ஆனாலும் ஐயா, அவருக்கு ஒரு பிள்ளையும் இல்லை." என்றான். உடனே எலிசா அந்தப் பெண்ணை அழைத்து வரச் சொன்னார். அவளிடம், "அடுத்த ஆண்டு இதே நாளில் நீ ஒரு மகனைக் கைகளில் அணைத்துக் கொண்டிருப்பாய்" என்றார். அதற்கு அவள், "ஐயா, நீங்கள் கடவுளின் மனிதர். எனக்கு நடக்க முடியாததைச் சொல்ல வேண்டாம்" என்றாள்.

ஆனால் எலிசா சொன்னபடியே அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.

சில வருடங்களுக்குப் பிறகு, அவளுடைய மகன் மிகவும் நோய்வாய்ப்பட்டு, தாயின் மடியிலேயே இறந்து போனான். இதை அறிந்த எலிசா அங்குச் சென்றார். கடவுள் அவருக்களித்திருந்த வல்லமையைப் பயன் படுத்தி, அச்சிறுவனை உயிர்பெற செய்தார்.

ஒரு அடிமைப்பெண் கடவுளுக்காகப் பேசுதல்

2 அரசர்கள் 5 : 1 – 14

இஸ்ரயேலருக்காக கடவுள் கவலை கொண்டதுபோல அந்நிய மக்களுக்காகவும் அவர் கவலைக் கொள்பவர் என்பதை இந்த வரலாறு காட்டுகிறது.

சிரியா நாட்டின் படைத்தலைவர் நாமான். அவர் ஒரு பெரிய போர்வீரர். அவரைப்பற்றி சிரியா அரசர் பெருமைகொண்டிருந்தார். அவர் தலைமையில் இஸ்ரயேலுடன் நடந்த போர்களில், சிரியர்களுக்கு வெற்றி

கிடைத்தது. அவரது வெற்றிகளுக்குக் கடவுள் உதவியாகயிருந்தார். ஆனால் அவரது உடலில் ஒரு கொடிய தோல் நோய் இருந்தது. ஒரு முறை அவர்கள் இஸ்ரயேலருடன் போரிடும்போது, அந்நாட்டுச் சிறு பெண்ணை கைதியாகப் பிடித்து வந்திருந்தார்கள். அவள் நாமானின் மனைவிக்கு வேலைக்காரியானாள்.

ஒருநாள் அவள் தன் எஜமானியிடம், "அம்மா, நம்முடைய எஜமானர் சமாரிய நாட்டில் உள்ள இறைவாக்கினரிடம் போனால் நல்லது. நமது எஜமானுக்கு அவர் நோயிலிருந்து முழு நலமளிப்பார்." என்றாள். நாமான் இந்தச் செய்தியை அரசரிடம் தெரிவித்தார். அரசர் நாமானிடம், "நான் இஸ்ரயேல் நாட்டு அரசருக்கு ஒரு கடிதம் தருகிறேன்." என்றார். அதன்படியே நாமான், பொன், வெள்ளி, விலையுயர்ந்த துணிகள் ஆகியவற்றை ஏராளமாக எடுத்துக்கொண்டு

புறப்பட்டார். அவர் கொண்டு சென்ற கடிதத்தில், "என்னுடைய படைத்தலைவனான நாமானை உமக்கு அறிமுகப்படுத்தவே இந்தக் கடிதத்தை அனுப்புகிறேன். அவருடைய நோயை நீர் நலமாக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று எழுதியிருந்தார்.

இஸ்ரயேல் அரசர் இந்தக் கடிதத்தைப் படித்ததும் மிகவும் பயந்து விட்டார். பின் உரத்தக் குரலில், "இந்த மனிதனை நான் சுகமாக்க வேண்டுமென்று சிரியா அரசர் எப்படி எதிர்பார்க்க முடியும்?" நான் கடவுள் என்று அவர் நினைக்கிறாரா? ஒருவனின் வாழ்வின் மேலும், சாவின் மேலும் எனக்கு வல்லமை உண்டா? அவர் என்னைப் பகைத்து, என்னுடன் சண்டைக்கு வர இதன்மூலம் வகை தேடுகிறாரோ?" என்று கேட்டார்.

இதைக் கேள்விப்பட்ட எலிசா உடனே அரசருக்கு ஆள் அனுப்பினார். "அரசரே நீர் ஏன் மனம் கலங்குகிறீர்? அந்த மனிதனை என்னிடத்தில் அனுப்பும். இஸ்ரயேல் நாட்டில் ஒரு இறைவாக்கினர் உண்டென்று நான் அவனுக்குக் காட்டுவேன்" என்று சொல்லச் சொன்னார்.

எனவே; நாமான் தன்னுடைய, தேர்களோடும், குதிரைகளோடும் எலிசாவிடம் சென்றார். எலிசாவின் வீட்டின் வாசலருகில் நின்றார். எலிசா தன் வேலைக்காரனை அனுப்பி நாமானிடம், "நீர் போய் யோர்தான் ஆற்றில் ஏழுமுறை மூழ்கி எழ வேண்டும். அப்படிச் செய்தால் உமது நோய் நீங்கிச் சுகமாவீர்" என்று தெரிவிக்கச் சொன்னார். இதைக் கேட்டதும் நாமானுக்குக் கோபம் வந்து விட்டது. "அவர் வெளியே வந்து எனக்காக கடவுளிடம் வேண்டுதல் செய்வார். அல்லது அவர் என் உடலைக் கைகளினால் தடவி எனக்குச் சுகம் தருவர் என்று நினைத்தேன். இதோ இஸ்ரயேலில் இருக்கும் ஆறுகளைவிட, என்னுடைய நாட்டிலிருக்கும் ஆறுகள் சிறந்தவை அல்லவா? நான் அவற்றில் மூழ்கி நலம் பெற்றிருப்பேனே! இதற்காகவா நான்

இவ்வளவு தூரம் வந்தேன்?" என்று கேட்டார்.

இதைக்கேட்ட அவரது ஊழியர்கள் தம் எஜமானிடம், "ஐயா, இந்த இறைவாக்கினர் உம்மிடம் கடினமான ஒன்றைச் செய்யச் சொல்லியிருந்தால் நீர் செய்திருப்பீர் அல்லவா? இப்பொழுது அவர் சொன்னபடி, இந்த ஆற்றில் ஏழுமுறை மூழ்கி எழுந்தால் என்ன?" என்று கேட்டார்கள். எலிசா சொன்னதுபோல நாமான் ஏழுமுறை யோர்தான் ஆற்றில் மூழ்கி எழுந்தார். என்னவிந்தை! ஏழாம் முறை மூழ்கி எழுந்தபோது அவர் முழு நலம் பெற்றிருந்தார். அவரது உடல் வலிமை பெற்றது. அவரது தோல் ஒரு குழந்தையுடைய தோலைப்போல மாறிற்று. பின்னர் அவர் எலிசாவிடம் திரும்பிச் சென்றார். "இதோ, இஸ்ரயேல் மக்களின் கடவுளைத்தவிர, வேறு கடவுள் எவரும் இல்லை என்பதை அறிந்தேன்" என்றார்.

உண்மையான இறைவாக்கினர் எசாயா

எசாயா கடவுளுக்காகப் பேச ஆயத்தமாதல்

எசாயா 6:1-8

எசாயா ஒரு இஸ்ரயேலர். அவர், கடவுளுக்கு முன்பாக நிற்கத்தக்க நல்லவன் ஒருவனும் இல்லை என்று அறிந்தார். கி.மு. 739ம் ஆண்டில் ஒருநாள் அவர் எருசலேம் ஆலயத்தில் இருக்கும்போது, அவருக்கு கடவுளின் காட்சிக்கிடைத்தது. அது மக்களிடம் பேசும் துணிவை அவருக்குக் கொடுத்தது.

உசியா அரசர் இறந்த வருடத்தில் நான் கடவுளைக் கண்டேன். அவர் உயரமும்

உன்னதமுமான அரியணையில் வீற்றிருந்தார். அவருடைய ஆடையின் தொங்கல் ஆலயம் முழுவதையும் நிரப்பிற்று. அவரைச் சுற்றிலும் ஒளிமயமான சேராபீன்கள் (தேவ கன்னிகைகள்) நின்றன. அவை ஒவ்வொன்றிற்கும் ஆறு இறக்கைகள் வீதம் இருந்தன. அவை தம் இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடியிருந்தன. இரண்டு இறக்கைகளால் தம் உடலை மூடியிருந்தன. மற்ற இரண்டால் பறந்து கொண்டிருந்தன.

''தூயவர், தூயவர், தூயவர்,
எல்லாம் வல்ல ஆண்டவர் தூயவர்,
அவருடைய மாட்சி எங்கும் நிறைந்துள்ளது''

என்று அவை கடவுளைப் போற்றிக் கொண்டிருந்தன. அவற்றின் குரலால் ஆலயம் அசைந்தது. புகையால் நிறைந்தது. இதைக்கண்ட எசாயா; ''ஐயோ எனக்கு நம்பிக்கையில்லை. பாவம் நிறைந்த சொற்களையே நான் பேசுகிறேன். பாவம் நிறைந்த சொற்களைப் பேசும் மக்கள் நடுவிலேயே நான் வாழ்கிறேன். எனினும் எல்லாம் வல்ல ஆண்டவரை நான் கண்கூடாக நேரில் கண்டேனே!'' என்றார்.

அப்பொழுது சேராபீன்களில் ஒன்று என்னிடத்தில் பறந்து வந்தது. அது பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத்தழலை ஒரு குறட்டில் எடுத்து வந்து, அதனால் என் உதடுகளைத் தொட்டது. பின்னர், ''இதோ இந்த நெருப்புத்தழல் உன் உதடுகளைத் தொட்டதினால் உன் குற்றம் யாவும் நீங்கியது. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது'' என்றது.

பின்னர் கடவுள், ''யாரை நான் அனுப்புவேன்? என்னுடைய செய்திகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் தூதுவனாகச் செய்பவர் யார்?'' என்று கேட்டார்.

அப்பொழுது நான், ''ஆண்டவரே, நான் செல்கிறேன். என்னை அனுப்பும்'' என்றேன்.

நிறைவாழ்வு பற்றிய எசாயாவின் இறைவாக்கு

ஏசாயா 11 : 1 – 9

பல துன்பங்களிடையே நிலையான சமாதானம் ஏற்படும் காலத்தை எசாயா எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் தாவீதின் தலைமுறையினரில் சிறப்பான ஒருவர் தோன்றுவார் என்று அறிந்திருந்தார். அவரே கடவுளால் தமது மக்களை மீட்க அனுப்பப்பட்டவராயிருப்பார் என்று நம்பினார். கடைசியில் தாவீது அரசரின் தலைமுறையில் இயேசு பிறந்தார்.ஆனால் அவர் மற்ற அரசர்களைவிட வேறுபட்ட ஒரு அரசர் என்பதை நீங்கள் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் படித்து அறிவீர்கள்.

தாவீதின் அரசகுலம் வெட்டி வீழ்த்தப்பட்ட ஒரு மரத்தைப் போன்றது. மரத்தின் அடித்தண்டிலிருந்து, புதிய கிளைகள் தோன்றி வளர்வதைப் போல தாவீதின் குலத்தில் ஒரு அரசர் எழும்புவார்.

அவர் எப்போதும் கடவுளுக்குக் கீழ்ப்படிவதில் மகிழ்ச்சியடைவார்.

நீதியான செயல்களை ஏழைகளுக்குச் செய்வார்.

உண்மையும், நீதியுமான வழிகளில் அவர் தமது மக்களை ஆட்சி செய்வார்.

ஓநாயும், ஆட்டுக்குட்டியும் ஒன்றாக வாழும். புலி, வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும்.

ஆட்டுக்குட்டிகளும், சிங்கக்குட்டிகளும் ஒன்றாக உணவு சாப்பிடும்.

ஒரு சிறுவன் அவற்றை நடத்திச் செல்வான்.

பசுக்களும், கரடிகளும் ஒன்றாக மேயும்.

கன்றுக்குட்டிகளும், கரடிக்குட்டிகளும் ஒன்றாகப் படுத்துக்கொள்ளும்.

சிங்கங்கள் மாடுகளைப் போல் வைக்கோல் தின்னும்.

விரியன் பாம்பின் வளையில் குழந்தைகள் விளையாடினாலும் அவர்களுக்கு ஒரு கேடும் வராது.

கடவுளின் புனித மலையாகிய சீயோனில் தீமைகளும், கேடுகளும் இல்லை.

கடல் நீரினால் நிறைந்திருக்கிறதுபோல, இந்தப் பூமி கடவுளை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

அரசன் எசேக்கியாவுக்கு ஏசாயாவின் செய்தி

ஏசாயா 36: 1,2,13 – 22; 37:5 – 7,9 – 11,14 – 22,30 – 38

எலிசாவின் காலத்திற்குப்பின் சுமார் நூறு வருடங்கள் கடந்தன. நாடு இரண்டாகப் பிரிந்திருந்தது. தெற்குப் பகுதியில் ஏசாயா வாழ்ந்து வந்தார். அசீரியாவின் அரசன் "இஸ்ரயேல்" என்னும் வடக்குப் பகுதியைப் பிடித்திருந்தான். அவன் தெற்குப் பகுதியான யூதாவையும் கைப்பற்ற நினைத்தான். அசீரியர்கள் எருசலேமைத் தாக்குவதைத் தடுக்க, ஆகாத அரசன் தேவாலயத்தில் உள்ள வெள்ளியையும், பொன்னையும் எடுத்துக் கொடுத்தான். எசேக்கியா அரசனானபோது இப்படிப் பொன்னும், வெள்ளியும் கொடுப்பதை நிறுத்தினான். இதனால் சிரியா நாட்டு அரசன் சனகெரிபு அதிகக் கோபம் கொண்டான். அவன் ஒரு பெரிய படையுடன் எருசலேமின்மீது படையெடுத்து வந்தான்.

யூதா நாட்டின் அரசன் எசேக்கியா. அசீரிய நாட்டின் அரசனான சனகெரிபு, யூதாவின் நகரங்களைப் பிடித்துக்கொண்டான். அதன்பின்னர், அவன் தன்னுடைய பெரிய படையைத் தளபதியின் தலைமையில் எருசலேமுக்கு அனுப்பினான். எசேக்கிய அரசனைத் தன்னிடம் சரணடையச் செய்யுமாறு கேட்கச் சொன்னான்.

படைத்தலைவன் எபிரேய மக்களைப் பார்த்து, "அசீரிய நாட்டு அரசனின் செய்தியைக் கேளுங்கள். எசேக்கியாவால் உங்களைக் காப்பாற்ற முடியாது. அசீரிய அரசனிடமிருந்து, எந்த நாட்டு மக்களையும் எந்தக் கடவுளும், எப்போதுமே காப்பாற்றியது கிடையாது. அப்படியிருக்க 'யாவே' எருசலேமைக் காப்பாற்றி விடுவார் என்று எப்படி நம்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

எசேக்கியாவின் கட்டளையின்படி மக்கள் அமைதியாக இருந்தார்கள்.

எசேக்கியா அரசன் அசீரிய படைத்தலைவனின் பயமுறுத்தலை, ஏசாயாவுக்குச் சொல்லியனுப்பினான். அதற்கு ஏசாயா, "எசேக்கியா அரசனே, அசீரியர்களுக்குப் பயப்படவேண்டாம். ஆனால், 'இந்த அசீரியர்கள், வதந்தி ஒன்றைக் கேட்டு தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்வார்கள். சனகெரிபு அரசன் தன் நாட்டிலேயே இறந்து போவான்' என்று கடவுள் சொல்லுகிறார்" என்று பதில் கூறினார்.

இதற்கிடையில் எகிப்தியப்படை சூடான் அரசனின் தலைமையில், தங்களைத் தாக்கப் வருவதாக, அசீரிய அரசன் கேள்விப்பட்டான். எசேக்கியா அரசனுக்கு ஒரு கடிதம் அனுப்பினான். அதில், " எசேக்கியாவே, உன்னுடைய கடவுள், என்னால் உன்னைத் தோற்கடிக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார். என்பதை நம்பி ஏமாந்து விடாதே! எங்களால் எந்த நாட்டையும் அழித்துவிட முடியும் என்பதைத் தெரிந்துகொள். நீ மட்டும் தப்பி விடலாம் என்று நினைக்கிறாயா?" என்று எழுதியிருந்தான்.

எசேக்கியா அரசன் இந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு, ஆலயத்திற்குச் சென்று, கடவுளுடைய பீடத்தில் வைத்து,

"எல்லாம் வல்ல ஆண்டவரே!
இஸ்ரயேலின் கடவுளே!
நீர் ஒருவரே, கடவுள்,
உலகத்தின் எல்லா நாடுகளையும்
ஆட்சி செய்பவர் நீரே,
வானத்தையும், பூமியையும் நீரே படைத்தீர்,
இப்பொழுதும் கடவுளே!,
எங்கள் வேண்டுதலைக் கேளும்,
எங்களுக்கு நடக்கும் செயல்களைப் பாரும்
என்றும் வாழும் கடவுளாகிய உம்மைப் பழித்து சனகெரிபு அரசன் பேசும் ஏளனமான
வார்த்தைகளைக் கவனியும்" என்று கடவுளிடம் வேண்டினான்.

எசேக்கியா வேண்டுதலை கடவுள் கேட்டார் என்ற செய்தியை அவருக்கு எசாயா சொல்லியனுப்பினார். மேலும் அவர், "சனகெரிபு அரசனே, எருசலேம் நகரம் உன்னைப் பார்த்துச் சிரிக்கிறது. இஸ்ரயேலரின் தூய கடவுளாகிய என்னை நீ இகழ்ந்திருக்கிறாய் என்பதை நீ அறிய வேண்டும்' என்று அசீரியர்களுக்கு கடவுள் தெரிவிக்கிறார்" என்றார்.

எசாயா, எசேக்கியா அரசனிடம் "இன்னும் நடைபெறவிருக்கும் ஒரு அடையாளத்தை உனக்குக் காட்டுவேன். முதல் இரண்டு வருடமும் நீங்கள் எதையும் பயிரிட மாட்டீர்கள். தானாகப் பயிராகிறதைச் சாப்பிடுவீர்கள். மூன்றாம் வருடத்தில் நீங்கள் தானியத்தை விதைத்து, அறுவடை செய்து, அதன் பலனைச் சாப்பிடுவீர்கள். திராட்சைச் செடிகளை நட்டு, அதன் கனிகளைப் புசிப்பீர்கள். மக்கள் யூதாவிலும், எருசலேமிலும் தங்கியிருப்பார்கள். கடவுள் இதைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்.

மேலும் அசீரிய அரசனைக் குறித்து கடவுள் சொல்வதைக் கேளுங்கள். அவன் எருசலேம் நகரத்தில் நுழைவதுமில்லை. ஒரு அம்புகூட எய்வதுமில்லை. அவன் வந்த வழியாகவே திரும்பிச் செல்வான். உங்கள் கடவுளாகிய நான் இதைச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய பெயருக்காகவும், தாவீதுக்கு நான் கொடுத்திருக்கிற வாக்குறுதிக்காகவும், இந்த நகரத்தைப் பாதுகாப்பேன்" என்று சொன்னார்.

கடவுளுடைய தூதர் அசீரியரின் படை முகாமுக்குச் சென்று ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் வீரர்களைக் கொன்று போட்டார். மறுநாள் காலையில் வீரர்கள் அனைவரும் இறந்து கிடப்பதைக் கண்ட அசீரிய அரசனான செனகெரிபு சீக்கிரமாகப் புறப்பட்டு, நினிவே நகரத்துக்குச் சென்று விட்டான். அங்கே ஒரு நாள் அவன் தன் கடவுளைக் கோவிலில் வழிபட்டுக் கொண்டிருந்தபோது அவனுடைய புதல்வர்களில் இரண்டு பேர் வந்து, அவனை வெட்டிக் கொன்றார்கள். இப்படிக் கடவுளுடைய வாக்கு நிறைவேறியது.

எசாயாவின் நம்பிக்கையூட்டும் வார்த்தைகள்

எசாயா 40 : 1 - 8

கடவுள் தமது இறைவாக்கினராகிய எசாயா மூலம் தனது மக்களை ஊக்கமூட்டினார். இஸ்ரயேல் மக்களில் பலர் பாபிலோனில் கைதிகளாக இருந்தார்கள். தண்டனைக் காலம் முடிந்து, அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்கு ஆபத்து நிறைந்த ஒரு கடினமான பாலைவனம் வழியாகத் திரும்பிச் செல்ல வேண்டியதிருந்தது. கடவுள் தங்களுக்கு உதவி செய்வார் என்று நம்பினார்கள்.

"பாலைவனத்தில் ஆண்டவருக்கு ஒரு வழியை ஆயத்தம் செய்யுங்கள். மலைகளையும், மேடுகளையும் தகர்த்துச் சாலைகளைச் செம்மையாக்குங்கள். அப்பொழுது அவர் தமது மேன்மையை எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்துவார். இது கடவுளின் வாக்குறுதியாகும்" என்று பாலைவனத்தில் ஒரு குரல் கேட்டது.

"கடவுளிடத்திலிருந்து வரும் இந்தச் செய்தியைச் சொல்லுங்கள்" என்று மீண்டும் அக்குரல் கூறிற்று. "என்ன செய்தியைச் சொல்ல வேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு அந்தக்குரல், "எல்லா மக்களும் புல்லைப் போலவும், ஒரு பூவைப் போலவும் இருக்கிறார்கள். நான் ஒரு காற்றை அனுப்பும்போது, அந்தப் புல் உலர்ந்து போகும். பூக்களும், வாடி, வதங்கிவிழும். ஆனால், என்னுடைய வார்த்தைகள் என்றென்றும் நிலைத்திருக்கும்" என்று கடவுள் சொல்லுகிறார்" என்றார் எசாயா.

ஒரு மீட்பர் வாக்களிக்கப்படுதல்

எசாயா 53 : 7 – 12

நம்முடைய பாவங்களுக்காக மீட்பராகிய இயேசு துன்புற்று, இறப்பதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே எசாயா இந்த வார்த்தைகளை எழுதினார். பின்னால் என்ன நடக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே கடவுள் எசாயாவுக்குக் காட்டியிருந்தார். அக்கால மக்களுக்கு இந்த வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

“அவர்கள் அவரைக் கொடுமைப் படுத்தினார்கள். ஆனால் அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவர் கொல்லப்படுவதற்குக் கொண்டு போகப்படுகிற ஆட்டுக் குட்டியைப் போலவும், உரோமம் கத்தரிக்கப்படுகிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அமைதியாக இருந்தார். அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார்கள். நம் எல்லாருக்காகவும் அவரைக்கொலைசெய்தார்கள். அவருக்காக எவருமே கவலைப்படவில்லை. அவர் ஒரு குற்றமும் செய்யாமலிருந்தபோதும், பொல்லாதவர்களை அடக்கம் செய்யுமிடத்தில் அவரை அடக்கம் செய்து கல்லறை அமைத்தார்கள்.”

நமது ஆண்டவராகிய கடவுள் கூறுகிறார். “பலருக்கு மீட்பு உண்டாகும் என்ற காரணத்தால் நான் அவரைத் துன்புற்று, இறக்க ஒப்புவித்தேன். அவர் மூலமாகப் பலர் ஆசி பெறுவார்கள். என்னுடைய திட்டத்தை நிறைவேற்றிய பின்னர் அவர் என்றென்றும் நிலைத்திருப்பார்.

மக்கள் செய்துள்ள பாவங்கள் அனைத்தையும் அவர்களுக்கு மன்னிப்பேன். மற்றவர்களுக்காகத் தான் துன்பப்பட்டது குறித்து அவர் மகிழ்ச்சியடைவார்.

இதுதான் என்னுடைய உண்மையுள்ள ஊழியன் செய்து முடித்த வேலை ஆகும்.

பாவிகளுக்காகத் தன் உயிரையும் கொடுத்தார்.

கடைசியில் அவருக்கு இத்துணை கொடுமைகளையும் செய்த பாவிகளை மன்னிக்குமாறு என்னிடம் வேண்டினார்.

ஒரு இளமையான அரசன் கடவுளுக்காகச் செயல்படுதல்

திருச்சட்ட புத்தகம் கண்டு பிடிக்கப்படுதல்

2 அரசர்கள் 22 : 1 – 13

கி.மு. 640ம் ஆண்டு யோசியா அரசன் ஆனான். அவனுக்கு முன்பிருந்த அரசர்கள் எல்லோரும் மிகவும் பொல்லாதவர்கள். தாவீது அரசரது நல்ல முன்மாதிரியைப் பின்பற்றி, யோசியா அனைத்தையும் நன்முறையில் செய்தான். அதன்பின் ஒரு விந்தையான செயல் நடந்தது.

யோசியா, யூதாவின் அரசனாகும்போது அவனுடைய வயது எட்டு. அவன் எருசலேமை 31 வருடம் ஆட்சி செய்தான். கடவுளுக்கு ஏற்புடைய எல்லாக் காரியங்களையும் செய்தான்.

யோசியா அரசனாகி 18 வருடம் ஆனபோது, அரசவைச் செயலாளரான சாப்பானை ஆலயத்திற்கு அனுப்பினான். அங்கே தலைமைக் குருவாகிய இல்க்கியா, சாப்பானிடம், “நான் ஆலயத்தில் கடவுளின் திருச்சட்ட புத்தகத்தைக் கண்டெடுத்தேன்” என்றான். அப்புத்தகத்தை வாங்கிப்படித்த சாப்பான், அரசனிடம் சென்று, “அரசரே, இல்க்கியா தந்த ஒரு புத்தகம் என்னிடம் உள்ளது” என்று சொன்னான். அரசர் கேட்கும்படியாக அதை உரக்க வாசித்தான்.

அந்தச் சட்ட நூல் வாசிக்கப்படுவதைக் கேட்ட அரசர் மிகவும் கலக்கமடைந்தார். உடனே, தலைமைக் குருவாகிய இல்க்கியா மற்றும் முதன்மை மக்களுக்கும் ஒரு கட்டளையிட்டார். “நீங்கள் போய் கடவுளிடம் இந்தச் சட்ட நூலைக் குறித்துக் கேளுங்கள். யூதா மக்களுக்காகவும், எனக்காகவும் இதைச் செய்யுங்கள். இந்த நூலிலிருக்கும் கட்டளைகள் எல்லாவற்றுக்கும் நம்முடைய மூதாதையர்கள், கீழ்ப்படியாததால், ஆண்டவர் நமது மேல் கோபமாயிருக்கிறார்” என்றார்.

அந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம்

இணைச்சட்டம் 6 : 1 – 9, 12 – 15

மக்கள் கீழ்ப்படிந்துப் பின்பற்றும்படியாக கடவுள் மோசேயிடம் பல கட்டளைகளைக் கொடுத்திருந்தார். யோசியா அரசருக்கு முந்திய பல அரசர்கள் தமது மக்களுக்கு இந்தக் கடவுளின் கட்டளைகளைப் போதிக்கத் தவறி விட்டனர்.

"நீயும், உன்னுடைய பிள்ளைகளும் உங்கள் ஆண்டவராகிய கடவுளை நேசிக்க வேண்டும். அவருடைய கட்டளைகளுக்கு உங்கள் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிய வேண்டும். உங்களுக்கு வாக்குறுதி செய்யப்பட்ட நாட்டில் நீண்ட காலம் வாழ்வீர்கள். நீங்கள் ஒரு வலிமை மிக்க மக்களினம். அந்த நாட்டில் உங்களுக்குத் தேவையான அனைத்தும் ஏராளமாக உள்ளன "இஸ்ரயேலே"! இதை நினைவில் வைத்துக்கொள். உனது ஆண்டவரே கடவுள்; அவர் ஒருவரே கடவுள். அவரிடம் எப்பொழுதும் அன்பு காட்டு; உன்னுடைய சிந்தனை, செயல் வழியாக, அவர்மீது உன் அன்பை வெளிப்படுத்து; இன்று நான் உனக்குக் கொடுக்கும் கட்டளைகளை என்றென்றும் மறந்து விடாதே; அவற்றை நீ உன்னுடைய பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடு; வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வெளியே நடந்து செல்லும்போதும், கட்டளைகளைப் பற்றியே பேசு; அவைகளை எழுதி உன் கைகளிலும், நெற்றியிலும் கட்டிக்கொள். உன் வீட்டு வாசல் நிலைகளிலும் சட்டங்களிலும், அவைகளை எழுதி வை."

"எப்பொழுதுமே கடவுளை மறந்து விடாதிருக்கக் கவனமாயிரு. அவர் உன்னை நீ அடிமையாயிருந்த எகிப்து நாட்டிலிருந்து மீட்டு, விடுவித்து, அழைத்து வந்தார். உன் ஆண்டவராகிய கடவுள்மீது அன்பு செலுத்தி அவர் ஒருவரையே எப்போதும் வழிபடு; உன்னுடைய பொருத்தனைகளை அவர் பெயரிலேயே செய்; உன்னைச் சுற்றியிருக்கிற மக்கள் செய்வதுபோல வேறு தெய்வங்களை வழிபடாதே; உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னோடிருக்கிறார். நீ அவர்மீது மட்டுமே அன்பு செலுத்து."

திருச்சட்ட நூலின் மீது உள்ள நம்பிக்கையை யோசியா புதுப்பித்தல்

2 அரசர்கள் 23 : 1 – 6

யோசியா அரசர் எருசலேமிலும், யூதா முழுவதிலுமுள்ள மக்கள் தலைவர்கள் எல்லாரையும் ஓர் இடத்தில் கூடி வரச் செய்தார். அவர் குருக்களையும் இறைவாக்கினர்களையும் அழைத்துக் கொண்டு அனைவரும் ஆலயத்திற்குள் சென்றார்கள். செல்வர்களும், ஏழைகளும், பெரியோரும், சிறியோரும் உடன் சென்றனர். எல்லோருக்கும் முன்பாக ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட திருச்சட்ட நூலை அரசர் உரத்தக் குரலில் வாசித்தார்.

பின்னர், யோசியா அரசர் பெரிய தூண் அருகில் நின்று கடவுளின் கட்டளைகள் அனைத்துக்கும் கீழ்ப்படிவதாக உடன்படிக்கை செய்தார். மக்களும் அவ்வாறே செய்தனர்.

பின்னர் யோசியா, குருக்கள் மற்றும் உதவியாளர்களிடம், விக்கிரகங்களான பாகால், அஸ்தரோத், நட்சத்திரங்கள், இதர பொருட்கள் அனைத்தையும் அகற்றி விடுமாறு கட்டளையிட்டார். அவை அனைத்தும் பட்டணத்துக்கு வெளியே, கீதரோன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் சுட்டெரிக்கப்பட்டு. அவற்றின் சாம்பல் பெத்தேலுக்கு அனுப்பப்பட்டது.

தீமையை எதிர்த்து இறைவாக்கினர் பேசுதல்

ஆமோசு, மீக்கா, ஓசேயா என்னும் இறைவாக்கினர்கள் தீமைகளை எதிர்த்துத் துணிவுடன் பேசினார்கள். கி.மு. 740 – 690 வரை உள்ள காலங்களில் வாழ்ந்தனர். "மக்கள் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் மனித நேயத்தோடு நடத்த வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்" என்று இந்த இறைவாக்கினர்கள் அறிவித்தார்கள். இவ்வாறு மக்கள் வாழவில்லையெனில் கடவுள் அவர்கள்மேல் பிரியமாய் இருக்க மாட்டார். அப்பொழுது அவர்கள் செலுத்தும் பலிகள் பயனற்றவையாயிருக்கும்.

கடவுள் தீமையை வெறுத்தல்

ஆமோசு 5 : 14,15, 21 - 24

இறைவாக்கினராக ஆமோசு இருந்த காலத்தில் இஸ்ரயேல் நாடு செழிப்பாக இருந்தது. ஆனால், செல்வந்தரிடம் மட்டுமே இருந்தது. அதனால், ஏழைகள் துன்புறுத்தப் பட்டனர். இதைக் கண்ட ஆமோசு நீதிக்காக அறைகூவினார்.

"தீமைகளைச் செய்யவேண்டாம். எப்பொழுதும் நீதியைச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் மகிழ்ச்சியுடன் வாழ்வீர்கள். நீங்கள் அறிக்கையிடுவது போலவே, எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள் உண்மையிலேயே உங்களோடிருப்பார். தீமையை வெறுத்து, நன்மையை விரும்புங்கள். நீதி மன்றங்களில் நேர்மையோடு செயல்படுங்கள். ஒருவேளை ஆண்டவர் இன்னும் உயிரோடிருக்கிற தம்முடைய மக்கள்மேல் இரக்கமாயிருப்பார்."

நமது ஆண்டவர் சொல்லுகிறார். "உங்கள் விழாக்களை நான் வெறுக்கிறேன். என்னால் அவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனக்கு எந்தக் காணிக்கைகளையும், மிருக பலிகளையும் கொண்டு வர வேண்டாம். உரத்த சத்தமான உங்கள் பாடல்களை நிறுத்துங்கள்."

"நீதி தண்ணீரைப் போலவும், நன்மை வற்றாத ஆற்றைப் போலவும் வழிந்தோடக் கடவது."

நன்மையை விரும்புதல்

மீக்கா 6 : 6 - 8

ஆமோசின் காலத்திற்குப் பின் வாழ்ந்த இறைவாக்கினர் மீக்கா, மக்களுக்கு கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் பற்றி நினைவு படுத்தினார். அவரிடம் பிரியமாயிருக்க என்ன செய்யவேண்டும் என்று எடுத்துக்கூறினார்.

"நான் விண்ணகக் கடவுளை வழிபட வரும்போது, அவருக்கு என்ன கொண்டு வரவேண்டும்? என்னுடைய கால்நடைகளில் சிறந்ததை அவருக்குப் பலியிட வேண்டுமா? காணிக்கையாக அயிரக்கணக்கான ஆடுகளைப் பலி செலுத்துவதையோ, எண்ணெயை ஆறாகக் கொட்டுவதையோ அவர் விரும்புவாரோ?"

அல்லது, எனது மூத்தக் குழந்தையை நான் கடவுளுக்குப் பலி செலுத்த வேண்டுமோ?

காணிக்கையும், பலியும் அவருக்கு வேண்டாம். கடவுள் நமக்கு, 'நன்மையானது எது' என்று கூறியிருக்கிறார். இரக்கம் காட்டுங்கள். நீதியைச் செய்யுங்கள். தாழ்மையோடு வாழுங்கள். கடவுள்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

தம்முடைய மக்களை நேசித்தல்

ஓசேயா 11 : 1 - 4

மக்கள் கொடியோராய் வாழ்வதை எதிர்த்து கடுமையாக பேசிய இறைவாக்கினர்களில் ஒசேயா ஒருவர். இங்கே மக்கள்மீது கடவுள் கொண்டுள்ள அன்பையும், இரக்கத்தையும் பற்றிப் பேசுகிறார்.

ஆண்டவர் சொல்லுகிறார், "இஸ்ரயேல் குழந்தையாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன். என்னுடைய மகனைப் போன்று அவனை எகிப்திலிருந்து மீட்டு அழைத்து வந்தேன். ஆனால், நான் அவனை என்னிடம் அழைக்க, அழைக்க, அவன் என்னைவிட்டுத் தொலைவில் விலகிச் சென்று கொண்டேயிருந்தான்."

என்னுடைய மக்கள் பாகாலுக்குப் பலிகளைச் செலுத்தினார்கள். சிலைகளுக்குத் தூபம் காட்டினார்கள். நான் அவர்களின் கைகளைப் பிடித்து நடக்கப் பழக்கினேன் என்பதை மறந்து விட்டார்கள்.

ஆனாலும் நான் அவர்களை என்னுடைய அன்பினாலும், இரக்கத்தினாலும் என் பக்கமாக இழுத்துக் கொண்டேன். அவர்களை என் கைகளில் தூக்கி, என்னுடைய கன்னத்தோடு சேர்த்துக்கொண்டேன். நான் குனிந்து அவர்களுக்கு உணவு ஊட்டினேன்.

கீழ்ப்படிதலை விரும்புதல்

திருப்பாடல் 15

கடவுளைப் போற்றுதல், வேண்டுதல், நன்றி செலுத்துதல் போன்றவை "திருப்பாடல்கள்" எனப்படும். அவை, பல்வேறு காலங்களில் எழுதப்பட்டவை. இந்தப் பாடல்களை இஸ்ரயேலர் தங்களது தனிவழிபாடுகளிலும், பொது வழிபாடுகளிலும் பயன்படுத்தினார்கள்.

அவன் எப்பொழுதும், எல்லாவற்றிலும் கடவுளுக்குக் கீழ்ப்படிவான். நேர்மையான செயலைச் செய்வான்.

தன்னுடைய வார்த்தைகளைக் கொண்டு மற்றவர்களைப் புண்படுத்த மாட்டான். பொய்ச்சான்று கூறமாட்டான். நண்பர்களுக்கு எத்தீங்கும் இழைக்கமாட்டான்

வீண்பேச்சு பேசுவதுமில்லை. தீமையை கூறுவதும் இல்லை.

இறைவனை நம்பாதவர்களை இவன் உயர்வாக கருதுவதில்லை. கடவுளுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மதிப்பளிப்பான்.

எவ்வளவு பாதித்தாலும், அவன் தன் வாக்குறுதிகளை எப்பொழுதும் உண்மையுடன் நிறைவேற்றுவான்.

தேவைப்பட்டவர்களுக்குப் பணம் கடன் கொடுப்பான். வட்டி வாங்குவதில்லை யாரிடத்திலும் லஞ்சம் வாங்க மாட்டான்.

இப்படிச் செய்பவன் கடவுளுடைய ஆசியை என்றும் பெறுவான்.

ஒரு இளமையான இறைவாக்கினர்

கடவுள் எரேமியாவை அழைத்தல்

எரேமியா 1:4 -10

அரசனான யோசியா கடவுளுடன் கொண்டிருந்த உடன்படிக்கையைப் புதுப்பிக்கப் பேராவல் கொண்டிருந்தார். ஆனால் மக்கள் அவரைப் பின்பற்றவில்லை. எனவே, எரேமியா மக்களுக்கு ஒரு கடினமான செய்தியைக் கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று.

ஆண்டவர் என்னிடம், "நீ உருவாகுமுன்னே உன்னை இறைவாக்கினனாக நான் தெரிந்து கொண்டேன். உன்னை எங்கெல்லாம் அனுப்புகிறேனோ, அங்கெல்லாம் நீ போக வேண்டும். மக்களுக்கு நான் கட்டளையிடும் எல்லாவற்றையும் நீ சொல்ல வேண்டும். நான் உன்னோடு இருப்பேன்." என்றார்.

பின்னர், தம் கைகளை நீட்டி என்னுடைய உதடுகளைத் தொட்டார். 'இன்று நான் உன்னை மக்கள் மேலும், நாடுகளின் மேலும் அதிகாரங்கள் உடையவனாக ஏற்படுத்தினேன். அவற்றைப் பிடுங்கவும், இடித்துத் தள்ளவும், அழிக்கவும், உனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் நீ அவற்றைக் கட்டவும், நாட்டவும், உதவி செய்வாய்" என்றார்.

கடவுளின் எச்சரிக்கை

எரேமியா 7:1 - 10

மக்களில் பலர், தாம் எருசலேமில் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதினர். ஏனெனில், எருசலேமில்தான் ஆலயம் இருந்தது. கடவுள் இந்த நகரத்தை எதிரிகளின் கைகளில் ஒப்படைக்க மாட்டார் என்று நம்பினார்கள். ஆனால் எரேமியா, "கடவுள் தம்முடைய சிறப்பான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களை மட்டுமே பாதுகாப்பார். திருநகரத்தில் வாழ்வது மட்டும் போதாது. தூய நடத்தை வேண்டும்" என்கிறார் என்றார்.

ஆலயத்தின் வாசலுக்குப்போய், அங்கே வழிபடவரும் தம் மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க, கடவுள் எனக்கு கட்டளையிட்டார். எனவே நான் அவர்களிடம், "உங்கள் வழிகளையும், உங்கள் செயல்களையும் சீர்ப்படுத்துங்கள். இப்படி உங்கள் வாழ்க்கை முறையை மாற்றினால்தான் உங்களை இந்த நகரத்தில் தொடர்ந்து தங்கியிருக்கப் பண்ணுவேன். 'இது கடவுளின் ஆலயம். இங்கே நாம் பாதுகாப்புடன் இருக்கிறோம்' என எண்ணிவிடாதீர்கள்."

ஒருவரோடொருவர் நேர்மையாக வாழுங்கள்; அந்நியர்களையும், அநாதைகளையும், கைம்பெண்களையும் கொடுமையாக நடத்துவதை நிறுத்துங்கள். இந்த நாடு நீங்கள் என்றென்றும் தங்குமாறு நான் உங்கள் மூதாதையர்களுக்குக் கொடுத்த நாடு ஆகும். மேலும் நீங்கள் பொய்களை நம்புகிறீர்கள். களவு செய்கிறீர்கள், கொலை செய்கிறீர்கள். உங்கள் மனைவிகளுக்கு உண்மை உள்ளவர்களாய் இருக்கவில்லை. முன்னே நீங்கள் அறிந்திராத வேறு தெய்வங்களை வழிபடுகிறீர்கள். இவ்வாறு நான் வெறுக்கும் செயல்களை நீங்கள் செய்து வருகிறீர்கள்" என்று கடவுள் எச்சரிக்கிறார். என்றார் எரேமியா.

கடவுளின் மன்னிக்கும் அன்பு

எரேமியா 31 : 31 – 34

இஸ்ரயேல் மக்கள் கடவுளுடன் செய்திருந்த உடன்படிக்கையை மீறிவிட்டார்கள். எனவே அவர்கள் பல துன்பங்களை அனுபவிக்கப் போகிறார்கள் என்று எரேமியா கண்டார். ஆனால் கடவுள், தமது மக்களுடன் ஒரு புது உடன்படிக்கை செய்யப்போகும் காலம் வந்து கொண்டிருக்கிறது என்று எரேமியா அறிந்தார். அச்செய்தியை மக்களுக்கு அறிவித்தார்.

''நான் என்னுடைய மக்களை எகிப்திலிருந்து கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்தேன். எனினும் அவர்கள் என்னுடன் செய்த உடன்படிக்கையைக் காப்பாற்றவில்லை. நான் அவர்களுடன் இப்படி ஒரு புது உடன்படிக்கைப் பண்ணப் போகிறேன்.

நான் என்னுடைய திருச்சட்டத்தை அவர்களது உள்ளங்களில் வைப்பேன். அதை இருதயங்களில் எழுதுவேன். நான் அவர்களுடைய கடவுளாயிருப்பேன். அவர்கள் என் மக்களாயிருப்பார்கள். சிறியவன் முதல் பெரியவன் வரை அனைவரும் என்னை அறிந்திருப்பார்கள்.

நான் அவர்களுடைய பாவங்களை மன்னித்து விடுவேன்.'' என்பதே கடவுளின் திருவாக்கு.

கடவுள் அளித்த தண்டனை

எரேமியா 52 : 3 – 11

பாபிலோன் அரசனாகிய நேபுகத்னேசர் கிறிஸ்துவுக்கு முன் 587ம் வருடத்தில் எருசலேம் நகரத்தைப் பிடித்துக் கொண்டான். எருசலேமிலிருந்து ஏராளமானவர்கள் கைதிகளாகப் பாபிலோனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். யூதாவின் கடைசி அரசனான செதேக்கியா அவர்களில் ஒருவன்.

ஆண்டவர், யூத மக்களிடம் அதிகக் கோபம் கொண்டார். எனவே, அவர்களை விட்டு விலகி விட்டார். பாபிலோனிய அரசனான நேபுகத்னேசருக்கு எதிராக செதேக்கியா கலகம் பண்ணினான். எனவே, நேபுகத்னேசரால் இரண்டு வருடங்கள் எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தது. அதனால் உள்ளிருந்த மக்களுக்கு உணவு இல்லாத நிலை ஏற்பட்டது.

தப்பிச் செல்வதற்காக யூதா மக்கள் மதிற்சுவரை இடித்தார்கள். ஒருநாள் இரவில் அரசனின் தோட்டத்தின் வழியாக வெளியேறினார்கள். வீரர்களின் கண்களில் படாமல் செதேக்கியா அரசனும் அவனுடைய ஆட்களும் தப்பியோடிக்கொண்டிருக்கும் போது, பாபிலோனிய வீரர்கள், எரிகோவுக்கு அருகில் செதேக்கியா அரசனைக் கைது செய்து விட்டார்கள். நேபுகத்னேசர் அரசனிடம் செதேக்கியா கொண்டு செல்லப்பட்டான். அங்கு செதேக்கியாவின் மகன்களை அவனுடைய கண்முன்னேயே கொன்றார்கள். யூதாவின் படைத்தலைவர்களையும் கொன்றார்கள். செதேக்கியாவின் கண்கள் இரண்டும் குருடாக்கப்பட்டன. அவனுயை கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. அவன் பாபிலோனுக்குக் கொண்டுச் செல்லப்பட்டு, ஆயுள் முழுவதும் அங்கே கைதியாக வைக்கப்பட்டிருந்தான்.

எரேமியாவின் எச்சரிக்கைகளை மக்கள் பொருட்படுத்தவில்லை. எனவே, மேற்கண்டவாறு கடவுளின் கடுமையான தண்டனைப் பற்றிய எச்சரிக்கை உண்மையாயிற்று.

ஒரு கீழ்ப்படியாத இறைவாக்கினர்

யோனா ஓடிப்போதல்

யோனா 1 : 1 – 6

ஒரு முறை கடவுள், இறைவாக்கினர் யோனாவிடம் 'நினிவே' பட்டணத்திற்குச் சென்று, அங்குள்ள மக்களுக்குத் தம் செய்தியை அறிவிக்குமாறு கூறினார். 'நினிவே' அசீரிய நாட்டின் தலைநகர். யோனா அங்கு செல்ல விரும்பவில்லை. ஆனாலும் கடைசியில் யோனா நினிவேக்குச் சென்றார். அங்கு 'கடவுள் எப்படி எல்லா மக்களையும் நேசிக்கிறார் ? என்பது பற்றிய பாடங்களை நேரில் கண்டு அறிந்தார்.

ஒரு நாள் கடவுள் யோனாவிடம் பேசினார். அவர் "யோனாவே, நீ நினிவே என்னும் பெரிய நகரத்துக்குப் போ. அங்குள்ள மக்களிடம், அவர்கள் தங்கள் கெட்ட வழிகளை விட்டுத் திரும்பாவிட்டால், நான் அவர்களைத் தண்டிப்பேன் என்று எச்சரிக்கை செய்" என்றார்.

ஆனால் யோனா, நினிவேக்குச் செல்ல விரும்பவில்லை. அவர் எதிர்த் திசையில் புறப்பட்டுச் சென்றார். அவர் யோப்பா பட்டணத்திலிருந்து தர்சீசுக்குச் செல்லும் ஒரு கப்பலில் ஏறினார். கடவுள் இதைக்கண்டு யோனா இருந்த கப்பல் செல்லுமிடத்தில் ஒரு புயல்காற்றை அனுப்பினார். புயல் மிகவும் பயங்கரமாக இருந்ததால் மாலுமிகள் உதவிக்காகச் கூக்குரலிட்டார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தெய்வங்களை உதவிக்கு அழைத்தார்கள். இப்படிக் கலக்கமடைந்துகொண்டிருக்கும் வேளையில், யோனா கப்பலின் அடித்தட்டில் தூங்கிக் கொண்டிருந்தார்.

கப்பல் தலைவன் யோனாவை அங்கு கண்டு, "உம்முடைய கடவுளிடம் நம்மைக் காப்பாற்ற விண்ணப்பம் செய்யும். ஒருவேளை மனமிரங்கி, நம்மைக் காப்பாற்றிவிடுவார்" என்றான்.

கடலில் எறியப்படுதல்

யோனா 1 : 7 – 17; 2 : 1, 7 – 10

மாலுமிகளிடம் எப்போதும் சில மூடப்பழக்கங்கள் இருந்து வந்துள்ளன. கப்பல் சென்றுகொண்டிருக்கும்போது கொடிய புயல்கள் தாக்கினால், தங்களுடைய தெய்வங்கள் கோபங்கொண்டுள்ளதாகவும், தங்களில் யாரோ ஒருவரைத் தண்டிக்கப் போகின்றார் என்றும் நம்பினார்கள்.

கப்பல் புயலில் சிக்கித் தவிக்கும்போது, மாலுமிகள், "நாம் இப்போது சீட்டுப் போடுவோம். இந்த அபாயத்துக்கு யார் காரணம் என்று கண்டுபிடிப்போம்" என்றார்கள். அப்படியே அந்தக் கப்பலில் இருந்த அனைவரின் பெயர்களையும் எழுதிச் சீட்டுக் குலுக்கி எடுத்தார்கள். யோனாவின் பெயர் வந்தது. அப்பொழுது அவர்கள் யோனாவிடம், "நீர் இந்த ஆபத்தில் எப்படிச் சிக்கிக் கொண்டீர்? நீர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? எல்லாத் தகவல்களையும் எங்களிடம் கூறும்" என்றார்கள்.

அதற்கு யோனா, நான் ஒரு எபிரேயன். மகா வல்லமையுள்ள ஆண்டவராகிய கடவுளை வணங்குபவன் என்றும், கடவுள் தன்னிடம் நினிவேக்குப் போகக் கூறியதையும், அதற்குத் தான் கீழ்ப்படியாமல், எதிர்த்திசையில் தர்சீசுக்குப் போய்க்கொண்டிருப்பதையும் கூறினார். யோனா கடவுளுக்குக் கீழ்ப்படியாததுதான் புயலுக்குக் காரணம் என்று மாலுமிகள் அறிந்தார்கள். புயல் மேலும் வலுத்தது. மாலுமிகள் மிகவும் பயந்து, யோனாவிடம், "இந்தப் புயலிலிருந்து நாங்கள் தப்ப வேண்டும். அதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டார்கள். யோனா, தயக்கமின்றி அவர்களிடம், "நீங்கள் என்னைத் தூக்கி கடலில் எறிந்து விடுங்கள். உடனே கடல் அமைதியாகும். என்னால்தான் நீங்கள் அபாயத்தில் சிக்கியிருக்கிறீர்கள்" என்றார்.

மாலுமிகள் கப்பலைச் சேதமின்றிக் கரையில் கொண்டு சேர்க்க பெரிதும் முயன்றார்கள். ஆனால் புயல் வலுத்ததால், எங்கும் ஒதுங்க வழியில்லாதிருந்தது. எனவே அவர்கள் கடவுளிடம், "ஆண்டவரே! இந்த மனிதனை நாங்கள் கடலில் தூக்கிப் போடுகிறோம். அந்தப் பழி எங்கள் மீது விழாமல் செய்வீராக என வேண்டுகிறோம். இது இப்படி நடக்க வேண்டுமென்று நீர் திட்டமிட்டிருக்கிறீர்" என்றார்கள்.

பின் அவர்கள் யோனாவைத் தூக்கி கடலில் எறிந்தார்கள். உடனே கடல் அமைதியாயிற்று.

கடவுளின் கட்டளைப்படி, கடலில் ஒரு பெரியமீன் வந்து யோனாவை விழுங்கிவிட்டது. அவர் மீனின் வயிற்றில் மூன்று நாள் இரவும், பகலும் இருந்தார். கடலின் ஆழத்தில், மீனின் வயிற்றில் இருக்கும்போது யோனா தன்னுடைய கடவுளிடம் ஒரு விண்ணப்பம் செய்தார்.

"ஆண்டவரே, என்னுடைய வலிமை முழுவதையும் இழந்து நான் சோர்வடையும்போது, நான் உம்மிடம் விண்ணப்பம் செய்தேன். நீர் அதைக் கேட்டீர். இதோ! சிலைகளை வழிபடுகிறவர்களுக்கு உம்மீது நம்பிக்கை இல்லை. நான் உம்மைத் துதித்துப் பாடுவேன். நான் உமக்கு ஏற்புடைய பலிகளைச் செலுத்துவேன். நான் நேர்ந்து கொண்டதைச் செலுத்துவேன். என்னுடைய கடவுள் எப்பொழுதும் காப்பாற்றுகிறவர்" என்று கூறினார். பின்னர் கடவுள் மீனுக்குக் கட்டளையிட்டபடியினால் அந்த மீன் கரைக்கு வந்து யோனாவை உமிழ்ந்துவிட்டது.

இரண்டாம் வாய்ப்புப் பெறுதல்

யோனா 3 : 1 – 10

மறுபடியும் கடவுள் யோனாவிடம் பேசினார். அவர், "யோனாவே, நீ நினிவே என்னும் அந்தப் பெரிய நகரத்துக்குச் செல். நான் உன்னிடத்தில் சொல்லியிருக்கும் செய்தியை அங்குள்ள மக்களுக்குக் கூறு" என்றார். இப்பொழுது யோனா, கடவுளுக்குக் கீழ்ப்படிந்து, நினிவே நகரத்துக்குச் சென்றார். அந்த நகரம் மூன்று நாள் பயணத்தொலைவு அகலம் கொண்டது. அந்த நினிவே நகர மக்களைப் பார்த்து, "இன்னும் நாற்பது நாட்களுக்குள் இந்த நகரம் அழிக்கப்பட்டுவிடும்" என்றார்.

இந்த எச்சரிப்பைக் கேட்ட நினிவேயின் அரசன் சாக்கு உடை உடுத்திக்கொண்டு சாம்பலின்மேல் உட்கார்ந்தான். நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு செய்தியை அனுப்பினான். "நினிவே நகரத்தில் உள்ள எல்லா மக்களும், கால்நடைகளும், உணவு சாப்பிடாமலும், தண்ணீர் குடியாமலும் நோன்பு இருக்க வேண்டும். எல்லா மனிதர்களும், சாக்கு உடை உடுத்திக் கொள்ள வேண்டும். மக்கள், தங்கள் முழு உள்ளத்தோடும் கடவுளிடம் விண்ணப்பம் பண்ண வேண்டும். அவர்கள் தங்களது பொல்லாத வழிகளை விட்டுத் திரும்ப வேண்டும். அப்படிச் செய்தால் ஒருவேளை கடவுள் நம்மீது கோபமாயிருப்பதை நிறுத்தி, நாம்மைக் காப்பாற்றலாம்." என்றான்.

அரசனின் ஆணைப்படியே நினிவேயின் மக்கள் செய்தைக் கடவுள் கண்டார். தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டார்.

யோனாவின் கோபமும், கடவுளின் இரக்கமும்

யோனா 4 : 1 – 11

"நினிவே மக்களுடைய பாவங்களுக்காக அவர்கள் தண்டிக்கப்படவில்லை" என்று கண்டு யோனா மிகவும் கோபமடைந்தார். எனவே ,அவர் கடவுளிடத்தில் "ஆண்டவரே, நீர் இப்படிச் செய்வீர் என்று எனக்கு முன்னமே தெரியும். எனவேதான் நான் உம்மைவிட்டு விலகி, தர்சீசுக்கு ஓடிப்போக முயற்சி செய்தேன். நீர் மிகுந்த அன்பும், இரக்கமும் உள்ள கடவுள் என்று அறிவேன். நீர் எப்பொழுதும் நீடிய பொறுமை உடையவர்; இரக்கம் உள்ளவர். மக்களைத் தண்டிக்கவும், அழிக்கவும் விரும்பாதவர் என்பது எனக்குத் தெரியும். நீர் அப்படியே செய்து விட்டீர். எனவே, நான் இறப்பது நல்லது. என் உயிரை எடுத்துக்கொள்ளும். நான் இனிமேல் உயிர் வாழ விரும்பவில்லை" என்றார்.

அதற்குக் கடவுள் யோனாவிடம், "நீ இப்படிக் கோபம் கொள்ள உனக்கு என்ன உரிமை இருக்கிறது ?" என்று கேட்டார்.

யோனா அங்கிருந்து புறப்பட்டு நகரத்துக்குக் கிழக்கே போய், ஓர் இடத்தில் ஒரு குடிசையைப் போட்டு அதில் உட்கார்ந்தார். கடவுள் யோனாவுக்கு நிழல் தரக்கூடிய ஆமணக்குச் செடியை ஒரேநாளில் முளைத்து வளரச் செய்தார். நிழலைக் கொடுத்த அந்தச் செடிக்காக யோனா மகிழ்ச்சியடைந்தார். ஆனால், மறுநாள் அதிகாலையில் கடவுளின் கட்டளைப்படியே ஒரு புழு அந்தச் செடியின் இலைகள் முழுவதையும் அரித்துத் தின்றுவிட்டது. சூரியன் உதயமான பின்பு

கடவுள் ஒரு வெப்பக்காற்றை அங்கு வீசச் செய்தார். யோனாவுக்கு மயக்கம் வந்தது. அவர் சாவை விரும்பினார். அப்பொழுது கடவுள் "யோனாவே, இந்தச் செடிக்காகக் கோபப்பட உனக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு யோனா, "எனக்குக் கோபப்பட உரிமை இருக்கிறது. நான் இறந்து போகும் அளவுக்குக் கோபம் கொண்டிருக்கிறேன்" என்றார். அப்பொழுது கடவுள், "நீ இந்தச் செடியை நடவும் இல்லை. வளர்க்கவும் இல்லை. நீ அந்தச் செடிக்காகக் கவலைப்படுகிறாயே! ஒரு இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கதிகமான, நன்மை தீமை இன்னது என்று அறியாத மனிதர்களும், ஏராளமான கால்நடைகளும் இந்தப் பெரிய நகரத்தில் வாழ்ந்து வருகின்றனவே! அவைகளுக்காக நான் இரக்கமும், பரிதாபமும் கொள்ளாமல் இருப்பேனா?" என்று கேட்டார்.

தங்கள் தீய வழிகளைவிட்டுத் திரும்பும் மக்களைக் கடவுள் மன்னித்து அன்பு காட்டுவார் என்பதை இதன் மூலம் உணருகிறோம்.

வேற்று நாட்டில் சிறை வாழ்வு

உறுதியான இறை நம்பிக்கை கொண்டவர்

அரசவையில் தானியேல்

தானியேல் 1 : 3 – 20

தானியேல் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அவர் இப்பொழுது பாபிலோனில் சிறைக் கைதியாக இருக்கிறார். அவர் தனிப் பயிற்சி பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னால் நாட்டின் முதன்மை அதிகாரி ஆனார். அவருடைய சொந்த நாட்டைவிட்டு வெகு தூரத்தில் தற்போது இருக்கிறார். எனினும் அவர் தம் கடவுளை நேசிப்பதையும் அவருக்குத் தொண்டு செய்வதையும் ஒரு போதும் நிறுத்தவில்லை.

அரசராகிய நேபுகத்னேசர் தனக்கு கீழ் தலைமை அதிகாரியாகிய இருந்த அசுப்பேனாசிடம், யூத கைதிகளிலிருந்து சில வாலிபர்களை உடனே தேர்ந்தேடுக்கக் கட்டளையிட்டார். இளைஞர்களாகவும், அரச குலத்தவர்களாகவும் உயர் குடிப் பிறந்தவர்களாகவும், இருக்க வேண்டும். மேலும் அவர்கள் அழகிய தோற்றம் உடையவர்களாகவும், எல்லா வகையிலும் அறிவுடையவர்களாகவும், நல்ல பயிற்சி பெற்றவர்களாவும் இருக்க வேண்டும். மேலும் அவர்கள் புதிய கருத்துக்களைக் கற்றுக் கொள்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும், நல்ல உடல் நலம் உள்ளவர்களாவும் இருக்க வேண்டும். அரச சபையில் சேவை புரிவதற்கான பயிற்சியைப் பெற வேண்டும். அவர்களுக்கு அசுப்பேனாசு பாபிலோனிய மொழியை, எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு அரசருக்குரிய உணவும், திராட்சை ரசமும் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு மூன்று வருடம் பயிற்சி முடிந்த பின்பு அவர்கள் அரசனின் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா என்போர் இருந்தனர். இவர்கள் நால்வரும் யூதா குலத்தில் பிறந்தவர்கள்.

தலைமை அதிகாரி இவர்களில்
தானியேலுக்கு 'பெல்தே சாத்சார்' என்றும்,
அனனியாவுக்கு 'சாத்ராக்கு' என்றும்,
மிசாவேலுக்கு 'மேசாக்கு' என்றும்,
அசரியாவுக்கு 'ஆபேத்நேகோ' என்றும்,
பெயரிட்டார்.

தானியேல் உண்பதிலும், குடிப்பதிலும்

கடவுளின் கட்டளையை மீற விரும்பவில்லை. ஆகவே தனக்கு உதவி செய்யும்படி அசுப்பேனாசிடம் வேண்டினார். தானியேலிடம் இரக்கமாயிருக்கும்படி அசுப்பேனாசின் மனதைக் கடவுள் மாற்றினார். இருப்பினும் அசுப்பேனாசு அரசனுக்குப் பயப்பட்டார். அவர் தானியேலிடம், ''இளைஞர்களாகிய நீங்கள் எதைச் சாப்பிட வேண்டும், எதைக் குடிக்க வேண்டும் என்று அரசர் தீர்மானித்துச் சொல்லி இருக்கிறார். நீங்கள் அவர் முன்னிலையில் நிற்கும் போது மற்ற இளைஞர்களைப் போல் நீங்களும் வலிமை உடையவர்களாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அரசர் என்னைக் கொன்று போடுவார்'' என்றார்.

அப்பொழுது தானியேல், உணவு வழங்கும் பொறுப்பாளரிடம் சென்று, ''ஐயா, பத்து நாட்கள் எங்கள் நால்வரையும் சோதித்துப்பாரும். எங்களுக்குப் பருப்பு, காய்கறிகள், தண்ணீர் இவற்றை மட்டும் தாரும். மற்றவர்கள் அரச உணவைச் சாப்பிடட்டும். பத்து நாட்களுக்குப் பின்பு, நீர் எங்களை அவர்களுடன் ஒப்பிட்டுப்பாரும்'' என்றார்.

இதற்கு அந்தப் பொறுப்பாளர் ஒப்புக் கொண்டார். இம்முறையில் பத்து நாட்கள் முடிந்த பின்னர் அவர்களின் தோற்றம் கவனிக்கப்பட்டது. அரச உணவைச் சாப்பிட்டு வந்த மற்ற வாலிபர்களைக்காட்டிலும் மிக அதிக நலமும், வலிமையும் உடையவர்களாக இந்த நால்வரும் காணப்பட்டார்கள். எனவே அந்நேரம் முதல் அவர்கள் நால்வரும் அரச உணவை விட்டு, தொடர்ந்து காய்கறி உணவையே சாப்பிட பொறுப்பாளர் அனுமதியளித்தார்.

கடவுள் அந்த நான்கு இளைஞர்களுக்கும் எல்லாவற்றையும் கற்பதற்குரிய சிறந்த ஞானத்தைக் கொடுத்தார். தானியேல் கனவுகளையும், காட்சிகளையும் புரிந்து கொள்ளும் சிறப்பான திறமையைப் பெற்றார்.

அரசனால் குறிக்கப்பட்ட மூன்று வருடங்கள் முடிந்தன. அசுப்பேனாசு, பயிற்சி பெற்ற எல்லா இளைஞர்களையும் நேபுகத்னேசர் அரசர் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார். அரசர் அவர்களுடன் பேசினார். அரசர் கேட்டவற்றுக்கு அந்த நாடு முழுவதிலுமுள்ள சோதிடர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் தெரிந்திருந்ததை விட பத்து மடங்குக் கூடுதலாகத் தானியேலுக்கும் அவனது நண்பர்களுக்கும் தெரிந்திருந்தது. எனவே, அரசன் தானியேலைத் தன்னுடைய அரண்மனையிலேயே தங்க வைத்துக் கொண்டார்.

கொழுந்து விட்டெரியும் தீச்சூளை

தானியேல் 3 : 1, 2, 5, 6, 8, 12, 17 – 30

இந்த வரலாறு, "கடவுளிடம் உண்மையான விசுவாசம் வைத்திருப்பவர்கள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை" என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள உதவிற்று.

அரசனாகிய நேபுகத்னேசர் ஒரு மிகப் பெரிய பொன்னாலான சிலையைச் செய்தார். அதைத் 'தூரா' என்னும் சம பூமியில் மக்கள் வழிபடுவதற்காக நிறுத்தினார். அரசர் அவருடய எல்லா சிற்றரசர்கள், ஆளுநர்கள், மற்றும் அதிகாரிகளும் அந்தச் சிலையை வணங்கும்படிக் கூடிவரச் செய்தார். இது தொடர்பாக அரசர் வெளியிட்ட ஆணை:

"இசைக்கருவிகள் ஒலிப்பதைக் கேட்டவுடன் அரசர் உண்டாக்கிய இந்தச் சிலையைத் தலைகுனிந்து எல்லோரும் வணங்க வேண்டும். அப்படி வணங்காதவன் யாராயிருந்தாலும், அவன் கொழுந்து விட்டெரியும் தீச்சூளையில் எறியப்படுவான்".

அப்பொழுது சில அதிகாரிகள், யூதர்களிடம் குற்றம் கண்டுபிடிக்க விரும்பினார்கள். சிலை வணக்கம் ஆரம்பித்த பின்னர், அவர்கள் தானியேலின் நண்பர்கள் மீது குற்றம் சாட்டினார்கள். அவர்கள் அரசனிடம், "மேன்மை தங்கிய அரசே! மூன்று மூத்த யூத அதிகாரிகளான சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நேகோ என்பவர்கள் உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் உமது கடவுளை வழிபடவில்லை. நீர் அமைத்த பொற்சிலைக்கு தலைவணங்கவுமில்லை" என்றார்கள்.

அரசர் அவர்களை அழைத்து அந்தச் சிலையைப் பணிந்து கொள்ளக் கட்டளையிட்டார். ஆனால், அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

அவர்கள் அரசரிடம், "மேன்மை தங்கிய அரசே! நாங்கள் வழிபடும் கடவுள் வல்லமையுடையவர். அவர் எங்களை உம்முடைய வெப்பமான தீச்சூளையிலிருந்து காப்பாற்றுவார். உம்முடைய



அதிகாரத்திலிருந்தும் அவர் எங்களைக் காப்பாற்றுவார். ஒரு வேளை, அவர் அப்படிக் காப்பாற்றாவிட்டாலும், நாங்கள் உம்முடைய கடவுளை வழிபடமாட்டோம். நீர் அமைத்துள்ள பொற்சிலைக்கு தலை வணங்கவும்மாட்டோம்'' என்றார்கள்.

இதைக் கேட்டதும் அரசனின் முகம் சினத்தால் சிவந்தது. அவர் தீச்சூளையை ஏழு மடங்கு இன்னும் அதிகச் சூடுள்ளதாக ஆக்கக் கட்டளையிட்டார். அவர் தன்னுடைய படையிலுள்ள மிகவும் ஆற்றல் பொருந்திய வீரர்களை அழைத்தார். அவர்களிடம், 'இந்த மூவரையும் கட்டி தீச்சூளையில் தூக்கி எறியுங்கள்'' என்றார். உடனே அவ்வீரர்கள் அந்த மூவரையும் அவர்களுடைய ஆடைகளோடு கட்டித் தூக்கி தீச்சூளையில் எறிந்தார்கள். அந்த மூவரையும் தூக்கி எறியச் சென்ற வீரர்கள் அனைவரையும், அந்தத் தீச்சூளையின் நெருப்பும், வெப்பமும் எரித்துப் பொசுக்கிவிட்டது. சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நேகோ என்ற மூன்று இளைஞருமே தீச்சூளையின் நெருப்பில் விழுந்தார்கள்.

திடீரென்று நேபுகத்னேசர் வியப்புடன், குதித்தெழுந்தார். அவர் தன்னுடைய அதிகாரிகளிடம், "நாம் மூன்று பேரைத்தானே கட்டித் தீச்சூளையில் போட்டோம்?'' என்று கேட்டார்.

அவர்கள், "ஆம். அரசரே'' என்றார்கள்.

அவர்களிடம் அரசர், "ஆனால் நான்கு பேர் நெருப்பில் சுற்றி நடந்து கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன். அவர்கள் கட்டப்பட்டிருக்கவில்லை. அவர்களின் உடைகள் கருகவில்லை. அவர்களது உடல்கள் எரியவுமில்லை. நான்காவது மனிதன், வான தூதரைப் போல் இருக்கிறான்'' என்றார்.

எனவே, நேபுகத்னேசர் தீச்சூளையின் வாசலுக்குச் சென்றார். 'சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நேகோ என்னும் உன்னதமான கடவுளின் ஊழியரே, வெளியே வாருங்கள்'' என்றார். அந்த இளைஞர்கள் மூவரும் தீச்சூளையிலிருந்து வெளியே வந்தார்கள். உடனே எல்லா இளவரசர்களும், ஆளுநர்களும், மற்ற அதிகாரிகளும் இந்த மூன்று வாலிபர்களையும் பார்க்க கிட்ட

நெருங்கிவந்து, சூழ்ந்து நின்றார்கள். அந்த மூவரும் நெருப்பினால் பாதிக்கப்படவில்லை. அவர்களுடைய தலைமுடியும், ஆடைகளும் கருகவில்லை. அவர்களிடம் புகையின் வாசனையும் இல்லை.

இதைக்கண்ட அரசர், "சாத்ராக்கு, மேசாக்கு, அபேத்நேகோ என்னும் இவர்களுடைய கடவுளைப் போற்றுவோம். தம்மை நம்பி வழிபடும். அவருடைய ஊழியர்களாகிய இந்த மூவரையும், அவர் தமது தூதரை அனுப்பி காப்பாற்றியிருக்கிறார். அவர்கள் என்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. தங்களுடைய கடவுளைத் தவிர, வேறு கடவுளைத் தலைவணங்கி வழிபாடு செய்யாததால் தங்கள் உயிர் போனாலும் பரவாயில்லை என்று நினைத்தார்கள்.

இவர்களைக் காப்பாற்றியது போல வேறெந்தக் கடவுளாலும் செய்ய முடியாது".

அவர்களுடைய கடவுளுக்கு எதிராக என்னுடைய நாட்டிலுள்ள யாராவது பேசினால், அவன் துண்டித்துப் போடப்படுவான். அவன் வீடு உடைத்து நொறுக்கப்படும் என்றார்.

மேலும் அரசர், அவர்களைத் தன்னுடைய பாபிலோன் நாட்டில் மிக உயர்ந்த பதவிகளில் அமர்த்தினார்.

சுவரில் தோன்றிய சொற்றொடர்

தானியேல் 5 : 1 – 12

பின்பு நேபுகத்னேசர் கடவுளின் கோபத்தினால் பைத்தியம் பிடித்தவர் போலானார். மிருகங்களைப் போல நடந்து கொண்டார். ஏழு ஆண்டுகளுக்குப்பிறகு அவர் நலமடைந்தார். 'உன்னத கடவுளே உண்மையான கடவுள்' என்று அறிக்கை செய்தார். அவர் இறந்த போது அவருடைய மகன் பெல்தேசாத்சார் அரசரானார்.

ஒருநாள் இரவில் அரசரான பெல்தேசாத்சார் நாட்டின் முதன்மைக் குடிமக்கள் ஆயிரம் பேரை ஒரு பெரிய விருந்துக்கு அழைத்தார். எருசலேம் ஆலயத்திலிருந்து, அவரது தந்தை கொண்டு வந்திருந்த பொன், வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டுவரும்படி தன் ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார். பெல்தேசாத்சாரும் அவரது குடும்பத்தாரும், விருந்தாளிகளும் அன்று அந்தப் பாத்திரங்களில் குடித்தார்கள். மேலும் தங்கள் பொன், வெள்ளி மற்றும் வேறு பொருட்களால் செய்யப்பட்ட தெய்வங்களைப் புகழ ஆரம்பித்தார்கள்.

திடீரென்று அரண்மனையில் பளிச்சிடும் உயர்ந்த சுவரில் ஒரு கை வந்து எழுதுவதை

அரசர் கண்டார். உடனே அவருடைய முகம் பயத்தால் வெளிறியது. கால்கள் நடுங்கின. அவர் தனது நாட்டிலுள்ள சோதிடர்கள், ஞானிகள், மந்திரவாதிகள் அனைவரையும் அழைத்துவரும்படி உத்தரவிட்டார். அவர்கள் வந்து கூடினார்கள். அரசர் அவர்களிடம் உங்களில் யாரவாது இந்தச் சுவரில் எழுதியுள்ளதைப் படித்து, அதன் பொருள் என்ன என்பதை எனக்கு விளக்கிக் கூறுங்கள்." என்றார். ஆனால், அங்கு கூடியிருந்தவர்களில் எவராலும் அந்த எழுத்தை வாசிக்கவும், அதன் பொருளைக் கூறவும் முடியவில்லை. எனவே, அரசர் மேலும் பயங்கொண்டார். அதனால் அவரது முகம் வெளிறிவிட்டது.

அரசருடைய தாய் அவரிடம் வந்து, "மேன்மை தங்கிய அரசரே, நீர் பயப்படவும், கலங்கவும் வேண்டாம். கடவுளின் வல்லமையைப் பெற்ற ஒரு மனிதன் இருக்கிறான். உம்முடைய தந்தை அரசராயிருந்த போது அந்த மனிதன் வந்து தன்னுடைய அறிவையும், ஞானத்தையும் வெளிப்படுத்தியுள்ளான். அவன் எல்லா வகையான புதிர்களையும், கனவுகளையும் விடுவித்துத் தெளிவான விளக்கங்களைக் கூறுவதில் வல்லவன். எனவே 'தானியேல்' என்னும் பேர் கொண்ட அந்த மனிதனை அழைத்து வரச் சொல்லும். அவன் இதன் பொருளை உமக்கு விளக்கிக் கூறுவான்' என்றாள்.

தானியேல் சொற்றொடரின் பொருள் கூறுதல்

தானியேல் 5 : 13 – 31

தானியேல் அரசரிடம் அழைத்துவரப் பட்டார். அரசர் அவரிடம், "என்னுடைய தந்தையாகிய அரசர் யூதா நாட்டிலிருந்து கொண்டுவந்த 'தானியேல்' நீ தானா? உன்னிடத்தில் கடவுளின் ஞானமும் வல்லமையும் உண்டென்று கேள்விப்பட்டேன். நான் நாட்டிலுள்ள எல்லா ஞானிகளையும் வரவழைத்து இந்தச் சுவரிலுள்ள எழுத்தைப் படித்து அதன் பொருளை எனக்குக் கூறுமாறு கேட்டேன். அவர்களால் முடியவில்லை.

புதிர்களுக்கு விளக்கம் கூற உன்னால் முடியும் என்று கேள்விப்பட்டேன். நீ இந்த எழுத்தைப் படித்து, அதன் பொருளை எனக்கு விளக்கிக் கூற வேண்டும். அப்படிக் கூறினால், உனக்கு அரசருடைய ஆடைகள் உடுத்துவிக்கப்பட்டு உன் கழுத்தில் பொன் சங்கிலி அணியப்பட்டு நீ இந்த நாட்டின் மூன்றாம் தலைவராக நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்படுவாய்'' என்றார்.

அதற்குத் தானியேல், "மேன்மை தங்கிய அரசரே! எனக்கு உம்முடைய கொடைகள் தேவையில்லை. தயவு செய்து அவற்றை வேறு யாருக்காவது கொடும். நான் இந்தச் சுவரிலிருக்கும் எழுத்தைப் படித்து அதன் பொருள் என்ன என்று உமக்கு விளக்கிக் கூறுவேன்'' என்றார். பின் தானியேல் பேசத் தொடங்கிக் கூறியதாவது:

"உன்னத கடவுள் உமது தந்தையை ஒரு பேரரசராக ஆக்கி அவருக்குப் பேரும் புகழும், அதிகாரமும் கிடைக்கச் செய்தார். அவருக்கு உலகில் எங்குமுள்ள நாட்டு மக்கள் அனைவரும் அவரைக் கண்டு பயப்படும் அளவிற்கு அவருடைய மேன்மை பெருகியிருந்தது. அவர் யாரையாவது கொல்ல நினைத்தால், கொன்றார். வாழ வைக்க நினைத்தால் வாழவைத்தார். ஆனால் அவர் பெருமை கொண்டவராகவும், பிடிவாதம் உடையவராகவும், கொடுமை நிறைந்த வராகவும் இருந்தார். எனவே, கடவுள் அவரை அரியணையிலிருந்து அகற்றி விட்டார். அவர் தம்முடைய மக்களிடத்திலிருந்து தள்ளப்பட்டு, மிருகத்தைப் போல வாழ வேண்டியதாயிற்று. அவர் காளையைப் போல் புல்லை மேய்ந்தார். பனியிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள போர்வை கூட இல்லாமல் திறந்த வெளியில் படுத்து உறங்கினார். கடைசியில் அவர் உன்னத கடவுள் எல்லா அரசர்களையும் கட்டுப்படுத்துகிறவர் என்று அறிந்தார். கடவுள் அதிகாரத்தைத் தான் விரும்புகிறவர்களுக்குக் கொடுப்பார் என்றும் உணர்ந்தார்.

அவருடைய மகனாகிய நீர் இவையனைத்தையும் அறிந்திருந்தும், பெருமையுடையவராயிருக்கிறீர். உன்னத கடவுளுக்கு விருப்பமில்லாத செயல்களைச் செய்கிறீர். அவருடைய ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பாத்திரங்களை எடுத்து வரச் சொன்னீர். நீரும், உமது பிரபுக்களும், உமது மனைவிகளும் அப்பாத்திரங்களில் திராட்சை மது குடித்தீர்கள். உலோகம், மரம், கல் இவற்றால் செய்யப்பட்ட தெய்வங்களைப் புகழ்ந்தீர்கள். அவைகள் கண்ணிருந்தும் காணமுடியாததும், காதிருந்தும் கேட்க முடியாததுமான தெய்வச்சிலைகள். அவைகளுக்கு ஒன்றுமே தெரியாதது. ஒருவனுக்கு உயிரைக் கொடுக்கவும், எடுக்கவும் வல்லமையுடைய கடவுளை நீங்கள் மகிமைப்படுத்தவில்லை. அவர் நீர் செய்கிற எல்லாவற்றின் மேலும் அதிகாரம் உடையவர். எனவே தான், அவர் ஒரு கையை அனுப்பி, இந்த வார்த்தைகளை எழுதச் செய்திருக்கிறார்.

சுவரில் எழுதப்பட்டுள்ள சொற்கள்:

"மெனே மெனே''

"தெக்கேல்''

"உப்பார்சின்''

அவற்றின் பொருள் பின்வருமாறு:

மெனே மெனே என்பதற்கு: கடவுள் உம்முடைய ஆட்சியின் நாட்களை எண்ணி, அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டார்.

தெக்கேல் என்றால்: நீர் தராசிலே வைத்து எடை பார்க்கப்பட்டீர். உம் எடை மிகவும் குறைவாயிருக்கிறது என்றும்.

உப்பார்சின் என்பதற்கு : உம்முடைய அரசு பிரிக்கப்பட்டு மேதியருக்கும் மற்றும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்று பொருள் என்றார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட அரசர், தன்னுடைய ஊழியர்களிடம் தானியேலுக்கு அரசருடைய ஆடைகளை அணிய ஆணையிட்டார். அவருடைய கழுத்திலே ஒரு தங்கச் சங்கிலியைப் போடவும் உத்தரவிட்டார். பின்னர் அரசர், தானியேலை தன்னுடைய அரசின் மூன்றாம் தலைவராகத் அமர்த்தினார்.

அதே இரவில், பாபிலோனிய அரசரான பெல்தேசாத்சார் மேதியரால் கொல்லப்பட்டார். அதன் பின்பு அறுபத்திரண்டு வயதான தரியு என்பவர் அவரது இடத்தில் அரசரானார்.

சிங்கங்களின் நடுவே தானியேல்

தானியேல் 6 : 1 – 28

அரசராகிய தரியு தன்நாடு எங்கும் ஆளுநர்களை நியமித்தார். இந்த ஆளுநர்களை மேற்பார்வையிட தானியேலையும், வேறு இரண்டு அதிகாரிகளையும் நியமித்தார். சிறிது காலத்துக்குள் அரசர் மற்ற இரு அதிகாரிகளையும் விட தானியேல் மிகத் திறமையும், நேர்மையும் உடையவர் என்று கண்டார். எனவே; அந்த இரு அதிகாரிகளுக்கும் மேலாகத் தானியேலை உயர்த்த அரசர் நினைத்தார். மற்ற அதிகாரிகள் இதைக்கண்டு, தானியேல் மீது பொறாமை கொண்டு, அவரிடம் குற்றம் கண்டு பிடிக்க முயற்சித்தார்கள். அவருடைய கடமைகளில் அவர் எப்பொழுதும் உண்மையாகவும், கவனமாகவும் நடந்து கொண்டபடியால் அவர் மேல் குற்றம் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் "நாம் தானியேலிடம், அவருடைய கடமைகளில் குற்றம் கண்டு பிடிக்க முடியவில்லை. அவருடைய சமய வழிபாட்டு முறையில்மட்டுமே குற்றம் கண்டுபிடிக்க முடியும்" என்று பேசிக் கொண்டனர்.

எனவே, அவர்கள் அரசரிடம் சென்று, "மேன்மை தங்கிய அரசரே! உமது ஆட்சியின் உயர் அதிகாரிகளாகிய நாங்கள், உம்மிடம் ஒரு விண்ணப்பம் செய்கிறோம். நாடு முழுவதும் எல்லா மக்களும் முப்பது நாட்கள் அரசராகிய உம்மைத் தவிர வேறெந்தத் தெய்வத்திடமும் விண்ணப்பம் செய்யக் கூடாது. நீர் இடும் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் சிங்கங்கள் நிறைந்த ஆழக்குழிக்குள் போடப்பட வேண்டும். இந்த ஆணையில் நீர் கையெழுத்திட்டால் அது நாட்டின் பொதுவான ஒரு சட்டம் ஆகிவிடும். அதை ஒருவராலும் மாற்ற முடியாது" என்றார்கள். எனவே, தரியு அரசர் அந்த ஆணையில் கையெழுத்திட்டார்.

தானியேல் இந்தக் கட்டளையைக் குறித்துக் கேள்விப்பட்டார். எனினும், அவர் தன் வீட்டின் மேல் அறைக்கு ஏறிச் சென்றார். வழக்கம் போல் எருசலேமுக்கு நேராக ஜன்னல்களைத் திறந்து வைத்துக் கொண்டு முழங்காற் படியிட்டுக் கடவுளிடம் வேண்டுதல் செய்தார். நாள் தோறும் மூன்று வேளையும் இவ்வாறு இறை வேண்டல் செய்து வந்தார்.

தானியேலின் எதிரிகள் இதைக் கண்டார்கள். உடனே, அவர்கள் அனைவரும் சேர்ந்து அரசரிடம் சென்று, தானியேலுக்கு எதிராகப் புகார் கொடுத்தார்கள். அவர்கள் "மேன்மை தங்கிய அரசரே! முப்பது நாள்வரையும் நாடு முழுவதிலும், எவரும் உம்மைத் தவிர வேறு எவரையும் வழிபடக் கூடாது. யாராவது வேறு தெய்வங்களை வணங்கினால் அவர்கள் சிங்கங்கள் நிறைந்த குழியில் போடப்படுவார்கள். இப்படி ஒரு கட்டளை பிறப்பித்து அதில் நீர் கையெழுத்திட்டிருக்கிறீர்" என்றார்கள். அரசர் அதைக் கேட்டு, "ஆம் அது ஒரு கண்டிப்பான கட்டளை. அதை யாராலும் மாற்ற முடியாது" என்றார். அப்பொழுது அவர்கள் அரசரிடம், "யூதா மனிதனாகிய தானியேல் அரசராகிய உமது கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அவர் தன்னுடைய கடவுளிடம் நாள்தோறும் மூன்று வேளைகளிலும் விண்ணப்பம் செய்கிறதை நாங்கள் கண்டோம்" என்றார்கள்.

இதைக் கேட்ட அரசர் மிகவும்

வருத்தமுற்றார். தானியேலை இந்தத் தண்டனையிலிருந்து விடுவிப்பதற்குச் சூரியன் மறையும்வரைத் தீவிரமாக முயற்சித்தார். மறுபடியும் அந்த அதிகாரிகள் அரசரிடம் வந்து, "அரசரே ஒரு அரசன் கையொப்பமிட்ட கட்டளையை எவராலும் மாற்ற முடியாது. ஏனெனில் அது நாட்டின் பொதுச் சட்டம்" என்றனர்.

எனவே, அரசரின் கட்டளைப்படி தானியேல் சிங்கங்கள் நிறைந்த குழியினுள் தூக்கி எறியப்பட்டார். அரசர் தானியேலிடம், "தானியேலே! நீ உண்மையாய்ச் சேவை செய்யும் கடவுள் உன்னைக் காப்பாற்றுவராக" என்றார். அந்தச் சிங்கக்குழி ஒரு கல்லினால் மூடப்பட்டது. யாரும் தானியேலைக் காப்பாற்றி விடாதபடி தடுக்க, அந்தக் கல்லின் மேல் அரச முத்திரைப் பதிக்கப்பட்டது. பின்னர், அரசர் தன் அரண்மனைக்குத் திரும்பினார். அன்று இரவு அவரால் எதுவும் சாப்பிடவோ, தூங்கவோ முடியவில்லை.

மறுநாள் அதிகாலையில், அரசர் எழுந்து

தானியேலைப் போட்டிருந்த சிங்கக் குழிக்குச் சென்றார். அவர் வேதனை நிறைந்த தாழ்ந்த குரலில் "தானியேலே! என்றும் வாழும் கடவுளின் ஊழியனே! சிங்கங்களிடமிருந்து உன்னைக் காப்பாற்ற உன் கடவுளுக்கு முடிந்தா?" என்று கேட்டார்.

தானியேல் "அரசரே, நீர் என்றும் வாழ்க. சிங்கங்கள் என்னை பீறிவிடாதபடி, அவற்றின் வாய்களைக் கட்டிப்போட கடவுள் தம்முடைய தூதரை அனுப்பியிருந்தார். ஏனெனில் நான் கடவுளுக்கெதிராக எந்தக் குற்றமும் செய்ததில்லை. அரசருக்கெதிராகவும் எந்த முறை கேடும் செய்ததில்லை. இது அவருக்குத் தெரியும்" என்றார்.

இதைக் கேட்டதும் அரசர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சிங்கக் குழியிலிருந்து தானியேலை வெளியே கொண்டுவரும்படித் தனது ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார். தானியேல் கடவுளை நம்பினபடியால், அவருக்குச் சிங்கங்களால் எந்தக் காயமும் ஏற்படவில்லை என்பதை அவர் வெளியே வந்தபோது அனைவரும் கண்டார்கள்.

உடனே அரசர், தானியேலின் மேல் குற்றஞ்சாட்டின அனைவரையும் கைது செய்யும்படி கட்டளையிட்டார். அவர்களையும், அவர்களுடைய மனைவிகளையும், குழந்தைகளையும் கூடச் சிங்கங்கள் நிறைந்த அந்தக் குழியினுள் தூக்கிப் போட்டார்கள். அவர்கள் குழியின் அடியில் போய்ச் சேருவதற்கு முன்னரே, சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து, அவர்களுடைய எலும்புகளை நொறுக்கிப் போட்டன.

பின்னர் அரசரான தரியு, எல்லா நாடுகளுக்கும் ஒரு கடிதம் அனுப்பினார். அக்கடிதத்தில்;

"உங்களுக்கு அமைதி உரித்தாகுக. என் ஆளுகைக்குள் எங்கும் உள்ளவர்கள் தானியேலின் கடவுளுக்கு அஞ்சி, அவரை நடுக்கத்தோடு பணிதல் வேண்டும்.

ஏனெனில், அவர் என்றும் வாழும் கடவுள். அவர் என்றென்றைக்கும் நம்மை ஆட்சி செய்வார். அவர் அரசு அழிவில்லாதது. அவருடைய வல்லமைக்கு என்றுமே முடிவில்லை

அவரே நம்மை விடுவிப்பவர். நம் மீட்பர். அவர் வானத்திலும், பூமியிலும் வியத்தகு செயல்களை செய்கிறவர்.

சிங்கங்களிடமிருந்து தானியேலை காத்தவர் அவரே!" என்று எழுதியிருந்தார்.

எனவே, தரியு சைரசு அரசர்களுடைய ஆட்சிக் காலத்தில், தானியேலின் எல்லாச் செயல்களும் நன்றாகவே நடந்தன.

இன்னும் நம்பிக்கை உள்ளது

இஸ்ரயேல், யூதா நாடுகளிலிருந்து ஏராளமான கடவுளின் மக்கள் பாபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே அவர்கள் ஒரு தனிச் சமுதாயமாகத் திகழ்ந்தார்கள். அவர்கள், தங்கள் பழக்கவழக்கங்கள்படியே வாழவும், வழிபடவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால்; கடவுளின் ஆலயம் இருக்கும் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் உரிமை மட்டும் இல்லை.

கடவுள் எசேக்கியேலுக்கு அளித்த காட்சி

எசேக்கியேல் 1 : 1, 3 – 9, 22 – 27

எசேக்கியேல் எருசலேமில் உள்ள கடவுளின் ஆலயத்தில் குருவாயிருக்கப் பயிற்சி பெற்றிருந்தார். கைதியானபோது, பணிவிடை செய்வது பற்றிய நம்பிக்கையை இழந்தார். ஆனால் பாபிலோனில் கடவுள் அவருக்கு ஒரு சிறப்புத் திட்டம் வைத்திருந்தார்.

எசேக்கியேல் கூறியது:

"பாபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டு போகப்பட்ட என் மக்களுடன் நான் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, ஒரு நாள் வானம் திறந்தது. நான் கடவுளின் காட்சியைக் கண்டேன். கடவுள் என்னிடம் பேசும் சத்தத்தைக் கேட்டேன்.

நான் அண்ணாந்து பார்த்த போது ஒரு புயல் எழும்பி வரக்கண்டேன்; மேகத்திலிருந்து, மின்னல் தோன்றியது; சுற்றிலும் உள்ள வானம் முழுவதும் ஒளிமயமாயிருந்தது; பளபளப்பான உலோகம் போல ஒளிரும் ஒன்றையும்

கண்டேன். அந்தப் புயலின் நடுவில் மனித உருவம் போல் தோற்றமுள்ள நான்கு உயிரினங்களைக் கண்டேன். ஆனால், அவை ஒவ்வொன்றுக்கும் நான்கு முகங்களும், நான்கு இறக்கைகளும் இருந்தன. அவற்றின் கால்கள் நேராயிருந்தன; பாதங்கள் காளைகளின் குளம்புகள்போல் இருந்தன; அவற்றின் இறக்கைகளின் அடியில் மனிதனுடைய கை போன்ற ஒரு கை இருந்தது. அவை தமது இரண்டு இறக்கைகளை விரித்து, அவை மற்றவைகளின் இறக்கைகளைத் தொடுமாறும், ஒரு சதுர வடிவம் அமையுமாறும் நின்றன. அவை உடல்களை மூடிக்கொண்டன.

அவற்றின் தலையின் மேல் பளபளக்கும் பளிங்கு கவிகை போன்று ஒன்று தெரிந்தது. அவை பறந்தபோது அவற்றின் இறக்கைகள் ஒரு ஓசையை எழுப்பின. அது கடலின் இரைச்சல் போலவும், ஒரு பெரிய படை எழுப்பும் ஒலியைப் போலவும், இடிமுழக்கத்தின் ஓசையைப் போலவும் இருந்தது. அவை பறப்பதை நிறுத்திய போது, அவை தமது இறக்கைகளை மடக்கிக் கொண்டன. ஆனால் இன்னும் அவற்றின் தலைகளின் மேலிருந்த வளைவு மண்டபத்தின் மேலிருந்து ஒரு ஒலி வந்து கொண்டிருந்தது.

கவிகையின் மேல், நீல ரத்தினத்தால் செய்யப்பட்ட அரியணை போன்ற ஒன்று காணப்பட்டது. அதன் மேல் மனித உருவம் போன்ற ஒரு உருவம் அமர்ந்திருந்தது. அது பேரொளியுடன் இலங்கியது. வானவில்லில் உள்ள எல்லா வண்ணங்களும் அதில் காணப்பட்டன. அது கடவுளின் சமுகத்தைக் காட்டும் சுடர்வீசும் ஒளியாகும்"

எசேக்கியேலை அழைத்தல்

எசேக்கியேல் 1 : 28 – 2 : 5

நான் இந்தக் காட்சியைக் கண்டபோது, தரையில் முகங்குப்புற விழுந்தேன். அப்பொழுது, மனிதனே எழுந்திரு; நான் உன்னுடன் பேச விரும்புகிறேன். என்னும் சத்தத்தைக் கேட்டேன். அந்தச் சத்தம் பேசிக் கொண்டிருந்தபோது, கடவுளின் ஆவி என்னுள் வந்தது; என்னை எழும்பி நிற்கச் செய்தது. அந்தக்குரல் தொடர்ந்து, "எசேக்கியேலே, நான் உன்னை இஸ்ரயேல் மக்களிடத்தில் அனுப்புகிறேன். அவர்கள் தங்கள் மூதாதையர் செய்தது போல, இப்போதும் என்னைவிட்டு விலகிச் சென்றுள்ளார்கள். அவர்கள் பிடிவாதம் உள்ளவர்கள்; என்னைப் போற்றாதவர்கள். உன்னதமான கடவுளாகிய எனக்காக நீ அந்த மக்களிடம் பேசும்படி நான் உன்னை அனுப்புகிறேன். உன்னுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, கடவுள் தம்முடைய செய்திகளை ஒரு இறைவாக்கினரின் மூலம் அவர்களுக்குத் தெரிவிப்பதாக அறிந்து கொள்வார்கள். அவர்கள் உனக்குச் செவி சாய்க்கலாம்; செவி சாய்க்காமலும் போகலாம்" என்று பேசுவதைக் கேட்டேன்.

மேய்ப்பினில்லாத ஆட்டு மந்தை

எசேக்கியேல் 34 : 11 – 15

மக்கள் சிதறடிக்கப்பட்ட ஆடுகளைப் போல இருப்பதை எசேக்கியேல் கண்டார். அவர்களை ஆள்பவர்கள் கெட்ட மேய்ப்பர்களைப் போலிருப்பதையும் கண்டார்; இஸ்ரயேல் மக்கள் ஆட்டு மந்தையைப் பாதுகாக்கும் முறையை அறிந்திருந்தார்கள். அடிக்கடி காட்டு மிருகங்கள் வந்து ஆட்டு மந்தையைத் தாக்கிச் சிதறடிக்கும். ஒரு ஆட்டு மந்தையைக் காக்கத் துணிவுள்ள மேய்ப்பன் வேண்டும். எனவே எசேக்கியேல் கடவுள் அளிக்கும் இந்தச் செய்தியை மக்களுக்குக் கொடுத்தார்.

கடவுள் கூறியது:

"உன்னத கடவுளாகிய நான், இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு நல்ல மேய்ப்பனைப் போல இருக்கிறேன். ஒரு நல்ல மேய்ப்பன், தன்

ஏங்கிக் கொண்டிருந்து விடுதலையைப் பெறுதல்

எதிர்பாராத செய்தி

எஸ்றா 1:1-4

கடவுள் தம்முடைய திட்டங்களைச் செயல்படுத்த வலிமையான அரசர்களைப் பயன்படுத்துகிறார்.

பெர்சியாவின் அரசரான சைரசு, தமது ஆட்சியின் முதலாம் ஆண்டில், நாடு முழுவதற்கும் ஒரு சிறப்புக் கட்டளை அனுப்பினார். அதற்குக் கடவுள் அவரைத் தூண்டினார். இப்படி நடைபெறும் என்று வெகு காலத்துக்கு முன்னரே எரேமியா என்னும் இறைவாக்கினர் கூறியிருந்தார். சைரசு, மக்களுக்கு அனுப்பிய கட்டளை:

"விண்ணுலகின் அரசரான உண்மையான கடவுள் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னை அரசராக்கியிருக்கிறார். அவர் யூதாவிலிருக்கும் எருசலேமில் அவருடைய ஆலயத்தைக் கட்டும்படி என்னிடம் கூறியிருக்கிறார். யூதர்களே! உங்கள் அனைவரோடும் கடவுள் இருப்பாராக. நீங்கள் ஆலயத்தை மறுபடியும் கட்டி எழுப்ப வேண்டும். பிற நாடுகளில் வாழும் யூதர்கள், தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல உதவி தேவைப்படலாம். இப்போது உங்களை அடுத்து வாழும் மக்கள் உங்களுக்கு வேண்டிய வெள்ளியையும், பொன்னையும் மற்றும் உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் தந்து உதவ வேண்டும். மேலும், எருசலேமிலிருக்கும் கடவுளுக்குத் தங்கள் சிறப்புக் காணிக்கைகளையும் உங்களிடம் தந்து அனுப்ப வேண்டும்."

புதுப்பிக்கப்பட்ட பலிபீடம்

எஸ்றா 3:1-7

ஏழாம் மாதத்தில் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தங்கள் சொந்த நகரங்களில் வந்து சேர்ந்தார்கள். பின்னர் அவர்கள் எல்லோரும் எருசலேமில் வந்து கூடினார்கள். யோசுவா, செருபாபேல் இவர்களுடன் மற்ற குருக்களும் சேர்ந்து கடவுளின் ஆலயத்திற்குரிய பலிபீடத்தைப் புதுப்பித்துக் கட்டினார்கள். ஏழாம்மாதம் முதல் தேதியிலிருந்து மக்கள் கடவுளுக்குக் காலைப் பலிகளைச் செலுத்த ஆரம்பித்தார்கள். பின்னர் தொடர்ந்து கூடார விழா, அமாவாசை விழா, போன்ற எல்லா விழாக்களையும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். மக்கள் கடவுளுக்குச் சிறப்புக் காணிக்கைகளையும் படைத்தார்கள்.





மக்கள் ஆலயத்தில் வேலை செய்யும் தச்சர்களுக்கும், கொத்தனார்களுக்கும் பணம் கொடுத்தார்கள். லெபனோன் நாட்டிலிருந்து ஆலயத்துக்காகக் கேதுரு மரங்களை வெட்டிக் கொண்டுவந்தார்கள். எனவே, லெபனோன் நாட்டுக்கு உணவுப் பொருட்களாகக் கோதுமை, திராட்சைரசம், எண்ணெய் போன்றவற்றை அனுப்பிக் கொடுத்தார்கள். இவையனைத்தையும் செய்யச் சைரசு அரசர் அனுமதியளித்திருந்தார்.

எதிரிகளின் தொல்லைகள்

எஸ்றா 4 : 4 – 5

இஸ்ரயேல் நாட்டில் பரவி, வேறு தெய்வங்களை வழிபட்ட அந்நியர்கள், இஸ்ரயேலர்கள் மறுபடியும் தேவாலயத்தை புதுப்பித்துக் கட்டப்படுவதை விரும்பவில்லை.

யூதர்கள் ஆலயத்தை புதுப்பித்துக் கட்ட முயற்சித்தபோதெல்லாம், எருசலேமிலிருந்த எதிரிகள் அவர்களுக்கு இடையூறு செய்ய ஆரம்பித்தார்கள். மேலும் அவர்கள் அரசு அதிகாரிகளுக்குப் பணம் கொடுத்து, இஸ்ரயேலருக் கெதிராக நடந்து கொள்ளச் செய்தார்கள்.

ஆலயத்தை திரும்பக் கட்டு

ஆகாய் 1 : 2 – 9

எருசலேமில் குடியேறிய மக்கள் அங்கு வாழ்வது மிகவும் கடினம் என்று கண்டார்கள். அவர்கள் இன்னும் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டத்தொடங்கவில்லை. கடவுள் இறைவாக்கினராகிய ஆகாயிடத்தில், "என்னுடைய மக்கள் 'ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்ட இது ஏற்ற நேரம் அல்ல' என்கிறார்கள். நீ அவர்களிடம் கூற வேண்டியது என்னவென்றால், "மக்களே! நீங்கள் அனைவரும் நல்ல வீடுகளில் குடியிருக்கிறீர்கள். ஆனால் நமது

நகரத்திலிருந்து மேற்கே இருக்கும் பள்ளத்தாக்கின் வாசல் வழியாக வெளியேறித் தெற்கு நோக்கிச் சென்றேன். பின் பெரும்பாம்பு நீரூற்றைக் கடந்து குப்பை மேட்டு வாசலுக்கு வந்து சேர்ந்தேன். நான் வரும்போது எருசலேமின் இடிக்கப்பட்ட மதிற்சுவர்களையும் எரிக்கப்பட்ட நகரத்து வாயில்களையும் கவனித்தேன். பின்னர் நகரத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள ஊருணி வாசல் பக்கத்திலும், அரசரின் குளத்துக்கும் போனேன். அங்கே கற்குவியல்கள் இருந்தபடியால் நான் ஏறியிருந்த குதிரைக் கடந்து செல்லப் பாதை இல்லாதிருந்தது. எனவே, நான் கெதரோன் ஆற்றுப் பள்ளத்தாக்கிற்கு இடிந்த சுவரைப் பார்த்துக் கொண்டே சென்றேன். கடைசியில் பள்ளத்தாக்கு வாசல் வழியாக நகரத்துக்குத் திரும்பி வந்து விட்டேன்.

நகரத்து அதிகாரிகளுக்கு நான் எங்குச் சென்றிருந்தேன் என்றும், என்ன செய்து கொண்டிருந்தேன் என்றும் ஒன்றும் தெரியாது.

பின்னர் நான் நகரின் குருக்களையும், மூப்பர்களையும், அதிகாரிகளையும், பிற உயர்குடி மக்களையும் கூடிவரச் செய்தேன். அவர்களிடம், நமது நகரம் பாழடைந்தும், சுட்டெரிக்கப்பட்டும் கிடப்பது நமக்கு எவ்வளவு வெட்கமாகவும், மனவருத்தமாகவும் இருக்கிறது? நாம் இந்த நிலைமையை மாற்ற, எருசலேம் நகரத்தின் மதிற்சுவர்களைக் கட்டுவோம். அதற்குக் கடவுளும் உதவி செய்திருக்கிறார்" என்றேன். அரசர் சொன்னவற்றையும் நான் எடுத்துக் கூறினேன். இதைக் கேட்ட அவர்கள் அனைவரும், "கட்டத் தொடங்குவோம்" என்றார்கள். அவர்கள் சொன்னபடியே வேலையைத் தொடங்க ஆயத்தமானார்கள்.

எங்கள் திட்டத்தைச் சன்பல்லாத்தும், தொபியாவும் அரபியனான கேசேமும் கேட்டபோது, அவர்கள் எங்களைப் பார்த்து நகைத்தார்கள். "நீங்கள் செய்யப்போகிற இந்தக் காரியம் என்ன? அரசருக்கெதிராக நீங்கள் எல்லோரும் கலகம் பண்ணப் போகிறீர்களா?" என்று எங்களிடம் கேட்டார்கள். அதற்கு நான், "எங்கள் கடவுள் எங்களுக்கு உதவி செய்வார். நாங்கள் அவருடைய ஊழியர்கள். நாங்கள் கட்டும் வேலையைத் தொடங்கப்போகிறோம். நீங்கள் எங்கள் மக்களைச் சேர்ந்தவர்கள் இல்லை. உங்களுக்கு எருசலேமின்மேல் எந்த உரிமையும் கிடையாது" என்று கூறினேன்.

எதிரிகளின் போர்த்திட்டம்

நெகேமியா 4:1-23

யூதர்களாகிய நாங்கள், எருசலேம் நகரத்துச் சுவர்களைக் கட்ட ஆரம்பித்து விட்டோம் என்பதைச் சன்பல்லாத்து அறிந்தான். உடனே அவன் மிகவும் கோபங்கொண்டு, எங்களை ஏளனம் பண்ணினான். அவன் தனது தோழர்கள் முன்னிலையிலும், சமாரியப் படையின் முன்னிலையிலும் ஏளனமாகப் பேசினான். "இந்த முட்டாள்களான யூதர்கள், தாங்கள் என்ன செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் இந்த நகரத்தைத்திரும்பக் கட்டி முடித்துவிடலாம் என்று நினைக்கிறார்களா? குவிந்து கிடக்கும் இந்த உடைந்த சுவர்களிலிருந்து அவர்கள் கட்டுவதற்குத் தேவையான கற்களைச் சேகரித்துக் கொள்ள முடியுமா?" என்று அவன் ஏளனமாகப் பேசினான்.





இவற்றைக் கேட்டுக் கொண்டே அருகில் நின்ற தொபியா, "அவர்கள் எத்தகைய சுவரைக் கட்டுவார்கள்? அவர்கள் கட்டும் சுவரின் மேல் ஒரு நரி ஏறிப் போனால் அந்தச் சுவர் இடிந்து போகும்" என்றான்.

நான் வேதனையுடன் கடவுளிடம், "கடவுளே! அவர்கள் எங்களை எப்படியெல்லாம் ஏளனம் செய்கிறார்கள் என்பதைக் கேளும். இதற்காக அவர்களுக்குத் தண்டனை கொடும். தாங்கள் பெற்றிருக்கும் அனைத்தையும் அவர்கள் இழந்து போவார்களாக." என்று வேண்டினேன்.

நாங்கள் சுவர்கட்டும் பணியைத் தொடர்ந்து செய்துவந்தோம். மக்கள் மிகக் கடினமாக உழைத்தார்கள். பாதி வேலை முடிந்தது.

சன்பல்லாத்தும், தொபியாவும், பக்கத்து நாட்டு மக்களும், சுவர் கட்டி எழுப்பப்படுவதை கேள்விப்பட்டார்கள். அவர்கள் மிகுந்த கோபங்கொண்டு எருசலேமைத் தாக்கி, எங்கள் வேலையைத் தடைசெய்யத் திட்டமிட்டார்கள். எனவே, இந்த அபாயத்தைக் குறித்துக் கடவுளிடம் விண்ணப்பம் செய்தோம்.

"நாங்கள் சுமக்கும் சுமைகளால் களைப்படைந்து போகிறோம்.

உடைந்த மண்மேடு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.

இன்று எப்படி நாங்கள் சுவர்களைக் கட்டி எழுப்ப முடியும்?"

என்னும் பாட்டை யூதாவின் மக்கள் வழக்கமாகப் பாடி வந்தார்கள்.

எங்களைத் தாக்கி, கொன்று, இந்த வேலையை நிறுத்த வேண்டும் என்று திட்டமிட்டிருப்பதை, அவர்கள் மத்தியில் வாழும் யூதர்கள் அறிந்து, இரகசியமாக எங்களுக்குத் தெரிவித்தார்கள். எனவே; நான் வேலை செய்யும் மக்களுக்கு வாள், ஈட்டி, அம்பு போன்ற ஆயுதங்களைக் கொடுத்தேன். மக்கள் கவலைப்படுவதைக் கண்டேன். எனவே அவர்களிடமும், அவர்களுடைய தலைவர்களிடமும், அதிகாரிகளிடமும், "நமது எதிரிகளைப் பற்றிப் பயப்படாதீர்கள். நமது கடவுள், நமது எதிரிகளைப் பயப்படுத்தி நமக்காக போர் செய்வார்" என்றேன்.

நாங்கள் நகரத்தின் சுவர்களைக் கட்டியெழுப்பும் வேலையைத் தொடர்ந்து செய்யத் தொடங்கினோம். எங்களில் பாதிப்பேர் வேலை செய்தார்கள். அந்நேரத்தில் பாதிப்பேர் ஆயுதங்களை வைத்துக் கொண்டு போருக்கு ஆயத்தமாய் நின்றார்கள். எங்கள் தலைவர்கள் எங்கள் வேலைக்காரர்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்தார்கள். கட்டட வேலைக்கான பொருட்களைச் சுமப்பவர்கள் ஒரு கையினால் அந்த வேலையைச் செய்தார்கள். மறுகையில் ஒரு ஆயுதத்தை பிடித்திருந்தார்கள். ஒவ்வொரு கொத்தனாரும் ஒரு வாளைத் தன் இடுப்பிலே கட்டியிருந்தார். எக்காளம் முழக்கி, அனைவருக்கும் எச்சரிக்கை செய்ய வேண்டிய மனிதன் என் அருகில் நின்றான். மக்களிடத்திலும் தலைவர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் நான், "மிகுதியான வேலை உள்ளது. நாம் தொலைவில் மதில் நெடுகச் சிதறி நின்று சுவர் கட்டிக் கொண்டிருக்கிறோம். எனவே, எக்காள முழக்கத்தைக் கேட்டவுடன் நீங்கள் எங்கு வேலை செய்து கொண்டிருந்தாலும், ஓடிவந்து என்னருகில் கூடுங்கள். கடவுள் நமக்காகப் போரிடுவார்" என்றேன்.

"வேலைகளைப் பொறுப்போடு கவனித்த அதிகாரிகளும், மேலும் அவர்களுடைய உதவியாளர்களும், இரவில் எருசலேமிலேயே தங்கியிருக்க வேண்டும். அப்படி நாம் செய்தால், நகரத்தை இரவில் காவல் காக்கவும், பகலில் வேலை செய்யவும் முடியும்" என்று அனைவரிடமும் கூறினேன். எங்களில் எவருமே, எங்களுடைய ஆடைகளை, இரவிலும் கூட மாற்றவில்லை.

நெகேமியாவுக்கெதிரான சதித்திட்டம்

நெகேமியா 6:1 – 14

"கோட்டையின் வாசல்களின் வேலை முடியாவிட்டாலும், கோட்டைச் சுவர் கட்டும் வேலை முடிவடைந்தது என்று எங்கள் எதிரிகள் கேள்விப்பட்டார்கள். எனவே அவர்கள் எனக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள். அதில் ஓனோவின் சமவெளியில் உள்ள ஒரு சிற்றூரில் அவர்களை சந்திக்குமாறு என்னை

அழைத்திருந்தார்கள். இது என்னைத் தாக்குவதற்குரிய அவர்களின் திட்டம். "இங்கே முக்கியமான வேலை நடந்து கொண்டிருக்கிறபடியால் நான் அங்கு வர இயலாது." என்று சொல்லியும், அச்செய்தியை நான்கு முறை அனுப்பினார்கள். பின்னர் ஐந்தாவது செய்தி முத்திரையிடப்படாத, திறந்த கடிதமாயிருந்தது.

அக்கடிதத்தில், "நீயும் உனது மக்களும், அரசருக்கெதிராகக் கலகம் செய்யப் போகிறீர்கள். அதற்காகத்தான் நீங்கள் அங்கு கோட்டைச் சுவர்களை மறுபடியும் கட்டுகிறீர்கள். நீ அந்த நாட்டின் அரசன் ஆவதற்குத் திட்டமிடுகிறாய். என அரசர் நிச்சயம் கேள்விப்பட்டிருப்பார். இந்தச் செய்திகளை எனக்குக் கேசேம் தெரியப்படுத்தினான். எனவே, நீ நேரில் வந்து என்னைச் சந்தித்தால் இவற்றைப்பற்றி ஆலோசனை சொல்லுகிறேன்" என்று எழுதியிருந்தான்.

அதற்கு நான் அனுப்பிய பதிலில், "நீ பொய் சொல்லுகிறாய். இவையனைத்தும் உன் கற்பனையே. எனவே நான் வரப்போவதில்லை" என்று குறிப்பிட்டிருந்தேன்.

இவ்வாறு எங்கள் வேலையை நிறுத்த எதிரிகள் முயற்சித்தார்கள். ஆகவே நான், "ஆண்டவராகிய கடவுளே! எனக்கு வலிமை தாரும்" என்று வேண்டுதல் செய்தேன்.

இவ்வேளையில் தன் வீட்டை விட்டு வெளியே வர இயலாத நிலையிலிருந்த 'செமாயா' என்னும் இறைவாக்கினரைப் பார்க்கப் போனேன். அவர் என்னிடம், "நீயும் நானும் ஓடிச் சென்று ஆலயத்திற்குள் புகுந்து கதவுகளைப் பூட்டிக் கொள்ளுவோம், அங்கே ஒளிந்திருப்போம். ஏனென்றால் அவர்கள் உன்னைக் கொல்ல வருகிறார்கள்" என்றார்.

அதற்கு நான், "ஆலயத்திற்குள் ஓடிச் சென்று ஒளிந்துக் கொள்ள நான் என்ன கோழை என்று நினைத்தாயோ?" என்று கேட்டேன். உண்மையில் கடவுள் செமாயாவிடம் பேசவில்லை. தொபியாவும், சன்பல்லாத்தும் அவருக்குப் பணம் கொடுத்து எனக்கு இந்த ஆலோசனையைச் சொல்லச் சொல்லி இருந்தார்கள். பயத்தினால் நான் இந்தத் தவறான காரியத்தைச் செய்ய அவரைக் கையாளகப் பயன்படுத்தி இருந்தார்கள். இம்முறையில் என்னை வெட்கப்படுத்த அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

நான் "கடவுளே, தொபியாவும், சன்பல்லாத்தும் செய்திருக்கிற காரியங்களை மறந்துவிடாதேயும். அவர்களைத் தண்டியும். உம்முடைய பெயரால் என்னிடம் பேசி, என்னைப் பயப்படுத்த முயற்சித்த எல்லோரையும் மறந்து விடாதேயும்" என்று வேண்டுதல் செய்தேன்.

கோட்டைச் சுவரைக் கட்டி முடித்தல்

நெகேமியா 6 : 15 – 16

ஐம்பத்திரண்டு நாட்கள் வேலை செய்ததில், முழு கோட்டைச் சுவரும் கட்டி முடிக்கப்பட்டது. சுற்றிலுமுள்ள பிற நாடுகளிலிருந்த எங்கள் எதிரிகள் இதைக் கேள்விப்பட்டபோது அவர்கள் வெட்கமடைந்தார்கள். கடவுளின் உதவியுடன் இந்த வேலைகளெல்லாம் செய்து முடிக்கப்பட்டன என்று ஒவ்வொருவரும் அறிந்தார்கள்.



மக்கள் தங்கள் வாக்குறுதியைப் புதுப்பித்தல்

[illegible]

ஏழாம் மாதத்தில் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தங்கள் நகரங்களில் குடியிருந்தார்கள். அம்மாதத்தின் முதலாம் நாளில் மக்கள் அனைவரும் எருசலேமின் தண்ணீர் வாயிலின் உள்ளே திறந்த வெளியில் ஒருமனப்பட்டு வந்து கூடினார்கள். அவர்களின் குருவும், மோசேயின் திருச்சட்டத்தைப் போதிக்கிறவருமாகிய எஸ்ராவிடம் திருச்சட்ட நூலைக் கொண்டு வரும்படி கூறினார்கள். எஸ்றா அதை மக்கள் முன்பாகக் கொண்டு வந்தார்.

எஸ்றா ஒரு மேடையின் மீது நின்று திருச்சட்ட நூலைத் திறந்தார். அதைக் கேட்ட அனைவரும் எழுந்து நின்றார்கள். "உன்னத கடவுளைத் துதியுங்கள்" என்று எஸ்றா சொன்னார். எல்லா மக்களும் தங்கள்

கைகளை உயர்த்தி "ஆமேன் ஆமேன்" என்று சொன்னார்கள். தரையில் முகம் குப்புற விழுந்து கடவுளைப் பயபக்தியுடன் பணிந்து கொண்டார்கள்.

எஸ்ரா, மக்களுக்கு முன்பாகத் திருச்சட்ட நூலை அதிகாலையிலிருந்து நண்பகல் வரை வாசித்தார். அவர்கள் அதைக் கவனமுடன் கேட்டார்கள். சிலர் கட்டளைகளை மக்களுக்கு விளக்கிச் சொன்னார்கள். முதலில் அவர்கள் அந்தக் கட்டளைகளைத் தங்கள் மொழியில் மொழி பெயர்த்து பின்னர் விளக்கம் கூறினார்கள். அப்பொழுது அந்த மக்கள் அவற்றைப் புரிந்து கொள்ள முடிந்தது.

அம்மாதம் இருபத்து நான்காம் நாளில் இஸ்ரயேல் மக்கள் மறுபடியும் ஒன்று கூடினார்கள். தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்துவதைக் காட்ட அவர்கள் உபவாசம் இருந்தார்கள். தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டார்கள். பின்னர் கடவுளை வழிப்பட்டார்கள்.

அவர்கள் அனைவரும் கடவுளிடம் செய்து கொண்ட வாக்குறுதி:

"இஸ்ரயேல் மக்களாகிய நாங்களும், எங்கள் குருக்களும், மூப்பர்களும், ஆலயத்தில் பணிவிடை செய்கிறவர்களும், எங்கள் குடும்பத்தார் அனைவரும் ஒரு மனப்பட்டு ஒரு வாக்குறுதி அளிக்கிறோம். கடவுளுக்கு எங்கள் வாக்குறுதியை எழுத்தின் மூலம் சமர்ப்பிக்கிறோம். எங்களுடைய மூப்பர்கள் தங்களுடைய முத்திரையை அதில் பதித்திருக்கிறார்கள். கடவுளுக்கு நாங்கள் கீழ்படியாதபடியினால் கடந்த காலத்தில் நாங்கள் பட்ட துன்பங்களை நினைவு கூருகிறோம். மோசேயின் திருச்சட்டத்தின்படி உம்மைத் தொழுதுகொள்ளாதவர்களிலிருந்து பிரிந்து நிற்க இப்பொழுது தீர்மானித்து விட்டோம். இனிமேல், நாங்கள் இந்தத் திருச்சட்டங்களின்படி நடப்போம். கடவுள் எங்களுக்குச் சொல்லியிருக்கிற அனைத்து நீதி நெறிகளையும் கடைபிடிப்போம். நாங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியவில்லையானால் அவர் எங்களைத் தண்டிப்பாராக."

புதிய ஏற்பாடு

அரசராயிருக்கப் பிறந்தவர்

அரசரின் முன் தூதன்

'யூதர்களுக்கு ஒரு மீட்பர் அனுப்பப்படுவார்' என்று கடவுள் வாக்குறுதி செய்திருந்தார். அவரது வருகையைப் பற்றித் தங்களிடம் அறிவிக்கக் கடவுள் ஒரு தனி இறைவாக்கினரை அனுப்புவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

சகரியா ஒரு குரு. எருசலேம் ஆலயத்தின் பலிபீடத்தில் அவர் தூபம் காட்டிக் கொண்டிருந்தார். அந்நேரத்தில் ஒரு வானதூதர் அவர் முன் தோன்றி, சகரியாவின் மனைவி ஒரு புதல்வனைப் பெற்றெடுப்பார். அந்தப் புதல்வன் ஒரு பெரிய இறைவாக்கினராயிருப்பார் என்று அறிவித்தார். ஆனால் சகரியாவும் அவரது மனைவியும்

குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பருவத்தைக் கடந்தவர்களாயிருந்தார்கள். எனவே, சகரியா இந்தச் செய்தியை நம்பவில்லை. இதை உண்மையென்று மெய்ப்பிக்க ஒரு அடையாளம் வேண்டும் என்று சகரியா கேட்டார். சகரியாவுக்குக் கடவுள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறும் நாள்வரை அவரால் பேச முடியாது என்று வானதூதர் கூறினார்.

'யோவான்' என்று பெயர் சூட்டுதல்

லூக்கா 1 : 57 - 66

புகழ்பெற்ற குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டுதல் யூதர்களின் வழக்கம். ஒருவரின் பெயர் மிக முக்கியமானது என்று யூதர்கள் கருதினார்கள். ஏனெனில், ஒருவரது பெயர் அந்த ஆளின் பண்பைக் குறிப்பிடும். வானதூதர் சகரியாவிடம் அவரது புதல்வனை "யோவான்" என்று அழைக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார். "யோவான்" என்பதற்குக் 'கடவுள் அன்புடையவர்' என்று பொருள்.

பேறுகாலம் நெருங்கியது. எலிசபெத் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அவரது பக்கத்து வீட்டுக்காரர்களும், உறவினர்களும் அவளுக்குக் கடவுள் செய்த நன்மையைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். அவர்களனைவரும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டார்கள். குழந்தைப் பிறந்து ஒரு வாரம் ஆயிற்று. அவர்கள் அவனுக்குச் 'சகரியா' என்று

அவனது தந்தையின் பெயரைச் சூட்ட நினைத்தார்கள். ஆனால் எலிசபெத், "இல்லை இவன் பெயர் யோவான்" என்றாள்.

இதைக் கேட்ட அவரது உறவினர்கள், "உங்கள் குடும்பத்தில் எவருக்குமே 'யோவான்' என்னும் பெயர் இல்லையே!" என்றார்கள். பின்னர் அவர்கள் சகரியாவிடம் "குழந்தைக்கு என்ன பெயர் வைக்க வேண்டும்?" என்று சைகை மூலம் கேட்டார்கள்.

சகரியா எழுது பலகையில் "இவன் பெயர் யோவான்" என்று எழுதினார். அப்போதே அவருக்குப் பேச்சாற்றல் வந்து விட்டது. இதைக்கண்டு அங்கிருந்த அனைவரும் வியப்படைந்தார்கள். அவர் மகிழ்ச்சியுடன் கடவுளைப் போற்றலானார்.

யூதேயாவின் மலைப்பகுதி முழுவதும் இச்செய்தியைப் பற்றியே மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் "இக்குழந்தை எத்தகைய ஆளாகப் போகிறதோ?" என்று பேசிக் கொண்டார்கள். "இது கடவுள் அளித்த கொடை" என்று உணர்ந்தார்கள்.

யோவானின் தந்தை கடவுளைப் போற்றுதல்

லூக்கா 1 : 67 – 80

யோவானின் தந்தையாகிய சகரியா மூலம் தூய ஆவியார் பேசினார். அவர் கூறியது:

"இஸ்ரயேலின் மக்களே! நாம் நமது கடவுளைப் போற்றுவோம். அவர் நமக்குத் துணை செய்ய வந்துள்ளார். அரசராகிய தாவீதின் தலைமுறையில் நமக்கு ஒரு பெரிய மீட்பரைத் தந்துள்ளார். இறைவாக்கினர்கள் அனைவரும் இதைப்பற்றி நம் மூதாதையர்களிடம் கூறியிருந்தார்கள்.

கடவுள் தமது வாக்குறுதியை நினைவு கூருவதாகக் கூறினார். அவர் தமது மக்களை, எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவார். எனவே அவர்கள் எப்போதும் பயமின்றி வாழலாம். எல்லாவற்றிலும், எப்போதும் கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்."

நீயோ மகனே, "உன்னத கடவுளின் தூதுவனாக இருப்பாய். நீ ஆண்டவரின் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்வாய். மக்களின் பாவங்களை அவர் மன்னித்து காப்பாற்றுவார் என்று அவர்களிடம்

கூறுவாய். நமது கடவுள் நல்லவர், அன்புள்ளவர். அவருடைய மீட்பு ஒரு ஒளியைப்போல் நம்மேல் சுடர் வீசும். சாவைப் பற்றிய பயத்தில் வாழும் அனைவருக்கும் அது புத்துயிர் அளிக்கும். அமைதியின் வழியை அவர் நமக்குக் காட்டுவார்."

அந்தக் குழந்தை, ஞானத்திலும், வலிமையிலும், வளர்ச்சியடைந்தது. இஸ்ரயேல் மக்களிடையே வந்து கடவுளின் செய்தியை அறிவிக்கும் நாள்வரை அவன் பாலைவனத்தில் வாழ்ந்து வந்தான்.

இயேசுவின் பிறப்பை ஒட்டிய நிகழ்ச்சிகள்

மரியாவின் வியப்பு

லூக்கா 1 : 26 - 38

மிகப் பழமையான காலத்தில் கடவுள், "இறைவாக்கினர்கள்" மூலம் நமது மக்களிடம் பேசினார். அதன்பின் பல வருடங்களாக இறைவாக்கினர்கள் எவரும் தோன்றவில்லை. சில வேளைகளில் கடவுள் நேரடியாக வானதூதர்கள் மூலம் மக்களிடம் பேசினார்.

யோவான் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் கடவுள் கலிலேயாவில் உள்ள நாசரேத்து என்னும் சிறிய நகரத்துக்குத் தமது தூதரான காபிரியேலை அனுப்பினார். அரசரான தாவீதின் தலைமுறையினரில் பிறந்தவர் யோசேப்பு. அவருக்கு மனைவியாக மணஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தவர் மரியாள். காபிரியேல் தூதர் மரியாளிடம் தோன்றி “மரியாளே, நீர் வாழ்க! நீர் கடவுளின் சிறப்பான ஆசியைப் பெற்றிருக்கிறீர். “நீர் ஒரு புதல்வனைப் பெற்றெடுப்பீர். அவருக்கு ‘இயேசு’ என்று பெயரிட வேண்டும். அவர் ‘கடவுளின் மைந்தன்’ எனப்படுவார். கடவுள் அவரை, அவரது மூதாதையரான தாவீது அரசரைப் போல பெரிய அரசராக்குவார். அவர் என்றென்றைக்கும், கடவுளுடைய மக்களை ஆட்சி செய்வார்” என்றார்.

இதைக்கேட்ட மரியாள், ஏதும் புரியாதவராக வானதூதரைப் பார்த்து, “எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே? அப்படியிருக்க நான் எப்படி ஒரு புதல்வனைப் பெற்றெடுக்க முடியும்?” என்று கேட்டாள்.

வானதூதர் மரியாவிடம், “கடவுளின் தூயஆவி உம்மேல் வரும். இதோ, உம் இனத்தாரான எலிசபெத்தைப் பாரும். அவள் தன் முதிர் வயதிலும் இப்பொழுது கருவுற்று இருக்கிறாள். இன்னும் மூன்று மாதங்களில் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பாள். கடவுளால் எதையும் செய்ய முயும் என்பதை இதன் மூலம் உணர்ந்து கொள்ளும்” என்றார்.

உடனே மரியா, “இதோ, நான் ஆண்டவரின் பணியாள். நீர் கூறியபடியே கடவுளின் விருப்பம் என்னிடம் நிறைவேறட்டும்” என்றாள். பின் வானதூதர் அங்கிருந்து அகன்றார்.

மரியா எலிசபெத்தைப் பார்க்கச் செல்லுதல்

லூக்கா 1 : 39 – 45

யோசேப்பும், மரியாவும் வாழ்ந்த நாசரேத்து பாலஸ்தீனாவின் வடபகுதியில் இருந்தது. எலிசபெத்தும், சகரியாவும் தெற்குப் பகுதியில் உள்ள யூதேயாவில் வாழ்ந்தனர்.

மரியா யூதேயாவில் வாழ்ந்த சகரியாவின் வீட்டுக்குச் சென்றாள். எலிசபெத்தைக் கண்டு வாழ்த்திய குரல் கேட்டதும், அவள் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. தூய ஆவியானவர் எலிசபெத்தின் மூலம் பேசினார். “மரியாளே, வேறு எந்தப் பெண்களையும்விட அதிகமாகக் கடவுள் உனக்குப் பேரருள் பொழிந்திருக்கிறார். நீ சிறப்பு மிகுந்த ஒரு குழந்தையின் தாய்யாவாய். கடவுளின் தாய் என்னைப் பார்க்க வந்து வாழ்த்துவது எத்துணை பெரிய சிறப்பு! கடவுளின் செய்தியை நம்பியதன் மூலம், நீ மிகுந்த பேறு பெற்றிருக்கிறாய்!” என்றாள்.



மரியா கடவுளைப் புகழ்ந்து பாடுதல்

லூக்கா 1 : 46 – 56

மரியா, தான் பார்த்தவைகளையும், கேட்டவைகளையும் குறித்து மிகவும் வியப்பு அடைந்தாள். அவள் கடவுளைப் புகழ்ந்து பாடினாள். அவளது பாடல், கடவுள் தம்மை நம்பும் தாழ்மையான மக்களுக்கு என்ன செய்கிறார் என்று காட்டுகிறது. இந்தப் பாடல் திருச்சபைகளில் இன்றும் பாடப்படுகிறது என்பதில் வியப்பொன்றுமில்லை.

"நான் மகிழ்ச்சியுடன் பாடுவேன்.

என்னுடைய மீட்பராகிய ஆண்டவரைப் போற்றுவேன்.

அவருடைய பணியாளராகிய என்னை அவர் நினைவிற்கொண்டார்.

என்றென்றும் மக்கள் என்னை, "மிகவும் மகிழ்ச்சி நிறைந்த பெண்" என்பார்கள்.

எல்லாம் வல்ல கடவுள் எனக்குப் பெரிய செயல்களைப் புரிந்திருக்கிறார்.

அவரை மகிமைப்படுத்துகிறவர்களுக்குத் தூய கடவுள் என்றென்றும் நல்லவரே.

அவருடைய வல்லமை, பெருமை கொண்டவர்களை ஏதுமற்றவர்களாக்குகிறது.

அவர், பெரிய அரசர்களை அவர்களுடைய அரியணைகளிலிலிருந்து அகற்றி விடுகிறார்.

தாழ்மையுள்ளவர்களை உயர்த்தி, மேன்மை அடையச் செய்கிறார்.

பசியுள்ளவர்களுக்கு உணவளிக்கிறார். செல்வர்கள் வெறுமையாய் போகும்படிச் செய்கிறார்.

நமது மூதாதையர்களுக்கு அவர் செய்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்.

நம் மக்களுக்கு அவர் உதவி செய்ய வந்திருக்கிறார்.

ஆபிரகாமின் தலைமுறையினருக்கு என்றென்றும் நன்மை செய்வதாக அவருக்குக் கடவுள் வாக்குறுதி கொடுத்தார். அதை நினைவிற் கொண்டுள்ளார்."

மரியா ஏறக்குறைய மூன்று மாதங்கள் எலிசபெத்துடன் தங்கியிருந்தாள். பின்னர் தன் வீட்டுக்குச் சென்றாள்.

இயேசுவின் பிறப்பு

லூக்கா 2 : 1 – 7

ரோம அரசு தம் மக்கள் அனைவரும் வரி செலுத்துகிறார்களா என்பதை உறுதி செய்ய விரும்பியது. எனவே, நாடு முழுவதும் ஒரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டது. ஆகவே இந்த வேலை தொடங்குவதற்கு முன்னர் மக்கள் அனைவரும் தங்கள், தங்கள் சொந்த நகரத்துக்கு அல்லது சிற்றூருக்குப் போய் விட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. யோசேப்பின் பிறந்த இடம் பெத்லகேம். அதுவே அரசராகிய தாவீதும் பிறந்த இடமாகும்.

ரோம அரசராகிய அகுஸ்து தன் நாடு முழுவதிலும் மக்கள்தொகை கணக்கு எடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். இந்த முதலாம் கணக்கெடுப்பு நடந்தபோது சிரியா நாட்டில் குரேனியு ஆளுநராயிருந்தார்.

யோசேப்பு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து யூதேயாவிலுள்ள தன் சொந்த ஊராகிய பெத்லகேமுக்குப் போனார். அவர் தாவீது அரசரின் தலைமுறையைச் சேர்ந்தவர். தாவீது அரசரின் பிறந்த இடமும் பெத்லகேம்தான்.

யோசேப்பு மரியாவைத் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார். அவர்கள் பெத்லகேம் சென்று சேர்ந்தபோது மரியாளுக்குப் பேறுகாலம் நெருங்கியது. அவர்களுக்குத் தங்குவதற்கு விடுதிகளில் இடம் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் ஒரு மாட்டுத் தொழுவில் தங்கினார்கள். அந்த இரவில் மரியாள் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையை மெல்லிய துணிகளில் சுற்றி, முன்னணையில் படுக்க வைத்தாள்.

மேய்ப்பர்களுக்கு நற்செய்தி

லூக்கா 2 : 8 – 20

அந்த இரவில் வயல்வெளிகளில் சில மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளைக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு வானதூதர் அவர்கள் முன் தோன்றினார். கடவுளிடமிருந்து ஒரு ஒளி அவர்கள்மேல் பிரகாசித்தது. அந்த மேய்ப்பர்கள் அதைக் கண்டதும் மிகவும் பயப்பட்டார்கள். வானதூதர் அவர்களிடம் “பயப்படாதேயுங்கள், நான் உங்களுக்கு ஒரு நற்செய்தி கொண்டு வந்திருக்கிறேன். அது உங்களுக்கும், மற்ற எல்லா மக்களுக்கும்

மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும். இன்று தாவீதின் ஊரில் உங்கள் ஆண்டவராகிய மீட்பர் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். நீங்கள் அதைக் கண்டதும் நான் கூறியது உண்மை என்று உணருவீர்கள்'' என்றார்.

உடனே, வானத்தில் ஏராளமான வானதூதர்கள் கூடினார்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்து பின்வருமாறு பாடி கடவுளைப் போற்றினார்கள்.

“விண்ணகத்திலிருக்கிற உன்னத கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக.

உலகில் கடவுளுக்கு உகந்தோர்களிடையே அமைதி நிலவட்டும்''

பின் வானதூதர்கள் விண்ணகத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

மேய்ப்பர்கள், “இப்போதே நாம் பெத்லகேம் சென்று கடவுள் நமக்குக் கூறிய விந்தையான குழந்தையைப் பார்ப்போம்'' என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள். உடனே அவர்கள் விரைந்து சென்று, யோசேப்பையும், மரியாவையும், முன்னணையில் படுத்திருக்கும் குழந்தையையும் கண்டார்கள். குழந்தையைப் பணிந்து கொண்டார்கள். மேய்ப்பர்கள், வானதூதர்கள் தங்களிடம் தோன்றி கூறிய அனைத்து செய்தியையும் யோசேப்பிடம் தெரிவித்தார்கள். இதைக்கேட்ட அனைவரும் வியப்படைந்தார்கள். மரியா இவற்றை எல்லாம் தன்னுடைய உள்ளத்தில் வைத்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருந்தாள்.

மேய்ப்பர்கள் தாங்கள் கேட்டு, கண்ட எல்லாவற்றுக்காகவும் கடவுளைப் போற்றிக் கொண்டு திரும்பிச் சென்றார்கள்.

குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்

லூக்கா 2 : 21

‘விருத்தசேதனம்’ செய்யும் சடங்கு யூதர்களின் மிகப் பழைய வழக்கமாகும். மக்களுக்குக் கடவுளின் வாக்குறுதியின் ஒரு அடையாளமாக இது காணப்படுகிறது. ஒரு குழந்தை பிறந்து ஒரு வாரம் முடிந்ததும் இந்தச் சடங்கு செய்யப்படுகிறது. அந்த நாளிலேயே பெயரும் சூட்டப்படுகிறது. “இயேசு” என்னும் கிரேக்கப் பெயர், எபிரேய மொழியில், “யோசுவா” என்பதாகும். இப்பெயருக்கு, ‘மீட்பர்’ என்பது பொருள்.

ஒரு வாரத்துக்குப்பின், குழந்தைக்குப் பெயர் சூட்டும் நாள் வந்தபோது அதற்கு, “இயேசு” என்று பெயரிடப்பட்டது. குழந்தை பிறப்பதற்கு முன்னரே வானதூதர் குழந்தையின் பெயரை “இயேசு” என்று அறிவித்திருந்தார்.

இயேசுவைக் ஆலயத்தில் அர்ப்பணித்தல்

லூக்கா 2 : 22 – 38

சிமியோன் ஒரு இறைபற்று மிக்க மனிதர். அவர் எருசலேமில் வாழ்ந்து வந்தார். “இறப்பதற்கு முன்னர் நீ மீட்பரைப் பார்த்து விடுவாய்” என்று கடவுள் அவருக்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து யோசேப்பும், மரியாளும் தங்களுடைய குழந்தையை எருசலேமுக்கு எடுத்துச் சென்றார்கள். “ஒவ்வொரு குடும்பத்திலும் பிறக்கும் முதல் ஆண் குழந்தைக் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும்” என்பது கடவுளின் கட்டளை. அத்துடன் இரண்டு புறா குஞ்சுகளையும் படைக்க வேண்டும்.

சிமியோன் என்னும் பேருள்ள ஒரு மனிதர் எருசலேமில் வாழ்ந்து வந்தார். அவர் கடவுளை நேசிக்கும் ஒரு நல்ல மனிதர். கடவுள் தமது மக்களுக்கு நன்மை செய்யும் நாளைக்காண அவர் ஆவலுடன் காத்திருந்தார். “கடவுள் அனுப்புவதாக வாக்குறுதி செய்திருந்த மீட்பரைக் காணுமுன் நீ இறக்கமாட்டாய்” எனக் கடவுளின் தூய ஆவியானவர் அவரிடம் கூறியிருந்தார். அன்று தூய ஆவியானவரின் தூண்டுதலால் சிமியோன் ஆலயத்தின்



உள்ளே சென்றார். அந்நேரத்தில்தான் குழந்தை இயேசுவை அவரது பெற்றோர் ஆலயத்தினுள் கொண்டு வந்தனர். சிமியோன் அக்குழந்தையைப் பெற்று தன் கைகளில் ஏந்தி கடவுளுக்கு நன்றி செலுத்தி, கடவுளைப் போற்றிப் பாடினார்.

"இப்பொழுது ஆண்டவரே,
நான் அமைதியோடு இறக்க முடியும்.
உலக மீட்பரை நான் காணச் செய்தீர்.
அவரை எல்லா மக்களுக்கென்றும் நீர்
ஆயத்தப்படுத்தியிருக்கிறீர்.
அவர் உமது வழிகளை எல்லா மக்கள்
இனங்களுக்கும் அறிவிப்பார்.
அவர் இஸ்ரயேல் இனத்தாருக்குப்
பெருமை கிடைக்கச் செய்வார்."

குழந்தை இயேசுவைப் பற்றி சிமியோன் பாடியதைக் கேட்ட குழந்தையின் பெற்றோர் மிகுந்த வியப்படைந்தார்கள். சிமியோன் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்



மரியாளிடம், ''இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு அடையாளமாக கடவுள் இந்தக் குழந்தையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். பலர் அவருக்கு எதிராகப் பேசி, அழிந்து போவார்கள். அவரை ஏற்றுக்கொள்ளும் பிற மக்கள் அனைவரும் காப்பாற்றப்படுவார்கள். அவர் எல்லா மறைபொருளையும் வெளிப்படுத்திவிடுவார். அனால், மிகவும் வருத்தமுறச் செய்யும் நிகழ்ச்சிகளும் நடக்கும்'' என்றார்.

அங்கே அன்னா என்னும் பெயருள்ள, 84 வயதான, கடவுளுக்குப் பயப்படும் ஒரு மூதாட்டி இருந்தாள். அவள் ஒரு கைம்பெண். நீண்ட காலமாக அவள் ஆலயத்திலேயே வாழ்ந்து வந்தாள். இரவும், பகலும் நோன்பிருந்து, இறைவேண்டல் செய்து, கடவுளை வழிபட்டுக் கொண்டிருந்தாள். அவளும் குழந்தை இயேசுவை கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். கடவுள் தமது மக்களை விடுவிக்கும் நாளைக் காணக் காத்திருக்கும் மக்கள் அனைவரிடமும் இந்தக் குழந்தையைப் பற்றிப் பேசினாள்.

இயேசுவின் இளமைப்பருவம்

கிழக்கிலிருந்து இயேசுவைக் காண வந்தவர்கள்

மத்தேயு 2:1-8

ஏரோது ரோமர்களின் கைப்பாவை அரசனாயிருந்தான். ரோமர்கள் அவனை அதிகாரத்தில் அமர்த்தியிருந்தனர். அவன் நாட்டு மக்களிடமிருந்து முறையாக வரிகளை வசூலித்து, சட்டம் ஒழுங்கை சரியாக நிலைநாட்டியதால் அவர்கள் அவனைப் பதவியிலிருக்க அனுமதித்தார்கள்.

"வேறு யாராவது தன் பதவியில் அமர்ந்து, தனது அதிகாரங்களை அபகரித்து விடுவார்களோ!" என்று ஏரோது அதிகமாகப் பயந்து கொண்டிருந்தான்.

இயேசு பிறந்தபோது ஏரோது, யூதாவின் அரசனாயிருந்தான். கீழை நாட்டில் உள்ள விண்கோள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் வானியல் அறிஞர்களில் சிலர் இயேசுவின் பிறப்பைக் குறித்து அறிந்து கொண்டார்கள். அக்குழந்தையைக் காண அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். அங்கே இருந்தவர்களிடம் யூதருக்கு அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே சுட்டிக் காட்டும் விண்மீனைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்'' என்றார்கள்.

அரசன் ஏரோதும், எருசலேமிலுள்ள அனைவரும் இதைக்கேட்டு, அதிகக் கலக்கமடைந்தார்கள். உடனே ஏரோது தன் நாட்டிலுள்ள முதன்மைக் குருக்களையும், சமய ஆசிரியர்களையும் தன்னிடம் அழைத்தான். அவர்களிடம், "வாக்குறுதி செய்யப்பட்ட மீட்பர் எங்கே பிறப்பார்?'' என்று கேட்டான். அவர்கள், "அவர் பெத்லகேமில் பிறப்பார்'' என்றார்கள். ஏனென்றால் இறைவாக்கினர் இதைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளனர்.

"பெத்லகேமே! நீ யூதேயாவில் உள்ள முக்கிய நகரங்களுள் சிறியதல்ல. ஏனெனில், எனது மக்களை மீட்கும் மீட்பர் உன்னிடம் பிறப்பார்'' என்று எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

எனவே ஏரோது, கீழை நாட்டிலிருந்து வந்திருந்தவர்களை மறைவான இடத்துக்குத் தனியே அழைத்தான். அவன் அவர்களிடம், "நீங்கள் அந்த விந்தையான விண்மீனைக் கண்ட நேரத்தைச் சரியக எனக்குக் கூறுங்கள்'' என்று விசாரித்தான். அப்போது அவர்களிடம் "முதலில் நீங்கள் சென்று அந்த இளவரசனாம் குழந்தையைக் கண்டு பிடித்து

பணியுங்கள். பின்னர் என்னிடம் வந்து அந்தக் குழந்தை இருக்கும் இடம் எது என்று தெரிவியுங்கள். நானும் அக்குழந்தையைக் கண்டு பணிந்து கொள்ள வேண்டும்'' என்றான்.

பின்னர் அவர்கள் பெத்லகேமுக்குச் சென்றார்கள். கிழக்கில் அவர்கள் கண்ட விண்மீன் இப்பொழுதும் அவர்களுக்கு வழிகாட்டிற்று. அந்த விண்மீனுக்காக மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் உள்ளே நுழைந்து மரியாளையும், குழந்தை இயேசுவையும் கண்டார்கள். அவர்கள் முழங்காற்படியிட்டு பணிந்து கொண்டார்கள். குழந்தைக்கு நன்கொடையாக பொன், தூபம், வெள்ளைப்போளம் ஆகியவற்றைப் படைத்தார்கள்.

“திரும்பவும் அவர்கள் ஏரோது அரசனிடம் செல்ல வேண்டாம் என்று கடவுள் ஒரு கனவின் மூலம் அவர்களை எச்சரித்திருந்தார். எனவே அவர்கள் வேறொரு வழியாகத் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.''

எகிப்துக்குத் தப்பி ஓடுதல்

மத்தேயு 2 : 13 – 15

குழந்தையைப் பார்க்க வந்தவர்கள் சென்ற பின்னர் ஒரு வானதூதர் கனவில் யோசேப்புக்குத் தோன்றி “ஏரோது, குழந்தை இயேசுவைத் தேடிக்கொண்டிருக்கிறான். அவன் குழந்தையைக் கொன்றுவிட நினைக்கிறான். எனவே, நீங்கள் குழந்தையுடன் எகிப்துக்குச் செல்லுங்கள். நான் உங்களை மறுபடியும் புறப்படச் சொல்லும்வரை அங்கேயே தங்கியிருங்கள்'' என்று அறிவித்தார்.

யோசேப்பு குழந்தையையும், தாயையும் அழைத்துக் கொண்டு, அந்த இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும்வரை அவர்கள் எகிப்தில் தங்கினார்கள்.

“எனது புதல்வனை எகிப்திலிருந்து வரவழைத்தேன்'' என்னும் இறைவாக்கினரின் வார்த்தை உண்மையாக நிறைவேறுமாறு இப்படி நடந்தது. ஏரோது இறந்தபின்னர் யோசேப்பு மரியாளையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பி வந்தார்.

ஏரோதின் கொடுஞ்செயல்

மத்தேயு 2 : 16

ஏரோது தனது சொந்தப் புதல்வன் தனக்குப் பின் அரசனாக வேண்டும் என்று விரும்பினான். இயேசு அரசராவதை அவன் விரும்பவில்லை. ஆனால் “இயேசு எங்கே இருக்கிறார்? அவரைக் கொலை செய்வது



எப்படி ?" என்பதைப் பற்றிச் சிந்தித்தான். எப்படியும் அப்போது இயேசுவுக்கு ஏறக்குறைய இரண்டு வயதிருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

கிழக்கிலிருந்து இயேசுவைக் காண வந்தவர்கள் அவனை ஏமாற்றிவிட்டார்கள் என்று ஏரோது அறிந்தான். அவன் மிகவும் கோபங்கொண்டான். எனவே, அவன் பெத்லகேமிலுள்ள ஏறக்குறைய இரண்டு வயதான எல்லா ஆண் குழந்தைகளும் கொன்றுவிடுங்கள் என்று கட்டளையிட்டான்.

எகிப்திலிருந்து திரும்பி வருதல்

மத்தேயு 2 : 19 – 23

ஏரோது இறந்தபின் ஒரு வானதூதர் யோசேப்பின் கனவில் தோன்றி, "குழந்தை இயேசுவையும், அவரது தாய் மரியாளையும் அழைத்துக்கொண்டு உம்முடைய நாட்டுக்குத் திரும்பிச் செல்லும். இயேசுவைக் கொலை செய்யத் தேடியவன் இறந்து விட்டான்". என்று கூறினார். தூதரின் இந்தச் செய்தியைக் கேட்டதும் யோசேப்பு தன் குடும்பத்தாருடன் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

ஆனால், இப்பொழுது ஏரோதின் மகன் யூதேயாவின் அரசனாக இருக்கிறான் என்று அறிந்து அங்கு செல்ல யோசேப்பு பயப்பட்டார். எனவே, இன்னொரு கனவில் கடவுள் தோன்றி நீ குடும்பத்துடன் கலிலேயாவுக்குப் போ என்றார். யோசேப்பு அங்கு சென்று நாசரேத்து என்னும் நகரில் வாழ்ந்து வந்தார். இதனால் இயேசு 'நசரேயன்' எனப்படுவார் என்னும் வேறொரு இறைவாக்கினரின் வார்த்தை உண்மையாயிற்று

ஆலயத்தில் சிறுவன் இயேசு

லூக்கா 2 : 41 – 52

பன்னிரெண்டு வயதில், யூதச் சிறுவர்கள் சமயச் சடங்குகளில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டார்கள். ஆலயத்தின் முற்றத்தில் சமயத் தலைவர்கள் கூடிப் பேசுவார்கள் தங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பார்கள்.

ஒவ்வொரு வருடமும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவுக்காக எருசலேம் செல்வாகள். இயேசுவுக்குப் பன்னிரெண்டு வயதானபோது அவரையும் அந்த விழாவுக்கு அழைத்துச் சென்றார்கள். விழா முடிந்த பின்னர், இயேசு ஆலயத்தில் தங்கிவிட்டார். அவருடைய பெற்றோர்கள் இதை அறியவில்லை. அவர்கள், அவர் தங்களது உறவினர்களுடனோ, நண்பர்களுடனோ இருப்பார் என்று நினைத்தார்கள். ஒருநாள் பயணம் செய்த பின்னர் அவர்கள் இயேசுவைத் தேடினார்கள். அவரை எங்கும் காணாததால் திரும்ப எருசலேமுக்குத் தேடிவந்தார்கள். மூண்றாவது நாள் அவரை கண்டார்கள். இயேசு ஆலயத்தில் சமயத் தலைவர்களுடன் உட்கார்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டும் இருந்தார். இயேசு பேசுவதைக் கேட்ட அனைவரும் அவருடைய ஞானமான வார்த்தைகளைக் கண்டு வியப்படைந்தார்கள். இயேசு அங்கிருப்பதை அவரது பெற்றோர் கண்டார்கள். அவரது தாய் அவரிடம் 'மகனே நீ ஏன் இப்படிச் செய்தாய்? உனது தந்தையும், நானும் மிகுந்த கவலையுடன் உன்னைத் தேடினோமே' என்றார்.

அதற்கு இயேசு 'நீங்கள் ஏன் தேடினீர்கள்? நான் என்னுடைய தந்தையின் வீட்டில் இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா?' என்று கேட்டார். அப்போது அவர் கூறியது அவரது பெற்றோருக்குப் புரியவில்லை.

இயேசு அவர்களுடன் நாசரேத்துக்குச் சென்றார். அங்கே அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் குறித்தும் அவரது தாய் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இயேசு வளர்ச்சி அடைந்தார். அவர் ஞானத்தையும், உடல் வலிமையையும் மிகுதியாகப் பெற்றார். அவர் கடவுளாலும், மக்களாலும் பெரிதும் விரும்பப்பட்டார்.

இயேசு எப்படி வாழ்ந்தார்?

இயேசு சிறுவனாக எருசலேம் ஆலயத்திற்குச் சென்று திரும்பியபின் 18 வருடங்கள் கடந்தன. இந்த இடைக்காலத்தில் அவரது வாழ்க்கை எப்படியிருந்தது என்பது பற்றி நமக்கு மிகுதியாகக் கொடுக்கப்படவில்லை. அவர் தனது வீட்டில் ஒரு தச்சராக வேலை செய்து கொண்டிருந்தார்.

முப்பது வயது நிரம்பியவராக நாசரேத்தை விட்டுப் புறப்படும் இயேசுவைக் காண்கிறோம். அவர் பாலஸ்தீனா நாடு முழுவதும் கடவுளின் பெயரால் வியத்தகு செயல்களைச் செய்து கொண்டும், மக்களுக்கு நற்செய்தி அறிவித்துக் கொண்டும் சுற்றித் திரிந்தார். இவ்வாறு மூன்று வருடங்கள் அவர் நற்பணியாற்றினார். அவருடைய சீடர்களில் மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான் என்பவர்கள் இயேசுவைப் பற்றி எழுதினார்கள். விவிலியத்தில் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் அவை முதல் நூல்களாக வைக்கப்பட்டுள்ளன. இவை "நற்செய்தி நூல்கள்" எனப்படும்.

யோவான் வழியை ஆயத்தம் செய்தல்

அந்நாட்களில் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, அஞ்சல்துறை எதுவுமே கிடையாது. ஒரு அரசன் ஒரு இடத்துக்குச் செல்கிறார் என்றால் அவர் போவதற்கு முன்னோடியாக, ஒரு தூதுவன் அனுப்பப்படுவான். அவன் மக்களிடம் அரசனை வரவேற்கத் தயாராயிருக்கும்படிக் கூறுவான். அவ்வாறு கடவுள் வாக்குறுதி செய்திருந்த, வரப்போகும் மீட்பருக்கு ஒரு முன்னோடி தேவை. யோவான் பிறந்த போது அவர் அம்முன்னோடியாயிருப்பார் என்று அவரது தந்தையான சகரியா சொல்லியிருந்தார்.

யோவானின் நற்செய்தி

லூக்கா 3 : 3, 7

யோவான் காட்டுப்பகுதியிலுள்ள ஒரு தனிமையான இடத்தில், எளிமையான வாழ்க்கை நடத்திவந்தார். கடவுளைப் பற்றி அவர் பேசுவதைக் கேட்க மக்கள் அவரிடம் சென்றார்கள். அம்மக்களிடம் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அவர் துணிவுடன் சொன்னார். பலர் தாம் கடவுளுக்குக் கீழ்ப்படியாததற்காக மக்கள் முன்னிலையில் வருத்தம் தெரிவித்தார்கள். யோவான் அவர்களுக்கு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குக் கொடுத்தார்.

சகரியாவின் மகனான யோவானிடம் கடவுள் பேசினார். யோவான் யோர்தான் ஆற்றின் கரையோரமாகச் சென்று மக்களிடம், "கடவுளுக்கு விருப்பமில்லாத செயல்களைச் செய்வதை நிறுத்துங்கள், திருமுழுக்குப் பெறுங்கள். கடவுள் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பார்" என்று அறிவித்தார்.

திரள் திரளான மக்கள், யோவானிடம் வந்து தங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்குமாறு வேண்டினார்கள். யோவான் அவர்களிடம், "விரியன் பாம்பு குட்டிகளே! நீங்கள் பொல்லதவர்கள். கடவுளுக்கு மகிழ்ச்சித் தரக்கூடிய செயல்களைச் செய்யுங்கள்" என்று கூறினார்.



இயேசுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்தல்

மத்தேயு 3 : 4 – 6, 13 – 17

யோவான் ஒட்டக உரோமத்தாலான ஆடையை அணிந்து, தோலினாலான கச்சையைக் கட்டியிருந்தார். வெட்டுக்கிளியும், காட்டுத் தேனும் அவருக்கு உணவாயிருந்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் அவரிடம் வந்தார்கள். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களை யோவானின் முன்னிலையில் கடவுளிடம் அறிக்கைச் செய்தார்கள்.

அந்நேரத்தில் அங்கே இயேசு கலிலேயாவிலிருந்து வந்தார். அவர் யோவானிடம் ஆற்றில் தனக்குத் திருமுழுக்கு அளிக்குமாறு கேட்டார். ஆனால் யோவான் இயேசுவிடம், "நீர் அல்லவோ எனக்குத் திருமுழுக்குத் தரவேண்டும்?" என்றார்.

அதற்கு இயேசு, "இப்பொழுது எனக்குத் திருமுழுக்கு கொடு. இது கடவுளின் திட்டம்" என்றார். உடனே யோவான் இயேசுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்.



இயேசு, திருமுழுக்குப் பெற்று ஆற்றிலிருந்து கரையேறும் போது திடீரென்று வானம் திறந்தது. வானத்திலிருந்து தூயாவி ஒரு புறாவைப் போல் இறங்கி அவர்மேல் தங்கியது. விண்ணகத்திலிருந்து கடவுளின் ஒலி தொனித்தது. "இவர் என்னுடைய அன்பு மகன். இவரிடம் நான் மிகவும் பிரியமாயிருக்கிறேன்."

இயேசு பணியைத் தொடங்குதல்

இயேசு சோதிக்கப்படுதல்

மத்தேயு 4 : 1 - 11

இயேசுவிடம் ஒரு தனி ஆற்றல் இருந்தது. அவர் தனது நற்பணியைத் தொடங்குமுன் சாத்தான் அவரைக் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல், தனக்குக் கீழ்ப்படியச் செய்ய முயற்சித்தான். அப்போது நடந்தது என்ன ?

கடவுளுடைய ஆவி இயேசுவைப் பாலை நிலத்திலுள்ள ஒரு தனிமையான இடத்திற்குக் கொண்டு சென்றது. இயேசு அவ்விடத்தில் 40 நாட்கள் இரவும், பகலும் உணவு உண்ணாமல் உபவாசம் இருந்தார். அதன்பின் அவருக்குப் பசி உண்டாயிற்று. அப்பொழுது சாத்தான் அவரிடம் வந்து அவரைச் சோதித்தான்.

“நீர் கடவுளுடைய மைந்தன் நீர் ஏன் இந்தக் கற்களை அப்பமாக்கிச் சாப்பிடக் கூடாது ?” என்று கேட்டான். அதற்கு இயேசு, “மனிதன் உயிர் வாழ அப்பம் மட்டும் அல்ல. கடவுளின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து, அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும், என்றும் எழுதியிருக்கிறது” என்றார்.

பின்னர் சாத்தான் இயேசுவை எருசலேம் தேவாலயத்தின் மிக உயர்ந்த கோபுரத்தின் மேல் கொண்டுபோய் நிறுத்தினான். இயேசுவிடம், “நீர் இங்கிருந்து கீழே குதியும். திருமறை நூல் கூறுகிறபடி கடவுள் தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டு, உமக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதபடி உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்” என்றான். அப்பொழுது இயேசு சாத்தானிடம், “உன் ஆண்டவராகிய கடவுளைச் சோதித்துப் பார்க்காதே என்றும் மறை நூலில் எழுதப்பட்டிருக்கிறதே!” என்றார்.

அதன்பின் சாத்தான் இயேசுவை மிக உயரமான ஒரு மலையின் உச்சிக்குக் கொண்டு சென்றான். அங்கிருந்து நாற்புறமும் உள்ள உலகின் பேரரசுகளைச் சுட்டிக் காட்டினான். நான் உம்மை இவையனைத்தின் மேலும் பேரரசராக நியமிப்பேன். இப்பொழுது நீர் எனக்கு முன்பாக முழங்காற்படியிட்டு என்னை மட்டும் வணங்கும்” என்றான். அதற்கு இயேசு, “என்னைவிட்டு விலகிப்போ சாத்தானே. கடவுள் ஒருவரையே வழிபடு. அவர் ஒருவருக்கே நற்பணியாற்று” என்று மறை நூல் கூறுகிறதே என்றார். இதைக் கேட்டதும் சாத்தான் இயேசுவை விட்டு விலகிச் சென்று விட்டான். அதன்பின் வானதூதர்கள் வந்து இயேசுவுக்குப் பணிவிடைச் செய்தார்கள்.





நான்கு மீனவர்களை அழைத்தல்

மாற்கு 1 : 14 - 20

யூத போதகர்கள், 'ரபிகள்' என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் சிறப்புத் தகுதியுடைய சிலரைத் தமது சீடர்களாகத் தெரிந்தெடுத்துக்கொள்வார்கள். அவர்கள் வீட்டை விட்டு, தமது ரபியைப் பின் செல்வர். இயேசுவும் தமது சீடர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனால், இவர்கள் எளிய பணி செய்தவர்கள்.

இயேசு கலிலேயாவுக்குச் சென்று, மக்களிடம், "இதோ உங்களுக்கு கடவுளின் நற்செய்தி! நீங்கள் உங்கள் பாவங்களை விட்டு மனம் மாறி, இப்பொழுதே கடவுளிடம் திரும்புங்கள்" என்று போதித்துக் கொண்டே, கடற்கரையோரமாக நடந்துச் சென்றார். அங்கே இரண்டு மீனவர்கள் ஒரு வலையை வீசி, மீன்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் சீமோனும் அவரது சகோதரர்

அந்திரேயாவும் ஆவர். இயேசு அவர்களிடம், "என்னுடன் வாருங்கள், இனி உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக ஆக்குவேன்" என்றார். உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டுவிட்டு, இயேசுவை பின்தொடர்ந்தார்கள்.

இயேசு, இன்னும் சிறிது தூரம் சென்றபின், அங்கே வலைகளை பழுது பார்த்துக் கொண்டிருந்த யாக்கோபு, யோவான் என்னும் சகோதரர்களைக் கண்டார். அவர்களை தனது பின்னே வருமாறு அழைத்தார். உடனே அவர்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

வரிவசூலிப்பவர் ஒருவரை அழைத்தல்

மத்தேயு 9 : 9 – 13

ரோம அரசர்களுக்காக வரி வசூலிப்பவர்கள், அநியாயமாக வரி வசூலித்துச் செல்வந்தர் ஆனார்கள். யூதர்கள் அவர்களை வெறுத்து வந்தார்கள்.

இயேசு, வழியில் ஒரு சுங்கச்சாவடியில் மத்தேயு என்னும் வரி வசூலிப்பவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். இயேசு அவரிடம், "என்னுடன் வா" என்றார். அவர் எழுந்து; இயேசுவையும், அவருடைய சீடர்களையும் உணவருந்த தன் வீட்டிற்கு அழைத்தார். இயேசுவோடு இன்னும் பல வரி வசூலிப்பவர்களும், வேறு பல மக்களும் அமர்ந்து உணவருந்துவதைப் பார்த்த பரிசேயர்கள் இயேசுவின் சீடர்களிடம், "உங்கள் போதகர் வரி வசூலிப்பவர்களுடனும், பாவிகளுடனும் அமர்ந்து உணவு சாப்பிடுகிறாரே ?" என்றார்கள். இதைக் கேட்ட இயேசு, "உடல் நலத்தோடு இருப்பவர்களுக்கு மருத்துவர் தேவையில்லை. நோயாளிகளுக்கு மட்டுமே தேவை. பலிகளை அல்ல, மற்றவர்களிடம் இரக்கம் காட்டும் மக்களையே கடவுள் விரும்புகிறார் என்று திருமறை கூறுகிறது. தாங்கள் பாவிகள் என்று உணருபவர்களுக்கு உதவி செய்யவே நான் வந்திருக்கிறேன். தங்களை நல்லவர்கள் என்று எண்ணுபவர்களுக்காக வரவில்லை. இதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்" என்றார்.



திருத்தூதர்கள்

இயேசு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாற்கு 3 : 13 – 19

"திருத்தூதர்" என்ற சொல்லுக்கு, "சிறப்பான ஒரு பணிசெய்ய கடவுளால் அனுப்பப்பட்ட ஒருவர்" என்று பொருள். இந்தப் பணிக்காகவே இயேசு பன்னிரண்டு பேரைத் தெரிந்தெடுத்தார். அவர்களோடு மூன்று வருடங்கள் வாழ்ந்தார். அவர், அவர்களைவிட்டுப் பிரிந்த பின்னர் அவர்கள் மக்களிடம், "இயேசு யார்?" "அவர் என்னென்ன செய்தார்?" என்பவற்றை எடுத்துக் கூறினார்கள்.

இயேசு ஒரு மலையின் மேல் ஏறிச் சென்றார். சிலரை மட்டும் தம்முடன் வரும்படிக் கூறினார். அவர்களுள் பன்னிரண்டு பேரைத் தமக்குச் சிறப்பு உதவியாளர்களாகத் தெரிந்து கொண்டார். அவர்களிடம், "நீங்கள் எனக்கு மிகவும் அன்பானவர்கள். நீங்கள் என்னுடன் தங்கியிருக்க வேண்டும். நான் உங்களைக் கடவுளின் நற்செய்தியை அறிவிக்க அனுப்புவேன். உங்களுக்கு மக்களிடமிருந்து அசுத்த ஆவிகளைத் துரத்தும் ஆற்றல் இருக்கும்" என்றார்.

பன்னிரண்டு திருத்தூதர்கள்:

அந்திரேயா, அவனது சகோதரன் சீமோன், (இயேசு அவனைப் 'பேதுரு' என்று அழைத்தார்)

யாக்கோபு, யோவான், (இவர்கள் இருவரும் செபெதேயுவின் குமாரர்கள் இயேசு இவர்களை, "இடிமுழக்கத்தின் மக்கள்" என்று அழைத்தார்)

பிலிப்பு, பர்த்தலமேயு, மத்தேயு, தோமா,

யாக்கோபு, (இவன் அல்பேயுவின் மகன்)

ததேயு,

சீமோன், (ஒரு விடுதலைப் போராட்ட வீரன்)

யூதா இஸ்காரியோத்து (இவன் இயேசுவை எதிரிகளிடத்தில் காட்டிக் கொடுத்தவன்)

மக்களுக்காகக் கவலைப்படுதல்

மத்தேயு 9 : 36 – 38

வாழ்வில் துன்பம் நிறைந்தவர்களும், ஆதரவற்றவர்களுமான ஏராளமான மக்களை இயேசு கண்டார். அவர் அவர்களுக்காகக் கவலையுற்றார். அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஒரு ஆட்டுமந்தையைப் போல் இருந்தார்கள். இயேசு இதைக் கண்டதும் தமது சீடர்களிடம், "கடவுளிடம் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஏராளம். ஆனால் வேலையாட்கள் மிகச் சிலரே உள்ளனர். இன்னும் மிகுதியான பணியாளர்களை அனுப்புமாறு கடவுளிடம் வேண்டுங்கள். அப்பொழுது இவர்கள் அனைவரையும் கடவுளிடம் வரவழைக்க முடியும்" என்றார்.

கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துதல்

கானா ஊரில் நிகழ்ந்த திருமணம்

யோவான் 2 : 1 – 12

பாலஸ்தீனாவில் திராட்சைச் செடிகள் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. எனவே அங்கே திராட்சை ரசம் எல்லா உணவுகளிலும், விருந்துகளிலும் பரிமாறப்படும். கானா ஊரில் ஒரு திருமண வீட்டில் இயேசு தண்ணீரைத் திராட்சை ரசமாக்கும் விந்தைச் செயல் ஒன்றைச் செய்தார். 'அருஞ்செயல்' என்பது கடவுளிடமிருந்து காட்டப்படும் ஒரு அடையாளம் ஆகும். அது ஆண்டவரின் வல்லமையையும், மக்கள் மேல் அவருக்குள்ள அக்கறையையும் காட்டுகிறது.

கலிலேயா நாட்டில் 'கானா' என்னும் நகரத்தில் ஒரு திருமணம் நடந்தது. இயேசுவும் அவருடைய சீடர்களும் அத்திருமணத்துக்கு அழைக்கப்பட்டு இருந்தார்கள். இயேசுவின் தாயும் அங்கே இருந்தார். திடீரென்று திருமண வீட்டில் திராட்சைரசம் தீர்ந்துவிட்டது. உடனே இயேசுவின் தாயார் அவரிடம் வந்து, "விருந்தில் பரிமாறுவதற்கு ரசம் தீர்ந்து விட்டது" என்றார்.

இயேசு தன் தாயிடம், "அம்மா, நான் என்ன செய்ய வேண்டு மென்று நீங்கள் என்னிடம் கூற வேண்டியதில்லை. என் வேளை வரும்போது நான் செய்ய வேண்டியதைச் செய்வேன்" என்றார்.

இயேசுவின் தாய் வேலைக்காரர்களைப் பார்த்து, "அவர் உங்களிடம் என்ன செய்யச் சொல்லுகிறாரோ, அப்படிச் செய்யுங்கள்" என்றார்.

ஆறு பெரிய தண்ணீர் ஜாடிகள் அங்கே இருந்தன. இயேசு வேலைக்காரர்களைப் பார்த்து, "இந்த ஜாடிகளில் தண்ணீர் நிரப்புங்கள்" என்றார். அவர்கள் அவற்றின்





விளிம்புவரை தண்ணீர் நிரப்பினார்கள். பின்னர் அவர் அவர்களிடம், "இதில் சிறிது எடுத்து பந்தி பொறுப்பாளரிடம் கொண்டு போய் கொடுங்கள்" என்றார். அவர்கள் அப்படியே செய்தார்கள். அவர் அதைச் சுவைத்துப் பார்த்தார். அது சுவையான திராட்சை ரசம் என்று கண்டார். அவருக்கு இந்தத் திராட்சை ரசம் எங்கிருந்து வந்தது என்று தெரியாது. உண்மையில் அந்த ஜாடிகளில் தண்ணீர் நிரப்பிய வேலைக்காரர்களுக்கு மட்டுமே தெரியும். எனவே, அவர் மணமகனை அழைத்து, "எல்லா இடங்களிலும் நல்ல சுவைமிக்க திராட்சை ரசத்தை முதல் பந்தியில் வழங்குவார்கள். விருந்தினர் குடித்து முடித்தபின்பு, சாதாரண ரசம் பரிமாறப்படும். ஆனால், இவ்வளவு சுவையான ரசத்தை இதுவரை மறைத்து வைத்துவிட்டாயே!" என்று கேட்டார்.

இதுவே இயேசு செய்த முதலாவது 'அருஞ்செயல்' இது கடவுளின் வல்லமையைக் காட்டவும், இயேசுவைப் பின்பற்றுபவர்கள் அவர் மீது நம்பிக்கைகொள்ளவும் ஏதுவானது.

அசுத்த ஆவி பிடித்த மனிதர்

மாற்கு 1 : 21 – 28

'திரு ஆலயம்' என்பது யூதர்கள் கடவுளை வழிபடும் இடம். ஒவ்வொரு ஓய்வு நாளிலும் அவர்கள் அங்கு கூடி கடவுளைப்பற்றி கற்றுக் கொள்வார்கள். 'ரபி' என்றழைக்கப்படும் ஒரு சமயப் போதகர், திருமறை நூலை வாசித்து, அவற்றின் கருத்துக்களை விளக்கிக் கூறுவார். அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கும் பதிலளிப்பார்.



கப்பர்நாகும் என்னும் நகரத்துக்கு இயேசுவும் அவருடைய சீடர்களும் வந்தார்கள். அடுத்த ஓய்வு நாளில் இயேசு திரு ஆலயத்திற்குச் சென்றார். அவர் மக்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார்.அவர் போதித்த முறை கண்டு மக்கள் வியப்படைந்தார்கள். பிற சமயப் போதகர்களைப் போல அவர் கற்பிக்கவில்லை. அவர் கடவுளின் பெயரால் போதனைகளை எடுத்துரைத்தார்.

அவ்வேளையில் அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதன் ஆலயத்திற்குள் வந்தான். அவன், "நாசரேத்தைச் சேர்ந்த இயேசுவே, நீர் எங்களை அழிக்கவா வந்தீர்? நீர் யாரென்று எனக்குத் தெரியும். நீர் கடவுளிடமிருந்து வந்தவர்!" என்று கத்தினான். இயேசு அவனிடமிருந்த அசுத்த ஆவியை அதட்டினர். "வாயை மூடு. நீ இந்த மனிதனிடமிருந்து வெளியேறு" என்று கட்டளையிட்டார்.

அந்த ஆவி, அவனை உடல் நடுங்கும்படிச் செய்து, உரத்தக்குரலில் கத்தியபடி வெளியேறியது. இதைக் கண்ட மக்கள் மிகுந்த வியப்படைந்தார்கள். அவர்கள் , "என்ன இது? இவருக்கு அசுத்த ஆவிகளின் மீதும் ஆற்றல் இருக்கிறதே! அசுத்த ஆவிகளும் இவர் சொல்லுக்குக் கீழ்ப்படிகின்றனவே!" என்று பேசிக் கொண்டார்கள்.

எனவே, அவருடைய புகழ் கலிலேயா நாடெங்கும் பரவியது.

பல நோயாளிகள் நலம் பெறுதல்

மாற்கு 1 : 29 – 34

இயேசு சீடர்களுடன் திருஆலயத்தை விட்டுப் புறப்பட்டார். நேராக சீமோன், அந்திரேயா என்பவர்களின் வீட்டுக்கு வந்தார். சீமோனின் மாமி உடல்நலமில்லாமல் படுத்திருப்பதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. இயேசு, அவளுடைய கையைப்பிடித்துத் தூக்கி, எழுந்து நிற்கச் செய்தார். அந்நேரமே அவள் முழு நலம் பெற்றாள். வந்திருந்த விருந்தினர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

அன்று மாலையில், மக்கள் நோயாளிகளையும், அசுத்தஆவி பிடித்தவர்களையும், இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். மக்கள் அவ்வீட்டின் முன் வந்து கூடினார்கள். இயேசு பல நோயாளிகளைக் குணமாக்கினார். பலரிடமிருந்த அசுத்த ஆவிகளைத் துரத்தினார். அந்த ஆவிகள் இயேசுவை யாரென்று அறிந்திருந்தன. எனவே அவர் அவற்றைப் பேச அனுமதிக்கவில்லை.

இயேசு கடவுளிடம் வேண்டுதலும், கற்பித்தலும்

மாற்கு 1 : 35 –39

மறுநாள் விடியற்காலையில் இயேசு அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். அவர் தனியாக ஓரிடம் சென்று, கடவுளிடம் வேண்டுதல் செய்தார். சீமோனும் அவரோடிருந்தவர்களும் இயேசுவைத் தேடிச் சென்றார்கள். அவர் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து, அவரிடம் "எல்லோரும்

உம்மைத் தேடுகிறார்கள்'' என்றார்கள்.

அதற்கு இயேசு ''நாம் அருகிலுள்ள பிற சிற்றூர்களுக்கும் சென்று அங்கும் கடவுளைப் பற்றிப் பேச வேண்டும். எனவேதான் நான் புறப்பட்டு வந்து விட்டேன்'' என்றார்.

இவ்வாறு இயேசு, கலிலேயா முழுவதும் சுற்றித் திரிந்தார். ஆலயங்களில் போதித்தார். அசுத்த ஆவிகளைத் துரத்தினார்.

ஒரு தொழு நோயாளியைக் குணமாக்குதல்

மாற்கு 1 : 40 – 45

''தொழு நோய்'' ஒரு கொடிய தோல் நோய். இந்த நோய் கண்டவர்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனியாக வாழ்வார்கள். இது 'கடவுளின் – தண்டனை' என்று மக்கள் நினைத்தார்கள். பாலஸ்தீனாவில் சிலவகைத் தொழுநோய்கள் இயற்கையாகவே சுகமாகி விடும். அப்படிச் சுகமடைந்தவர்களை குரு பரிசோதிப்பார். அந்த ஆளிடமிருந்து தொழுநோய் முற்றிலும் நீங்கி விட்டதா, இல்லையா? என்று அவர் தீர்மானித்து கூறினால்தான் தன் குடும்பத்தாருடன் அந்த மனிதன் மறுபடியும் சேர்ந்து வாழ முடியும்.

ஒரு தொழுநோயாளி இயேசுவிடம் வந்து முழங்காற்படியிட்டான். 'இயேசுவே நீர் விரும்பினால் என்னை நலமாக்க உம்மால் முடியும்' என்று மிகப்பணிவுடன் கெஞ்சினான். இதைக் கேட்டதும் இயேசு அவன் மேல் இரக்கம் கொண்டார். அவர் அவனைத் தொட்டு, 'எனக்கு விருப்பமே. நீ நலமடைவாயாக' என்றார். உடனே அவன் நலமடைந்தான். இயேசு அவனிடம், ''இதோ பார். நீ நலமடைந்ததைப் பற்றி எவரிடமும் கூறாதே. விரைவில் உன் குருவிடத்தில் சென்று காட்டு அவர் உன்னைப் பார்க்கட்டும். அப்புறம் எல்லாரும் நீ நலமடைந்துள்ளதை அறிந்து கொள்வார்கள்'' என்றார்.

ஆனால் அந்த மனிதன் அங்கிருந்து விரைந்து சென்று எல்லோரிடமும் தான் நலமடைந்ததைப் பற்றி அறிவித்தான். இயேசு சென்ற இடமெல்லாம் மக்கள் அவர் யார் என்று அறிந்து கொண்டார்கள். அவர் தனிமையாயிருக்க விரும்பிய போதும்கூட எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் அவரிடம் வந்து கொண்டிருந்தார்கள்.



முடக்குவாதமுற்ற ஒருவரை நலமடையச் செய்தல்

மாற்கு 2 : 1 – 12

பாலஸ்தீனாவில் வீடுகளின் கூரைகள் தட்டையாகவே இருக்கும். மேல்தளத்தில் மரங்களைப் பரப்பி அவற்றின் மேல் மண்ணினால் மூடியிருப்பார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு இயேசு கப்பர்நாகுமிலுள்ள வீட்டுக்குத் திரும்பி வந்தார். இயேசு அங்கிருக்கிறார் என்ற செய்தி எங்கும் பரவிற்று. மக்கள் திரளாய் வந்து அவரிடம் கூடிவிட்டார்கள். வீட்டின் உள்ளேயும், முன்புறத்திலும் மக்கள் வந்து கூடியதால் இடம் இல்லாதநிலை உண்டாயிற்று. இயேசு அவர்கள் அனைவருக்கும் கடவுளின் செய்தியைக் கூறினார். அப்பொழுது நான்கு பேர் ஒரு மனிதனை படுக்கையில் கிடத்தி, தூக்கிக் கொண்டு வந்தார்கள். அவன் முடக்குவாதமுற்றவன். அவர்கள் அவனை இயேசுவின் அருகில் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே, அவர்கள் வீட்டின் மேற்கூரையில் ஒரு திறப்பு உண்டாக்கினார்கள். அது வீட்டினுள் இயேசு நின்ற இடத்துக்கு நேரே மேல்பக்கம் அமைந்தது. பின்னர் அந்த நோயாளியை அந்தத் திறப்பின் வழியாகப் படுக்கையோடு இயேசுவிடம் இறக்கினார்கள். இயேசு; அவர்கள் தன்மீது கொண்ட நம்பிக்கையைக் குறித்து வியப்படைந்தார். அவர் அந்த நோயாளியிடம், "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கிப்பட்டன" என்றார்.

அங்கிருந்த சில சமய ஆசிரியர்கள், "இந்த மனிதன் தன்னைக் கடவுள் என்று நினைக்கிறானோ? கடவுள் ஒருவருக்கு மட்டுமே பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு. இவன் இப்படிச் செய்வதினால் கடவுளைப் பழித்துரைக்கிறான்" என்று தங்கள் உள்ளத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது சிந்தனையை இயேசு அறிந்து, அவர்களிடம், "நீங்கள் ஏன் இப்படிச் சிந்திக்கிறீர்கள்? நான் இந்த முடக்குவாதமுற்ற மனிதனிடம், "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றும் சொல்லலாம். அதைவிட அவனிடம் "நான் உன்னுடைய



பாவங்களை மன்னிக்கிறேன்" என்று கூறுவது எளிதல்லவா? ஆனால் நீங்கள் மனிதராக இவ்வுலகில் தோன்றிய ஒருவருக்கு, பாவங்களை மன்னிக்கவும், நோய்களை நலமாக்கவும் வல்லமை உண்டு என்பதை அறிய வேண்டும்" என்றார்.

பின்னர் அந்த மனிதனைப் பார்த்து, "நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ" என்றார்.

எல்லாரும் கவனித்துக் கொண்டிருக்கும் போது அந்த மனிதன் தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு வெளியே நடந்து சென்றான். இதைக் கண்ட அனைவரும் மிகுந்த வியப்படைந்தார்கள். "நாங்கள் எப்போதுமே இது போன்ற விந்தையைக் கண்டதில்லை" என்று கூறி கடவுளைப் போற்றினார்கள்.

புயலை அடக்குதல்

மாற்கு 4 : 35 – 41

கலிலேயாக் கடல் 21 கிலோ மீட்டர் நீளமும் 13 கிலோ மீட்டர் அகலமும் கொண்டது. அதில் திடீர்ப்புயல்கள் அடிக்கடி தோன்றுவதுண்டு.

ஒரு நாள் மாலையில் இயேசு ஒரு படகில் ஏறினார். அவர் தம் சீடர்களிடம், "நாம் அக்கரைக்குப் போவோம்" என்றார். எனவே அவர்கள் மக்கள் கூட்டத்தைவிட்டு விலகி இயேசுவுடன் சென்றார்கள். அவர்களுடன் வேறு படகுகளும் சென்றன.

திடீரென்று ஒரு பலத்த புயல்காற்று வீசியது. பெரிய அலைகள் தோன்றிப் படகில் தண்ணீர் நிரம்பத் தொடங்கிற்று. அப்போது இயேசு படகின் பின் பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவருடைய



சீடர்கள் அவரை எழுப்பி, “போதகரே, நாங்கள் சாகப் போகிறோம். இதைப் பற்றி உமக்குக் கவலை இல்லையா?” என்று கேட்டார்கள். இயேசு எழுந்து நின்று காற்றைப் பார்த்து, ‘அமைதியாயிரு’ என்றும், அலைகளைப் பார்த்து, “அசையாதிருங்கள்” என்றும் கட்டளையிட்டார். உடனே காற்று நின்றது. அலைகளும் அடங்கின. இயேசு தம் சீடர்களைப் பார்த்து, “நீங்கள் ஏன் பயப்பட்டீர்கள்? உங்களுக்கு ஏன் நம்பிக்கை இல்லாமற் போயிற்று?” என்று கேட்டார். அவர்கள் மிகவும் பயந்தவர்களாய், “இவர் யார்? காற்றும், கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே!” என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

உண்மையான சீடர்கள்

இயேசுவின் உண்மையான குடும்பம்

மாற்கு 3 : 31 – 35

ஒருநாள் இயேசு ஒரு வீட்டினுள் அமர்ந்திருந்தார். அவருடன் ஏராளமான மக்கள் இருந்தார்கள். அப்போது இயேசுவின் சகோதர, சகோதரிகளுடன் அவருடைய தாயார் அங்கு வந்தார். வெளியே நின்று கொண்டு, இயேசுவை அழைத்துவரும்படி ஒருவரிடம் சொல்லியனுப்பினார். அவர் இயேசுவிடம் வந்து, “உமது தாயாரும், உடன் பிறந்தவர்களும் வந்து உம்மைப்பார்க்கும்படி வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்” என்றார்.

இதைக் கேட்டதும் இயேசு, “என்னுடைய தாயார் யார்? என்னுடைய உடன்பிறந்தவர்கள் யார்?” என்று கேட்டார். தம்மைச் சுற்றியிருந்த மக்களைப் பார்த்துவிட்டு அவர் சொன்னார்: “இதோ பாருங்கள் என்னுடைய தாயாரும், உடன் பிறந்தவர்களும் இவர்களே. கடவுளுக்குக் கீழ்ப்படிகிற அனைவருமே என்னுடைய சகோதரரும், சகோதரிகளும், தாயாரும் ஆவார்கள்” என்றார்.

இயேசுவைப் பின்பற்ற மறுத்த சிலர்

மாற்கு 6 : 1 – 6

இயேசு, சீடர்களுடன் தனது சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார். ஓய்வு நாளில் அவர் அங்குள்ள ஆலயத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அவர் பேசுவதைக் கேட்ட மக்கள் வியப்படைந்தார்கள். இவர் இவற்றையெல்லாம் எங்கிருந்து கற்றார்? எப்படி இவ்வளவு ஞானம் உள்ளவர் ஆனார்? எப்படி அருஞ்செயல்களை எல்லாம் செய்கிறார்? இவர் ஒரு சாதாரண தச்சன் அல்லவா? மரியாவின் மகனல்லவா? இவர் யாக்கோபு, யோசேப்பு, யூதா, சீமோன் என்பவர்களின் சகோதரன் அல்லவா? இவருடன் பிறந்த பெண்கள் இங்கு நம்மிடையே வாழ்கிறார்கள் அல்லவா?” என்று கேட்டார்கள். எனவே; அவர்கள் அவருடைய போதனைகளை மேலும் தொடர்ந்து கேட்க விரும்பவில்லை.

இயேசு அவர்களிடம், “கடவுளுக்காகப் பேசுகிறவர்கள் எவருமே தமது சொந்த மக்களால் மதிக்கப்படுவதில்லை என்பது உண்மையே” என்றார்.

எனவே இயேசு, அவ்விடத்தில் எந்த அருஞ் செயல்களையும் செய்ய முடியவில்லை. ஒரு சில நோயாளிகளை மட்டும் அவர் தொட்டு சுகமளித்தார். மக்களுக்குக் கடவுளிடம் நம்பிக்கையில்லாதது கண்டு இயேசு வேதனையுற்றார்.

இயேசுவைப் பின்பற்றிய பெண்கள்

லூக்கா 8 : 1 – 3

அக்காலத்தில் “பெண்கள் முக்கிய மானவர்கள் அல்ல” என்று யூத போதகர்கள் பெண்களைத் தம்முடன் வர அனுமதிப்பது இல்லை. ஆனால் இயேசு ஆண்கள், பெண்களுக்கிடையில் எந்த வேறுபாடும் காட்டியதில்லை.

இயேசு நகரங்கள் வழியாகவும், சிற்றூர்கள் வழியாகவும் பயணம் செய்தார். அவர் எங்கும் கடவுளின் ஆட்சி பற்றிய நற்செய்தியை எடுத்துரைத்து வந்தார். அவருடைய பன்னிரண்டு சீடர்களும் அவருடன் சென்றார்கள். சில பெண்களும் அவர்களுடன் சேர்ந்து சென்றார்கள். அவர் அவர்களது நோய்களைக் குணமாக்கியிருந்தார். ஒருமுறை மகதலா மரியாவை பிடித்திருந்த ஏழு அசுத்த ஆவிகளை இயேசு துரத்தியிருந்தார். ஏரோது அரசனின் சபையில் அதிகாரியாகப் பணியாற்றிய கூசாவின் மனைவியாகிய யோவான்னாவும், சூசன்னாவும் வேறு பல பெண்களும் இயேசுவைப் பின்பற்றினார்கள். இவர்கள் தம்முடைய செல்வத்தை இயேசுவிற்கும், அவரது சீடர்களுக்கும் பயன்படுத்தினார்கள்.

திரும்பிப் பாராதே!

லூக்கா 9 : 57 – 62

அநேக மக்கள் இயேசுவைப் பின்பற்ற விரும்பினார்கள். அவர் அவர்களிடம், "இது மிகவும் கடினமானது" என்று தெளிவாக எடுத்துக் கூறினார். எனவே, பலர் பின் வாங்கிப் போய்விட்டார்கள்.



ஒருநாள் இயேசுவும், அவருடைய சீடர்களும் தங்கள் வழியே போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருமனிதன் அவர்களைச் சந்தித்து, "நீங்கள் எங்கு சென்றாலும் நான் உங்களுக்குப் பின்னால் வருவேன்" என்றான்.

இயேசு அவனைப் பார்த்து, "நரிகளுக்குத் தங்குவதற்குக் குழிகள் உண்டு. பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. ஆனால் மனிதனாய்ப் பிறந்த எனக்கோ ஓய்வெடுக்கக் கூட இடம் இல்லை" என்றார்.

இயேசு வேறொரு மனிதனிடம், "நீ என்னைப் பின்பற்றிவா" என்றார். ஆனால் அவன், "என்னுடைய தந்தை இறக்கும்வரை நான் வீட்டில் இருக்கிறேன். அவரை அடக்கம் செய்தபின்பு நான் உம்மைப் பின் தொடர்வேன்" என்றான். அதற்கு இயேசு "இறந்தவர்கள் எப்படியாவது அடக்கம் செய்யப்படுவார்கள். அதைக்குறித்து நீ கவலைப்பட வேண்டாம். நீ சென்று மக்களிடம் கடவுளைப் பற்றியும், அவருடைய செயல்களைப் பற்றியும் சொல்வாயாக" என்றார்.

இன்னொரு மனிதன் இயேசுவிடம், "ஐயா, நான் உம்மைப் பின் பற்றி வருகிறேன். ஆனால் நான் முதலில் என் வீட்டுக்குச் சென்று, வீட்டாரிடம் விடைபெற்று வர அனுமதிக்க வேண்டும்" என்றான். இயேசு அவனிடம், "என்னைப் பின்பற்றிவரத் தொடங்கியபின் ஒருவன் தான் விட்டு வந்த வாழ்வைத் திரும்பிப் பார்ப்பானானால், அப்படிப்பட்டவனை ஆண்டவர் பயன்படுத்த முடியாது" என்றார்.

நற்செய்தி பரவுதல்

இறந்த ஒரு சிறுமி உயிர் பெறுதல்

மாற்கு 5 : 21 – 43

இயேசு கலிலேயா கடலின் அக்கரைக்குச் சென்றார். கூட்டமாக மக்கள் வந்து அவரைச் சுற்றிலும் சூழ்ந்தார்கள். அங்குள்ள ஒரு ஆலய பொருப்பாளரான யாயிர் என்பவர், இயேசுவிடம் வந்து அவருடைய காலடிகளில் விழுந்தார். அவர், "ஐயா, என் மகள் மிகவும் கொடிய நோயால் வருந்துகிறாள். தயவு செய்து நீர் வந்து என் மகளைத் தொடவேண்டும். அப்பொழுது அவள் நலமடைந்து உயிர்பிழைத்து விடுவாள்" என்றார்.

இயேசு யாயிருடன் சென்றார். அங்கே ஒரு பெரிய மக்கள் கூட்டம் இருந்தது. எல்லா பக்கங்களிலிருந்தும் மக்கள் அவரை நெருக்கிக் கொண்டிருந்தார்கள்.

அங்கு பன்னிரண்டு வருடங்களாய் இரத்தப் போக்கு நோயால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒருபெண் இருந்தாள். அவள் பல மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றிருந்தாள். மருத்துவத்திற்காகத் தன் செல்வம் முழுவதையும் செலவழித்திருந்தாள். ஆனால் அவளது நோய் குறைவதற்குப் பதிலாக இன்னும் மோசமான நிலமைக்குப் போயிற்று. அவள் இயேசுவின் வல்லமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்தாள். இயேசுவுக்குப் பின்னால் கூட்டத்தின் நடுவில் அவள் நின்று கொண்டிருந்தாள். அவள், "நான் இயேசுவின் மேலாடையை மட்டும் தொட்டுவிட்டேனானால் என் நோய் நீங்கி சுகம் பெற்றுவிடுவேன்" என்று தன் மனதில் நினைத்தாள். பின்னர் அவள் கூட்டத்தினிடையில் புகுந்து, இயேசுவின் அருகில் சென்று, அவருடைய ஆடையைத் தொட்டுவிட்டாள். உடனே அவள் நோயிலிருந்து முழு நலமடைந்தாள். அவள் தான் நலமடைந்தை அறிந்தாள்.

அதே நேரத்தில் இயேசு, தன் உடலிலிருந்து வல்லமை புறப்பட்டுச் சென்று யாரையோ குணமாக்கிவிட்டது என்று உணர்ந்தார். அவர் பின்னால் திரும்பி, "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டார்.

அவருடைய சீடர்கள் அவரிடம், "உம்மைச் சுற்றிலும் மக்கள் கூட்டம் வந்து மோதிக் கொண்டிருக்கிறதே. அப்படியிருக்க என்னைத் தொட்டது யார் என்று நீர் எப்படிக் கேட்கலாம்?" என்றார்கள்.

ஆனால் இயேசு தன்னைத் தொட்டது யார் என்று அறியப் பின்னால் திரும்பிக் கூட்டத்தில் சுற்றிலும் பார்த்தார். இதைக் கவனித்த அவருடைய ஆடையைத் தொட்ட பெண் பயந்து, நடுங்கிக் கொண்டே அவர் முன் வந்தாள்.

அவள் இயேசுவின் காலடிகளில் விழுந்து, நடந்த அனைத்தையும் கூறினாள். இயேசு அவளைப் பார்த்து, "என் மகளே, நீ என்னை முழுமையாக நம்பினபடியால் நலம் பெற்றாய்; எழுந்து அமைதியோடு போ. நீ நலமுடன் வாழ்வாய்" என்றார். இப்படி அவளுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, யாயிருவின் வீட்டிலிருந்து சில ஆட்கள் வந்து, "உம்முடைய மகள் இறந்துவிட்டாள். இனிமேல் போதகரைத் தொல்லைப்படுத்த வேண்டாம்" என்றார்கள்.

இயேசு அவர்கள் கூறியதைப் பொருட்படுத்தவில்லை. அவர் யாயிருவிடம், "கவலைப்படாதே. கடவுளிடத்தில் மட்டும் நம்பிக்கை உடையவனாயிரு" என்றார். பின்னர் அவர்; பேதுருவையும், யாக்கோபையும் யோவானையும் மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றார். அவர்கள் யாயிருவின் வீட்டை அடைந்த பொழுது அங்கு மக்கள் உரத்தக் குரலில் அழுது கொண்டிருப்பதைக் கண்டார்கள். இயேசு வீட்டினுள் சென்று, "ஏன் இப்படி உரத்தக் குரலில் அழுகிறீர்கள்? சிறுமி இறக்கவில்லை. அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள்" என்றார்.

இதைக் கேட்ட மக்கள் அவரைப் பார்த்து நகைத்தார்கள். எனவே அவர்; அனைவரையும் வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னார். தன்னுடன் பிள்ளையின் பெற்றோர்களையும், மூன்று சீடர்களையும் மட்டும் அழைத்துக் கொண்டு சிறுமி படுத்திருந்த அறைக்குள் சென்றார். அவர் அந்தச் சிறுமியின் கையைப் பிடித்து "தலித்தாகூமி" என்றார். அதற்கு, "சிறு பெண்ணே எழுந்திரு" என்று பொருள்.

உடனே அவள் எழுந்து நடக்கத்

தொடங்கினாள். அவள் 12 வயதுடையவள். இதைக் கண்ட மக்களுக்கு என்ன நடந்ததென்று நம்ப முடியவில்லை. இயேசு அவர்களிடம், "இந்தச் சிறுமிக்கு உண்ண ஏதாவது கொடுங்கள். இதைக் குறித்து எவரிடமும் எதுவும் பேசாதிருங்கள்" என்றார்.

போ! சொல்!

மாற்கு 6 : 7 – 11

இயேசு தனது பன்னிரண்டு சீடர்களையும் அழைத்து, "நீங்கள் இரண்டிரண்டு பேராகப் புறப்பட்டுப் போங்கள். நான் உங்களுக்கு அசுத்த ஆவிகளைத் துரத்தும் ஆற்றல் அளிக்கிறேன். நீங்கள் வழியில் பயன்படுத்த உணவோ, பணமோ, ஒன்றுக்கு மேலாக ஆடைகளோ எடுத்துச் செல்லக்கூடாது; காலணி அணிந்து கொள்ளுங்கள்; கைத்தடி வைத்துக் கொள்ளுங்கள்; வேறு எதையும் எடுத்துச் செல்ல வேண்டாம். நீங்கள் போகும் இடங்களில் ஒரு வீட்டில் நீங்கள்

தங்கியிருப்பதில் அந்த வீட்டார் மகிழ்ச்சி அடைந்தால், நீங்கள் அந்த ஊரிலிருந்து புறப்படும் நாள்வரை அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். எந்த நகரத்திலாவது, மக்கள் உங்கள் நல்லுரைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்று விடுங்கள். உங்கள் கால்களில் படிந்திருக்கும் தூசுகளை அங்கேயே உதறிவிடுங்கள். அது அவர்களுக்கு வரப்போகும் கடவுளின் தண்டனையைக் குறித்த ஒரு எச்சரிக்கையாக இருக்கும்" என்றார்.

இயேசு ஐயாயிரம் பேருக்கதிகமானவர்களுக்கு உணவளித்தல்

யோவான் 6 : 1 – 15

இயேசு கலிலேயக் கடலின் மறுகரைக்குச் சென்றார். மக்கள் பெருந்திரளாய்அவரைப் பின் தொடர்ந்தார்கள். ஏனெனில் அவர் அருஞ் செயல்கள் மூலம் அனேக நோய்களைக் குணமாக்குவதை அவர்கள் கண்டிருந்தார்கள். இயேசு ஒரு மலையின் மேல் ஏறி தனது சீடர்களுடன் உட்கார்ந்தார். பாஸ்கா விழா கொண்டாட வேண்டிய காலம் மிகவும் அண்மையிலிருந்தது. இயேசு சுற்றிலும் பார்த்து பெருந்திரளான மக்கள் தம்மிடம் வந்து கொண்டிருப்பதைக் கண்டார். எனவே அவர்; பிலிப்பிடம், "இந்த மக்கள் அனைவருக்கும் உணவளிக்கத் தேவையான அப்பங்களை நாம் எங்கே வாங்கலாம் ? என்று கேட்டார். (இயேசு தாம் செய்யப்போகும் அருஞ்செயலைப் பற்றி அறிந்திருந்தும், பிலிப்பைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார்.)

பிலிப்பு இயேசுவிடம், "இங்கிருக்கும் அனைவருக்கும் கொடுப்பதற்கு இருநூறு வெள்ளிப் பணத்திற்கு அதிகமான தொகைக்கு அப்பங்கள் வாங்க வேண்டியதிருக்கும்" என்றார். (ஒரு வெள்ளிப்பணம் ஒரு தொழிலாளியின் ஒரு நாள் கூலி ஆகும்) அப்பொழுது அந்திரேயா என்னும் மற்றொரு சீடர், இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவனிடத்தில் ஐந்து பார்லி அப்பங்களும், இரண்டு மீன்களும் உள்ளன. ஆனால் இவை இங்கிருக்கும் மக்களுக்குப் போதாதே!" என்றார். இயேசு தமது சீடர்களிடம், "மக்களைப் புல்தரையில் வரிசையாக அமரச் செய்யுங்கள்" என்றார். உடனே எல்லா மக்களும் உட்கார்ந்தார்கள். பந்தியிருந்த ஆண்கள் மட்டும் ஏறக்குறைய ஐயாயிரம் பேர். இயேசு அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டுச் சீடர்களிடம் கொடுத்து மக்களுக்குப் பரிமாறச் சொன்னார். அப்படியே மீன்களையும் எடுத்துக் கொடுத்தார். ஒவ்வொருவரும் வயிறாரச் சாப்பிட்டார்கள். பின்னர் இயேசு தம் சீடர்களிடம், "மீதியான அப்பத்துண்டுகள் அனைத்தையும் கூட்டிச் சேருங்கள். அவற்றில் ஒன்றும் வீணாகக் கூடாது" என்றார். எனவே அவர்கள் மீதியானவைகளை, பன்னிரண்டு கூடைகள் நிறையச் சேர்த்தார்கள். இந்த அருஞ்செயலைக் கண்ட மக்கள், "மெய்யாகவே நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இறைவாக்கினர் இவரே!" என்றார்கள்.

இயேசு, மக்கள் தம்மை அவர்களது அரசராக ஆக்கக் கட்டாயப்படுத்துவார்கள் என்று அறிந்தார். எனவே; அவர்களிடமிருந்து பிரிந்து தனியாக மலைப்பகுதிக்குச் சென்று விட்டார்.



தண்ணீரின் மேல் நடத்தல்

யோவான் 6 : 16 – 21

மாலை வேளையில் இயேசுவின் சீடர்கள் கலிலேய கடற்கரைக்குச் சென்றார்கள். அவர்கள் ஒரு படகில் ஏறி அக்கரையிலுள்ள கப்பர்நாகுமுக்குச் சென்றார்கள். அவர்கள் புறப்பட்ட வேளை இருட்டாயிருந்தது. அவர்கள் புறப்படும்போது இயேசு அவர்களோடு இருக்கவில்லை. அப்பொழுது ஒரு புயல்காற்று அடித்தது. அதனால் கடல் கொந்தளித்தது. பெரிய அலைகள் தோன்றின. சீடர்கள் படகை



ஐந்து அல்லது ஆறு கிலோ மீட்டர் தூரம் படகில் செலுத்தினார்கள். அப்போது நடுக்கடலில் இயேசு தண்ணீரின் மேல் நடந்து வருவதை அவர்கள் கண்டார்கள். அவர் படகின் அருகில் வந்தபோது அவர்கள் பயந்தார்கள். இயேசு அவர்களிடம், "பயப்படாதிருங்கள். நான்தான்!" என்றார். அவர்கள் அவரை மகிழ்ச்சியுடன் படகில் ஏற்றிக் கொண்டார்கள். உடனே படகு அவர்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தின் கரையில் சேர்ந்துவிட்டது.

கடலைக் கடத்தல்

மாற்கு 6 : 53 - 56

இயேசுவும் அவருடைய சீடர்களும் கடலைக் கடந்து 'கெனசரேத்து' என்னும் நாட்டுக்கு வந்தார்கள். அவர்கள் கரையில் இறங்கின உடனே, அவ்விடத்து மக்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொண்டார்கள். இயேசு சென்ற இடமெல்லாம் மக்களும் அவர் பின்னே ஓடினார்கள். நோயாளிகள் அவருடைய ஆடையின் ஓரத்தையாவது தாங்கள் தொடுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று அவர்கள் இயேசுவிடம் வேண்டினார்கள். அவருடைய ஆடையைத் தொட்டவர்கள் அனைவரும் நலம் அடைந்தார்கள்.

கடலோரத்தில் ஒரு பெண்

மாற்கு 7 : 24 - 30

யூதர்கள், தாங்கள் ஆபிரகாமின் தலைமுறையினராயிருப்பது பற்றி பெருமை கொண்டார்கள். அவர்கள் சில வேளைகளில் யூதரல்லாத மக்களை "நாய்கள்" என்று நினைத்தார்கள். மீதியாகும் எச்சில் உணவுகள் வழக்கமாக நாய்களுக்குப் போடப்படும்.

இயேசு முதலில் தமது சொந்த மக்களான யூதர்களுக்கு உதவி செய்ய விரும்பினார். ஆனால், அவர்கள் எப்போதும் அவருக்குச் செவி கொடுக்கவில்லை. எனவே சில வேளைகளில் இயேசு, யூதர்கள் வாழ்ந்த பாலஸ்தீனாவுக்கு வெளியே உள்ள பகுதிகளுக்கும் போவதுண்டு. இந்த வரலாற்றில் வரும் பெண் யூத இனத்தைச் சேர்ந்தவளல்ல. இயேசு அவளது வேண்டுதலுக்குக் கொடுத்தப் பதில் அவளைச் சோதிப்பதற்காக மட்டுமே ஆகும்.

ஒருநாள் இயேசு 'தீரு' பட்டணத்துக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூருக்குச் சென்றார். அவர் மக்கள் கூட்டத்திலிருந்து சற்று விலகியிருக்க விரும்பினார். எனவே; அவர் ஒரு வீட்டினுள் சென்றார். சிறிது நேரத்துக்குள் ஒரு பெண் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டாள். அவள் வந்து இயேசுவின் காலடிகளில் விழுந்தாள். அவளுடைய மகளை ஒரு அசுத்த ஆவி பிடித்திருந்தது. அந்தப் பெண் ஒரு யூதப் பெண்மணியல்ல. அவள் இயேசுவிடம் தன் மகளைப் பிடித்திருந்த ஆவியைத் துரத்திவிடுமாறு கெஞ்சி வேண்டினாள். ஆனால் இயேசு அவளிடத்தில், "நான் என்னுடைய சொந்த மக்களைக் கவனிக்க வேண்டும். குழந்தைகளின் உணவை எடுத்து நாய்களுக்குப் போடுவது சரியல்லவே" என்றார். அதற்கு அவள், "ஐயா, குழந்தைகள் சாப்பிடும்போது மேசையின் கீழே விழும் துண்டுகளை நாய் குட்டிகள் சாப்பிடுமே!" என்றாள்.

இயேசு அவளைப் பார்த்து, "நீ இப்போது உன் வீட்டிற்குத் திரும்பிச் செல். அங்கே உன் மகளைப் பிடித்திருந்த அசுத்தஆவி வெளியேறியிருப்பதைக் காண்பாய். நீ சொன்ன மறுமொழியின் அடிப்படையிலேயே இவ்வாறு கூறுகிறேன்" என்றார்.

அப்படியே அவள் தன் வீட்டுக்குச் சென்றாள். அங்கே அவளுடைய மகள் சுகமடைந்தவளாகப் படுக்கையில் படுத்து இருப்பதைக் கண்டாள். அசுத்த ஆவி அவளைவிட்டுப் போய்விட்டது.

பேசவும், கேட்கவும் இயலாத மனிதர்

மாற்கு 7: 31 - 37

இயேசு தீருவை விட்டுப் புறப்பட்டு கலிலேயாக்கடல் பகுதிக்குச் சென்றார். அங்கே பத்து நகரங்கள் அடங்கிய மாவட்டம் வழியாகச் சென்றார். அப்பொழுது காது கேட்காதவரும், பேசமுடியாதவருமான ஒருவரை சிலர் இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். அவர், அவருக்குக் கைவைக்க வேண்டுமென்று வேண்டினார்கள். இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து வெளியே தனியாக அழைத்து வந்தார். தனது விரல்களை அவரது காதுகளில் வைத்தார். தன் எச்சிலினால் அவருடைய நாவைத் தொட்டார். பின்னர் இயேசு விண்ணுக்கு நேராக அண்ணாந்து பார்த்து, பெருமூச்செறிந்து, அந்த மனிதரைப் பார்த்து, "திறக்கப்படுவாயாக" என்றார்.

அந்நேரமே அந்த மனிதரால் நன்றாகக் கேட்கவும், தெளிவாகப் பேசவும் முடிந்தது



அப்பொழுது இயேசு மக்களிடம் இதை எவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார். ஆனால் அவர்கள் அதை எல்லோரிடமும் சொன்னார்கள். அதைக் கேள்விப்பட்ட அனைவரும் வியப்பு அடைந்தார்கள். ''இயேசு எல்லாவற்றையும் எவ்வளவு நன்றாகச் செய்கிறார்! காது கேட்காதவரைக் கேட்கச் செய்கிறார். பேச முடியாதவரைப் பேசச் செய்கிறார்'' என்று சொல்லி வியப்படைந்தார்கள்.

ஒரு ரோம் அதிகாரியின் வேலைக்காரன்

லூக்கா 7:1-10

இயேசு எல்லோருக்காகவும் அக்கறை கொண்டிருந்தார் என்பதற்கு ஆதாரமாக இங்கே இன்னொரு நிகழ்ச்சித் தரப்படுகிறது.

இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றார். அங்குள்ள ஒரு ரோம் அதிகாரிக்கு அன்பான வேலைக்காரன் ஒருவன் இருந்தான். அந்த வேலைக்காரன் உடல் நலமில்லாமல் இறக்கும் நிலைமையில் இருந்தான்.

அந்த அதிகாரி, இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டவுடன், சில யூதத்தலைவர்களை அவரிடம் அனுப்பினார். அவர்கள் வந்து இயேசுவிடம், "தயவுசெய்து இந்த மனிதருக்கு உதவி செய்யும். இவர் நமது மக்களை நேசிக்கிறார். நமக்காக ஒரு ஆலயம் கட்டித் தந்திருக்கிறார்" என்றார்கள்.

இயேசு அந்த மனிதர்களுடன் சென்றார். அந்த அதிகாரியின் வீட்டருகில் அவர் சென்றபோது, அம்மனிதர் தன் நண்பர்களை அனுப்பி இயேசுவிடம், "ஐயா, உங்களுக்கு மிகுந்த தொல்லை வேண்டாம்; நான் என்னுடைய பணியில் மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிகிறேன்; எனக்குக் கீழே படைவீரர்கள் இருக்கிறார்கள்; நான் ஒருவனிடம், "நீ போ" என்றால் அவன் போகிறான்; வேறொருவனை, "நீ வா" என்றால் அவன் வருகிறான்; என்னுடைய வேலைக்காரன் ஒருவனை "இதைச் செய்" என்றால் அவன் செய்கிறான்; இருப்பினும் நீர் என்னுடைய வீட்டிற்குள் வரும் அளவிற்கு நான் தகுதியுடையவனல்ல. எனவேதான், உம்மிடத்தில் நான் வேறு ஆட்களை அனுப்பினேன்; நீர் ஒரு சொல் மட்டும் சொன்னால் போதும்; அப்பொழுது என் வேலைக்காரன் சுகமடைந்துவிடுவான்; என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்றார்." என்றார்கள். இயேசு இதைக் கேட்டதும் மிகவும் வியப்படைந்தார். தன்னைச் சுற்றிலும் இருந்த கூட்டத்தினரைத் திரும்பிப் பார்த்தார். அவர்களிடம், "நான் ஒருபோதும் நமது சொந்த மக்களுக்குள் (இஸ்ரயேலர்) இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கண்டதில்லை என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

இதைச் சொல்லவந்த ஆட்கள் திரும்பி அதிகாரியின் வீட்டுக்குச் சென்றபோது அந்த வேலைக்காரன் அங்கே முழுமையாக நலமடைந்திருப்பதைக் கண்டார்கள்!





ஒரு கைம்பெண்ணின் மகன்

லூக்கா 7 : 11 – 17

ஒருநாள் இயேசுவும் அவருடைய சீடர்களும் 'நாயீன்' என்னும் ஒரு நகரத்துக்குச் சென்றார்கள். அவருடன் ஏராளமான மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். அந்த நகரத்தின் வாயிலருகில் வந்தபோது ஒரு அடக்க ஊர்வலம் எதிர்பட்டது. ஒரு கைம் பெண்ணின் ஒரே மகன் இறந்திருந்தான். ஆண்டவராகிய இயேசு, அழுதுகொண்டு வந்த அந்தத் தாயைக் கண்டதும் மனதுருகினார். அவர் அவளைப் பார்த்து, "அழவேண்டாம்" என்றார். பின்னர் சடலத்துக்கு நேராச் சென்று பாடையைத் தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் நின்றார்கள். இயேசு, "மகனே, எழுந்திரு" என்றார். இறந்த இளஞன் எழுந்து, அமர்ந்து பேசத்தொடங்கினான். இயேசு அந்தத் தாயிடம் மகனை ஒப்படைத்தார்.

இதைக் கண்ட மக்கள் வியப்படைந்தார்கள். கடவுளைப் போற்றினார்கள். அவர்கள், "ஒரு பெரிய இறை மனிதர் இங்கே வந்திருக்கிறார். கடவுள் தமது மக்களுக்கு உதவி செய்ய வந்திருக்கிறார்" என்றார்கள்.

இயேசுவைப் பற்றிய இந்தச் செய்தி அந்த நாடு முழுவதும், மற்றும் பக்கத்து இடங்களிலும் பரவிற்று.

சிறைச் சாலையிலிருந்து ஒரு செய்தி

லூக்கா 7 : 18 – 23

ஏரோது அரசன் தனக்கு எதிராக, வெளிப்படையாகப் பேசிய குற்றத்திற்காக யோவானைச் சிறையில் அடைந்திருந்தான். சிறையில் யோவானுக்கு, இயேசு என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார் என்று சிந்திப்பதற்கு அதிக நேரம் கிடைத்தது. 'கடவுள் வாக்களித்திருந்த மீட்பர் இயேசு தானா? என்பதை உறுதிப்படுத்த யோவான் விரும்பினார்.

திருவாக்கினர் யோவானின் சீடர்கள் இயேசு செய்யும் எல்லாவற்றையும் அவரிடம் வந்து சொல்வார்கள். ஒரு நாள் அவர் தம் சீடர்களில் இரண்டுபேரை அனுப்பி இயேசுவிடம் "கடவுள் வாக்களித்த மீட்பர் நீர் தானா? அல்லது இன்னொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று கேட்கச் சொன்னார்.

இவர்கள் சென்ற வேளையில் இயேசு பலருடைய எல்லா வகையான நோய்களையும் நலமடையச் செய்து கொண்டிருந்தார். பலரிடமிருந்த அசுத்த ஆவிகளைத் துரத்தினார். பார்வையற்றவர்களுக்குப் பார்வையளித்தார். அவர் யோவானின் சீடர்களிடம், "நீங்கள் திரும்பிச் சென்று, இங்கே கண்டவற்றையும், மேலும் கேட்டவற்றையும் யோவானிடம் எடுத்துச் சொல்லுங்கள். பார்வையற்றவர்கள் பார்வையடைகிறார்கள். கால் ஊனமுற்றவர்கள் நடக்கிறார்கள். காது கேளாதவர்கள் கேட்கிறார்கள். தொழு நோயாளிகள் நலமடைகிறார்கள். இறந்தவர்கள் உயிருடன் எழுப்பப்படுகிறார்கள். கடவுளின் நற்செய்தி எளியவர்களுக்கும் எடுத்துக் கூறப்படுகிறது. என்மீது நம்பிக்கை கொள்கிறவர்கள் எத்துணை பேரின்பம் கொள்கிறார்கள்!" என்றார்.



ஒரு பரிசேயனுடைய வீட்டில் இயேசு

லூக்கா 7 : 36 - 50

பாலஸ்தீனாவில் விருந்தினரை வரவேற்க சில குறிப்பிட்ட பழக்க வழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன. முதலில் ஒரு வேலைக்காரன் விருந்தினரின் காலடிகளைக் கழுவுவான். பின்னர் விருந்தளிப்பவர் விருந்தினரின் நெற்றியில் ஒரு சொட்டு நறுமணத்தைலம் விட்டு அவரை முத்தம் செய்வார்.

இந்த வழக்கத்தின்படி இயேசுவை வரவேற்கச் சீமோனின் பெருமை இடங்கொடுக்கவில்லை.

ஒரு நாள் பரிசேயனான சீமோன் என்பவன் வீட்டிற்கு இயேசு விருந்தினராக வந்திருந்தார். அந்த நகரத்தில், ‘கெட்டவள்’ என்று பெயரெடுத்திருந்த ஒரு பெண் அதைக் கேள்விப்பட்டு, அங்கு வந்தாள். ஒரு வெள்ளைக்கல் ஜாடி நிறைய விலையேறப் பெற்ற வாசனைத் தைலத்தைக் கையில் வைத்திருந்தாள். இயேசுவின் பின்னால் நின்று அழுது கொண்டிருந்தாள். பின்னர் அவள் தன் கண்ணீரால் இயேசுவின் காலடிகளை நனைத்தாள். தன் கூந்தலால் அவர் காலடிகளைத் துடைத்தாள். அதன்பின் அவருடைய காலடிகளில் நறுமண தைலத்தைப் பூசினாள். சீமோன் இதைக் கண்டபோது, ஒரு கெட்டபெண் தன்னைத் தொடுவதற்கு இந்த மனிதர் எப்படி அனுமதிக்கலாம்? இவர் கடவுளிடமிருந்து வந்தவராயிருக்க முடியாது என்று நினைத்தான்.

இயேசு அவனிடம், “ஒரு ஊரில் பணம் கடன் கொடுப்பவன் ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கடன் கொடுக்க வேண்டும். அந்த இருவரும் தங்களால் பணத்தைத் திருப்பிச் செலுத்த இயலாது என்று கூறினார்கள். அப்பொழுது அவன் அந்த இருவரையும் மன்னித்து அனுப்பிவிட்டான். அவர்களுள் யார் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? என்று கேட்டார்.

அதற்குச் சீமோன், “மிகுதியாகக் கடன்பட்டிருந்தவனே” என்றான்.

இயேசு சீமோனிடம், “இந்தப் பெண்ணைக் கவனித்தாயா? நான் உன்னுடைய வீட்டில் நுழைந்தபோது நீ என் காலடிகளைக் கழுவத் தண்ணீர் தரவில்லை. ஆனால் அவள் தன் கண்ணீரால் என் காலடிகளைக் கழுவினாள். பின் தன் கூந்தலினால் என் காலடிகளைத் துடைத்தாள். நீ எனக்கு வரவேற்பு முத்தம் தரவில்லை. ஆனால் நான் வந்ததிலிருந்து அவள் என் காலடிகளை முத்தஞ்செய்வதை இன்னும் நிறுத்தவில்லை. நீ என் தலையில் எண்ணெய் வார்க்கவில்லை. ஆனால் அவள் என் காலடிகள் முழுவதும் நறுமணத்தைலம் பூசினாள். இப்படி அவள் தன் அன்பைக் காட்டியிருக்கிறாள். ஏனெனில்; அவள் செய்த மிகுதியான பாவங்கள் அவளுக்கு

மன்னிக்கப்பட்டுள்ளன. கடவுள் தங்களுக்கு எதையும் மன்னிக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறவர்கள் குறைவாகவே அன்பு காட்டுவார்கள்'' என்றார்.

பின்னர் இயேசு; அந்தப் பெண்ணைப் பார்த்து, "நீ என் மீது பற்றுறுதி கொண்டுள்ள படியால், உன்னுடைய பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன. சமாதானத்தோடே போ'' என்றார்.

பந்தியில் உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள் இதைக் கேட்டதும் தங்களுக்குள்ளே, "பாவங்களை மன்னிக்கிற இந்த மனிதன் யார்?'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

திருமண விருந்து மண்டபத்தில் இயேசு

லூக்கா 14 : 7 – 11

பாலஸ்தீனாவில் திருமண விழாக்களில் மிக முக்கியமான விருந்தினர்கள், மணமகன், மணமகள், ஆகியோருக்கருகில் அமர்ந்து கொள்வது வழக்கம். சில வேளைகளில் சிலர் முன்வரிசைகளில் அமர்ந்துகொண்டு தங்களை முக்கியமானவர்களாகக் காட்டிக் கொள்வது உண்டு.

இயேசு ஒரு திருமண விழாவுக்குச் சென்றிருந்தார். அங்கே, சிலர் முதன்மையான இருக்கைகளைத் தேடுவதைக் கண்டார். எனவே; அவர் அவர்களிடம், "முதன்மையான இருக்கைகளைத் தேடாதீர்கள். திருமண வீட்டுக்காரர் வந்து நீங்கள் அமர்ந்திருக்கும் இருக்கையை உங்களைவிட முக்கியமான விருந்தினருக்குக் கொடுக்கச் சொல்லலாம். அந்நேரத்தில் நீங்கள் மற்றவர்கள் முன்னிலையில் வெட்கப்பட நேரிடும்.

எனவே; இப்படிப்பட்ட பொது விழாக்களில், நாம் போய் பின்னால் அமருவது நல்லது. அப்பொழுது அந்த வீட்டுக்காரர் வந்து நம்மை அழைத்து, 'தயவு செய்து நீங்கள் எழுந்து முன் வரிசையில் வந்து அமருங்கள்' என்பார். அப்பொழுது மற்றவர்கள் முன்னிலையில் நீங்கள் பெருமையடைவீர்கள். "தன்னைத் தானே பெரியவர் என்று எண்ணுகிறவர் தாழ்த்தப்படுவார். தன்னைத் தாழ்த்துகிறவரோ உயர்த்தப்படுவார்'' என்றார்.

இயேசுவும், சக்கேயுவும்

லூக்கா 19 : 1 – 10

வரி வசூலிக்கிறவாகள், யூத மக்களால் ஏன் வெறுக்கப்பட்டார்கள் என்று முன்பே வாசித்திருக்கிறீர்கள். இங்கே புதிய மனிதராய் மாறிய ஒரு வரி வசூலிப்பவரின் வரலாற்றைக் காணலாம்.

இயேசு 'எரிகோ' நகரம் வழியாகக் கடந்து சென்றார். அந்த நகரத்தில் 'சக்கேயு' என்னும் பேர் கொண்ட ஒரு மனிதர் வாழ்ந்து வந்தார். அவர் வரி வசூலிப்பவர்களின் தலைவராகவும் பெரிய செல்வராகவும் இருந்தார். அவர் இயேசு எப்படிப்பட்டவர் என்று பார்க்க விரும்பினார். ஆனால் அவர் குள்ளராயிரந்தபடியால் அவரைக் காண முடியவில்லை. எனவே; ஒரு நாள் இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டதும் கூட்டத்திற்கு முன்னால் ஓடி, ஒரு மரத்தின் மேல் ஏறி அமர்ந்திருந்தார். இயேசு அவ்வழியாகத்தான் வருவார் என்று அவர் அறிந்திருந்தார்.

இயேசு மரத்தின் அருகே வந்தபோது, அண்ணாந்து பார்த்தார். சக்கேயுவைக் கண்டார்; உடனே, "சக்கேயுவே, சீக்கிரமாக இறங்கிவாரும். இன்று நான் உமது வீட்டில் தங்கவேண்டும்'' என்றார்.

சக்கேயு மகிழ்ச்சியுடன் இயேசுவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இதைக்கண்ட மக்கள் முறுமுறுத்தார்கள். "இயேசு ஒரு கெட்ட மனிதனின் வீட்டில் தங்கச் செல்லுகிறாரே'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

சக்கேயு இயேசுவிடம், "ஐயா, என்னுடைய உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் யாரிடமிருந்தாவது அதிகமாகப் பணம் வாங்கியிருந்தால், அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றார்.

இயேசு அவரிடம், "சக்கேயுவே, இன்று கடவுள் உமக்கும், உமது குடும்பத்தினருக்கும் மீட்பளித்திருக்கிறார். நீரும் ஆபிரகாமின் குமாரனாயிருக்கிறீரே! பாவிகளைத் தேடவும், இரட்சிக்கவுமே இறைமகன் வந்திருக்கிறார்'' என்றார்.

பிறவியிலேயே பார்வையற்ற ஒருவர்

யோவான் 9 : 1 – 11

"ஒருவருக்குக் கண் பார்வையற்ற நிலையோ, அல்லது உடலில் வேறு ஏதாவது ஊனமோ இருக்கலாம். அது அவர் செய்த பாவங்களுக்குரிய தண்டனையாகும்" என்று இன்றும்கூட பலர் நினைக்கின்றார்கள்.

இயேசுவும் அவரைப் பின்பற்றியவர்களும் ஒருநாள் ஒரு பார்வையற்ற மனிதன் சாலையோரத்தில் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவன் பிறவியிலேயே பார்வையற்றவராயிருந்தான். உடன் சென்ற மக்கள் இயேசுவிடம் 'போதகரே, இந்த மனிதன் பார்வையற்றவனாகப் பிறக்க

யாருடைய பாவம் காரணமாயிற்று? இவன் செய்த பாவமா? அல்லது இவனது பெற்றோர் செய்த பாவமா?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், "இவன் செய்த பாவங்களுமல்ல. இவனது பெற்றோர் செய்த பாவங்களுமல்ல. கடவுளுடைய ஆற்றல் இவன் மூலமாக வெளிப்படுவதற்காகவே இங்கே இப்படிப் பிறந்திருக்கிறான்" என்றார். மேலும், "காலம் இருக்கும் வரையிலும் நாம், என்னை அனுப்பினவருடைய பணிகளைச் செய்ய வேண்டும். நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்றார்.

பின்னர் இயேசு தரையில் எச்சில் உமிழ்ந்து சிறிது சேறு உண்டாக்கினார். அந்தச் சேற்றை எடுத்து பார்வையற்றவனின் கண்களில் பூசினார். அவர் அவனிடம், "நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு" என்று சொல்லியனுப்பினார். அதன்படியே அந்த மனிதன் சென்று, கண்களைக்கழுவி, பார்வையடைந்தவனாகத் திரும்பி வந்தான். இப்போது அவனால் பார்க்க முடிந்தது.

அவனுடைய அயலகத்தாரும், அவன் சாலையோரத்தில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்திருந்தவர்களும் அவனைப் பார்த்து, "இவன் அங்கே இருந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த பார்வையற்றவன் அல்லவா?" என்று பேசிக்கொண்டார்கள். அதற்கு அந்த மனிதன், "நான் அவனேதான் என்றான்" அவர்கள், "அப்படியானால் இப்பொழுது உன்னால் பார்க்க முடிகிறதே! அது எப்படி?" என்று கேட்டார்கள். அவன் அவர்களிடம், "இயேசு என்ற மனிதர் சிறிது சேறு உண்டாக்கி, என்னுடைய கண்களின்மேல் பூசி என்னை 'சீலோவாம் குளத்தில் போய் கழுவு' என்றார். அதன்படி நான் சென்றேன். என் கண்களைக் கழுவினதும் என்னால் பார்க்க முடிகிறது" என்றான்.

இயேசு சொன்ன உவமைகள்

அடிக்கடி மக்களைச் சிந்திக்கச் செய்வதற்காக இயேசு உவமைகளைக் கூறினார். மக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில் உவமைகளைக் கூறுவதும் உண்டு. கடவுளின் வழிகளைப் பின்பற்றாத மக்களுக்காக இயேசு இந்த உவமைகளைக் கூறினார். கடவுள் அவர்களிடம் அன்பு செலுத்துகிறார்; அவர்களுக்காக அக்கறை கொண்டுள்ளார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்கள் கடவுளிடம் திரும்ப வேண்டும் என்று எதிர்பார்த்தார். அப்படி அவர்கள் வந்தால் அது கடவுளுக்கு உண்மையாகவே மகிழ்ச்சியளிக்கும்.



காணாமற்போனவையும், கண்டுபிடிக்கப்பட்டவையும்.

காணாமற் போன ஆடு

லூக்கா 15 : 1 - 7

பாலஸ்தீனாவின் பாறைகளும் குன்றுகளும் நிறைந்த மலைப்பகுதிகளில், ஆடுகள் காணாமற்போவதுண்டு. மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளைக் கவனமாய்ப் பாதுகாப்பார்கள். அதேபோல், ஆடுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும் திறமையானவர்கள். மேய்ப்பன் காணாமற்போன ஒரு ஆட்டை, தேடி கண்டுபிடித்துக் கொண்டுவந்துவிட்டால் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள்.

ஒருநாள் இயேசு திரளான மக்கள் மத்தியில் போதித்துக் கொண்டிருந்தார். அவர்களுள் பல வரி வசூலிப்பவர்களும், சமயப் பற்றில்லாத மக்கள் பலரும், இருந்தார்கள். பரிசேயர்களும், சமயப் போதகர்களும் தங்களுக்குள் முறுமுறுக்கத் தொடங்கினார்கள். "இந்த மனிதன் இப்படிப்பட்ட தீய மனிதர்களை வரவேற்கிறான். அவர்களுடன் உணவும் சாப்பிடுகிறான்" என்றார்கள். எனவே; அவர்களுக்காக இயேசு பின்வரும் உவமைகளைக் கூறினார்.

"ஒருவருக்கு நூறு ஆடுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று காணாமற் போய்விடுகிறது என்று எண்ணிக் கொள்ளுங்கள். அப்பொழுது அந்த மனிதர் என்ன செய்வார்? மற்ற

தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்க அவர் தேடிச் செல்வார். அவர் அதைக்கண்டுபிடித்துவிட்டால், மிகுந்த மகிழ்ச்சியடைவார். அதைத் தன் தோள்களில் சுமந்து கொண்டு தன்னுடைய வீட்டிற்குக் கொண்டு வருவார். பின் தன் நண்பர்களையும் தனது பக்கத்து வீட்டுக்காரர்களையும் அழைப்பார். அவர்களிடம், “காணாமற்போன என்னுடைய ஆட்டை நான் கண்டுபிடித்து விட்டேன். எனவே நான் அதிக மகிழ்ச்சியாய் இருக்கிறேன். நாம் அனைவரும் இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட ஒரு விருந்து சாப்பிடுவோம் வாருங்கள்” என்பார்.

இவ்வாறே; தீமை செய்துகொண்டிருக்கும் ஒருவர் தம் தீய வழிகளைவிட்டுத் திரும்பி விட்டால் உண்மையாகவே கடவுள் மிகுந்த மகிழ்ச்சியடைவார். தங்களை நீதிமான்கள் என்று நினைத்துக்கொண்டு, கடவுளிடம் திரும்பாதவர்களைக் குறித்து கடவுள் மகிழ்ச்சியடைய மாட்டார்.

காணாமற் போன வெள்ளிக்காசு

லூக்கா 15 : 8 – 10

திருமணமான பெண்கள் தங்கள் நெற்றிகளில் பத்து வெள்ளி நாணயங்களை அணிந்துகொள்வார்கள். திருமணமானவர்கள் என்பதற்கு இது ஒரு முக்கிய அடையாளமாகும் இந்த நாணயங்களில் ஒன்று காணாமற் போய்விட்டால் அப்பெண் மிகுந்த கவலை கொள்வாள்.

“ஒரு பெண் பத்து வெள்ளி நாணயங்களை வைத்திருக்கிறாள். அவற்றில் ஒன்று காணாமல் போய்விடுகிறது. அவள் என்ன செய்வாள்? ஒரு விளக்கை ஏற்றி, வீட்டைப் பெருக்கி, மிகக் கவனமாக தேடுவாள்; அவள் அந்த நாணயத்தைக் கண்டுபிடித்ததும்; தன்னுடைய தோழிகளையும், பக்கத்து வீட்டாரையும் அழைப்பாள். அவர்களிடம் “காணாமற்போன என்னுடைய வெள்ளி நாணயத்தைக் கண்டுபிடித்து விட்டேன். இம்மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் நாம் அனைவரும் ஒரு விருந்து சாப்பிடுவோம்” என்பாள்.

காணாமற் போன மகன்

லூக்கா 15 : 11 – 32

ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களில் இளையவன் தன் தந்தையிடம், “தந்தையே, உங்களுடைய சொத்தில் எனக்கு உரிய பங்கை இப்போழுதே தந்துவிடுங்கள்” என்றான். எனவே அவர்; தன்னுடைய சொத்து முழுவதையும் தன் இரண்டு புதல்வர்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்தார்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த இளைய மகன் தன் பங்கு முழுவதையும் விற்று பணமாக்கிக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டான். அவன் தொலைவிலிருந்த ஒரு நாட்டுக்குச் சென்று தன் பணம் முழுவதையும் முறைகேடான வகையில் செலவழித்து விட்டான்.

அப்போது அந்த நாட்டில் ஒரு பஞ்சம் உண்டாயிற்று. அவனிடம் எதுவுமே இல்லை. எனவே, அவன் ஒரு விவசாயிடம் வேலை செய்யச் சென்றான் அவர் அவனைத் தன் பன்றிகளை மேய்ப்பதற்கு அனுப்பினார். அவன் மிகுந்த பசியாயிருந்தான். அந்தப் பன்றிகளுக்குக் கொடுக்கப்படும் உணவைச் சாப்பிடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவனுக்கு யாரும் எதையும் கொடுக்கவில்லை. அப்பொழுது அவனுக்குப் புத்தி வந்தது. அவன், “என்னுடைய தந்தையின் வீட்டில் கூலியாட்களுக்கு, அவர்கள் சாப்பிடக் கூடியதைவிட அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இங்கே நான் பட்டினியாயிருக்கிறேன். நான் என்னுடைய தந்தையிடம் சென்று, “தந்தையே, கடவுளுக்கும், உமக்கும் எதிராக நான் பாவங்களைச் செய்திருக்கிறேன். நீர் என்னை மகன் என்று அழைக்க வேண்டாம். என்னை உம்முடைய கூலியாட்களுள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளும் என்பேன்” என்றான்.



எனவே, அவன் புறப்பட்டுத் தன் தந்தையைச் சந்திக்கச் சென்றான். அவன் தன் வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் வரும்போதே அவனுடைய தந்தை அவனை அடையாளம் கண்டுகொண்டார். அவனது கோலத்தைக் கண்டு அவனுக்காக வருந்தினார். அவர் ஓடிச் சென்று தன் மகனைக் கட்டிப்பிடித்து முத்தம் செய்தார். இளைய மகன் தன் தந்தையிடம், "தந்தையே, நான் கடவுளுக்கு எதிராகவும், உமக்கு எதிராகவும் பாவம் செய்திருக்கிறேன். நீர் என்னை உமது மகன் என்று அழைக்க வேண்டாம்" என்றான்.

ஆனால் அந்தத் தந்தை, தன் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டார். விரைவாகச் சென்று சிறந்த ஆடைகளைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள்; விரலில் மோதிரம் அணிவியுங்கள்; கால்களுக்குப் புதிய காலணிகளைப் போடுங்கள்; பின்னர் சென்று ஒரு சிறப்பான விருந்து ஆயத்தப்படுத்துங்கள். நாம் அனைவரும் மகிழ்ச்சியாக விருந்து சாப்பிடுவோம். என்னுடைய மகன் காணாமற் போய்விட்டான்; இறந்து போனான் என்று நினைத்திருந்தேன். ஆனால் அவன் உயிரோடு வந்து சேர்ந்திருக்கிறான்" என்றார். எனவே அனைவரும் மகிழ்ச்சியுறும் விருந்து தொடங்கியது.

அந்த நேரத்தில் அவருடைய மூத்த மகன் வயலிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவன் தன் வீட்டில் நடக்கும் இன்னிசை, நடனம் இவற்றைக் கவனித்தான். எனவே ஒரு வேலைக்காரனை அழைத்து, "அங்கே நமது வீட்டில் என்ன நடந்துகொண்டிருக்கிறது" என்று விசாரித்தான். வேலைக்காரன், "உமது உடன்பிறந்தவர் நலமாக வீட்டுக்கு வந்து சேர்ந்துள்ளார். எனவே உம் தந்தை அவருக்காக ஒரு பெரிய விருந்து நடத்துகிறார்" என்றான். மூத்த மகன் இதனைக் கேட்டதும் மிகுந்த கோபங்கொண்டான்.

அவன் வீட்டுக்குள் செல்ல விரும்பவில்லை. இதைக்கண்ட அவனது தந்தை வெளியே வந்து தன் மூத்த மகனை உள்ளே வரும்படி கெஞ்சினார். ஆனால் அவன்; இத்தனை வருடங்களாக நான் உமக்காக ஒரு வேலைக்காரனைப்போல் உழைத்திருக்கிறேன். நான் உமக்கு ஒருபோதும் கீழ்ப்படியாமல் இருந்ததில்லை. நீர் எனக்கு என்ன தந்திருக்கிறீர் ? என்னுடைய நண்பர்களுடன் நான் உண்டு மகிழ ஒரு ஆடு கூடத்

தந்ததில்லையே! ஆனால் உம்முடைய இளைய மகன் உம்முடைய பணம் முழுவதையும் தன் நெறிகெட்ட போக்காலும், வாழ்க்கையினாலும் வீணாக்கியிருக்கிறான். இப்பொழுது அவன் திரும்பி வந்துவிட்டான் என்பதற்காக அவனுக்காக வீட்டில் பெரிய விருந்து நடத்துகிறீர்'' என்றான். அவனது தந்தை, "என் மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய். எனக்குள்ள எல்லாமே உனக்குச் சொந்தமானவை. ஆனால் உனது தம்பி காணாமற்போயிருந்தான். இப்பொழுது கிடைத்துள்ளான். எனவே, நாம் நமது மகிழ்ச்சியை இம்முறையில் காட்ட வேண்டும்'' என்றார்.

கடவுள் இந்த உவமையில் உள்ள தந்தையைப் போலிருக்கிறார். அவர் தம் மக்கள் தவறு செய்திருந்த போதிலும் அவர்களைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுகிறார். இதைப்போலவே ஒருவர் தீச்செயல்களைச் செய்வதை விட்டுவிட்டு கடவுளிடம் திரும்பி விட்டால் கடவுளின் தூதர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள்.



கடவுளின் திட்டங்களைப் புரிந்து கொள்ளுதல்

பெரும்பாலான நாடுகள் ஒரு பேரரசருக்குக் கீழ் இருந்தன. தன் நாட்டிலுள்ள அனைவர் மீதும் அவருக்கு முழு அதிகாரம் உண்டு. பல ஆண்டுகளாக யூதர்கள் இறையாட்சிக்காக காத்துக்கொண்டிருந்தார்கள். அதாவது, "கடவுள் பூமியை ஆட்சி செய்யும் காலம்". இறையாட்சி வரும்போது எவ்வாறு இருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள உதவியாக இயேசு இந்த உவமைக் கதைகளைக் கூறினார்.

கோதுமையும், களைகளும்

மத்தேயு 13 : 24 – 30

கடவுள் ஆட்சி செய்யும்போது நிகழ்வதைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாக நாம் அறிந்துகொள்ளலாம்.

ஒரு விவசாயி தன்னுடைய வயலில் நல்ல கோதுமையை விதைத்தார். ஒரு இரவில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அப்போழுது ஒரு எதிரி வந்து அந்த வயலில் கோதுமை விதைகளினிடையே களைகளை விதைத்துவிட்டுச் சென்றுவிட்டான். கோதுமை வளர்ந்து பயிரானபோது, களைகளும் தலை தூக்கின. அந்த மனிதரின் வேலையாட்கள் அவரிடம் "ஐயா, நீங்கள் உங்கள் வயலில் நல்ல விதையை மட்டுமல்லவா விதைத்தீர்கள் ?" இந்தக் களைகள் எங்கிருந்து வந்தன ?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "இது

ஏதாவது எதிரியின் வேலையாயிருக்கும்'' என்றார். அப்பொழுது அவர்கள், ''நாங்கள் அந்தக் களைகளைப் பிடுங்கி எறிந்துவிடட்டுமா ?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், ''வேண்டாம், நீங்கள் களைகளைப் பிடுங்கும்போது, கோதுமைப் பயிரும் சேர்ந்து வந்துவிடும். எனவே கோதுமையும் களைகளும் ஒன்றாக வளரட்டும். அறுவடை காலத்தில் நான் அவற்றைப் பிரித்து விடுவேன். வேலைக்காரர்களிடத்தில் முதலில் களைகளை மட்டும் பிடுங்கி, அவற்றைக் கட்டுகளாகக் கட்டி, எரித்து விடக்கூறுவேன். அதன்பிறகு அவர்கள் கோதுமையை அறுவடை செய்து அதை எனது களஞ்சியங்களில் சேர்ப்பார்கள்'' என்றார்.

மறைவான புதையல்

மத்தேயு 13 : 44

நாம் கடவுளின் வழிகளைப் பிற்பற்றினால் தங்கத்தைவிட விலையுயர்ந்த ஒன்றை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

''கடவுளின் வழிகளைப் பின்பற்றுவோர் இந்தக் கதையில் வரும் மனிதனைப் போன்றவர்கள்.

ஒரு மனிதர், ஒரு வயலில், ஒரு புதையலைக் கண்டார். ஒரு பை நிறைய தங்கம் அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவர் அதிக மகிழ்ச்சிக் கொண்டார். அதை மீண்டும் மூடி மறைத்துவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றார். அவர் தனக்கு உண்டான அனைத்தையும் விற்றுக்கொண்டுவந்து, அந்த வயலை விலை கொடுத்துப் பெற்றுக் கொண்டார்.''

ஒரு பெரிய விருந்து

லூக்கா 14 : 15 – 24

மேசியாவின் ஆட்சியின்போது, உண்ணவும் குடிக்கவும் மிகுதியாகக் கிடைக்கும் ஒரு பெரிய விருந்து நடைபெறும் என்று பல யூதர்கள் நினைத்தார்கள். பாலஸ்தீனாவில் வேலைக்காரர்கள் விருந்தினர்களை அவர்களது வீடுகளிலிருந்து அழைத்து வந்து சேர்க்க அனுப்பப்படுவார்கள். விருந்திற்கு வரச் சம்மதித்த பின்னர் வராமலிருப்பது ஒரு கெட்ட பழக்கம் என்று கருதப்பட்டது.

ஒரு மனிதர் ஒரு பெரிய விருந்து நடத்த விரும்பினார். அதற்கு வருமாறு பல மக்களுக்கு அழைப்பு அனுப்பினார். விருந்து தொடங்கும் நேரம் வந்தது. அவர் தன் பணியாளரை விருந்தினர்களிடம் சென்று, ''எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. வாருங்கள்'' என்று அழைத்துவர அனுப்பினார். ஆனால் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக ''நான் வர முடியாது'' என்று கூறினார்கள். முதல் மனிதர் பணியாளிடம், ''நான் ஒரு வயலை வாங்கினேன். நான் சென்று அதைப் பார்க்க வேண்டும். தயவுசெய்து என்னை மன்னித்துக்கொள்'' என்றார். வேறொரு மனிதர், ''நான் என்னுடைய வயலில் உழுவதற்கு ஐந்துஜோடி மாடுகள் வாங்கியிருக்கிறேன். நான் சென்று அவற்றை ஓட்டிப்பார்க்க விரும்புகிறேன். எனவே என்னை மன்னித்துக்கொள்'' என்றார். மூன்றாவது மனிதர், ''நான் இப்போதுதான் திருமணம் செய்திருக்கிறேன். எனவே என்னால் வர இயலாது'' என்றார்.

பணியாள் தனது தலைவரிடம் சென்று இவையனைத்தையும் கூறினார். தலைவர் கோபங்கொண்டு ''நீ தெருக்களிலும், சந்துகளிலும் விரைந்து செல். அங்குள்ள ஏழைகள், உடல் ஊனமுற்றவர்கள், பார்வையற்றவர்கள் அனைவரையும் அழைத்து வா'' என்றார்.

பணியாள், ''ஐயா, நீங்கள் சொன்னபடி செய்து விட்டேன். ஆனால் இன்னும் பலருக்கு இடமிருக்கிறது'' என்றான். எனவே அந்தத் தலைவர்; தன் பணியாளிடம், ''புறநகர் பகுதிக்குச் செல். அங்கு சாலைகளிலும், சந்துகளிலும் இருக்கும் எல்லா மக்களையும் அழைத்துவா. காலியாக இருக்கும் எல்லா இடங்களையும் நிரப்பிவிடு. 'வர முடியாது' என்று கூறிய எவரும் என்னுடைய விருந்தில் கலந்துகொண்டு மகிழ முடியாது'' என்றார்.

விதைக்கிறவர் ஒருவர்

லூக்கா 8 : 5 – 8, 11 – 15

பாலஸ்தீனாவில் மக்கள் விதைகளை நிலத்தில் பரவலாக விதைத்துவிட்டு அதன்பிறகுதான் நிலத்தை உழுவார்கள். எல்லா விதைகளும் நல்ல நிலத்தில் விழும் என்பது உறுதியில்லை. கடவுளின் வார்த்தை ஒவ்வொருவருக்கும் உரியது. ஆனால் அதை எல்லோரும் வரவேற்க மாட்டார்கள். வெவ்வேறு மக்கள், வெவ்வேறு முறைகளில் அதை ஏற்றுக்கொள்வார்கள்.



“ஒரு மனிதர் தன் நிலத்தில் விதைக்கப் புறப்பட்டார். விதைகளில் சில வழிகளில் விழுந்தன. மக்கள் அவற்றின்மீது நடந்தார்கள். பறவைகள் அவற்றைத் தின்று விட்டன. சில விதைகள் பாறைகளுக்கிடையில் விழுந்தன. அவை முளைத்து வளரத் தொடங்கும்போது அவற்றிற்குத் தண்ணீர் கிடைக்காததால் அவை உலர்ந்து விட்டன. வேறு சில விதைகள் முள் புதர்களுக்கு நடுவில் விழுந்தன. அவை முளைத்து வளர்ந்தபோது சுற்றிலுமிருந்த செடிகள் அவற்றை நெருக்கிப் போட்டன.

ஆனால் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை வளர்ந்து மிகுதியான விளைச்சலைத் தந்தன.

“விருப்பமுள்ளவர் கவனித்துக் கேட்டுக் கற்றுக்கொள்ளக்கடவர்” என்று கூறி இயேசு இந்த உவமைக் கதைகளை முடித்தார்.

இந்தக் கதையின் பொருள் இதுதான். விதை கடவுளின் வார்த்தை. வழிகளின்மேல் விழுந்த விதைகள் கடவுளின் வார்த்தையைக் கேட்ட சிலர் ஆவார். அவர்களுடைய உள்ளத்திலிருந்து அந்த வார்த்தைகளை சாத்தான் வந்து எடுத்துச் சென்று விடுகிறான். எனவே, அவர்கள் கடவுளின் வார்த்தையை நம்பவும் மாட்டார்கள்; மீட்கப்படவும் மாட்டார்கள்.

பாறைகளுக்கிடையே விழுந்த விதைகள், கடவுளின் வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறவர்களைக் குறிக்கிறது. ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக காலம் நிலைத்திருப்பதில்லை. அவர்கள் சில காலம் மட்டும் நம்பிக்கையுடனிருப்பார்கள். சில துன்பங்களும், நெருக்கடிகளும் ஏற்படும்போது தங்களது நம்பிக்கையைவிட்டு விடுவார்கள்.

முட்புதர்களுக்குள் விழுந்த விதைகள் இறைவார்த்தையைக் கேட்கும் சிலரைக் குறிக்கிறது. அவர்கள் அதிகக் கவலை கொள்வார்கள். பண ஆசையும், சிற்றின்பத்தில் பிரியமும் உடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் எந்த நல்ல பலனையும் தருவதில்லை.

நல்ல நிலத்தில் விழுந்த விதைகள், கடவுளின் வார்த்தையைக் கேட்டு தம் இதயத்தில் பதித்துக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிகிறவர்களைக் குறிக்கிறது. அவர்கள் நல்ல பலனைத் தருகின்றனர்.

எப்போதும் ஆயத்தமாயிருங்கள்

இயேசு தாம் இறந்த பின்னர் மீண்டும் திரும்பி வருவதாக தமது சீடர்களிடம் கூறியிருந்தார். எனவே, அவர்கள் விழிப்புடன் அவருக்காகக் காத்திருக்க வேண்டும் என்று கூறினார்.

மணப் பெண்ணின் பத்து தோழிகள்

மத்தேயு 25 : 1 – 13

யூதர்களின் திருமணத்தில் தீப்பந்தங்களை ஏந்திக்கொண்டு மணமகனோடு, ஊர்வலமாக நடந்து, மணமகளின் வீட்டுக்குச் செல்வார்கள். மணமகன் எப்போது புறப்படுவார் என்பது எவருக்கும் தெரியாது. எனவே, அதில் கலந்துகொள்ள காத்திருப்பவர்கள் எந்நேரமும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இயேசு தமது வருகைக்காகக் காத்திருக்கும் சீடர்களிடம் இதே முறையில் ஆயத்தமாக இருக்கும்படி கூறுகிறார்.

ஒரு மணமகனின் வருகைக்காக மணப் பெண்ணின் தோழிகள் பத்துபேர் காத்திருக்க வேண்டியதிருந்தது. அவர்களில் ஐந்துபேர் பேதைகள். ஐந்து பேர் அறிவாளிகள். அந்தப் பேதைகள் தங்களுடைய விளக்குகளுக்கு எண்ணெய் எடுத்துவர மறந்திருந்தார்கள். மணமகன் வரத் தாமதமாயிற்று. எனவே அவர்கள் அனைவரும் தூங்கி விட்டார்கள்.

நடு இரவில் "இதோ! மணவாளன் வந்துவிட்டார்! வாருங்கள்!" என்ற குரல் ஒலி கேட்டது. உடனே அந்த பத்துப் பெண்களும் விழித்தெழுந்து தங்கள் விளக்குகளை ஏற்றினார்கள். ஆனால் பேதைப் பெண்களின் விளக்குகள் மங்கி அணையும் நிலையில் இருந்தன. எனவே அவர்கள் அறிவாளிகளான பெண்களிடம் "உங்களுடைய எண்ணெயில் எங்களுக்குச் சிறிதளவு தாருங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் "தர முடியாது. ஏனெனில் எண்ணெய் போதுமானதாக இருக்காது." என்றார்கள். எனவே அந்தப் பேதைப் பெண்கள் எண்ணெய் வாங்குவதற்கு கடைக்கு ஓடினார்கள். அவர்கள் போயிருந்த வேளையில் மணகன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்த ஐந்து தோழிகளும், மணவாளனுடன் சேர்ந்து, திருமண விருந்தில் கலந்துகொண்டார்கள். விருந்து மண்டபத்தின் கதவு அடைக்கப்பட்டது.

சிறிது நேரத்துக்குப்பின் அந்த ஐந்து பேதைத் தோழிகளும் வந்து, "ஐயா, ஐயா, கதவைத் திறவுங்கள். எங்களை உள்ளே வரவிடுங்கள்" என்று கத்தினார்கள். ஆனால் மணமகன் வந்து, "உங்களை எனக்குத் தெரியாது" என்று கூறிவிட்டார்.

"மணமகன் வரும் நாளையாவது, மணி நேரத்தையாவது நீங்கள் அறியாமலிருக்கிற படியால் கவனத்துடனும், ஆயத்தத்துடனும் விழித்திருங்கள்" என்று இயேசு கூறினார்.

மூன்று வேலைக்காரர்கள்

மத்தேயு 25 : 14 – 30

பாலஸ்தீனாவில் வாழ்ந்து வந்த வணிகர்கள் நீண்ட பயணம் செல்வது வழக்கம். அவர்கள் தங்கள் வணிகப் பொறுப்பில் ஒரு பகுதியை தங்கள் வேலைக்காரர்களிடத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்வார்கள்.

வணிகர் ஒருவர் நெடும்தூரம் பயணம் செல்ல விரும்பினார். அவர் தன் வேலைக்காரர்களை அழைத்து, அவருடைய பணத்தைப் பொறுப்பாய் கவனித்துக் கொள்ளுமாறு சொன்னார். அவர்களின் திறமைக்கேற்றபடி ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு தொகைகளைக் கொடுத்தார். பின்னர் அவர் பயணத்தை மேற்கொண்டார்."

அந்த வேலைக்காரர்களில் ஐயாயிரம் பொன் நாணயங்களைப் பெற்றவர் தாமதமின்றி அந்தப் பணத்தைத் தன் வணிகத்தில் முதலீடு செய்தார். வெகு விரைவில் கூடுதலாக ஐயாயிரம் பொன் நாணயங்களை ஈட்டினார். இதே முறையில் இரண்டாயிரம் பொன் நாணயங்களைப் பெற்றவரும், அதைப் பயன்படுத்தி மேலும் இரண்டாயிரம் பொன் நாணயங்களை ஈட்டினார். ஆனால், ஆயிரம் பொன் நாணயங்களைப் பெற்ற வேலைக்காரன், தரையில் ஒரு குழியைத் தோண்டி பணத்தை அதில் புதைத்து வைத்தான்.

நீண்ட காலத்துக்குப் பின்பு அந்த வணிகர் திரும்பி வந்தார். வேலைக்காரர்களிடம் தங்கள் கணக்குகளை ஒப்படைக்குமாறு கேட்டார். ஐயாயிரம் பொன் நாணயங்களைப் பெற்ற வேலைக்காரர் வந்து கூடுதலாக ஐயாயிரம் பொன் நாணயங்களை ஒப்படைத்தார். வணிகர், "மிக நன்று. நீர் ஒரு நம்பிக்கைக்குரிய உண்மை ஊழியர். உம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சிறிய தொகையை நல்ல பொறுப்போடு பயன்படுத்தியிருக்கிறீர். நான் உம்மை மிகப் பெரிய தொகைகளுக்குப் பொறுப்பாளராக நியமிப்பேன். நீர் உள்ளே வாரும். நாம் ஒன்றாக விருந்து சாப்பிடலாம்" என்றார்.

பின்னர் இரண்டாயிரம் பொன் நாணயங்களைப் பெற்றிருந்தவர், "ஐயா, நான் மேலும் இரண்டாயிரம் நாணயங்களை ஈட்டியிருக்கிறேன்" என்றார். மகிழ்ச்சியடைந்த வணிகர், "நீரும் ஒரு நம்பிக்கைக்குரிய உண்மை ஊழியர்; உள்ளே வாரும். நாம் சேர்ந்து விருந்து சாப்பிடுவோம்" என்றார்.

கடைசியாக அவரிடம் ஆயிரம்பொன் நாணயங்களைப் பெற்ற வேலைக்காரன் வந்தான். அவன், "ஐயா, நீர் ஒரு கடினமான மனிதன் என்று அறிவேன். நீர் மற்றவர்களை உமக்காக வேலை செய்யச் செய்து, அதன் பலனை நீர் அனுபவிப்பீர். நான் உமக்கு மிகவும் பயப்பட்டேன். எனவே, நான் உமது பணத்தை நிலத்தில் புதைத்து வைத்துப் பாதுகாத்தேன். இப்போது அதை இதோ கொண்டு வந்திருக்கிறேன்." என்றான்.

இதைக் கேட்டதும் அந்த வணிகர், "நீ பொல்லாதவன்; சோம்பேறித்தனமான வேலைக்காரன். நீ அந்தப் பணத்தை வட்டிக்கடையில் செலுத்தியிருந்தால்கூட அப்பணத்தை வட்டியுடன் திரும்பப் பெற்றிருப்பேனே" என்றார். பின்னர் அவர் தன் வேலைக்காரர்களிடம் இவனிடமிருந்த ஆயிரம்பொன் நாணயங்களை வாங்கிக் கொண்டு, அவனை இழுத்துச் சென்று வெளியே தள்ளிவிடுமாறு கூறினார்.

இந்தப் பூமியின் மேல் கடவுள் தம் ஆட்சியை நிறுவும் காலத்தில் உண்மை உள்ளவர்கள் நன்மையைப் பெறுவார்கள்.

இடைவிடாத இறைவேண்டல்

நாம் கடவுளிடம் எப்படி வேண்டுதல் செய்ய வேண்டும் என்று எடுத்துக் காட்டுவதற்காக மூன்று கதைகளை இயேசு கூறினார். முதல் இரண்டு கதைகளும் நாம் இடைவிடாமல் தொடர்ந்து இறைவேண்டல் செய்ய வேண்டும். ஒருபோதும் இடையில் விட்டு விடக்கூடாது என்று போதிக்கின்றன. மூன்றாவது கதையில் நாம் கடவுளிடம் வேண்டுதல் செய்யும்போது, தாழ்மை உடையவர்களாயிருக்க வேண்டும் என்று இயேசு கற்பிக்கிறார்.

நடு இரவில் வந்த நண்பர்

லூக்கா 11 : 5 – 8

நடுஇரவில் உங்களிடம் ஒரு விருந்தினர் வருகிறார் என்று எண்ணிக் கொள்ளுங்கள். அவருக்குக் கொடுப்பதற்கு உங்கள் வீட்டில் எந்த உணவுமே இல்லை.



என்ன செய்வீர்கள்? நீங்கள் உங்கள் நண்பரின் வீட்டிற்குச் செல்வீர்கள். அவரிடம், "என் அருமை நண்பா, ஒரு விருந்தினர் இப்போது தான் வந்து சேர்ந்தார். நீ தயவுசெய்து மூன்று ரொட்டிகளைக் கடனாகத் தந்து உதவி செய்" என்று கேட்பீர்கள் அல்லவா? அந்த நண்பர், "தயவுசெய்து எனக்குத் தொல்லை தர வேண்டாம். கதவு பூட்டப்பட்டிருக்கிறது. நாங்கள் யாவரும் தூங்குவதற்காகப் படுத்துவிட்டோம். நான் இப்பொழுது எழுந்து வந்து உனக்கு எதுவுமே கொடுக்க இயலாது" என்பார். எனவே, நீங்கள் என்ன செய்வீர்கள்? தொடர்ந்து அவரிடம் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள். உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் அவரிடம் இல்லையென்றாலும், உங்களது விடாத வேண்டுதலினால் அவர் எழுந்து உங்களுக்குத் தேவையானவற்றைத் தந்து உதவுவார் என்பது உறுதி" என்றார்.

கைம்பெண்ணும் நீதிபதியும்

லூக்கா 18 : 2 - 8

ஒரு நகரத்தில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதுமே கடவுளைப் பற்றியோ, மனிதரைப் பற்றியோ கவலைப்பட்டதில்லை. அதே நகரத்தில் ஒரு கைம்பெண் இருந்தாள். அவள் நீதிபதியிடம் வந்து, "ஐயா, தயவுசெய்து என்னுடைய எதிரியிடமிருந்து எனது உரிமைகளைப் பெற்றுதாரும்" என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தாள். நீண்ட காலமாக அந்த நீதிபதிக்கு அவளுக்கு உதவி செய்யும் எண்ணம் ஏற்படவில்லை. கடைசியில் அவர் நினைத்தார், "நானோ; கடவுளுக்கோ, மனிதருக்கோ கவலைப்படுவதில்லை. ஆனால் இந்தக் கைம்பெண் எனக்கு மிகுதியான தொல்லைத் தருகிறாள். நான் அவளுக்கு உதவி செய்யாவிட்டால் அவள் தொடர்ந்து வந்துகொண்டேயிருப்பாள்; எனவே நான் அவளுக்கு உதவி செய்யப் போகிறேன்" என்றார்.



"ஒரு இரக்கமற்ற நீதிபதி இப்படிச் சொன்னார் என்றால், தம்மை நோக்கி இரவும் பகலும் வேண்டுதல் செய்யும் தம் சொந்த மக்களுக்குக் கடவுள் உதவி செய்ய மாட்டாரா ?" என்று இயேசு கேட்டார். மேலும், "கடவுள் தம் மக்களுக்காகச் செயல்படுவதில் தாமதம் செய்வாரோ ? அவர் விரைவாக வந்து அவர்களுக்கு உதவி செய்வார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்." என்றார்.

பரிசேயனும், வரி வசூலிப்பவரும்

லூக்கா 18 : 9 – 14

"தாங்கள் மற்றவர்களைவிட நல்லவர்கள். மற்ற எல்லாரும் கெட்டவர்கள்" என்று நினைப்பவர்களைப் பற்றி இயேசு இந்தக் கதையையும் கூறினார்.

இரண்டு மனிதர்கள் ஆலயத்திற்கு வேண்டுதல் செய்யச் சென்றார்கள். ஒருவன் பரிசேயன். மற்றவன் வரி வசூலிப்பவன்.

எல்லோருக்கும் முன்பாக பரிசேயன் நின்றுகொண்டு, "மற்ற எல்லோரையும் போல நான் பேராசைக்காரனல்ல; நேர்மையற்றவன் அல்ல; ஒழுக்கம் கெட்டவனல்ல. இப்படியிருப்பதற்காகக் கடவுளே உமக்கு நன்றி சொல்லுகிறேன். அதோ, அங்கே நிற்கும் வரி வசூலிப்பவனைப் போலவும் நான் இல்லாததற்காகவும் நன்றி செலுத்துகிறேன். நான் வாரம் இருமுறை நோன்பு இருக்கிறேன். என் வருவாய் அனைத்திலும் பத்தில் ஒரு பங்கை உமக்குக் காணிக்கையாகப் படைக்கிறேன்" என்றான்.

ஆனால்; அந்த வரி வசூலிப்பவனோ தூரத்தில் நின்று, தலைகுனிந்தபடி, தன் மார்பில் அடித்துக்கொண்டு, "ஆண்டவரே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்" என்று வேண்டினான்.

"இவர்களில் இந்தப் பரிசேயனல்ல. அந்த வரி வசூலிப்பவனே, கடவுளால் பாவம் மன்னிக்கப்பட்டவனாக தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றான். தங்களைப் பெரியவர்கள் என்று கருதுபவர்களைக் கடவுள் விரும்புவது இல்லை, தங்களைத் தாழ்த்துகிறவர்கள் இடத்திலேயே கடவுள் விருப்பம் கொள்கிறார்" என்று இயேசு சொன்னார்.

கருத்தில் கொள்ள வேண்டியவை

"பணம் கடவுளைவிட முக்கியமானதா?" என்ற கேள்வியை இந்தக் கதைகள் கேட்கின்றன.

மன்னியாத வேலைக்காரன்

மத்தேயு 18 : 21 – 35

பேதுரு இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, என் உடன்பிறந்தவன் எனக்கு எதிராகத் தொடர்ந்து குற்றம் செய்துகொண்டே இருக்கிறான், நான் அவனை எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? ஏழு முறையா? என்று கேட்டார். "இல்லை, ஏழு முறை மட்டுமல்ல. ஏழு எழுபது முறை மன்னிக்க வேண்டும். ஏனெனில், கடவுள் நம்மை அவ்வாறே மன்னிக்கிறார்" என்று இயேசு கூறினார்.

ஒரு அரசர் தனது வேலைக்காரர்களின் கணக்குகளைச் சரிபார்க்க விரும்பினார். அவர் தனக்கு ஒரு பெரிய தொகை கடன்பட்டிருந்த ஒரு வேலைக்காரனை முதலில் அழைத்தார். அரசர் அவனிடம், "நீ உன் சொத்து முழுவதையும் விற்று, அந்தப் பணத்தைக்கொண்டு வந்து எனக்குச் செலுத்து." என்றார். அப்பொழுது அந்த வேலைக்காரன் அரசனின் முன்பாக விழுந்து, பணிந்து, "ஐயா என்மீது இரக்கம் காட்டும். இன்னும் கொஞ்சம் தவணை கொடும். நான் உமக்குப் பணம் முழுவதையும் செலுத்தித் தீர்த்து விடுகிறேன்" என்று கெஞ்சினான். இதைக்கேட்ட அரசர் அவன்மீது இரக்கம் கொண்டார். அந்த வேலைக்காரன் பட்டிருந்த கடனைத் தள்ளுபடி செய்து, அவனை மன்னித்தார். அவன் விடுதலை பெற்றவனாய்ச் சென்றான்.

ஆனால், அந்த மனிதன் போகும்போது வழியில் இவனிடம் ஒரு சிறு தொகை கடன்பட்டிருந்த வேலைக்காரன் இவன் கால்களில் விழுந்து பணிந்து, "ஐயா, எனக்கு இன்னும் கொஞ்சம் தவணை கொடும்." என்று கெஞ்சியபோதும், அவன் இரக்கம் காட்ட மறுத்து, அந்த வேலைக்காரனைச் சிறையில் அடைத்து விட்டான்.





மற்ற வேலைக்காரர்கள் இதைக் கேள்விப்பட்டு மிகவும் கவலைப்பட்டார்கள். அவர்கள் அரசரிடம் சென்று அங்கு நடந்த அனைத்தையும் தெரிவித்தார்கள்.

அரசர் இதைக் கேள்விப்பட்டதும் மிகவும் கோபமடைந்தார். அந்த வேலைக்காரனை அழைத்துவரச் சொன்னார். அவனிடம், ''பொல்லாதவனே, நீ என்னிடம் கெஞ்சி வேண்டியபோது, நான் உன்மீது இரக்கம் கொண்டேன். இதைப்போலவே நீயும் உன்னிடம் கடன்பட்ட வேலைக்காரனை மன்னித்திருக்க வேண்டும் அல்லவா?'' என்றார். பின்னர்; அவனைத் தன் கடன் முழுவதையும் கொடுத்துத் தீர்க்கும்வரை சிறையில் அடைத்தார்.

''நீங்களும் உங்கள் சகோதர, சகோதரிகளை மனமார மன்னிக்க வேண்டும். இல்லாவிட்டால் என் தந்தையாம் கடவுள் உங்களுக்கும் இப்படியே தீர்ப்புச் செய்வார்'' என்று இயேசு கூறினார்.

செல்வந்தனான மூடன்

லூக்கா 12 : 13 - 21

யூதர்கள், தங்கள் சமயப் போதகர்களிடம் சென்று தங்கள் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும்படிக் கேட்பார்கள்.

கூட்டத்திலிருந்த மனிதன் ஒருவன் ஒருநாள் இயேசுவிடம் வந்து, ''ஐயா, எங்கள் தந்தையின் சொத்துக்களைப் பாகம் பிரித்துத் தரும்படி நீர் என் உடன் பிறந்தவனிடம் சொல்லும்'' என்றான். அதற்கு இயேசு, ''உங்கள் சொத்துக்களைப் பாகம் பிரித்துத் தர நான் உங்கள் நீதிபதியா?'' என்று கேட்டார்.

பின்னர் அவர் மக்கள் கூட்டத்தைப் பார்த்து ''ஒருவரும் பொருளாசை கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் பெற்றிருக்கும் உடைமைகள் மட்டுமே உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில்லை'' என்றார்.

பின்னர் இயேசு அவர்களிடம், ''ஒரு காலத்தில் மிகுதியான செல்வமுடைய விவசாயி ஒருவன் இருந்தான். அவனுடைய நிலத்திலிருந்து மிகுதியான விளைச்சல் அவனுக்குக் கிடைத்தது. அப்பொழுது அவன் தனக்குள் இப்படி எண்ணிக்கொண்டான்:


P. Montero

'என்னுடைய தானியக் கிடங்குகளில் என்னுடைய தானியம் முழுவதையும் சேர்த்து வைக்க இடமில்லை. எனவே, நான் இப்படிச் செய்வேன். என்னுடைய சேமிப்பறைகள் அனைத்தையும் இடித்துத் தள்ளிவிட்டு, அவற்றைப் பெரியதாகக் கட்டுவேன். அங்கே எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் சேர்த்து வைப்பேன். பின்னர் நான் வாழ்வின் எல்லா இன்பங்களையும் நெடுங்காலம் அனுபவிப்பேன்!'

ஆனால் கடவுள் அவனிடம், "மடையனே, இன்று இரவிலேயே நீ இறந்து விடப் போகிறாய். அப்படியானால் உனக்காக நீ சேர்த்து வைத்த இந்தப் பொருட்களையெல்லாம் யார் அனுபவிப்பார்கள்?" என்று கேட்டார்.

"தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் பெற்றிருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். ஆனால், அவர்கள் கடவுளின் பார்வையில் ஏதுமற்றவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இப்படித்தான் நடக்கும்" என்று இயேசு சொன்னார்.

செல்வந்தனும், லாசருவும்

லூக்கா 16 : 19 – 31

இந்த உலகில் கடவுள் விரும்பும் முறையில் நாம் வாழ்வது இன்றியமையாததாகும். எனவே இதைப்பற்றி மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். இறந்த பின்னர் எவருக்குமே ஒரு இரண்டாம் வாய்ப்புத் தரப்படுவதில்லை.

செல்வந்தனான ஒரு மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தான். அவனுக்கு மிகுதியான உணவு வகைகளும் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் இருந்தன. அதே நேரம் உடல் முழுவதும் புண்கள் நிறைந்த, 'லாசரு' என்னும் பேர்கொண்ட பிச்சைக்காரன் ஒருவனும் இருந்தான். ஒவ்வொரு நாளும் யாராவது அவனை அந்த செல்வந்தனின் வீட்டு வாசலுக்கு அருகில் கொண்டு வந்து விட்டு விடுவார்கள். செல்வந்தனின் வீட்டிலிருந்து வீசப்படும் எச்சில் உணவைத் தின்று அவன் தன் பசியைப் போக்குவான் என்று எதிர்பார்த்து அவ்வாறு செய்தார்கள். நாய்கள் வந்து அவனது புண்களை நக்குவதுண்டு.

ஒருநாள் அந்த ஏழை மனிதன் இறந்தான். வானதூதர்கள் அவனை விண்ணுலகுக்கு அழைத்துச் சென்று ஆபிரகாமின் மடியில் உட்காரச் செய்தார்கள். பின்னால் அந்த செல்வந்தனும் இறந்தான். அவன் நரகத்திற்குச் சென்றான். அங்கே அவன் அதிக வேதனைகளை அனுபவித்தான். அவன் அண்ணாந்து பார்த்து, தூரத்தில் ஆபிரகாம் மடியில் லாசரு அமர்ந்திருப்பதைக் கண்டான். எனவே அவன்; உரத்தக் குரலில், "தந்தையாகிய ஆபிரகாமே! என்மீது இரக்கம் காட்டும். தயவுசெய்து லாசருவை என்னிடம் அனுப்பும். அவன் தன் விரலைத் தண்ணீரில் நனைத்து வந்து, எனது நாவைக் குளிரச் செய்யட்டும். இந்த நெருப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே" என்றான்.

அதற்கு ஆபிரகாம், "என் மகனே, நீ உன் வாழ்நாளில் எல்லா நன்மைகளையும் பெற்றிருந்தாய். ஆனால் லாசரு துன்பங்களை மட்டுமே அனுபவித்தான். இப்பொழுது அவன் இங்கே மகிழ்ச்சியடைகிறான். நீயோ வேதனையடைகிறாய். மேலும் உனக்கும் எங்களுக்குமிடையில் ஒரு பெரிய இடைவெளி உள்ளது. அங்கிருந்து யாரும் உன்னிடம் வர விரும்பினாலும் வர முடியாது. அதுபோல நீ இருக்கும் இடத்திலிருந்தும் யாரும் எங்களிடத்தில் வந்து சேர முடியாது" என்றார்.

அப்பொழுது அந்த செல்வந்தன், "அப்படியானால், என் தந்தையாம் ஆபிரகாமே, லாசருவை ஒரு முறை என் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மைக் கெஞ்சுகிறேன். எனக்கு ஐந்து உடன்பிறந்தவர்கள் உண்டு. லாசரு அவர்களை எச்சரிக்கட்டும். அவர்களாவது இந்த வேதனை நிறைந்த இடத்திற்கு வராமலிருக்கட்டும்" என்றான்.

அதற்கு ஆபிரகாம், "உன்னுடைய உடன் பிறப்புக்களை எச்சரிக்க, அவர்களுக்கு மோசே மற்றும் கடவுளின் மக்களுடைய போதனைகள் உள்ளன. உனது உடன் பிறந்தவர்கள் அவற்றுக்குச் செவி சாய்க்கட்டும்!" என்றார்.

"அப்படியில்லை. என் தந்தையாகிய ஆபிரகாமே! இறந்தவர்களில் ஒருவர் உயிரோடெழுந்து, அவர்களிடம் சென்று எச்சரிக்க வேண்டும். அப்பொழுதுதான்

அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்புவார்கள்'' என்று அந்த செல்வந்தன் கூறினான்.

அதற்கு ஆபிரகாம், "அவர்கள் மோசேயின் சட்டத்திற்கும், இறைமக்களின் வார்த்தைகளுக்கும் செவிசாய்க்கவில்லையென்றால், இறந்தவர்களிலிருந்து ஒருவர் உயிரோடு எழுந்து சென்று கூறினாலும் அவர்கள் மனம் மாற மாட்டார்கள்'' என்றார்.

நல்ல சமாரியர்

லூக்கா 10 : 25 – 37

யூதர்களில் பெரும்பாலானவர்கள் யூதேயா, கலிலேயா என்னும் பெரும்பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். பாலஸ்தீனாவில் அவ்விரண்டு பகுதிகளுக்குமிடையில், 'சமாரியர்கள்' வாழ்ந்து வந்தார்கள். சமாரியர்கள் ஒரு கலப்பின மக்களாவர். யூதர்களுக்குச் சமாரியர்களைப் பிடிக்காது. அவர்களைத் தாழ்வாக மதித்து வந்தார்கள்.

சமய ஆசிரியன் ஒருவன், இயேசுவிடம் வந்து அவரை சிக்கலில் உட்படுத்த முயற்சித்தான். அவன், "போதகரே, நான் எப்படி நித்திய வாழ்வைப் பெற முடியும்?'' என்று கேட்டான்.

இயேசு அவனிடம், "நமது திருமறை நூல் என்ன சொல்லுகிறது? நீ அதை எவ்வாறு புரிந்து கொள்ளுகிறாய்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த மனிதன், "உன்னுடைய ஆண்டவராகிய கடவுளை உன் சிந்தனையிலும், செயலிலும் நினைத்து அன்பு கூறுவாயாக. நீ என்னிடம் அன்பு கொள்வது போலவே உன்னை அடுத்திருப்பவரிடமும் அன்பு செலுத்து'' என்று கூறுகிறது என்றான்.

இயேசு, "நீ சொல்வது சரியே! நீ அதைச் செய். அப்பொழுது நீ நித்திய வாழ்வைப் பெறுவாய்'' என்றார். இதைக்கேட்ட அந்த மனிதன் தன்னை 'நேர்மையானவன்' என்று காட்ட விரும்பினான். எனவே அவன் இயேசுவிடம், "எனக்கு அடுத்திருப்பவர் யார்?'' என்று கேட்டான். அவனுக்கு இயேசு பின்வரும் கதையைக் கூறினார்.

“ஒரு மனிதர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் பயணமாகப் போய்க் கொண்டிருந்தார். வழியில் திருடர்கள் அவரைத் தாக்கி, அவரது ஆடைகளை எடுத்துக்கொண்டு அவரை அடித்துக் குற்றுயிராய் பாதையில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

சற்று நேரத்துக்குப் பின், அந்த வழியாக ஒரு குரு வந்தார். அவர் காயமுற்றுக் கிடக்கும் மனிதனைக் கண்டார். அவர் தூரமாக விலகித் தன் வழியே சென்று விட்டார். சற்று நேரத்துக்குப் பின்னர், ஆலயத்தில் உதவி செய்யும் லேவியன் ஒருவன் அவ்வழியாக வந்தான். அவனும் அந்த மனிதனைக் கண்டு சாலையின் மறுபக்கமாகக் கடந்து சென்று விட்டான். ஆனால், அவ்வழியாக வந்த ஒரு சமாரியர் அந்த மனிதரைக் கண்டார்; அவர்மீது இரக்கம் கொண்டார்; அவருடைய காயங்களைக் கழுவி, எண்ணெய் வார்த்துக் கட்டினார்; பின்னர் அவரைத் தூக்கித் தன் கழுதையின்மேல் ஏற்றி, ஒரு பயணியர் விடுதிக்குக் கொண்டு சென்றார். அங்கே அவரை வைத்துப் பராமரித்தார். மறுநாள் அந்த விடுதியின் மேலாளரிடம் இரண்டு வெள்ளி நாணயங்களைக் கொடுத்தார். “இவரை நன்றாய்க் கவனித்துக்கொள்ளுங்கள். நான் திரும்ப வரும்போது நீங்கள் அவருக்காகக் கூடுதலாகச் செலவிடும் தொகை முழுவதையும் நான் தந்து விடுவேன்” என்றார்.

“இந்த மூன்று பேரில் திருடரால் தாக்கப்பட்டிருந்த அந்த மனிதருக்கு “அடுத்திருந்தவர் யார்?” என்று இயேசு கேட்டார். அந்தச் சமய ஆசிரியன், “அவர் மீது இரக்கம் காட்டியவரே” என்றான்.

இயேசு, “அது சரியே. நீயும் போய் அப்படியே செய்” என்றார்.

போதகராகிய இயேசு

இயேசு ஒரு நல்ல போதகர். அவர் மக்கள் சிந்திக்க வேண்டும் என்று விரும்பினார். தன் குருவின் போதனையைச் சரியாக நினைவில் வைத்து அதை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதே ஒரு சீடனின் முக்கிய கடமையாகும். "இயேசு என்ன போதித்தார்?" என்பதற்குச் சில எடுத்துக் காட்டுக்கள் இங்கே தரப்படுகின்றன.

மலைமேலிருந்து அளித்த போதனைகள்

இயேசு ஒரு மலையின் மீது அமர்ந்து வழங்கிய மிகச் சிறப்பான போதனைகளின் தொகுப்பு இது. அவைகள், முன்பு மக்கள் கேள்விப்பட்டிருந்தவற்றைவிட முற்றிலும் வேறுபட்டவைகளாக இருந்தன.

உப்பைப் போலிருங்கள்

மத்தேயு 5 : 13

தற்போது உப்பு உணவுப்பொருள்களுக்குச் சுவையூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் குளிர் சாதனப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னால், உணவு கெட்டுப் போகாமல் தடுப்பதற்கு உப்பு பயன்படுத்தப்பட்டது.

"நீங்கள் ஒவ்வொருவரும் உப்பைப் போலிருக்க வேண்டும். ஆனால் உப்பு அதன் சுவையை இழந்துவிட்டால், அதை மீண்டும் சுவையுள்ளதாக மாற்ற முடியாது. அது பயனற்றதாய்ப் போய்விடும்"

ஒளியைப் போலிருங்கள்

மத்தேயு 5 : 14 – 16

"நீங்கள் மற்றவர்களுக்கு ஒளியைப் போல இருக்க வேண்டும். ஒரு மலையின் மேல் கட்டப்பட்டுள்ள நகரத்தை எல்லாரும் பார்க்க முடியும். ஒருவரும் எரிந்து கொண்டிருக்கும் ஒரு விளக்கை ஒரு பாத்திரத்தின் அடியில் வைக்கமாட்டார்கள். அதை ஒரு விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்போது அது வீடு முழுவதுக்கும் ஒளிதரும். அது போலவே மக்கள் உங்களிடமிருந்து சுடர்விடும் ஒளியைக் காணவேண்டும்."

கோபப்படாதிருங்கள்

மத்தேயு 5 : 21 – 26

"யாரையும் கொலை செய்யாதே. அப்படி நீ செய்தால் நீயும் கொலை செய்யப்படுவாய்" என்று மோசேயின் திருச்சட்டம் சொல்லுகிறது. ஆனால், இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உன் உடன் பிறந்தவரிடத்தில் நீ கோபப்பட்டால் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் நிலைக்கு ஆளாவாய். நீ அவனை 'உபயோகமில்லாதவனே' என்று அழைத்தால், உச்சநீதிமன்றத்துக்குக் கொண்டுப் போகப்படுவாய். நீ அவனை, 'அறிவில்லாதவனே' என்று அழைத்தால், நரகத்தின் நெருப்புக்கு இரையாக்கப்படுவாய்.

ஒருவேளை நீ கடவுளுக்கு ஒரு காணிக்கையைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறாய். பலிபீடத்தருகில் நிற்கும் போது, திடீரென்று உனக்கும் உன் உடன்பிறந்தவனுக்குமிடையில் சிறிது மனத்தாங்கல் இருக்கிறது என்று நினைவு கூருகிறாய்; உடனே நீ உன்னுடைய காணிக்கையைப் பீடத்தின் முன்னால் வை. முதலில் விரைந்து சென்று உன் உடன்பிறந்தவனுடன் ஒப்புரவாகு; பின்னர் திரும்பிவந்து கடவுளுக்கு உன் காணிக்கையைப் படைப்பாயாக.

உன்னை ஒருவர் நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பலாம். அந்த வழக்கை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்து,



சமாதானம் செய்ய முயற்சி செய். ஒரு முறை நீ நீதி மன்றத்திற்குள் சென்றால், பின்னர் தண்டனை முடியும்வரை நீ சிறையிலேயே இருக்க வேண்டியதிருக்கும்.

தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்

மத்தேயு 5 : 38 – 42

'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்பது பழைய சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒன்று. ஒரு மனிதன் இன்னொருவனைக் காயப்படுத்தினால் அவனுக்குரிய தண்டனை அவன் ஏற்படுத்திய காயத்துக்கு இணையாயிருக்க வேண்டும்.

'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்று மோசேயின் திருச்சட்டம் கூறுகிறது. ஆனால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுக்கு யாராவது ஒரு தீமையைச் செய்தால், நீங்கள் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். ஒருவர் உன்னை வலது கன்னத்தில் அடித்தால், அவன் உன் இடது கன்னத்திலும் அடிக்கட்டும். ஒருவர் உன்னுடைய சட்டையை வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்ள விரும்பினால், அவர் உன் மேலாடையையும் எடுத்துக் கொள்ளட்டும். ஒருவன் அவனுடைய மூட்டையை ஒரு கிலோ மீட்டர் தொலைவு உன்னைத் தூக்கி வரச் சொன்னால், நீ இரண்டு கிலோ மீட்டர் தொலைவு தூக்கிச் செல். உதவி கேட்கும் எவருக்கும் அதைச் செய்யத் தவற வேண்டாம். உன்னிடம் கடன்வாங்க வருகிறவர் யாராயிருந்தாலும் அவருக்கு முகம் கோணாமல் கொடுத்து உதவ வேண்டும்."

எதிரிகளிடம் அன்பு செலுத்துங்கள்

மத்தேயு 5 : 43 – 48

"உன்னுடைய நண்பர்களிடம் அன்பு செலுத்து. உன்னுடைய எதிரிகளிடம் வெறுப்பைக் காட்டு" என்று மோசேயின் திருச்சட்டம் கூறுகிறது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். "உங்கள் எதிரிகளிடம் அன்பு காட்டுங்கள். உங்களைத்

துன்பப்படுத்துபவர்களுக்காகக் கடவுளிடம் வேண்டுதல் செய்யுங்கள். உங்களிடம் அன்பு செலுத்துகிறவர்களிடம் மட்டுமே, நீங்கள் அன்பு செலுத்தினால் பலன் என்ன? வரி வசூலிப்பவர்களும் அப்படிச் செய்கிறார்களே! உங்கள் நண்பர்களிடம் மட்டும் நீங்கள் அன்பு காட்டினால் அதில் சிறப்பு என்ன? கடவுளை அறியாத மக்களும் அப்படிச் செய்கிறார்களே! உங்கள் ஆண்டவராகிய கடவுள் முழு நிறைவுள்ளவராய் இருப்பது போல, நீங்களும் முழு நிறைவுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

மற்றவர்களுக்குக் கொடுங்கள்

மத்தேயு 6 : 1 – 4

தேவையிலிருக்கும் ஒருவருக்கு நீங்கள் ஒரு உதவியைச் செய்யும் போது, அதைப்பற்றி மற்றவர்களிடம் பெரிய விளம்பரம் செய்யாதீர்கள். இப்படிச் செய்கிறவர்கள் மற்றவர்கள் தங்களைப் புகழவேண்டும் என்று விரும்புகிறார்கள். அதுமட்டுமே அவர்கள் பெறும் பலன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் தேவையுள்ள ஒருவருக்கு ஒரு உதவியைச் செய்யும் போது உங்களுடைய நெருங்கிய நண்பர் கூட அதை அறியக் கூடாது. அப்படிச் செய்தால்தான் உங்கள் தந்தையாம் கடவுள், நீங்கள் மறைவாகச் செய்யும் நற்செயலுக்காக உங்களுக்கு மிகுதியான ஆசி அளிப்பார்.



இறை வேண்டல் முறை

மத்தேயு 6 : 5 –15

மற்றவர்கள் பார்க்கும்படியாக உங்கள் இறை வேண்டலைச் செய்யாதீர்கள். விளம்பர விரும்பிகள் மட்டுமே ஆலயங்களிலும், தெருமுனைகளிலும், நின்று கொண்டு எல்லோரும் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இது மட்டுமே அவர்கள் பெறும் பலன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மறைவாக நீங்கள் இறைவேண்டல் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிற உங்கள் தந்தையாகிய கடவுள் உங்களுக்கு ஏற்ற பலனளிப்பார்.

நீங்கள் இறைவேண்டல் செய்யும் போது மிகுதியான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம். தங்கள் கடவுள் நீண்ட இறை வேண்டல்களைக் கேட்பார்கள் என்று கடவுளை அறியாதவர்கள் மட்டுமே அப்படிச் செய்வார்கள். நீங்கள் அவர்களைப் போலிருக்க வேண்டாம். நீங்கள் வேண்டுவதற்கு முன்னரே உங்களுக்கு என்ன தேவை என்பதை உங்கள் தந்தையாம் கடவுள் அறிந்திருக்கிறார்.

இப்படி இறை வேண்டல் செய்யுங்கள்

“விண்ணகத்திலிருக்கும் எங்கள் தந்தையே! விண்ணுலகில் உமக்குச் செய்யப்படுவது போல எல்லோரும் உம் விருப்பத்தை நிறைவேற்றுவார்களாக. உமது தூய திருப்பெயரை எல்லாரும் ஏற்றுக் கொள்வார்களாக. இன்று எங்களுக்குத் தேவையான உணவை எங்களுக்குத் தாரும்.

நாங்கள் செய்திருக்கும் பிழைகளை எங்களுக்கு மன்னியும் மற்றவர்கள் எங்களுக்குச் செய்துள்ள பிழைகளை நாங்களும் மன்னிக்கிறோம்.

தவறு செய்யாதபடி எங்களைக் காத்துக் கொள்ளும். தீயோனிடமிருந்து எங்களை விலக்கிக் காத்துக் கொள்வீராக.”

மேலும் நான் கூறுவது. "உங்களுக்கு எதிராகத் தவறுபுரிபவர்களை நீங்கள் மன்னித்தால், உங்கள் தந்தையாம் கடவுள் உங்களையும் மன்னிப்பார். ஆனால், நீங்கள் மற்றவர்களை மன்னிக்காவிட்டால் உங்கள் தந்தையாம் கடவுள் உங்களையும் மன்னிக்கமாட்டார்."

கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்

மத்தேயு 6 : 19 – 21

பூவுலகில் செல்வத்தைச் சேமித்து வைக்காதீர்கள். இங்கே பூச்சிகளும், துருவும் அதைக் கெடுக்க முடியும். திருடர்கள் வீட்டை உடைத்துத் திருடிச் செல்வார்கள். இதற்குப் பதிலாக விண்ணகத்தில் செல்வத்தைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சிகளோ, துருவோ, திருடர்களோ அதை ஒன்றும் செய்ய முடியாது. உங்கள் செல்வம் எங்கே இருக்கிறதோ அங்கேயே உங்கள் சிந்தனையும் இருக்கும்.

தலைவரை தேர்ந்தெடு

மத்தேயு 6 : 24

"இரண்டு தலைவர்களுக்குப் பணி செய்ய எவராலும் முடியாது. அவர்களில் ஒருவரிடம் மற்றவரை விட மிகுதியாக நீ அன்பு செலுத்துவாய். விசுவாசமாயிருப்பாய். எனவே

நீ கடவுளுக்கும், செல்வத்துக்கும் ஒரே நேரத்தில் பணி செய்ய முடியாது.

கவலைப் படாதிருங்கள்

மத்தேயு 6 : 25 – 34

"உணவு, உடை ஆகியவற்றைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் 'உயிர்' உணவைவிட முக்கியமானது. உங்கள் உடல், ஆடைகளைவிட முக்கியமானது அல்லவா? பறவைகளைக் கவனித்துப் பாருங்கள். அவை விதைகளை விதைப்பதில்லை. உங்கள் தந்தையாகிய கடவுள் அவற்றையும் கவனித்துக் கொள்கிறார். நீங்கள் பறவைகளை விட சிறப்புப் பெற்றவர்கள் என்பது உறுதி.

"காட்டு மலர்ச்செடிகளைக் கவனித்துப் பாருங்கள். அவை வேலை செய்வதுமில்லை. ஆடைகளை நெய்வதுமில்லை. சாலமோன் அரசரே இந்த மலர்களைப் போன்ற அழகான ஆடைகளை ஒரு போதும் அணிந்ததில்லை. குறுகிய காலம் மட்டுமே வாழும் காட்டுப் புல்லுக்கு இத்தகைய ஆடை அணிவிக்கும் கடவுள், உங்களுக்குத் தேவையான ஆடைகளைத் தருவார் என்பது நிச்சயம்.

கடவுளை அறியாத மக்கள் மட்டுமே இவற்றிற்காகக் கவலைப்படுவார்கள். அவர் விரும்புவதைச் செய்யுங்கள். அப்பொழுது கடவுள், உங்களுக்குத் தேவையான அனைத்தையும் தருவார்.

பிறரிடம் குற்றம் கண்டு பிடிக்காதீர்கள்

மத்தேயு 7 : 1 – 5

"பிறரிடம் குற்றம் கண்டு பிடிக்காதீர்கள். அப்பொழுது கடவுள் உங்களிடம் குற்றம் கண்டுபிடிக்கமாட்டார். நீங்கள் எந்த விதிகளை மற்றவர்களுக்குப் பயன்படுத்துகிறீர்களோ, அதே விதிகளையே, கடவுளும் உங்களுக்குப் பயன்படுத்துவார். உன்னுடைய கண்ணில் ஒரு பெரிய மரத்துண்டு இருக்கும் போது, உன் சகோதரனின் கண்ணிலிருக்கும் துரும்பை ஏன் பெரிதுபடுகிறாய்? முதலில் நீ உன் கண்ணிலிருக்கும் மரத்துண்டை அகற்றிவிடு. பின்னர் நீ மற்றவர் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க முயற்சி செய்."

கேள், தேடு, தட்டு

மத்தேயு 7 : 7 – 12

"கேளுங்கள் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். தேடுங்கள் நீங்கள் கண்டு பிடிப்பீர்கள். தட்டுங்கள் கதவு உங்களுக்குத் திறக்கப்படும்.

"உன் மகன் உன்னிடத்தில் அப்பம் கேட்டால், நீ அவனுக்கு கல்லைக் கொடுப்பாயா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பாயா? பொல்லாத தந்தைகூட தன் குழந்தைகளுக்கு நல்லவற்றைக் கொடுக்க அறிந்திருக்கும்போது உங்கள் தந்தையாம்

கடவுள் தம்மிடம் கேட்பவர்களுக்கு நல்லவற்றைக் கொடுப்பது நிச்சயமல்லவா?

மற்றவர்கள் உங்களுக்கு எவற்றைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவற்றையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."

வாழ்வின் வழியைத் தேர்ந்தெடுங்கள்

மத்தேயு 7 : 13, 14

"அகலமான வாயிலும், விரிவான சாலையும் நரகத்துக்கு உங்களை வழி நடத்தும். மிகுதியான மக்கள் இந்தச் சாலை வழியே செல்கின்றனர். ஆனால்; இடுக்கமான வாயிலும், கடினமான சாலையும் நித்திய வாழ்வுக்கு வழி நடத்தும். மிகச் சிலர் மட்டுமே இந்தச் சாலை வழியே செல்கிறார்கள். இடுக்கமான வாயில் வழியாகச் சென்று நித்தியவாழ்வைப் பெறுங்கள்."

எச்சரிக்கையாயிருங்கள்

மத்தேயு 7 : 15 – 20

"கடவுளின் பேரால் பொய் பேசும் மக்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆடுகளைப் போலச் சாந்தமாகக் காணப்படுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் கொடிய ஓநாய்களைப் போலிருக்கிறார்கள். அவர்கள் ஆற்றும் செயல்களிலிருந்து அவர்களை அறிவீர்கள். முட்செடிகள் திராட்சைப் பழங்களையோ, அத்திப்பழங்களையோ தர முடியாது. ஒரு நல்ல மரம் கெட்ட கனியைத் தரமுடியாது. கெட்ட கனியைத் தரும் மரம் வெட்டப்பட்டு, எரிக்கப்படும்."

போதனைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்

மத்தேயு 7 : 21 – 29

"கடவுளுக்குக் கீழ்ப்படிவோர் மட்டுமே கடவுளின் புதிய உலகத்தினுள் நுழைய முடியும். நியாயத்தீர்ப்பு நாளில் பலர் வந்து என்னிடம், 'ஆண்டவரே, ஆண்டவரே' உமது பேரால் நாங்கள் கடவுளின் செய்தியை அறிவித்தோம். பல அசுத்த ஆவிகளைத் துரத்தினோம். பல அருஞ்செயல்களையும் செய்தோம்" என்பார்கள். அப்பொழுது நான் அவர்களிடம், "பொல்லாத மனிதராகிய நீங்கள் என்னை விட்டு அகன்று போய் விடுங்கள். உங்களை எனக்குத் தெரியவே தெரியாது" என்பேன்.

"என்னுடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர் அறிவுள்ள ஒரு மனிதரைப் போலிருக்கிறார். அவர் தன் வீட்டை ஒரு பாறையின் மேல் கட்டினார். பெருமழை பெய்தது. ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின. அந்த வீட்டின் மீது புயல் காற்று வேகமாக வீசியது. ஆனால் அந்த வீடு விழவில்லை.

என்னுடைய போதனைகளுக்குக் கீழ்ப்படியாதவர் மூடனாவார். அவர் தனது வீட்டை மணல் மேல் கட்டினார். புயல் காற்று மோதியதும் அந்த வீடு இடிந்து விழுந்து சேதமடைந்தது."

இயேசு இந்தக் கருத்துக்களைச் சொல்லி முடித்தார். மக்கள் கூட்டம் அவர் கற்பித்த விதத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டது. அவர் யூதர்களின் சமய ஆசிரியர்களைப் போல கற்பிக்கவில்லை. கடவுளின் அதிகாரத்துடன் போதித்தார்.

தங்களை நீதிமான்களென்று எண்ணியவர்கள்

சதுசேயர்கள்

மத்தேயு 22 : 23 – 33

யூதர்களில் ஒரு சிறிய சமயப்பிரிவினரே 'சதுசேயர்' ஆவர். திருமறை நூல்கள் கற்பிக்கும் விதிகள் அனைத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. தங்கள் கருத்துக்களை வலியுறுத்தப் பொருளற்ற ஒரு கதையைப் பயன்படுத்தினார்கள்.

சில சதுசேயர்கள் ஒரு நாள் இயேசுவிடம் வந்தனர். "மக்கள் இறந்தபின் அவர்களுக்கு வாழ்க்கை இல்லை" என்று அவர்கள் நம்பினார்கள்.

அவர்கள் இயேசுவிடம், "போதகரே, ஓரிடத்தில் ஏழு சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் மூத்தவர், திருமணம் செய்து பிள்ளையில்லாமல் இறந்து போனார். அவருடைய தம்பி அந்தக் கைம் பெண்ணைத் திருமணம் செய்தார். அவரும் பிள்ளை இல்லாமல் இறந்து போனார். மற்ற எல்லா உடன் பிறந்தவர்களுக்கும் இதே நிலை ஏற்பட்டது. இறுதியாக அந்தப் பெண்ணும் இறந்து போனாள். இறந்தவர் யாவரும் உயிரோடு எழும்பும் நாளில் அந்தப்பெண் யாருடைய மனிவியாயிருப்பாள்? அந்த ஏழு பேரும் அவளைத் திருமணம் செய்திருந்தார்களே!" என்று கேட்டார்கள்.

இயேசு அவர்களிடம், "நீங்கள் எவ்வளவு தவறான எண்ணம் கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்குக் கடவுளின் திருமறை நூலும் தெரியாது; அவருடைய ஆற்றலைக் குறித்தும் தெரியாது. இறந்தவர்கள் உயிரோடு எழும்பும்போது அவர்கள் விண்ணுலகில் வான தூதரைப்போல் இருப்பார்கள். அங்கே திருமண உறவு என்பது கிடையாது. மேலும் அவர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் கடவுள் இறந்தவர்களின் கடவுளல்ல" என்றார்.

அவருடைய போதனையைக் கேட்ட மக்கள் வியப்படைந்தார்கள்.

பரிசேயர்

மத்தேயு 23 : 1 – 7

யூதர்கள் மத்தியில் இன்னொரு சமயப்பிரிவினர், 'பரிசேயர்' ஆவர். இவர்கள் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். இவர்கள் சமயவிதிகள், வழக்கங்கள் இவற்றில் மிகவும் கண்டிப்பானவர்கள். இவர்களின் ஆடைகளில் நீளமான, நிறமுள்ள நூல்குஞ்சங்கள் இணைக்கப்பட்டிருக்கும். இவர்கள் திருமறையிலுள்ள வசனங்களைத் தங்கள் உடலில் கட்டிக்கொண்டு சுமந்துத்திரிவார்கள்.

இயேசு கூடியிருந்த மக்களிடத்திலும், தம்முடைய சீடர்களிடத்திலும் பேசினார். "சட்ட ஆசிரியர்களும், பரிசேயர்களும், மோசேயின், திருச்சட்டத்திலிருந்து உங்களுக்குக் கற்பிக்கிறார்கள். எனவே; அவர்களது போதனைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள். ஆனால், அவர்களுடைய வழிகளை நீங்கள் பின்பற்றக் கூடாது. அவர்கள் சொல்வது ஒன்றும், செய்வது வேறொன்றுமாயிருக்கும். அவர்கள் வெறும் விளம்பரம் விரும்பிகள். அவர்கள் தங்களது நெற்றிகளிலும், கைகளிலும் கட்டியிருக்கும் திருமறை வசனங்களைப் பாருங்கள். அவர்களது ஆடைகளிலிருந்து தொங்கும் நீளமான நூல் குஞ்சங்களைப் பாருங்கள்!

அவர்கள் விருந்து மண்டபங்களில் தங்களுக்குச் சிறப்பான இருக்கைகளைத் தேடுகிறார்கள். வழிபாட்டு இடங்களிலும் முதன்மையான இடத்தை நாடுகிறார்கள். மற்றவர்களுக்கு முன்னால் மக்கள் தங்களைப் புகழ்ந்து பேச வேண்டுமென்று இந்த பரிசேயர்கள் விரும்புகிறார்கள். தங்களை மற்றவர்கள் 'ரபி' 'ரபி' என்று அழைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

குருடரான வழிகாட்டிகள்

மத்தேயு 23 : 23 – 26

"பரிசேயர்களே! நீங்கள் போலியான ஆசிரியர்கள். உங்கள் கீரைத் தோட்டத்தின் பலன்களிலும்கூட பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாகப் படைக்கிறீர்கள். ஆனால் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது இல்லை; நீங்கள் குருடரான வழிகாட்டிகளாக இருக்கிறீர்கள். நீங்கள் மக்கள் செய்யும் சிறிய பிழைகளைக்கூட சுட்டிக் காட்டுகிறீர்கள். ஆனால், நீங்கள் மிகவும் துணிகரமான பாவங்களைச் செய்கிறீர்கள். உங்கள் கிண்ணங்கள் மற்றும் தட்டுகள் இவற்றின் வெளிப்பக்கத்தை மட்டும் தூய்மைப் படுத்துகிறீர்கள். ஆனால் நீங்கள் உள்ளத்தில் மிகவும் கெட்டவர்களாகவும், தன்னலம் உடையவர்களாவும் இருக்கிறீர்கள். குருடரான பரிசேயர்களே, உங்கள் உள்ளங்களை முதலில் தூய்மைப்படுத்துங்கள். அப்பொழுது உங்கள் வெளிப்படையான வாழ்வும் தூயதாகும்."

நிக்கோதேம்

யோவான் 3 : 1 – 17

சமயத்தலைவர்களில் நிக்கோதேம் வேறுபட்டவர். அவர் இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்பினார்.

'நிக்கோதேம்' என்னும் பெயர் கொண்ட ஒரு யூதத் தலைவர் இயேசுவிடம், "ஐயா, நீர் கடவுளிடமிருந்து வந்த ஒரு போதகர் என்று அறிவோம். எனவேதான், உம்மால் இப்படிப்பட்ட அருஞ்செயல்களைச் செய்ய முடிகிறது" என்றார்.

"இயேசு அவரிடம், "ஒருவர் மறுபடியும் பிறக்காவிட்டால், கடவுளின் புதிய உலகத்திற்குச் செல்ல முடியாது" என்றார்.

"வயதான ஒருவர் எப்படி மறுபடியும் பிறக்க முடியும்?" என்று நிக்கோதேம் கேட்டார்

"அவர் தன் தாயின் வயிற்றில் மறுபடியும் புகுந்து இரண்டாவது பிறப்பதென்பது முடியாத காரியம். ஒருவர் கடவுளின் ஆவியால் தூயவராக்கப்பட்டு, மறுபிறப்படைய வேண்டும். இல்லாவிடில் அவர் கடவுளின் புதிய உலகத்தில் செல்ல முடியாது" என்று இயேசு பதில் கூறினார். மேலும் அவர், "காற்று தங்கு தடையின்றி வீசுகிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறதென்றும், எங்கு போகிறதென்றும், உங்களுக்குத் தெரியாது. ஒருவன் கடவுளின் ஆவியால் மறுபிறப்பு அடைவதும் அப்படியே இருக்கும்" என்றார்.

"அது எப்படி ஆக முடியும்?" என்று நிக்கோதேம் கேட்டார்.

"நான் அறிந்ததையும், கண்டதையும், பற்றிப் பேசுகிறேன். ஆனால் நான் சொல்வதை யாரும் சிறிதும் விரும்பவில்லை. அப்படியிருக்கக் கடவுளைப்பற்றி நான் பேசுவதை நீங்கள் எப்படி நம்புவீர்கள்? இறைமகன் கடவுளிடத்தில் இருந்து இறங்கி வந்திருக்கிறார். அவர் மட்டுமே கடவுளைப் பற்றிப் பேச முடியும்" என்றார்.

"மோசே; பாலைவனத்தில் ஒரு வெண்கலப் பாம்பை ஒரு கம்பத்தில் உயர்த்தி நிறுத்தினார். அது போலவே, மனிதனாகப் பிறந்தவரும் உயர்த்தப்படுவார். அப்பொழுது அவரிடம் நம்பிக்கை கொள்ளுகிறவர்கள் அனைவரும் உண்மையான நித்திய வாழ்வை அடைவார்கள். கடவுள் இந்த உலக மக்களிடம் மிக அதிகமாக அன்பு கொண்டபடியினால், கடவுள் தம் மகனை, இவ்வுலகத்தைத் தண்டிப்பதற்காக அல்ல, மீட்பதற்காகவே அனுப்பினார்." என்றார்.

கடவுளால் நெறிபடுத்தப்பட்ட மக்கள்

இயேசுவும், சமாரியப் பெண்ணும்

யோவான் 4 : 1 – 26

யூதர்கள், சமாரியர்களை "தாழ்த்தப்பட்ட இன மக்கள்" என இழிவாக நினைத்தார்கள். அவர்கள் சமாரியா நாடு வழியாக நடப்பதைக் கூடத் தவிர்ப்பார்கள். பொது இடத்தில் சமய ஆசிரியர்கூட ஒரு பெண்ணிடம் பேசமாட்டார். ஆனால் இயேசு, அவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்.

இயேசு யூதேயாவை விட்டு மீண்டும் கலிலேயாவுக்குச் சென்றார். வழியில் அவர் சமாரியா வழியாக கடந்து செல்ல வேண்டியதிருந்தது. அங்கே 'சீகார்' எனப்படும் நகருக்கு வந்தார். யாக்கோபின் கிணறு அங்கே இருந்தது. இயேசு அதிகக் களைப்படைந்திருந்தார். அவர் அந்தக் கிணற்றருகில் உட்கார்ந்தார். அது நண்பகல் வேளையாயிருந்தது. அப்பொழுது ஒரு சமாரியப் பெண் தண்ணீர் எடுக்க வந்தாள். இயேசு அவளிடம், "எனக்குக் குடிப்பதற்கு தண்ணீர் கொடு" என்றார். (அந்நேரம் அவருடைய சீடர்கள், நகரத்திற்குள் உணவு வாங்கச் சென்றிருந்தார்கள்) அந்தப் பெண், "நீர் ஒரு யூதர். நானோ ஒரு சமாரியப் பெண். நீர் எப்படி என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்கலாம்?" என்று கேட்டாள். (சமாரியர்கள் பயன்படுத்தும் பாத்திரங்களை, யூதர்கள் பயன்படுத்தவே மாட்டார்கள்.)

இயேசு அந்தப் பெண்ணிடம், "நான் யார் என்று நீ அறிந்திருந்தால், நீயே என்னிடத்தில் குடிக்கத் தண்ணீர் கேட்டிருப்பாய். நான் உனக்கு நித்திய வாழ்வைத் தரும் தண்ணீரைத் தந்திருப்பேன்" என்றார்.

உடனே அந்தப் பெண், "ஐயா, உம்மிடத்தில் பாத்திரம் இல்லையே! கிணறும் ஆழமாய் இருக்கிறது. அப்படியிருக்க, நீர் எங்கிருந்து வாழ்வு தரும் தண்ணீரைப் பெற முடியும்? எங்கள் மூதாதையரான யாக்கோபு எங்களுக்கு இந்தக் கிணற்றைத் தந்தார். அவரும், அவருடைய பிள்ளைகளும், அவர்களது மந்தைகளும் இந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் குடித்தனர். நீர் யாக்கோபை விடப் பெரியவரோ?!" என்று கேட்டாள்.

இயேசு அவரிடம், "இந்த தண்ணீரைக் குடிப்பவர்களுக்கு மறுபடியும் தாகம் வரும். ஆனால், நான் தரும் தண்ணீரை ஒருவர் குடித்தால் அவருக்கு மறுபடியும் தாகம் வராது. நான் கொடுக்கும் தண்ணீர் ஒரு ஆற்றைப் போலப் பெருக்கெடுத்துவரும். அது அவருக்கு உண்மையும், நித்யமுமான வாழ்வைத்தரும்" என்றார்.

உடனே அந்தப் பெண், "ஐயா, எனக்கு அந்தத் தண்ணீரைத்தாரும். அப்பொழுது நான் மீண்டும் தாகமடையமாட்டேன். பின்னர் நான் ஒவ்வொரு முறையும் இங்கே தண்ணீர் எடுக்க வரவேண்டியது இராது" என்றாள்.

இயேசு அவளைப் பார்த்து, "நீ திரும்பிச் சென்று உன்னுடைய கணவனை அழைத்துவா" என்றார். அவள், "எனக்குக் கணவன் இல்லை" என்றாள். இயேசு, "நீ சொன்னது சரியே! நீ ஐந்து முறை திருமணம் செய்து கொண்டாய். இப்போது உன்னுடன் வாழ்வது, உனது உண்மையான கணவனல்ல" என்றார்.

இதைக் கேட்ட அந்தப் பெண் அதிர்ச்சியடைந்து, "நீர் ஒரு கடவுளுடைய மனிதர் என்று அறிகிறேன். என்னுடைய மூதாதையர்களான சமாரியர்கள் இந்த மலையின் மேல் கடவுளை வழிபட்டார்கள்.

ஆனால்; யூதர்களாகிய நீங்கள், 'நாம் கடவுளை வழிபடவேண்டிய இடம் எருசலேம்தான்' என்று சொல்லுகிறீர்கள்'' என்றாள்.

இயேசு அவளிடம், ''நான் சொல்வதைக் கவனி. தந்தையாம் கடவுளை மக்கள் இந்த மலையின் மீதோ, எருசலேமிலோ மட்டுமல்ல எங்கும் தொழுது கொள்ளும் காலம்வரும். சமாரியர்களாகிய நீங்கள் உண்மையிலேயே யாரை வழிபடுகிறீர்கள் என்று அறியாதவர்கள். ஆனால், யூத மக்களாகிய நாங்கள் யாரை வழிபடுகிறோம் என்று அறிந்திருக்கிறோம். கடவுள் யூதர்களுக்கு ஒரு மீட்பரை அனுப்புவதாக வாக்குறுதி செய்திருந்தார். ஆனால் இப்போதோ, கடவுள் தாம் விரும்பும் விதத்தில் நம்மை வழிபடுவதற்கு மக்களுக்கு உரிமை கொடுத்திருக்கிறார். ஏனெனில் கடவுள் ஆவியாயிருக்கிறார். மக்கள் உண்மையான ஆன்மீக உணர்வோடு அவரை வழிபட வேண்டும்'' என்றார்.

அந்தப் பெண், ''மீட்பர் விரைவில் வரப் போகிறார் என்று அறிவேன். அவர் வந்து எல்லாவற்றையும் நமக்குத் தெரிவிப்பார் என்றாள்.

இயேசு, ''அந்த மீட்பர் நானே. அந்த மீட்பர்தான் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

இயேசுவும், பாவியாகிய பெண்ணும்

யோவான் 8 : 2 – 11

மோசேயின் கட்டளைகளை மீறுபவர்கள் மீது ரபிகள் மிகக் கடினமான தீர்ப்பளிப்பார்கள். இந்த வரலாற்றில், சமய ஆசிரியர்கள் இயேசுவை சோதிக்க விரும்பினார்கள்.

ஒரு நாள் விடியற்காலையில் இயேசு ஆலயத்திற்குச் சென்றார். மக்கள் அவரைச் சுற்றிலும் வந்து கூடினார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார். அப்பொழுது சமய ஆசிரியர்களும், பரிசேயர்களும் ஒரு பாவியாகிய பெண்ணை அவரிடம் கொண்டு வந்தார்கள். அவளைக் கூட்டத்தின் முன் நிற்கச் செய்தார்கள். இயேசுவிடம், ''போதகரே, இவள் ஒரு ஒழுக்கம் கெட்ட செயலைச் செய்து கொண்டிருக்கும் போது நாங்கள் கண்டுபிடித்தோம். மோசேயின் கட்டளைப்படி, 'இப்படிப்பட்ட பெண் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்' நீர் என்ன சொல்லுகிறீர் ?'' என்று கேட்டார்கள். இயேசுவிடம் குற்றம் கண்டுபிடிக்கும்படி இதைச் சொன்னார்கள். இயேசுவோ, கீழே குனிந்து, தன்னுடைய விரலால் தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.

பின்னர் அவர் நிமிர்ந்து பார்த்து, ''உங்களுள் எவனாவது ஒரு போதும் பாவம் செய்யாதவன் இருந்தால், அவன் இவள் மேல் முதல் கல்லை எறியக்கடவன்'' என்றார். மறுபடியும் கீழே குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார். இதைக் கேட்டதும் அவர்கள் ஒவ்வொருவராக அவ்விடம் விட்டு அகன்று போய்விட்டார்கள். இயேசுவின் முன்பாக அந்தப் பெண்மட்டும் இன்னும் நின்று கொண்டிருந்தாள். இயேசு நிமிர்ந்து பார்த்து அவளிடம், ''அவர்கள் எங்கே ? ஒருவன்கூட உன்னைத் தண்டிக்க இங்கே இல்லையா ?'' என்று கேட்டார். அவள், ''ஒருவரும் இல்லை ஐயா'' என்றாள். இயேசு அவளிடம், ''நல்லது. அப்படியானால் நானும் உன்னைத் தண்டிக்க மாட்டேன். நீ போ. ஆனால் மறுபடியும் பாவம் செய்யாதே'' என்றார்.



கடவுள் பார்வையில் முறையானது எது?

மனிதரைத் தீட்டுப்படுத்துபவை

மாற்கு 7 : 14 – 23

உண்ணும்போது கைகளையும், பாத்திரங்களையும் எப்படித் தூய்மைப்படுத்த வேண்டும் என்பதில் பரிசேயர்கள் கண்டிப்பாக இருந்தனர். ஆனால் தங்கள் உள்ளம் எவ்வளவு தூய்மையற்றது என்பது பற்றி எப்போதுமே கவலைப்பட்டதில்லை.

இயேசு மக்கள் கூட்டத்தைத் தம்மிடம் அழைத்தார். "நீங்கள் யாவரும் நான் சொல்வதை நன்றாகக் கவனித்துப் புரிந்துகொள்ளுங்கள். ஒரு மனிதனின் உடலுக்குள்ளே செல்லும் எதுவும் அவனுக்குத் தூய்மைக்கேடு உருவாக்குவது இல்லை. அவனிடமிருந்து வெளிவருகின்றவைகளே அவனுக்குத் தூய்மைக் கேடு உருவாக்கும்" என்றார்.

சீடர்கள் அவர் கூறியதன் கருத்தை விளக்கும்படி வேண்டினார்கள். இயேசு அவர்களிடம், "நீங்களும் மற்றவர்களைப் போல மந்த புத்தியுள்ளவர்களே! நான் சொன்னது உங்களுக்குப் புரியவில்லையா? நீங்கள் சாப்பிடுகிற எதுவும் உண்மையிலேயே உங்களுக்குத் தூய்மைக் கேடு தருவதில்லை. அது உங்கள் உள்ளத்துக்குள் செல்வதில்லை. அது நேராக வயிற்றினுள் செல்கிறது." என்றார். (இதைச் சொல்லியதன் மூலம் 'எல்லா உணவுகளும் நல்லவையே' என்று இயேசு குறிப்பிட்டார்)

மேலும் அவர், "தீய சிந்தனைகளே உங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. எனவே மக்கள் திருடு, பொய், ஏமாற்று, கொலை போன்ற தரம் கெட்ட நடத்தைகளில் ஈடுபடுகிறார்கள். பிறர் பொருளுக்கு ஆசைப்படுகிறார்கள். கண்ணிய மற்றவர்களும் ஒழுக்கம் கெட்டவர்களுமாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய உள்ளங்களும் தீயவைகளாக இருக்கும். அவர்களே தூய்மையற்றவர்கள்" என்றார்.

வரி செலுத்த வேண்டுமா?

மாற்கு 12 : 13 – 17

"தங்களுடைய நாடு கடவுளுக்குச் சொந்தமானது" என்று யூதர்கள் நம்பினார்கள். எனவே, ரோம அரசர்களுக்குத் தாங்கள் வரிசெலுத்த வேண்டுமென்று அவர்கள் நினைக்கவில்லை. வரி செலுத்தாதவர்களை ரோமர்கள் கடுமையாகத் தண்டித்தார்கள்.

ரோம நாட்டுக்கு எதிராகவோ, யூதர்களுக்கெதிராகவோ இயேசுவை ஏதாவது பேசவைத்து விட வேண்டும் என்று, இயேசுவின் எதிரிகள் அதற்கான சந்தர்பத்தை எதிர்பார்த்து, காத்திருந்தார்கள்.

ஏரோதின் கட்சியைச் சேர்ந்த சிலரும், சில பரிசேயர்களும் இயேசுவிடம் வந்தார்கள். அவர்கள், "போதகரே, நீர் எப்போதும் உண்மையையே பேசுபவர் என்று நாங்கள் அறிவோம். மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி நீர் கவலைப்படாதவர். மக்கள் என்ன அறியவேண்டும்? என்று உண்மையிலேயே கடவுள் விரும்புகிறாரோ அதையே நீர் அவர்களுக்குப் போதிக்கிறவர். எனவே, ரோம அரசர்களுக்கு வரி செலத்துவது நியாயமா? என்று நீர் எங்களுக்குச் சொல்லும்" என்று கேட்டார்கள்.

அவர்கள் நேர்மையானவர்கள் அல்ல என்று இயேசு அறிந்திருந்தார். எனவே அவர், "நீங்கள் என்னை ஏன் குற்றத்தில் சிக்கவைக்க முயற்சிக்கிறீர்கள்? ஒரு வெள்ளி நாணயத்தை கொண்டு வாருங்கள்" என்றார். அவர்கள் ஒரு நாணயத்தை அவரிடம் கொண்டு வந்தார்கள். அவர் அதைக் காட்டி, "யாருடைய உருவமும் பெயரும் இதில் இருக்கின்றன?" என்று கேட்டார். அவர்கள் "அவை சீசர் அரசருடையவை" என்றார்கள். எனவே இயேசு, "சீசர் அரசருக்குச் செலுத்த வேண்டியதை அவரக்குச் செலுத்துங்கள். கடவுளுக்குச் செலுத்த வேண்டியதைக் கடவுளுக்குச் செலுத்துங்கள்" என்றார்.

இயேசுவின் இந்தப் பதிலைக் கேட்டு அவர்கள் வியப்புற்றார்கள்.

ஓய்வு நாளில் செய்ய வேண்டியவை

லூக்கா 13 : 10 – 17

யூதர்களின் சட்டம் மிகவும் கண்டிப்பானது. "ஓய்வு நாட்களில் சில குறிப்பிட்ட செயல்கள் மட்டுமே செய்யப்படலாம்" என்று அது அனுமதித்தது.

ஒரு ஓய்வுநாளில் இயேசு யூதர்களின் ஆராதனைக் கூடத்தில் கற்பித்துக் கொண்டிருந்தார். அங்கிருந்த ஒரு பெண்ணை ஒரு அசுத்தஆவி பிடித்திருந்தது. அவளது முதுகு வளைந்து, நிமிரமுடியாதபடி கூனாக இருந்தது. இயேசு அவளைக் கண்டார்; தன்னருகே அழைத்தார்; அவர் அவளைத் தொட்டு, "உன் துன்பம் நீங்கியது" என்றார். உடனே அவள் நிமிர்ந்து, நேராக நின்று கடவுளைப் போற்றினாள். இதைக் கண்ட ஆராதனைக்கூடத்தின் தலைவர், ஓய்வு நாளில் இயேசு அவளைக் குணமாக்கியது கண்டு கோபப்பட்டார். எனவே அவர் மக்களிடம், "நாம் நம்முடைய வேலைகளைச் செய்வதற்கு ஆறு நாட்கள் இருக்கின்றன. அந்த நாட்களில் வந்து நலம் பெறுங்கள். ஓய்வு நாளில் நலம் பெறுவதற்காக வர வேண்டாம்" என்றார்.

அதற்கு இயேசு, "போலிப் போதகர்களே, நீங்கள் ஓய்வு நாளில் உங்கள் மாட்டையாவது, கழுதையையாவது அவிழ்த்துத் தண்ணீர் காட்டுவதில்லையா? சாத்தான் இவளைப் பதினெட்டு வருடங்களாகத் துன்புறுத்தி இருக்கிறான். நான் ஓய்வு நாளில் இவளை விடுதலைச் செய்யக் கூடாதா?" என்று கேட்டார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இயேசுவின் எதிரிகள் மிகவும் வெட்கப்பட்டார்கள். ஆனால், மக்கள் அனைவரும் இயேசு செய்த எல்லா அருஞ்செயல்களுக்காகவும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

சிலுவையை நோக்கி வழிநடத்துதல்

விந்தையான வெளிப்பாடுகள்

இயேசு யாரென்று பேதுரு உணருதல்

மாற்கு 8 : 27 – 30

"உண்மையில் இயேசு யார்?" என்று ஏராளமான மக்கள் எண்ணி வியந்து கொண்டிருந்தார்கள். தான் யார் என்பதைப் பற்றித் தம் சீடர்களும் சிந்திக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

இயேசுவும், அவருடைய சீடர்களும் செசரியாவைச் சேர்ந்த பிலிப்பி நகரத்துக்கருகில் உள்ள சிற்றூர்களுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். "மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?" என்று இயேசு தம் சீடர்களிடம் கேட்டார். அதற்கு அவர்கள், "சிலர் உம்மை 'திருமுழுக்குநர் யோவான்' என்று கூறுகிறார்கள்" என்றனர். "எலியா" என்று வேறு சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிலர் "இறைவாக்கினருள் ஒருவர் என்று சொல்லுகிறார்கள்" என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். பேதுரு "நீரே மீட்பர்" என்று கூறினார். இதைக் கேட்டதும் இயேசு, "என்னைப் பற்றி யாரிடமும் கூறவேண்டாம்" என்று கட்டளையிட்டார்.

இயேசு துன்புற்று இறப்பார்

மாற்கு 8 : 31 – 38

திரளான மக்கள் இயேசுவுக்குப் பின் சென்றிருந்தார்கள். அவருக்கு மிகவும் அன்பான சீடர்கள் மட்டும் அவர்கள் எதிர்பார்த்திருந்த 'மீட்பர்' இயேசுவே என்று நம்பினார்கள். ஆனால், அவர் செய்த பல செயல்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ரோமரின் ஆட்சிக்கு முடிவுகட்டி இஸ்ரயேலரை விடுதலைச் செய்வார் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்தார்கள். எனவே அவர் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்படப் போவதாக இயேசு கூறியதும் அவருடைய சீடர்கள் வியப்படைந்தார்கள்.

"மனிதனாகப் பிறந்த நான் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டும். மூப்பர்களாலும், முதன்மைக் குருக்களாலும் கைவிடப்பட வேண்டும். சமய ஆசிரியர்கள் எனக்கு எதிராக எழும்பி, என்னைக் கொலை செய்ய ஒப்புவிப்பார்கள். ஆனால் மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்துவிடுவேன்" என்று இயேசு சீடர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

இதைக்கேட்ட பேதுரு இயேசுவைத் தனியே அழைத்துச் சென்று அவரைக் கண்டித்தார். இயேசு துன்பங்கள் அனுபவிப்பதையும், இறப்பதையும் அவர் விரும்பவில்லை. இயேசு பேதுருவைப் பார்த்துக் கடிந்து கொண்டு, "என்னைவிட்டு அகன்று போ சாத்தானே; நீ மனிதர்களைப்போலச் சிந்திக்கிறாய். கடவுளுக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கவில்லை" என்றார்.

பின்னர் இயேசு மக்களிடம், "ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்ற வேண்டும். ஒருவன் தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பினால், அதை அவன் இழந்துவிடுவான். ஒருவன் எனக்காகவும், கடவுளின் நற்செய்திக்காகவும், தன் உயிரை இழந்தால், அதை அவன் காத்துக் கொள்ளுவான். ஒருவன் இந்த உலகம் முழுவதையும் பெற்றுக் கொண்டாலும், தன் வாழ்வை இழந்துவிட்டால் அவனுக்கு லாபம் என்ன? தன் உயிரைத் திரும்பப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக செலுத்துவதற்கு அவனிடம் ஒன்றுமில்லை. என்னுடைய நற்செய்தியைப் பாவிகளான மக்களுக்கு எடுத்துச் சொல்ல நீங்கள் வெட்கப்பட்டால் நான் மீண்டும் வரும்போது உங்களைக் குறித்தும் வெட்கப்படுவேன். என் தந்தையாம் கடவுளின் முழு அதிகாரத்தோடும், அவருடைய தூதர்களோடும் நான் மறுபடியும் வருவேன்." எனறார்.



வியக்க வைக்கும் காட்சி

மாற்கு 9 : 2 – 10

ஒரு வாரத்துக்குப் பிறகு, பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோருடன் இயேசு ஒரு உயர்ந்த மலைக்குச் சென்றார். அவர்களோடு வேறு யாரும் இருக்கவில்லை. அங்கே அவர்கள் இயேசுவைப் பார்க்கும் போது, அவரிடம் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அவருடைய ஆடைகள் ஒளிமயமான, தூய வெண்மையாய் மாறின. அவருடன் மோசேயும், எலியாவும் உரையாடிக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவிடம், "ஐயா, இங்கே நாம் மட்டும் இருப்பது எவ்வளவு சிறப்பாயிருக்கிறத! நாம் இங்கே மூன்று கூடாரங்களை அமைப்போம். அவற்றில் ஒன்று உமக்கும், ஒன்று மோசேக்கும், ஒன்று எலியாவுக்கும் இருக்கட்டும்'' என்றார். பேதுருவும், மற்றவர்களும் இந்தக் காட்சியைக் கண்டு மலைப்படைந்திருந்தபடியால், பேதுருவுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை.

பின்னர் ஒரு மேகம் வந்து அவர்களை மூடியது. "இவர் என் அன்பு மகன். இவருக்குச் செவிசாயுங்கள்'' என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது சீடர்கள் சுற்றிலும் பார்த்தார்கள். இயேசு மட்டும் அவர்களோடிருந்தார்.

அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தபோது, இயேசு அவர்களிடம், "நீங்கள் கண்ட காட்சியைப் பற்றி ஒருவரிடமும் கூறவேண்டாம். மனிதனாகப் பிறந்துள்ள நான் இறந்து, பின் உயிர்த்தெழும் வரை நீங்கள் காத்திருங்கள்'' என்றார்.

அவர் சொன்னவற்றுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்கள். ஆனாலும், "இறந்தபின் உயிர்த்தெழுதல்'' என்றால் என்ன? என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

பெருமையும், தாழ்மையும்

பெரியவன் யார்?

மாற்கு 9 : 33 – 37

அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்து வீட்டில் சேர்ந்தனர். அப்போது இயேசு தமது சீடர்களிடம் "நீங்கள் வழியிலே என்ன பேசிக் கொண்டு வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

அவர்கள் அமைதியாக இருந்தார்கள். வழியில் "தங்களுக்குள் யார் பெரியவன்?'' என்று வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். இயேசு உட்கார்ந்து அவர்களிடம், "உங்களில் ஒருவன் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் தாழ்மை உடையவனாகவும், எல்லாருக்கும் பணிவிடை செய்கிறவனாகவும் இருக்க வேண்டும்'' என்றார். பின்னர் அவர் ஒரு குழந்தையைத் தன்னுடைய கைகளினால் அணைத்துக் கொண்டு, "என்னுடைய பெயரால் இந்தக் குழந்தைகளில் ஒன்றை ஏற்றுக் கொள்ளுகிறவன், என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன், என்னை அனுப்பியவராகிய என் தந்தையையும் ஏற்றுக் கொள்ளுகிறான்'' என்றார்.

இயேசுவைச் சார்ந்தவர் யார்?

மாற்கு 9 : 38 – 41

"போதகரே, உம்முடைய பெயரால் ஒருவன் அசுத்த ஆவிகளைத் துரத்திக் கொண்டிருக்கிறதைக் கண்டோம். ஆனால் அவன் நம்மைச் சேர்ந்வன் அல்லாதபடியால் அவன் செய்வதை நிறுத்தும்படி கூறினோம்." என்று யோவான் இயேசுவிடம் கூறினார்.

இயேசு அவரிடத்தில், "அப்படிச் செய்யாதே ஏனெனில் என் பெயரால் அருஞ்செயல்களைச் செய்யும் எவரும் அத்துணை எளிதில் எனக்கு எதிராகச் செயல்படமாட்டார்கள். நமக்கு எதிராக இல்லாதவர் நம்மைச் சார்ந்தவராய் இருக்கிறார். நீங்கள் என்னைச் சார்ந்தவர்களாயிருப்பதினால் உங்களுக்குக் குடிக்க ஒருவன் தண்ணீர் கொடுத்தால் அவனுக்குக் கடவுள் ஆசி வழங்குவார் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

கடவுளின் ஆசியை யார் பெற முடியும்?

மாற்கு 10 : 13 – 16

குழந்தைகளுக்கு ஆசி வழங்கவேண்டும் என்று அவர்களை, சிலர் இயேசுவிடம் கொண்டுவந்தார்கள். ஆனால் அவர்களை அருகில் வரவிடாமல் சீடர்கள் தடுத்தார்கள். இயேசு இதைக் கண்டார். அவர் மனம் வருந்தினார். தன் சீடர்களிடம், "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடை செய்யாதீர்கள். அவர்கள் கடவுளின் வழிகளை ஏற்றுக் கொள்ள முடியும். கடவுளின் வழிகளைச் சிறு குழந்தைகளைப் போல் ஏற்றுக்கொள்ளாதவர் எவரும் கடவுளுக்குச் சொந்தமானவரல்ல என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். பின்னர் சிறு குழந்தைகளை அவர் அணைத்துக் கொண்டு தன் கைகளை ஒவ்வொருவர் மேலும் வைத்து அவர்களுக்கு ஆசி வழங்கினார்.

துன்புற நீ ஆயத்தமா?

மாற்கு 10 : 35 – 45

யாக்கோபும் யோவானும் இயேசுவிடம் வந்தார்கள். "போதகரே, நீர் எங்களுக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள்.

"என்ன?" என்று இயேசு அவர்களிடம் கேட்டார்.

"ஒருநாள் நீர் உமது மகிமையின் அரியணையில் பெரிய அரசராக வீற்றிருப்பீர். அப்பொழுது உம்முடைய வலது பக்கத்தில், ஒருவனும், இடது பக்கத்தில் ஒருவனுமாக

நாங்கள் இருக்க, எங்களுக்கு அனுமதி தாவேண்டும்'' என்று கேட்டார்கள்.

"நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லை. நான் படவேண்டிய துன்பங்களை அனுபவிக்க நீங்கள் ஆயத்தமா?'' என்று இயேசு அவர்களிடம் கேட்டார்.

"நாங்கள் ஆயத்தம்'' என்று அவர்கள் கூறினார்கள்.

"ஆம். நான் படவேண்டிய துன்பங்களை நீங்களும் அனுபவிப்பீர்கள். ஆனால் எவருக்கும் தனி இடத்தை ஒதுக்கிக் கொடுக்க என்னால் முடியாது. என் தந்தையாகிய கடவுள் ஒவ்வொருவருக்கும் உரிய இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பார்'' என்று இயேசு அவர்களிடம் கூறினார்.

மற்ற சீடர்கள் இதைக் கேள்விப்பட்டு யாக்கோபு, யோவான் ஆகியோர் மீது கோபங்கொண்டார்கள். எனவே இயேசு அவர்களை அழைத்து, "உலகிலுள்ள அரசர்களும், தலைவர்களும் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். ஆனால் உங்களைப் பொறுத்தவரை, அது வேறு விதமாயிருக்க வேண்டும். உங்களுள் ஒருவன் பெரியவானயிருக்க விரும்பினால், அவன் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். ஏனெனில் மனிதனாய்ப் பிறந்த நானும், இந்த உலகில் மற்றவர்களின் பணிவிடைகளை ஏற்றுக் கொள்ள வரவில்லை. மக்களை மீட்பதற்காக என் உயிரைக் கொடுக்கவே வந்தேன்'' என்றார்.

மரணம் வாழ்க்கையின் முடிவல்ல

இயேசுவின் உயிருக்கு ஆபத்து

லூக்கா 13 : 31 –35

சில பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, "அரசனாகிய ஏரோது உம்மைக் கொலை செய்ய நினைக்கிறான். எனவே நீர் இங்கிருந்து போய்விட வேண்டும்'' என்று கூறினார்கள்.

அதற்கு இயேசு, "நான் இன்னும் சிறிது காலம் மட்டுமே இங்கிருப்பேன். அசுத்த ஆவிகளைத் துரத்துதல், நோய்களைக்

குணமாக்குதல் போன்ற பணிகளை விரைவில் முடித்துவிடுவேன். இறைவாக்கினர்களுக்கு முன்பு செய்யப்பட்டது போல, என்னுடைய பணிகளைச் செய்து கொண்டிருக்கும் போதே நான் எருசலேமில் கொல்லப்படுவேன் என்று அந்தக் கொலையாளிக்குப் போய்ச் சொல்லுங்கள்'' என்றார்.

“ஓ! எருசலேமே! நீ இறைவாக்கினர்களைக் கொலை செய்கிறாய்!. கடவுளின் தூதுவர்களைக் கல்லெறிந்து கொல்லுகிறாய்! நான் எவ்வளவாய் உன்னைச் சேர்த்துக் கொள்ள விரும்பினேன்! கோழி, தன் குஞ்சுகளைத் தன் இறக்கைகளில் கீழ் சேர்த்து அணைத்துக் கொள்வது போல நான் என் கைகளால் உன்னை அணைத்துக் கொள்ள விரும்பினேன். ஆனால் நீ அதற்கு இடம் தரவில்லை. எனவே, உன்னுடைய ஆலயம் அழிக்கப்படும். என்னை நீ, “கடவுள் அனுப்பிய மீட்பர்'' என்று ஏற்றுக்கொள்ளும் வரை காணப்போவதில்லை'' என்றார்.

லாசர் இறத்தல்

யோவான் 11 : 1 – 16

பெத்தானியாவில் உள்ள மார்த்தா, மரியா அவர்களது உடன்பிறந்த லாசர் ஆகியோரிடம் இயேசு அன்பு கொண்டிருந்தார். அந்தச் சகோதரிகள் இயேசுவுக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள். லாசரு உடல்நலமின்றி இருக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட பின்னரும், மேலும் இரண்டு நாட்கள் தாம் இருந்த இடத்திலேயே தங்கிவிட்டார். “இந்த நோய்; தந்தையாகிய கடவுளுக்கும், அவரது மைந்தனுக்கும் மாட்சியைக் கொண்டுவரும். லாசர் உயிரிழக்கமாட்டான்'' என்றார். பின்னர் தம் சீடர்களிடம், “யூதேயாவுக்குச் செல்வோம்'' என்றார்.

அதற்கு அவருடைய சீடர்கள், “ஐயா, அன்றொரு நாள், அங்குள்ள மக்கள் உம்மைக் கல்லெறியப் பார்த்தார்களே. நீர் மறுபடியும் அங்கே போகப் போகிறீரா ?'' என்று கேட்டார்கள்.

அதற்கு இயேசு, “பகலில் நடக்கிறவனுக்கு வெளிச்சம் இருக்கிறபடியால் விழுவதில்லை. ஆனால் இரவில் நடப்பவனுக்கு ஒளி இல்லாதபடியால் விழுந்துவிடுவான்'' என்றார். மேலும் இயேசு தம் சீடர்களிடம் “நம் லாசரு தூங்கிக் கொண்டிருக்கிறான். நான் போய் அவனை எழுப்புவேன்'' என்றார்.

அவருடைய சீடர்கள், “ஐயா, அவன் தூங்கிக் கொண்டிருந்தால் அவன் உறுதியாக எழுந்திருப்பான்'' என்றார்கள். இயேசு லாசர் இறந்துவிட்டது பற்றிப் பேசினார். ஆனால் சீடர்கள் அவன் தூங்கிக்கொண்டிருப்பதாக நினைத்தார்கள்.

இயேசு நித்திய வாழ்வைப் பற்றிய வாக்குறுதி அளித்தல்

யோவான் 11 : 17 – 27

இயேசு பெத்தானியா வந்து சேர்ந்தபோது, லாசர் நான்கு நாட்களுக்கு முன்னரே இறந்து, அடக்கம் செய்யப்பட்டுவிட்டதாக அறிந்தார். எருசலேமிலிருந்து பல யூதர்கள் மார்த்தாளுக்கும், மரியாவுக்கும் ஆறுதல் சொல்ல வந்திருந்தார்கள்.

இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று மார்த்தா கேள்விப்பட்டதும், அவள் வீட்டிலிருந்து அவரைச் சந்திக்க வெளியே ஓடினாள். ஆனால் மரியா வீட்டில் தங்கியிருந்தாள். மார்த்தா இயேசுவைக் கண்டதும், “ஐயா, நீர் இங்கே இருந்திருந்தால் என்னுடைய உடன் பிறந்தவன் இறந்திருக்க மாட்டானே! ஆனால் இப்போதும் உம் தந்தையிடத்தில் நீர் கேட்பது எதுவோ, அதைக் கடவுள் அருளிச் செய்வார் என்று அறிவேன்'' என்றாள். இயேசு அவளிடம், “உன் உடன் பிறந்தவன் மறுபடியும் உயிர் பிழைத்துவிடுவான்'' என்றார். அதற்கு மார்த்தா, “அவன் இறுதி நாளில் உயிரோடு எழுந்திருப்பான் என்பதை நான் அறிவேன்'' என்றாள்.

இயேசு அவளைப் பார்த்து, “இறந்தவர்களுக்கு உயிர் கொடுக்கிறவர் நானே! என்மீது பற்றுறுதி கொள்கிறவன் இறந்தாலும் உயிர்பிழைப்பான். நீ இதை நம்புகிறாயா ?'' என்று கேட்டார்.

அவள், “ஆம் ஆண்டவரே! நம்புகிறேன். நீரே கடவுளுடைய மைந்தன் என்றும் நம்புகிறேன்'' என்றாள்.



இயேசு அழுதல்

யோவான் 11 : 28 - 37

பின்னர் மார்த்தா வீட்டுக்குத் திரும்பிச் சென்று மரியாவிடம் அமைதியாகப் பேசினாள். "போதகர் வந்திருக்கிறார். அவர் உன்னைப் பார்க்க விரும்புகிறார்" என்றாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மரியா அவரைச் சந்திக்க வேகமாக வெளியேறிச் சென்றாள். இயேசு அதுவரை அந்தச் சிற்றூருக்கு வெளியே மார்த்தா சந்தித்துப் பேசிய இடத்திலேயே இருந்தார். வீட்டிற்கு வந்திருந்தவர்கள் மரியா கல்லறைக்கு அழுவதற்காக ஓடுகிறாள் என்று நினைத்து, அவளுக்குப் பின் சென்றார்கள்.

மரியா இயேசுவிடம் வந்து, அவருடைய காலடிகளில் விழுந்தாள். "ஐயா, நீர் இங்கே இருந்திருந்தால் என்னுடைய உடன் பிறந்தவன் இறந்திருக்க மாட்டானே" என்று அழுதாள். மரியாவும், மற்றவர்களும் அழுவதைக் கண்ட இயேசு மிகவும் மனம் கலங்கினார். "அவனை எங்கே அடக்கம் செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஐயா, வந்து பாரும்" என்று அழைத்தார்கள். இயேசு கண்ணீர் விட்டார்! இதைக் கண்ட மக்கள், "இவர் அவனிடம் எத்துணை அன்பு கொண்டிருந்தார்!" என்று கூறினார்கள். ஆனால் சிலர், "இவர் பார்வையற்றவனைப் பார்வை பெறச் செய்தார்; லாசருவை உயிருடன் எழும்ப செய்ய முடியாதா?" என்று கேட்டார்கள்.

லாசருவே வெளியே வா!

யோவான் 11 : 38 - 44

இயேசு மிகுந்த மனவேதனையுடன் கல்லறைக்குச் சென்றார். அது ஒரு குகை. ஒரு பெரிய கல் அதன் வாசலை மூடியிருந்தது. "அந்தக் கல்லை அப்புறப்படுத்துங்கள்" என்று இயேசு சொன்னார்.

மார்த்தா இயேசுவிடம், "ஐயா, அவனை அடக்கம் செய்து நான்கு நாட்கள் ஆயிற்றே. அங்கே துர்நாற்றம் வீசுமே!" என்றாள்.

இயேசு அவளிடம், "நம்பிக்கை உடையவளாயிரு. கடவுள் எத்துணைப் பெரியவர் என்று கண்டு கொள்வாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா?" என்றார். பின்னர் மக்கள் அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளினார்கள். இயேசு அண்ணாந்து பார்த்து, "என் தந்தையே! நீர் எனக்குச் செவிசாய்த்ததற்காக நான் உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்ப்பீர் என்று அறிவேன். இங்கே இருக்கிற மக்கள், நான் உம்மால் அனுப்பப்பட்டவன் என்பதை நம்ப வேண்டும்" என்றார். பின்னர் உரத்த குரலில், "லாசருவே வெளியே வா" என்றார்.

லாசரு கல்லறையிலிருந்து தனது சடலத்தைச் சுற்றிக் கட்டிய துணியுடன் எழுந்து வந்தான். அவனுடைய கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன. அவனுடைய முகத்தையும் ஒரு துணி மூடியிருந்தது.

இயேசு, "அவனது கட்டுகளை அவிழ்த்து விடுங்கள் அவன் போகட்டும்" என்றார்.

இயேசுவை கொலை செய்யத் திட்டம்

யோவான் 11 : 45 – 54

மரியாளைப் பார்க்க வந்தவர்கள் இந்த அருஞ்செயலைக் கண்டு, இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டார்கள். ஆனால் அவர்களில் சிலர் நேராகப் பரிசேயர்களிடம் சென்று நடந்த எல்லாவற்றையும் தெரிவித்தார்கள். எனவே பரிசேயர்களும், முதன்மை குருக்களும், யூத சங்கத்தாரைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் "நாம் என்ன செய்யலாம்? இந்த மனிதன் செய்து கொண்டிருக்கும் எல்லா அருஞ் செயல்களையும் பாருங்கள்! அவனை இப்படியே போகவிட்டால், ஒவ்வொருவரும் இவன் மீது நம்பிக்கை கொள்வார்கள். பின்னர் ரோமர்கள் வந்து நம் மக்களையும், நமது ஆலயத்தையும் அழித்துவிடுவது நிச்சயம்" என்றார்கள்.

அந்த ஆண்டின் தலைமை குருவான காய்பா, "நீங்கள் கொஞ்சமும் புத்தி இல்லாதவர்களாயிருக்கிறீர்கள்! உங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு நாட்டின் மக்கள் அனைவரும் இறப்பதை விட அனைத்து மக்களுக்காகவும் ஒருவன் இறப்பது நல்லதல்லவா?" என்று சொன்னார். தலைமை குரு என்ற முறையில் அவர் கடவுளின் உண்மையைப் பேசினார். "யூதமக்கள் அனைவருக்குமாக 'இயேசு' இறக்கப் போகிறார். உண்மையில் அவருடைய இறப்பு எல்லா இடங்களிலும் வாழும் கடவுளின் மக்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்த்துவிடும்."

அந்தநாள் முதல் யூததலைவர்கள் இயேசுவைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். எனவே இயேசு, மறைவாகப் பாலை நிலத்துக்கு அருகிலுள்ள ஒரு இடத்துக்குச் சென்று, அங்கே தமது சீடர்களுடன் தங்கியிருந்தார்.

இறுதிப் பயணம்

இயேசு தனது இறப்பு பற்றி மீண்டும் பேசுதல்

லூக்கா 18 : 31 – 34

இயேசு தம் சீடர்கள் பன்னிருவரையும் தம்மிடம் அழைத்து, "கவனியுங்கள். நாம் இப்பொழுது எருசலேமுக்குப் போகிறோம். இறைமகன் குறித்து இறைவாக்கினரால் உரைக்கப்பட்ட யாவும் நடந்தேறும். நம் மக்கள் அவரை ரோமர்களிடம் ஒப்படைப்பார்கள். அவர்கள் அவரைத் துன்புறுத்தி, சவுக்கினால் அடித்து, கொலை செய்வார்கள். ஆனால் மூன்றாம்நாள் அவர் உயிர்பெற்று எழுந்து விடுவார்" என்று கூறினார்.

ஆனால் சீடர்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லை. இயேசு கூறியவற்றின் பொருள் அவர்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது.

எருசலேமில் இயேசு பெற்ற வரவேற்பு

மாற்கு 11 : 1 – 11

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இறைவாக்கினர் சகரியா, கடவுளிடமிருந்து வரப்போகும் மீட்பரைப் பற்றிச் சொல்லியிருந்தார். அவர் ஒரு கழுதையின் மேல் ஏறிவருவார். அது அமைதிக்கு அடையாளம்.

இயேசு இந்த உலகு சார்ந்த ஒரு அரசை அமைக்கப் போவதாக மக்கள் எதிர்பார்த்தார்கள். அதை அவர் விரும்பவில்லை.

இயேசுவும், அவருடைய சீடர்களும் எருசலேமுக்கு அருகில் இருந்தார்கள். ஒலிவ மலையின் அடிவாரத்தில் உள்ள பெத்பகு, பெத்தானியா என்னும் நகரங்களுக்கருகில் அவர்கள் இருந்தார்கள். இயேசு தம் சீடர்களில் இரண்டு பேரை அழைத்து, "நீங்கள் எதிரே இருக்கும் சிற்றூருக்குச் செல்லுங்கள். நீங்கள் அங்கே போனதும் ஒரு கழுதைக்குட்டி கட்டியிருப்பதைக் காண்பீர்கள். அதன்மீது இதுவரை ஒருவரும் பயணம் செய்ததில்லை. அதை அவிழ்த்து இங்கே கொண்டுவாருங்கள்.



அதை ஏன் அவிழ்க்கிறீர்கள்?" என்று யாராவது கேட்டால், "இது ஆண்டவருக்கு வேண்டும் என்று சொல்லுங்கள். உடனே அதை அனுப்பி விடுவார்கள்" என்றார்.

அதன்படி அவர்கள் சென்று, தெருவில் ஒரு கழுதையைக் கண்டார்கள். அது ஒரு வீட்டின் கதவில் கட்டப்பட்டிருந்தது. அதை அவர்கள் அவிழ்த்தபோது அங்கே நின்று கொண்டிருந்தவர்களுள் சிலர், "நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அவர்கள் இயேசு சொல்லிக் கொடுத்திருந்தபடியே சொன்னார்கள். அந்த மனிதர்கள், அவர்களைப் போக விட்டுவிட்டார்கள்.

அவர்கள் அந்தக் கழுதையை இயேசுவிடம் கொண்டுவந்தார்கள். அதன்மேல் தங்கள் ஆடைகளைப் போட்டார்கள். இயேசு கழுதையின் மேல் ஏறினார். மக்களுள் பலர் தங்கள் ஆடைகளைச் சாலையில் விரித்தார்கள். வேறு சிலர் மரக்கிளைகளைப் பரப்பினார்கள். "கடவுளைப் போற்றுங்கள்! ஆண்டவரின் பெயரால் வருகிறவருக்குக் கடவுள் ஆசி வழங்குவாராக! தாவீது அரசனின் தலைமுறையில் தோன்றிய நமது அரசரின் வருகைக்குக் கடவுளின் ஆசி

கிடைக்கட்டும்! கடவுள் போற்றப்படுவாராக!" என்று மக்கள் முழக்கமிட்டார்கள்.

இயேசு எருசலேமுக்குள் நுழைந்தார்; ஆலயத்தினுள் சென்றார்; அங்கிருந்த எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தார்; அன்று நேரம் ஆகிவிட்டபடியால் தமது பன்னிரண்டு சீடர்களோடும் பெத்தானியாவுக்குச் சென்றுவிட்டார்.

ஆலயத்தை தவறாகப் பயன்படுத்துதலைக் கண்டு இயேசு கலங்குதல்

மாற்கு 11 : 15 – 19

ஆலயத்தைச் சுற்றிலும் சில முற்றங்கள் இருந்தன. யூதரல்லாதவர்கள் அங்கே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. யூதர் அல்லாதவர்கள் கடவுளை வழிபடுவதற்கு வெளிப்புறத்தில் ஒரு முற்றம் இருந்தது. யூதர்கள் பலியிடுவதற்கான ஆடு, மாடுகளை வாங்குவதற்காக, இந்த இடங்களில் பல கடைகள் வைக்கப்பட்டிருந்தன. ரோமயரின் நாணயம் ஆலயத்தில் அனுமதிக்கப்படுவது இல்லை. எனவே இந்தப் பணத்தை ஆலயத்திற்கு செலுத்துவதற்குரிய பணமாக மாற்றித்தருவதற்கு நாணய மாற்றுவோர் அங்கு கடைகளை வைத்திருந்தார்கள்.

மறுநாள் இயேசுவும் அவருடைய சீடர்களும் எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். இயேசு ஆலயத்தினுள் நுழைந்து, அங்கு விற்றுக் கொண்டும், வாங்கிக் கொண்டும் இருந்தவர்களை வெளியே துரத்தத் தொடங்கினார். நாணயமாற்றுவோரின் மேசைகளைக் கவிழ்த்தார். புறா விற்கிறவர்களின் இருக்கைகளைத் தள்ளிவிட்டார். ஆலயத்தின் வழியாக எந்தப் பொருளையும் எடுத்துச் செல்ல அவர் அனுமதிக்கவில்லை. பின்னர் மக்களிடம், "நமது திருமறையில், எல்லா இடங்களிலும் வாழும் மக்கள் அனைவருக்கும் என்னுடைய வீடு ஒரு இறைவேண்டலின் வீடாயிருக்கும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்களோ அதைத் திருடர்கள் ஒளிந்திருக்கும் மறைவிடமாக்கிவிட்டீர்கள்!" என்றார்.

முதன்மை குருக்களும், சமய ஆசிரியர்களும் இதைக் கேள்விப்பட்ட போது, இயேசுவைக் கொலை செய்ய நினைத்தார்கள். ஆனால் திரள் கூட்டமான மக்கள் அங்கே இயேசுவின் போதனைகளைக் கேட்டுக் கொண்டிருந்தபடியால் அவர்கள் அவருக்கு எதுவும் செய்யப்பயப்பட்டார்கள். அன்று மாலையில் இயேசு தமது சீடர்களோடு, அந்த நகரத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

இயேசுவின் அதிகாரத்துக்குச் சவால்

மாற்கு 11 : 27 – 33

மறுபடியும் அவர்கள் எருசலேமுக்குத் திரும்பிவந்தார்கள். இயேசு ஆலயத்தினுள் நடந்து கொண்டிருக்கும் போது, முதன்மை குருக்களும், சமய ஆசிரியர்களும், மூப்பர்களும் அவரிடம் வந்து, "இந்தச் செயல்களைச் செய்ய உமக்கு என்ன உரிமை இருக்கிறது ? உமக்கு இந்த அதிகாரத்தைத் தந்தவர் யார் ?" என்று கேட்டார்கள்.

இயேசு, "நான் உங்களிடத்தில் ஒரு கேள்விமட்டும் கேட்கிறேன். நீங்கள் அதற்குப் பதில் கூறுங்கள். அப்போது இந்தச் செயல்களைச் செய்ய எனக்கு எந்த அதிகாரம் இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லுவேன்." "திருமுழுக்குக் கொடுக்க யோவானுக்கு அதிகாரம் கொடுத்தது யார் ? கடவுளா ? அல்லது மனிதானா ? அதை எனக்குச் சொல்லுங்கள்" என்றார்.

அவர்கள் ஒருவருக்கொருவர், "நாம் என்ன சொல்லுவோம் ? கடவுள்" என்று சொன்னால், "அப்படியானால் நீங்கள் ஏன் யோவானை நம்பவில்லை ?" என்று கேட்பார். ஆனால் அவர்கள் 'மனிதர்' என்றும் கூற விரும்பவில்லை. ஏனெனில் யோவான் கடவுளின் செய்தியை அறிவித்தார் என்று மக்கள் நம்பினார்கள். எனவே அவர்கள் இயேசுவிடம், "அது எங்களுக்குத் தெரியாது" என்று கூறிவிட்டார்கள்.

இயேசுவும் அவர்களிடம், "நானும் எந்த அதிகாரத்தினால் இந்தச் செயல்களைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லமாட்டேன்" என்றார்.

ஒரு கைம்பெண்ணின் காணிக்கை

மாற்கு 12 : 41 – 44

இயேசு ஆலயத்தில் காணிக்கைகளை வழங்கும் இடத்திற்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மக்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுவதை அவர் கவனித்தார். பல செல்வந்தர்கள் மிகுதியான பணத்தைப் பெட்டியில் போட்டார்கள். பின்னர் ஒரு ஏழை கைம்பெண் வந்து, இரண்டு சிறிய செப்புக்காசுகளைப் போட்டாள். இயேசு தம்முடைய சீடர்களை அருகில் அழைத்து, "இந்த ஏழை கைம்பெண் போட்ட காணிக்கை இங்கே மற்ற எல்லோரும் போட்ட காணிக்கைகளைவிட அதிகமானது. மற்றவர்கள் தமக்கிருக்கும் மிகுதியான செல்வத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் இங்கே போட்டார்கள். ஆனால்; இந்த ஏழை கைம்பெண்ணோ, தனது வாழ்வுக்கு ஆதாரமாக இருந்த அனைத்தையும் படைத்து விட்டாள்!" என்றார்.

இந்த ஆலயம் இடிக்கப்படும்

மாற்கு 13 : 1, 2

இயேசு ஆலயத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லும்போது, அவருடைய சீடர்களில் ஒருவர், "ஐயா, இதோ பாருங்கள்! எவ்வளவு அருமையான கட்டடம்! எவ்வளவு அழகான கற்கள்!" என்றார். இதைக் கேட்ட இயேசு, "ஆம். இவை மிக அழகாய் இருக்கின்றன. ஆனால் வெகுவிரைவில் இவையனைத்தும் இடிக்கப்படும். இங்குள்ளவைகளில் ஒரு கல்கூட அதன் இடத்தில் இல்லாமல் தகர்க்கப்படும்" என்றார்.

இயேசு இப்படிக் கூறியது எருசலேம் ஆலயத்தைப் பற்றி அல்ல; தன்னைப் பற்றி என்பதை சீடர்கள் அப்போது புரிந்து கொள்ளவில்லை.

இயேசு எவ்வாறு இறந்தார்?

இயேசுவின் எதிரிகள்

இயேசுவைக் கைது செய்யத் திட்டம்

மத்தேயு 26 : 1 – 5

பாஸ்கா விழாவைக் கொண்டாட திரளான மக்கள் எருசலேமுக்கு வந்திருந்தார்கள். இயேசு செய்திருந்த அருஞ்செயல்களை அவர்களுள் பலர் கண்டிருந்தார்கள். எனவே, அவர்கள் எருசலேம் நகரத்துக்குள் வந்த இயேசுவுக்கு ஒரு மாவீரனுக்கு அளிப்பது போன்ற சிறப்பான வரவேற்பை அளித்தார்கள்.

இயேசு தன் போதனைகளை முடித்தபோது தமது சீடர்களிடம், “இன்னும் இரண்டு நாட்களில் பாஸ்கா விழா வருகிறது. மனிதனாகப் பிறந்த நான் என் சொந்த மக்களாலேயே மிக விரைவில் கொலை செய்யப்படுவேன்” என்றார்.

முதன்மை குருக்களும், மூப்பர்களும் இயேசுவை மக்களுக்குத் தெரியாமல் கைது செய்து, கொலை செய்துவிட வேண்டுமென்று திட்டமிட்டார்கள். “இச்செயலை விழாவின் போது நாம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் மக்கள் கூட்டம் நமக்கு எதிராக எழும்பிவிடும்” என்று பேசி முடிவு செய்தார்கள்.

யூதாசு இயேசுவுக்கு எதிரியாதல்

மாற்கு 14 : 10, 11

இயேசுவின் பன்னிரண்டு சீடர்களுள் ஒருவனான யூதா இஸ்காரியோத்து முதன்மை குருக்களைச் சந்தித்தான். இயேசுவை கைது செய்வதற்குத் தான் உதவி செய்வதாகக் கூறினான். அதற்காக அவர்கள் அவனுக்குச் சிறுதொகை மகிழ்ச்சியுடன் கொடுக்க இணங்கினார்கள். எனவே, அதுமுதல் இயேசுவை அவருடைய எதிரிகளின் கையில் பிடித்துக் கொடுக்க ஒரு வாய்ப்பை யூதாசு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இறுதி இரவு உணவு

மேல் அறை

மாற்கு 14 : 12 – 16

அது பாஸ்கா விழாவுக்கு முந்தின நாள். விழாவிற்கு வேண்டிய ஆடுகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றுதான் பலியிடப்பட வேண்டும். இயேசுவின் சீடர்கள் அவரிடம், “நாங்கள் எங்கே விருந்தை ஆயத்தம் செய்ய வேண்டும்?” என்று கேட்டார்கள்.

இயேசு தம் சீடர்களில் இரண்டு பேரை நகரத்துக்கு அனுப்பினார். அவர்களிடம், “நீங்கள் நகரத்திற்குள் போகும்போது, தண்ணீர் குடம் சுமந்துவரும் ஒரு மனிதரைச் சந்திப்பீர்கள். அவர் பின்னே செல்லுங்கள். அவர் நுழையும் வீட்டில் நீங்களும் நுழையுங்கள். அந்த வீட்டின் சொந்தக்காரரிடம், “எங்கள் போதகர் தமது சீடர்களுடன் அமர்ந்து விருந்து

சாப்பிடுவதற்குரிய இடம் எது?" என்று கேளுங்கள். அப்பொழுது அவர் மிகவும் தூய்மையாகவும், ஆயத்தமாகவும் வைக்கப் பட்டிருக்கும் ஒரு பெரிய மாடி அறையைக் காட்டுவார். நீங்கள் அங்கே நமக்கு விருந்தை ஆயத்தம் செய்யலாம்" என்றார்.

சீடர்கள் சென்று, எல்லாம் இயேசு சொன்னபடியே இருக்கக் கண்டார்கள். எனவே, அங்கே அவர்களுக்குரிய பாஸ்கா விருந்தை ஆயத்தம் செய்தார்கள்.

இயேசு தம் சீடர்களின் கால்களைக் கழுவுதல்

யோவான் 13 : 2, 4 – 17

இயேசுவும் அவருடைய சீடர்களும் இரவு பாஸ்கா உணவைச் சாப்பிட தயாராகிக் கொண்டிருந்தார்கள். சாத்தான், யூதா இஸ்காரியோத்திடம் இயேசுவை எதிரிகளிடம் காட்டிக்கொடுத்து விடும்படி கூறியிருந்தது.

இயேசு பந்தியிலிருந்து எழுந்தார். தன்னுடைய ஆடைகளைக் கழற்றினார். ஒரு துண்டை எடுத்துத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டார். ஒரு அகலமான பாத்திரத்தில் தண்ணீர் வார்த்தார். பின்னர் தம் சீடர்களின் கால்களைக் கழுவவும், துண்டினால் துடைக்கவும் தொடங்கினார். சீமோன் பேதுரு இயேசுவிடம், "ஐயா, நீர் என்னுடைய கால்களைக் கழுவப் போகிறீரா?" என்று கேட்டார்.

அப்பொழுது இயேசு, "நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது இப்போது உனக்குப் புரியாது, இதன் கருத்தைப் பின்னால் புரிந்துகொள்வாய்" என்றார். பேதுரு "நான் ஒருபோதும் என் கால்களைக் கழுவ



உம்மை அனுமதிக்க மாட்டேன்!'' என்றார்.

அதற்கு இயேசு, ''நான் உன்னுடைய கால்களைக் கழுவாவிட்டால், நீ என்னுடைய சீடனாயிருக்க முடியாது'' என்றார்.

அப்பொழுது பேதுரு, ''அப்படியானால் போதகரே, தயவுசெய்து என்னுடைய கால்களை மட்டுமல்ல, என்னுடைய கைகளையும், தலையையும் கழுவியருளும்'' என்றார்.

இயேசு சீடர்களிடம், ''நீங்கள் ஏற்கனவே குளித்து உடல் முழுவதும் தூய்மையாக இருக்கிறீர்கள்; எனவே, உங்கள் கால்களை மட்டும் கழுவினால் போதும்; உங்களுள் ஒருவனைத் தவிர மற்ற எல்லாரும் தூய்மையாயிருக்கிறீர்கள்'' என்றார். இயேசு தம்மைத் தம் எதிரிகளிடத்தில் காட்டிக் கொடுப்பது யார் என்று அறிந்திருந்தார்.

அவர்களுடைய கால்களைக் கழுவியபின் இயேசு, ''நீங்கள் என்னை 'ஆண்டவர்' என்றும், 'போதகர்' என்றும் சொல்லுகிறீர்கள். அது சரியே. உங்கள் ஆண்டவரும், போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவியிருக்கிறேன். நீங்கள் பின்பற்றும்படி, நான் உங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இதைச் செய்து காட்டியிருக்கிறேன். ஒரு பணியாள், தன்னுடைய தலைவரைவிடப் பெரியவரல்ல. ஒரு தூதுவர் தன்னை அனுப்பியவரைவிட பெரியவரல்ல!'' என்றார்.

இயேசு யூதாசை எச்சரித்தல்

யோவான் 13 : 21 – 30

இயேசு மிகுந்த மனக் கலக்கமடைந்தார். தமது சீடர்களிடம், ''உங்களுள் ஒருவன் என்னை எதிரிகளிடத்தில் ஒப்படைக்கப் போகிறான்!'' என்றார். இதைக் கேட்ட சீடர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அவருடைய சீடர்களுள் ஒருவர் அவர்மேல் சாய்ந்து கொண்டிருந்தார். பேதுரு, அவருக்குச் சைகை காட்டி, ''இயேசு யாரைக் குறித்துச் சொல்லுகிறார்'' என்று அவரிடம் கேட்கச் சொன்னார். அதன்படியே அந்த சீடர் இயேசுவிடம் நெருங்கி, போதகரே அவன் யார்?'' என்று கேட்டார்.

இயேசு, ''இந்த அப்பத்தைத் தோய்த்து நான் யாரிடம்

கொடுக்கிறேனோ, அவனே!'' என்றார். பின்னர் அவர் ஒரு அப்பத்தை எடுத்து, ரசத்தில் தோய்த்து அதை யூதாஸ் இஸ்காரியோத்திடம் கொடுத்தார். அவன் அந்த அப்பத்தைப் பெற்றுக்கொண்டான். உடனே சாத்தான் அவனுள் புகுந்தது. இயேசு அவனிடம், ''நீ செய்யப்போவதைச் சீக்கிரம் செய்துமுடி'' என்றார். மற்றவர்கள் இதைப் புரிந்துகொள்ள வில்லை. சிலர், ''இயேசு விருந்திற்காக அவனிடம் எதையாவது வாங்கச் சொல்லியிருக்கலாம்'' என்று நினைத்தார்கள். ஏனென்றால், எப்போதுமே யூதாசுதான் பணப்பையை வைத்திருப்பான். இயேசுவிடம் அப்பத்தைப் பெற்றபின், யூதாசு உடனே எழுந்து வெளியே போய்விட்டான்.

தந்தையாம் கடவுளை அடையும் வழி இயேசுவே!

யோவான் 14 : 1 – 14

''நீங்கள் கவலைப்படாமலும், கலங்காமலும் இருங்கள். தந்தையாம் கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் பற்றுறுதி கொள்ளுங்கள். என்னுடைய தந்தையின் வீட்டில் மிகுதியான அறைகள் உள்ளன. நான் உங்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் திரும்ப வந்து நீங்கள் என்னுடன் இருக்கும்படி உங்களை அழைத்துச் செல்வேன்.நான் போகிற இடத்திற்குரிய வழியை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்''என்றார்.

அப்பொழுது தோமா, ''போதகரே, நீர் எங்கே போகிறீர் என்று எங்களுக்குத் தெரியாதே! நாங்கள் எப்படி வழியை அறிவோம்?'' என்று கேட்டார்.

அதற்கு இயேசு, ''நானே உண்மையான வழி. நானே உண்மையான வாழ்வு. தந்தையாம் கடவுளிடத்தில் போவதற்குரிய ஒரே வழி நானே'' என்றார். பின்னர் அவர் எல்லோரையும் பார்த்து,''இப்பொழுது 'நான் யார்?' என்று நீங்கள் அறிந்திருக்கிறபடியால், என்னுடைய தந்தையையும் நீங்கள் அறிவீர்கள். நீங்கள் அவரை அறிந்தும், அவரைப் பார்த்தும் இருக்கிறீர்கள்'' என்றார்.

பிலிப்பு அவரிடம், ''போதகரே தந்தையை எங்களுக்குக் காட்டும்!'' என்றார்.

இயேசு, ''நான் உங்கள் அனைவரோடும் இவ்வளவு காலமாக இருந்திருக்கிறேன். நீ இன்னும் என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் என் தந்தையைக் கண்டான். அப்படியிருக்க நீ எப்படி என்னிடம், ''தந்தையை எமக்குக் காட்டும்'' என்று கேட்கலாம்? என்றார்.

மேலும் அவர், ''நான் ஆற்றும் செயல்களைக் கண்டாவது நம்புங்கள். ஒருவர் என்னிடம் பற்றுறுதி கொண்டிருந்தால், அவர் நான் செய்வதைவிட கூடுதலான செயல்களையும் ஆற்றமுடியும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், நான் என் தந்தையிடம் செல்லுகிறேன்; என் தந்தையின் ஆற்றல் என் மூலமாக வெளிப்படும்; அப்போது என்னுடைய பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன்'' என்றார்.

தூய ஆவி பற்றிய வாக்குறுதி

யோவான் 14 : 15 – 31

''நீங்கள் என்னிடம் அன்பு கூர்ந்தால், என்னுடைய போதனைகளுக்கு அப்படியே கீழ்ப்படிவீர்கள். நான் என் தந்தையிடம் உங்களுக்கு இன்னொரு உதவியாளரை அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளுவேன். அவர் தூய ஆவியானவரை உங்களுக்கு அனுப்புவார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில், அவரை அறியவும், பார்க்கவும் முடியாது. ஆனால், நீங்கள் அவரை அறிவீர்கள். ஏனெனில் அவர் உங்களுக்குள் தங்குவார்.

நான் இங்கிருந்து போகும்போது உங்களை ஆதரவற்றவர்களாகத் தனியாக விட்டுவிட மாட்டேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். நான் உங்களிடத்தில் மறுபடியும் வருவேன். இன்னும் சிறிது காலத்திற்குப் பின் இந்த உலகம் என்னைக் காண முடியாது. ஆனால் நீங்கள் என்னைக் காண்பீர்கள். நான் வாழ்கிறபடியால் நீங்களும் வாழ்வீர்கள். அந்த நாள் வரும்போது நான் என் தந்தைக்குள் இருக்கிறேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். அதுபோல, நான் உங்களிலும், நீங்கள் என்னிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள்'' என்றார் இயேசு.

யூதா (யூதா இஸ்காரியோத்து அல்ல) "போதகரே, உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல், எங்களுக்கு மட்டும் உம்மை வெளிப்படுத்துவது எப்படி?" என்றார்.

இயேசு அவரிடம், "என்னிடம் அன்பு கூருகிறவர் என்னுடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவார். என்னுடைய தந்தையும், அவரிடம் அன்பு செலுத்துவார். நான் உங்களோடிருக்கும்போதே இவற்றை உங்களிடம் சொல்லி விட்டேன்."

"என்னுடைய அமைதியை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் அதை உங்களுக்குக் கொடுக்க முடியாது. நீங்கள் கவலைப்படாமலும், பயப்படாமலும், எதற்கும் மனங்கலங்காமலும் இருங்கள். 'நான் என் தந்தையிடம் போகிறேன். ஆனால் மறுபடியும் உங்களிடத்தில் திரும்ப வருவேன்'. நீங்கள் என்னிடம் அன்பு கூர்ந்தால், என்னைவிடப் பெரியவராயிருக்கிற என் தந்தையிடம் நான் செல்வதைக் குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

நான் இனி நீண்ட நேரம் உங்களுடன் பேசிக்கொண்டிருக்க முடியாது. ஏனெனில், உலகத்தின் தலைவனான சாத்தான் இதோ வந்துகொண்டிருக்கிறான். அவனுக்கு என் மீது எந்த அதிகாரமும் இல்லை. ஆனால், நான் என் தந்தையிடம் அன்பு கூருகிறேன் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்ள வேண்டும். என்பதற்காகவே, அவர் சொல்வதுபோல, நான் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறேன்" என்று இயேசு கூறினார்.

ஆண்டவரின் திருவிருந்து

மாற்கு 14 : 22 – 26

இயேசு தம் சீடர்களுடன் கடைசியாகச் சாப்பிட்ட உணவு, "கடைசி இரவு உணவு" என்று அறியப்படுகிறது. உலகம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள் இன்றும் இயேசு அவர்களுக்குச் சொன்னபடியே, அதே முறையில் அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் சாப்பிட்டு வருகிறார்கள். இது அவரை நினைவுகூருவதற்காகச் செய்யப்படுகிறது. இதனையே நாம் 'ஆண்டவரின் திருவிருந்து' என்று கூறுகிறோம்.

அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, இயேசு ஒரு அப்பத்துண்டை எடுத்து, கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு அதைப் பிட்டார். அதைத் தம் சீடர்களுக்குக் கொடுத்து, "இதைச் சாப்பிடுங்கள். இது என்னுடைய உடல்" என்றார்.

பின்னர் அவர் திராட்சை ரசம் இருந்த ஒரு கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி கூறினார். அதையும் தம் சீடர்களிடம் கொடுத்தார். அவர்கள் எல்லாரும் அதை வாங்கிப் பருகினார்கள். இயேசு, "இது என் இரத்தம். இது மிகுதியான மக்களுக்காகச் சிந்தப்படுகிறது. கடவுள் தமது மக்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கை, இந்த இரத்தத்தினால் புதுப்பிக்கப்படுகிறது.

இனி வரப்போகும் கடவுளுடைய அரசில், புதிய திராட்சை ரசத்தைக் குடிக்கும் நாள்வரை, நான் திராட்சை ரசத்தைக் குடிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

பின்னர் அவர்கள் அனைவரும் ஒரு துதிப் பாடலைப் பாடினார்கள். அதன்பின்னர் ஒலிவமலைக்குச் சென்றார்கள்.

இயேசு எல்லோராலும் கைவிடப்படுதல்

இயேசு தம் சீடர்களை எச்சரித்தல்

மாற்கு 14 : 27 – 31

இயேசு தம் சீடர்களிடம், "நீங்கள் எல்லோரும் என்னைத் தனியாக விட்டு, விட்டு ஓடிவிடும் காலம் வரும். "மேய்ப்பனைக் கொலை செய்யும்போது, அவனுடைய ஆடுகள் சிதறி ஓடும்" என்று நமது திருமறை நூல் கூறுகிறதல்லவா? ஆனால் கடவுள் என்னை மறுபடியும் உயிர்பெற்று எழச் செய்வார். அப்போது நான் உங்களைச் சந்திப்பதற்காக உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்" என்றார்.

அப்பொழுது பேதுரு இயேசுவிடம், "மற்ற எல்லோரும் உம்மைவிட்டு ஓடிப்போகலாம். ஆனாலும் நான் உம்மை விட்டு ஓடவே

மாட்டேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "சேவல் இரண்டு முறை கூவுவதற்கு முன், 'இயேசுவைத் தெரியாது' என்று நீ மூன்று முறை கூறப்போகிறாய்" என்றார். அப்பொழுது பேதுரு இன்னும் உறுதியாக, "நான் உம்முடனே இறக்க வேண்டியது வந்தாலும், ஒருபோதும் அப்படிச் சொல்லமாட்டேன்" என்றார்.

மற்ற எல்லாச் சீடர்களும் அப்படியே கூறினார்கள்.

கெத்சமனி தோட்டத்தில் இறைவேண்டல்

மாற்கு 14 : 32 – 42

அவர்கள் 'கெத்சமனி' எனப்படும் ஒரு இடத்துக்கு வந்தார்கள். இயேசு தம் சீடர்களிடம், "நான் சென்று இறைவேண்டல் செய்து முடிக்கும்வரை நீங்கள் இங்கேயே இருங்கள்" என்றார். அவர் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரை மட்டும் தன்னுடன் அழைத்துச் சென்றார். "நான் மிகுந்த மனவேதனை அடைந்திருக்கிறேன். எனவே, நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள்" என்றார்.

அவர் சற்றுத் தொலைவில் சென்று, தரையில் விழுந்து ஜெபித்தார். "தந்தையே! நான் அனுபவிக்க இருக்கும் துன்பங்களை என்னைவிட்டு நீக்கக்கூடுமானால் நீக்கும். ஆனாலும் என் விருப்பத்தின்படியல்ல, உமது விருப்பப்படியே செய்யும்" என்று வேண்டினார்.

பின்னர் தம் சீடர்களிடம் வந்தார். அவர்கள் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். பேதுருவிடம், "சீமோனே, நீயும் தூங்கிக் கொண்டிருக்கிறாயா? ஒருமணிநேரம் எனக்காக விழித்திருக்க முடியாதா? சாத்தான் உங்களைக் குற்றம் செய்யத் தூண்டிவிடாமலிருக்க விழித்திருந்து, வேண்டுதல் செய்யுங்கள். உங்கள் மனம் ஆர்வமுடையது தான். ஆனால் உடல் வலுவற்றது" என்றார்.

அவர் மறுபடியும் அவர்களை விட்டுத் தொலைவில் சென்று, முன்புபோலவே வேண்டுதல் செய்தார். மறுபடியும் அவர் தம்முடைய சீடர்களிடம் வந்தபோது அவர்கள் தூங்கிக்கொண்டு இருப்பதைக் கண்டார். அவர்களால் விழித்திருக்க முடியவில்லை.



அவர் மூன்றாவது முறையும் சென்று இறைவேண்டல் செய்துவிட்டு வந்து, அவர்கள் இன்னும் தூங்கிக்கொண்டு இருப்பதைக் கண்டு, “போதும்! நேரம் வந்துவிட்டது! மனிதனாகப் பிறந்த நான் இப்பொழுது பாவிகளான மனிதர்களிடம் ஒப்புவிக்கப்பட இருக்கிறேன். எழுந்திருங்கள். நாம் போகலாம். அதோ பாருங்கள்! காட்டிக் கொடுக்கிறவன் வந்துவிட்டான்!” என்றார்.

இயேசு கைது செய்யப்படுதல்

மாற்கு 14 : 43 – 50

இயேசு பேசிக்கொண்டிருக்கும்போது, சீடர்களுள் ஒருவனான யூதாசு கூட்டத்தோடு அங்கு வந்தான். அவர்கள் அனைவரும் வாள்களையும், தடிகளையும் கையில் வைத்திருந்தார்கள். அவர்கள்; முதன்மைக் குருக்கள், சமய ஆசிரியர்கள், மூப்பர்கள் ஆகியோரால் அனுப்பப்பட்டிருந்தார்கள். யூதாசு அவர்களிடம், “நான் யாரை முத்தம் செய்கிறேனோ அவரே நீங்கள் தேடும் ஆள். அவரைக் கைது செய்து பாதுகாப்பாக அழைத்துச் சென்று விடுங்கள்” என்று கூறியிருந்தான்.

யூதாசு, நேராக இயேசுவிடம் சென்று, “போதகரே” என்று அழைத்து அவரை முத்தம் செய்தான். உடனே அவர்கள் இயேசுவைக் கைது செய்தார்கள். அந்த வேளையில் சீடர்களுள் ஒருவர் தன்னுடைய வாளை எடுத்து தலைமைக் குருவின் வேலைக்காரனின் ஒரு காதை வெட்டி விட்டார். இயேசு அந்தக் கூட்டத்தினரைப் பார்த்து, “என்னைப் பிடிப்பதற்கு ஏன் ஆயுதங்களோடு வந்தீர்கள்?” நான் ஒரு திருடனா? ஒவ்வொரு நாளும் நான் உங்கள்முன் ஆலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்தேனே! அப்பொழுது நீங்கள் என்னை ஏன் கைது செய்யவில்லை? ஏனென்றால், இவையெல்லாம் திருமறையில் கூறப்பட்டிருப்பவை நிறைவேறும்படி இப்படி நடைபெறுகின்றன” என்றார்.

அப்பொழுது இயேசுவின் சீடர்கள் அனைவரும் அவரை விட்டுவிட்டு சிதறி ஓடிப்போனார்கள்.

யூதர்களின் சங்கத்தின் முன் இயேசு

மாற்கு 14 : 53 – 65

இயேசு அடிக்கடி தன்னைப் பற்றி, “இறை மகன்” என்று குறிப்பிடுவார். சில யூதர்கள் இந்த வார்த்தைகள், “கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு சிறப்பான மனிதரைக் குறிக்கிறது” என்று நினைத்தார்கள். அனால் அவர்களுள் பலர் இயேசு கடவுளிடத்திலிருந்து வந்தவர் என்று நினைக்கவில்லை. அவர் கடவுளை இகழ்ந்துரைக்கிறார் என்று நினைத்தார்கள்.

இயேசுவைத் தலைமை குருவின் வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். யூதர்களின் எல்லாத் தலைவர்களும் அங்கே கூடியிருந்தார்கள். பேதுரு மிகவும் பின்னாக நடந்து முற்றத்திற்குள் நுழைந்தார்.





அங்கு குளிர் காய்ந்துகொண்டிருந்த காவலர்களுடன் உட்கார்ந்தார். முதன்மைக் குருக்களும், யூதச் சங்கத்தார் அனைவரும், "இயேசு ஏதோ ஒரு பெரிய தவறு செய்திருப்பதாக" மெய்ப்பிக்க முயன்றார்கள். அவர்கள், அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். பல மனிதர்கள் இயேசுவுக்கு எதிராகப் பல பொய்களைக் கூறினார்கள். ஆனால், அவர்கள் கூறிய கட்டுக்கதைகள் ஒன்றுக்கொன்று முரணாய் இருந்தன. அவர்கள் இயேசுவிடம் யாதொரு குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் சில மனிதர்கள் எழுந்து இயேசுவுக்கெதிராக ஒரு பொய்யைக் கூறினார்கள். "மனிதர்களால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தை நான் இடித்துத் தள்ளி விடுவேன். மூன்று நாட்களில் அந்த ஆலயத்தை, நான் கட்டி எழுப்பி விடுவேன்; என்று இயேசு சொல்வதை நாங்கள் கேட்டோம்" என்றார்கள். ஆனால் அவர் தவறாக எதையும் கூறியதாக அவர்களால் மெய்ப்பிக்க முடியவில்லை.

தலைமைக்குரு எழுந்து இயேசுவிடம், "இவர்கள் உன்மேல் சுமத்தும் குற்றங்களுக்கு நீ என்ன பதில் சொல்லப்போகிறாய்?" என்று கேட்டார்.



இயேசு பதில் கூறவில்லை. அமைதியாக இருந்தார். மறுபடியும் தலைமைக்குரு இயேசுவிடம், "யூதர்களின் மீட்பர் நீ தானா? நீ கடவுளின் மகனா?" என்று கேட்டார்.

"ஆம். நானே அவர்" என்று இயேசு பதில் கூறினார். "ஒருநாள் இறைமகன் எல்லாம் வல்ல கடவுளின் வலது பக்கத்தில் உட்கார்ந்திருப்பார். மேலும் அவர் மேகங்களின் மேல் வருவதையும், நீங்கள் எல்லாரும் காண்பீர்கள்" என்றார்.

இதைக் கேட்டதும் தலைமைக்குரு கோபமடைந்து தன்னுடைய ஆடைகளைக் கிழித்தார். பின், "நமக்கு இனி எந்தச் சாட்சியும் தேவையில்லை. இவன் கடவுளைப் பழித்துரைப்பதை நீங்கள் கேட்டீர்கள். இப்போது என்ன சொல்லுகிறீர்கள்? என்று மக்களிடம் கேட்டார்.

அதற்கு அனைவரும், 'இயேசு குற்றவாளி' என்றும், அவர் 'கொலை செய்யப்பட வேண்டும்' என்றும் கூக்குரலிட்டார்கள்.

அவர்களுள் சிலர், இயேசுவின் மீது துப்பினார்கள்; சிலர் அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய தலையில் குட்டினார்கள்; பின்னர், "உன்னைக் குட்டியது யார்? கண்டுபிடி" என்றார்கள்; காவலாளிகள் அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள்.

இயேசுவை பேதுரு மறுதலித்தல்

மாற்கு 14 : 66 – 72

பேதுரு இன்னும் முற்றத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது தலைமைக் குருவின் பணிப்பெண் ஒருத்தி அங்கே வந்தாள். அவள் பேதுருவைப் பார்த்தபோது, அவரிடம், "நீயும் நாசரேத்தூரானான இயேசுவோடு இருந்தவன்தானே" என்றாள். ஆனால் பேதுரு, "இல்லை, எனக்கு அவரைத் தெரியாது. நீ என்ன சொல்லுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை" என்றார். அவர் எழுந்து வாசலருகில் சென்றார். அப்பொழுது சேவல் கூவிற்று.

அந்தப் பணிப்பெண் அவரை மறுபடியும் கண்டாள். அருகிலிருந்தவர்களிடம், "இவன் அவர்களுள் ஒருவன்" என்றாள். ஆனால் பேதுரு "இல்லவே இல்லை" என்றார்.

சிறிது நேரத்துக்குப் பின்பு, பேதுருவைச் சுற்றிலும் இருந்தவர்கள் அவரைச் சுட்டிக் காட்டி, "நீ அவர்களுள் ஒருவன்தான். இனிமேலும் எங்களிடம் மறுக்க முடியாது. நியும் கலிலேயாவிலிருந்து வந்தவனே!" என்றார்கள். அதற்குப் பேதுரு, "நான் உண்மையைத்தான் பேசுகிறேன். பொய் பேசுகிறேனானால் கடவுள் எனக்குத் தண்டனை தரட்டும். நீங்கள் கூறுகிற அந்த மனிதனை எனக்குத் தெரியாது" என்றார்.

அந்நேரத்தில் சேவல் மறுபடியும் கூவிற்று. இயேசு தன்னிடம் கூறியிருந்ததைப் பேதுரு நினைவுகூர்ந்தார். "சேவல் இரண்டு முறை கூவுவதற்கு முன்னே "என்னைத் தெரியாது" என்று நீ மூன்று முறை மறுதலிப்பாய்" என்று இயேசு பேதுருவிடம் கூறியிருந்தார். அதை நினைத்து, மனம் உடைந்து அழுதார்.



இயேசுவை பிலாத்து விசாரித்தல்

மத்தேயு 27 : 1, 2, 11 – 14

எவருக்கும் மரண தண்டனை வழங்கும் அதிகாரம் யூதர்களின் சங்கத்துக்குக் கிடையாது. எனவே; அவர்கள் இயேசுவை ரோம ஆளுநரின் முன் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஆளுநரைப் பிரியப்படுத்தலாம் என்று நம்பினார்கள்.

விடியற்காலையில் யூதத் தலைவர்கள் இயேசுவைக் கொலை செய்துவிடத் திட்டமிட்டார்கள். அவர்கள் இயேசுவைச் சங்கிலிகளால் கட்டி, ரோம ஆளுநரான பிலாத்தின் மன்றத்துக்கு இழுத்து வந்தார்கள். பிலாத்து இயேசுவிடம், "நீ யூதருடைய அரசனா?" என்று கேட்டார். இயேசு, "நீர் சொல்லுகிறபடிதான்" என்றார்.

பிலாத்து, "எல்லோரும் உனக்கு எதிராகச் சொல்லும் இந்தக் குற்றச்சாட்டுகளை நீ கேட்கவில்லையா?" என்று கேட்டார். இயேசு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பிலாத்து ஆச்சரியப்பட்டார்.

இயேசுவுக்கு மரண தண்டனை

மாற்கு 15 : 6 – 15

பாஸ்கா என்பது யூதரின் பண்டிகை. அவர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்றதை நினைவுகூரும் நாள்.

ஒவ்வொரு பாஸ்கா விழாவின்போதும், மக்கள் கேட்கும் ஏதாவது ஒரு கைதியை விடுதலை செய்வது பிலாத்தின் வழக்கம். கலகம் செய்தல், கொலை செய்தல் ஆகிய குற்றங்களுக்காகச் சிறையில் அடைக்கப் பட்டிருந்த கைதிகளின் கூட்டத்தில் 'பரபாஸ்' என்று ஒருவன் இருந்தான். பிலாத்துவிடம் மக்கள் கூட்டம் சென்று, வழக்கம்போல ஒரு கைதியைத் தங்களுக்கு விடுதலை செய்யுமாறு கேட்டது. "யூதருடைய அரசனை நான் விடுதலை செய்யட்டுமா?" என்று பிலாத்து அவர்களிடம் கேட்டார். இயேசுவின்மீது பொறாமை கொண்டிருந்தபடியால், முதன்மைக் குருக்கள் அவரைத் தன்முன் கொண்டுவந்து இருக்கிறார்கள் என்று அவருக்குத் தெரியும்.

ஆனால், முதன்மைக் குருக்கள் இயேசுவுக்குப் பதிலாக பரபாஸை விடுதலை செய்யுமாறு கேட்கும்படிக் கூட்டத்தினரைத் தூண்டினார்கள்.

"யூதருடைய அரசன்" என்று நீங்கள் கூறும் இந்த மனிதனை நான் என்ன செய்ய வேண்டும்? உங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள்" என்று பிலாத்து மக்களிடம் கேட்டார். "அவனைச் சிலுவையில் அறையும்" என்று அனைவரும் சேர்ந்து கத்தினார்கள்.





"அவன் என்ன குற்றம் செய்தான்?" என்று பிலாத்து மக்களைப் பார்த்துக் கேட்டார். அக்கூட்டத்தினர் இன்னும் உரத்த குரலில், "அவனைச் சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்!" என்று கத்தினார்கள்.

பிலாத்து மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினார். எனவே; அவர் பரபாசை விடுதலை செய்தார். இயேசுவைச் சவுக்கினால் அடிக்கச் செய்தார். பின்னர் இயேசுவைச் சிலுவையில் அறையப்படும்படி போர்வீரர்களிடம் ஒப்படைத்தார்.

யூதாசின் முடிவு

மத்தேயு 27 : 3 – 7

"இயேசுவுக்கு மரணதண்டனை வழங்கப் பட்டது" என்று யூதாசு கேள்விப்பட்டான். அவரை, அவரது எதிரிகளிடத்தில் காட்டிக் கொடுத்ததற்காக மிகவும் துயரமடைந்தான். யூதர்களின் தலைவர்கள் அதற்காக அவனுக்குக் கொடுத்திருந்த முப்பது வெள்ளி நாணயங்களையும் அவர்களிடம் திரும்பக் கொடுப்பதற்காகக் கொண்டு சென்றான். அவன், "பாவமில்லாத ஒரு மனிதரின் சாவுக்கு நான் காரணமாகி விட்டேன். நான் மகாப் பெரிய பாவம் செய்து விட்டேன்" என்று கதறினான்.

அதற்கு யூதத் தலைவர்கள், "அது உன் செயல்; அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை" என்று கூறிவிட்டார்கள். எனவே யூதாசு, அந்த நாணயங்களை ஆலயத்தில் எறிந்து விட்டான். பின்னர் சென்று தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டான்.

முதன்மைக் குருக்கள் அந்த நாணயங்களை எடுத்து, "இந்தப் பணம் ஒரு மனிதனைக் கொலை செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது. இதை நாம் ஆலய காணிக்கைப்பெட்டியில் போட முடியாது" என்று கூறிவிட்டனர். எனவே அவர்கள் ஆலோசித்து அந்தப் பணத்தைக் கொண்டு, அந்நியர்களை அடக்கம் செய்ய "குயவனின் நிலம்" எனப்பட்ட ஒரு நிலத்தை வாங்கினார்கள். இன்றும் அது 'இரத்த நிலம்' என்று அழைக்கப்படுகிறது.



இயேசு ஏளனம் செய்யப்படுதல்

மாற்கு 15 : 16 - 20

போர் வீரர்கள் இயேசுவை ஆளுநரின் அரண்மனையின் முற்றத்திற்குக் கொண்டு வந்தார்கள். மற்ற எல்லாப் போர் வீரர்களையும் ஒன்றுகூடச் செய்தார்கள். பின்னர் அவர்கள் ஒரு சிவப்பு அங்கியை இயேசுவுக்குப் போட்டார்கள். ஒரு முள் முடியைப் பின்னி அவரது தலையின்மீது வைத்து, "யூதருடைய அரசன் நீடூழி காலம் வாழ்க" என்று சொல்லி, ஏளனம் செய்தார்கள். ஒரு கோலினால் அவருடைய தலையில் அடித்தார்கள். அவருடைய முகத்தில் துப்பினார்கள். முழங்காலில் நின்று, தலை குனிந்து வணங்கினார்கள். இப்படியாக அவரை ஏளனம் செய்து முடித்தபின்னர், அவருக்குப் போட்டிருந்த சிவப்பு அங்கியைக் கழற்றினார்கள். அவருடைய ஆடையை அணிவித்தார்கள். பின்னர் அவரைச் சிலுவையில் அறைய வெளியே இழுத்துச் சென்றார்கள்.





சிலுவையில் அறைதல்

லூக்கா 23 : 26, 32 – 43

போர் வீரர்கள் இயேசுவை சிலுவையில் அறைய கொண்டுபோன போது, சிரேன் என்னும் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவனை வழியில் சந்தித்தார்கள். அவர்கள், அவனை இயேசுவின் சிலுவையைச் சுமந்து வரும்படிக் கட்டாயப்படுத்தினார்கள். இயேசுவுடன் சிலுவையில் அறைய இன்னும் இரண்டு குற்றவாளிகளும் கொண்டு செல்லப்பட்டனர். “மண்டையோட்டு இடம்” என்ற இடத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அங்கே இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள்.

மற்ற இரண்டு குற்றவாளிகளும் சிலுவைகளில் அறையப்பட்டு ஒருவன் இயேசுவுக்கு வலது பக்கத்திலும், மற்றவன் இடது பக்கத்திலுமாக நிறுத்தப்பட்டார்கள்.

இயேசு சிலுவையிலிருந்தபடியே,

“தந்தையே! இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது என்னவென்று இவர்கள் அறியாமலிருக்கிறார்கள்”

என்று வேண்டினார்.

போர் வீரர்கள் சீட்டுப்போட்டு இயேசுவின் ஆடைகளைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொண்டார்கள். யூதத் தலைவர்கள், மக்களின் முன்பாக இயேசுவை ஏளனம் செய்தார்கள். “இவன் மற்றவர்களைக் காப்பாற்றினான். இப்பொழுது இவன் கடவுளால் அனுப்பப்பட்ட மீட்பரானால் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளட்டும்” என்றார்கள்.

போர்வீரர்கள் கசப்பான ரசத்தை இயேசுவுக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர்கள், “நீ யூதர்களின் அரசனானால், உன்னை நீயே காப்பாற்றிக்கொள்” என்றார்கள்.

இயேசுவுக்கு மேலாக, “யூதர்களின் அரசன்” என்று எழுதி வைக்கப்பட்டது.

சிலுவைகளில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன், இரக்கமின்றி இயேசுவிடம், “நீ மீட்பர் அல்லவா? இப்பொழுது உன்னையும், எங்களையும் காப்பாற்றிவிடு” என்றான். ஆனால் மற்ற குற்றவாளி அவனைக் கண்டித்தான். “நீ கடவுளுக்குப் பயப்படுகிறதில்லையா? நாம் செய்த





குற்றங்களுக்குத் தகுந்த தண்டனையைப் பெற்றுள்ளோம். ஆனால் இவர், எந்தக் குற்றமும் செய்ததில்லையே!''என்றான்.

பின்னர் அவன் இயேசுவிடம், "இயேசுவே நீர் அரசராக வரும் நாளில் என்னை நினைத்துக் கொள்ளும்'' என்று வேண்டினான்.

அதற்கு இயேசு, "இன்றைக்கே நீ என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய் என உறுதியாகக் கூறுகிறேன்'' என்றார்.

சிலுவையிலிருந்து....!

யோவான் 19 : 26 - 30

இயேசு தம் தாயும், அன்பான சீடரும் நின்றுகொண்டிருப்பதைச் சிலுவையிலிருந்து கண்டார். அவர் தம் தாயைப் பார்த்து, "அதோ உம் மகன்'' என்றார். பின்னர் அவர் சீடரைப் பார்த்து, "அதோ உன் தாய்'' என்றார். எனவே; அந்தச் சீடர் இயேசுவின் தாயைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

இதன் பின்னர் அனைத்தும் நிறைவேறி விட்டது என்று அறிந்த இயேசு, 'நான் தாகமாயிருக்கிறேன்' என்றார். மறை நூலில் கூறப்பட்டிருந்த எல்லாம் நிறைவேறவே அவ்வாறு சொன்னார். அவர்கள் கசப்பான ரசத்தில் தோய்க்கப்பட்ட ஈசோப்புத் தண்டை இயேசுவின் வாயருகில் காட்டினார்கள். இயேசு அதைப் பெற்றுக்கொண்ட பின்னர், "எல்லாம் முடிந்தது'' என்றார்.

இயேசு இறத்தல்

லூக்கா 23 : 44 - 49

பிற்பகல் மூன்று மணி வரையில் நாடு முழுவதும் இருள் சூழ்ந்திருந்தது. ஆலயத்தின் திரை இரண்டாகக் கிழிந்தது. இயேசு உரத்த குரலில், "என் தந்தையே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்'' என்றார். பின்னர் அவர் உயிர் விட்டார்.

ஒரு ரோம படைத்தலைவர் நடந்த எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு இருந்தார். அவர் கடவுளைப் போற்றினார். "உண்மையாகவே இவர் ஒரு நல்ல மனிதர்'' என்றார்.

நடந்த நிகழ்ச்சிகளைக் கவனித்த மக்கள் கூட்டம், அதிகத் துயரத்துடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். இயேசுவுக்கு மிகவும் அன்பானவர்கள் மட்டும், சற்றுத் தொலைவிலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவுடன் கலிலேயாவிலிருந்து வந்திருந்த பெண்களும் அவர்களுடன் நின்றிருந்தார்கள்.

இயேசுவின் உடலை அடக்கம் செய்தல்

லூக்கா 23 : 50 - 56

யூதர்கள் சடலங்களை அடக்கம் செய்வதற்கு தங்களுக்கென்று ஒரு தனி வழக்கத்தை வைத்திருந்தார்கள். சடலங்களின் மீது நறுமணப் பொருட்கள் பூசப்படும். வாசனை கலந்த ஒரு மெல்லிய துணியினால் சடலம் நன்றாகச் சுற்றப்படும். பின்னர் அது ஒரு கல்லறையில் வைக்கப்படும். கல்லறை ஒரு குகையைப் போல இருக்கும். அதன் வாசல் ஒரு பெரிய வட்டமான கல்லினால் மூடப்படும்.

யூதேயா நாட்டு நகரான அரிமத்தியாவில் 'யோசேப்பு' என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு நல்ல மனிதர். கடவுள் தமது ஆட்சியைத் தொடங்கும் காலத்தைக் காணக் காத்துக்கொண்டிருந்தார். யூத சங்கத்தில் அவர் ஒரு உறுப்பினர். ஆனால் அவர்கள் இயேசுவுக்கு அளித்த தீர்ப்புக்கு அவர் உடன்படவில்லை.

அவர் பிலாத்துவிடம் சென்று, இயேசுவின் உடலைத் தரும்படி கேட்டார். அவர் இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்கி, மெல்லிய துணியால் சுற்றினார். ஒரு கல்லறையில் கொண்டுபோய் வைத்தார். அது பாறையில் குடையப்பட்ட குகையாயிருந்தது. அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. அன்று வெள்ளிக்கிழமை. ஓய்வுநாள் தொடங்கும் வேளை ஆயிற்று.



கலிலேயாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றி வந்திருந்த பெண்கள் யோசேப்புடன் சென்றார்கள். அவர்கள் கல்லறையையும், அதனுள் இயேசுவின் உடல் எப்படி வைக்கப்பட்டது என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் வீடுகளுக்குச் சென்று, உடலுக்குப் போட வேண்டிய நறுமணப் பொருள்களையும், தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். மோசேயின் திருச்சட்டத்தின்படி ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

கல்லறையைக் காவல் செய்தல்

மத்தேயு 27 : 62 – 66

ஓய்வு நாளில் யூதத் தலைவர்கள் பிலாத்தைச் சந்தித்தார்கள். அவர்கள், “பெருமதிப்பிற்குரிய ஆளுநரே, அந்தப் பொய்யன் (இயேசு) உயிரோடிருக்கும் பொழுது சொன்னது நினைவுக்கு வருகிறது”. “இறந்தபின் மூன்றாம் நாளில் உயிர் பெற்றெழுந்து விடுவேன்” என்று அவன் சொன்னான். எனவே, நீங்கள் அடுத்த இரண்டு நாட்களும் கல்றையை நன்றாகக் காவல் காக்கும்படிக் கட்டளை பிறப்பியுங்கள். அவனுடைய சீடர்கள் வந்து சரீரத்தைத் திருடிச் சென்றுவிடக்கூடாது. அப்படிச் செய்து விட்டால், அவர்கள் மக்களிடம் அவன் உயிர்த்தெழுந்து விட்டதாகக் கூறுவார்கள். இந்தக் கடைசிப் பொய்யானது முதலில் சொன்ன பொய்யைவிட மிகவும் கேடு தருவதாக மாறிவிடும்” என்றார்கள்.

உடனே பிலாத்து அவர்களிடம், “சில போர் வீரர்களை அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் போய், கல்லறையை முற்றிலும் பாதுகாப்பாகக் காவல் செய்யப்பட ஏற்பாடு செய்யுங்கள்” என்றான்.

எனவே; அவர்கள் சென்று, கல்லறைக்கு முத்திரையிட்டு, அதைக் காவல் காக்கும்படிப் போர் வீரர்களையும் நிற்கச் செய்தார்கள்.



இயேசுவின் வெற்றி

இயேசுவின் மரணம் அவரைப் பின்பற்றியவர்கள் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது. பல நூற்றாண்டுகளாக யூதமக்கள், வரப்போகின்ற மீட்பர் வருவதற்காகக் காத்திருந்தார்கள். சீடர்கள் தாங்கள் எதிர்பார்த்த மீட்பரைக் கண்டு கொண்டதாக நம்பினார்கள். அவர்கள் தங்கள் வீடுகளையும், வேலைகளையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றி வந்திருந்தார்கள்.

இப்பொழுது இயேசு இறந்துவிட்டார். இது ஒவ்வொருவருக்கும் தெரியும். அதனால் அவரைப் பின்பற்றியவர்கள் மிகவும் கவலைப் பட்டார்கள். அவர்களது முழு நம்பிக்கையும் போய்விட்டது. ஒருவேளை தாங்களும்கூட கொல்லப்படலாம் என்று பயந்தார்கள்.

விந்தையிலும் விந்தை!

இயேசுவின் சீடர்கள் இப்பொழுது நல்லது எதுவும் நடக்கும் என்று உண்மையாகவே எதிர்பார்க்க வில்லை.

வெறுமையான கல்லறை

மத்தேயு 28 : 1 – 8

இயேசுவின் உடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை மாலையில் அவரது உடல் கல்லறையில் வைக்கப்பட்டது. சனிக்கிழமை ஓய்வு நாள்.

ஓய்வு நாள் முடிந்தது. வாரத்தின் முதல் நாள் விடியத் தொடங்கியது. அப்போது; மகதலா மரியாளும், இன்னொரு மரியாவும் இயேசுவின் கல்லறையைப் பார்க்கச் சென்றார்கள். அவர்கள் அருகில் சென்றபோது ஒரு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஏனெனில் விண்ணகத்திலிருந்து ஒரு வானதூதர் இறங்கிவந்தார். அவர் கல்லறையை மூடியிருந்த பெரிய கல்லைப் புரட்டித்தள்ளி அதன் மேல் உட்கார்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போலிருந்தது. அவருடைய ஆடைகள் உறைந்த பனியைப் போல் வெண்மையாக இருந்தன. அவரைக் கண்டு, பயத்தால் காவலாளிகள் நடுங்கி, செத்தவர்களைப் போலானார்கள்.

வானதூதர் அந்தப் பெண்களைப் பார்த்து, “நீங்கள் பயப்பட வேண்டாம். நீங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று நான் அறிவேன். அவர் இங்கே இல்லை. ஏனெனில் அவர் உயிர்பெற்றெழுந்தார். நீங்கள் வந்து, ஆண்டவரை வைத்திருந்த இடத்தைப் பாருங்கள். விரைந்து சென்று, அவருடைய சீடர்களுக்கு “இயேசு மரணத்திலிருந்து உயிர்பெற்றெழுந்துவிட்டார்” என்று அறிவியுங்கள். அவர் உங்களுக்கு முன்பாக கலிலேயாவுக்குச் செல்கிறார். அங்கே அவர்கள் அவரைச் சந்திக்கலாம்” என்றார்.

இதைக் கேட்ட அந்தப் பெண்கள் பயமும், மிகுந்த மகிழ்ச்சியும் அடைந்தார்கள். சீடர்களுக்கு “இயேசு உயிர் பெற்றெழுந்தார்” என்னும் செய்தியை அறிவிக்க ஓடினார்கள்.

அப்பொழுது இயேசு அவர்களுக்கு எதிரே வந்து ‘வாழ்க’ என்றார். உடனே அந்தப் பெண்கள் அவர் அருகில் வந்து அவருடைய காலடிகளைத் தழுவிக் கொண்டு, அவரைப்

பணிந்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், "பயப்பட வேண்டாம். நீங்கள் போய் என் சகோதரர்களிடத்தில் உடனே அவர்களை கலிலேயாவுக்குப் புறப்பட்டுப் போகச் சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார்.

பேதுருவும், யோவானும் கல்லறைக்கு ஓடுதல்

யோவான் 20 : 3 – 10

பேதுருவும், யோவானும் கல்லறைக்கு ஓடினார்கள். யோவான் பேதுருவைவிட வேகமாக ஓடி முதலில் கல்லறையைச் சென்றடைந்தார். அவர் குனிந்து உள்ளே பார்த்தார். மெல்லிய ஆடை மட்டும் இருப்பதைக் கண்டார். ஆனால் அவர் உள்ளே செல்லவில்லை. பின்னால் பேதுரு வந்து சேர்ந்தார். அவர் நேராகக் கல்லறைக்குள்ளே சென்றார். அவர் உடலைச் சுற்றியிருந்த மெல்லிய துணி தனியாக இருப்பதையும், இயேசுவின் தலையைச் சுற்றிக் கட்டியிருந்த துணியையும் கண்டார். அது மெல்லிய துணியுடன் இல்லாமல் சுருட்டப்பட்டுத் தனியாக இருந்தது. அப்பொழுது யோவானும் உள்ளே சென்றார். அவர்கள் இன்னும் திருமறையில் கூறப்பட்ட, "இயேசு இறந்தபின் உயிர்பெற்றெழ வேண்டும்" என்ற வாக்கினைப் புரிந்து கொள்ளவில்லை. பின்னர் அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

மரியாவின் வியப்பு

யோவான் 20 : 11 – 18

மகதலா மரியா கல்லறையின் வெளியே அழுது கொண்டிருக்கும் போதே குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்தாள். அங்கே வெள்ளை ஆடை அணிந்த இரண்டு வானதூதர்கள் இருப்பதைக் கண்டாள். அவர்கள் இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டு இருந்த இடத்தில் தலைப்பக்கத்தில் ஒருவரும், கால்பக்கத்தில் ஒருவருமாக அமர்ந்திருந் தார்கள். அவர்கள் அவளிடம், "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்கள். அவள், "என்னுடைய ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் அவரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என்றாள். மரியா பின்னால் திரும்பி அங்கே இயேசு நிற்பதைக் கண்டாள். ஆனால் அது இயேசு என்று அவள் அறியவில்லை. இயேசு அவளிடம் "ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? நீ யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டார். அவள் அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்துக்கொண்டு, "ஐயா, நீர் இயேசுவை எடுத்துச் சென்று விட்டீரா? அவரை எங்கே வைத்திருக்கிறீர்? என்று சொல்லும். நான் போய் எடுத்துக் கொள்ளுவேன்" என்று கேட்டாள். அப்பொழுது இயேசு அவளைப் பார்த்து, "மரியா" என்றார். உடனே அவள், அவருக்கு நேராகச் சென்று, எபிரேய மொழியில் "ரபூனி" என்றாள். 'ரபூனி' என்றால் 'போதகர்' என்று பொருள்.

இயேசு அவளிடம், ''என்னைப் பார்த்துக் கொண்டே நிற்காதே. நான் என் தந்தையிடத்தில் ஏறிச் செல்ல வேண்டும். நீ என் சகோதரர்களாகிய சீடர்களிடம் சென்று, 'நான் என் தந்தையும், உங்களுடைய தந்தையுமான கடவுளிடத்திற்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறேன் என்று சொல்'' என்றார்.

உடனே; மகதலா மரியா ஓடிச்சென்று சீடர்களிடம், ''நான் ஆண்டவரைக் கண்டேன்'' என்று கூறினாள். மேலும் இயேசு தம்மிடம் சொன்ன எல்லாவற்றையும் அவள் எடுத்துக் கூறினாள்.

காவலர்கள் கூறிய விளக்கம்

மத்தேயு 28 : 11 - 15

இயேசுவின் கல்லறையைக் காவல் காத்துக் கொண்டிருந்த காவலர்களுள் சிலர் நகரத்துக்குள் சென்றார்கள். முதன்மைக் குருக்களிடத்தில் நடந்த எல்லாவற்றையும் எடுத்துக் கூறினார்கள்.

முதன்மைக் குருக்கள் மூப்பர்களுடன் கலந்து ஆலோசித்தார்கள். அவர்கள் காவலர்களுக்கு மிகுதியான பணம் கொடுத்து, "நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போது, இயேசுவின் சீடர்கள் வந்து அவருடைய உடலைத் திருடிச் சென்றுவிட்டார்கள்" என்று சொல்லுங்கள். ஆளுநர் இதைக் கேள்விப்பட்டால், நாங்கள் அவரிடம் பேசிக்கொள்ளுவோம். நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை" என்றார்கள்.

காவலர்கள் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குச் சொல்லப்பட்டபடியே செய்தார்கள். இன்று வரை யூதர்களிடையே இந்த வதந்தி பேசப்பட்டு வருகிறது.

எம்மாவு என்னும் ஊருக்குச் செல்லுதல்

லூக்கா 24 : 13 – 35

இயேசு உயிர்த்தெழுந்த நாளில், அவரைப் பின்பற்றுகிறவர்களில் இரண்டு பேர், எம்மாவு என்ற ஊருக்குச் சென்று கொண்டிருந்தார்கள். எருசலேமிலிருந்து அது பதினொரு கிலோ மிட்டர் தூரத்தில் இருந்தது. அவர்கள் அண்மையில் நிகழ்ந்த எல்லா நிகழ்ச்சிகளையும் பற்றி ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு சென்றார்கள். இயேசு வந்து, அவர்களுடன் சேர்ந்து கொண்டார். அவர்கள் அவரைக் கண்டார்கள். ஆனால் அவரை 'இயேசு' என்று அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவர்களிடம் "நீங்கள் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் ?" என்று கேட்டார்.

அவர்களில் கிலயோப்பா என்பவர் வருத்தத்துடன், "நாசரேத்தைச் சேர்ந்த இயேசுவுக்கு நடந்த நிகழ்ச்சிகளே! என்றார். "அவர் கடவுளிடத்திலிருந்து வந்த ஒரு இறைவாக்கினர். அவர் சொன்னவற்றிலும், செய்தவற்றிலும் கடவுளின் ஆற்றல் இருந்தது . ஆனால் ஆட்சியாளர்களும், முதன்மைக் குருக்களும், அவரைச் சிலுவையில்

அறையச் செய்தார்கள். நமது மக்களை விடுவிக்கப் போகிறவர் அவர்தான் என்று நம்பியிருந்தோம். அந்நிகழ்ச்சி நடந்து இன்று மூன்று நாட்களாகிறது.'' என்றார்.

மேலும், "எங்களைச் சேர்ந்த பெண்களில் சிலர் இன்று விடியற் காலையில் கல்லறைக்குச் சென்றார்கள். அங்கே இயேசுவின் உடலைக் காணவில்லை. அவர்களிடம் வானதூதர், "இயேசு உயிருடன் இருக்கிறார்'' என்று சொன்னதாக வந்து தெரிவித்தார்கள். பின்னர் எங்களில் சிலரும் கல்லறைக்கு ஓடி, அந்தப் பெண்கள் கூறியபடியே இருக்கக் கண்டார்கள். இதனால் நாங்கள் வியப்படைந்துள்ளோம்'' என்றார்.

இயேசு அவர்களிடம், "நீங்கள் எத்துணைப் பேதைகளாயிருக்கிறீர்கள்! மறை நூலில் இறைவாக்கினர்கள் கூறியிருக்கும் எல்லாவற்றையும் நம்ப இயலாதவர்களாய் மிகவும் மந்த புத்தியுள்ளவர்களாய் இருக்கிறீர்களே! மறுபடியும் கடவுளிடம் சென்று மகிமையடைவதற்கு முன் மீட்பர் இவ்வுலகில் இந்தத் துன்பங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டியது தேவையல்லா?'' என்று கேட்டார். பின்னர் இயேசு திருமறையில் எல்லா இடங்களிலும் அவரைப்பற்றிக் குறிப்பிட்டிருந்த பகுதிகளைச் சுட்டிக் காட்டி விளக்கினார். அவர் மோசேயின் நூல்களிலிருந்து பேசத் தொடங்கி, இறைவாக்கினர்களின் நூல்கள் வரை அவரைப் பற்றி எழுதிய அனைத்தையும் விளக்கிக் கூறினார்.

அவர்கள் எம்மாவு ஊருக்கருகில் வந்து சேர்ந்தனர். இயேசு அவர்கள் ஊரைக் கடந்து, வேறு இடத்துக்குத் தம் பயணத்தைத் தொடர்வது போலக் காட்டிக்கொண்டார். ஆனால், அவர்கள் அவரைப் போகவிட வில்லை. "இன்று எங்களோடு தங்கியிரும். ஏனெனில் நேரம் இருட்டி விட்டது'' என்றார்கள். எனவே, அவர் அவர்களுடன் தங்கும்படிச் சென்றார். அவர்களுடன் சாப்பிட உட்கார்ந்தார். அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். இதைக்கண்டவுடன் அவர் யார் என்று அறிந்து கொண்டார்கள். உடனே இயேசு அவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்து விட்டார். அப்பொழுது அவர்கள், "சாலையில் நாம் வந்து கொண்டிருந்தபொழுது, அவர் திருமறை வாக்குகளை நம்மிடம் விளக்கினார் அன்றோ! அப்பொழுது நமது உள்ளங்களில் ஒரு எழுச்சித் தோன்றியதல்லவா?!'' என்று சொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் இருவரும் உடனே புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள். அங்கே சீடர்கள் பதினொருவரும் மற்றவர்களும் கூடியிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் "நம் ஆண்டவர் உயிருடன் இருக்கிறார். அவர் சீமோன் பேதுருவுக்குக் காட்சியளித்தார்'' என்று சொல்லக் கேட்டார்கள்.

பின்னர் அவர்கள் இருவரும் தாங்கள் சென்ற போது வழியில் நடந்தவற்றை விளக்கிக் கூறினார்கள். இயேசு அப்பம் பிட்கும்போது அவரை 'ஆண்டவர்' என்று கண்டு கொண்டதாக அவர்கள் சொன்னார்கள்.

இயேசு தம் சீடர்களைச் சந்தித்தல்

யோவான் 20 : 19 – 23

ஞாயிற்றுக்கிழமை மாலையில் சீடர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினார்கள். அவர்கள் யூதர்களுக்குப் பயந்தபடியால் கதவுகளைப் பூட்டிக் கொண்டு இருந்தார்கள். திடீரென்று இயேசு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக'' என்றார். அவர் தன்னுடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காட்டினார். ஆண்டவரைக் கண்டதும் அவர்கள் அளவில்லா மகிழ்ச்சி கொண்டார்கள். மறுபடியும் இயேசு அவர்களிடத்தில், "உங்களுக்கு அமைதி உரித்தாகுக'' என்னுடைய தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். பின்னர் அவர்கள் மீது ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் மக்களின் பாவங்களை மன்னித்தால், அவை மன்னிக்கப்படும். நீங்கள் மன்னிக்காவிட்டால் அவை மன்னிக்கப்படுவதில்லை'' என்றார்.



அவர்களை வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், "உன்னுடைய விரல்களால் என் கைகளிலிருக்கும் தழும்புகளைத் தொடு. உன்னுடைய கையை நீட்டி என் விலாவில் இருக்கும் தழும்பைத் தடவிப்பார். சந்தேகப்படுவதை நிறுத்து. நம்பிக்கை உடையவனாயிரு" என்றார். அப்பொழுது தோமா, "என் ஆண்டவரே! என் கடவுளே!" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "நீ என்னைக் கண்டதினாலேயே நம்புகிறாய்? என்னைக் காணாமலேயே நம்புகிறவர்கள் மிகுந்த பேறுபெற்றவர்கள்!" என்றார்.

இயேசுவும் தோமாவும்

யோவான் 20 : 24 – 29

இயேசு சீடர்களுக்குக் காட்சியளித்த போது சீடர்களில் ஒருவரான தோமா அங்கு இருக்கவில்லை. எனவே மற்ற சீடர்கள் அவரிடம் "நாங்கள் ஆண்டவரைக் கண்டோம்" என்றபோது அவர் நம்பவில்லை.

தோமா அவர்களிடம், "நான் அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்புகளைப் பார்க்க வேண்டும். என்னுடைய விரல்களால் அந்தத் தழும்புகளைத் தடவிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நான் நம்புவேன்" என்றார்.

ஒரு வாரத்துக்குப் பின்னர், இயேசுவின் சீடர்கள் அனைவரும், ஒரு அறையில் கூடியிருந்தார்கள். அப்பொழுது தோமாவும் அவர்களுடன் இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. ஆனால் இயேசு அங்கு வந்து, அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று சொல்லி



கலிலேயா கரையில் இயேசு

யோவான் 21:1-14

திபேரிய கடற்கரையில் இயேசு, தமது சீடர்களுக்கு மறுபடியும் ஒரு முறை காட்சியளித்தார்.

ஒரு நாள் சீமோன் பேதுரு, தோமா, நாத்தான்வேல், யாக்கோபு, யோவான் மற்றும் வேறு இரண்டு சீடர்களும் ஒன்றாகக் கூடியிருந்தார்கள். சீமோன் பேதுரு அவர்களிடம் "நான் மீன் பிடிக்கப் போகிறேன்" என்றார். அதற்கு அவர்கள் "நாங்களும் உம்முடன் வருகிறோம்" என்றார்கள். எனவே அவர்கள் அனைவரும் படகில் ஏறி மீன்பிடிக்கச் சென்றார்கள். ஆனால் அந்த இரவு முழுவதும் முயன்றும் அவர்களுக்கு மீன் கிடைக்கவில்லை. சூரியன் உதயமாகிற போது இயேசு கரையில் நின்றார். சீடர்கள் அது இயேசு என்று அறியவில்லை. அவர் அவர்களிடம், "அன்பர்களே! உங்களுக்கு மீன்கள் ஏதும் அகப்படவில்லையா?" என்று கேட்டார். அவர்கள், "இல்லை, எதுவுமே எங்களுக்குக் கிடைக்கவில்லை" என்றார்கள்.

அவர் அவர்களிடம், "நீங்கள் உங்கள் வலைகளைப் படகின் வலது பக்கமாக வீசுங்கள். அப்பொழுது உங்களுக்கு மீன்கள் கிடைக்கும்" என்றார். எனவே அவர்கள் அவர் சொன்னபடியே வலையை வீசினார்கள். பின்னர் அவர்களால் அந்த வலையை இழுத்துப் படகில் சேர்க்க முடியவில்லை. ஏனெனில், அவ்வளவு மிகுதியான மீன்கள் வலையில் கிடைத்திருந்தன.

யோவான் பேதுருவிடம், "அவர் நம் ஆண்டவர்!" என்றார். இதைக் கேட்டதும் பேதுரு, தன் மேல் உடையை உடலில் கட்டிக் கொண்டு தண்ணீருக்குள் குதித்துவிட்டார். மற்ற சீடர்கள் படகில் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். மீன்கள் நிறைந்த வலையை இழுத்துக் கரை சேர்த்தார்கள். அவர்கள் கரையிலிருந்து நூறு மீட்டர் தொலைவில் இருந்தார்கள். அவர்கள் படகிலிருந்து இறங்கின போது, நெருப்புத் தணலில் மீன் வேகவைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அங்கே சில அப்பங்களும் இருந்தன. இயேசு அவர்களிடத்தில், "நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள்" என்றார்.

பேதுரு படகிற்குச் சென்று வலையைக் கரைக்கு இழுத்து வந்தார். அதில் நூற்று ஐம்பத்து மூன்று பெரிய மீன்கள் நிறைந்து இருந்தன. அவ்வளவு அதிகமான மீன்கள் இருந்த போதும் அந்தவலை கிழியவில்லை.

இயேசு அவர்களைப் பார்த்து "வாருங்கள், வந்து சாப்பிடுங்கள்" என்று அழைத்தார். சீடர்களில் ஒருவரும், "நீர் யார்?" என்று அவரிடம் கேட்கவில்லை. ஆனால் அவர் "ஆண்டவர்" என்று அறிந்து கொண்டார்கள். இயேசு அப்பத்தை எடுத்து, அவர்களுக்குச் சாப்பிடக் கொடுத்தார். மீன்களையும் எடுத்துக் கொடுத்தார்.

இயேசு மரணத்திலிருந்து உயிர்பெற்று எழுந்தபின் தம் சீடர்களுக்கு அளித்த மூன்றாவது காட்சி இதுவாகும்.

அவர்கள் சாப்பிட்டு முடிந்தபின், இயேசு பேதுருவைப் பார்த்து, "இவர்களைவிட அதிகமாய் நீ என்னிடம் அன்பு கூருகிறாயா?" என்று கேட்டார். பேதுரு, "ஆம் ஆண்டவரே! நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றார். இயேசு "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார்.

இயேசு இந்தக் கேள்வியைப் பேதுருவிடம் மூன்று முறை கேட்டார். பேதுரு அவரிடம் எத்துணை மிகுதியாய் அன்பு கொண்டிருந்தார் என்பதை இயேசு அறிவார் என்று பேதுரு பதிலளித்தார். இயேசு தன் மந்தையை மேய்க்குமாறு பேதுருவுக்குக் கட்டளையிட்டார்.

பின்னர் பேதுரு, எத்தகைய மரணத்தைச் சந்தித்து, அதன்மூலம் கடவுளை மகிமைப் படுத்தப் போகிறார் என்பதையும் அவருக்கு எடுத்துக் கூறினார்.

இயேசுவின் இறுதி அறிவுரைகள்

மத்தேயு 28 : 16 – 20; திருத்தூதர் பணிகள் 1 : 8

பதினொரு சீடர்களும், இயேசு அவர்களிடம் சொன்னபடியே, கலிலேயாவிலுள்ள, ஒரு மலைக்குச் சென்றார்கள். இயேசு அவர்களுக்குக் காட்சியளித்தார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள். சிலரோ சந்தேகப்பட்டார்கள்.

இயேசு அவர்கள் அருகில் சென்று, "விண்ணுலகிலும், மண்ணுலகிலும், அனைத்து அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது" எனவே, நீங்கள் எல்லா இடங்களிலும், மக்களிடத்திற்குச் சென்று அவர்களைச் சீடராக்குங்கள். தந்தை, மைந்தன், தூய ஆவி என்னும் பேரால் அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றுக்கும், அவர்களும் கீழ்ப்படியும்படி அவர்களுக்குக் கற்பியுங்கள். இறுதிவரை நான் உங்களுடனே இருப்பேன்.

தூய ஆவியார் உங்களிடம் வரும் போது உங்களுக்குள் மிகுந்த ஆற்றல் நிறைந்து விடும். நீங்கள் என்னைப்பற்றிய உண்மையை எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் எல்லையெங்கும் அறிவிக்க வேண்டும்" என்றார்.

இயேசு விண்ணுலகுக்கு எடுத்துக் கொள்ளப்படுதல்

திருத்தூதர் பணிகள் 1 : 9 – 14

இயேசு தம் இறுதி அறிவுரைகளைக் கூறி முடித்த பின்னர், அவர் மேகங்களின் மேல் எடுத்துக் கொள்ளப்பட்டார்.

அப்பொழுது வெண்ணுடை அணிந்த இருவர் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த சீடர்களிடம், "கலிலேயரே, வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்? விண்ணுலகிக்கு இயேசு எடுத்துக் கொள்ளப்பட்டதை நீங்கள் கண்டீர்கள். அவர் எவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அவ்வாறே திரும்ப வருவார்" என்று கூறினார்கள்.

பின்னர் அவர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள். அவர்கள் நகரத்துக்குள் நுழைந்ததும் தாங்கள் தங்கியிருந்த மேல்மாடி அறைக்குச் சென்றார்கள். அவர்கள் எல்லோரும் தொடர்ந்து, ஒன்றாகக் கூடி இறை வேண்டல் செய்து வந்தார்கள். மற்ற ஆண்களும், பெண்களும் இவர்களுடன் கூடி இறை வேண்டல் செய்தார்கள். இயேசுவின் தாயாகிய மரியாவும், இயேசுவின் உடன் பிறப்புக்களும் சீடர்களுடன் சேர்ந்து இறைவனிடம் வேண்டுதல் செய்து கொண்டிருந்தார்கள்.

மாற்றம் பெற்ற சீடர்கள்

தூய ஆவியின் வருகை

திருத்தூதர் பணிகள் 2 : 1 - 13

பாஸ்கா விழா முடிந்து ஐம்பது நாட்கள் சென்றபின் நடைபெறும் விழாவே, "பெந்தேகோஸ்தே விழா" ஆகும். கடவுள் மோசேயிடம் சீனாய் மலையில் பத்து திருச்சட்டங்களைக் கொடுத்த நாளை நினைவு கூரும் வகையில் இவ்விழா கொண்டாடப் பட்டது. மேலும் அது பார்லி அறுவடை கால 'அறுவடை விழா'வாகவும் கொண்டாடப் பட்டது. இக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காகப் பல யூதர்கள் எருசலேமுக்கு வருவார்கள்.

இயேசுவிடம் பற்றுறுதி வைத்திருந்த மக்கள் அனைவரும் பெந்தேகோஸ்தே திருநாளில், ஒரு வீட்டில் ஒன்றாகக் கூடியிருந்தார்கள். திடீரென்று மேலிருந்து ஒரு இரைச்சல் கேட்டது. அந்த ஒலி வீடு முழுவதும் எதிரொலித்தது. அது ஒரு பலத்த காற்று வீசும் இரைச்சலைப் போல இருந்தது. பின்னர் நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் பரவி, அங்கிருந்த ஒவ்வொருவரையும் தொட்டது. அவர்கள் அனைவரும் கடவுளின் தூய ஆவியின் ஆற்றலினால் நிரப்பப்பட்டார்கள். அவர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்.

பல நாடுகளிலிருந்து, சமயப்பற்றுள்ள யூதர்கள் எருசலேமுக்கு வந்திருந்தார்கள். இந்த ஒலியைக் கேட்டதும், அவர்கள் விரைந்து சென்று, வீட்டினுள் நுழைந்தார்கள். அங்கு வந்து கூடிய ஒவ்வொருவரும் தங்களுடைய மொழியில், இயேசுவின் நண்பர்கள் பேசியதைக் கேட்டு வியப்பு அடைந்தார்கள். கலக்கமும், வியப்பும் கொண்ட அம்மக்கள், "இப்படிப் பேசிக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் கலிலேயர்கள் அல்லவா? அவர்கள் நம்முடைய தாய்மொழிகளில் கடவுள் செய்திருக்கும் அதிசயச் செயல்கள் பற்றிப் பேசுகிறதைக் கேட்கிறோமே! இது என்ன விந்தை! இதன் பொருள் என்ன?" என்று கேட்டுக்கொண்டார்கள்.

வேறுசிலர், "இந்த மக்கள் குடிவெறியில் பிதற்றுகிறார்கள்!" என்று, அந்த அன்பர்களை ஏளனம் செய்தார்கள்.

பேதுரு துணிவுடன் நற்செய்தி அறிவித்தல்

திருத்தூதர் பணிகள் 2 : 14, 15, 22 - 24, 32, 33, 36 - 41

பேதுரு, மற்ற சீடர்களோடு எழுந்து நின்றார். அவர் கூட்டத்தினரைப் பார்த்து, உரத்தக் குரலில் பேசத்தொடங்கினார். "என் உடன் யூதர்களே! எருசலேமில் வசிக்கும் மக்களே! நான் பேசுவதைக் கவனியுங்கள். இங்கு நிகழ்வது என்னவென்று நான் விளக்கிக் கூறுகிறேன். இதோ, இந்த மக்கள் நீங்கள் நினைப்பதுபோல குடி வெறியில் இல்லை. இது பொழுதுவிடிந்து மூன்றாம் மணி வேளைதானே. என்னுடைய மக்களே! இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள். நாசரேத்தைச் சேர்ந்த இயேசு செய்த எல்லா அருஞ் செயல்கள் மூலமாகவும் கடவுள் செயல்பட்டார். அதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இயேசு உங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதும் கடவுளின் திட்டத்தில் இருந்தது. பாவிகளான மனிதர்களைக் கொண்டு நீங்கள் அவரைச் சிலுவையில் அறையச் செய்தீர்கள். ஆனால், கடவுள் அவரை மரணத்திலிருந்து எழுப்பிவிட்டார். மரணம் அவரைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியவில்லை.

கடவுள், இயேசுவை உயிர்த்தெழச் செய்து, மாட்சியோடு தனது வலது பக்கத்தில் அமரச் செய்திருக்கிறார். கடவுள் வாக்குறுதி செய்திருந்தபடியே, இயேசு அவரிடமிருந்து தூய ஆவியைப் பெற்று, எங்கள் மேல் பொழிந்தருளினார். நீங்கள் இப்பொழுது இங்கே கண்டவையும், கேட்டவையும் தூய ஆவியானவரை அருட்கொடையாக இயேசு எங்கள் மேல் பொழிந்த செயல் ஆகும்.

இவ்வுலகத்திற்கு ஆண்டவரும், மீட்பருமாகக் கடவுள் அனுப்பிய அந்த இயேசுவைத்தான் நீங்கள் சிலுவையில் அறைந்து கொலை செய்தீர்கள்."

மக்கள் இதைக் கேட்டபோது, குற்ற உணர்வு கொண்டு மிகுந்த வருத்தமுற்றார்கள்.

அவர்கள் பேதுருவிடத்திலும், மற்ற சீடர்களிடத்திலும், "இப்பொழுது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.

பேதுரு அவர்களிடம், "ஒவ்வொருவரும் உங்கள் பாவ வழிகளைவிட்டு, மனம் மாற்றமடைய வேண்டும். பின்னர் இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற வேண்டும். கடவுள் உங்கள் பாவங்களை மன்னிப்பார். அவர் தூய ஆவியானவரின் அருட் கொடைகளை உங்களுக்குத் தந்தருளுவார்" என்றார். "கொடியோருக்கு வரப்போகும் தண்டனைகளிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்" என்றும் அவர்களை எச்சரித்தார்.

இந்தச் செய்தியைக் கேட்டவர்களில் பலர் நம்பிக்கைக் கொண்டு திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று மட்டும் ஏறக்குறைய மூவாயிரம்பேர், திருமுழுக்குப் பெற்று அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

தொடக்கக் கால கிறிஸ்தவர்கள் வாழ்ந்த முறை

திருத்தூதர் பணிகள் 2 : 42 – 47

பற்றுறுதி கொண்டவர்கள் அனைவரும் சீடர்களிடமிருந்து கற்றுக் கொள்வதில் தங்கள் நேரத்தைச் செலவிட்டார்கள். அவர்களுடைய திருவிருந்திலும், இறைமன்றாட்டுகளிலும் பங்கெடுத்தார்கள். சீடர்கள் பல அருஞ் செயல்களைச் செய்தார்கள். ஒவ்வொருவரும் கடவுள் தம்முடன் இருப்பதை உணர்ந்தனர். எல்லோரும் ஒன்றாக வாழ்ந்தனர். தங்களுக்கு உள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டனர். உடைமைகளை விற்று கிடைக்கும் பணத்தைத் தேவையில் இருப்பவர்களுக்குக் கொடுத்தனர்.

ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒன்றுகூடி கடவுளைப் போற்றினார்கள். நன்றி செலுத்தி, மகிழ்ச்சியுடன் தங்கள் உணவைச் சாப்பிட்டு வந்தார்கள். எல்லோரும் அவர்களைப் பற்றி நல்லெண்ணம் கொண்டிருந்தார்கள். ஆண்டவரின் அருளினால் புதிதாக மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, நாள்தோறும் பெருகிக்கொண்டிருந்தது.

இறைப்பணியாளர்களின் பணிகள்

பேதுரு கால் ஊனமுற்ற ஒருவருக்கு நலமளித்தல்

திருத்தூதர் பணிகள் 3 : 1 – 10

ஒரு நாள், இறைவேண்டல் நேரமாகிய ஒன்பதாம் மணி வேளையில் பேதுருவும், யோவானும் ஆலயத்திற்குச் சென்றார்கள். ஆலயத்தின் அழகுவாயிலின் அருகில், பிறவியிலேயே கால் ஊனமுற்ற ஒரு மனிதன் இருந்தான். ஆலயத்திற்குப் போவோரிடம், பிச்சை கேட்கும்படி சிலர் தினமும் அவனைத் தூக்கிக் கொண்டுவந்து, அங்குவைப்பார்கள். அவன் பேதுருவையும், யோவானையும் கண்டபோது, அவர்களிடத்தில் பிச்சை கேட்டான். அவர்கள் அவனை நேராக உற்றுப்பார்த்தார்கள். பேதுரு அவனிடம், "எங்களை நோக்கிப் பார்" என்றார். அவன் அவர்களிடமிருந்து ஏதாவது கிடைக்கும் என்று நம்பி, அவர்களை நோக்கிப் பார்த்தான். பேதுரு அவனிடம், "என்னிடம் பணம் எதுவும் இல்லை என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்." "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடக்கும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்றார்.

பின்னர் அவர் அவனுடைய வலது கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அந்த மனிதனுடைய கால்களும், மூட்டுகளும் பலங்கொண்டன. அவன் குதித்தெழுந்து, காலூன்றி நின்றான். சுற்றிலும் நடக்கத் தொடங்கினான். பின்னர் அவன், அவர்களுடன் ஆலயத்திற்குள் சென்றான். அவன் மகிழ்ச்சியினால் குதித்துக் கொண்டும், கடவுளைத் துதித்துக் கொண்டும் சென்றான். மக்கள் அவன் நடப்பதையும், கடவுளைத் துதிப்பதையும் கண்டார்கள். அவன் அழகு வாயிலின் அருகில் உட்கார்ந்திருக்கும் பிச்சைக்காரன்தான் என்று கண்டு கொண்டார்கள். அந்த அருஞ்செயலைக் கண்டு, அவர்கள் மிகுதியாக வியப்படைந்தார்கள்.

பேதுரு ஆலயத்தில் பேசுதல்

திருத்தூதர் பணிகள் 3 : 11 – 19

பேதுருவும், யோவானும் சாலமோன் மண்டபத்திற்கு வந்தார்கள். நலமடைந்த மனிதன் இன்னும் அவர்களோடு இருந்தான். இதைக்கண்டு வியப்படைந்த மக்கள் அங்கு கூடிவந்தார்கள். பேதுரு அவர்களிடம், "அன்பர்களே! நீங்கள் ஏன் இவ்வளவு வியப்படைகிறீர்கள்? நீங்கள் ஏன் எங்களையே நோக்கிப் பார்க்கிறீர்கள்? எங்களுடைய ஆற்றலோ, வாழ்வின் தூய்மையோ இந்த மனிதனை நடக்கச் செய்தது என்று நினைக்காதீர்கள். நமது மூதாதையர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் கடவுளாகிய ஆண்டவரே இதைச் செய்திருக்கிறார். அவர் தம் புதல்வனாகிய இயேசுவை மாட்சிமைப்படுத்தியிருக்கிறார். ஆனால், நீங்கள் அவரைக் கொலை செய்வதற்கு ஒப்புவித்தீர்கள். நீங்கள் பிலாத்திடம் "அவர் எங்கள் அரசரல்ல" என்றீர்கள். பிலாத்து அவரை விடுதலை செய்ய விரும்பினான். ஆனால் நீங்கள் அவ்வாறு செய்யவிடவில்லை. அவருக்குப் பதிலாக ஒரு கொலையாளியை விடுதலை செய்யுமாறு பிலாத்திடம் வேண்டினீர்கள். வாழ்வுதரும் ஒருவரை நீங்கள் கொலை செய்தீர்கள். ஆனால், கடவுள் அவரை உயிர்பெற்றெழச் செய்தார். இயேசுவின் பெயரில் உள்ள ஆற்றல் இந்த ஊனமுற்ற மனிதனுக்கு வலிமையைக் கொடுத்தது. இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கை இவனை நலமடையச் செய்தது. இங்கு நடைபெற்றதை நீங்கள் எல்லோரும் பார்த்தீர்கள்.

என்னுடைய சகோதரர்களே! நீங்களும், உங்கள் தலைவர்களும் இயேசுவுக்கு என்ன செய்தீர்கள் என்பதை நீங்கள் அறியவில்லை.

கடவுள் வெகுகாலத்துக்கு முன்பே, தமது இறைவாக்கினர்கள் மூலமாக, "உலக மீட்பர் பல துன்பங்களை ஏற்று இறப்பார்" என்று கூறியிருந்தார். அவை இப்படி நிறைவேறும்படிச் செய்தார். நீங்கள் உங்கள் பாவங்களை விட்டு மனம் மாறுங்கள். கடவுளிடம் திரும்புங்கள். அப்பொழுது அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார்" என்றார்.

பேதுருவும், யோவானும் யூத சங்கத்தின் முன் நிறுத்தப்படுதல்

திருத்தூதர் பணிகள் 4 : 1 – 22

பேதுருவும், யோவானும் மக்களிடம், "இயேசு உயிர்த்தெழுந்தபடியால் அதுபோலவே, இறந்தவர்களும் உயிர்த்தெழுவார்கள்" என்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கு வந்த சில குருக்களும், சதுசேயர்களும், ஆலய காவலர்களின் தலைமை அதிகாரியும் குழப்பமடைந்தபடியால், பேதுருவையும், யோவானையும் பிடித்து உடனே சிறையில் அடைத்தார்கள். ஆனால், அவர்கள் அளித்த செய்தியைக் கேட்ட மக்கள் பலர் இயேசுவின் மீது பற்றுறுதி கொண்டார்கள். இப்படி மனமாற்றம் அடைந்தோரின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம் ஆயிற்று.

மறுநாள்; யூதத்தலைவர்கள் எருசலேமில் கூடினார்கள். அங்கே தலைமைக் குருவான அன்னா, காய்பா, யோவான், அலெக்சாந்தர் மற்றும் தலைமைக் குருவின் குடும்பத்தார் அனைவரும் கூடினார்கள். இறைப் பணியாளர்கள் இருவரையும் அவர்களுக்கு முன்னால் அழைத்து வந்து நிறுத்தினார்கள். அவர்களிடம், "நீங்கள் இதை எப்படிச் செய்தீர்கள்? எந்த ஆற்றலினால் இதைச் செய்தீர்கள்? யாருடைய பெயரால் செய்தீர்கள்?" என்று கேட்டார்கள்.

பேதுரு, தூயாவியால் ஆட்கொள்ளப் பட்டவராய் அவர்களிடத்தில், "மக்களின் தலைவர்களே! மூப்பர்களே! கால் ஊனமுற்றவனுக்குச் செய்யப்பட்ட இந்த நன்மையைக் குறித்து கேள்விகளைக் கேட்கிறீர்கள். அவன் நலமடைந்தது எப்படி? நீங்களும் இஸ்ரயேலர் அனைவரும் அறியவேண்டியதைக் கூறுகிறேன். இந்தக் கால் ஊனமுற்ற மனிதன், நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரின் ஆற்றலால் நலம் பெற்றுள்ளான்.

"வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் இகழ்ந்துத் தள்ளப்பட்ட கல் இயேசுவே; ஆனாலும் முதன்மையான மூலைக்கல்லாக அவரே விளங்குகிறார்."

இயேசு, கடவுளால் நமக்குத் தரப்பட்ட பரிசு. "மீட்பு" என்பது அவர் ஒருவர் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடியது. வேறு எவராலும் நம்மை மீட்க முடியாது" என்று கூறினார்.

யூத சங்கத்தின் உறுப்பினர்கள் பேதுருவும், யோவனும் பேசும் துணிவைக் கண்டு வியப்படைந்தார்கள். அவர்கள், அந்த இருவரையும் வெளியே போகச் சொன்னார்கள். பின்னர் யூத சங்கத் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். "இந்த மனிதர்களை நாம் என்ன செய்யலாம்?" என்று கேட்டார்கள். "எருசலேம் நகரத்தார் யாவரும் இவர்களால்தான் இந்த அருஞ்செயல் செய்யப்பட்டது" என்று அறிந்திருகிறார்கள். நாமும் அதை மறுக்க முடியாது. ஆனால் நாம் இவ்விருவரிடமும், "இனிமேல் ஒரு போதும் எவருக்கும், இயேசுவின் பெயரைக் கூறி போதனை செய்யக் கூடாது என்று கடுமையாக எச்சரிப்போம்" என்று முடிவு செய்தார்கள்.

பின்னர் அவர்கள்; இருவரையும் உள்ளே அழைத்தார்கள். அவர்களிடம், "இனிமேல் நீங்கள் போதிக்கும் போதோ, பேசும் போதோ, இயேசுவின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது" என்று கட்டளையிட்டார்கள்.

பேதுருவும், யோவானும், துணிவுடன் அவர்களிடம், "நாங்கள் உங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா? அல்லது கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா? ஏனென்றால் நாங்கள் கண்ட, கேட்ட செய்திகளைப் பற்றிப் பேசுவதை நிறுத்த முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள்.

பின்னர்; அந்தச் சங்கம் அவர்களை மிகக் கடுமையாக எச்சரித்து விட்டுவிட்டது.

கடவுள் பலருக்குச் சுகமளித்தல்

திருத்தூதர் பணிகள் 5 : 12 – 16

எல்லா பற்றுறுதி கொண்டவர்களும் சாலமோன் மண்டபத்தில் வந்து கூடினார்கள். பலர் பயத்தினால் இவர்களுடன் சேர்ந்து கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் இறைப்பணியாளர்களின் பணிகளைப் பற்றி மிக உயர்வாய்ப் பேசினார்கள். எனவே, தினமும் எண்ணற்ற ஆண்களும், பெண்களும், ஆண்டவராகிய இயேசுவின்மேல் பற்றுக் கொண்டு, இந்தக் கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டே இருந்தார்கள்.

மக்கள் மத்தியில் அப்பணியாளர்கள் பல அருஞ்செயல்களைச் செய்தார்கள். அவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டவர்கள், நோயாளிகளை வீட்டிலிருந்து வெளியே தெருவுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களைப் படுக்கைகளிலோ அல்லது பாய்களிலோ, சாலையோரமாகப் படுக்கவைத்திருப்பார்கள். பேதுரு அவ்வழியாகக் கடந்து செல்லும்போது அவருடைய நிழலாவது அந்த நோயாளிகளின் மீது படாதா? என்று எதிர்பார்த்தார்கள். எருசலேமைச் சுற்றிலுமுள்ள நகரங்களில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். அவர்களும் நோயாளிகளையும், அசுத்த ஆவி பிடித்தவர்களையும் கொண்டு வந்தார்கள். எல்லோரும் நலமும், விடுதலையும் பெற்றார்கள்.

இறைப்பணியாளர்கள் கைது செய்யப்படுதல்

திருத்தூதர் பணிகள் 5 : 17 – 35, 38 – 42

தலைமைக்குருவும், சதுசேயர்களும், இறைப்பணியாளர்களின் மேல் அதிகப் பொறாமை கொண்டார்கள். அதனால் அவர்களுக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் இருவரையும் கைது செய்து, பொதுச் சிறையில் அடைத்தார்கள். ஆனால் அந்த இரவில் கடவுளுடைய தூதர் வந்து சிறையின் வாசல்களைத் திறந்துவிட்டார். அவர் இறைப்பணியாளர்களைச் சிறையிலிருந்து வெளியே அழைத்து வந்து அவர்களிடம், "நீங்கள் போய் ஆலயத்தில் நில்லுங்கள். நீங்கள் மக்களிடம் இந்தப் புதுவாழ்வு தரும் வார்த்தைகளைப் பற்றிப் பேசுங்கள்" என்றார். இருவரும் தூதர் சொன்னவற்றுக்குக் கீழ்ப்படிந்தார்கள். விடியற்காலையில் அவர்கள் ஆலயத்தினுள் சென்று அங்கு மக்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்கள்.

தலைமைக்குரு ஆலோசனைச் சங்கத்தின் கூட்டத்தைக் கூட்டினார். சிறைச் சாலையிலிருந்த இரண்டு இறைப்பணியாளர் களையும் அழைத்து வர ஒரு ஆணை

பிறப்பிக்கப்பட்டது. அதன்படி அதிகாரிகள் சென்றபோது சிறையில் அவர்களைக் காணவில்லை. எனவே, அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குத் திரும்பிவந்து "நாங்கள் சென்ற போது, சிறைச்சாலை நன்கு பூட்டப்பட்டிருந்தது. எல்லா வாசல்களிலும் சிறைக் காவலாளிகள் காவல்காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நாங்கள் வாசல்களைத் திறந்தபோது உள்ளே ஒருவரையும் காணவில்லை" என்றார்கள்.

இதைக் கேள்விப்பட்டதும், 'அவர்களுக்கு என்ன ஆயிற்று!' என்று வியப்படைந்தார்கள். அப்பொழுது ஒருவர் ஓடி வந்து அவர்களிடம், "நீங்கள் சிறையில் அடைத்த மனிதர்கள் இப்பொழுது ஆலயத்தில் மக்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார். எனவே அதிகாரி, தனது ஆட்களுடன் சென்று இறைப்பணியாளர்களை அழைத்து வந்தான். அவர்கள் மீது எவ்விதமான வன்முறையையும் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அப்படிச் செய்தால் மக்கள் அவர்களைக் கல்லெறிந்து விடுவார்கள் என்று பயப்பட்டார்கள்.

அவர்கள் ஆலோசனைச் சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டார்கள். "இயேசுவின் பெயரால் எந்தப் போதனையையும் செய்யக்கூடாது" என்று உங்களுக்குக் கண்டிப்பான ஆணை பிறப்பித்திருந்தோம். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? எருசலேம் நகரம் முழுவதிலும் உங்கள் போதனைகளைப் பரவச் செய்து விட்டீர்கள். 'இயேசுவின் மரணத்திற்கு நாங்கள்தான் காரணம்' என்று எங்களைக் குற்றம் சாட்ட முயன்று கொண்டிருக்கிறீர்கள்" என்று தலைமைக்குரு கோபமாகக் கேட்டார்.

அதற்குப் பேதுரு, "நாங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; மனிதர்களுக்கு அல்ல. இயேசு சிலுவையில் அறைந்து கொல்லப்பட நிங்களே காரணம். இஸ்ரயேல் மக்களுக்குத் தங்கள் பாவங்களிலிருந்து மனம் மாறி மன்னிப்புப்பெற இன்னொரு வாய்ப்பைக் கடவுள் அளிக்கிறார். இதைத்தான் நாங்கள் எல்லா மக்களிடமும் கூறுகிறோம்." என்றார்.

சங்க உறுப்பினர்கள் இதைக் கேட்டதும் மிகவும் கோபங்கொண்டார்கள். இறைப் பணியாளர்களைக் கொலைசெய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால், பரிசேயரான கமாலியேல் சங்கத்தின் முன் எழுந்து நின்றார். அவர் ஒரு சமய ஆசிரியர். அவர் எல்லா மக்களாலும் மதிக்கப்பட்டவர். அவர் இறைப் பணியாளர்களைச் சிறிது நேரம் வெளியே அழைத்துச் செல்லும்படி கட்டளையிட்டார். பின்னர் ஆலோசனைச் சங்கத்தாரிடம், "என் இனத்தாராகிய மக்களே! நீங்கள் இந்த மனிதர்களுக்குச் செய்யவிருப்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவசரத்தில் அவர்களுக்கெதிராக எதையும் செய்து விடாதீர்கள்; அவர்களை விட்டுவிடுங்கள். அவர்கள் மனிதருடைய செயல்களைச் செய்தால் அவை மறைந்து போகும். ஆனால் அவர்கள் ஆற்றும் செயல்கள் கடவுளிடமிருந்து வருகிறவையாக இருந்தால், நீங்கள் அவற்றை எதிர்க்க முடியாது. நீங்கள் கடவுளோடு போரிடுகிறவர்களாயிருப்பீர்கள்" என்றார். இவற்றைக் கேட்ட ஆலோசனைச் சங்கத்தார், அவரின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். இறைப்பணியாளர்களை மறுபடியும் உள்ளே அழைத்து அவர்களைச் சவுக்கினால் அடிக்கச் செய்தார்கள். அவர்கள் இயேசுவைப் பற்றி எங்கும், எப்போதும் பேசக்கூடாது என்று கட்டளையிட்டார்கள். பின்னர் அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். இறைப் பணியாளர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். ஏனெனில், இயேசுவுக்காகத் துன்பங்களை அனுபவிக்கக் கடவுள் அவர்களைத் தெரிந்தெடுத்திருந்தார். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஆலயத்திற்கும், மக்களின் இல்லங்களுக்கும் சென்றார்கள். மீட்பராகிய இயேசுவைப்பற்றிய நற்செய்தியைத் தொடர்ந்து கற்பித்துக் கொண்டும், போதித்துக் கொண்டும் வந்தார்கள்.

நற்செய்தி பரவுதல்

'யூதர்கள்' என்னும் பெயர்கொண்ட 'இஸ்ரயேல்' மக்களுக்காகத்தான் கடவுள் அதிகமாகப் பேசினார் என்று நாம் இதுவரை பார்த்திருக்கிறோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்களின் மூலமாகக் கடவுள் அவர்களுடன் பேசினார். பின்னர் அவர் மோசேயின் மூலமாகவும், இறைவாக்கினர்கள் மூலமாகவும் இறுதியாக ஆண்டவராகிய இயேசுவின் மூலமாகவும் பேசினார்.

"இயேசுவின் நற்செய்தி உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் உரியது" என்பதைப் பேதுருவும் மற்ற திருப்பணியாளர்களும் மிக விரைவில் புரிந்துகொண்டார்கள்.

"தம்முடைய செய்தியை உலகெங்கும் பரவச் செய்ய கடவுள் அவர்களை அழைத்துக் கொண்டிருக்கிறார்" என்பதை அவர்கள் அறிவித்தார்கள்.

ஒரு புதிய திருப்பணியாளர் அழைக்கப்படுதல்

நற்செய்தியை வெறுத்த சவுல்

திருத்தூதர் பணிகள் 8 : 1 – 3

சவுல் ஒரு நல்ல கல்வியறிவு பெற்ற பரிசேயன். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் என்று அவன் திட்டமாக நம்பினான்.

ஒருமுறை யூதத் தலைவர்களால் இளைஞரான ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டார். ஸ்தேவான் இறப்பதை மகிழ்ச்சியுடன் வேடிக்கை பார்த்தவன் சவுல்.

இயேசுவின் மீது மிகுந்த பற்றுறுதி கொண்ட ஸ்தேவான் கொல்லப்பட்ட அன்று எருசலேமிலுள்ள இரக்கமற்ற யூதர்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்களைத் துன்பப்படுத்தத் தொடங்கினார்கள். ஸ்தேவானின் மரணம் குறித்து வருந்திய சில நல்லவர்கள் அவரது உடலை அடக்கம் செய்தார்கள். திருப்பணியாளர்கள் தவிர கிறிஸ்துவின்மீது பற்றுக்கொண்ட எல்லா அன்பர்களும் யூதேயாவிலும், சமாரியாவிலும் உள்ள பல இடங்களுக்குப் பயந்து ஓடிப் போனார்கள்.

சவுலும் கிறிஸ்துவின்மீது பற்றுறுதி கொண்டவர்களைத் துன்பப்படுத்தி வந்தான். அவன் வீடு, வீடாகச் சென்று ஆண்களையும், பெண்களையும் வெளியே இழுத்து வந்து சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தான்.

தமஸ்கு செல்லும் சாலையில்...

திருத்தூதர் பணிகள் 9 : 1 – 19

இயேசுவைப் பின்பற்றுகிறவர்களைக் கொலைசெய்து விடுவதாக சவுல் தொடர்ந்து பயமுறுத்திக் கொண்டிருந்தான். அவர்களைக் கைது செய்து எருசலேமுக்குக் கொண்டுவர, தலைமைக் குருவிடமிருந்து தமஸ்கு பட்டணத்திலுள்ள யூதத்தலைவர்களுக்கு அவன் கடிதங்களை வாங்கி வந்தான்.

சவுல், தமஸ்குவுக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது, அவனைச் சுற்றிலும் ஒரு சுடர்மிகு ஒளி வானத்திலிருந்து வீசியது. அவன் கீழே விழுந்தான். "சவுலே! சவுலே! நீ ஏன் எனக்குத் துன்பம் கொடுத்துக் கொண்டிருக்கிறாய்?" என்னும் ஒரு குரலைக் கேட்டான். சவுல், "ஆண்டவரே! நீர் யார்?" என்று கேட்டான். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று அக்குரல் கூறியது. மேலும், "நீ எழுந்து நேராக நகரத்துக்குப் போ. அங்கே நீ என்ன செய்ய வேண்டுமென்று உனக்குச் சொல்லப்படும்" என்று உரைத்தது.

சவுலுடன் பயணம் செய்த மனிதர்கள், அந்தக் குரலைக் கேட்டார்கள். ஆனால் யாரையும் காணவில்லை, சவுல் தன்னுடைய கண்களைத் திறந்தான். அவனால் எதையும் பார்க்க முடியவில்லை. எனவே, உடன் வந்த மனிதர்கள் அவனது கையைப் பிடித்துத் தமஸ்குவுக்கு வழிநடத்திச் சென்றார்கள்.

மூன்று நாட்கள் அவன் பார்வையற்றவனாக இருந்தான்; எதையும் சாப்பிடவுமில்லை; குடிக்கவுமில்லை.

தமஸ்குவில் 'அனனியா' என்னும் பெயருள்ள இயேசுவின் சீடர் ஒருவர் இருந்தார். ஆண்டவர் அவருக்கு காட்சியளித்து, "நீ உடனே புறப்பட்டு நேர்த்தெருவுக்குச் செல். அங்கே 'யூதா' என்பவனுடைய வீட்டிற்குப் போ. "தர்சு பட்டணத்தானாகிய 'சவுல்' என்பவன் இருக்கிறானா?" என்று கேள். அவன் இப்போது இறைவேண்டல் செய்து கொண்டிருக்கிறான், அவன் ஒரு காட்சி கண்டான். அந்தக் காட்சியில், "அனனியா என்னும் பெயருள்ள ஒரு மனிதன் தன்னிடம் வருவதாகக் கண்டான். அவன் தன்மேல் கைகளை வைத்ததும் தான் பார்வை பெற்றதாகவும் கண்டான்" என்றார். இதைக் கேட்டதும் அனனியா, "ஆண்டவரே, பலர் என்னிடத்தில் அவனைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவன் எருசலேமில் உம்முடைய மக்களைத் துன்புறுத்தி பல கொடுமையான செயல்களைச் செய்திருக்கிறான். இப்பொழுது தமஸ்குவில் உம்மை வழிபடுகிற அனைவரையும் கைது செய்ய வந்திருக்கிறான். முதன்மைக் குருக்கள் இவற்றைச் செய்வதற்கு அவனுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்" என்றார்.

ஆண்டவர் அனனியாவிடம், "நீ போ. எனக்குத் தொண்டு செய்வதற்காக நான் சவுலைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். அவன் பிற இன மக்களுக்கும், அவர்களுடைய அரசர்களுக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் என்னுடைய பெயரை அறிவிக்கிறவனாக இருப்பான். எனக்காக அவன் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று நான் அவனுக்குக் காட்டுவேன்" என்றார்.

எனவே அனனியா, சவுல் இருந்த வீட்டுக்குள் சென்று, "சகோதரனாகிய சவுலே! நீர் பார்வையடையும்படியாகவும், தூய ஆவியின் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளும் படியாகவும், ஆண்டவர் என்னை உம்மிடம் அனுப்பியிருக்கிறார்" என்றவாறே அவன்மேல் தன்னுடைய கைகளை வைத்தார். உடனே, சவுலின் கண்களிலிருந்து செதிள்கள் போன்றவை விழுந்தன. சவுல் பார்வை அடைந்தார். பின்னர் திருமுழுக்குப் பெற்று மீண்டும் வலிமை அடைந்தார்.



சவுல் இயேசுவைப் பின்பற்றுதல்

திருத்தூதர் பணிகள் 9 : 19 – 31

கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்ட மக்களுடன் சவுல் சில நாட்கள் தமஸ்குவில் தங்கியிருந்தார். அங்கு அவர் ஆராதனைக் கூடங்களுக்குச் சென்று, "இயேசு இறைமகன்" என்று அறிக்கையிட்டார். அவர் பேசுவதைக் கேட்ட அனைவரும் வியப்பு அடைந்தார்கள். "கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டோரைப் பிடித்துக் கொடுமைப்படுத்த முதன்மைக் குருக்களிடம் கொண்டுபோக எருசலேமிலிருந்து வந்தவனல்லவா?" என்று கேட்டார்கள்.

ஆனால் சவுல், மிகவும் துணிவோடு நற்செய்தி அறிவித்துக்கொண்டிருந்தார். "இயேசுவே மீட்பர்" என்று தெளிவுபடுத்தினார். தமஸ்குவிலுள்ள யூதர்களால் அவருக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

யூதர்கள் ஒன்று கூடி சவுலைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். அவர்கள் நகரத்து வாசல்களில் இரவும், பகலும் சவுலைப் பிடிக்கக் காவல் இருந்தார்கள். எனவே, கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டோர் சவுலை ஒரு கூடையில் வைத்து, நகரத்துச் சுவர் வழியாக வெளியே இறக்கிவிட்டார்கள்.

சவுல் எருசலேமுக்குச் சென்றார். இயேசுவின் சீடர்களுடன் சேர்ந்துகொள்ள முயற்சித்தார். அவர்கள் அவரை நம்பவில்லை; பயப்பட்டார்கள். அப்பொழுது பர்னபா

அவருக்கு உதவி செய்யமுன் வந்தார். சவுலைத் திருப்பணியாளர்களிடம் அழைத்துச் சென்றார். தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் சவுல் ஆண்டவரைச் சந்தித்த விதத்தை விளக்கிக் கூறினார். ஆண்டவர் சவுலுடன் பேசியதையும் எடுத்துரைத்தார். சவுல் இயேசுவைப் பற்றித் தமஸ்குவில் துணிவுடன் பிரசங்கித்ததையும் தெரிவித்தார்.

சவுல் சீடர்களுடன் தங்கி, எருசலேம் முழுவதும் ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் நற்செய்தி அறிவித்தார். கிரேக்க மொழி பேசும் யூதர்களுடன் பல கருத்துக்களைக் குறித்து விவாதம் செய்தார். ஆனாலும் அவர்கள் அவரைக் கொலை செய்ய முயற்சித்தார்கள். கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோர் இதைக் கேள்விப்பட்டபோது சவுலைச் செசரியாவுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து, அவருடைய சொந்த நகரமாகிய தர்சுவுக்கு அனுப்பினார்கள்.

அதன்பின்னர், கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோரின் குழு, 'திருச்சபை' என்று அழைக்கப்பட்டது. யூதேயா, கலிலேயா, சமாரியா முழுவதும் அமைதி நிலவிற்று. தூய ஆவியின் உதவியால் திருச்சபை உறுதிப்பட்டது. அது எண்ணிக்கையில் பெருகியது.

யூதர் அல்லாதவர்கள் நற்செய்தி கேட்டல்

இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்த பின்னர் சவுல் மாற்றம் பெற்ற ஒரு புதிய மனிதர் ஆனார். 'பவுல்' என்று அழைக்கப்பட்டார். அவர் மூன்று பெரிய நற்செய்திப் பயணங்கள் மேற்கொண்டார். எங்கும் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார். அனேக முக்கிய நகரங்களிலும், சுற்றிலுமுள்ள சிற்றூர்களிலும் திருச்சபைகளைத் தொடங்கினார். இந்தப் பயணங்களின்போது, அவர் பலமுறை இன்னல்களை மேற்கொண்டு, துணிவுடன் பணி செய்ய நேரிட்டது. பவுலுடன் பல இடங்களுக்குப் பயணம் செய்த, மருத்துவரான லூக்கா, அவற்றில் சிலவற்றைப் பற்றி நமக்குக் கூறுகிறார்.

பிலிப்பியில் பவுல் சிறையிலடைக்கப்படுதல்

திருத்தூதர் பணிகள் 16 : 16 – 39

ஒரு நாள் நாங்கள் 'பிலிப்பி' நகரத்தில் இருந்தபோது, இறைவேண்டல் செய்யும் இடத்துக்குப் போய்க் கொண்டிருந்தோம். வழியில் ஒரு அடிமைப் பெண் எங்களைச் சந்தித்தாள். அவளுக்குள் ஒரு அசுத்த ஆவி இருந்தது. அதைக்கொண்டு மற்றவர்களுக்கு குறிசொல்லுவாள். அதன்மூலம் அவளுடைய உரிமையாளர்களுக்கு நிறையப் பணம் வருமானம் வந்து கொண்டிருந்தது. அவள் எங்களைப் பின் தொடர்ந்து வந்தாள். அவள் உரத்தக் குரலில் "இதோ, இவர்கள் உன்னத கடவுளின் ஊழியர்கள். நீங்கள் எப்படி மீட்படையலாம் என்று இவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்" என்று கூறினாள். இப்படிப் பல நாட்கள் செய்து வந்தாள். ஒரு நாள் பவுல் கோபங்கொண்டு, திரும்பிப் பார்த்து, அந்த அசுத்த ஆவியை அதட்டினார். "இயேசு கிறிஸ்துவின் பெயரால் இவளைவிட்டு வெளியே வரும்படி உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்றார். உடனே அந்த அசுத்த ஆவி அவளைவிட்டு வெளியேறிற்று.

அவளுடைய உரிமையாளர்களுக்கு கிடைத்துவந்த வருமானம் போயிற்று. எனவே அவர்கள் பவுலையும், அவருடைய நண்பர் சீலாவையும் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து, ரோம அதிகாரிகளிடத்தில், "இந்த மனிதர்கள் யூதர்கள். இவர்கள் நமது நகரத்தில் கலகம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ரோமர்களாகிய நமக்குப் பொருத்தமில்லாத போதனைகளைக் கற்பிக்கிறார்கள்" என்றார்கள். அங்கிருந்த மக்கள் பவுலையும், சீலாவையும் தாக்கத் தொடங்கினார்கள்.

பின்னர் அந்த அதிகாரிகள் பவுல், சீலா ஆகியோரின் ஆடைகளைக் கிழித்தார்கள்; இருவரையும் சவுக்கினால் அடித்துச் சிறையில் அடைத்தார்கள்; சிறைக்குள் அவர்களுடைய கால்கள் தொழுமரங்களில் மாட்டப் பட்டிருந்தன.

நடு இரவு வேளையில் பவுலும், சீலாவும் கடவுளைப் போற்றிப் பாடல்களைப் பாடிக்

கொண்டும், இறைவேண்டல் செய்து கொண்டும் இருந்தார்கள். மற்றக் கைதிகள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று அங்கு ஒரு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அது சிறைச்சாலையின் சுவர்களையும், தரையையும் அசைத்தது. சிறையின் எல்லாக் கதவுகளும் திறந்தன. எல்லாக் கைதிகளையும் கட்டியிருந்த சங்கிலிகள் உடைந்து விழுந்தன. சிறைக்காவலர் எழுந்து, சிறையின் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டார். எல்லாக் கைதிகளும் தப்பியோடி விட்டார்கள் என்று நினைத்தார். எனவே அவர் தனது வாளை உருவி, தற்கொலை செய்துகொள்ளப் போனார். அப்பொழுது பவுல் சத்தமிட்டு "உனக்குக் கேடு ஒன்றும் செய்து கொள்ள வேண்டாம். நாங்கள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறோம்" என்றார். சிறைக்காவலர் ஒரு விளக்கைக் கொண்டு வரச் செய்தார். அவர் விரைந்து உள்ளே சென்று, நடுங்கிக் கொண்டு; பவுல், சீலா இவர்களின் கால்களில் விழுந்தார். அவர்களை வெளியே அழைத்து வந்து, "பெரியோரே! மீட்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது பற்றுறுதி கொள். அப்பொழுது நீயும் உன்வீட்டாரும் மீட்கப்படுவீர்கள்" என்றார்கள்.

பின்னர் அவரும், அவருடைய குடும்பத்தார் அனைவரும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர் பவுலையும், சீலாவையும் தன்னுடைய வீட்டினுள் அழைத்துச் சென்றார்; அவர்களுக்கு உணவளித்தார்; அவரும் அவருடைய குடும்பத்தாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

மறுநாள் காலையில் ரோம அதிகாரிகள் "அந்த மனிதர்களை விடுதலை செய்து போகவிட்டுவிடு" என்று சிறைக்காவலருக்கு ஒரு காவலர் மூலம் சொல்லியனுப்பினார்கள். சிறைக்காவலர் பவுலிடம், "நீங்களும், சீலாவும் விடுதலை செய்யப்படுவதாக அதிகாரிகள் ஒரு ஆணை அனுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் போகலாம்" என்றார்.

ஆனால் பவுல், செய்தி கொண்டுவந்த காவலரிடம் "நாங்கள் எந்தக் குற்றமும் செய்ததாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. எனினும் நாங்கள் ரோமர்களாக இருந்தும், அவர்கள் எங்களைப் பொது இடத்தில் சவுக்கினால் அடிக்கச் செய்தார்கள். பின்னர் எங்களைச் சிறையில் அடைத்தார்கள்.





இப்பொழுது எங்களை எவருக்கும் தெரியாமல் அனுப்பிவிட நினைக்கிறார்கள். முடியவே முடியாது. அந்த அதிகாரிகளே வந்து எங்களை வெளியே அனுப்பிவிடட்டும்" என்று சொல்லியனுப்பினார்.

பவுலும், சீலாவும் "ரோமர்கள்" என்று கேள்விப்பட்டதும் அதிகாரிகள் மிகவும் பயந்தார்கள். எனவே, அவர்கள் வந்து பவுலிடமும், சீலாவிடமும் தாங்கள் செய்த தவறுக்காக மிகவும் வருத்தப்படுவதாகத் தெரிவித்தார்கள். பின்னர் அவர்களை வெளியே அழைத்து வந்து, நகரத்தை விட்டு சென்றுவிடுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

ஏதென்சு நகரத்தில் பவுல்

திருத்தூதர் பணிகள் 17 : 16 – 34

ஏதென்சு நகரத்தில் பவுல் இருந்தபோது, அந்த நகரமெங்கும் தெய்வச்சிலைகள் இருப்பதைக் கண்டு வருத்தமடைந்தார். யூதர்களுடனும், யூதர் அல்லாதவர்களுடனும், சந்தை வெளியில் கூடிவரும் மக்களிடமும் ஒவ்வொரு நாளும் பேசினார். சில திறமை வாய்ந்த ஆசிரியர்கள் அவருடன் வாதிட்டார்கள். அவர்களில் சிலர், "இவர் என்ன பேச முயற்சிக்கிறார்?" என்று கேட்டார்கள். வேறு சிலர், "அவர் வேறு தெய்வங்களைப் பற்றிப் பேசுவதாகத் தோன்றுகிறது" என்றார்கள்.

அவர்கள் பவுலை நகரத்துப் பொது மன்றத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே, "நாங்கள் உம்முடைய புதிய போதனையைப் பற்றி அதிகமாக அறிய விரும்புகிறோம். நீர் அவைகளை எங்களுக்கு விளக்கிக் கூற முடியுமா?" என்று கேட்டார்கள்.

பவுல் எழுந்து நின்று பேசத் தொடங்கினார். "ஏதென்சு நகரத்து மக்களே! நீங்கள் மிகவும் சமயப்பற்றுடையவர்கள் என்று காண்கிறேன். நான் உங்கள் நகரம் முழுவதம் சுற்றி, உங்களது வழிபாட்டு இடங்களைப் பார்வையிட்டேன். அவைகளில், 'அறியப்படாத கடவுளுக்கு' என்று ஒன்றில் எழுதியிருந்தது. நீங்கள் அறியாத ஒரு கடவுளையும் வழிபடுகிறீர்கள். அவரைப் பற்றித்தான் நான் உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அவர்தான் இந்த உலகத்தையும், அதிலிருக்கும் அனைத்தையும் படைத்தவர். அவரே விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் கடவுள். அவர் மனிதனால் கட்டப்படும் ஆலயங்களில் குடியிருப்பதில்லை. உண்மையில் அவர் நம்மில் எவரிடமிருந்தும் அதிகத் தொலைவில் இல்லை. ஒருவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

"நாம் அவரில் வாழ்கிறோம்
நாம் அவரில் அசைகிறோம்
நாம் அவரில் இருக்கிறோம்."

"நாமும் அவருடைய பிள்ளைகளே" என்று உங்கள் புலவர்களில்கூட சிலர் கூறி இருக்கிறார்கள்.

கடவுள்; பொன்னாலோ, வெள்ளியினாலோ, கல்லினாலோ, செய்யப்பட்ட ஒரு சிலையைப் போலிப்பார் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. மக்கள் கடவுளை அறியாமலிருந்த போது கடவுள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால்; இப்போது நாம் கடவுளுடைய பிள்ளைகளாக இருப்பதால், தங்கள் தவறான வழிகளை விட்டுத் திரும்புமாறு கட்டளையிடுகிறார். அவர் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அந்த நாளில் அவர் ஒவ்வொருவரையும் நியாயத் தீர்ப்புச் செய்வார். இதைச் செய்வதற்கு அவர் ஒரு மனிதனைப் பயன்படுத்துவார். அவர் அந்த மனிதனை வெகு காலத்துக்கு முன்னரே தேர்ந்தெடுத்துவிட்டார். 'இயேசு' என்னும் அந்த மனிதனை மரணத்திலிருந்து



உயிர்பெற்றெழச் செய்ததின் மூலம், அவர் யார் என்பதை எல்லோருக்கும் தெளிவாகக் காட்டிவிட்டார்'' என்றார்.

உயிர்தெழுந்த இயேசுவைப் பற்றிப் பவுல் பேசுவதைக் கேட்டதும், அவர்களில் சிலர் அவரை ஏளனம் செய்தார்கள். மற்றவர்கள் "நாங்கள் இன்னும் நீர் பேசுவதைக் கேட்க விரும்புகிறோம்'' என்றார்கள். எனவே பவுல், அங்கிருந்து புறப்பட்டார். சில மக்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் பவுலின் கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டார்கள். அப்படிச் சேர்ந்தவர்களில் ஒரு நகரத்து அதிகாரியும், வேறு பல முதன்மையான குடிமக்களும் இருந்தார்கள்.

எபேசில் குழப்பம்

திருத்தூதர் பணிகள் 19 : 24 – 41

பவுல் நற்செய்தியைக் கூறிக்கொண்டு பல நாடுகளில் சுற்றுப் பயணம் சென்றார். தற்காலத்தில் 'துருக்கி' என்றழைக்கப்படும் ஆசியாமைனர் பகுதியிலேயே மிக முக்கியமான ஒரு நகரம் 'எபேசு'. பவுல் இந்த நகரத்தில் இருக்கும் போது, அவர் கடுமையான துன்பத்துக்கு ஆளானார்.

தெமத்திரியு என்னும் செல்வந்தரான ஒரு பொற்கொல்லர் இருந்தார். அவர் பல தொழிலாளர்களைக் கொண்டு, 'அர்த்தமி' தேவதையின் கோவிலின் மாதிரிகளை வெள்ளியினால் செய்து, மிகுந்த விலைக்கு விற்றுவந்தார். ஒருநாள் அவர் தன் தொழிலாளர்கள் அனைவரையும் கூடிவரச் செய்தார். அவர்களிடம், "தோழர்களே! நாம் இந்த வேலையைச் செய்து, கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கை நடத்துகிறோம். பவுல் என்பவன் நமக்கு என்ன கேடு செய்து கொண்டிருக்கிறான் என்று தெரியுமா? அவன், 'மனிதனால் உண்டாக்கப்படும் தெய்வச் சிலைகளெல்லாம் கடவுளே அல்ல' என்கிறான். இங்கே எபேசிலும், இன்னும் பல இடங்களிலும் அவனைப் பின்பற்றுகிறவர்கள் பலர் உண்டு. எனவே சீக்கிரத்தில் நமது தொழில் அழிந்து போகும். அது போலவே நமது அர்த்தமி



தேவதை, அவளுடைய கோவில் ஆகியவற்றின் பெயரும், புகழும் மறைந்துவிடும்'' என்றார்.

மக்கள் கூட்டம் இதைக் கேட்டபோது, மிகுந்த கோபம் கொண்டு, ''அர்த்தமி தேவதை தான் பெரியவர்'' என்று கத்தினார்கள்.

இதனால் ஏற்பட்ட கலகம் எபேசு நகரம் முழுவதும் பரவியது. அந்தக் கூட்டத்தார் பவுலுடன் வந்திருந்த இரண்டு மனிதர்களைப் பிடித்து பொது அரங்கத்திற்குக் கொண்டு சென்றார்கள். பவுல் அங்கே செல்ல விரும்பினார். ஆனால் அவரது கூட்டத்தாரும், அதிகாரிகளில் சிலரும் அவரை அங்கே போகவிடவில்லை. இதனிடையில் அங்கு ஒரு பெரிய கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. அங்கு கூடியிருந்தவர்களில் பெரும்பாலானோருக்குத் தாம் எதற்காகக் கூடிவந்திருக்கிறோம் என்று கூடத் தெரியாது. யூதர்கள் அலெக்சாந்தர் என்னும் பெயருடைய ஒருவரை முன்னால் அழைத்து வந்தனர். அலெக்சாந்தர் கூட்டத்தினரைப் பார்த்துக் கையமர்த்தினார். மக்கள் அமைதியானபின் அவர் பேசத் தொடங்கினார். ஆனால் சீக்கிரத்தில் அவர் ஒரு யூதன் என்று அறிந்து கொண்டார்கள். எனவே; அந்தக் கூட்டத்தார், “எபேசின் அர்த்தமி தேவதையே பெரியவர்!” என்று தொடர்ந்து கத்திக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் அந்நகரத்தின் தந்தை கூட்டத்தை அமைதிப்படுத்தினார். அவர், “எபேசு நகர அதிகாரிகள் நம்முடைய மகா அர்த்தமி தேவதையின் கோவிலைப் பராமரித்து வருகிறார்கள். விண்ணிலிருந்து விழுந்த புனித கல்லும் இங்கே வைத்து வழிபடப்படுகிறது. ஒருவரும் இவற்றை மறுக்க முடியாது. எனவே நீங்கள் அதைப்பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். இந்த மனிதர்களை இங்கே எதற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? இவர்கள் நம்முடைய கோவிலிருந்து எதையும் திருடவில்லை. நம்முடைய தேவதையைப் பற்றி எதையும் பேசவில்லை.

தெமத்திரியுவுக்கு வேறொருவருடன் ஏதாவது புகார் இருக்கலாம். அவர்கள் அதை நகரத்து வழக்குமன்றத்தில், நீதிபதிகளின் முன் சென்று முறையிடட்டும். இப்பொழுது இங்கே

நடைபெறுகிற இந்தக் கலகத்திற்காக ரோமர் நம்மைக் குற்றம் சாட்டலாம். இதற்குத் தகுந்த காரணம் நம்மிடத்தில் இல்லை" என்றார். பின்னர் கூட்டத்தைக் கலைந்து போகச் செய்தார்.

பவுலின் விருப்பம் நிறைவேறுதல்

பவுலைக் கொலை செய்யத் திட்டம்

திருத்தூதர் பணிகள் 23 : 11 – 24

ஒரு இரவில் ஆண்டவர் பவுலின் அருகில் வந்து நின்றார். அவர், "பவுலே! நீ பயப்படாதே! நீ இங்கே எருசலேமில் எனக்காகத் துணிவோடு பேசியிருக்கிறாய். நீ ரோமிலும் அதைப் போல செய்ய வேண்டும்" என்றார்.

மறுநாள் காலையில் ஏறத்தாழ நாற்பது யூதர்கள் ஒன்றாகக்கூடி ஒரு சதித்திட்டம் தீட்டினார்கள். பின்னர் அவர்கள் முதன்மைக் குருக்கள், மற்றும் யூதத் தலைவர்களிடத்தில் சென்றார்கள். அவர்களிடம், "நாங்கள் பவுலைக் கொலை செய்வதுவரை எதையும் உண்பதுமில்லை. குடிப்பதுமில்லை" என்று ஒரு சபதம் செய்திருக்கிறோம். இப்பொழுது நீங்கள் பவுலை விசாரிக்க உங்களிடத்தில் கொண்டு வந்து சேர்க்கும்படி ரோமப் படைத்தளபதிக்குத் தகவல் அனுப்ப வேண்டும். வரும்போதே, வழியில் அவனை நாங்கள் கொலை செய்து விடுவோம்" என்றார்கள்.

பவுலின் மருமகன் இந்தக் கொடுமையான சதித் திட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவன் கோட்டைக்குள் சென்று பவுலிடம் இதை அறிவித்தான். பவுல் ஒரு அதிகாரியை அழைத்து, "இந்த இளைஞனைப் படைத் தலைவரிடம் அழைத்துச் செல்லும். இவனிடத்தில் அவருக்குச் சொல்ல வேண்டிய ஒரு செய்தி இருக்கிறது" என்றார். அந்த அதிகாரி, இளைஞனைப் படைத் தலைவரிடம் அழைத்துச் சென்றார்.

படைத்தலைவர் அந்த இளைஞனை தனிமையான இடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவனிடம், "நீ என்னிடத்தில் என்ன தெரிவிக்க விரும்புகிறாய்?" என்று கேட்டார்.

அவன், "நாளை நடைபெறவிருக்கும் சிறப்புக் கூட்டத்துக்குப் பவுலை அழைத்துவர உம்மிடத்தில் யூதத் தலைவர்கள் கேட்கப் போகிறார்கள். அவர்கள் அவரிடம் பல கேள்விகள் கேட்டு விசாரிக்க வேண்டியதிருப்பதாக உம்மிடம் சொல்வார்கள். தயவுசெய்து அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம். வழியில் பவுலை கொலை செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். உம்மைச் சந்தித்து அனுமதிபெற அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்" என்றான்.

படைத்தலைவர் உடனே இரண்டு அதிகாரிகளை அழைத்தார். அவர்களிடம், "செசரியாவுக்குப் போக இருநூறு படைவீரர்களை ஆயத்தப்படுத்துங்கள். எழுபது குதிரைவீரர்களையும் அழையுங்கள். ஈட்டி தாங்கும் வீரர்கள் இருநூறு பேரையும் தயார் செய்யுங்கள். இன்று இரவு புறப்பட ஆயத்தமாயிருங்கள். நீங்கள் பவுலைப் பாதுகாப்புடன் அழைத்துச் சென்று செசரியாவின் ஆளுநரிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றார்.

'பவுல் குற்றவாளி' என்று ஆளுநராகிய பெலிக்சை நம்ப வைக்க யூதர்கள் பெரும் முயற்சி செய்தார்கள். பவுல் குற்றவாளியாகக் காணப்படாத போதிலும் அவரை வீட்டுக் கைதியாக வைத்திருந்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெலிக்சிடமிருந்து, பெஸ்து புதிய ஆளுநர் பதவியை ஏற்றார்.

பவுல் சீசருக்கு முன்பாகச் செல்ல விரும்புதல்

திருத்தூதர் பணிகள் 25 : 9 – 12

பெஸ்து யூதர்களின் நல்லெண்ணத்தைப் பெற விரும்பினார். எனவே அவர் பவுலிடம், "நான் உன்னை எருசலேமில் வைத்து விசாரிக்கலாமா?" என்று கேட்டார். அதற்குப் பவுல், "இது ரோமப் பேரரசருடைய வழக்கு மன்றம். எனவே, நான் இங்கேதான் விசாரிக்கப்பட வேண்டும். யூதர்களுக்கு எதிராக நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை.

இது உமக்கும் மிக நன்றாகத் தெரியும். மேலும் என்னை யாரும் அவர்களிடம் ஒப்படைக்க முடியாது. நான் ரோம் நகரிலுள்ள பேரரசரிடம் மேல்முறையீடு செய்கிறேன்'' என்றார்.

பின்னர் பெஸ்து தன் ஆலோசகர்களுடன் தனியாகப் பேசினார். அவர் பவுலிடம் நீ அரசருக்கு மேல் முறையீடு செய்கிறாய். எனவே உன்னை ரோம் நகருக்கே அனுப்புகிறோம்'' என்றார்.

ரோம் நகருக்குப் பயணம் செய்தல்

திருத்தூதர் பணிகள் 27 : 1 – 12

கைது செய்யப்படுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே பவுல் ரோம் நகருக்குச் செல்ல ஆவல் கொண்டிருந்தார். இப்பொழுது அங்கு போய்க்கொண்டிருக்கிறார். ஆனால் ஒரு கைதியாக! அந்தக் கடல் பயணத்தைப் பற்றி பவுலுடன் பயணம் செய்த லூக்கா எழுதியிருக்கிறார்.

நாங்கள் இத்தாலியிலுள்ள ரோம் நகருக்குக் கடல் வழியாகச் செல்ல வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பவுலும் வேறு சில கைதிகளும், யூலியு என்னும் ரோமப் படைத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நாங்கள் ஒரு கப்பலில் ஏறிப் புறப்பட்டுச் சென்றோம். மறுநாளில் நாங்கள் 'சீதோன்' என்னுமிடத்தைச் சென்றடைந்தோம். யூலியு பவுலிடம் இரக்கத்துடன் நடந்துகொண்டார். நாங்கள் சீதோனைவிட்டுப் புறப்பட்டபோது, காற்று எங்களுக்கு எதிராக வீசியது. 'சைப்பிரசு' தீவுக்குப் பக்கமாக பயணம் செய்து, 'மீரா' நகரத்ரைச் சென்றடைந்தோம். அங்கே அலெக்சாந்திரியாவிலிருந்து இத்தாலிக்குச் சென்று கொண்டிருந்த ஒரு கப்பலுக்கு மாறி பயணமானோம்.

நாங்கள் பல நாட்கள் மெதுவாகச் சென்றோம். காற்று எங்களைத் தொடர்ந்து செல்ல விடவில்லை. எனவே நாங்கள் கிரேத்து தீவுக்கு நேராக கப்பலைச் செலுத்தி,மிகுந்த சிரமத்துடன் 'செந்துறை' என்னும் ஒரு துறைமுகத்தை அடைந்தோம்.

அங்கே நீண்ட நாட்கள் தங்கியிருந்தோம். பவுல், கப்பல் அதிகாரிகளைப் பார்த்து, "நண்பர்களே, நாம் மேலும் தொடர்ந்து பயணம் செய்வது நல்லதல்ல. அது கப்பலுக்கும், பொருட்களுக்கும் சேதம் விளைவிக்கும். நம்முடைய உயிர்களையும்கூட நாம் இழக்க வேண்டியது வரலாம்!'' என்று எச்சரித்தார். பவுலின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்காமல்; யூலியு, கப்பல் மாலுமி, கப்பலின் உடைமையாளர் ஆகியோரின் ஆலோசனையைக் கேட்டார். அவர்கள் குளிர்காலத்துக்கு அந்தத் துறைமுகம் ஏற்றதல்ல என்றார்கள். எனவே பெரும்பாலானவர்கள் கிரேத்து தீவிலுள்ள 'பெனிக்சு' துறைமுகத்துக்குப் போய்ச் சேர விரும்பினார்கள். அது ஒரு பாதுகாப்பான துறைமுகமாயிருக்கும் என்று நம்பினார்கள்.

ஒரு பெரும் புயல்

திருத்தூதர் பணிகள் 27 : 13 – 38

தென் திசையிலிருந்து தென்றல் வீசத் தொடங்கியது. மாலுமிகள் தங்கள் திட்டத்தை நிறைவேற்றிவிடலாம் என்று நினைத்தார்கள். எனவே; அவர்கள் நங்கூரங்களை எடுத்துவிட்டு, கிரேத்து கடற்கரையின் ஓரமாய் எவ்வளவு ஒதுங்கிப் போக முடியுமோ அவ்வளவு ஓரமாய் கப்பலைச் செலுத்தினார்கள். ஆனால் சீக்கிரத்தில் கப்பல் 'யூரோக்கிலோன்' என்னும் ஒரு 'கடும் புயலில்' சிக்கிவிட்டது. கப்பல் கரையோரத்தில் ஏதாவது புதை மணலில் சிக்கிவிடுமோ என்று பயந்தார்கள். எனவே பாய்களை இறக்கினார்கள். காற்றின் திசையில் கப்பல் செல்லட்டும் என்று விட்டார்கள். கடுமையான புயல் தொடர்ந்து வீசியது. கப்பலில் ஏற்றப்பட்டிருந்த சரக்குகளில் சிலவற்றைத் தூக்கிக் கடலில் எறியத் தொடங்கினார்கள். ஒரு நாளுக்குப் பின் கப்பலின் தளவாடங்களையும் தூக்கி எறிந்தார்கள். பல நாட்களாக நாங்கள் கதிரவனையோ, விண்மீன்களையோ பார்க்க முடியவில்லை. நாங்கள் உயிரிழப்பது உறுதி என்று நினைத்தோம்!.

கப்பலில் இருந்தவர்கள் பல நாட்களாக உணவு எதுவும் சாப்பிடவில்லை. பின்னர் ஒருநாள் பவுல் அவர்களுக்கு முன்பாக நின்று, "நண்பர்களே! முன்னே நான் சொன்ன

ஆலோசனையை நீங்கள் கேட்டிருக்க வேண்டும். கேட்டிருந்தால் இவ்வளவு சேதமும் இழப்பும் நமக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால் இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் யாரும் கலங்கவேண்டாம். உங்களுள் ஒருவர்கூட உயிர் இழக்கப் போவதில்லை. கப்பல் மட்டும்தான் சேதமாகும். ஏனென்றால் நேற்று இரவு நான் வழிபடும் கடவுளிடமிருந்து வந்த ஒரு தூதர், "பவுலே, பயப்படாதே! நீ ரோம் நகரில் பேரரசருக்கு முன்பாக நிற்க வேண்டும். கடவுள் தன்னுடைய இரக்கத்தின்படியே உன்னுடன் பயணம் செய்யும் அனைவரது உயிரையும் காப்பாற்றி விடுவார்" என்றார். எனவே சகோதரர்களே, நாம் நம்பிக்கை இழக்க வேண்டாம். நாம் ஒரு தீவில் கரை ஒதுங்குவோம்" என்றார்.

நாங்கள் புயலில் சிக்கியபின் பதினான்காம் இரவில், மாலுமிகள், தாங்கள் ஒரு கரையை நெருங்குவதாக நினைத்தார்கள். எனவே தண்ணீரின் ஆழத்தை அளந்து நாற்பது மீட்டர் என்று கண்டார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் மீண்டும் ஆழம் பார்த்தார்கள். அது முப்பது மீட்டர் என்று கணக்கிடப்பட்டது. கப்பல் ஏதாவது பாறைகளில் மோதிவிடுமோ என்று அவர்கள் பயந்தார்கள். எனவே, கப்பலின் பின்பகுதியிலிருந்து நான்கு நங்கூரங்களை இறக்கினார்கள். நேரம் விடிவதற்காகக் காத்திருந்தார்கள். அப்பொழுது மாலுமிகள் முன் பக்கமாகத் தப்பிச் செல்ல

முயற்சித்தார்கள். அவர்கள் கப்பலின் முன்பக்கத்திலிருந்து நங்கூரம் இறக்குவது போல் நடித்து, உயிர் காக்கும் படகு ஒன்றை இறக்கிவிட்டார்கள். இதைக்கண்ட பவுல் யூலியுவிடமும், போர்வீரர்களிடமும், ‘‘அந்த மாலுமிகள் கப்பலில் இருக்காவிட்டால், நீங்கள் காப்பாற்றப்படுவதற்கு எந்த வழியும் இல்லை’’ என்றார். எனவே, போர்வீரர்கள் சென்று படகைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்து விட்டார்கள்.

விடிவதற்குச் சற்றுமுன் பவுல், ‘‘நீங்கள் உணவு எதுவும் சாப்பிடாமல் பதினான்கு நாட்கள் காத்துக்கொண்டிருக்கிறீர்கள், ஏதாவது சாப்பிட வேண்டும். உயிர்பிழைக்க அது தேவை. உங்கள் தலையிலுள்ள ஒரு முடி கூட விழாது’’ என்றார்.

பின்னர் பவுல், அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி கூறிவிட்டுச் சாப்பிட்டார். உடனே மற்றவர்களும் சாப்பிடத் தொடங்கினார்கள். கப்பலில் மொத்தம் இருநூற்று எழுபத்தாறுபேர் இருந்தோம். அனைவரும் வயிறாரச் சாப்பிட்டபின் மீதியிருந்த கோதுமை முழுதையும், கடலில் எறிந்து கப்பலின் எடையைக் குறைத்தார்கள்.

கப்பலைவிட்டுத் தப்பிச் செல்லுங்கள்

திருத்தூதர் பணிகள் 27 : 39 – 44

பொழுது விடிந்தபோது, மாலுமிகள் தரையைக் கண்டார்கள். ஆனால் அவர்கள் எங்கு வந்து சேர்ந்திருந்தார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு வளைகுடாவையும், கடற்கரையையும் கண்டார்கள். அங்கே இறங்க விரும்பினார்கள். எனவே நங்கூரங்களை அவிழ்த்துவிட்டார்கள். துடுப்புக்களைக் கட்டியிருந்த கயிறுகளையும் அவிழ்த்து விட்டார்கள். பின்னர் முன்பக்கத்துப் பாயை விரித்தார்கள். அதன்மூலம் காற்று கப்பலைக் கரைக்கு நேராக அடித்துச் செல்லும் என்று நம்பினார்கள். ஆனால் கப்பல் ஒரு மணல் திட்டில் மோதியது. அதன் முன்பகுதி மணலில் சிக்கியது. கொந்தளிக்கும் கடலின் அலைகள் கப்பலின் பின்பகுதியை உடைத்துச் சேதப்படுத்தின.



கைதிகள் அனைவரும் நீந்திச் சென்று, தப்பிவிடுவார்கள் என்று போர்வீரர்கள் நினைது, அவர்களை கொன்றுவிட திட்டம் வகுத்தார்கள். ஆனால் யூலியு, பவுலைக் காப்பாற்ற விரும்பி போர்வீரர்களைத் தடுத்துவிட்டார். கடைசியில் நாங்கள் அனைவரும் பாதுகாப்பாகக் கரை சேர்ந்தோம்.

மால்தா திவில்

திருத்தூதர் பணிகள் 28 : 1 – 10

நாங்கள் பாதுகாப்பாக கரை சேர்ந்தபின்னர் அது 'மால்தா' தீவு என்று அறிந்தோம்.

அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. குளிர் காலமாகவும் இருந்தது. எனவே, குளிர்காய மக்கள் எங்களுக்கு நெருப்பை உண்டாக்கினார்கள். பவுல் சில விறகுகளை எடுத்து நெருப்பில் போட்டார். அப்பொழுது வெப்பம் தாங்காமல் ஒரு பாம்பு விறகிலிருந்து வெளியேறி, பவுலின் கையை கவ்வியது. இதைப் பார்த்த அத்தீவின் மக்கள், "இவன் கடலின் ஆபத்திலிருந்து தப்பியபோதிலும், தெய்வங்கள் இவனை வாழவிடப்போவது இல்லை" என்று பேசிக்கொண்டார்கள். ஆனால் பவுல் அந்தப் பாம்பை உதறி நெருப்பில் போட்டார். அந்த மக்கள், அவரது உடல் வீங்கிவிடும் அல்லது விழுந்து இறந்து விடுவார் என்று நினைத்தார்கள். ஆனால் அப்படி எதுவும் அவருக்கு ஏற்படவில்லை. எனவே அவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, "இவர் ஒரு தெய்வம்" என்று சொன்னார்கள்.

புபிலியு என்பவர் அந்தத் தீவின் தலைவர். மூன்று நாட்கள் நாங்கள் அவருடைய விருந்தினராயிருந்தோம். அவருடைய தந்தை இரத்தபேதியால் பாதிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். பவுல் தன் கைகளை அவர் மீதுவைத்து, நலமடையச் செய்தார். பின்னர் அந்தத் தீவு முழுவதிலுமுள்ள நோயாளிகள் பவுலிடம் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் நலமடைந்தார்கள். பின்னர் நாங்கள் புறப்பட்டபோது, எங்கள் பயணத்துக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் கொண்டுவந்து கப்பலில் ஏற்றினார்கள்.



இறுதியாக ரோம் வந்து சேருதல்

திருத்தூதர் பணிகள் 28 : 16 - 31

இறுதியாக நாங்கள் ரோம் நகருக்கு வந்து சேர்ந்தோம். மூன்று நாட்களுக்குப் பிறகு பவுல் அங்குள்ள யூதத் தலைவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசினார்.

"எனக்கன்பான சகோதரர்களே! நான் நமது மூதாதையர்களின் வழக்கங்களுக்கு எதிராகவோ, நமது மக்களுக்கு எதிராகவோ எதுவும் செய்யவில்லை. ஆனால் நான் எருசலேமில் ஒரு கைதியாகப் பிடிக்கப்பட்டு, ரோமர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டேன். ஆனால் நான் குற்றம் எதுவும் செய்யவில்லை என்று கண்டு, என்னை விடுதலை செய்ய விரும்பினார்கள். ஆனால் அங்குள்ள நம் மக்களுக்கு அது விருப்பமில்லை. எனவே நான் ரோம் நகரிலுள்ள சீசரின் முன்பாக முறையிட விரும்புகிறேன் என்று கூறினேன். எனது சொந்த மக்களுக்கெதிராகக் கூற என்னிடம் எந்தப் புகாரும் இல்லை. எனவேதான் நான் உங்களைச் சந்தித்து இவற்றைத் தெளிவுபடுத்த விரும்பினேன்" என்றார்.



அந்த யூதத் தலைவர்கள் பவுலிடம், "உம்மைப் பற்றி யூதேயாவிலிருந்து எங்களுக்கு எந்தக் கடிதமும் வரவில்லை. எவரும் உமக்கு எதிராக எதையும் கூறவுமில்லை. எனவே நீர் இப்போது எங்களுக்குக் கூறவிரும்பும் செய்தி என்ன? அதை அறிய விரும்புகிறோம்" என்றார்கள்.

எனவே, பவுலுடன் பேச ஒரு நாளைக் குறித்தார்கள். திரளான யூதர்கள் அந்த நாளில் வந்து கூடினார்கள். பவுல் கடவுளின் வழிகளைப் பற்றிய செய்தியை விளக்கிக் கூறினார். அவர்கள் இயேசுவைப் பற்றிய உண்மையை, நம்பி ஏற்றுக் கொள்ளச் செய்ய முயன்றார். அவர் மோசேயின் கட்டளைகள், இறைவாக்கினரின் உரைகள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி, இயேசுவைக் குறித்துப் பேசினார். கேட்டவர்களில் சிலர் ஏற்றுக் கொண்டார்கள். சிலர் நம்பவில்லை. அப்பொழுது பவுல், "உங்களைப் பற்றிய உண்மையை ஏற்கனவே தூயாவியானவர் இறைவாக்கினராகிய ஏசாயா மூலம் இவ்வாறு கூறியுள்ளார்:

"நீங்கள் காதாரக் கேட்டும் புரிந்து கொள்ளமாட்டீர்கள். நீங்கள் கண்ணாரக் கண்டும் உணரமாட்டீர்கள்; அந்த அளவுக்கு உங்கள் இதயம் கடினப்பட்டிருக்கிறது. காணாமலிருப்பதற்காகக் கண்களை மூடிக் கொள்ளுகிறீர்கள். கேளாமலிருப்பதற்காகக் காதுகளை அடைத்துக் கொள்ளுகிறீர்கள்.

என்னிடமாய்த் திரும்புவார்களானால் நான் அவர்களை நலம் பெறச் செய்வேன்" என்று ஆண்டவர் கூறுகிறார்.

இப்பொழுது மீட்பைப் பற்றிய கடவுளின் நற்செய்தி பிற இனத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. அவர்கள் செவிசாய்து நலமடைகிறார்கள் என்பதை, யூதர்களாகிய நீங்கள் அறிய வேண்டும்" என்று கூறி பவுல் தன் உரையை முடித்தார்.

அங்கே பவுல் இரண்டு ஆண்டுகள் தங்கி கடவுளின் வழிகளைப் போதித்துக் கொண்டும், கற்பித்துக் கொண்டும் இருந்தார்.

பவுலின் போதனை

தனது நற்செய்திப் பயணங்களின்போது பவுல் பல இடங்களில் திருச்சபைகளை அமைத்தார். அவற்றுக்கும், பிற திருச்சபைகளுக்கும் பல திருமுகங்களை (கடிதங்களை) எழுதினார். தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் கேட்ட பல வினாக்களுக்கும் பவுல் விடை கூறினார். அவர் எழுதிய திருமுகங்களில் பல நமது திருமறையில் உள்ளன.

கடவுள் அருளும் நற்செய்தி

உரோமர் 1 : 16, 17

இந்த நற்செய்தியைக் குறித்து நான் பெருமைப்படுகிறேன். யூதர்களும், யூதர் அல்லாதவர்களும் கடவுளை நம்பினால் அவர்கள் அனைவரையும் மீட்கும் கடவுளின் ஆற்றல் அது. தொடக்கம் முதல் முடிவுவரை அனைத்துமே பற்றுறுதியின் மூலமே நடைபெறுகின்றன.

கடவுளின் கோபம்

உரோமர் 1 : 18, 21, 23, 25

மக்கள் செய்யும் எல்லாத் தீமையான செயல்களுக்கும் பாவங்களுக்கும் எதிராகக் கடவுளின் கோபம் இருக்கிறது. அவர்களுடைய தீமையான வழிகள் உண்மையை மறைக்கின்றன. அவர்களுடைய பேதையான உள்ளங்கள் இருளினால் நிறைந்திருக்கின்றன. கடவுளை அவர்கள் வழிபடுவதில்லை. மனிதனால் படைக்கப்பட்ட உருவங்களையே வழிபடுகிறார்கள். கடவுளைப் பற்றிய உண்மையை மாற்றுகிறார்கள்.

கடவுளின் திட்டம்

எபேசியர் 1 : 9 – 11; 2 : 13

விண்ணகத்திலும், மண்ணகத்திலும் உள்ள அனைத்தும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். அவர் திட்டமிட்டபடி எல்லாம் செய்யப்படுகின்றன. நாம் அனைவரும் கிறிஸ்துவுடன் ஒன்றாயிருக்க வேண்டும். அவருடைய சொந்த மக்களாக வாழ வேண்டும் என்று கடவுள் நன்மைத் தெரிந்துகொண்டார். நாம் அவரை விட்டுத் தூர விலகிச் சென்றிருந்தோம். ஆனால் நமக்காக இறந்த இயேசுகிறிஸ்துவினாலே நாம் அனைவரும் கடவுளுக்கருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறோம்.

கடவுளின் பார்வையில் குற்றமற்றவர்கள்

உரோமர் 3 : 22 – 26

இயேசுகிறிஸ்துவின் மீது கொண்டுள்ள பற்றுறுதியின் மூலமாக, மக்களை கடவுள் நீதிமான்களாக்குகிறார். கடவுளின் ஈவு என்னும் கொடையால், நம் செயல்களின் தேவையின்றி கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டு இருக்கிறோம். தமது மைந்தனின் மரணத்தின் மூலமும், மக்கள் அவர்மீது கொள்ளும் பற்றுறுதியின் மூலமும், அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று கடவுள் திட்டமிட்டார். முன் காலங்களில் கடவுள் பொறுமையுடையவராயிருந்து மக்களின் பாவங்களுக்குரிய தண்டனையைக் கொடுக்கக் காலந் தாழ்த்தி வந்தார். ஆனால் இப்பொழுது இயேசுவின் மீது பற்றுறுதி கொள்கிறவர்களை, நல்லவர்களாகவும் குற்றமற்றவர்களாகவும் தந்தையாம் கடவுள் ஏற்றுக்கொள்ளுகிறார்.

புதுவாழ்வு பெறுங்கள்

உரோமர் 12 : 2; எபேசியர் 4 : 23; கலாத்தியர் 5 : 16, 22, 25

உங்கள் உள்ளங்களும், சிந்தனைகளும் புதியவைகளாகட்டும். அப்பொழுது உங்களால் ஒரு நல்ல நீதியான வாழ்வை வாழ முடியும்.

கடவுளின் ஆவி உங்கள் வாழ்வுக்கு வழிகாட்டட்டும். அப்பொழுது நீங்கள் உங்கள் தன்னலமான வழிகளைப் பின்பற்ற மாட்டீர்கள். கடவுளின் ஆவி நம் உள்ளத்தில் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, இரக்கம், தயவு, நற்குணம், பற்றுறுதி, தாழ்மை, சுய கட்டுப்பாடு ஆகிய பண்புகளைத் தரும். நாம் அவருடைய ஆவியின் மூலமாகப் புது வாழ்வை பெறுகிறோம்.

அன்பு செலுத்துங்கள்

கொலோசையர் 3 : 14; 1 கொரிந்தியர் 13 : 4 – 8; 14 : 1; 16 : 14

அன்பு நீடிய பொறுமையும், இரக்கமும் உடையது. அன்புக்குப் பொறாமை இல்லை. அன்புக்குப் பெருமை கிடையாது. அன்பு மற்றவர்களிடம் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளாது. அன்பு தன்னலமற்றது. அன்பு விரைவில் கோபம் கொள்ளாது. தமக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களை, அன்பு நினைவில் வைத்திராது. அன்பு தீமையைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளாது. அன்பு உண்மையைக் கண்டே மகிழ்ச்சியடையும்.

அன்பு மனம் தளரவிடாது. அன்பு அனைத்தையும் நம்பும். அன்பு எதிர்நோக்குடன் இருக்கும். அன்பு துன்பங்களைச் சகிக்கும். அன்புக்கு முடிவில்லை. அன்பை மேலும், மேலும் சேர்த்துக்கொள்ளுங்கள். அன்பு நம் அனைவரையும் ஒன்றாகக் கூட்டி இணைக்கிறது.

கீழ்ப்படியுங்கள்

எபேசியர் 6 : 1 – 4

பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஏனெனில் அதுவே செய்யத்தக்க நல்ல செயல். "நீ அப்படிச் செய்தால், உனக்கு எல்லா நன்மையும் உண்டாகும். நீ இவ்வுலகில் நீடிய காலம் வாழ்வாய்."

"பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதீர்கள். ஆனால் நீங்கள் அவர்களைக் கடவுளின் போதனையிலும், பயிற்சியிலும் வளருங்கள்."

மன்னியுங்கள்

கொலோசையர் 3 : 12, 13

நீங்கள் கடவுளின் மக்கள்; அவர் உங்களிடம் அன்பு கொண்டுள்ளார். எனவே நீங்கள் ஒருவர்மீது ஒருவர் கோபம் கொள்ளாதிருங்கள். யாராவது, உங்களுக்கு எதிராகக் குற்றம் செய்துவிட்டால், அதை அவருக்கு மன்னியுங்கள். கடவுள் உங்களை மன்னித்திருப்பதுபோல, நீங்களும் ஒருவருக்கு ஒருவர் மன்னிக்க வேண்டும்.

மகிழுங்கள், நன்றி செலுத்துங்கள்

பிலிப்பியர் 4 : 4 – 7

எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள். மறுபடியும் சொல்லுகிறேன். மகிழ்ச்சியாக இருங்கள். ஏனெனில், நீங்கள் ஆண்டவருக்குச் சொந்தமானவர்கள். எதைக் குறித்தும் நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். உங்களுக்குத் தேவையானவற்றை இறைவேண்டலின் வாயிலாகக் கடவுளிடம் கேளுங்கள். எப்பொழுதும் நன்றி நிறைந்த உள்ளத்தோடு இறைவேண்டல் செய்யுங்கள். அப்பொழுது உங்கள் இதயங்களையும், எண்ணங்களையும், கடவுளின் அமைதி இயேசுகிறிஸ்துவில் காத்துக்கொள்ளும்.

சான்று பகரும் பவுல்

பவுலின் துன்பங்கள்

2 கொரிந்தியர் 11 : 24 – 29

யூதர்களால் ஒவ்வொரு முறையும் முப்பத்தொன்பது அடிகள் வீதம் ஐந்து முறை அடிக்கப்பட்டேன். ரோமர்கள் சவுக்கினால் என்னை மூன்று முறை அடித்தார்கள். ஒரு முறை கல்லெறியப் பட்டேன்; மூன்று முறை கப்பற் சேதங்களில் அகப்பட்டேன். ஒரு முறை இருபத்து நான்கு மணிநேரம் தண்ணீரில் தத்தளித்தேன். திருடர்களிடம் அகப்பட்டிருக்கிறேன். உடன் யூதர்களாலும், யூதர் அல்லாதவர்களாலும் பல துன்பங்களை நான் அடைந்திருக்கிறேன். நகரங்களிலும், சிற்றூர்ப் பகுதிகளிலும் துன்பங்கள் ஏற்பட்டன. போலியான நண்பர்களாலும் பல இக்கட்டுக்கள் எனக்கு வந்தன. நான் கடினமாக வேலை செய்ய வேண்டியதிருந்தது. பலமுறை தாகத்தோடும், பசியோடும், தூக்கம் இல்லாமலும் இருந்திருக்கிறேன். உறைவிடமில்லாமலும், ஆடை இல்லாமலும் இருந்த நாட்கள் உண்டு.

யாராவது வலுவிழந்தால் நானும் வலிமை இழக்கிறேன். யாராவது பாவம் செய்தால், நான் மிகவும் வருந்துகிறேன்.

பவுலின் இறுதி அறிவுரைகள்

2 தீமோத்தேயு 4 : 6 – 8

இந்த உலக வாழ்க்கையை நான் முடிக்கும் காலம் வந்துவிட்டது. உலக வாழ்க்கைப் போராட்டத்தில் என் பங்கை நான் நிறைவாகச் செய்து முடித்து விட்டேன். வாழ்க்கை ஓட்டத்தை ஓடி முடித்து விட்டேன். கடவுளுக்கு அளித்த என் வாக்குறுதியை நான் நிறைவேற்றி விட்டேன். ஒரு நீதியான வாழ்க்கைக்குரிய வெற்றிப்பரிசு எனக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறது. ஆண்டவராகிய நேர்மையுள்ள நீதிபதி எனக்கு அந்தப் பரிசை அளிப்பார். அன்புடன் அவருடைய வருகைக்காகக் காத்திருப்பவர்கள் அனைவரும் இத்தகைய பரிசைப் பெற்றுக் கொள்வார்கள்.

யோவானின் காட்சிகள்

யோவான் இயேசுவை விண்ணகத்தில் காணுதல்

திருவெளிப்பாடு 1 : 10 – 18

திருப்பணியாளராகிய யோவான் 'பத்மு' தீவில் சிறைவைக்கப்பட்டார். அங்கே விண்ணுலகிலும், மண்ணுலகிலும் நடைபெறப் போகின்றவற்றைப் பற்றிய ஆண்டவராகிய இயேசுவின் காட்சி அவருக்குக் கிடைத்தது.

ஆண்டவருடைய நாளில் கடவுளின் ஆவி என்னை ஆட்கொண்டது. அப்பொழுது எக்காள ஒலி போன்ற ஒரு பெரிய ஒலியை எனக்குப் பின்னால் கேட்டேன். அது என்னிடம், "நீ காண்பவற்றை ஒரு ஏட்டில் எழுதி, அச்செய்தியை ஏழு சபைகளின் தலைவர்களுக்கும் அனுப்பு" என்றது.

என்னிடத்தில் பேசிக்கொண்டிருந்தது யார் என்றறிய நான் பின்னால் திரும்பினேன். ஏழு பொன் குத்துவிளக்குகளைக் கண்டேன். அவற்றின் நடுவில், மனித உருவம் கொண்ட ஒருவர் நிற்கக் கண்டேன். அவருடைய ஆடை, கால்கள் வரை தொங்கிக்கொண்டிருந்தது. அவருடைய மார்பில் ஒரு பொற்கச்சை கட்டியிருந்தார். அவருடைய முடி மிகவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் தீக்கொழுந்துகளைப் போலிருந்தன. அவருடைய கால்கள் மெருகேற்றப்பட்ட வெண்கலம் போலச் சுடர்விட்டன. அவருடைய குரல் பெரிய அருவியின் இரைச்சலைப் போலிருந்தது. அவர் தனது வலது கையில் ஏழு விண்மீண்களைப் பிடித்திருந்தார். அவருடைய வாயிலிருந்து இருபுறமும் கூர்மையான வாள் வெளிப்பட்டது. அவருடைய முகம் நண்பகல் நேரக் கதிரவனைப் போலச் சுடர் வீசியது.

நான் இறந்தவனைப் போல அவருடைய காலடிகளில் விழுந்தேன். அப்பொழுது அவர் தம் வலது கையை என்னுடைய தலையின்மேல் வைத்து, "நீ பயப்படாதே! நான் தொடக்கமும் முடிவுமாயிருக்கிறேன். நானே வாழ்பவருமாக இருக்கிறேன். நான் இறந்தேன். ஆனால் என்றென்றும் உயிரோடிருக்கிறேன்.

மரணத்தின் மீதும், இறந்தோர் உலகத்தின் மீதும் எனக்கு அதிகாரம் உண்டு" என்றார்.

இயேசு விண்ணகத்தில் போற்றப்படுதல்

திருவெளிப்பாடு 4 : 1 – 6, 8 – 11; 5 : 11 – 14

யூதர்கள் தங்களுடைய பாவங்களுக்காகப் பலி செலுத்திய மிருகம், 'ஆட்டுக்குட்டி' ஆகும். இயேசு 'கடவுளின் ஆட்டுக்குட்டி' ஆவார். அவர் நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைச் சிலுவையின்மேல் ஒரு பலியாக ஒப்புக்கொடுத்தார்.

பின்னர் எனக்கு இன்னொரு காட்சி கிடைத்தது. விண்ணகத்தில் திறந்திருந்த ஒரு கதவைக் கண்டேன். எக்காள ஒலி போன்ற ஒரு குரல் கேட்டது. "இங்கே ஏறி வா; இனிமேல் நடக்கப்போவதை, நான் உனக்குக் காட்டுவேன்" என்றது அக்குரல். இதைக் கேட்டதும் நான் கடவுளின் ஆவியின் கட்டுப்பாட்டுக்குள்ளானேன். விண்ணகத்தில் ஒரு அரியணை இருந்தது. அதன்மேல் ஒருவர் அமர்ந்திருந்தார். அவருடைய முகம் விலையுயர்ந்த கற்களைப் போன்று ஒளி வீசியது. அவருடைய அரியணையைச் சுற்றிலும் ஒரு பிரகாசமான பச்சை நிற ஒளி வானவில்லைப் போல அமைந்திருந்தது.



என்றென்றும் வாழ்பவரும், அரியணையில் அமர்ந்திருப்பவருமானவரை, இருபத்து நான்கு மூப்பர்கள் கீழே விழுந்து பணிந்து கொண்டார்கள்.

மறுபடியும் நான் ஏறிட்டுப் பார்த்தேன். இந்த முறை நான் பல லட்சக்கணக்கான வானதூதர்களின் குரலைக் கேட்டேன். அவர்கள் அரியணையைச் சுற்றிலும் நின்றார்கள். அவர்கள் உரத்தக் குரலில் இப்படிப் பாடினார்கள்.

"கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டியானவருக்கு
ஆற்றலையும், செல்வத்தையும்,
ஞானத்தையும், வல்லமையையும்,
மாண்பையும், மேன்மையையும்,
புகழையும் பெற்றுக்கொள்ளத்
தகுதி உண்டு"

அதன் பின்னர் விண்ணிலும், மண்ணிலும், பாதாளத்திலும் ஆழ்கடலிலும் உள்ள அனைத்து உயிரினங்களும் பாடும் குரலைக் கேட்டேன். அந்தப் பாடல்:

"அரியணையில் அமர்ந்திருப்பவருக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும்,
அனைத்துப் புகழும், மாண்பும்,
மேன்மையும், ஆற்றலும்
என்றென்றும் உரித்தாகுக.
ஆமென்" என்பதே.

புதிய விண்ணுலகமும், மண்ணுலகமும்

திருவெளிப்பாடு 21 : 1 – 5

பின்பு நான் ஒரு புதிய விண்ணுலகத்தையும் புதிய மண்ணுலகத்தையும் கண்டேன். முதலில் இருந்த விண்ணுலகமும், மண்ணுலகமும், கடலும் மறைந்து போயின. விண்ணகத்தில் கடவுளிடமிருந்து, புனித நகராமாகிய, 'புதிய எருசலேம்' இறங்கி வரக் கண்டேன். அது, தன் மணமகனைச் சந்திக்கப் புறப்படும் ஒரு மணமகளைப் போல இருந்தது. அப்பொழுது அரியணையிலிருந்து பேசிய ஒரு பெரிய குரலைக் கேட்டேன். "இப்பொழுது கடவுளின் இருப்பிடம் எல்லா மக்கள் நடுவிலும் இருக்கிறது. கடவுள் அவர்களுடனே வாழ்வார். அவர்கள் அவருடைய மக்களாயிருப்பார்கள். அவர் அவர்களுடைய கடவுளாயிருப்பார். அவர் அவர்களுடைய கண்களின் கண்ணீர் யாவையும் துடைப்பார். இனிமேல் துன்பமோ, துயரமோ, அழுகையோ, மரணமோ இருப்பதில்லை. பழையவையெல்லாம் ஒழிந்து போயின!"

அப்பொழுது அங்கே அரியணையில் அமர்ந்திருந்தவர், "இதோ! நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்!" என்றார்.

புதிய எருசலேம்!

திருவெளிப்பாடு 21 : 10 – 27

கடவுளின் தூய ஆவியார், என்னை முற்றிலும் ஆட்கொண்டார். அப்பொழுது அந்த வானதூதர் என்னை ஒரு மிக உயராமான மலையின் உச்சிக்குக் கொண்டு சென்றார். அவர் கடவுளின் மாட்சிமை ஒளிவீசிக் கொண்டிருந்த புனித நகரமாகிய புதிய எருசலேமை எனக்குக் காட்டினார். அந்த நகரம் விலை உயர்ந்த ரத்தினக் கல்லைப் போல ஒளிர்ந்தது. பளிங்கு போன்ற வச்சிரக் கல்லைப்போல ஒளிபரப்பியது. அதற்கு மிக உயரமான மதிற்சுவர் இருந்தது. அதற்குப் பன்னிரண்டு வாசல்கள் இருந்தன. ஒவ்வொரு வாசலிலும் ஒவ்வொரு வானதூதர் பொறுப்பாளராக இருந்தார். ஒவ்வொரு வாசலிலும் இஸ்ரயேல் மக்களின் பன்னிரண்டு குலங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. மதிற்சுவரின் ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வாசல்கள் இருந்தன. மதிற்சுவர் பன்னிரண்டு அடித்தளக் கற்களின்மீது கட்டப்பட்டிருந்தது. அவற்றின்மேல் ஆட்டுக்குட்டியின் பன்னிரண்டு திருத் தூதர்களின் பெயர்கள் எழுதப்பட்ருந்தன. என்னுடன் பேசிய வானதூதரின் கையில் பொன்னினாலான ஒரு

அளவுகோல் இருந்தது. அவர் நகரத்தையும், அதன் வாசல்களையும், அதன் சுவரையும் அளப்பதற்காக அதை வைத்திருந்தார். நகரம் சதுர வடிவத்தில் இருந்தது. அதன் ஒவ்வொரு பக்கமும் இரண்டாயிரத்து நானூறு கிலோ மீட்டர் நீளம் உள்ளதாயிருந்தது. அதன் நீளமும், அகலமும், உயரமும் ஒரே அளவாயிருந்தது. அந்தச் சுவர் அறுபது மீட்டர் உயரம் உடையது. அதன் சுவர்கள் வச்சிரக்கல்லால் செய்யப்பட்டவை. நகரம் முழுவதும், பளிங்கு போன்ற பசும்பொன்னினால் செய்யப்பட்டு இருந்தது. அடித்தளக் கற்கள் ஒவ்வொன்றிலும் அழகிய ரத்தினக் கற்கள் பதித்து அழகுபடுத்தப் பட்டிருந்தன. பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன. ஒவ்வொரு வாசலும், ஒவ்வொரு தனி முத்தினால் செய்யப்பட்டிருந்தது.

அந்த நகரத்தினுள் நான் ஆலயம் எதையும் காணவில்லை. எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுளும், ஆட்டுக்குட்டியுமே அந்த நகரத்தின் ஆலயங்களாகும். கதிரவனோ, நிலவோ அந்த நகரத்தில் ஒளிவீச வேண்டியதில்லை. கடவுளின் மாட்சிமை அதன்மேல் ஒளிர்கிறது. ஆட்டுக்குட்டி அதன் விளக்காக இருக்கிறார். உலக மக்கள் அதன் ஒளியில் நடப்பார்கள். மண்ணுலகின் அரசர்கள் தங்களது செல்வத்தை அதனுள் கொண்டு வருவார்கள். நகரத்தின் வாசல்கள் எப்போதும் திறந்திருக்கும். அவை ஒருபோதும் பூட்டப்படுவதில்லை. ஏனெனில்; அங்கே இரவு இராது. நாடுகளின் செல்வங்களும் அங்கே கொண்டுவரப்படும். ஆனால் தூய்மையற்ற எதுவும் அதனுள் நுழைவதில்லை. வெட்கக் கேடான செயல்களைச் செய்கிறவர்களும், பொய் பேசுகிறவர்களும் அதற்குள் வர அனுமதிக்கப்படுவதில்லை. ஆட்டுக்குட்டியின் வாழ்வின் நூலின் பெயர் எழுதப்பட்டவர்கள் மட்டுமே அந்த நகரத்துக்குள் செல்வார்கள்.

இதோ! இயேசு வருகிறார்!

திருவெளிப்பாடு 22 : 16, 17, 20, 21

"திருச்சபைகளிலிருக்கிற உங்களுக்கு இவற்றையெல்லாம் அறிவிப்பதற்கு இயேசுவாகிய நான் என் தூதரை அனுப்பியிருக்கிறேன். தாவீதின் வழி மரபில் தோன்றியவன் நான்; ஒளிபடைத்த விடிவெள்ளியுமாயிருக்கிறேன்".

கடவுளின் ஆவியும் மணவாட்டியும் "வா!" என்கிறார்கள். இதைக் கேட்கிற ஒவ்வொருவனும், "வா!" என்று சொல்வானாக.

தாகமாயிருக்கிறவர் யாராயிருந்தாலும் வருவாராக; வாழ்வு தரும் தண்ணீரைப் பெற விரும்புகிறவர் அதை எச்செலவுமின்றிப் பெற்றுக்கொள்வாராக.

இவையனைத்தும் உண்மை என்று இயேசு கூறுகிறார். இப்பொழுது அவர், "ஆம். உண்மையாகவே நான் விரைவில் வருகிறேன்!" என்கிறார். அது அப்படியே ஆகட்டும். ஆண்டவராகிய இயேசுவே வாரும். ஆண்டவராகிய இயேசுவின் அருள் ஒவ்வொருவரோடும் இருப்பதாக! ஆமென்!

ஆசி!

யூதா : 24, 25

நீங்கள் விழுந்துபோகாமலிருக்க உங்களுக்கு உதவி செய்ய கடவுள் வல்லவர். உங்களிடம் எந்தக் குற்றமும் இல்லாமல் உங்களைத் தூயவராய் அவருக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்த அவரால் முடியும். அவர் உங்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளிக்க முடியும்.

நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்து மட்டுமே நம்மை மீட்கும் கடவுள். மாட்சிமையும், மாண்பும், ஆற்றலும், மேன்மையும் ஆகிய இவையனைத்தும், இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய முக்காலங்களிலும் அவருக்கே நிலைத்திருப்பதாக. ஆமென்.

இயல்பான எளிய தமிழில் புதிய மொழிபெயர்ப்பு

இந்த 'இயல்பான எளிய தமிழில் புதிய மொழிபெயர்ப்பு' வேதாகம உலகத்திற்குள் இளைஞர்களை அழைத்துச் செல்கிறது. எளிமையாக்கப்பட்ட, செறிவுள்ள இந்த மொழி பெயர்ப்பு, வேதாகம உண்மைகளை எளிதாகப் புரிந்து கொள்ள இளைஞர்களுக்கு உதவியாக இருக்கும்.

- பெரிய எழுத்துக்கள்
- சிறிய வாக்கியங்கள்
- வாழ்க்கையை நெறிமுறைபடுத்தும் வேத சரித்திரங்கள்
- தேவ வசன ஆவிக்கு ஏற்ற மொழிபெயர்ப்பு



யாவரும் விரும்பும் வேதபாத்திரங்களுக்கு 200க்கும் மேற்பட்ட விளக்கப் படங்கள், உயிரூட்டுகின்றன.

THE BIBLE SOCIETY OF INDIA
206, MAHATMA GANDHI ROAD
BANGALORE - 560 001
INDIA